# பிரவீணாவின்

# அன்பே... நீ இன்றி...!

## பாகம் - 2



# அன்பே...
# நீ இன்றி...!

(பாகம் - 2)

பிரவீணா

அருண் பதிப்பகம்

எண். 107/8, கௌடியா மடம் சாலை,
இராயப்பேட்டை, சென்னை - 600 014.
Email : arun_pathippagam@yahoo.in
செல்: 9003145749

நூற் குறிப்பு

- நூல் தலைப்பு — அன்பே... நீ இன்றி...! (பாகம் - 2)
- ஆசிரியர் — பிரவீணா
- மொழி — தமிழ்
- முதற் பதிப்பு — ஏப்ரல், 2015
- உரிமை — ஆசிரியருக்கு
- தாளின் தன்மை — 11.6 K.g. வெள்ளைத் தாள்
- நூலின் அளவு — 1 × 8 கிரவுன்
- அச்சு எழுத்து — 10 புள்ளிகள்
- மொத்தப் பக்கங்கள் — 476
- பைண்டிங் — சாதா அட்டை

**விலை: ரூ. 220.00**

வெளியிடுவோர் **அருண் பதிப்பகம்**
எண். 107/8, கௌடியா மடம் சாலை,
இராயப்பேட்டை, சென்னை - 600 014.

கணினி அச்சு மாதா பிரிண்டர்ஸ், சென்னை - 69.
செல் : 8939427929

அச்சிட்டோர்: மஞ்சு ஆப்செட், சென்னை - 5.



# அன்பே...
# நீ இன்றி...!
## (பாகம் - 2)

## ஆசிரியரின் பிற நூல்கள்

1. என் உயிரே! என் உறவே!! (பாகம் - 1) - ரூ. 200.00
2. என் உயிரே! என் உறவே!! (பாகம் - 2) - ரூ. 200.00



# அன்பே... நீ இன்றி...!

## (பாகம் - 2)

## 31

தீக்ஷா மிகுந்த சந்தோசத்தில் இருக்க... விஜய்யோ, கொஞ்சம் குழப்பத்தில் இருந்தான். தீக்ஷா எப்படித் தன்னைத் திருமணம் செய்ய ஒத்துக் கொண்டாள் என்று.

விஜய்யால், தன் மீது அவளும் காதல் கொண்ட காரணத்தினாலே அவள் சம்மதிக்கிறாள் என்ற கோணத்தில் நினைத்துப் பார்க்கவே முடியவில்லை. அந்த அளவிற்கா அவன் அவளிடம் நடந்திருக்கிறான்...

முதல் சந்திப்பில் இருந்து... அன்றைய மாடியறை நிகழ்ச்சி வரை... அவனுக்கும் தீக்ஷாவுக்கும் எந்த நிகழ்வுமே சுமுகமாக இருந்தது இல்லை.

எப்படி அவள் சம்மதித்தாள்?

காரை ஓட்டியபடி வந்த விஜய்க்குள் இந்த எண்ண ஓட்டமே இருக்க... அப்போது, அவனின் மொபைல் திடீரென்று ஒலி எழுப்ப... விஜய் வேகமாகப் பார்க்க... அது 'தீக்ஷா' என்றிருந்தது.

விஜய்யின் சந்தோசத்திற்கு அளவே இல்லை. இருவரிடமும் போன் நம்பர்கள் இருந்தாலும், இதுவரை எந்தவிதத் தொடர்புப் பரிமாற்றங்களும் இல்லை. விஜய்க்கு அந்த மெசேஜைத் திறந்து பார்க்கும் முன்னே ஒரு மாதிரிப் படபடப்பாய் வந்து விட்டது.

அவனுக்கே அவனது இந்த நிலை... ஒரு மாதிரி அதிகப்படியாகத்தான் தோன்றியது. இருந்தாலும் அதைச் சந்தோசமாக அனுபவித்தான். காதலில் தகித்துக் கொண்டிருந்த அவனுக்கு... அவன் மனம் நிறைந்தவளின் சம்மதம்... இதமாக இருந்த போதும், அதை முழுமையாக அனுபவிக்க முடியவில்லை. எந்தவிதச் சமாதானமும் இல்லாமல்... தான் அவளுக்குச் செய்த கேவலமான காரியங்களைக் கூட மறந்து... மன்னித்துத் தன்னை ஏற்றுக் கொண்டதே அவனைக் கொன்றது.

இப்போது தீக்ஷாவின் குறுஞ்செய்தி வர... அது அவன் மனதை மழைச் சாரலாய்க் குளிர்விக்கத்தான் செய்தது.

அந்தச் சந்தோசத்தோடு வேகமாகப் படித்துப் பார்க்க... அதுவோ இன்னும் அதிகக் குழப்பத்தைத்தான் ஏற்படுத்தியது.

'அவள் தனக்காகப் படைக்கப்பட்ட புயல்' என்ற வார்த்தைகளில் அவன் மனம் ஆகாயத்திற்குப் பறந்த அதே வேளையில்.... புயல் தாக்குதல்... சேதாரம்... என்ற சொற்களில் காற்றிறங்கிய பலூனாக மீண்டும் அவனது இதயம் பூமியை வந்தடைந்தது.

நல்லா மெசேஜ் அனுப்பி இருக்கா... லவ்வருக்கு அனுப்புற மெசேஜ் மாதிரியா அனுப்பி இருக்கா... சேதாரம்... தாக்குதல்னு எதிரி நாட்டுக்குச் செய்தி அனுப்புகிற மாதிரி அனுப்பி இருக்கா... என்றெல்லாம் தன்னைக் குழப்பிக் கொண்டவன்... தன் வீட்டைக் கடந்து செல்கிறோம் என்ற நினைவில்லாமல் கடந்து போக... யுகி போன் அழைப்பில் தான்... தன் நினைவு வந்து... திரும்பிப் பார்க்க...



அப்போதுதான் தான் தன் வீட்டைக் கடந்து வந்ததைப் புரிந்த விஜய்... காரை மீண்டும் வீட்டை நோக்கித் திருப்பினான்.

வீட்டிற்குள் நுழையும்போதே விஜய்க்கு... கடவுளே! யாரும் ஹாலில் இருக்கக் கூடாது. முக்கியமா யுகி இருக்கவே கூடாது. ஓட்டியே தள்ளிடுவானே என்று நினைத்தபடி உள்ளே போக... யுகேந்தராவது விடுவதாவது... யுகியே தவறாமல் அவனுக்குக் காட்சி தந்தான்.

அனைவரையும் பார்த்தும் பார்க்காதது போல்... வேகமாய் மாடியேறிய விஜய்யை யுகி, "அண்ணா!" என்று அழைக்க,

'விட மாட்டானே...' என்று மனதுக்குள் அர்ச்சித்தபடி... "என்னடா?" என்று சாதாரணமாகக் கேட்க...

யுகியோ அதை விட, "தெரியாம கால் பண்ணிட்டேன், அண்ணா. ஏதாவது முக்கியமான வேலையா போயிட்டு இருந்தீங்களா அண்ணா...? நீங்க வீட்டை மறந்துட்டுத்தான் போயிட்டீங்களோன்னு தப்பா நினைத்துப் போன் போட்டேன். சாரிண்ணா..." என்று அப்பாவி போல் மன்னிப்புக் கேட்டதைப் பார்த்து விஜய் முறைக்க...

ராகவேந்தர், கலைச்செல்வி, சுரேந்தர் மூவரும் யுகியின் குறும்பில் சிரிக்க... விஜய் பல்லைக் கடிக்க... அவனின் கோபத்தைப் பார்த்த யுகி, வேகமாய் அவன் பார்வையிலிருந்து மறைந்து, தனது அறைக்குள் நழுவி விட... விஜய்யும் தனது அறைக்குள் நுழைந்தான்.

அவனது மொபைலை எடுத்துத் தன்னவள் அனுப்பிய செய்தியை மீண்டும் மீண்டும் படித்தபடி இருந்தவனுக்கு... ஏனோ மீண்டும் பதில் செய்தி அனுப்ப மனம் வரவில்லை.

மனம் வரவில்லை என்பதை விட... பயம்தான் முக்கியக் காரணம்... திருமணம் முடியும்வரை... முடிந்தவரை தீக்ஷாவிடமிருந்து தள்ளியிருக்கவே முடிவு செய்தான் விஜய். ஏனென்றால் இருவரின் குண இயல்பைப் பற்றிப் புரிந்திருந்த தாலே இந்த முடிவுக்கு வந்திருந்தான்.

இவன் அவளிடம் பேசப் போய்... ஏதாவது ஒரு கட்டத்தில் எந்தப் பிரச்சனையிலாவது கொண்டு வந்து விட்டால்... விஜய்யால் இனி தீக்ஷாவின் பிரிவை நினைத்துக் கூடப் பார்க்க முடியவில்லை. தானாய்த் தன் கையில் கிடைத்த வரத்தை அவன் தன் குண இயல்புகளால், தன் கோபத்தால் இழக்க விரும்பவில்லை. தன் மனைவியாக அவள் தன்னைச் சேரும்வரை அவளிடம் அதிகப்படியான பேச்சு வார்த்தைகளைத் தவிர்க்க நினைத்த விஜய், அதைச் செயல்படுத்தவும் ஆரம்பித்தான்.

விஜய் அங்கு அப்படி ஒரு முடிவெடுக்க...

தீக்ஷாவோ, விஜய் அத்தான் நம்மைக் காதலிக் கிறாரா... இன்னும் நம்பவே முடியவில்லை அவளால்... அது ஒரு புறம் என்றால்... 'நான் விஜய் அத்தானை நேசிக் கிறேனா... எப்படி இது சாத்தியம்... இப்படி அவரின் ஒரு பார்வையிலேயே நான் மண்ணைக் கவ்விட்டேனா...?' - சந்தோஷமாகக் குழம்பினாள்.

'ஏய் தீக்ஷா, நல்லா யோசிடி. ஒத்து வருமா...?' என்று தனக்குள் நினைத்தவள்,

விஜய் அவளிடம் நேரில் வந்து காதலிக்கிறேன் என்று சொல்லி இருந்தால் கூட ஏற்றுக் கொண்டிருப்பாளா என்பது சந்தேகம்தான். ஆனால் அவனின் பார்வை மூலம் உணர்ந்த



காதலை அவளால் மறுக்க முடியாமல்... அவனுக்குள்... அவனின் காதலுக்குள் கலந்து விடத் துடிக்கிறாள்... என்பதே உண்மை.

காலையில் ராகேஷுடன் ஏதோ நிச்சயதார்த்தம். பின் திருமணம் என்றிருந்தவள்... இப்போது காதல் என்ற உணர்வில் விழுந்தபின்.. அன்றைய தினத்தின் ஒவ்வொரு நொடியையும் தனக்குள் சேகரித்துக் கொண்டிருந்தாள் அவள்.

தன் வாழ்க்கையின் மறக்க முடியாத நாள், இந்தத் தினம்தான் என்றால்... மறக்க முடியாத நிமிடம் தன்னவனின் கண்களில் காதல் உணர்ந்த நிமிடம் என்று அவளால் அடித்துச் சொல்ல முடியும்.

அந்த அளவிற்கு அவனின் காதலில் அவள் முற்றிலும் அடித்துச் செல்லப்பட... அவனை விட்டு அவளால் இருக்கவே முடியவில்லை. அவனின் நினைவுகளாலேயே ஆக்கிரமிக்கப் பட்டு இருந்த தீக்ஷாவுக்கு விஜய்யை அப்போதே காண வேண்டும் போல இருந்தது.

அவனை இனிப் பார்க்க முடியாது.. போனில் மெசேஜ் அனுப்பியும் இன்னும் பதில் இல்லை. என்ன செய்யலாம் என்று நினைத்தவளுக்கு... தன் அண்ணனின் திருமண ஆல்பம் நினைவுக்கு வர... வேகமாய்த் தீபனின் அறையைத் தட்ட ஆரம்பித்தாள்... மணி 11 என்பது கூட மறந்தவளாய்.

தீபனின் நிலையோ, அங்கு ராதாவின் மௌனம் என்னும் சவுக்கடியில் பரிதாபமாய் இருப்பதை உணராமல் தீக்ஷா, கதவைத் தட்ட... ராதாதான் திறந்தாள்.

தீக்ஷாவைப் பார்த்த ராதா... "ஸ்னோ தூங்கிட்டா, தீக்ஷா... இவ்ளோ நேரம் அத்தை அத்தைனு உன்கிட்ட வரணும்னு பிடிவாதம் பிடிச்சா. நான்தான் உன் அத்தை உன்னோட இனி விளையாட மாட்டானு சொல்லித் தூங்க

வச்சேன். கரெக்ட்தானே தீக்ஷா?" என்று சீண்டலாய்ச் சொல்லித் தீக்ஷாவைப் பார்க்க...

ராதா தன்னைக் கேலி செய்வதை உணர்ந்த தீக்ஷா, "கண்டிப்பா அண்ணி... அனுபவசாலி நீங்க. காதல்ல கரை கண்டவங்க..." என்று பதிலடி கொடுத்தவளாய்,

"அண்ணா, நீ சொல்லு. அண்ணி சொல்றது தப்பாகுமா?" என்று தீபனிடம் கேட்க....

தீபனோ பதில் சொல்லாமல் விழித்தான்.

அங்கு நிலவரம் சரியில்லை என்பதை உணர்ந்த தீக்ஷாவும்... "அண்ணிகிட்ட இருந்து நம்ம அண்ணாவுக்குப் பயங்கர டோஸ் போல. இப்படிப் பேயடிச்ச மாதிரி நிற்கிறான்..." என்று தனக்குள் சொல்லிக் கொண்டவள்...

"அண்ணி, சாரி அண்ணி... நேரம் கெட்ட நேரத்தில் வந்துட்டேன்னு நினைக்கிறேன். எனக்கு ஒரே ஒரு ஹெல்ப். உங்க மேரேஜ் ஆல்பம் மட்டும் எடுத்துக் கொடுங்க. அதை வாங்கிட்டு நான் இந்த இடத்தைக் காலி பண்ணிடறேன். நீங்க விட்ட இடத்திலிருந்து மறுபடியும் ஆரம்பிங்க..." என்று கண்ணடிக்க...

தீபனோ, அவளிடம்... "எதுக்கு எங்க ஆல்பம்?" என்று விசாரணை செய்ய...

"ப்ச்... என் ஆளைப் பார்க்கணும். கொடுன்னா கொடு!" என்றபடி, ராதா கொண்டு வந்த ஆல்பத்தை வாங்கியவள்... கதவுவரை சென்று விட்டுப் பின் மீண்டும் திரும்பி,

"அண்ணி, மறந்துடாதீங்க. கணக்குல ஒரு அடி கூடத் தப்பக் கூடாது..." என்று சொல்லி விட்டுத் தீபனைப் பார்த்துக் கேலி செய்ய...

"ஏய்... உன்னை..." என்று தீபன் துரத்த ஆரம்பிக்க... தங்கையைத் துரத்த ஓடிய கணவனைப் பார்த்த ராதாவின்



கண்களில் வெறுமை மட்டுமே இருந்தது. அவளால் அன்று தன் கணவன், தன்னை விட்டு விட்டு வந்ததை... ஏற்றுக் கொள்ளவே முடியவில்லை. அதை மறந்து அவனோடு சுமுகமாக வாழவும் முடியவில்லை.

அதே நேரத்தில் அவன் இல்லாமலும் இருக்க முடியவில்லை. இத்தனை நாள் தீபனும் முகத்தினைத் திருப்பிக் கொண்டிருக்க... ராதாவும் ஒன்றும் கண்டுகொள்ள வில்லை. ஆனால் இப்போது அவன் ஏதேதோ காரணம் சொல்லித் தன்னை நியாயப்படுத்த முயற்சித்தாலும் அவளால் அதை ஏற்றுக் கொள்ள முடியவில்லை.

தன் நினைவுகளில் சுழன்று கொண்டிருந்த ராதாவை... தீபன்தான் கலைத்தான்.

"ராதா, பாரு ராதா... அவளுக்காக உன்னைக் கூட உங்க வீட்ல அப்படியே விட்டுட்டு வந்தால் எப்படிப் பேசிட்டுப் போறா..." என்றவன், அவளைத் தனது கைகளால் அணைத்துத் தன்னோடு சேர்க்க... இப்போது சுதாரித்தபடி... ராதா திமிறினாள்.

"விடுங்க தீபன்... என்கிட்ட ஒரு வார்த்தை பேசு னீங்க..." என்று அவனை விட்டுத் தள்ளிப் போக எத்தனிக்க...

தீபன் அவளின் கோபம் உணர்ந்து... "சாரிம்மா... சத்தியமா, அன்னைக்கு வந்த வார்த்தைகள் எல்லாம் என் மனசில் இருந்து வரலை. ஏதோ ஒரு வேகம்... உன் அண்ணன் மேல உள்ள கோபம். வார்த்தையை விட்டுட்டேன். உன்னை விட்டு என்னால இருக்க முடியுமா...? நீயே சொல்லு. ஆனாலும் நான் பேசினது தப்புதான்... ராதா!" என்று அணைத்தவனின் இறுக்கமே, அவனது காதலைச் சொல்ல... ராதா அமைதியாக இருந்தாள்.

அவளின் மௌனம் இன்னும் கொல்ல... "என்னை நாலு அடி கூட அடிச்சுடு, ராதும்மா... ப்ளீஸ். ஆனால்

பேசாம மட்டும் என்னைக் கொல்லாதே. இந்த இரண்டு வாரமும் செத்துட்டு இருக்கேன்டி..."

இப்போதும் அமைதியாகவே இருந்தாள் ராதா. அன்றைய அவனின் வார்த்தைகளைத் தாங்க முடியாத பேதையாக அவள் இருக்க... அவளைத் தேற்றும் வழி தெரியாமல் தவித்தான் அவள் கணவன்.

இருவரும் கட்டிலை விட்டுக் கதவின் அருகே நின்று கொண்டிருக்க... உறங்கிக் கொண்டிருந்த சுனந்தா... உறக் கத்திலே கட்டிலின் விளிம்பருகே புரண்டு வர... ராதாதான் கவனித்தாள் முதலில்...

அதனால் தன்னையுமறியாமல், "தீபன்... ஸ்னோ..." என்று அலற,

அவளிடம் கெஞ்சிக் கொண்டிருந்த தீபன் வேகமாய் ஓடி வந்து சுனந்தாவைப் பிடித்து விட்டான். அதிர்ச்சியில் ஸ்னோவும் அழ ஆரம்பிக்க... தீபனின் கையில் இருந்த குழந்தையை ராதா சமாதானப்படுத்த...

தீபன் இதுதான் தனக்குக் கிடைத்த சாக்கென்று... ராதாவையும் அணைத்துக் கொண்டவன்... சற்று முன்வரை மனைவியிடம் கெஞ்சிக் கொண்டிருந்தவன்... இப்போது தன் மகளோடு மனைவியையும் சேர்த்துக் கொஞ்ச ஆரம்பிக்க... ராதா அப்போதும் அவனை ஒதுக்கியவளாய் அவனை விட்டு விலகினாள்.

விலகிய தன் மனைவியைச் சமாதானப்படுத்தும் வழி தெரியாமல் தீபன் தவிக்க ஆரம்பிக்க... தன் மனைவியின் கோபம் தீரும்வரை அவளுக்காகக் காத்திருக்க முடிவு செய்தான்.

**அ**டுத்த நாள் காலை இரு வீட்டாருக்கும் அழகாய் விடிந்தது.



வழக்கம் போல் ஹாலில் காலை டிபன் சாப்பிட விஜய் குடும்பத்தினர் கூடியிருக்க... யுகியின் மொபைல் ஒலித்தது. வேறு யாருமில்லை... தீக்ஷாதான்!

தன் அண்ணனைப் பார்த்தபடியே மொபைலை எடுத்து ஆன் செய்து காதில் வைத்த யுகியிடம், "குட் மார்னிங்டா யுகி..." என்ற உற்சாகமான குரலில் தீக்ஷாவும் பேச ஆரம் பிக்க... யுகியை விடாமலே, "டேய், நான் உன்கிட்ட பேசுற மாதிரிக் காட்டிக்க வேண்டாம். எப்படியும் இந்த டைம்ல... என் ஆளு உன் முன்னாடி இருப்பாரு...." என்றபோதே யுகி மனதுக்குள் சிரித்தபடி,

"சரி, சொல்லு. என்ன திடீர்னு..." என்று கேட்க,

"உங்க வீட்டு ஆலமரத்தோட நிலவரம் என்ன? நேத்து வீசின தீக்ஷான்கிற புயல் காத்துல ஆடிப் போயிருச்சு போல..."

"அடிப் பாவி..." என்று மெதுவாய் முனகிய யுகியை... விஜய்யும் கவனித்துக் கொண்டேதான் சாப்பிட்டுக் கொண்டி ருந்தான்.

தன் அண்ணனை ஓரப் பார்வை பார்த்தபடியே யுகியும் சொன்னான்.

"ஆலமரம் ஆடிப் போகல. ஒரேயடியா சாய்ஞ்சுடுச்சு. நிலவரம் அப்படித்தான் இருக்கு..." என்று அவனும் தீக்ஷா உபயோகித்த வார்த்தைகளைக் கொண்டே பதில் அனுப்ப...

மறுமுனையில் அதைக் கேட்ட தீக்ஷா... யுகியின் வார்த்தைகளை அனுபவித்தபடி அமைதியாக இருந்தாள்.

"ஹலோ... ஹலோ..." என்று யுகி கத்தினான், இந்த முனையில் இருந்து.

இவனின் சத்தத்தில்... சுரேந்தர் வேகமாய் அவனிடம், "டேய், ஏன்டா இந்தக் கத்துக் கத்துற... சிக்னல் கிடைக்க

லேன்னா வெளியில போய்ப் பேசு..." என்று அவனைக் கிளப்ப... யுகியும் எழ,

விஜய் கைகளாலே அவனை அமரச் சொன்னான். அவனுக்கு யுகியின் வார்த்தைகள் கொஞ்சம் புரிய... பேசுவது தீக்ஷா என்று கொஞ்சம் அனுமானித்தான் தான். ஆனால் அவனால் அதை உறுதி செய்ய முடியவில்லை. அதனால் யுகியை எழுந்து செல்ல அனுமதிக்கவில்லை.

"இங்கேயே உட்கார்ந்து பேசு..." விஜய் கட்டளையிட...

விஜய்யின் குரலை அந்தப் பக்கமாய்க் கேட்ட தீக்ஷா, "இந்த மிரட்டலுக்கு ஒண்ணும் குறைச்சல் இல்லை..." என்று யுகியிடம் சொன்னபடியே...

"எப்படிடா ஆலமரம் சாய்ஞ்சுடுச்சுன்னு அக்யூரட்டா அடிக்கிற?"

யுகியும் இப்போது அவள் பேச்சுக்கு ஈடு கொடுக்க ஆரம்பித்தான்.

"யூ நோ... யெஸ்டர்டே நைட் வெஸ்ட் மாம்பலம் நிற்க வேண்டிய ட்ரெயின் ஸ்டாப் ஆகாம... கோடம்பாக்கத்தில் போய் நின்னுருச்சு, தெரியுமா...? அதை வச்சுத்தான் சொல்றேன்..." என்ற போதுதான் போனில் யுகியோடு பேசிக் கொண்டிருப்பது தீக்ஷா என்று நிச்சயமாய் உறுதி செய்தான் விஜய்.

இப்போது புரையேறி விட்டது விஜய்க்கு.

சுரேந்தர் யுகியிடம் கேட்டான். "என்னடா ட்ரெயின்... ஆலமரம்னு... மார்னிங் நியூஸ் ரீடர் மாதிரியே பேசிட்டு இருக்க...?" என்றவனிடம்,

"இனிமே நான் அந்த வேலைதான் பார்க்கணும் போல..." என்று சுரேந்தருக்குப் பதிலளித்தவன்...



தான் பேசுவது தீக்ஷாவுடன் என்பது விஜய்க்கும் தெரிந்து விட்டது என்பதை உணர்ந்த யுகி, வேகமாய் அந்த இடத்தைக் காலி செய்தபடி... வெளியேறினான்.

விஜய் அவனை அழைக்க அழைக்க... யுகி, காதே கேட்காதது போல், நழுவ....

"என்னடா... விருமாண்டி டெர்ரர் லுக் விட்டுட்டாரா?" என்று சிரித்தவளிடம்,

"உனக்கு ஏன் தீக்ஷா இந்தக் கொலவெறி... என் அண்ணன்கிட்ட மாட்டி விடுறதே உனக்கு வேலையாப் போச்சு..." என்று சலிக்க...

"ஹலோ... இந்தத் தீக்ஷாவைப் பகைச்சுக்கிட்ட... அப்புறம் ஆர்த்தியை எல்லாம் மறந்துட வேண்டியதுதான். உனக்காக உன் டெர்ரர் அண்ணாகிட்ட பேசப் போறது இந்தத் தீக்ஷாதான். ஞாபகம் வச்சுக்கோ!" என்றதுதான் தாமதம்... யுகி அதற்கு மேலும் சரணடையாமல் இருப்பானா!

"அம்மா தாயே, பர தேவதையே... உன் ஆளு... என் அண்ணன். நீ என்ன பண்ணினாலும் தாங்குவாரு. நீ உன் புயல் வேலையை எல்லாம் அவர்கிட்ட காட்டு. என்னை விட்டுரு. நான் உன் நண்பன்ல..." என்றவனிடம்,

"அது... அந்தப் பயம் இருக்கட்டும்..." என்றவள்,

"எனக்கு ஒரு வேலை பண்ணணும் யுகி..." என்று தன் திட்டங்களை அவனிடம் சொல்ல... முதலில் மறுத்த யுகி, பின் தீக்ஷாவின் மிரட்டலில் பணிந்தான்.

**மா**லை ஐந்து மணி. தன் அலுவலகத்தை விட்டு இறங்கிய விஜய்... காரின் அருகே செல்ல... அங்கு அவனின் டிரைவர் இல்லாமல் யுகி இருக்க... அவனை ஆச்சரிய மாகவும் கேள்விக் குறியாகவும் விஜய் பார்த்தான்.

"என்னடா நீ இருக்க... டிரைவர் எங்கே?" என்றபடி காரில் அமர...

"அவரை என் காரை எடுத்துட்டுப் போகச் சொல்லிட்டேன்..." என்றபடி யுகி காரை எடுத்தான்.

"ஹ்ம்ம்... பெருசா எதுவோ சொல்லப் போறான் போல..." என்றபடி விஜய்யும் அவனைப் பார்க்க...

அவன் பார்வை புரிந்த யுகி, "அண்ணா, என் வேலை விசயமாப் பேசணும்... அதான்..." என்று தயக்கமாய்த் தொடங்கினான்.

"உனக்கு என்கிட்ட பேசுறதுக்கு டைமே கிடைக்கலையா... இல்ல, வேற இடமே கிடைக்கலையா?" என்று அலுத்தவனாய்...

"ஆனா, எனக்கு என்னமோ நீ வேலை விசயமாப் பேச வந்த மாதிரித் தெரியலையே..." என்று அவன் முகத்தைப் பார்க்க...

யுகேந்தர் வேகமாய், "இல்லண்ணா... அது..." என்று இழுத்தபோதே... திடீரென்று கார் நிற்க... இருவரும் தாங்கள் பேசிக் கொண்டிருந்த விசயத்தை விட்டு விட்டு... கார் ஏன் திடீரென்று நின்று விட்டது என ஒருவரை ஒருவர் பார்க்கத் தொடங்க...

யுகி, "கார் ஏன் திடீர்னு ஸ்டாப் ஆச்சு? நீங்க கார்லயே இருங்கண்ணா... என்னாச்சுன்னு பார்க்கிறேன்..." என்று இறங்கினான்.

"இப்படில்லாம் என் கார் மக்கர் பண்ணாதே... என்ன திடீர்னு..." என்று விஜய் சந்தேகமாய் இழுக்க...

"விடுங்கண்ணா... இப்போ மனுசங்க கூடத் திடீர் திடீர்னு மாறிடுறாங்க. யாரையும் புரிஞ்சுக்க முடியலை. அப்படி இருக்கிறப்ப இந்தக் கார்லாம் பெரிய விசயமா...?"



என்றவன், தன் அண்ணனின் முறைப்புக்கு முன்னே... வேகமாய் இறங்கி விட்டான்.

முன்னால் பேனட்டைத் திறந்து ஆராய ஆரம்பிக்க... விஜய்யும் இறங்கி அவனருகில் வந்தான்.

"அண்ணா, என்ன ஆச்சுன்னே தெரியலையே... மெக்கானிக் ஷாப்புக்கு கால் பண்றேன்..." என்று காரை ஆராய்ச்சி செய்து கொண்டே... சொல்லிக் கொண்டிருக்கும் போதே, விஜய்யின் முன் தீக்ஷா வந்து நின்றாள், தன் ஸ்கூட்டியுடன்.

வந்தவள்... விஜய்யைப் பார்க்காமல், அவனிடம் பேசாமல், யுகியைப் பார்த்தபடி, "ஒய் யுகி... என்னடா பண்ற?" என்று சத்தமாய்ப் பேச... யுகி திரும்பிப் பார்த்தான்.

"ஹேய், தீக்ஷா! நீ என்ன இந்தப் பக்கம்?" என்று யுகியும் பேச ஆரம்பிக்க...

விஜய்க்கு இருவரின் திருவிளையாடலும் புரிந்து... யுகியை முறைக்க ஆரம்பிக்க... யுகி, தன் அண்ணன் பக்கம் திரும்பவே இல்லை.

"அண்ணன் கார் ரிப்பேர் தீக்ஷா... மெக்கானிக் பாய் வருகிறவரைக்கும் வெயிட் பண்ணணும். அண்ணாவை எங்க வீட்டில ட்ராப் பண்ணிடுறியா?" என்று அண்ணனின் மேல் அக்கறை கொண்ட தம்பியாக நடிக்க....

"அவருக்கு ஓ.கே.ன்னா எனக்கும் என் பிங்கிக்கும் ப்ராப்ளம் இல்லப்பா..." என்று விஜய்யின் முகத்தைப் பார்த்தபடி, தோளைக் குலுக்கியபடி, அலட்சியமாகப் பேச...

விஜய்க்கு எங்கேயாவது முட்டிக் கொள்ளலாம் போல இருந்தது. தன்னவள் மற்றும் தன் தம்பி நடத்தும் நாடகத்தைப் பார்த்து.

இருந்தும் தன்னவளின் குறும்புத் தனத்தை ரசிக்கா மலும் இருக்க முடியவில்லை. பழைய விஜய்யாக இருந்தால் இந்நேரம் இருவரையும் கடித்துக் குதறியிருப்பான். இப்போது காதல் கொண்ட மனதோ அதை ரசித்துக் கொண்டிருந்தது.

விஜய் இன்னும் பதில் சொல்லாமல் இருப்பதை உணர்ந்த தீக்ஷா, "யுகி... எனக்கு டைம் ஆகிருச்சுடா... சீக்கிரம் அங்க பதிலைக் கேட்டுச் சொல்லு. இல்லை... எனக்குக் கோபம் வராது. என் பிங்கிக்குக் கோபம் வந் துடும்..." என்றபோதே விஜய்... அவளருகில் வந்து நின்றிருந் தான்.

"தள்ளி உட்காரு. நான் டிரைவ் பண்றேன்..." என்றபடி பைக்கில் டிரைவ் பண்ணப் போக,

"பாஸ், பின்னால உட்காருங்க. என் பிங்கியை ஓட்டுறதுக்கெல்லாம் ரூல்ஸ் அண்ட் ரெகுலேசன்ஸ் இருக்கு..." என்றவளிடம், யுகி இருந்ததால், மேலும் வாயாடாமல் விஜய் விட்டு விட்டான்.

'வீட்டுக்கு வாடா. டிராமாவா பண்ற, இவ கூடச் சேர்ந்து கிட்டு... உனக்கு இருக்கு...' என்று மனதுக்குள் யுகியை அர்ச்சித்தபடி பின்னால் அவளின் மேல் படாமல் தள்ளி உட்கார...

தீக்ஷா உள்ளுக்குள் சிரித்தபடி... யுகியிடம் கண் சிமிட்டியபடி, 'பாய்...' சொல்லி விட்டுத் தன் பிங்கியை ஸ்டார்ட் செய்தாள்.

விஜய் தீக்ஷாவின் அருகாமையை ரசித்தவாறே செல்ல... தீக்ஷா அலாதி உற்சாகத்துடன் மிக வேகமாக பைக்கை ஓட்டியபடி வந்தாள்.

விஜய் அமைதியாக வருவதை உணர்ந்த தீக்ஷா, தானே அவனிடம் பேச்சுக் கொடுத்தாள். "விஜய் அத்தான்..."



"ஹ்ம்ம்... சொல்லு..." என்று மட்டும் சொன்னான். பேச அவனுக்கும் ஆசைதான். அவனுக்குச் சுய கௌரவம் என்பதெல்லாம் இல்லை. ஏதாவது பேசி எதிலாவது கொண்டு போய் விட்டு விட்டால்... அதனால் பேசத் தயங்கினான் விஜய்.

தீக்ஷாவோ, 'ம்ஹுக்கும். இவன் வாயைத் திறக்கவே மாட்டானே...' என்று நினைத்தவள்,

"என்னத்தான் பயமா இருக்கா? பயமா இருந்தா என்னைப் பிடிச்சுக்கங்க. ஏன்னா... நீங்க இந்த மாதிரி பைக்ல யெல்லாம் போய்ப் பழக்கமிருக்காது. அதனாலதான் சொல்றேன்..." என்றவள், தொடர்ந்து,

"பயமா இருக்குன்னு ஸ்லோவா எல்லாம் ஓட்டச் சொல்லக் கூடாது. புரிஞ்சுதா?" என்றபடி, இன்னும் வேக மாய் ஓட்ட... விஜய்க்கோ அவளின் அருகாமை அவனை இம்சித்தது.

"நல்லவனாவே இருக்க விட மாட்டாளே... டேய், விஜய்... அவ உன்னை வச்சு ஏதோ பிளான் பண்றாடா... மாட்டிராதடா. இப்படியே வீடு வரைக்கும் நல்ல புள்ள இமேஜை மெயின்டெயின் பண்ணு. வீடு வரைக்கும் இல்ல... அவ கழுத்துல மூணு முடிச்சுப் போடுற வரைக்கும் மெயின்டெயின் பண்ணு..." என்று தனக்குள் கட்டுப்பாடுகளைப் பிறப் பித்தவன்... தன்னைக் கட்டுப்படுத்திப் பேசாமலே வர...

தீக்ஷா அவனின் நிலை எல்லாம் உணராமல்... சாலையின் மேடு, பள்ளங்கள் எல்லாம் நன்றாய்ப் பார்த்து, அதில் ஏற்றியும் இறக்கியும் வந்து... விஜய்யை ஒரு வழி பண்ணித்தான்... விஜய்யின் வீட்டின் முன் தன் வண்டியை நிறுத்தினாள்.

இறங்கிய விஜய்யிடம், "பை..." என்று சொன்ன தீக்ஷாவைப் பார்த்தபடியே நின்று கொண்டிருந்த விஜய்யிடம்,

"அத்தான், பைனு சொன்னேன். என்ன நின்னுட்டே கனவு கண்டுட்டே இருக்கீங்க..." என்று கண் சிமிட்டிய தீக்ஷாவிடம்,

"பைனு ஏன் சொல்ற... வீட்டுக்கு வா!" என்று சொன்ன விஜய்... ஓரளவு சாதாரணமாகி இருந்தான்.

தீக்ஷா, அவனிடம் சந்தோசமாய்ப் பேசிக் கொண்டே வந்ததால், அவனுக்கும் குழப்பம் எல்லாம் போய் இருக்க... அவனுக்கு அவளிடம் பேச வேண்டும் போல் இருந்தது. அதனால், தீக்ஷாவை அழைக்க...

தீக்ஷாவோ, அவனின் அழைப்பில் அந்த வீட்டையே வெறித்துப் பார்த்தாள்.

அவளின் வெறித்த பார்வையை விஜய்யும் கவனிக்க... இப்போது அவன் மனதில் பய அலை அடிக்க ஆரம்பித்தது.

"என்ன தீக்ஷா... ஏன் ஒரு மாதிரிப் பார்க்கிறாய்?" என்றவனிடம்,

"ப்ச்... ஒண்ணுமில்ல...." என்று தலையாட்டியவளின் குரல் உள்ளடங்கி யிருந்தது இப்போது.

"இந்த வீட்ல இருந்து ஒரு முறை கேவலமான முறையில் வெளியே வந்தேன். அது மனசுக்குள்ள இருந்து போகணும்னா... அதை மறக்குற மாதிரி நான் மரியாதை யோட உள்ளே வரணும். அப்படி வந்த பின்னால... இறந்த பின்னாலதான் இந்த வீட்டை விட்டுப் போகணும். அதனால இப்போ வரலை, அத்தான்!" என்று சொன்னவளின் வார்த் தைகளில் விஜய் பலமாய் அடி வாங்கினான்.

அவள் ஒருபோதும் தன் கேவலமான நடத்தையை... அன்று நடந்த நிகழ்வை மறக்கப் போவதில்லை என்று உணர்ந்த விஜய்க்கு... மனதில் பாறாங்கல்லை வைத்து அழுத்தினாற் போன்று வலி எடுத்தது.



விஜய் கண்ணில் வலியோடு தீக்ஷாவைப் பார்க்க... தீக்ஷா அவனின் பார்வையைக் கவனிக்கவில்லை. வேக மாய் அவனை விட்டுத் தன் பைக்கைக் கிளப்ப...

விஜய் அவள் கிளம்புவதை உணர்ந்து... வேகமாய் அவளின் ஸ்கூட்டியின் கீயைக் கைகளில் எடுத்தான்.

"டைம் என்ன... தனியாவா போகப் போற... இரு. நான் வந்து விடறேன்..." என்றவனிடம்,

"அடேங்கப்பா... பெரிய அக்கறைதான்!" என்று சலிக்க...

"ஏன்... என் அக்கறைக்கென்ன குறைச்சல்?" என்ற வனின் குரலிலும் இப்போது கோபம் இருக்க...

"சார்க்கு... தங்கை மேலதான் அக்கறை... எங்க மேலல்லாம் இருக்குமா...? இன்னைக்கு மட்டும் என்ன திடீர்னு அக்கறை..." என்று சொல்ல...

அவள் என்ன சொல்கிறாள் என்பது விஜய்க்கும் புரிந்தது.

அன்றொரு நாள்... ராதாவைத் தீனா ஆட்கள் கடத்தத் திட்டம் தீட்டியிருப்பதைத் தெரிந்து, ராதாவை மட்டும் கூட்டிச் சென்றதைச் சொல்கிறாள் என்பது விஜய்க்கும் புரிய, திகைத்து நின்றான்.

அவன் திகைத்து நின்றதைச் சாதகமாய்ப் பயன்படுத்தி அவனிடமிருந்த சாவியைத் தன் கைகளுக்குள் கொண்டு வந்த தீக்ஷா... அவனை விட்டுக் கடந்தும் சென்றாள்.

விஜய்யோ அவள் போவதையே பார்த்தபடி நின்று கொண்டிருந்தான்.

சிறிது தூரம் சென்ற தீக்ஷா, வழக்கம் போல் தன் இயல்பில் திரும்பிப் பார்க்க... விஜய் நின்று கொண்டிருக்க...

வண்டியை நிறுத்தியவள்... 'என்ன...' என்பது போல் தலையசைத்துக் கேட்க...

விஜய்யோ ஜீவனே இல்லாமல், 'ஒன்றுமில்லை...' என்பது போல் அவனும் தலையாட்ட... மீண்டும் யூ டர்ன் அடித்துத் திரும்பியவள்... அவனருகில் வந்து நின்றாள். அவளுக்கும் அவனை விட்டுப் போக மனமில்லை.

அதனால் தன் ஸ்கூட்டியைச் சாக்காய் வைத்து அவனிடம் மீண்டும் வந்தாள்.

"அத்தான்... என் பிங்கியைத் தொடுறதுக்கு ரூல்ஸ் அண்ட் ரெகுலேஷன்ஸ்லாம் இருக்குன்னு சொன்னேன்ல... அதைச் சொல்ல மறந்துட்டேன். அது வேற ஒண்ணுமில்ல. நீங்க தம் அடிப்பீங்கல்ல... அதனாலதான் சொன்னேன். பிங்கியோட எஜமானிக்குத்தான் ரோசம் இல்ல... எதையும் பார்க்க மாட்டா. ஆனா, என் பிங்கிக்கு அதெல்லாம் கொஞ்சம் ஜாஸ்தி..." என்றவள், அவனைப் பார்க்க... அவனோ, அவள் வந்த ஸ்கூட்டியைப் பார்த்துக் கொண்டிருந்தான்.

தீக்ஷா மனதுக்குள்ளேயே, "டேய், மரமண்டை. நீ தம்மடிக்கிற. வீட்டை விட்டு வெளியே அனுப்புன... உன்னோட பணக்காரத் திமிர் எனக்குப் பிடிக்காது. இப்படி எத்தனையோ உன்கிட்ட பிடிக்கலைன்னாலும் உன்கிட்ட விழுந்துட்டேன்னு சொல்றேன். என்னைப் பார்க்காமல் பெரிய இவனாட்டம் என் ஸ்கூட்டியைப் பார்க்கிற... என்னை மட்டும் நேருக்கு நேர் பார்த்துடாதே. உன் அந்தஸ்து மண்ணாங்கட்டில்லாம் உடைஞ்சு தூள் தூளாப் போயிடுமாடா...

"தாலியைக் கட்டினாத்தான்... உன் பொண்டாட்டியா மாறுனாத்தான் சார் பார்ப்பீங்களோ... அதுக்கும் முன்னாடியே உன் காதலை என்கிட்ட சொல்ல வைக்கல... என் பேர் தீக்ஷா இல்லை. இல்ல இல்ல... தீக்ஷா விஜயேந்தர் இல்லை..." என்று நினைத்தவள், இப்போதைக்கு



அவன் தன்னைப் பார்க்க மாட்டான் என்று மீண்டும் அவனிடமிருந்து விடை பெற்றுப் பறந்தாள்.

இருவரும் ஒருவரை ஒருவர் விரும்பிய போதிலும்... இருவருக்கும் அதைப் பகிர முடியாதபடி அவர்களுக்குள் நடந்த சம்பவங்கள் அவர்களை விலக்கி நிறுத்தியது என்றே சொல்ல வேண்டும்.

தீக்ஷா தலை மறையும்வரை அவளையே பார்த்துக் கொண்டிருந்தவனுக்கு...

தீக்ஷா வந்த ஸ்கூட்டி கூட ஒரு கதாபாத்திரமாகி... "நீதானடா... என்னைப் பார்த்த ஃபர்ஸ்ட் நாளே ஆள வச்சுத் தூக்கச் சொன்னது...' என்று அவனிடம் கேள்வி கேட்பது போல் காட்சி தோன்றி மறைந்தது.

விஜய்யின் உயரம் எல்லாம், தீக்ஷா மேல் கொண்ட காதலால்... கொஞ்சம் கொஞ்சமாக இறங்குவது போல் இருந்தாலும்... அவளின் முழுமையான காதலைப் பெற மட்டுமே அவன் நினைக்க... மற்றதை எல்லாம் புறம் தள்ளினான்.

வீட்டுக்குள் வந்தவன் யுகியைத் தேட... அவன் இன்னும் வீட்டிற்கே வரவில்லை.

"வரட்டும் இன்னைக்கு... என்னை வச்சு ரெண்டு பேரும் காமெடியா பண்றீங்க!" என்று மனதுக்குள் நினைத்த படி, மாடி ஏறப் போனவனைக் கலைச்செல்வி அழைப்பு தடுத்து நிறுத்த... திரும்பிப் பார்த்தான்.

கலைச்செல்வி அவனிடம் இளமாறன் வீட்டில் போய்ப் பேசி... தீக்ஷாவுடனான விஜய்யின் திருமணத்தை அவர் களிடம் தெரியப்படுத்த வேண்டும் என்று சொல்ல,

விஜய்யோ தன் அன்னையிடம், "அம்மா... இது நானும் இளாவும் பேசி டிசைட் பண்ணியது. அவங்க அம்மா

அப்பாவோ, இல்லை நீங்களோ இதில் இன்வால்வ் ஆகலை. இளா ஊர்ல இல்லை. வந்த பின்னால் அவனிடம் சொல்லிக் கொள்ளலாம்..." என்ற ரீதியில் கூலாகச் சொல்ல...

கலைச்செல்வி அதிர்ந்தார்.

"என்ன விஜய்... இப்படிப் பேசுற... இது தப்பு விஜய். அந்தப் பொண்ணு இளமதி ஏதாச்சும் மனசுல ஆசையை வளர்த்து வச்சுருக்கப் போறா..." என்று தவிப்போடு சொல்ல...

"அம்மா, அந்தப் பொண்ணு லண்டன்ல படிச்ச பொண்ணு. இதெல்லாம் டேக் இட் ஈசியா எடுத்துக்குவா..." என்றவனிடம் கலைச் செல்வி கேட்டார்.

கலைச்செல்வி ஏதோ ஒரு வேகத்தில் தன்னை மறந்து வார்த்தைகளை விட்டு விட்டார்.

"எப்படி... தீக்ஷா மாதிரியா! ராகேஷ் வராமல் போயிட் டான்னு சொன்னப்பக் கூட கூலா இருந்தாளே, அது மாதிரியா!" என்றவளை ஆத்திரமாக நிமிர்ந்து பார்த்தான் விஜய்.

"அம்மா, அவ உங்க மருமகள். கொஞ்சம் வார்த்தை களைப் பார்த்துப் பேசுங்க..." என்று கோபத்தை இழுத்துப் பிடித்துச் சொன்னவன்... அதற்கு மேல் அங்கு நின்றால் தாயிடம் வார்த்தைகளை விட்டு விடுவோம் என்று வேகமாய்த் தன் அறைக்குச் சென்றவனின் கோபத்திற்கு... பலிகடா ஆனான் யுகேந்தர்.

தீக்ஷாவின் வார்த்தைகள் ஒருபுறம் அவனை வேதனையில் தள்ளியது என்றால்.. அவன் அன்னையின் வார்த்தைகள் அவனுக்குக் கடுங்கோபத்தைத் தர... மன உளைச்சலுக்கு ஆளான விஜய்... மொத்தக் கோபத்தை எல்லாம் யுகியிடம் கொட்டித் தீர்த்தான்.



## 32

**வி**ஜய் தனது அறையில் குறுக்கும் நெடுக்குமாய் நடந்து கொண்டிருந்தான். இந்த மாதிரிச் சூழ்நிலையில் அவனுக்குத் துணையாய் இருப்பது சிகரெட்தான். அதற்கும் அவனுக்குத் துணையாக வரப் போகிறவள் தடை போட்டு விட்டாள்.

"என்னமாய்ப் பேசுகிறாள்... அவளுக்கு ஒண்ணும் பிரச்சனை இல்லையாம். அவ வண்டிக்குத்தான் பிரச்சனை யாம். வண்டின்னு சொன்னாக் கூடச் சண்டைக்கு வந்துடுவா. எல்லோருக்கும் பட்டப் பேர். எனக்கு விருமாண்டி... அதுக்குப் பிங்கியாம்..." என்று ஒரு புறம் திட்டினாலும்... வீட்டுக்கு வர மாட்டாளா என்று இன்னொரு புறம் அவன் மனம் ஏங்க...

'அவ வரலைன்னா என்ன... நாம நம்ம அட்டெண்டன்ஸை அவ வீட்ல போட்டுருவோம்...' என்று அது விஜய்யா என்று அவனுக்கே சந்தேகம் வரும்படி... அவன் காதல் மனம் அவனுக்கு எதிராக அந்தர்பல்டி அடித்துத் தீக்ஷாவுக்காக ஏங்கியது.

இதில் ஒரே ஆறுதல் திருமணம் முடிந்துதான் வருவேன் என்று அவள் சொல்லாமல் சொன்ன ஒரே விசயம்தான்.

கடந்த இரண்டு வாரங்களாக அவன் சிந்தையை முழுமையாக ஆக்கிரமித்து... அவனை ஸ்தம்பிக்க வைத்துக் கொண்டிருந்தாள். நிச்சயத்திற்கு முந்தின நாள் வரை எங்கிருந்தாலும் வாழ்க என்று மனதைத் தேற்ற நினைத்துக் கொண்டிருந்தான். இப்போதோ அவன் மனநிலை வேறு மாதிரி இருந்தது.

முழுமையாக மனம் காதலில் கலந்து பூரிக்கவும் முடி யாமல், ஒரு பக்கம் குழப்பமாகவும், ஒரு புறம் திகிலாகவும்... ஏதேதோ உணர்வுகளில் அவன் போராடிக் கொண்டிருந்தான்.

பண்ணியதெல்லாம் மன்னிக்கக் கூடிய ஒன்றா... இதுவே, அவன் மட்டும் அவளிடத்தில் இருந்திருந்தால்... தன்னை அவமானப்படுத்திய யாராய் இருந்தாலும் ஒரு வழி பண்ணியிருப்பான். தீபன் கூட எப்படித் தன்னை மன்னித்தான்?

நானாக இருந்திருந்தால்... இப்படி என் தங்கைக்கு மட்டும் நடந்திருந்தால்... அவனை உயிரோடவே விட்டு வைத்திருக்க மாட்டேன். நல்ல வேளை, நம்ம ஆளுக்கு என்னை மாதிரி ஒரு முன்கோபி அண்ணன் இல்லை. விஜய், எங்கேயோ உனக்கு மச்சம் இருக்குடா... என்று நினைக்கும் போதே, தீக்ஷாவின் கழுத்துக்குக் கீழே கொஞ்சம் இறக்கமாக இருந்த மச்சம் பார்த்த நினைவில்... உனக்கு இல்லடா. உன் பொண்டாட்டிக்குத்தான் மச்சம்...

இப்போது அவன் நரம்புகளில் கோபத்திற்கான ஹார்மோன்கள் விடை பெற்று - ரொமான்ஸ் மூடிற்கு மனம் ரூட் போடப் போக... நாங்களெல்லாம் அதற்கு விட்டு விடுவோமா என்று யுகியும் வந்து சேர்ந்தான்.

அவன் யோசனையைக் கலைத்தது, அவனின் கார் சத்தம். வேகமாய்ப் பால்கனிக்கு வந்தவன்... காரை விட்டு இறங்கிய யுகேந்தரைப் பார்த்தபடியே நின்றிருந்தான்.

யுகேந்தரும் பயத்தோடுதான் இருந்தான். அண்ணனிடம் கண்டிப்பாகத் திட்டு கிடைக்கும் என்று நினைத்தாலும்... கூட்டணி தீக்ஷா என்பதால்... தீக்ஷா மேல் பழியைப் போட்டுத் தப்பித்து விடலாம் என்று நினைத்தபடியே அவனையும் அறியாமல் மேலே பார்க்க... தப்பாமல் காட்சி தந்தான் விஜய்.

"மேலே வா..." என்பது போல் விஜய் சைகை செய்தான், இறுக்கமான பாவத்தோடு.



"யுகி, தொலைஞ்சடா... பாவி மாட்டி விட்டுட்டுப் போயிட்டா!" என்று தீக்ஷாவை மனதுக்குள் அர்ச்சித்தபடி மேலே ஏறினான் யுகி.

ஏற்கெனவே கலைச்செல்வியின் மீது கோபத்தில் இருந்தான் விஜய். பாவம், யுகிக்கு அது தெரியுமா என்ன...?

அறையில் நுழைந்தபடியே, "அண்ணா... தீக்ஷா பத்திரமா இறக்கி விட்டுட்டுப் போனாளா?" என்று வழக்கமான தன் குறும்பினைக் காட்ட...

விஜய் உக்கிரமானான்.

"என்னடா... என்னைப் பார்த்தா காமெடியன் மாதிரி இருக்கா... உங்க ரெண்டு பேருக்கும்..." என்றவனின் கோபத்தில் உள்ளுக்குள் அதிர்ந்தாலும், யுகியும் தைரியமாகத்தான் பேசினான்.

"நான் மாட்டேன்னுதான் சொன்னேன். உங்க ஆளு இருக்காள்ல... அவதான் என்னை பிளாக் மெயில் பண்ணி மாட்டி விட்டுட்டா..."

விஜய் இவர்கள் போட்ட பிளானைக் கண்டுபிடித்து விட்டான். தீக்ஷாவைத் திட்ட முடியாது. அதுதான் தன்னிடம் காட்டுகிறான்... என்று தன் அண்ணனின் கோபத்திற்குக் காரணம் கண்டுபிடித்தவன்... அதிலிருந்து தப்பிக்க தீக்ஷா பெயரைப் பயன்படுத்த... இன்னும் உச்சத்திற்கு ஏறினான் விஜய்.

"என்னடா உங்க ஆளு... அவ இவன்னு... இனி அவ உன் அண்ணி. அதை உன் மனசுல வச்சுக்கோ. நீ என்னதான் நினைச்சுட்டு இருக்க... 25 வயசாயிடுச்சு. வாழ்க்கையில முன்னேறணும்னு ஐடியா இருக்கா... இல்ல, அப்பா சம்பாதிச்சு வச்சிருக்கிறது போதும்னு... இப்படியே காலத்தை ஓட்டிடலாம்னு பிளான்ல இருக்கியா...?

"உருப்படியா முன்னேறப் பார்ப்பானா... வெட்டியா ஊரைச் சுத்திக்கிட்டு... இப்போ அவளோட சேர்ந்துகிட்டு டிராமாவா பண்ற... நீங்க ரெண்டு பேரும் தனித் தனியாப் பண்ணினாலே லூசுத்தனமாப் பண்ணித் தொலைப்பீங்க. சேர்ந்து வேற பிளான்..." என்று சுட்டு விரலை... கொன்னுடு வேன் என்பது போல் உயர்த்தி எச்சரிக்க...

"சாரி அண்ணா!" என்று மட்டும் சொன்னான் யுகேந்தர். வேறெதுவும் பேச அவனுக்கு வாய் வரவில்லை. எதிர்த்துப் பேச முடியாமல் அடங்கி விரைத்தபடி நின்று கொண்டிருந்தான் யுகி.

அதன் பிறகு... வழக்கம் போல விஜய் பேச ஆரம் பிக்க... விஜய் இருந்த கோபத்தில் கொஞ்சம் அதிகமாகவே யுகி வாங்கிக் கட்டிக் கொண்டான்.

விஜய்யின் அறையை விட்டு வெளியேறும்போது... தப்பித்தோம் பிழைத்தோம் என்ற ரீதியில் இருந்தது யுகேந்தர் நிலை.

தன் அறைக்குள் நுழைந்தவன்... சிறிது நேரம் அப்படியே அமர்ந்து விட்டான். இருந்தும்... இன்னும் விஜய்யின் குரல் அவன் காதில் ஒலித்துக் கொண்டே இருப்பது போன்ற பிரமையிலேயே இருந்தான் யுகி.

அவனின் இந்த நிலையைக் கலைப்பது போல மொபைல் ஒலிக்க... ஆர்த்தியாக இருக்குமோ என்று நினைத் தவன்... இப்போது அவளுடன் பேசும் மன நிலையிலா இருக்கிறேன்... என்றபடி போனைப் பார்த்தவன், அது தீக்ஷா என்றிருக்க... வேகமாய் எடுத்தான், கோபத்தோடு.

போனை வேகமாய் எடுத்தான்தான்... ஆனால் பேசாமல் மௌனம் காக்க,

"என்னடா... பேசவே மாட்டேன்கிற..." என்று அமைதி யாகவும், தயங்கித் தயங்கியும் ஒலித்தது, தீக்ஷாவின் குரல்.



யுகி எப்போதும் உற்சாகமாகவே பேசுவான். கொஞ்சம் மழுப்பலாகப் பேசினால்... எதிரில் விருமாண்டி இருக்கிறான் என்று தீக்ஷா புரிந்து கொள்வாள். அதனால் தீக்ஷாவும் அமைதியாகக் கேட்க...

"ஹ்ம்ம்... நீ பண்ணிய வேலைக்கு எனக்குத்தானே திட்டு விழுந்துச்சு. அப்புறம் எங்கிட்டு பேசறது? என்ன நினைச்சுட்டு இருக்காரு, அவர்... பண்ணினதெல்லாம் நீ... திட்டெல்லாம் எனக்கா?" - எகிறினான் தீக்ஷாவிடம்.

'யுகியைத் திட்டி விட்டானா? நம்மள ஒண்ணுமே திட்டலையே!' மனதில் நினைத்தபடி... அவளும் வேகமாக, "என்கிட்ட ஏன் எகிறுற! உன் அண்ணன்கிட்ட சொல்லி இருக்க வேண்டியதுதானே... தீக்ஷாதான் எல்லாம் பண்ணி னாள்னு..."

"ஆமாம், அவர்தானே... நல்லாத் திட்டுவாரு உன்னை. உன்னைப் பேச முடியாமல்தான் என்னைப் பிரிச்சு மேய்ஞ் சுட்டாரு..." என்று குமுற,

"ஓஓஓ!" என்று சந்தோசத்தில் கத்த...

யுகி கடுப்பாகி விட்டான். "அங்க குளு குளுன்னு தாம்மா இருக்கும். இங்கதானே அட்டாக். எரியுது..." என்று கடுப்படித்தான்.

"ஏசியைப் போட்டுக்கடா. அப்படியும் எரிஞ்சதுன்னா... அடங்கலேன்னா ஆர்த்திகிட்ட போன் போட்டுப் பேசு..." என்று வழக்கம் போல் கடிக்க...

"ஏய்..." என்று பல்லைக் கடித்தான் யுகி. அதற் கெல்லாம் அசருபவளா தீக்ஷா?

"என்ன ஏய்... இதுக்கெல்லாம் ஒண்ணும் குறைச்சல் இல்லை. அங்கே பேச முடியாம... இப்போ ஏன் என்கிட்ட இந்தக் குமுறு குமுறுற... சரி, சரி. விடு. இதெல்லாம் நமக்குப்

புதுசா யுகி... இந்தக் காதுல வாங்கிட்டு அந்தக் காதுல விடுற கேசு... இதுக்கே இப்படிக் கொதிக்கலாமா...

"நம்ம சங்கக் கொள்கையெல்லாம் என்ன ஆகிறது...? நாமெல்லாம் இன்னும் என்னென்னமோ பார்க்க வேண்டியிருக்கு. எவ்ளோ அடிச்சாலும் தாங்குவான் என் நண்பன்னு பெருமையாச் சொல்லிட்டு இருந்தேனே... அதுக்கு உலை வைச்சுட்டியே நண்பா..." என்று பொய்யாய்த் துக்கப்பட்டுச் சொல்ல...

அவளின் பேச்சில்... யுகி சிரித்தபடி, "இன்னும் கொஞ்ச நாள்தான்டி மவளே... உனக்கும் தெரியும், எங்க அண்ணா திட்டினார்னா..." என்றவன், சொன்ன வார்த்தைகளில் தீக்ஷா மௌனமாகச் சிரிக்க...

"என்ன மேடம், சைலெண்ட் ஆகிட்டீங்க. பயந்துட்டியா?" - இப்போது யுகியும் சகஜமாகி இருந்தான்.

"நானா... அதெல்லாம் உங்க அண்ணாகிட்ட வண்டி வண்டியா வாங்கிக் கட்டிக்கிட்டவதான். அதெல்லாம் விடு. உனக்கு அண்ணியா வரப் போறவகிட்ட ஒரு மரியாதை வேண்டாம்... அதைத்தான் யோசிச்சுட்டு இருக்கேன்..." என்றவளின் வார்த்தைகளில் யுகிக்கும் சற்று முன் விஜய் திட்டியதும் ஞாபகம் வர...

"இதைச் சொல்லியும் உன் ஆளு என்னைத் திட்டினாரு..." - முணுமுணுப்பாய்ச் சொன்னான்.

"ஹாஹா..." என்று வாய் விட்டுச் சிரிக்க ஆரம்பித்தாள், தீக்ஷா.

"ஏய், உனக்கு இப்போ எதுக்கு இப்படி ஒரு சிரிப்பு... நிலைமைடா யுகி!" என்றபோது,

"நினைச்சேன்டா... உங்க அண்ணாகிட்ட திட்டு வாங்குறதுக்கெல்லாம் நீ இந்த அளவு டென்சன் ஆக மாட்டியே...



இன்னைக்குப் பையன் ஏன் இந்தத் துள்ளு துள்ளுறான்னு... இப்போதானே தெரியுது. என்னை அண்ணின்னு கூப்பிடச் சொன்னாரா, உங்க அண்ணன். உன் கோபத்துக்குக் காரணம் இதுதானாடா?" என்று நக்கலடிக்க,

"தீக்ஷா!" என்று மீண்டும் பல்லைக் கடித்தான் யுகி.

"ஹலோ, ஹலோ அண்ணி... அண்ணி... எங்க சொல்லு பார்க்கலாம்?" - தீக்ஷா போட்டுத் தாக்கினாள் யுகியை.

"ஹையோ, புருசனும் பொண்டாட்டியும் ஏன் என்னை வறுத்தெடுக்கிறீங்க... இப்படி?" என்று தலையில் கை வைத்துவிட்டான் யுகி.

"யுகி... யுகி... இப்போ என்னடா சொன்ன? இன்னொரு தடவை சொல்லுடா... ப்ளீஸ், ப்ளீஸ்..." என்று தீக்ஷா கெஞ்சினாள், தன் கொழுந்தனிடம்.

"என்னை ஏன் வறுத்தெடுக்கிறீங்கன்னு சொன்னேன்..." - யுகி சொல்ல...

"அது இல்லடா... அதுக்கும்... அதுக்கும் முன்னாடி..." எடுத்துக் கொடுத்தாள் தீக்ஷா.

யுகிக்குத் தான் சொன்ன வார்த்தைகளில் விஜய் - தீக்ஷா உறவினைச் சொன்னது புரிய... தீக்ஷாவா இது... என்று குழம்பியே விட்டான். அவளை நினைத்து மட்டுமல்ல... அவனின் அண்ணனை நினைத்தும்!

'எப்படி நடந்தது இது... இருவருக்கும் இடையில் இப்படி ஒரு காதல்... தன் அண்ணன் என்னடாவென்றால் தீக்ஷா என்ற பெயரைக் கேட்டாலே... தன் இயல்பே மாறி விடுகிறார். இவள் என்னவென்றால்... இந்த அளவு உருகுகிறாள்... உலகமே புரியலடா சாமி...' என்று குழம்பியவனைத் தீக்ஷாவின் குரல் மீட்டெடுக்க...

"அண்ணி... உங்க கொழுந்தன் பாவம் இல்லையா...? விட்டுடுங்களேன்... உங்க போதைக்கு நான் ஊறுகாயா!" என்று பரிதாபமாய்ச் சொல்ல...

தீக்ஷா அதற்கு மேலும் அவனைப் பாடுபடுத்த வில்லை. பதிலுக்கு, "ஹேய் யுகி... இந்த அண்ணி... சுடு தண்ணில்லாம் வேண்டாம். நீ தீக்ஷானே கூப்பிடு. சும்மா உன்கிட்ட விளையாண்டேன்... " என்று சொல்ல,

"ஆனா, அண்ணா..." என்று இழுத்தவனிடம்...

"அதை நான் பார்த்துக்கிறேன்..." என்றபடி, போனை வைக்கப் போக, தீக்ஷாவிடம் கேட்டான் யுகி.

"எப்படி தீக்ஷா... எங்க அண்ணா மேல திடீர்னு இப்படி ஒரு காதல்..." என்றவனிடம்...

"நாங்கள்லாம் இந்த விசயத்தில் உனக்கு ஜுனியர் கொழுந்தனாரே... காதல் வரும்போது உனக்கே தெரி யும்னு... அன்னைக்கு அப்படிச் சொல்லிட்டு.... இன்னைக்கு இப்படி ஒரு வார்த்தை... நீ கேட்கலாமா?" என்று அவன் கேட்ட கேள்விக்குப் பதில் சொல்லாமலே போனை வைத்தாள் தீக்ஷா.

வைத்தவள்... அவளது போனில் இருந்த புகைப் படத்தில் விஜய்யைப் பார்த்தாள்.

தன் அண்ணன் திருமண ஆல்பத்திலிருந்து... தன் மொபைலில் சுட்டிருந்தாள்.

'ஹ்ம்ம்... டிஸ்கவரி சேனலுக்குப் போட எடுத்த போட்டோ எல்லாம் வச்சு... ரொமான்ஸ் பண்ண வேண்டிய நிலைமைடி, தீக்ஷா!

ஹேய், இந்தர் மச்சான்.. பச்சப் புள்ளைய இந்த மிரட்டு மிரட்டி வச்சுருக்க... உனக்கு இருக்குடா என் செல்ல மச்சானே...' என்றபடி அதற்கான வேலையில் இறங்கினாள்.



அடுத்த நாள் காலை அலுவலகத்திற்குக் கிளம்பிக் கொண்டிருந்த தன் மூத்த மகனிடம் வந்தாள் அவன் அன்னை... சற்றுத் தயக்கமாகவே.

"விஜய், என்னை மன்னிச்சுக்கப்பா... ஏதோ ஒரு வேகத்தில் தீக்ஷா பற்றி வாய் விட்டு விட்டேன். சத்தியமா என் மனசில் இருந்து வரல..." என்று தன் மகனிடம் மன்னிப்புக் கேட்க...

கலைச்செல்விக்கு அவர் பேசிய வார்த்தைகள் அவரையே உறுத்த... விஜய்யிடம் வந்து மன்னிப்பும் கேட்டு விட்டார்.

"அம்மா... இது என்ன பெரிய வார்த்தையெல்லாம் சொல்லிட்டு... உங்களுக்கு அவளை எவ்ளோ பிடிக்கும்னு எனக்குத் தெரியாதா? அது மட்டுமில்லை. நீங்கதான் அவளை மருமகளா எடுக்கணும்னு சொன்னதே... உங்களைப் பற்றி எனக்குத் தெரியாதா?" என்று தன் தாயின் மனவருத்தம் தாங்காமல்... தன் வருத்தமெல்லாம் நீங்கி ஆறுதல் படுத்த...

ஒரு வழியாய்த் தாயும் மகனும் சமாதானமாகினர்.

கலைச்செல்வி இப்போதும் விடாமல் இளமதியைப் பற்றி மீண்டும் வலியுறுத்த ஆரம்பித்தார்.

"விஜய், யார் செய்த புண்ணியமோ நம்ம தீக்ஷா அந்தப் பையன் ராகேஷ் மேல எந்தவித ஈடுபாடும் வைக்கல. வச்சுருந்தா... யோசிச்சுப் பாரு. அது போலத்தான் இளமதி யும். நான் சொல்ல வருவதைப் புரிஞ்சுக்கோப்பா..." என்ற போது,

இம்முறை தன் அன்னையின் வார்த்தைகளை ஏற்றவன்... "கண்டிப்பா... நான் இளமாறன் கிட்ட பேசறேன். அந்தப் பொண்ணுகிட்டயும் பேசறேன், அம்மா... போதுமா?" என்ற போதுதான் கலைச்செல்வி கொஞ்சம் ஆறுதலாய் உணர்ந்தார்.

அதே நேரத்தில்... இளமதியின் மனதில் விஜய் மீது பெரிதாக எந்த ஒரு ஈடுபாடும் இருந்திருக்கக் கூடாது... என்று கடவுளிடம் மனமார வேண்டிக் கொண்டார் கலைச்செல்வி.

இளமாறன் வெளிநாடு சுற்றுப் பயணத்தில் இருந்ததால்... இளமாறன் வந்த பின்னால் நேரிடையாகவே பேசிக் கொள்ளலாம் என்று ஏற்கெனவே முடிவு செய் திருந்தான் விஜய்.

ஆனால் தன் அன்னை மீண்டும் மீண்டும் வலி யுறுத்திய காரணத்தால் விஜய்... இளமாறன் பெற்றோரைச் சந்தித்து விசயத்தைச் சொல்ல... அவர்களுக்குக் கொஞ்சம் வருத்தம் இருந்தாலும்... பேச்சுவார்த்தையில் மட்டுமே விஜய் - இளமதி திருமண விவகாரம் இருந்ததால்... பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை.

இளமாறன் பெற்றோரிடம் சொல்லி விட்ட நிம்மதி யோடு... விஜய்யும் மன அமைதி ஆனான். அது தந்த மகிழ்ச்சியில்... யுகிக்குப் போன் செய்தான் விஜய்.

"சொல்லுங்கண்ணா!" - அவசரமாய்ப் பேசினான் யுகி.

"சாரிடா யுகி... நேத்துக் கொஞ்சம் அதிகமா உன்னைத் திட்டிட்டேன்..." என்றவன், அடுத்து யுகி பேசும் முன்னே...

"அப்புறம் இன்னைக்கு என்ன பிளான்? அதே பிளானா... இல்ல, மேடம் வேற பிளான் பண்ணியிருக் காங்களா...? ஏன்னா... நான் கார்கிட்ட வெயிட் பண்றேன். உன் ஃப்ரெண்ட்... இன்னைக்கு உன்னை வச்சு பிளான் பண்ணலையா?" சிரித்தபடி கேட்டான் விஜய்.

"அண்ணா...!"

யுகிக்குப் பேசவே முடியவில்லை. தன் அண்ணனா... இந்த அளவு பேசுவது என்று ஆச்சரியத்தில் பேச்சடைத்து நின்றான்.



எப்போதும் தன் அண்ணனின் கோபத்தின் முன் வார்த்தைகளின்றி இருப்பவன்... இன்று அவனின் உற்சாக மான வார்த்தைகளில் பேச்சற்று நின்றான்.

"யுகி... யுகி..." என்று விஜய் பழைய குரலில் சற்றுச் சத்தமாய்க் கூப்பிட...

"நான் வீட்லதான் இருக்கேண்ணா..." என்றவனிடம் மேற்கொண்டு பேசாமல், தன் வீட்டை அடைந்தான் விஜய்.

விஜய்யின் கார் வீட்டை அடைந்தபோதே, கார் வரும் வழியில் தீக்ஷாவின் பைக்கான பிங்கி நின்று கொண் டிருக்க... விஜய்க்கு உள்ளம் துள்ளியது. ஆனால்... 'வீட்டுக்குள் காலடி எடுத்து வைக்க மாட்டேன்...' என்று தீக்ஷா நேற்று வீராப்பாகச் சொன்னதும் ஞாபகம் வர... அவள் வந்திருக்க மாட்டாள்... என்றுதான் நினைத்தான்.

ஒருவேளை ராதா வந்திருப்பாளோ...? ஆனால் ராதா ஒரு நாள் கூட ஸ்கூட்டியில் வந்ததில்லையே என்றெல்லாம் சிந்தனையில் உழன்றபடி இருக்க... விஜய்யின் ஓட்டுநர் வழக்கம் போல... தங்கள் காரை நிறுத்தித் தீக்ஷாவின் பைக்கை ஓரமாய் நிறுத்தப் போக... விஜய் அவசரமாய்த் தடுத்து நிறுத்திக் கேட்டான்.

"வாசு... சிகரெட் அடிப்பியா?"

"சார்..." என்று இழுத்தவனிடம்,

"ஆமாவா... இல்லையா... அதை மட்டும் சொல்லு!" என்று விஜய்யின் குரல் உயர...

ஆமாம் என்பது போல் தலையாட்டினான், அவனது ஓட்டுநர்.

காரைத் தீக்ஷாவின் பைக்கின் பின்னால் நிறுத்தச் சொன்ன விஜய்... அதிலிருந்து இறங்கி, தானே ஸ்கூட்டியை

ஓரமாய் நகர்த்தி, அதன் பின்... வாசுவைக் காரை ஓட்டிப் போக அனுமதித்தான்.

வாசுவுக்கே ஆச்சரியம்தான்... இது அடிக்கடி நடக்கும் நிகழ்ச்சிதான். தீக்ஷா எப்போதுமே, தன் வண்டியை ஓர மாகவே நிறுத்தியிருக்க மாட்டாள். அப்போதெல்லாம் விஜய் முகமே கோபத்தில் வெளுத்திருக்கும். போகப் போக... இது வழக்கமாகி விட்டது.

இன்றோ இப்படி... விஜய்யின் நடவடிக்கையில் அவன் கார் ஓட்டுநர் கூட வித்தியாசம் கண்டுபிடித்தான்.

அதை எல்லாம் கண்டு கொண்டும் கொள்ளாத வனாய்... பைக்கிடம் குனிந்தான் விஜய்.

“ஹலோ பிங்கி... தப்பா எடுத்துக்காதே. நீ கொஞ்சம் ரோஷமானவள்னு உன் எஜமானி சொன்னா... நானும் நேத்தோட தம் அடிக்கிறதை விட்டுட்டேன். அதனாலதான் உன்னைத் தொட்டேன். ஆனா, உனக்காக எல்லாம் தம் அடிக்கிறதை எல்லாம் விடல. உன் ரோசமில்லாத உன் எஜமானி... இல்ல, இல்ல... என் எஜமானியம்மாவுக்காக விட்டுட்டேன்.

“உங்க மேடம்தான் வர மாட்டேன்னு சொல்லிட்டாங்க... நீயாவது வந்தியே!” என்றபடி, பிங்கியின் ஹாண்ட் பாரை லேசாய்த் திருப்பியவன்... தான் தனியாக நின்று உளறிக் கொண்டிருக்கிறோம் என்பதை முற்றிலுமாய் உணர... இப்போது சுற்றும் முற்றும் ஒரு முறை பார்த்தான்.

யாரும் அவனைப் பார்க்கவில்லை... என்று உறுதி செய்தவன்... உற்சாகமான மனநிலையோடு உள்ளே போக... அங்கு தீக்ஷா அமர்ந்திருந்தாள். விஜய்யோ நொந்தே போய் விட்டான்.

பின்னே... நேற்றைய வார்த்தைகளில்... தன் இரவுத் தூக்கத்தை எல்லாம் தொலைத்துப் புலம்பிக் கொண்டிருக்க...



இன்று வீட்டில் வந்து உட்கார்ந்திருக்கிறாள் என்றால் அவனால் அவளைக் கணிக்கவே முடியவில்லை.

‘என்ன மாதிரியான பெண் இவள்... நேற்றுச் சொன்ன வார்த்தைகள் என்ன... இன்று வந்து நட்ட நடு ஹாலில் அமர்ந்திருப்பது என்ன... அவள் சொன்னது போல ரோசம் இல்லை என்று நிரூபிக்கிறாளா... இல்லை. வேறு என்ன சொல்ல வருகிறாள் என்னிடம்...’ என்றபடி, அவளைப் பார்த்த படி உள்ளே வர... அவளோ இவன் பக்கம் திரும்பாமல்... யுகியிடம் பேசிக் கொண்டிருந்தாள்.

விஜய்க்கு யுகியைப் பார்த்து, முதன் முதலாகப் பொறாமை கூட வந்தது என்றே சொல்லலாம். தீக்ஷாவும் யுகியும் இன்று என்றல்ல... எப்போதுமே இருவரும் ஒன்று சேர்ந்தால் அந்த இடம் அவ்வளவு கலகலப்பாக இருக்கும்.

இவன் வந்தால் மட்டுமே இருவரும் சத்தமில்லாமல் கமெண்ட்ஸ் கொடுத்துக் கொள்வார்கள். சுரேந்தரைக் கூட இருவரும் விட்டு வைக்க மாட்டார்கள். அவனும் இவர்கள் வெட்டியான அரட்டை அடிக்கும் குழுவில், தன் உறுப்பினர் உரிமத்தை அவ்வப்போது புதுப்பித்துக் கொள்வான். விஜய் மட்டுமே அந்தப் பக்கம் தலை வைத்துப் படுக்காதவன்...

‘ஹ்ம்ம்...’ என்று பெருமூச்சு விட்டுக் கொண்டவன்... இப்படி ஒரேயடியா விழப் போறேன்னு தெரிந்திருந்தால் கொஞ்சம் நம்ம பிரசன்னத்தையும் காட்டியிருக்கலாம். இப்போ போனால் வித்தியாசமாப் பார்த்துத் தொலையுங்க ரெண்டும்... என்று நினைத்தான்தான். இருந்தும் கர்ம சிரத்தையாய்ப் பேசிக் கொண்டிருந்த இருவரின் முன் போய் அமர்ந்தான்.

விஜய்யை ஓரக் கண்ணால் பார்த்தபடியே... இப்போது தீக்ஷாவின் குரல் இன்னும் உயர்ந்தது.

"யுகி, நாம ரெண்டு பேரும் கம்பெனி ஸ்டார்ட் பண்றோம்டா. நீ, நான், தீபன், ராதா அண்ணி... எல்லோருமே கம்ப்யூட்டர் சயின்ஸ்டா... இன்னும் சப்போர்ட் வேணும்னா உனக்கு வரப் போற மனைவியையும் நாம அந்த ஃபீல்ட்ல இருந்தே எடுத்துக்கலாம்..."

ஆர்த்தியும் இவர்கள் துறை என்பதால் தீக்ஷா மறைமுகமாகச் சொல்லி வைக்க... யுகிக்கு மூச்சடைக்க... தீக்ஷாவை நிமிர்ந்து பார்த்துக் கண்களால் கெஞ்சினான். 'என்னை விட்டுடு!' என்பது போல்...

அப்போது சுரேந்தரும் உள்ளே வர... சுரேந்தரையும் தீக்ஷா விடவில்லை.

"நம்ம சுரேந்தர் அத்தானுக்கும் நம்ம ஃபீல்ட்லயே பொண்ணு பார்ப்போம்டா... நாம கம்பெனி ஆரம்பிச்சு..." என்றபோதே,

சுரேந்தர், தீக்ஷா அருகில் வந்து அமர்ந்து, "நீங்க கம்பெனி ஆரம்பிக்கிறதுக்கு... என் தலை ஏன் உருளுது?" என்று சிரித்தபடியே கேட்க,

"அத்தான், என் ஃப்ரெண்ட் யுகியைப் பார்த்து... அப்பா சொத்திலேயே காலத்தை ஓட்டிடலாம்னு இருக்கியானு கேட்டுட்டாங்க. அதான் பொங்கி எழுந்துட்டோம். நண்பனுக்கு ஒண்ணுன்னா இந்தத் தீக்ஷா தாங்க மாட்டா..." என்று அவள் சொல்லச் சொல்ல சுரேந்தர் வாய் விட்டுச் சிரித்தான்.

விஜய்யோ, இவ அலும்புக்கு அளவே இல்லையா... என்ற தொனியில் அவளைத்தான் பார்த்துக் கொண்டிருந்தான்.

"ஹ்ம்ம்.... அதுக்குத்தான் கூட்டணி சேர்த்து கம்பெனி பிளானா! நான் எப்போதுமே என் அண்ணா பக்கம்தான். என்னோட மனைவியும்..." என்று அழுத்தியவன்... கண்டிப்பா



இந்தக் காரணத்துக்காகவே எங்க ஃபீல்டுக்கு ஒத்து வருகிற மாதிரித்தான் பொண்ணைப் பார்த்து மேரேஜ் செய்வேன் என்று கூற...

"ஸ்ஸ்ஸ்... அப்பா... இந்த ராமர் - லட்சுமணன் தொல்லை தாங்க முடியலைடா, யுகி..." என்று தீக்ஷா நீட்டி முழங்க, சுரேந்தர் அவள் தலையில் செல்லமாகக் குட்ட... மூவரும் கலகலக்க ஆரம்பித்தனர்.

விஜய்யைத் தவிர, அந்த வீட்டில் மற்ற அனைவரும் அவளோடு மிகவும் அந்நியோன்யமாகப் பழகுவது விஜய்க்குப் புரிந்தது. இருந்தாலும் அவனால் இருப்புக் கொள்ள முடியவில்லை. மூவரும் பேசிக் கொண்டே இருக்க... விஜய் எழ....

தீக்ஷா, அவனைப் போக விட்டு...

"அத்திரி பத்திரி கத்திரிக்கா...

என் அத்தான் நெஞ்சில் இடமிருக்கா...?"

என்று சத்தமாகப் பாட... விஜய் நின்று திரும்பிப் பார்த்தான்.

"பாட்டு அத்தான்... வரும்போது எஃப்.எம்.ல போட்டாங்க. சும்மா... ஹம் பண்ணிப் பார்த்தேன். நீங்க போங்க..." என்றவள், யுகியிடம் கண் சிமிட்டி விட்டுத் தன் மொபைலை மும்முரமாகப் பார்க்க ஆரம்பிக்க... விஜய் மீண்டும் திரும்பிப் படிகளில் ஏற...

இப்போது தீக்ஷா அவனைப் பார்க்காமலே...

"ஹேய் டும் டும் டும் பிப்பி எப்போ எப்போ..."

என்று பாடியபடி இருக்க... அவள் பாடிய வேகத்தை விட, வேகமாகப் படிகளில் ஏறியவன்... அதே வேகத்தில் கீழே இறங்கியும் வந்தான்.

"இந்தா, மேரேஜ் கார்ட்ஸ் டிசைன்ஸ் வந்திருக்கு. அத்தை, மாமாகிட்ட காட்டி செலக்ட் பண்ணச் சொல்லு...." என்று சொல்ல,

"யுகி... பாட்டுப் போட்டு நான் கேள்வி கேட்ட வுடனே... விஜய் அத்தான் கையில ஆன்சர் தந்திட்டாரு..." என்றவள்,

"நீங்களே செலக்ட் பண்ணிடுங்கத்தான்... நீங்க செலக்ட் பண்ணதை அவங்க வேண்டாம்னா சொல்லப் போறாங்க..." என்று விட்டேற்றியாய்ச் சொல்ல...

விஜய் கோபத்துடன், "என்ன சொன்னாலும் மறுத்துப் பேசணும்னே பேசுவியா, தீக்ஷா... சொல்றதைச் செய்... புரிஞ்சுதா?" என்று சொல்ல... அவன் வார்த்தைகளில் வழக்கம் போல் கோபச் சாயம் பூசியபடி தீக்ஷாவை அடைய...

தீக்ஷா விழிகளில் மிரட்சியுடன் அவனை நோக்க... அப்போதுதான் விஜய்க்கே அவனது கோபமான வார்த்தைகள் புரிய... தன்னைத் தானே திட்டிக் கொண்டான்.

தன்னை எவ்வளவுதான் கட்டுப்படுத்தினாலும்... கோபம் என்பது தன்னை மீறி வருகிறது என்பதைப் புரிந்து கொண்டவனுக்கு... இந்தக் கோபத்தை எப்படி அடக்குவது என்ற வழிதான் தெரியவில்லை.

தீக்ஷா முதலில் மிரண்டாலும்... உடனே தன்னைச் சகஜமாக்கிக் கொண்டவள்....

கையில் வைத்திருந்த அழைப்பிதழ்களை அப்படியே யுகியின் கைகளில் கொடுத்து... "என்னோட சார்பா ஒண்ணை செலக்ட் பண்ணு, யுகி..."

"இல்ல... தீக்ஷா..." என்று ஆரம்பித்தவன்... தன் அண்ணன் தங்கள் முன்னால் இருப்பதை உணர்ந்து... "இல்ல அண்ணி..." என்று திருத்த,

அவன் கைகளில் இருந்த அழைப்பிதழ்களை வெடுக்கென்று பறித்தவள்...

"என்னடா அண்ணி... நான் உன் ஃப்ரெண்ட். அதுக்கப்புறம்தான் மற்ற எல்லா உறவும். நீ என்னை



அண்ணின்னு கூப்பிட்டுத்தான் ஆகணும்னா... அதுக்குக் காரணமான அந்த உறவு முறையே எனக்குத் தேவையில்லை..." என்று தீவிரமாகக் கூற...

விஜய் ஆடித்தான் போனான்.

சுரேந்தரோ அதற்கும் மேல்... "தீக்ஷா, என்ன பேச்சு இது..." என்று அதட்ட....

விஜய் அதற்கு மேல் அங்கு நிற்கவில்லை. நிற்கவும் பிடிக்கவில்லை. தன்னை அலட்சியப்படுத்தும் அவளின் வார்த்தைகளைத் தாங்காமல்... தன் அறைக்கே மீண்டும் போய் விட்டான்.

தீக்ஷா அவன் போவதையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

விஜய் இப்போதும் இவளின் வார்த்தைகளைத் தாங்க முடியாமல் போகிறான் என்று உணரவில்லை. எப்போது உணர்வாளோ?

அவன் தலை மறையும்வரை... அமைதியாக இருந்தவள், சுரேந்தரிடம் திரும்பி, "சுரேந்தர் அத்தான்... ராமர் ஏன் இவ்ளோ சூடா இருக்காரு...?" என்று கேட்க,

"தீக்ஷா, அதில கொஞ்சம் ஆயில் ஊற்றி நாம பஜ்ஜி சாப்பிட்ரலாம். நமக்கு இதெல்லாம் ஒரு மேட்டரா...?" என்று யுகி, தீக்ஷாவைச் சாதாரணமாக்க கூலான வார்த்தைகளைப் பேசினான்.

தீக்ஷா தன்னை விட்டுக் கொடுக்காமல் பேசியதால், யுகியும் அவளோடு பேச்சில் ஐக்கியமாகி இருந்தான்.

"யுகி, எங்கேயோ போயிட்டடா... உன்னை மாதிரி நண்பன் இந்த நண்பிக்கு இருக்கிறவரை... இந்த விஜயேந்தர் இல்லை... தேவலோக இந்தர் வந்தால் கூட என்னை

அசைக்க முடியாதுடா..." என்றபடி, அவனோடு சேர்ந்து தீக்ஷாவும் வாயாட ஆரம்பிக்க...

சுரேந்தர்தான் அவர்கள் இடையில் விழி பிதுங்கி விட்டான்.

'கடவுளே, சும்மாவே யுகியைக் கையில பிடிக்க முடியாது. இனிக் கேட்கவா வேணும்... எங்க அண்ணா நிலைமைதான் பாவம்...' என்று நினைத்துக் கொண்டான்.

"அண்ணா ஏன் கோபமாப் போறாருன்னு உனக்குப் புரியலையா, தீக்ஷா?" என்றவனின் பேச்சில்...

"சுரேந்தர் அத்தான்... பி கூல். சும்மா ஒரு ஷாக் ட்ரீட்மெண்ட். நேற்று யுகியை உங்க அண்ணன் என்னை அண்ணின்னு கூப்பிடச் சொன்னாராம். அதுக்குத்தான் இது. என்னைப் போய் அண்ணின்னு... ஒரே காமெடியா இல்லை. அதனாலதான்...

"நீங்க ஏன் இந்த அளவுக்கு எஃபெக்ட் கொடுக் கிறீங்க..." என்று சிரித்தபடி சொன்னவளிடம் கவலையாகச் சுரேந்தர் பேச ஆரம்பித்தான்.

"தீக்ஷா, அதுக்காக இப்படில்லாம் பேசுவியா? நாங்க உன்னை அண்ணின்னு கூப்பிடறோம், இல்ல கூப்பிடலை. ஆனா, இந்த வீட்டு மூத்த மருமகளா... எங்க அண்ணாவுக்கு எல்லா விதத்திலும் பொருந்திப் போற மாதிரி நடந்துக்க ட்ரை பண்ணு, தீக்ஷா!" என்று அறிவுரை கூற...

தீக்ஷா அவனை ஒரு மார்க்கமாகப் புருவம் சுருக்கிப் பார்த்தாள்.

"எல்லா விதத்திலும்னா... எப்படி அத்தான்... உங்க அண்ணா குணங்கள் எதுவுமே எனக்கு ஒத்து வராது. அப்போ நான் உங்க வீட்டுக்கு மருமகளா... உங்க அண்ணாவுக்கு மனைவியா வருகிற தகுதி எனக்கு இல்லைன்னு சொல் றீங்களா...?" – வார்த்தைகள் சுரத்தில்லாமல் வெளி வர...



சுரேந்தரும், யுகேந்தரும் பதறிப் போய் விட்டனர், அவளது கேள்வியில்.

"தீக்ஷா, நான் அப்படிச் சொல்ல வரலைம்மா..." என்று சுரேந்தர் சொல்லும் போதே...

தீக்ஷா தன் முகத்தை மாற்றியவளாய், "சாரி அத்தான்..." என்று சொல்லியவள், இப்போது முகத்தைக் கலகலப்பாக மாற்றியிருந்தாள்.

"ப்ச்... பாருங்க. உங்க அண்ணா மனைவியா இன்னும் ஆகக் கூட இல்லை. அதுக்குள்ள அவரோட முசுட்டுக் கோபக் குணம் எனக்கு வந்திருச்சு போல..." என்றபடி பேச்சை மாற்ற...

யுகியும், சுரேனும் நிம்மதிப் பெருமூச்சு விட்டனர்.

இரண்டு வாரம் கழித்து, தீக்ஷா வந்த மகிழ்ச்சியில் கலைச்செல்வி வேறு ஒருபக்கம்... வருங்கால மருமகளைத் தாங்கு தாங்கு என்று தாங்கிக் கொண்டிருந்தார்.

சற்று நேரம் அவர்கள் அனைவரிடமும் பேசிக் கொண் டிருந்தவள்... விஜய் வருவானா என்று மாடியையே பார்த்துக் கொண்டிருக்க... அவனோ வரவே இல்லை. சரி, இதற்கு மேலும் காத்திருப்பது சரியில்லை என்று நினைத்தவளாய்... விடைபெற்றுக் கிளம்பினாள் தீக்ஷா, மனதில் ஆதங்கத் தோடும்... சற்றுக் கோபத்தோடும்.

வெளியில் வந்து தன் வண்டியை ஸ்டார்ட் செய்த வளுக்குத் தன்னவனைப் பார்க்காமல் போக மனம் வராமல் போக... தன் வண்டியில் உட்கார்ந்தபடியே ஹாரனை அடித்துக் கொண்டே இருந்தாள்.

அறையில் இருந்த விஜய் வழக்கம் போல் குழப்பத்தில் உழன்று கொண்டிருந்தான், தீக்ஷாவைப் புரிந்து கொள்ள முடியாமல்...

அப்போது இடைவிடாத ஹார்ன் ஒலியில் யாராய் இருக்கும் என்ற யோசனையுடன்... கோபத்துடன் வெளியில் வர, தீக்ஷா மிர்ரரில் பார்த்தபடியே இருந்ததால்... இவன் வெளியில் வந்ததை உணர்ந்து இன்னும் வேகமாக அழுத்த...

அவளது மொபைலுக்கு விஜய் வேகமாய்ப் போன் செய்தான். அவளும் இப்போது அடித்த ஹாரனை நிறுத்தி விட்டு... போனை எடுத்துப் பார்த்து விட்டு... அதைக் கட் செய்ய...

விஜய் மீண்டும் போன் செய்ய... அவளோ கட் செய்ய... இவனும் அடுத்துப் போன் செய்யவில்லை. அமைதியாக அவனின் பால்கனியில் நின்றபடி, அவளைப் பார்த்தபடி இருக்க...

தீக்ஷா அவனைப் பின்னால் திரும்பிப் பார்க்காமலே... கண்ணாடியில் தெரிந்த அவனது பிம்பத்தில் தைரியமாய்த் தன் இதழைப் பதிக்க... விஜய் திகைத்து நின்றான்.

விஜய்யின் திகைத்த முகத்தைத் தன் மனதில் நிரப்பியவளாய்... கிளம்பினாள் தீக்ஷா. திரும்பிப் பார்க்காமலே போனவளுக்கு வாயிலின் அருகே போகும்போது விஜய்யின் முகத்தைப் பார்க்க வேண்டும் போல் இருக்க... இப்போது திரும்பியும் பார்த்து... அவனுக்குக் கையசைத்தும் செல்ல... அவளுக்கு மீண்டும் கையசைத்து வழி அனுப்பக் கூட முடியாதவனாய் விஜய் இருந்தான்.

அப்போது அவனுக்குப் போனும் வர... தன் நிலை மாறியவனாய் விஜய் போனை எடுத்தான்.

பிரைவேட் நம்பரில் வந்திருந்தது. புருவ முடிச்சுகளின் நடுவில் யாராய் இருக்கும் என்றபடியே போனை அட்டெண்ட் செய்ய... அது இளமதி!

சற்றுத் தயக்கத்துடன் அவளிடம் இவன் பேச...



அவளோ, “விஜய், அப்பா இன்னைக்குத்தான் போன் செய்தார். விசயத்தைச் சொன்னார்....” என்று மௌனித்தவள்... சில வினாடியிலேயே, “எனி வே கங்கிராட்ஸ்...” என்று பேச...

சற்று முன்வரை தீக்ஷாவால் மட்டுமே திகைத்திருந்த விஜய்... இப்போது இளமதியின் வார்த்தைகளில் நிம்மதியை உணர்ந்தாலும்... சந்தோசமாய்த் திகைத்து நின்றான்.

அதன் பின் இளமதி, அவனிடம் சிறிது நேரம் பேசி விட்டு... மீண்டும் தன் வாழ்த்துக்களைத் தெரிவித்து விட்டுத்தான் போனை வைத்தாள்.

இளமதி மற்றும் அவர்கள் வீட்டில், தன் திருமண விசயத்தைத் தெரிவித்த மகிழ்ச்சியில்... அவர்களும் எந்த ஒரு பிரச்சனையும் செய்யாமல் சுமுகமாகப் போனதில்... விஜய்யும் பெரிதாக எதையும் சிந்திக்காமல்... உடனடியாகத் தன் தாயிடம் இந்த விசயத்தைச் சொன்னவன்... தனக்கும் தீக்ஷாவுக்குமான திருமண நிகழ்வில் உள்ள தடைகள் அனைத்தும் தானாகவே விலகிக் கொண்ட மகிழ்ச்சியில், அன்று இரவு நிம்மதியாக உறங்கினான்... தன்னவளின் நினைவுகளுடன்!

## 33

அந்த ஹோட்டலின்... கார் பார்க்கிங்கில் தன் வண்டியை நிறுத்தியவள்... பைக் கீயைச் சுழற்றியபடி, துள்ளல் நடை போட்டு... ஹோட்டலின் உள்ளே வந்தாள்.

நடை துள்ளலாக இருந்தாலும்... அவள் மூளைக்குள் யாரிடமும் சொல்லாமல், இங்கு வந்தது சரியா தவறா என்று வேறு இருக்க...

‘என்ன ஆகப் போகுது... என்னை யார் என்ன பண்ணிடுவாங்க...’ என்று தனக்குள் சொல்லிக் கொண்டவள்... பார்வையைச் சுழற்றினாள். தன் பார்வை வட்டத்தில்

இளமதி சிக்குகிறாளா என்று நோட்டமிட்டவள்... இளமதியின் எண்ணிற்கு மீண்டும் கால் செய்தாள்.

"இளமதி, எங்கே இருக்கீங்க?" என்றவளின் முன் இளமதியே வந்து நின்று புன்னகைக்க...

தீக்ஷாவும் பதிலுக்கு அவளுக்குப் புன்னகையைச் சிந்தியபடி, 'எதற்காக இளமதி தன்னைச் சந்திக்க வேண்டும் என்று கால் செய்தாள்...' என்ற சிந்தனை உள்ளுக்குள் ஓடிக் கொண்டிருந்தது.

கிட்டத்தட்ட பத்து நிமிடம் எந்த ஒரு பேச்சும் இல்லாமல் அமைதியாகப் போய்க் கொண்டிருந்தது.

தீக்ஷா இளமதியிடம் எதுவும் பேசாமல்... இளமதி ஆர்டர் செய்த பழரசத்தை மிகவும் கண்ணும் கருத்துமாகக் குடித்துக் கொண்டிருக்க... இளமதியோ உள்ளுக்குள் எரிந்து கொண்டிருந்தாள்.

பின் தானே பேச்சை ஆரம்பித்தாள். "கங்கிராட்ஸ் தீக்ஷா!" வெளியில் புன்னகையையும் உள்ளுக்குள் நஞ்சினையும் தேக்கியவளாய்த் தீக்ஷாவுக்குத் திருமண வாழ்த்துக்களைச் சொன்னாள் இளமதி.

அவளின் வாழ்த்தினை ஏற்றுக் கொண்ட தீக்ஷா... மீண்டும் பேசாமல் இருக்க...

இளமதியே மீண்டும் எரிச்சலுடன் தீக்ஷாவுடன் பேச ஆரம்பித்தாள். "தீக்ஷா, நீ வாய் ஓயாமல் பேசுவேனு கேள்விப்பட்டிருக்கேன். ஆனால் எதிர்மாறா அமைதியா இருக்கிறாயே...!" என்றபோது,

"ஹ்ம்ம்... ஆனால் உங்ககிட்ட பேசுறதுக்கு எதுவுமே இல்ல, இளமதி... அது மட்டுமில்லாமல் நீங்கதான் என்கிட்ட பேசணும்னு சொன்னீங்க..." என்றபடி மீண்டும் ஜூஸைப் பருக ஆரம்பித்தாள்.



"ஏன்... என்கிட்ட பேச விசயம் இல்லை? விஜய் போதாதா... நாம ரெண்டு பேரும் பேசுறதுக்கு..." என்றாள் இளமதி. இப்போது இளமதியும் சூடாகவே பேச ஆரம்பித் திருக்க...

தீக்ஷாவுக்குச் சுள்ளென்று ஏறியது. இளமதியின் 'விஜய்' என்ற உச்சரிப்பில்... வந்த கோபத்தை அடக்கியவள்... "விஜய் அத்தானா...?" என்று குழப்பமான பாவனையில் முகத்தினை மாற்றியவள்...

"ஓ... உங்களுக்கும் அவருக்கும் பேசி இருந்தாங் கள்ல... யுகி சொல்லி இருக்கான்..." என்றவள், "ஆனால் உங்களுக்கோ, விஜய் அத்தானுக்கோ இதுல பெருசா இஷ்டமில்லைன்னு கேள்விப்பட்டேன்..." என்று இழுக்க,

இளமதி ஒரு மாதிரியாகச் சிரித்தாள்.

"இஷ்டமில்லைன்னு நான் உன்கிட்ட வந்து சொன் னேனா, தீக்ஷா...? இல்லை, விஜய் கிட்ட சொன்னேனா...? இல்லை விஜய் சொன்னாரா... அவருக்கு இஷ்டமில்லைன்னு...

"என்ன பண்றது... விதின்னு ஒண்ணு இருக்கே. உன்னை மேரேஜ் பண்ணிக்கப் போறவர் வராமல் போயிட்டாராமே... விஜய்க்குத் தங்கை மேல ரொம்பப் பாசம். அவ புகுந்த வீட்ல பிரச்சனைன்னு தெரிந்த பின்னால் வேற வழியில்லாமல் உனக்கு ஓ.கே.னு சொல்லிட்டாரு..." என்று இகழ்ச்சியாகச் சொல்ல...

தீக்ஷா அவளைக் கூர்மையாகப் பார்த்தாள். பின் அப்பாவியாக முகத்தை மாற்றி... "ஓ! பரிதாபப்பட்டு வாழ்க்கை கொடுக்கிறார்னு சொல்றீங்களா, இளமதி...?" என்று கேட்க,

இப்போதுதான் தீக்ஷா தன் வலையில் விழுந் திருக்கிறாள் என்று உணர்ந்த இளமதி...

"கண்டிப்பா தீக்ஷா... நல்லா யோசிச்சுப் பாரு. நீ விஜய்யை மேரேஜ் பண்ணிக்கிட்டா கண்டிப்பா சந்தோசமா இருக்க மாட்ட... விஜய் ஒரு சுயநலவாதி. அன்னைக்கு என்னை மேரேஜ் பண்ணிக்கிறேன்னு சொன்னான்... இன்னைக்கு உன்னை...

"இது கூட ஏதோ ஒரு வகையில அவனுக்கோ அவன் குடும்பத்துக்கோ நன்மையா இருக்கப் போய்த்தான் உனக்கு ஓ.கே. சொல்லி இருப்பான். தீக்ஷா, நல்லா யோசி..." என்று விஜய்யை ஒருமையாகப் பேச ஆரம்பிக்க...

தீக்ஷா அமைதியாக இருந்தாள், சில நிமிடங்கள்... "இப்போ உங்க பிரச்சனை என்ன இளமதி?" கொஞ்சம் எரிச்சலும் அவள் குரலில் தெரிந்தது.

இளமதி கோபமாகக் கேட்டாள்.

"எனக்குப் பிரச்சனையா...? லூசா தீக்ஷா நீ...? உன்னைப் பற்றி, உன்னோட பிரச்சனை பற்றிப் பேசிட்டு இருக்கேன். உனக்குப் புரியலையா...? விஜய்யை நம்பாதே. நம்ப வச்சுக் கழுத்தறுத்துடுவான். முதலில் என் அண்ணனை. அதுக்கப்புறம் என்னை... கண்டிப்பா உன்னையும்... ஒரு நாள்..." என்று அழுத்தமாகக் கூறி நிறுத்த...

தீக்ஷாவும் நிமிர்ந்து அவளைப் பார்த்தாள்.

நேருக்கு நேராக இளமதியைப் பார்த்தவள்... "உங்க அண்ணன் என்ன ஏமாந்தார் இளமதி...? இன்னொருத்தனை விரும்புற ஒரு பொண்ணைக் கூசாம நான் கட்டிக்கிறேன்னு சொன்ன உங்க அண்ணனை நம்பி ஏமாந்தது விஜய் அத்தான்தான். நல்ல வேளை எங்க அண்ணி கடைசி நேரத்தில் தப்பிச்சுட்டாங்க. அடுத்து... நீங்க என்ன ஏமாந்தீங்க இளமதி...? உங்ககிட்ட ஆசை வார்த்தை பேசி ஏமாத்திட்டாரா விஜய் அத்தான்... சொல்லுங்க..." என்று கேட்க,



"ஹ்ம்ம்..." என்று புருவம் உயர்த்திய இளமதி...

"உன் வருங்காலக் கணவனுக்குப் பலமான சப்போர்ட் தான். பின்ன வசதியான இடம். பையனும் ஹீரோ மாதிரி இருக்கான். விடுவியா நீ... விஜய் மாதிரியான ஆளு உனக்குல்லாம் தேடினாலும் கிடைப்பானா...? அதுதான் நீ இப்படிப் பேசுற... உனக்கும் விஜய்க்கும் ஏணி வச்சாலும் எட்ட முடியாது...

"அவரோட குண நலன் எல்லாம் எனக்கு இளா அண்ணா சொல்லி இருக்காரு... அது, அந்தக் குணங்கள் தான் எனக்குப் பிடிச்சது. ஹ்ம்ம்... பார்க்கலாம். என் முன்னாடிதானே நீங்க வாழப் போறீங்க. உன்னை மாதிரி ஒரு பொண்ணோட அவன் எப்படி வாழப் போறான்னு..." என்று கூற,

"இளமதி, நீ விஜய் அத்தானை விரும்பினாயா... சொல்லு!" என்று கேட்டாள்.

தீக்ஷாவுக்கு மனம் முதல் முறை திடுக்கிட்டது. இருந்தும்... விஜய் மனதில் அவள் இல்லை என்பதால்... ஒரு தலைக் காதலுக்காகவெல்லாம் தன் காதலை விட முடியுமா என்று தனக்குள் ஆறுதல் சொன்னாலும்... தீக்ஷாவிடம் மட்டும் அவன் என்ன காதலையா சொன்னான்... மனம் கொஞ்சம் படபடப்பானது என்னவோ உண்மைதான். இருந்தும், தன் பதட்டத்தை மறைத்து அவளையே பார்த்தபடி இருந்தாள்.

சில நொடிகள்... அமைதியாக இருந்தாள் இளமதி. பின், "ஹ்ம்ம்... ஆனா அது இறந்த காலம். இப்போ இல்லை. உன்னை மாதிரி ஒருத்தியை மேரேஜ் பண்ண ஒத்துக்கிறேன்னு சொன்னவர்க்கெல்லாம் என் மனசில் கண்டிப்பா இடம் கிடையாது. என்னோட தகுதிக்கெல்லாம் உன் கூடப் பேசுறதே அதிகம்..." என்று கேவலமான பார்வையைப் பதிக்க...

"ஆனா, நான் உன்கிட்ட பேசணும்னு சொல்லலையேம்மா, இளமதி... நீதான் என்கிட்ட வலிய வந்து பேசி... என் கூடத் தனியாப் பேசணும்னு சொன்ன... ஓ.கே. என் கூடப் பேசுறதெல்லாம் உன் குணத்துக்கு இழுக்குன்னா... நான் கிளம்பறேன்..." என்றபடி எழுந்தவள்...

மீண்டும் அமர்ந்து, "விஜய் அத்தானை மறந்துட்டேனு சொன்னதுக்கு ரொம்பத் தேங்க்ஸ். ஏன்னா... என்னோட விஜய்... சாரி... விஜய்னு நீ கூப்பிட்டுட்டேல்ல. என்னோட இந்தர் வேற யார் மனசிலயும் விளையாட்டாக் கூட இருக்கக் கூடாது. அப்புறம் இன்னொரு விசயம்... இந்தர் பரிதாபப்பட்டு என்னை ஏத்துக்கிட்டார்னு சொன்னேல்ல... பரிதாபப்பட்டாவது என்னை ஏத்துக்கிட்டாரேனு எனக்குச் சந்தோசம்தான்ப்பா..." என்றவள், இளமதியைச் சிரிப்போடு பார்க்க...

அவளோ, "நீ அவ்ளோ கேவலமானவளா... ஒருத்தன் உன்னைப் பரிதாபப்பட்டு ஏத்துக்கிட்டான்னு சொன்னா சுயமரியாதை உள்ள எந்தப் பொண்ணும் வேண்டாம்னு தூக்கிப் போட்டுட்டுப் போயிட்டே இருப்பா. நீ என்னடா வென்றால்..." – இளமதி முகத்தைச் சுழிக்க...

தீக்ஷாவுக்கு உள்ளுக்குள் சிரிப்பாய் வந்தது.

"நல்ல வேளை. எனக்கும் விஜய் அத்தானுக்கும் நடந்த உள்நாட்டுக் கலவரமெல்லாம் இவளுக்குத் தெரியாது. தெரிஞ்சிருந்தால் இன்னும் கேவலமா ஆகியிருக்கும். ஏதோ தப்பிச்சேன்..." என்று பெருமூச்சு விட்டவள்...

இளமதியிடம் மீண்டும், "இன்னொரு விசயம் சொல்லவா... விஜய் அத்தான் என்னைக் காதலிக்கிறாரா? இல்லை, பரிதாபப்பட்டு ஏத்துக்கிட்டாரா? இதெல்லாம் அடுத்த விசயம். ஏன்னா... நான் என் அத்தானை விரும்புகிறேன். என்னைப் பிடிக்கலைன்னா கூட அவர் என் கூடத்தான் வாழணும்.



"அவரே நினைத்தாலும் என்னைய பிடிக்கலைன்னாலும் கூட என் கூடத்தான் இனி அவர் வாழ்ந்தாகணும். இல்லை, எனக்குள்ள ஒளிஞ்சுட்டு இருக்கிற வில்லி கேரக்டரை வெளியில எடுத்தாவது அவர் கூட நான் சேர்ந்திடுவேன்..." என்றவள், கண் சிமிட்டியபடி,

"நான் ஹீரோயினா... இல்ல வில்லியானு என் ஆளு முடிவெடுக்கிற டெஸிஷன்ல தான் இருந்தது. நல்ல வேளை... விஜய் அத்தானுக்கு நல்ல நேரம் போல... எனக்கு ஓ.கே. சொல்லி என்னை ஹீரோயினா மாத்திட்டாரு..." என்று தோரணையாகப் பேசியவள்...

"என்னடா... நாம வில்லி ரேஞ்சுக்கு இவளை மிரட்ட வந்தா... இவ வில்லி மாதிரிப் பேசுறாளேனு பார்க்கிறியா... நான் கண்ணாடி மாதிரி, இளமதி..." என்றவள்,

"அடடா! என் கேரக்டரா இப்போ முக்கியம்... கடைசியா நான் சொல்ல வருவது என்னன்னா... என் இந்தரை நான் லவ் பண்றேன். அவருக்கே என்னைப் பிடிக்கலைன்னா கூட என்னை அவர் காதலிச்சுத்தான் ஆகணும். என்னையும் அவரையும் பிரிக்கணும்னா அது மரணம் மட்டும்தான். போதுமா...? மேரேஜ் டேட் தெரியுமா... தெரியாதா?" என்றவள்,

இளமதி மொபைலை எடுத்துத் தங்கள் திருமணத் தேதியை செட்யூலில் போட்டவள்... கைக்கடிகாரத்தைப் பார்த்தபடி... "ச்சே... இந்த நேரம் என் இந்தரோட ட்ரீம்ல இருந்திருப்பேன். கெடுத்துட்ட..." என்று அசால்ட்டாகச் சொன்னபடி...

"கூல் ட்ரிங்ஸுக்கு பே பண்ணிடு. என் டைமை வேஸ்ட் பண்ணதுக்கு அதுதான் உனக்கு பனிஷ்மெண்ட்..." என்று கிளம்பியவளை... கைப்பிடித்துத் தடுத்து நிறுத்தித் தீப் பார்வை பார்த்தாள் இளமதி.

ஆனால் தீக்ஷாவோ, "ஹலோ மேடம், என்னைத் தொட்டுப் பேசுனா உங்க ஸ்டேட்டஸ்... உங்க மரியாதை எல்லாம் கீழே இறங்கிடப் போகுது. கையை விடறீங்களா..." என்றவள், அவளின் முறைப்புக்குச் சற்றும் சளைக்காமல்...

"உன்னை முதல் முதலா மீட் பண்ணும்போது, உன்னைக் கூப்பிட்டு பை சொன்னேனே... அன்னைக்கே நீ யார்... உன் குணம் என்னன்னு எனக்கும் தெரியும். இருந்தும் எங்க அண்ணியோட அண்ணன் மனைவியா ஆகப் போறேன்ற ஒரே எண்ணத்தில்தான் வலிய வந்து பேசினேன். சும்மா என்னை டென்சன் ஆக்காதே. எனக்கு அது ஒத்து வராது.

"உனக்கும் ஒரு அட்வைஸ் பேபி... நீயும் ரொம்பக் கோபப்படாதே. கூல் பேபியா இரு. ஓ.கே.வா?" என்று தன்னைப் பிடித்திருந்த அவளின் கையைத் தட்டி விட்டவள்... அதே வேகத்தில் அங்கிருந்த பேரரை அழைத்தவள்... "எக்ஸ்கியூஸ் மீ... மேடத்துக்கு கூலா ஜில்லுன்னு எதுவா இருந்தாலும் எக்ஸ்ட்ராவா எடுத்துட்டு வாங்க. அதைக் குடிச்சும் இதே எக்ஸ்பிரஸனோட இருந்தா... இன்னும் அதைவிடக் கூலா இருந்தா கொண்டு வந்து கொடுங்க..."

தீக்ஷாவின் பேச்சில் அந்த வேலையாள் திகைத்து நிற்க,

"பணத்தைப் பற்றி யெல்லாம் நோ வொர்ரி சார்... மேடம் பெரிய இடம்..." என்றவள், "வரட்ட்ட்டா... இளமதி..." என்று நெற்றியில் கை வைத்து சல்யூட் அடிப்பது போல் சொன்னவள்...

"ச்சே... இந்த தீக்ஷா பேசக் கூடாதுன்னுதான் நினைக்கிறா. ஆனா பேச வச்சுடறீங்களே... நீங்க பேசக் கூப்பிட்டீங்க மேடம்... ஆனா என்னைப் பேச வச்சுட்டீங்க. ஆனாலும்... தீக்ஷா பேசுறதுக்கு அஞ்ச மாட்டா... பாய்..."



என்றபடி இடத்தைக் காலி செய்ய... இளமதி ஆவேசமும் கோபமுமாய் அவளை வெறித்துப் பார்த்தபடி நின்று கொண்டிருந்தாள்.

இளமதி... இளமாறன் தான் ஒரு நாள் விஜய்யைப் பற்றிச் சொல்லி... அவனின் தங்கையைத் தான் திருமணம் செய்யப் போவதாகவும்... இளமதியை விஜய் திருமணம் செய்யச் சம்மதம் சொன்னதாகச் சொல்ல... முதலில் யாரோ ஒருவனைக் காதலிக்கும் பெண் தன் அண்ணனின் மனைவியா என்று இளமாறனிடம் மறுப்புத் தெரிவித்தவள்... அதன் பின் விஜய்யின் புகைப்படம் பார்த்துத் தன் மனதை அவனிடம் பறி கொடுத்திருந்தாள்.

விஜய்யின் புகைப்படம் பார்த்துச் சலனமடைந்த இளமதி... அதன் பின் சென்னை வந்தபோது... அவனின் குணம்... அவனின் தொழில்... அதில் அவன் வெற்றிக் கொடி நாட்டி வரும் பாங்கு... அவனின் ஆளுமையான பேச்சு... தோற்றம்... என மொத்தமாய் அவனிடம் சாய்ந்தாள்.

அதிலும் அவனின் குணம்... இளாவின் மூலம் கேள்விப்பட்டிருக்கிறாள். கிட்டத்தட்ட ஒரே குணம். இருவரும் சேர்ந்தால் என்று கற்பனைக் கோட்டையை வளர்த்திருந்தாள் இளமதி.

அதெல்லாம் விஜய்யின் திருமண விபரம் கேட்டுத் தூள் தூளாய் நொறுங்கிப் போக, இளமதி கொஞ்சம் இடிந்துதான் போனாள். ஆனாலும் தன்னைச் சமாளித்துக் கொண்டாள்தான். இந்த விஜய்யையே நினைத்துத் தன் வாழ்நாளை வீணடிக்கும் அளவுக்குப் பத்தாம் பசலி அல்ல அவள்... இருந்தும் தனக்குப் போட்டியாகக் கேவலம் அந்தத் தீக்ஷாவா என்ற இடத்தில்தான் அவளின் கோபம்... அவளுக்கெல்லாம் விஜய் மாதிரிப் பையனா... விஜய் பார்த்தாலே அவனின் பார்வைக்கே அவளால் பதில் சொல்ல

முடியாது என்ற மட்டில் நினைத்திருந்தாள். அதனால் அவளை ஒரு மிரட்டு மிரட்டிக் கொஞ்சம் குழப்பி விடுவோம் என்ற மிகப் பெரிய நல்லெண்ணத்தில்தான் அவளைத் தானே போன் செய்து அழைத்தாள்.

ஆனால்... தீக்ஷாவின் குணம் தெரியாமல் அவளை அழைத்துத் தானே வாங்கிக் கட்டிக் கொண்டாள் என்றே சொல்ல வேண்டும்.

தீக்ஷாவின் மேல் லேசாக இருந்த பொறாமை போய்... அவளின் அலட்சியமான பேச்சில்... தன்னை இம்மி அளவு கூட மதிக்காத அவளின் பேச்சில்... இளமதி மனதில் பொறாமைத் தீயோடு கோபமும் கொழுந்து விடத் தொடங்கியது.

கோபம் மட்டும் இருந்திருந்தால் பெரிய பிரச்சனை ஆகியிருக்காதோ என்னவோ... அதில் பொறாமையும் சேர... இளமதிக்குத் தீக்ஷா எதிரியாகி இருந்தாள்.

ஒரு காலத்தில் தீக்ஷாவின் இந்தப் பேச்சுதான்... விஜய்யின் கோபத்துக்குக் கூடக் காரணமாக இருந்தது. அது மெல்ல மெல்ல மாறி... இன்று காதலின் விளிம்பில் வந்து நின்று கல்யாண மேடையில் வந்து நிற்கிறது.

ஆனால் இளமதியின் கோபம்... அதனால் இளமாறனின் பழி வாங்கும் எண்ணம்... இவை தீக்ஷாவை எங்கு நிறுத்தப் போகிறது என்பதைத் தீக்ஷா அன்று உணர வில்லை. விளையாட்டாகப் பேசி... வினையைத் தன் வாழ்க்கையில் இழுத்து விட்டுக் கொண்டாள்.

அது மட்டுமில்லாமல் விஜய்யின் மனைவி என்ற காரணத்தினாலும்... விதி அவள் வாழ்க்கையில் கொடூரத் தாண்டவம் ஆடியது. ஒருவேளை அவள் விஜய்யின் மனைவியாக ஆகி இருக்கா விட்டால்... இதை எல்லாம் அனுபவித்திருப்பாளோ என்னவோ...!



இளமதியிடம் பேசி விட்டு வந்த தீக்ஷா நேராய் வந்து சேர்ந்தது... விஜய் பில்டர்ஸுக்குத்தான்.

வரும் வழியில் இளமதியையும், விஜய்யையும் தன் பிங்கியிடம் தாளித்தபடியேதான் வந்தாள்.

'விஜய்னு அவர் கூப்பிடச் சொன்னாராம்னு என்கிட்டயே சொல்றா... ஆனா, நான் விஜய்னு சொன்னா மட்டும் இந்தச் சிடுமூஞ்சிக்குக் கோபம் பொத்துக்கிட்டு வரும். அவகிட்ட விஜய்னு சொல்லுன்னு சொன்னவர்... என்கிட்ட வந்து எதற்கு ரொமான்ஸ் லுக்கை விட்டார். அதை அங்கேயே விட்டுருக்க வேண்டியதுதானே...!' என்று புலம்பியபடி வந்தவளுக்கு இப்போது உண்மையிலேயே சந்தேகம் வந்து விட்டது.

நாம பார்த்தது உண்மைதானா...? இல்லை, நானே கற்பனை பண்ணிக்கிட்டேனா... என்று நினைத்தவள், அடுத்த நொடியே அது கனவோ, நிஜமோ... நீ என் மனசில வந்துட்ட... இனி, நான் உன்னை விட மாட்டேன் என்றெல்லாம் மனதுக்குள் குழம்பி... ஒருவாறாக, மீண்டும் தீர்மானத்துக்கு வந்தவள்... சுரேந்தரின் அறைக்குச் சென்றாள்.

தீக்ஷாவைப் பார்த்த சுரேந்தர்... "ஹேய் தீக்ஷா! என்ன இந்தப் பக்கம்..." என்று அவளை வரவேற்றவன்... "முதல்ல எல்லாம்... ஏதோ என் உதவி தேவைன்னு வருவ. ஆனா இப்போ மேடம் என்னைப் பார்க்க வரலைதானே... என்ன நான் சொல்றது கரெக்ட்தானே..." - கேலியாகக் கூறி, அவளைப் பார்த்துக் கண் சிமிட்ட... அதற்கெல்லாம் பதில் சொல்லாமல், அவன் மேஜை மேல் இருந்த வாட்டர் பாட்டிலை அப்படியே கவிழ்த்தவள்... அதில் முக்கால் பாட்டிலைக் காலி செய்து விட்டுத்தான் அவனிடம் திரும்பினாள்.

"உங்களைப் பார்க்கத்தான் இந்த வேகாத வெயில்ல வருவேனா...?" என்று நக்கலாகக் கூற... சுரேந்தர் முகம் சுருங்கி விட்டான்.

"இது தேவையா... என்னையெல்லாம் ஓட்டணும்னு நினைச்சா... உங்களால முடியுமா, சுரேந்தர் அத்தான்... கூல் பேபி. உங்களுக்குன்னு ஒருத்தி பிறந்திருப்பா... வருவா...!" என்று சிரிக்க...

விஜய்யும் ஏதோ ஒரு வேலையாகச் சுரேந்தர் அறைக்குள் வரவும் சரியாக இருக்க... அதுவரை சிரித்துக் கொண்டிருந்த தீக்ஷா உம்மென்று ஆனாள்.

விஜய் அவளைப் பார்த்துச் சிரிக்க... தீக்ஷாவோ அவனை முறைத்துப் பார்த்து வழக்கம் போல் விஜய்யைக் குழம்ப வைத்தாள். இருந்தும், அவளின் அருகே உள்ள நாற்காலியில் அமர்ந்த விஜய்... தீக்ஷா கொஞ்சம் டென்சனாக இருப்பதை உணர்ந்தவன்... அதை அவளிடம் எப்படிக் கேட்பது என்ற ரீதியில் சிந்தித்தபடியே, ஃபைலில் கவனம் வைத்துக் கொண்டிருப்பது போல்... பாவனையில் இருக்க...

சுரேந்தரே அதை ஆரம்பித்தான். "என்ன தீக்ஷா, கொஞ்சம் டென்சனா இருக்க போல... எங்க அண்ணனைச் சொல்லுவ... இப்போ நீயே சூடா இருக்க...!" சும்மா இருக்காமல் தீக்ஷா வாயைக் கிளற...

தீக்ஷா கொதித்து விட்டாள். "என்ன பண்றது? எனக்குன்னு வந்து வாய்க்கிறாங்களே...!" என்றவள், "எல்லாம் அந்த யங் மூன் கிட்ட பேசிட்டு வந்த எஃபெக்ட்..." என்றவள், விஜய்யை ஒரு பார்வை பார்க்க...

விஜய்க்கு ஒரு நிமிடம் அவள் யாரைச் சொல்கிறாள் என்று உடனே புரியவில்லை. ஆனால் கொஞ்சம் யோசிக்க... அவள் சொல்வது இளமதி என்று புரிந்து விட்டது, அவனுக்கு. அதே நேரம் இளமதி தன்னிடம் எதுவும் பேசாமல் அவளிடம் போய் ஏதோ பேசி இருக்கிறாள் என்றால்... எங்கோ தவறு நடக்கிறதே என்று சிந்திக்க ஆரம்பிக்க...



சுரேந்தருக்கோ தீக்ஷா சொன்ன அந்த யங் மூன் யாரென்றே தெரியவில்லை... இருந்தும், "உனக்கு ஃப்ரெண்ட் சீனா நாட்டைச் சேர்ந்த பையனா...!" என்று கேட்க,

தீக்ஷாவால் சிரிப்பை அடக்க முடியவில்லை.

"ஹைய்யோ அத்தான்... சீனா நாட்டைச் சேர்ந்த பையனா!" என்று கேட்டபடியே சிரித்துக் கொண்டிருக்க...

விஜய்க்கும் சிரிப்புதான் வந்தது. ஆனாலும் தன் தம்பியைப் பார்த்துச் சிரிப்பவனா அவன்... சிரிப்பை அடக்கியபடி, தீக்ஷாவை நோக்கி, "அவகிட்ட உனக்கு என்ன பேச்சு... நீ எப்போ அவளைப் பார்த்த?" என்று கேள்விக் கணைகளை அடுக்க....

தீக்ஷா அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

"இப்படிப் பார்த்தா என்ன அர்த்தம்... கேட்டதுக்குப் பதில் சொல்லு!" என்று அதட்ட,

தீக்ஷா மனதுக்குள், 'இவனுக்கு நார்மலாகவே பேச வராதா...? இப்படிப் பார்த்தா என்ன அர்த்தம்னு இவன் மட்டும் கேட்கிறான்... இவன் பார்த்த பார்வைக்கு நான் அர்த்தம் கேட்டிருந்தால்...' என்று யோசித்துக் கொண்டிருக்க...

அவளின் மன ஓட்டத்தை நிறுத்துவது போல்... சுரேந்தர் தான் இப்போதும் தீக்ஷாவிடம் பேசினான். "ஓ... அது பொண்ணா தீக்ஷா?" என்று கேட்க,

தீக்ஷா இப்போது விஜய்யைப் பார்த்து வாயை மூடியபடி சிரிக்க... உதட்டைக் கடித்துச் சிரிப்பை அடக்கினான் விஜய்.

இருந்தும் விஜய் சுரேந்தரை நினைத்து மனதில் சிரித்தபடி, "டேய், அவ இளமதியைச் சொல்றாடா... நீ வேற. சும்மாவே அவ நம்மள ஓட்டுவா... நீ இப்படில்லாம் பேசுன... சொல்லவே வேண்டாம்..." என்று சொல்ல,

சுரேந்தருக்கு அப்போதுதான் யங் மூன் என்று தீக்ஷா சொன்னதற்கு அர்த்தம் புரிய... தீக்ஷாவைப் பார்த்து அசடு வழிந்தான்.

விஜய்... தீக்ஷாவிடம் கேட்டுக் கொண்டிருந்தான். "அவ உனக்குப் போன் பண்ணினாளா?"

விஜய்யின் ஊடுருவும் பார்வையில்... அவனின் கேள்வியில் சுதாரித்த தீக்ஷா, இளமதியிடம் பேசிய எல்லாவற்றையும் சொல்லாமல்... விஜய் பரிதாபப்பட்டுத்தான் தன்னைத் திருமணம் செய்து கொள்ளச் சம்மதித்து இருக்கிறான்... என்ற ரீதியில் இளமதி தன்னிடம் பேசியதாகச் சொல்ல...

விஜய் கொஞ்சம் குழம்ப...

சுரேந்தரோ, "அண்ணா, உங்ககிட்ட சிரிச்சுப் பேசி கங்கிராட்ஸ் சொன்னவ... தீக்ஷாவைத் தனியே வர வைத்துப் பேசி இருக்காள்னா... எங்கேயோ இடிக்குது. அவ அண்ணன் பேசினானா...?" என்று தன் மனதில் நினைத்ததை அப்படியே கேட்டான் சுரேந்தர்.

"இல்லடா. இளமாறன் பேசலை. ஆனா, இந்தப் பொண்ணு ஏன் இப்படிப் பண்றானு தெரியலையே..." என்றவன் முகத்தில் தீவிர ரேகைகள் ஓட...

விஜய்யும் சுரேந்தரும் யோசிக்க ஆரம்பிக்க... தீக்ஷாதான் சமாளித்தாள்.

"பெருசா ஒண்ணும் பேசலை. எனக்கு கங்கிராட்ஸ் சொல்லத்தான் கூப்பிட்டாங்க. அவ்ளோதான்... விசயத்தைப் பெருசாக்க வேண்டாமே..." என்று சொல்ல...

"உண்மையிலேயே அவ வேறொண்ணும் பேச லையே... எதையும் மறைக்காதே..." என்று விஜய் அவளிடம் கேட்க... அவனின் குரல் சற்று மாறி இருந்தது.



வழக்கமான தொனியில் இருக்காமல் அக்கறை வழிந்தோட...

தீக்ஷா அதை ரசித்தபடியே... "நிஜமா அத்தான்... என்னை நம்புங்க..." என்றவள்,

"என் மேல நம்பிக்கை இல்லன்னா... உங்க தம்பி மேல சத்தியம் பண்ணவா...?" என்று விழி விரியக் கேட்க... விழி பிதுங்கியவன் சுரேந்தர்தான்.

"அம்மா, தாயே... உனக்கு நான்தான் கிடைத்தேனா... என்னை ஆள விடு, சாமி..." என்று அரண்ட முகத்தினனாய்ச் சொல்ல...

விஜய் இப்போது சிரித்தபடி எழுந்தவன்... "என் தம்பி மேல எதுக்குப் பண்ற... உனக்கு ரொம்பப் பிடிச்சவங்க மேல பண்ணு..." என்று லேசாய்ப் போட்டுப் பார்க்க... அவள் அப்போதாவது தன்னைச் சொல்லுவாள் என்று விஜய் எதிர்பார்த்தான் தான்.

அவள் சொல்வாளா என்ன... அதற்குப் பதில், "எனக்கு ரொம்பப் பிடிச்சவங்களா...?" என்று யோசித்தவள், "எனக்கு என் அண்ணனை ரொம்பப் பிடிக்கும்..." என்று தீக்ஷா சொல்லி முடிக்கவில்லை.

ராதாவின் சகோதரர்களாய் இருவரும் பதறி விட்டனர்.

சுரேந்தர் வேகமாய்... "என் மேல கூடச் சத்தியம் பண்ணும்மா. என் தங்கை வாழ்க்கையில விளையாண்டு றாத..." என்று சொல்ல... விஜய் எதுவுமே பேசவில்லை.

அப்போது அவனுக்கு ஏதோ ஒரு போன் வர... வெளியேறினான். இதற்கு மேல் இருந்தால் தீக்ஷா ஏதாவது பேசி இருக்கிற மூடை எல்லாம் கெடுத்தாலும் கெடுத்து விடுவாள் என்று போனைக் காரணம் காட்டி வெளியேறி விட்டான் விஜயேந்தர்.

இந்த முறை தீக்ஷா வழக்கம் போல் ஏதாவது வாய் விட்டு அவனைக் குழப்பவில்லை. சந்தோசமாகவே அவர்களின் சந்திப்பு முடிந்திருக்க...

இளமதி தீக்ஷாவுடன் பேசியதை... தீக்ஷா சாதாரண மாகச் சொன்னது போல்... விஜய் சாதாரணமாக எடுத்துக் கொள்ளவில்லை.

விஜய் போனவுடன்... தீக்ஷாவும் கிளம்ப ஆயத்த மானவள்... சுரேந்தரிடம், "அத்தான், நீங்க இன்னும் வளரணும்..." என்று சொல்லியபடி எழ,

"ஏன்... இப்பவே பனை மரத்தில் பாதி இருக்கேன்னு சொல்றாங்க... அது போதாதா?" என்று சலிக்க,

"கண்டிப்பா நீங்க வளரணும். என் ஆளு சும்மா கலக்குறாரு..." என்று நக்கலாகச் சிரிக்க...

அவள் இளமதியைப் பற்றிச் சொன்னபோது தான் மொக்கை வாங்கிய விசயத்தைச் சொல்கிறாள் என்பது புரிந்த சுரேந்தர்... இப்போது தீக்ஷாவை முறைக்க...

"என்ன அத்தான் முறைப்பு... நான் சொன்னது உண்மைதானே!" என்றவளிடம்,

"நீ சொன்னதெல்லாம் சரிதான். ஆனால் அதுல ஒரு கரெக்ஷன். நான் வளரணும்னு சொன்னேல்ல... அது தப்பு. என் அண்ணன் உன் ரேஞ்சுக்கு இறங்கி வந்துட்டாரு. அதுதான் நீ பேசுறதெல்லாம் புரியுது..." என்று சுரேந்தர் பதிலுக்குப் பேச...

தீக்ஷாவா விடுவாள்... "சரி, விடுங்க. யார் வளர்ந்தா என்ன... இறங்கினால் என்ன... உங்க அண்ணா சொல்ற மாதிரி... லெவல் ஈகுவல் ஆனா ஓ.கே.தானே...?" என்று சொல்லிச் சுரேந்தரைத் திகைக்க வைத்து விட்டுத்தான் கிளம்பினாள் தீக்ஷா என்னும் புயல்.



அதன் பிறகு வந்த நாட்கள் அனைத்துமே சக்கரம் கட்டிப் பறந்தன.

தீக்ஷா வீட்டில் ஏற்கெனவே திருமண ஏற்பாடுகள் நடந்து கொண்டிருந்ததால்... அவர்களுக்கு இது திடீர்த் திருமணம் இல்லை. ஆனால் விஜய் வீட்டைப் பொறுத்தவரை திடீர்த் திருமணம் என்பதால்... விஜய்க்கு மட்டும் இல்லை... அங்கு யாருக்குமே நேரம் போதவில்லை.

ஒவ்வொருவருக்கும் ஏதாவது ஒரு வேலை இருந்து கொண்டிருக்க... பிசியாக இருந்தனர்.

விஜய்க்கோ அவனின் திருமணத்தை அவசரமாக நடத்திய போதிலும்... எதிலும் குறை வைக்க விரும்பவில்லை. யாருக்கும் அது அவசரத் திருமணம் என்று தெரியாத வகையில் நடத்தி விட வேண்டுமென்று மெனக்கெட்டான். இதில் அவனுக்குக் கிடைத்த மிகப் பெரிய நன்மை என்ன வென்றால்... அலைச்சலில்... தீக்ஷா தன்னை விரும்பு கிறாளா, இல்லையா என்று குழம்பிய மனதில் இப்போது திருமண வேலை ஆக்கிரமித்துக் கொள்ள... அதில் மூழ்கினான்.

இடையில் இளமாறன் அவனாகவே வந்து அவனைச் சந்தித்து விட்டுப் போக... இளமதியைப் பற்றி விஜய் இளமாற னிடம் சொல்ல... இளமதி இனி விஜய் விசயத்தில் தலையிட மாட்டாள் என்று இளமாறனே வாக்குறுதி அளித்துப் போக... விஜய் இளமதி விசயத்திலும் பெரிதாகக் குழம்பவில்லை.

ஆக மொத்தம்... தீக்ஷா, தன்னை விரும்புகிறாளா... இல்லையா...

இது பற்றிய விஜய்யின் குழப்பம் தெளியாமலேயே... திருமணத்திற்கு முந்திய நாள் விஜய் - தீக்ஷா திருமண வரவேற்பு வந்தது.

# 34

**வி**ஜய் - தீக்ஷா திருமண வரவேற்பு பிரமாண்டமாய் நடைபெற்றுக் கொண்டிருந்தது. விஜய் எதையும் விட்டு வைக்கவில்லை. தன் திருமணம் எப்படி நடக்க வேண்டும் என்றெல்லாம் எதிர்பார்த்திருந்தானோ... அதற்குக் கொஞ்சம் கூடக் குறைவில்லாமல் அனைத்து ஏற்பாட்டையும் செய் திருந்தான்.

விஜய்யின் சகோதரர்களும் அவனுக்கு எல்லா விதத்திலும் உறுதுணையாக இருக்க... விஜய் - தீக்ஷா திருமணம்... அவசரத்தில் அள்ளித் தெளித்த கோலமாக இல்லாமல்... அனைவரும் மூக்கில் விரல் வைக்கும்படி நடை பெற்றுக் கொண்டிருந்தது.

ராதா - தீபனுக்குத்தான் இன்னும் நம்பவே முடியவில்லை. ஏதோ இப்போதுதான் தங்கள் திருமணம் முடிந்தது போல் இருந்தது. இடையில் ஆயிரம் பிரச்சனை ஏற்பட்டு... இப்போது அடுத்து ஒரு சம்பந்தம் இரு குடும்பத் துக்கும்... நினைக்கவே இனிமையாக இருந்தது இருவருக்கும்.

ராதா - தீபன் இருவருக்கும் இடையில் இன்னும் பிரச்சனை இருந்தாலும்... அதை எல்லாம் தற்காலிகமாக ஒதுக்கி விட்டுப் பார்த்தால்... இந்தத் திருமணம் இருவருக்கும் ஒரு பூரணத் திருப்தியைத் தந்தது என்பதே உண்மை.

தீபனுக்கு மட்டும் உள்ளுக்குள்... கொஞ்சம் உதறல் இருக்கத்தான் செய்தது. தீக்ஷா என்ன செய்கிறாள்... என்ன செய்யப் போகிறாள் என்று யாராலும் கணிக்க முடியாது. முடிவெடுத்து விட்டால் எதையும் பார்க்க மாட்டாள். யோசிக் கவும் மாட்டாள்.

அவளைச் சிறு வயதிலிருந்தே அறிபவன் அவன். கொஞ்சம் சஞ்சலத்தில் உழல... அவன் தங்கையோ... அவனின் சஞ்சலம் தேவையே யில்லை என்பது போல...



அவள் முகம் முற்றிலும் சந்தோசத்தை மட்டுமே பூசியிருக்க... அதை உணர்ந்தவன்... கடவுளின் மேல் பாரத்தைப் போட்டு... வலம் வந்து கொண்டிருந்தான்.

இவர்களின் பெற்றவர்களோ அதை விட... பரிபூரணத் திருப்தியில் மனம் முழுக்க சந்தோசத்துடன் திருமண விழாவைக் கண்குளிரக் கண்டு கொண்டிருந்தனர். அதிலும் ஜெயந்தியைக் கைகளில் பிடிக்கவே முடியவில்லை. தன் மக்கள் இருவருக்கும் அமைந்த மண வாழ்க்கையை நினைத்துப் பேரானந்தம் அடைய... தீக்ஷா வீட்டு உற வினர்கள்... ஜெயந்தி குடும்பத்தையே கொஞ்சம் பொறாமை யுடன் பார்க்கத்தான் செய்தனர்.

ஆக மொத்தம்... சந்தோசம் மட்டுமே குடி கொண் டிருந்த அந்த மண்டபத்தில் மணமகன் விஜய் - மணமகளின் சகோதரன் தீபன் இருவருக்கும் மட்டுமே மனதுக்குள் புயல் லேசாய் மையம் கொண்டு கொஞ்சம் சஞ்சலம் கொடுத்துக் கொண்டிருக்க... மற்ற அனைவரும் அந்த விழாவின் உற்சாகத்தில் மனம் மயங்கிக் கொண்டிருந்தனர்.

யுகியோ... அவனின் இயல்பின்படி... தீக்ஷாவை ஓட்டிக் கொண்டே இருந்தான். தீக்ஷா கூட அவனின் கிண்டலில் கொஞ்சம் திணறித்தான் போனாள்.

பதில் கொடுக்க முடியாமல் எல்லாம் இல்லை. மண மேடையில் இருந்ததால்... அதுவும் மணமகளாய் இருந்த தால்... பதிலுக்குப் பதில் பேச முடியாமல்... அடக்கி வாசித் தாள். ஆனால், ஒரு கட்டத்தில் யுகியின் ஆட்டம் அதிகமாக... அவனை அடக்க ஆர்த்தியின் பெயரை இழுக்க... அதன் பின் யுகி தீக்ஷா பக்கம் வருவானா...? வரவே இல்லை.

இவ்வாறாக வரவேற்பு போய்க் கொண்டிருக்க... கிட்டத்தட்ட வரவேற்பு நிகழ்ச்சி முடியும் தறுவாயில்...

இளமாறன் மேடை ஏற... தீக்ஷா அவனைப் பார்த்துப் புன்னகைத்தாள்.

அவளின் புன்னகைக்குப் பதிலாக... இளமாறனோ சிறு புன்னகை கூடச் செய்யவில்லை. அவன் முகம் கல்லாய் இறுகியிருந்தது. ஆனால் அதே நேரத்தில் அவன் விஜய்யை மட்டும் பார்த்துப் புன்னகைத்தபடி வாழ்த்த... அதைப் பார்த்த தீக்ஷா முகம் சுருக்கி யோசித்தபடி இருந்தாள்.

அதுவரை விஜய்யிடம் அவள் எதுவும் தனியாகப் பேசவில்லை. அவன் அறிமுகப்படுத்தியவர்களிடம் மட்டும் பதில் மரியாதை செய்து கொண்டிருந்தாள். மேடையில் மணப்பெண்ணாக... அடக்கமாக இருக்க வேண்டுமென்று... அவள் தாய் ஜெயந்தி ஆயிரம் அறிவுரை கூறி அனுப்பி யிருந்தார். அது மட்டும் காரணம் இல்லை. விஜய்யிடம் இவள் ஏதாவது பேசப் போய்... கண்டிப்பாக அவன் பதிலுக்கு முறைக்கத்தான் செய்வான். விளைவு, புகைப்படம்தான் கேவலமாகும்.

தன் கணவனின் முகம் புகைப்படத்தில் அழகாய் வர வேண்டும் என்ற ஒரே காரணத்திற்காக... அமைதியாக... அடக்கமாக... தன்னை அடக்கி... தன் வாயையும் அடக்கி... விஜய்க்குப் பிடித்த மாதிரி இருக்க வேண்டுமென்று அவள் இருக்க... இளமாறன் தீக்ஷாவின் பொறுமையைச் சோதித்து விட்டான்.

இளமாறன் தன்னைக் கண்டுகொள்ளவில்லை என்று தெரிந்ததால்... தீக்ஷாவும் இளமாறனைக் கண்டு கொள் ளாமல் இருக்க... விஜய் அப்போது அவளை அழைக்க...

அவன் அழைத்தும்... அதைக் கேளாதது போல் தீக்ஷா ராதாவிடம் பேசியபடி இருக்க....

விஜய் - தீக்ஷாவின் கைகளைப் பிடித்து அழுத்தி னான்.



அப்போதும் அவள் திரும்பாமல் இருக்க... இளமாறனுக்குத் தீக்ஷா தன்னைத் தவிர்க்கிறாள் என்பது தெளிவாகப் புரிய... விஜய்யிடம் மட்டும் சொல்லிக் கொண்டு கிளம்பினான்.

அவன் மேடையை விட்டு இறங்கியதும்... விஜய் தீக்ஷாவிடம் திரும்பி... "என்ன பண்ணிட்டு இருக்க... நான் கூப்பிட்டது காதில் விழலையா... அப்படி என்ன பேச்சு?" என்றவன்... அதோடு விட்டிருக்கலாம்.

தீக்ஷா விழிகளில் இருந்த தீவிர பாவத்தை உணர்ந்த விஜய்... அவளைச் சகஜமாக்க... அவளைப் போல் கேலியாகப் பேச முயற்சிக்க... அது அவனுக்கே வினை யானது.

தீக்ஷா யோசனையில் இருப்பதை உணர்ந்தவனாய்... அவள் புறம் குனிந்தவன்... "என்ன தீக்ஷா... இவ்ளோ யோசனை... நீ சும்மா யோசிச்சாலே அது உருப்படியா இருக்காது. இதில் இவ்வளவு தீவிரமா என்ன யோசனை?" என்று அவளைப் பார்த்துக் கிண்டலாய்க் கேட்க...

தீக்ஷா விளையாட்டாகத்தான் சொன்னாள். ஆனால் அவளின் துணையாக வரப் போகிறவன்... இப்போதெல்லாம் அவளின் ஒவ்வொரு வார்த்தைக்கும் தனக்குள் அர்த்தம் கண்டுபிடிக்கிறான் என்று அறியாமல் போக...

"ஆமாத்தான்... பெரிய யோசனைதான்..." என்று விழி விரித்துச் சொல்ல...

விஜய்யும் ஆர்வமாய்க் கேட்டான். "அப்படி என்ன பெரிய யோசனை... இந்தச் சின்ன மூளைக்குள்ள...?" - மெது வாய்க் குனிந்தபடி கேட்க...

தீக்ஷா நிதானமாய்ச் சொன்னாள்.

"இல்லை. இவ்ளோ பிரமாண்டமா நம்ம ரிசப்ஷன் நடந்துட்டு இருக்கு. இப்போ எனக்கு இந்த மேரேஜ் வேண்

டாம்னு சொன்னா... என்ன ஆகும்னு நினைச்சுட்டு இருக்கேன். எனக்கு ஒரு பிரச்சனையும் இல்லை. ஏற்கெனவே எனக்கு ஒரு தடவை திருமணம் நின்ற அனுபவம் இருக்கு... உங்களை நினைத்துப் பார்த்தேன்..." என்று சாவகாசமாய்ச் சொன்னாள்... தான் சொன்ன வார்த்தைகளின் வீரியம் உணராமல்.

அவளின் வார்த்தைகளைக் கேட்ட அடுத்த நொடியே... விஜய் தனக்குள் மொத்தமாய்ச் செத்துப் போனான். முகமே களை இழந்து விட்டது, அவனுக்கு.

தீக்ஷா அவனிடம் சொல்லி விட்டுத் திரும்பவும்... ராதா அவளை உடை மாற்ற அழைத்துப் போகவும் சரியாய் இருக்க... விஜய்யின் முக மாறுதலைத் தீக்ஷா கவனிக்கவே இல்லை. தான் பேசிய வார்த்தைகள் அவனின் மனதில் எவ்வளவு பெரிய வலியை ஏற்படுத்தி இருக்கிறது என்று தெரியாமலே அவள் அவனை விட்டு அகன்றாள்.

இந்த இரண்டு வாரத்தில் அவளாகப் போய்த்தான் அவனைப் பார்த்துப் பேசி வந்தாள். விஜய் இவளிடம் ஒரு வார்த்தை கூடப் பேச முயற்சிக்கவில்லை.

விஜய் காதலை... தீக்ஷா அவனிடம் உணர்ந்தாலும்... திருமணத்திற்கு முன் தன் மீது கொண்ட காதலைத் தன்னிடம் சொல்வான் என்று தீக்ஷா எதிர்பார்க்க... அது கடைசிவரை நடக்கவே இல்லை. தீக்ஷாவுக்குள் எங்கோ தோற்றது போல் உணர்வுதான். இருந்தும், அதைப் பெரிதாக எடுக்காமல் விட்டு விட்டாள்.

இப்படி இருக்க... இளமாறன் அவளைப் பார்த்துப் புன்னகைக்காமல் போக... விஜய் கூட ஒரு காலத்தில் இந்த மாதிரிப் பார்த்தவன்தானே என்று ஞாபகம் வர... அதே நேரம் விஜய்யும் கொஞ்சம் கோபமாகப் பேசி... அதன் பின்



கேலியாகவும் பேசத், தன்னை அறியாமல் வாயை விட்டு விட்டாள் தீக்ஷா.

**அ**தன் பின் வரவேற்பு நிகழ்ச்சியும் முடிய... மணமக்களின் பிரத்யேகப் புகைப்படம் எடுக்க தீக்ஷாவை அழைத்துக் கொண்டு ராதா கிளம்ப... விஜய்யோ அந்த நிகழ்வையே ரத்து செய்து விட்டான்.

அதைக் கேள்விப்பட்ட தீக்ஷாவுக்குக் கோபம் வந்து விட்டது. ஏனென்றால் இப்போது கிடைக்கும் தனிமையில்தான் விஜய்யிடம் பேசலாம் என்று நினைத்து வைத்திருந்தாள். அதற்கும் வழியில்லாமல் போகப் பொங்கி விட்டாள் தீக்ஷா.

வேகமாய்ப் போனை எடுத்து விஜய்க்கு அழைப்பு விடுக்க... அவனும் எடுத்தான்.

அவனின் பதிலை எல்லாம் எதிர்பார்க்காமல்... "அத்தான், இப்போ வர்றீங்களா இல்லையா?" - குரலில் அதிகாரமும் அனலும் ஒரு சேரப் பறந்தது.

எதுவும் பேசாமல் போனை அணைத்தவன்... அடுத்த நிமிடம் அங்கு வந்தான். அவனவளின் விருப்பத்தை நிறை வேற்ற... ஆனால் அவன் கண்களிலோ ஜீவனைத் தொலைத் திருந்தான்.

தன் வார்த்தைகளைக் கேட்டுத் தன் முன் வந்து நின்றவனைத் தீக்ஷா சந்தோசமாய்ப் பார்க்க... அவனோ முகம் வாடியிருக்க... அவன் கண்களோ ஜீவன் இன்றி இருந்தன.

தீக்ஷா அதிர்ந்து விஜய்யைப் பார்த்தாள். விஜய்யின் கணகளைப் பார்த்தே அவனின் உணர்வுகளை உணர்பவள் அவள்... அது காதல் முதல் கோபம்வரை...

எப்போதிருந்து அவன் கண்களில் காதல் உணர்ந் தாளோ அந்த நிமிடத்தில் இருந்து அவனின் பார்வை

தன்னிடம் சொல்கின்ற கதைகளை எல்லாம் தன் மனதில் சேகரித்து வைத்திருந்தாள் அவன் காதலி.

சொல்லப் போனால், அவனை முதன் முதலில் பார்த்ததிலிருந்து இந்த நிமிடம்வரை... அவன் பார்வை... எப்போதும் அவளை ஈர்க்கும் சக்தியாகவே அவள் உணர்ந் திருக்க... அவனின் ஒவ்வொரு பார்வையையும்... இனம் பிரித்துக் காணும் வித்தையைத் தனக்குள் கொண்டு வந்திருந் தாள் தீக்ஷா.

இப்போது அவளால்... தன்னவனின் பார்வையில் இருந்த விரக்தியைத் தாங்கவே முடியவில்லை.

"விஜய் அத்தான்...." என்று அதிர்ச்சியில் வார்த்தை களை முழுங்க...

"வரச் சொன்னேல்ல... வந்துட்டேன். போட்டோ எடுக்க லாமா?" என்றபோது,

தீக்ஷா அவனிடம் ஏதோ பேச முயற்சிக்க...

"டைம் இல்ல, தீக்ஷா..." என்று இயந்திர கதியில் விஜய் பேச... தீக்ஷாவுக்கும் புகைப்படம் எடுக்கும் மூடே போய் விட்டது.

'ஏன், விஜய் அத்தான் இப்படி இருக்கிறார்...' என்ற எண்ணமே அவளுக்குள் ஓடிக் கொண்டிருக்க... இருவருமே ஏதோ பேருக்கு அந்தப் புகைப்படங்களுக்குக் காட்சியளிக்க... மூன்று கோணங்களில்தான்... அதுவும் தனித் தனியாய் எடுத்தார் போட்டோகிராபர்.

இப்போது புகைப்படம் எடுப்பவருக்கே இருவரின் முகமும் வித்தியாசமாய்ப் பட... "சார், டயர்டா இருந்தா நாளைக்கு எடுத்துக்கலாமே...!" என்று கேட்டு விட்டார்.

விஜய்... தீக்ஷாவைப் பார்த்தான், அவளின் ஒப்புத லுக்காக.



தீக்ஷாவும் தலையாட்ட... விஜய் கிளம்பி விட... தீக்ஷா அவன் போவதையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

இளமாறன் வீட்டை அடைந்தபோது, இளமதி அவனைக் கடுங்கோபத்துடன் எதிர்கொண்டாள். தங்கை வாழ்க்கையை நட்டாற்றில் விட்டவனின் திருமணத்திற்கு அண்ணன் போய் வந்தது எந்தத் தங்கைக்குத்தான் பிடிக்கும். தன் அண்ணனை வாசலிலேயே நிறுத்தினாள் இளமதி, ஆவேசத்தோடு.

அவளின் கோபம் தெரியாதவனா...? இல்லை, இளமாற னுக்கு விஜய் மேல் கோபமில்லையா...? என்னவெல்லாமோ திட்டம் தீட்டி வைத்திருந்தான். முதலில் அவன் தங்கை. இப்போது அவன்... விஜய்யின் மேல் அவனுக்கும் கடுங் கோபம்தான்.

தன்னை நிறுத்திக் கேள்வி கேட்ட, தன் தங்கையை முறைத்த இளமாறன் வேகமாய்த் தன்னறைக்குப் போக... அவன் பின்னாலே போனாள் இளமதி.

"அண்ணா... நான் ஒருத்தி கேள்வி கேட்டுட்டு இருக் கேன். நீ பதில் சொல்லாமப் போனால் என்ன அர்த்தம்...?" என்றவளிடம் மீண்டும் மௌனத்தையே பதிலாகத் தந்தான், இளமாறன்.

"அந்த விஜய்... திமிர் பிடிச்ச தீக்ஷா இவங்க ரெண்டு பேரும் என்னை விட முக்கியமாப் போயிட்டாங்களா, உனக்கு...?" - வார்த்தைகளைக் குதர்க்கமாய் வெளிப்படுத்தி னாள் இளமதி.

இளமாறன் கேட்டான். "உனக்கு அந்த விஜய்யைப் பிடிச்சிருக்கா? அவனை இன்னும் நினைச்சுட்டு இருக்கியா?"

இளமதி அவனை இளக்காரமாகப் பார்த்தாள். "அவனையா... போயும் போயும் இன்னொரு பொண்ணை

மனசில நினைச்சவனைப் போய் நான் விரும்புவேனா...? உன்னை மாதிரி நான் கிடையாது. வேறொருத்தனை லவ் பண்றானு சொல்லியும் நீ அந்த ராதாவை மேரேஜ் பண்ணிக்க ஒத்துக்கிட்ட மாதிரி என்னை நினைத்தாயா...?"

இளமாறன் இப்போதும் அமைதியாக இருந்தான். பின், தன் தங்கையைப் பார்த்து... பின் லேசாய் இகழ்ச்சியுடன் சிரித்தான்.

"மதி... என்னை விடு. உனக்கு இவனை விட... உனக்கு ஏத்தவனா கண்டுபிடிச்சு மேரேஜ் பண்ணி வைக்கிறது என்னோட பொறுப்பு. போதுமா... ஆனால், இந்த விஜய்யை விட்டுருவேன்னு நினைச்சுடாதே... என்னை அவன் அண்டர் எஸ்டிமேட் பண்ணிட்டான். நானும் கொஞ்சம் கோபமாத்தான் இருந்தேன். திருமணப் பத்திரிகை கொண்டு வந்தான்.

"நானும்... 'அந்தத் தீக்ஷாவுக்குப் பார்த்த மாப்பிள்ளைப் பையன் வரல... அதனால நீ மாட்டிக்கிட்டியா'னு நக்கலா கேட்டா... அவன் சிரிச்சுட்டே சொல்றான். 'இல்லடா. நான் தீக்ஷாவை மனசார விரும்பறேன்!'னு. கதை கதையாக் காரணம் என்கிட்டயே சொல்றான்..." என்றவன் இளமதியைப் பார்க்க...

"நான் அவனை மீட் பண்ணும்போதே ஐ ஸ்மெல் தட்..." என்றவளின் வார்த்தைகளும் அவள் அண்ணனின் இகழ்ச்சி யான சிரிப்புக்குச் சளைக்காமல் இருக்க...

"ஆனா, அந்தப் பொண்ணுக்கும் இவனுக்கும் ஒத்தே வராது, மதி... எப்படியோ அந்த தீபன் குடும்பம் விஜய் குடும் பத்தைக் கவுத்துட்டாங்க..." என்றான்.

"இல்லண்ணா... அந்தத் தீக்ஷாவைச் சாதாரணமா எடை போட்டுறாதே. பார்க்க அப்பாவி மாதிரி... இன்னோசன்ட் மாதிரி தெரிஞ்சாலும்... அவ சாமான்யமானவ கிடையாது..." என்று தன் அனுபவத்தில் கூறினாள் இளமதி.



"ஹ்ம்ம்... பார்க்கலாம். ஆனால் நான் அவனை விட மாட்டேன், இளமதி... அவனோட நேருக்கு நேர் மோதினால்... அவன் சுதாரிச்சிடுவான். அவனோட உறவாடிக் கெடுக் கணும். பையன் இப்போத்தானே கல்யாணம் பண்றான். வாழ்க்கையை அனுபவிக்கட்டும். புதுப் பொண்டாட்டி.... லவ் மேரேஜ் வேற... வாழட்டும்...

"தீக்ஷாதான் அவனோட பலவீனம்னு தெரிஞ்சு போச்சு. அவள் மூலமா இப்போ சந்தோசம் அனுபவிக்கட்டும். எனக்கும் அவன்கிட்ட முக்கியமா ஒரு விசயம் நடக்க வேண்டும். அதுக்கப்புறம் அவன் பொண்டாட்டி மூலமாகவே... அவனுக்குத் துக்கத்தைக் கொடுப்போம்..." என்றபோது, அவன் முகம் முழுவதும் குரோதம் வழிய...

இளமதி, தன் அண்ணனிடம், "முக்கியமான விசயம்னா... விஜய்யோட பிசினஸ்ஸா அண்ணா...?" என்று கேட்க,

இப்போது இளமாறன் முகமும் கவலையைத் தோய்த்தது. அவன் விஜய்யோடு நட்பு வைத்துக் கொண்டதே... விஜய், தன் கனவாக நினைத்துக் கொண்டிருக்கும்... அந்த ப்ராஜெக்ட்டைக் கைப்பற்றுவதுதான். ஆனால் இளமாறனால் அதை நெருங்கவே முடியவில்லை. தன் தம்பியைக் கூடக் கூட்டாகச் சேர்த்துக் கொள்ளாதவன் இவனைச் சேர்ப்பானா...?

ஆனாலும் இளமாறன் ஓய்ந்து விடவில்லை. ஏதாவது வழி கிடைக்கும்... எப்படியாவது அந்த ப்ராஜெக்ட்டைக் கைப்பற்றி ஆக வேண்டும்... என்ற முடிவுடன்... ஒரு வெறி யுடன்தான்... விஜய்யோடு நட்பு வைத்துக் கொண்டதே.

கண்டிப்பாக விஜய்க்குத்தான் அந்த ப்ராஜெக்ட் சைன் ஆகும் என்று அவனுக்குத் தெரியும். இல்லாவிட்டால் தீனா வுடன் கூட்டுச் சேர்ந்திருப்பான். விஜய்க்கு இந்த ப்ராஜெக்ட் எப்படிக் கனவோ... அதுபோலத்தான் இளமாறனுக்கும். எல்லா

வழியிலும் முயற்சித்துப் பார்த்தான். ஒவ்வொரு முயற்சியும் தோல்வியே... ஆனாலும் முயற்சித்துக் கொண்டேதான் இருந்தான்.

ஏதாவது ஒரு வழி கிடைக்கும் என்று அவன் மனம் சொல்லிக் கொண்டே இருக்க... அதன் காரணமாகவே இதுவரை விஜய்யுடன் அவன் பிரச்சனை பண்ணிக் கொள்ளவில்லை. தன் நினைவில் இளமாறன் இருக்க...

“ஆனால், அந்த தீக்ஷா அவமானப்படணும். என்ன மாதிரி என்கிட்ட பேசினா...!” என்று சொல்ல...

“இளமதி... இனி விஜய் - தீக்ஷா விசயத்தில் நீ தலையிட வேண்டாம். ஏற்கெனவே உன்கிட்ட எச்சரிச்சுட்டேன். விஜய் என்கிட்ட ஏற்கெனவே வார்ன் பண்ணியிருக்கான். நீ மட்டும் இன்னொரு தரம் அவன் மனைவி கிட்ட ஏதாவது வம்பு பண்ணினாய் என்றால் என் தங்கை என்று கூடப் பார்க்க மாட்டானாம். அவன் சொன்னால் செய்வான். நீ ஒதுங்கிக்கோ. நான் பார்த்துக்கிறேன். அவனை எப்போ, எங்கே அடிக்கணுமோ... அப்போ கரெக்ட்டா அடிப்பேன்...” என்றவனிடம்,

இளமதி, திடீரென்று... “அண்ணி அவங்க வீட்ல இருந்து போன் பண்ணினாங்க. நீ போனே எடுக்க மாட்டேங்கிறியாம். உன்கிட்ட முக்கியமான விசயம் பேசணும்னு சொன்னாங்க...” என்றபோதே,

“ஹ்ம்ம்... நான் பேசிக்கிறேன்...” என்றவன், அவளோடான உரையாடலுக்கு முற்றுப் புள்ளி வைப்பது போல்...

“உனக்கு நான் சொன்னது புரிஞ்சதுல்ல... நீ விஜய் விசயத்தில் தலையிடக் கூடாது. என் தொழிலுக்கு உன்னால எந்த இடைஞ்சலும் வரக் கூடாது. புரிஞ்சதா?” என்று சொல்ல....



அவனின் கண்டிப்பான வார்த்தைகளுக்கு... இளமதியும் தலையாட்டினாள்.

இளமதிக்குத் தன் வாழ்க்கையில் புதிய வழியில் செல்ல எந்தத் தயக்கமும் இல்லை. விஜய்... விஜய்... என்று அவன் மேல் உருகவும் இல்லை. ஆனால் விஜய்க்குத் தன்னை விட அந்தத் தீக்ஷா முக்கியமாய்ப் போனதும்... தீக்ஷா அன்று மிகவும் கேவலமாக... கொஞ்சம் கூட மதிக்காமல் போனதும்தான் அவளின் கோபம்...

அவள் அண்ணனும் அவளுக்கு ஏதுவாகப் பேச... தன் அண்ணன் பார்த்துக் கொள்வான் என்று நிம்மதியாகப் போனாள் இளமதி.

இதெல்லாம் எதுவும் அறியாமல்... தங்களுக்குள்ளே விழுந்த கடந்த கால முடிச்சை அவிழ்க்கும் வழி தெரியாமல்... உள்ளுக்குள் மறுகிக் கொண்டிருந்தனர்... நம் நாயகனும், நாயகியும்...!

**வி**ஜய்க்கு தீக்ஷாவின் பேச்சு உசுப்பேற்றி விடத்தான் செய்தது. கோபம்தான் வழக்கம் போல... இருந்தும் வெளிக்காட்ட முடியாமல் தனக்குள் அடக்கிக் கொண்டான். அதைத் தவிர வேறு வழியும் கிடையாது.

‘பெரிய இவ... இவ மேரேஜை நிறுத்துறேனு சொன்னவுடனே... நாங்களும் போம்மான்னு வழி அனுப்பி வைப்போம்னு நினைத்தாளா... சரி, ஏதோ மனசுக்குப் பிடிச்ச பொண்ணு. மேரேஜ் பண்ணிச் சந்தோஷமாப் போய் வாழட்டும்னு முதலில் அமைதியா இருந்தேன். நாளை நீ மட்டும் மேரேஜ் வேண்டாம்னு எதுனாலும் சொல்லுடி... நீயா, நானான்னு பார்த்து விடலாம். கதறக் கதறக் கழுத்துல தாலியைக் கட்டிட மாட்டேன்...?’ என்று தனக்குள் சமாதானமாய் வார்த்தைகளைக் கூறிக் கொண்ட பின்தான் விஜய் மனம் ஆறுதலடைந்தது.

'சும்மாவே உன் மேல் நல்ல எண்ணம் அவளுக்கு... இதில் வலுக்கட்டாயமாத் தாலி வேறயா...! என்ன நடக்கப் போகுதோ...? எங்க முடியப் போகுதோ...' என்று கவலை பாதி... எடுத்த முடிவு கொடுத்த தைரியம் பாதி... என விஜய் இருக்க...

தீக்ஷாவோ, தன் அறையில் இருப்புக் கொள்ளாமல் இருந்தாள். எப்படியும் இனி விஜய்யை நேராகச் சந்திக்க முடியாது. அட்லீஸ்ட் போனிலாவது தொடர்பு கொள்ளலாம் என்று ஐம்பது காலாவது பண்ணியிருந்திருப்பாள்.

அவனோ போனை எடுக்காமல் இருக்க... தீக்ஷாவுக்கு மனம் கலங்கி விட்டது.

'விஜய் அத்தான் சொல்வது போல் நான் லூசுதான். என்ன பேசுகிறோம்... எப்படிப் பேசுகிறோம்... யாரிடம் எப்படிப் பேச வேண்டும்... இது எதுவுமே எனக்குத் தெரியவில்லை தான். இல்லை என்றால் என் மனம் முழுவதும் நிறைந்த வனிடமே... திருமணத்தை நிறுத்தி விடுவேன் என்று லூசுத் தனமாகப் பேசியிருப்பேனா...!'

மனம் முழுவதும் கவலையோடு தீக்ஷா யோசித்துக் கொண்டிருந்தாள்.

'இனிமேல் அறையை விட்டு வெளியே செல்வது என்பது முடியாத காரியம். அவளது அண்ணியும்... அன்னையும் தன் அருகே இருப்பதால்... என்ன சொல்லி வெளியே போவது...? போனாலும்... விஜய் தனியே இருப்பானா...?' - தனக்குள் மன்றாடிக் கொண்டிருந்தாள் தீக்ஷா.

போனையும் எடுக்காமல் வேறு... விஜய் அவளுக்குச் சோதனையைக் கொடுக்க... வேதனையுடன் தவித்துக் கொண்டிருந்தாள் தீக்ஷா.

கிட்டத்தட்ட 12.30 மணி அளவில்... ஜெயந்தியின் உறவுக்காரப் பெண்மணி... கர்ப்பிணியான அவள்



மகளுக்கு... மண்டபம் வசதியில்லை என்று கூறி... வீட்டிற்குப் போக வேண்டும் என்று சொல்ல... ஜெயந்தி அவர்களை அழைத்துக் கொண்டு வீட்டிற்குச் சென்று விட்டு விட்டு வருவதாக அங்கிருந்து போக... தீக்ஷாவுக்கும் அது வாய்ப்பாகப் போனது.

ராதா மட்டுமே அருகில் இருந்தாள். ராதா, சுனந்தாவை உறங்க வைக்க முயற்சி செய்து கொண்டிருக்க... தீக்ஷா இப்போது யுகிக்குப் போன் செய்தாள்.

இந்த நேரத்தில் தீக்ஷா தனக்கு ஏன் போன் செய்கிறாள்... என்று நினைத்தபடியே, "என்ன புதுப் பொண்ணு... நாங்கள்லாம் உன் ஞாபகத்தில் இன்னும் இருக்கிறோமா...?" என்று கிண்டல் செய்ய... அவனின் கிண்டலை எல்லாம் கவனிக்காதவளாய்...

"யுகி, உங்க அண்ணா எங்கே?" என்று விசாரித்தாள் தீக்ஷா.

"எந்த அண்ணா... சுரேன் அண்ணனா...? விஜய் அண்ணனா...?" - நேரம் காலம் தெரியாமல் யுகி கேட்டுத் தீக்ஷாவிடம் வாங்கிக் கட்டிக் கொண்டதுதான் மிச்சம்.

"லூசு... உன் அண்ணானு நான் கேட்டேனா... யாரைக் கேட்பேன்.. லூசுத்தனமா கேள்வி கேட்கிற..." என்று பல்லைக் கடிக்க...

இவள் லூசு மாதிரிப் பேசிவிட்டு, யுகியைத் திட்டிக் கொண்டிருந்தாள்.

"சாரி... சாரி. விஜய் அண்ணனா... இங்கதான் இருந்தார். இப்போதான் மகாலுக்குக் கிளம்பி வந்தார். இவ்ளோ நேரம் அவங்க ஃப்ரெண்ட்ஸ்லாம் பார்த்துப் பேசிட்டு இப்போ தான் கிளம்பினார். ஏன், ஏதாவது முக்கியமான விசயமா?" என்று கேட்டவனிடம்...

“என்னடா... சார் பேச்சுலர்ஸ் பார்ட்டி கொடுத்துட்டு இருக்காரா?” என்று சந்தேகமாய் இழுத்தாள் தீக்ஷா.

யுகி, தன்னைத் தானே, குட்டிக் கொண்டான். “இல்ல, தீக்ஷா! அது வந்து...” என்று உளற ஆரம்பிக்க...

அவனிடம் பேசி நேரத்தை வீணடிக்காமல், “சரி, வை... நான் அடிச்ச போனைக் கூட எடுக்காம தலைவர் பார்ட்டில பிசியா?” என்று அவனிடம் சொல்லியபடி போனை வைத்தவள்... திரும்பி அண்ணியைப் பார்க்க... ராதாவும் சுனந்தாவோடு கண் அயர்ந்திருந்தாள்.

இதுதான் சமயம் என்று விஜய் அறைக்குப் போகத் தீர்மானித்த தீக்ஷா, மெதுவாய் அடி எடுத்து வைக்க... அவளின் கொலுசு ஒலி கேட்டு ராதா எழுந்து விட்டாள்.

“என்ன தீக்ஷா... எங்க போற?” என்று கேட்டபடியே எழ,

தீக்ஷா அப்படியே அமர்ந்து விட்டாள்.

“ஒண்ணும் இல்ல அண்ணி... தூக்கம் வரல!” என்று முனகியபடி அவளின் அருகில் படுத்தவள்... தன் அண்ணியிடம் சொல்லி விட்டுச் செல்லலாம் என்று கூட முதலில் நினைத்தாள். ஆனால் ஜெயந்திக்குத் தெரிந்தால் தன்னோடு தன் அண்ணியும் சேர்ந்து திட்டு வாங்க வேண்டும் என்பதால் ராதாவிடம் சொல்லி விட்டுப் போகும் எண்ணத்தைக் கைவிட்டுக் கண்ணை மூடியபடி படுத்தாள்.

மீண்டும் பத்து நிமிடம் கழித்து எழுந்தபோது, ராதா நித்திரையில் ஆழ்ந்திருக்க... தான் அணிந்திருந்த... அனைத்து அணிகலன்களையும் சப்தமில்லாமல் மெதுவாய்க் கழற்றியவள்... அறையினை விட்டும் வெளியேறி இருந்தாள்.

விஜய் அறையில் யார் இருந்தாலும் பரவாயில்லை. அவனைச் சந்தித்து விட வேண்டும் என்ற முடிவில் இருந்த



தால்... எதைப் பற்றியும் கவலைப்படவில்லை... யாரைப் பற்றியும் சிந்திக்கவில்லை.

தீக்ஷா நினைத்தது போல்... விஜய் அறையில் அவனோடு யாருமே இல்லை. அவன் மட்டுமே தனியாய் இருந்தான். அவனுக்கும் அந்தத் தனிமை வேண்டி இருந்தது. யாரிடமும் அவனுக்குப் பேசவே பிடிக்கவில்லை.

திருமணத்திற்கு வந்திருந்த தன் நண்பர்களிடம் கூடச் சரியாகப் பேச முடியவில்லை. அவர்களைக் கவனிக்கும் பொறுப்பைச் சுரேந்தர் ஏற்றுக் கொண்டிருந்ததால்... ஏதோ பேருக்கு அவர்களிடம் பேசி விட்டுத் தன் அறைக்கு வந்தவன்... தனது மொபைலை அப்போதுதான் எடுத்தான். சைலண்ட் மோடில் வேறு போட்டிருந்தான். ஏகப்பட்ட கால்களும்... குறுஞ்செய்திகளும் வந்திருக்க... அதில் பெரும்பான்மையானது தீக்ஷா என்றிருக்க...

விஜய் வேகமாய் எடுத்துப் பார்த்து, அவற்றை எல்லாம் படிக்கப் படிக்க... அவனின் முகத்தில் அதுவரை இருந்த சஞ்சலம் எல்லாம் கரைந்து போய்... புன்னகை மீண்டும் ஒட்டிக் கொண்டது.

அத்தனை குறுஞ் செய்தியும் அவனின் மன்னிப்பு வேண்டி இருக்க... விஜய்யும் அவளை அழைக்கலாம் என்று முடிவு செய்து... தன் போனில் இருந்து கால் செய்ய நினைத்தவன் மணியைப் பார்க்க... அது ஒன்று என்று காட்ட... கால் செய்ததையும் கட் செய்து விட்டான்.

அவளைச் சுற்றி யாரார் இருப்பார்களோ... அவளால் பேச முடியுமோ, பேச முடியாதோ... தன்னால் அவளுக்குத் தொல்லை வேண்டாம் என்று அவளின் நலன் கருதி அவளுக்குப் போன் செய்யாமல்... அவளுக்கு மெசேஜ் மட்டும் செய்தான்.

'தீக்ஷா... நீ மன்னிப்புக் கேட்கும் தகுதி இல்லாதவன் நான்... உன்னவனுக்கு வேண்டியது உன் காதல்தான்...' என்று முதலில் அனுப்பியவன்...

அடுத்த குறுஞ் செய்தியாக....

'யாசிக்கிறேன் உன் காதலை...
தந்தால் யாசகனாவேன்...
இல்லை யென்றால்?
அதைக் களவாடும் கள்வனாவேன்...
நீயாகத் தந்தால் யாசகன்...
நானாக எடுத்தால் கள்வன்...
நான் யாராக இருக்க வேண்டும் என்பது
உன் கையில்...'

என்று தனக்குத் தெரிந்த வார்த்தைகளில்... அவளுக்கு மெசேஜ் அனுப்பியவனுக்குச் சந்தோசத்தில் உறக்கம் கூட வரவில்லை.

தீக்ஷாவை நினைத்தபடியே... அவளின் ஞாபகங்களில் சுழன்றவனுக்குத் தன்னவளாய்த் தீக்ஷா மாறும் கணம் எப்போது வரும்... அவளிடம் தன் மனதில் இருப்பதை எப்போது கொட்டலாம் என்று கண் மூடிப் படுத்திருக்க... அப்போது அவனின் அறைக் கதவும் தட்டப்பட்டது.

"நிம்மதியா இருக்க விட மாட்டாங்களே...!" என்று அலுத்தவனாய் எழுந்த விஜய்... கதவைத் திறக்க... தீக்ஷா நின்று கொண்டிருந்தாள். திறந்த கதவின் மறுபுறம்... விஜய் அதிர்ச்சியோடு பார்க்க... தீக்ஷா அவனின் பார்வை உணர்ந்தவளாய்... அவனைத் தள்ளியபடி உள்ளே நுழைய... வேகமாய் விஜய் அவள் பின்னே வந்தவன்... அவளுக்கும் முன்னே வந்து அவளின் முன் நின்றவன்,

"ஏய்... இந்த நேரத்தில் என் ரூமுக்கு... யாராவது பார்த்தால் என்ன ஆகும்?" என்று பதற்றமாய்க் கேட்க...



உதட்டைச் சுழித்தாள் தீக்ஷா... "என்ன ஆகும், அத்தான்?" என்று அப்பாவியாய்க் கேட்டவளை... விழி தெறிக்கப் பார்த்தான் விஜய்... அவளை விட அப்பாவியாய்.

"என் ரூமுக்கு நீங்க கூடத்தான் தனியா வந்தீங்க... அதுவும் யாரோ ஒருத்தனுக்கு நிச்சயம் பண்ணின என்னைப் பார்க்க வந்தீங்க... நான் என்னைக் கல்யாணம் பண்ணிக்கப் போற பையனைத்தான் பார்க்க வந்திருக்கேன். நீங்க பண்ணினதை விட, இது தப்பு இல்லதானே... ஆனால், நான் அன்னைக்குப் பயந்ததை விட நீங்க ஏன் அத்தான் இந்தப் பயம் பயப்படுறீங்க?" என்று கொஞ்சம் கூடப் பயமில்லாமல் அவனின் கண்களை நேருக்கு நேராகப் பார்த்துச் சொல்லிக் கொண்டிருக்க...

விஜய்... அவசரமாய் மீண்டும் திரும்பிப் போய்... கதவை அடைக்கப் போனான்.

தீக்ஷாவோ, அவனிடம் தன் மனதில் இருப்பதை எல்லாம் அன்றே கொட்டி விடத் தீர்மானித்தவளாய்... அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

## 35

கதவை அடைத்து விட்டுத் திரும்பிய விஜய்யை தீக்ஷா நேருக்கு நேராகப் பார்த்தாள், தயக்கம் என்பது சிறிதும் இன்றி.

தீக்ஷா வந்ததால் தோன்றிய பதற்றம் முகத்தில் இருந்தாலும்... விஜய்யின் முகம் சஞ்சலம் இன்றித் தெளிவாக இருக்க... அதையும் தீக்ஷா கவனிக்கத் தவறவில்லை.

'பார்ட்டியில தெளிஞ்சுட்டாரோ?' என மனதுக்குள்ளே சொல்லிக் கொண்டவள்...

"கதவைப் பூட்டினால் மட்டும்... யாருக்கும் தெரியாதா அத்தான்...?" என்று வம்பளத்தபடி, விஜய்யின் அருகே நெருங்க... விஜய் வழக்கம் போல முறைக்கவில்லை என்றாலும்...

'இந்த நேரத்தில்... தன்னுடன்... கடவுளே! இவ எப்போ என்ன பண்ணுவாள்னே தெரியலையே...' என்று தனக்குள் மறுகியவன்... வேகமாய் அவளை விட்டு விலகி...

"என்னடி பிரச்சனை உனக்கு... இப்போ என் ரூமுக்கு ஏன் வந்த?" என்று கோபமாய்க் கேட்டான். கோபம் வார்த்தை களில் மட்டுமே இருக்க... முகம் நேர்மாறாய் இருந்தது.

"எனக்கு என்ன பிரச்சனைன்னு உங்களுக்குத் தெரியாதா... உங்க மொபைலை எடுத்துப் பாருங்க. அது சொல்லும் என் பிரச்சனையை... நான் ஒரு லூசுன்னுதான் உங்களுக்கு நல்லாத் தெரியும்ல... நான் ஏதோ லூசு மாதிரி உளறுனேனா... அதையெல்லாம் பிடிச்சுக்கிட்டு உம்முன்னு ஆகிடுவீங்களா...? இப்போ என்ன தெரியணும், உங்களுக்கு?" என்று விஜய்யின் கோபமான வார்த்தைகளுக்கு ஈடுகட்டும் விதத்தில் தீக்ஷா சத்தமாகப் பேச...

விஜய் தணிந்த குரலில், "ஏய்... இப்போ எதுக்கு இப்படிப் பேசுற... அதிலும் இவ்ளோ சத்தமா!" என்று அவளின் கோபத்தை உணர்ந்து மீண்டும் அருகில் வர...

தீக்ஷாவோ வேகமாய் விலகிக் கதவை நோக்கிச் சென்றாள்.

விஜய் ஒன்றும் புரியாமலும்... அவளைப் புரிந்து கொள்ள முடியாமலும் குழம்பியபடி... அவளையே பார்த்தபடி நின்று கொண்டிருக்க...

கதவின் அருகே சென்ற தீக்ஷா... அவனை நோக்கித் திரும்பி... "இங்க பாருங்க, அத்தான்... நான் உங்ககிட்ட



மறுபடியும் மறுபடியும் தோத்துக்கிட்டே இருக்கேன். நீங்க என்னை ஜெயிச்சுட்டே இருக்கீங்க... நீங்க என்னை லவ் பண்றீங்களா... இல்லை, அந்த இளமதி சொன்ன மாதிரி பரிதாபப் படறீங்களானெல்லாம் தெரியாது. ஆனால் என்னை விரும்பறேன்னு மேரேஜுக்கு முன்னாடியே உங்க வாயில இருந்து சொல்ல வைக்கிறேன்னு என் மனசுக்குள்ள சபதம் போட்டேன். ஆனால் அதில் நான் தோத்துட்டேன்.

"இப்போ என்ன.. யார் சொன்னா என்ன... எனக்கு உங்களைப் பிடிச்சிருக்கு. அது ஏன்லாம் தெரியாது. சுயமரியாதை உள்ள பொண்ணா இருந்தால்... உங்களை லவ் பண்ணியிருக்கக் கூடாதுன்னு என் அறிவுரை சொல் லுது. ஆனா, என் மனசு... என் மூளை சொல்றதைக் கேட்க மாட்டேங்குது அத்தான்... எனக்குப் பிரச்சனையே இதுதான் அத்தான்..." என்றபடி மூச்சிரைக்கப் பேசிக் கொண்டிருந்தவள் பேச்சு பாதியிலேயே நின்றிருந்தது.

வார்த்தைகளின்றி அவளது விழிகள் மட்டுமே அலை பாய்ந்தன. அதுவும் விஜய்யின் கண்களோடு கலந்து...

காரணம்... விஜய் அவளின் அருகில் நெருங்கி, அவளைச் சிறை பிடித்தாற் போல அவளின் இருபுறமும் தன் கைகளால் அணைத்திருக்க... தீக்ஷா வார்த்தைகள் இப்போது தொண்டையிலேயே சிக்கிக் கொண்டன.

"பேசிப் பேசியே மனுசனைக் கொல்றடி..." என்றவனின் கண்கள்... அவளை மொத்தமாய் அவள் விழிகளோடு கலக்க... இதை எதிர்பார்க்காத தீக்ஷாவோ திணறினாள், பேச முடியாமல். ஆனாலும் அவன் கண்களில் வழிந்த காதலைத் தயங்காமல் எதிர் கொண்டாள்.

இருந்தும்... "நான் போகணும் அத்தான்... அம்மா வந்துடுவாங்க..." தயங்கித் தயங்கி வார்த்தைகள் சிக்கியபடி வெளியே வர...

அவள் கருவிழிகள் அலை பாய்ந்ததிலும்... தன் அச்சத்தைத் தொண்டைக் குழியில் விழுங்கியதிலும்... அவள் நிலையை உணர்ந்த விஜய்... அவளை ரசித்தபடியே...

"புயலுக்கு இவ்ளோ நேரம் தெரியலையா...? அம்மா வருவாங்க... ஆயா வருவாங்கன்னெல்லாம்...!" என்று அவள் கண்களைப் பார்த்தபடியே புருவம் உயர்த்தியபடி நக்கலாகச் சொன்னவன்,

"ஏதோ தோத்துட்டேன்... அப்படி இப்படினு பினாத்துன. உனக்கு முன்னாடியே நான் உன்கிட்ட என் மனசைச் சொல் லிட்டேன்... போய் உன் போனை எடுத்துப் பாரு..." என்ற வனின் நெருக்கத்தின் இடைவெளி இன்னும் சற்றுக் குறைய...

"நான் போகணும்..." என்று மட்டுமே தீக்ஷா மீண்டும் சொல்ல...

"என்ன அவசரம்...? இன்னும் நீ பேசி முடிக்கலேனு நினைக்கிறேன்..." என்று சீண்டலாகக் கேட்க...

அவனின் சீண்டலில் இப்போது தீக்ஷாவும் தன் நிலை தெளிந்து...

"அவசரம்தான்... என் அத்தான் எனக்கு... அதுவும் முதன் முதலா அனுப்பி இருக்கிற மெசேஜைப் பார்க்கணும் தான்... தள்ளுங்க!" என்று விலக எத்தனிக்க...

விஜய்யோ விடவேயில்லை. "அவ்ளோ அவசரம்னா... இதைப் பாரு..." என்றபடி தன் மொபைலின் சென்ட் ஐட்டம் பகுதியைக் காண்பிக்கப் போக...

வேகமாய்... "இல்ல... இல்ல... என் போன்ல பார்த் தால்தான் எனக்குத் திருப்தி..." என்று திரும்பி... கதவைத் திறக்க, தாழ்ப்பாளின் மேல் கை வைத்த அவளை அவனின் குரல் நிறுத்தியது.



"தாழ்ப்பாள் மேல கை வைச்சேனா... நான் உன் மேல கை வைக்க வேண்டியதாகிரும்... எது வசதி... சாய்ஸ் இஸ் யுவர்ஸ்!" என்றவன் கைகளை விலக்காமல் சற்று இடைவெளி விட...

தீக்ஷா விழித்தாள். "நம்ம ஆளா இது..." என்றுதான்.

'தாழ்ப்பாள் மேல கை வைச்சாத்தான் என் மேல கை வைப்பாராமா...! லூசுதான்டா நீ... உனக்காக நான் ஏங்கிட்டு இருக்கேன். நீ லூசு மாதிரி டயலாக் பேசிட்டு இருக்க... ஆனாலும் நல்லாத்தான் இருக்கு...' என்று தன் நினைவில் உழன்றவளை விஜய்யின் குரல் கலைத்தது.

அதுவும் இனிமையான குரல்... இப்போது கண் சிமிட்டக் கூட மறந்தவளாய்த் தீக்ஷா மீண்டும் விஜய்யின் கைச் சிறைக்குள் தானாகவே வந்தாள்... விஜய் பாடினான்... கண் சிமிட்டியபடி... புன்னகைத்தபடி.

"ஊரெங்கும் தோரணம்... நடக்கும் ஊர்வலம்...
உன்னோட கன்னத்திலே வைக்கலாமா...

"என்ன பார்க்கிற... நீ போட்ட பாட்டுதான். அன்னைக்கு முழுசா முடிக்கலைதானே... இன்னைக்குக் கம்ப்ளீட் பண்ணிட லாமா?" என்றவனின் வார்த்தைகளில் எல்லாம் பயப் படாமல்...

தீக்ஷாவோ அவனைப் பார்த்துக் கொண்டிருக்க... விஜய்யும் சளைக்காமல் அவளை எதிர் கொண்டான்.

தீக்ஷாவை இப்போது அவன் விழிகள் உரிமையாய்... எதிர்கொண்டன... தன் முன் நிற்கும் அவளை அவனது கண்கள் அளவெடுக்க ஆரம்பிக்க... தீக்ஷாவோ இன்னும் அவன் பாடிய நினைவிலேயே இருந்தாள்.

விஜய்யோ அவன் விழிகள் சென்ற பாதையில் தனது எண்ண ஓட்டங்களை மேற்கொண்டான்.

கிட்டத்தட்ட ஒரு அலங்காரமும் இல்லாமல்... தீக்ஷா அவன் முன் நின்றிருந்தாள். சற்று முன் கலைத்த கூந்தல் அலங்காரத்தால்... ஏனோதானோவென்று தலைமுடி கலைந் திருந்தது.

கண்களில் போட்டிருந்த கண் மை... முகம் கழுவி இருந்ததால், அது கூடக் கலைந்து கண்களை விட்டுக் கீழே வந்திருக்க... நெற்றியில் பொட்டு மட்டுமே இருந்தது... உதடுகளில்... அவனைக் காதல் வலையில் விழ வைத்த உதட்டுச் சாயம் இன்று இல்லை... கழுத்தில் சின்னதாய் ஒரு செயின் அணிந்திருந்தாள்... காதில் அது கூட இல்லை...

ஏதோ ஒரு புடவை அணிந்திருந்தாள். இரவுக்கென்று அணிந்திருந்ததால்... அது கூடச் சரியாகக் கட்டாமல்... ஏதோ பேருக்குக் கட்டி இருந்தாள். விஜய்யின் ஆராய்ச்சிப் பார்வை... கொஞ்சம் கொஞ்சமாய்... மோகப் பார்வையாய் மாறிக் கொண்டிருக்க... தீக்ஷா அவனின் பார்வைகளின் அர்த்தம் தெரியாதவளா...?

அவனின் பார்வை மாற்றங்களை உணர்ந்தவள்... "ஹலோ அத்தான்..." என்று கை விரல் சுண்டி அவனின் பார்வையைக் கலைக்க...

"ஹ்ம்ம்..." என்றவனின் குரல்தான் தாபமாய்க் கிறக்கத்துடன் பதில் தந்தது.

தீக்ஷா அப்போதுதான் உணர்ந்தாள்... அவனின் கண்கள் மட்டுமே அவளை உரிமையாய்த் தழுவிக் கொண் டிருக்க... அவனின் கை விரல்கூட அவள் மேல் படாமல் இருந்தது.

உரிமையாய் இருக்கும்போது கூட இன்று கண்ணியம் காக்கிறவன்தான்... அன்று... அன்றைய நிகழ்வுகளை நினைக்காமல்தான் இருக்கப் பார்க்கிறாள்... ஆனாலும் அவளை மீறி வந்து விடத்தான் செய்கிறது.



தீக்ஷா சுயம் உணர்ந்து... இங்கிருப்பது இனிச் சரி யில்லை என்று அவளின் அறிவு சொல்ல...

விஜய்யிடம்... "அத்தான்... நைட் உங்க முகமே சரி இல்லை. அதுதான் உங்ககிட்ட பேச வந்தேன்... இப்போ என் மேல கோபம் இல்லல்ல... உம்மணா மூஞ்சியா இருக்கக் கூடாது. சரிதானே... நான் வருகிறேன்," என்றவள் கதவைத் திறக்க...

விஜய் சட்டென்று அவளை இழுத்துத் தன்னோடு அணைத்தபடி கதவை மூடியவன்...

"லூசு... எதையுமே பார்க்க மாட்டியாடி... யாராவது நிற்கிறாங்களான்னு பார்த்துட்டுப் போ... எல்லாத்திலும் அவசரம்..." என்று கடிந்தவன்... அவளைத் தன் பிடியில் வைத்தவாறே... வெளியில் பார்த்தவன்... யாரும் இல்லை என்பதை உறுதி செய்து விட்டு...

அவளிடம் திரும்பி... "இப்போ போ!" என்று சொல்லிய படியே, அவளைத் தன் பிடியிலிருந்து விலக்கினான்.

அவனே உணரவில்லை... அவள் வேகமாய்க் கதவைத் திறந்ததும்... பிடித்து நிறுத்தப் போய்... தான் அறியாமலே... தனக்குள் கொண்டு வந்திருந்தான்.

ஆனால் தீக்ஷாவோ... அவனிடமிருந்து விலகாமல்... அவனோடு இன்னும் ஐக்கியமாக... விஜய் அவளின் ஒன்றலை உணர்ந்தான் தான்... இருந்தும் இருக்குமிடம்... நேரம் இதை உணர்ந்தவன்...

"தீக்ஷா! வெளியில யாருமில்ல... இப்போ போம்மா..." என்றபடி, அவளைக் கிளம்பச் சொல்ல...

அவன் வார்த்தைகளுக்குத் தீக்ஷாவிடமிருந்து பதில் வராமல் போக...

அவளைத் தன்னோடு இன்னும் சேர்த்து அணைத்த விஜய்க்கு, அவளின் நெற்றியில் இதழ் பதிக்க ஆசை இருந்தபோதும்... தன்னை அடக்கி இருந்தான்.

"தீக்ஷா..." அவனின் குரல் அமைதியாகவும் அழுத்த மாகவும் அவளை அழைக்க...

அவளோ... "அத்தான், ஒரு 10 மினிட்ஸ்... ப்ளீஸ்!" என்று சலுகையாய்ச் சிணுங்கினாள்.

"என்னது 10 மினிட்ஸா... ஆளை விடு... இடத்தைக் காலி பண்ணு..." என்றவனைத் தீக்ஷா முறைக்க...

"செல்லம்ல... இன்னைக்கு ஒருநாள் மட்டும்தானே... அதுக்கப்புறம் நீயே போறேன்னு சொன்னால் கூட உன்னை நான் விடமாட்டேன்... ப்ளீஸ்..." என்று கெஞ்ச...

தீக்ஷா அதற்கெல்லாம் மசிபவளா...?

அவன் நெஞ்சில் சாய்ந்திருந்த அவள்... அன்று தெரியாமல் இதழ் பதித்திருந்தாள். இன்று தெரிந்தே இதழ் பதிக்க... விஜய் அவளின் காதில் சொன்னான்.

"முத்தம் வச்சே ஆளைக் கவுத்திருவியாடி...!" என்றவ னிடம் நிமிர்ந்த தீக்ஷா...

"நீங்களும் வச்சு ஆளக் கவுங்க..." பட்டென்று சொன் னவள்... அதே வேகத்தில்... "ஆனா, என் அத்தானுக்கு அதெல்லாம் அதிகப்படி... இந்த ரெண்டு கண்ணே போதுமே..." என்று சரளமாகப் பேச ஆரம்பிக்க... இருவரின் தயக்கங்களும் அவர்களை விட்டுப் போயிருந்தன.

விஜய்யும் அவளிடம் பதிலுக்குப் பதில் பேச ஆரம் பித்தான்.

"ஆனாலும் உனக்கு இருக்கிற நக்கலுக்கு... ஒருத்தன் இங்க உனக்காக, உன் காதலுக்காக... ஏங்கிட்டு இருக்



கான். நீ என்னடான்னா நாளைக்குப் போட்டோக்கு ஒழுங்கா போஸ் கொடுக்கணும்னு... அர்த்த ராத்திரியில பேச வந்திருக்க... கொழுப்பு ஜாஸ்திதான்... என்ன சொன்ன... நானும் முத்தம் வச்சு ஆளைக் கவுக்கவா...?

"எனக்கும் ஆசைதான்... ஆனால் என்ன பண்றது... நாங்கள்ளாம், எங்களுக்குனு ஒரு பொருள் உரிமையான பின்னால்தான் சொந்தம் கொண்டாடுவோம்... மத்தவங்க மாதிரிலாம் இல்லப்பா... சும்மா நொச்சு நொச்சு முத்தம் வைக்க..." என்று சீண்டலாய்ப் பேசினான்...

அவன் அன்று அவள் தெரியாமல் கொடுத்த முத்தம் பற்றிப் பேசி வைக்க...

இவளோ... சற்று முன் தான் அவன் நெஞ்சில் தன் இதழ் பதித்ததைச் சொல்கிறான் என்று நினைத்து...

அவனைத் தள்ளியவள்... "நாங்கள்ளாம் மனசுக் குள்ள வந்தவுடனே சொந்தமாக்கிடுவோம்... உங்கள மாதிரி இல்லை... இந்த மூணு முடிச்செல்லாம்... அடுத்ததுதான்... நாங்களும் உங்களுக்காக... உங்க பார்வைக்காகத்தான் ஏங்கிட்டு இருக்கோம்...

"காதலை எப்போ வேணும்னாலும் சொல்லலாம்... நம்ம கல்யாண போட்டோ மறுபடியும் எடுக்க முடியுமா...? இப்போ சொல்லுங்க, எது முக்கியம்?" என்று கோபமாய்ச் சொல்ல...

அவளின் மூக்கைப் பிடித்துத் திருகிய விஜய்... "அது சரி... நீ சொல்லிட்டேல்ல. போட்டோதான் முக்கியம்..." என்று சொல்ல...

அவன் வார்த்தைகளிலே நக்கல் வழிய...

அவள் முகம் கோபத்தின் அளவை இன்னும் கூட்ட...

"ஹேய், என் பொண்டாட்டிக்குக் கோபமெல்லாம் வருதுடா. இவங்க கூல் பேபினு ஊருக்குள்ள சொல்லிட்டுத் திரியுறாங்கடா!" என்று சொன்னவன் தன் மனதில், அவளின் இடத்தையும் சொல்ல... அவனின் வார்த்தைகளில் தீக்ஷா நெகிழ்ந்தாலும்... இன்னும் கோபமாகவே இருப்பது போல் பாவனை செய்ய...

"சரி சரி... இப்போ என்ன பிரச்சனை உனக்கு... நீ கேட்டபடி 10 நிமிசம் பேசலாம்... சரியாப் பத்து நிமிடம்தான். ஓ.கே.வா... ஏன்னா உன் அத்தான் பாவம்மா... எனக்குச் சோதனைல்லாம் வச்சுடாதே... ஒரே ஒரு நாள் நைட் மட்டும் தான் பாக்கி!" என்று அவன் சொல்லும் போதே அவள் அங்கிருந்த கட்டிலில் அமர்ந்திருந்தாள்.

விஜய்க்கு அவள் செயல்களில் உள்ளுக்குள் ஒரே கிலி தான்... அவள் மீண்டும் அவள் அறைக்குப் போகும்வரை... யாரும் பார்த்து விடக்கூடாது என்று உலகத்தில் இருக்கும் அத்தனை கடவுளுக்கும் மனுப் போட்டவன்... தன்னவளைத் தன்னிடம் தந்ததற்காக... அத்தனை கடவுள்களுக்கும் நன்றி சொல்லவும் மறக்கவில்லை.

தீக்ஷா, எந்தத் தடங்கலும் இன்றி, அவனை ஏற்றுக் கொண்டாள் என்ற எண்ணமே அவன் உள்ளம் முழுவதும் உவப்பைத் தர... அதே சந்தோசத்தோடு அவளருகில் அமர்ந் தவன்... தன்னவளைத் தன் தோளில் சாய்க்க... உரிமை யோடு அவன் தோள் சாய்ந்தாள் தீக்ஷா.

"சாரி, விஜய் அத்தான்... உங்களை நான் ரொம்பக் காயப்படுத்திட்டேன்... சாரி, அத்தான்!" என்றவளின் குரல் தளுதளுப்பாய் இருக்க...

"ஏய் லூசு... நீ சாரி கேட்கிற அளவு என்ன தப்பு பண்ணின... கேவலமான காரியம்லாம் பண்ணினவன் நான்... நீதான் என்னை இன்னும் மன்னிக்கல..." என்று



முடிக்கும் போதே அவன் கன்னத்தில் எம்பி முத்தம் பதித்தாள் தீக்ஷா...

அதிர்ச்சியாய் நிமிர்ந்த விஜய்யிடம்...

"அத்தான், அதுக்கெல்லாம் நோ மன்னிப்பு... ஒன்லி தண்டனைதான்... உங்க ஆயுள் முடியறவரைக்கும்... என் ஆயுள் முடியறவரைக்கும்... பண்ணியதெல்லாம் மன்னிக்கக் கூடிய தப்பா...?" என்றவளை இன்னுமா சும்மா விடுவான் விஜய்...

அவள் முகம் நோக்கிக் குனிந்தவனை... தீக்ஷா தள்ளி விட...

"ஏய்... என்னடி நீ மட்டும் இஷ்டத்துக்கு வைக்கிற... நான் வந்தா தள்ளி விடற... உன்னை..." என்று அவளின் அருகில் வந்தவனிடம்,

"யாரோ சொன்னாங்க... சொந்தம் உரிமைனு... அதுக்கப்புறம்தான்னு... நாங்கள்ளாம் சொன்ன வாக்கைக் காப்பாற்ற மாட்டோம்தான். ஆனா நீங்க... அப்படி இல்லல்ல..." என்று குறும்பாகப் பேசியவளின் வார்த்தை களில்... உணர்ச்சியும் வழிந்தோட... இப்போது அவனைப் பார்த்து...

"உங்க உயரம் என்னால எப்போதுமே இறங்கக் கூடாது, அத்தான்... அதுதான்!" என்று உணர்ச்சி வயப்பட்டுப் பேசியவளைப் பார்த்துக் கொண்டே இருந்தான் விஜய்.

ஒன்றுமே பேசாமல்... அவளை மட்டுமே பார்த்துக் கொண்டிருந்தவன்... தன் கழுத்தில் இருந்த தன் செயினைக் கழற்றி அவளே எதிர்பாராமல் அவள் கழுத்தில் போட்டவன்... அவளின் முகம் எங்கும் அச்சாரத்தைப் பதித்து... அவள் இதழ் நோக்கிக் குனிந்தவன்...

"இதுக்கு மேல போனேன்..." என்று தனக்குத்தானே சொல்லிக் கொண்டவன்... அவளை விட்டு விலகி அமர்ந்து...

"தீக்ஷா... இனி நீ இங்க இருக்கிறது சரி இல்ல... ரெண்டு பேருமே எமோசனலா இருக்கோம்... ரொம்ப ஆபத்து... உன் ரூமுக்குப் போகலாமா...? ப்ளீஸ்டா... நாளைக்கு நாம விடிய விடியப் பேசலாம்..." என்று கெஞ்சியவனைப் பார்த்த தீக்ஷா மென்மையாய்ப் புன்னகைத்து... மெதுவாய்த் தலையாட்டினாள்.

அவள் சாதாரணமாக இருந்திருந்தால்... விஜய் சொன்ன விடிய விடியப் பேசலாம் என்ற வார்த்தைகளுக்குப் பதில் கவுண்டர் கொடுத்திருப்பாள்...

தீக்ஷா அவனின் முத்த மழையில் நனைந்து... மூழ்கித் தன்னை மறந்திருந்தவள்... அவனின் வார்த்தைகளுக்குத் தலையை மட்டும் ஆட்டி வைத்தாள்.

விஜய் சொன்ன 10 நிமிடம் முடிந்து... தீக்ஷா மறுத்த போதிலும் அவனும் கூடவே வந்தான். அவளைத் தானே அழைத்துக் கொண்டு வர...

அப்போது தீக்ஷா... "சரி... அப்போ நாளைக்கு ஒழுங்கா போட்டோக்கெல்லாம் போஸ் கொடுக்கணும்... அந்த போட்டோஸ்ல எல்லாம் இந்த தீக்ஷா மேல இருக்கிற காதல் தான் தெரியணும்... அதைப் பார்க்கும் போதெல்லாம்... என் விஜய் அத்தானுக்கு என் மேல எவ்ளோ காதல்னு... அதை விட நான் உங்களைக் காதலிக்கணும், அத்தான்!" என்றவளை அணைத்தபடி விஜய்... நிம்மதியில் முகம் விகசித்து இருந்தான்.

தீக்ஷா பேசிக் கொண்டே வர... விஜய் கேட்டபடியே வந்து கொண்டிருந்தான்.

"அத்தான்... உங்களுக்குப் பாட்டு பிடிக்காதுன்னு யுகி சொன்னான். ராங் இன்ஃபர்மேஷன் கொடுத்து ஏமாத்திட்டான்... இருக்கு அவனுக்கு..." என்றவளிடம்...



"அதெல்லாம் கரெக்ட் இன்ஃபர்மேஷன்தான். நானும் சுரேனும் பாட்டுக் கிளாஸ் போனோம்... நான் என்ன பண்றேனோ அதையே ஃபாலோ பண்ணுவான் சுரேந்தரும்... ஒரு கட்டத்தில் நான் பாட்டெல்லாம் விட்டுட்டு வேற ட்ராக்ல போனேன்... அவனும் என் பின்னாலேயே வந்துட்டான்," என்று சொல்ல...

"ராமர் - லட்சுமணன் தான்... எப்படியோ போங்க. ஆனா உங்களுக்குப் பாட்டெல்லாம் பிடிக்காதோனு கொஞ்சம் பயந்தேன்..." என்று பேசியபடி வந்தவளுக்கு... இன்னும் என்னவெல்லாமோ பேச அவளின் மனம் அலை பாய... ஆனால் மணமகள் அறையோ... அருகில் வந்து விட...

விஜய் அவளிடம்... சொல்லிக் கொண்டு கிளம்ப... அவனின் கையை விடாமல் இருந்தாள் தீக்ஷா.

அவனுக்கும் அவளை விட்டுப் போக மனம் இல்லை தான்... அதற்காக இங்கேயே நின்று கொண்டிருக்க முடியுமா?

"என்னம்மா...?" என்று சங்கடமாய்ப் பார்த்தவனிடம்...

"அத்தான்... எதையுமே பார்க்க மாட்டியா... யோசிக்க மாட்டியானு கேட்டிங்கள்ல... எனக்காக நீங்க இருக்கும்போது எந்த ஆபத்தும் என் பக்கத்தில் நெருங்காது, அத்தான்... உங்க மூச்சுக் காத்து என்னைச் சுற்றி இருக்கிறவரை... வேறு எதுவுமே நெருங்காது, அத்தான்...

"நீங்க எப்போதுமே என் கூடவே இருப்பீங்கள்ல, அத்தான்...? எனக்கு இப்போ கூட உங்களை விட்டுப் போக மனசு வரலை. உங்க கூடவே இருக்கணும் போல இருக்கு. நான் ஏன் இப்படி ஆனேனு எனக்கே தெரியலை... நான் பண்றதுல்லாம் சரியா தப்பானு கூடத் தெரியலை... உங்களுக்கும் எனக்கும் ஒத்து வருமானு கூடத் தெரியலை..." என்று தன் இயல்பு மாறிப் பேசியவள்...

"என்னை எந்தக் காரணத்துக்காவும் விட்டுட மாட்டீங்களே, அத்தான்?" என்று கண் கலங்க...

"ஏய்..." என்று செல்லமாய்க் கோபப்பட்டவன்... எதைப் பற்றியும் யோசிக்காமல் தன் அரவணைப்பில் கொண்டு வந்தான்.

"ப்ராமிஸா... நான் என்ன தப்பு பண்ணினாலும்... என்னை மன்னிச்சுடுவீங்கதானே...? ஏன்னா... நான் உங்கள மாதிரி யோசிச்சு எதுவும் பண்ண மாட்டேன்... என் மேல ப்ராமிஸ் பண்ணுங்க... ப்ளீஸ்..." என்றவளை முறைத்த விஜய்...

"என் மேல நம்பிக்கை இல்லையா...? சரி போ. தூங்கி ரெஸ்ட் எடு... டைம் ஆச்சு!" என்றவனை அவள் அப்போது விடவே இல்லை. இன்னும் அவனை இறுக்கமாய்ப் பற்றினாள்.

விஜய்க்குத்தான் இப்போது கலவரம் ஆனது. சுற்றிலும் நோட்டமிட்டுக் கொண்டேதான் பேசிக் கொண்டிருந்தான்.

என்ன சொன்னாலும் அவள் போகாமல்... அங்கேயே நிற்க...

"தீக்ஷா... உங்க அம்மா..." என்று விஜய் சொல்ல... தீக்ஷா அப்போதுதான் சுய நினைவுக்கு வந்தவளாய்...

"அய்யோ, அத்தான்... செத்தேன்... கேள்வி கேட்டே கொன்னுடுவாங்க..." என்று வேகமாய் அவனிடமிருந்து தன்னைப் பறித்துக் கொண்டு ஓடிப் போனவளைப் பார்த்துச் சத்தம் வராமல் சிரித்துக் கொண்டிருந்தான் விஜய்... மனமெங்கும் சந்தோசத்தோடு...

வழக்கம் போல் திரும்பிப் பார்த்த தீக்ஷா... மீண்டும் வேகமாய் அவனிடம் திரும்பி வந்து,

"இதைப் பிடிங்க!" என்று கழுத்தில் போட்டிருந்த அவன் செயினை அவனிடமே கழற்றிக் கொடுக்க... விஜய் கேள்விக் குறியோடு பார்க்க...



"எங்க அம்மா இது ஏது... யாரோடதுனு... கேள்வி கேட்டே கொன்னுடுவாங்க... நாளைக்கு வாங்கிக்கிறேன்... நாளையில இருந்து... யாராவது என்னைத் திட்டுனா... நீங்க பார்த்துக்குவீங்கதானே..." என்றவள்...

"என்னை ரொம்ப திட்டிட்டே இருப்பாங்கத்தான் எங்க அம்மா..." என்று அப்பாவியாய் கம்ப்ளெயிண்ட் பண்ண...

'இல்லைன்னா உன்னையெல்லாம் அடக்க முடியுமா?' என்று மனதுக்குள் நினைத்தான் விஜய்... வெளியில் ஒன்றும் சொல்லாமல் இருக்க...

"என்ன சார்... மைண்ட் வாய்ஸ்ல உன்னை யெல்லாம் அடக்க உங்க அம்மாதான் ஏத்த ஆள்னு... திங்க்கிங் ஓடுதா...?" என்று மிரட்ட...

"இப்போ அத்தை தோசைக் கரண்டிதான் வச்சுட்டு நிக்கப் போறாங்க..." என்று போலிக் கலவரம் ஊட்ட...

"சரி சரி... என் வீக் பாயிண்ட்ஸ்லாம் தெரியும் போல... என் செயின் பத்திரம்..." என்றபடி... சுற்றும் முற்றும் பார்த்தவள் அவனுக்குத் தன் முத்தம் என்னும் தண்டனையைக் கொடுத்துவிட்டுப் பறந்தோடிப் போனாள்... அவனின் புயல்.

விஜய்க்குப் புயல் அடித்து ஓய்ந்தாற்போல் இருக்க... சந்தோசமாய்த் தன் அறைக்குள் நுழைந்தான்... நாளைய தினத்தை எதிர்பார்த்து... மனம் இப்போதே ஏங்கத் தொடங்கி இருந்தது.

தீக்ஷா உள்ளே நுழைந்தபோது... அவள் அன்னை இன்னும் வரவில்லை.

'அப்பா தப்பித்தோம்!' என்று படுத்தவள், மறக்காமல் விஜய்யின் மெசேஜை எடுத்துப் பார்த்தவள்... அவன் காதலில் நெகிழ்ந்துதான் போனாள்.

'உங்களை மாதிரிக் கவிதையெல்லாம் எனக்குத் தெரியாது... ஆனால் எனக்கு உங்க காதல் கூட வேண்டாம்... உங்க அருகில்... உங்க அணைப்பில் எப்போதுமே இருக்கணும் அத்தான்...'

அவன் அனுப்பிய கவிதைக்குப் பதில் தன் மனதோடு மட்டும் சொல்லிக் கொண்டவள்... ஜென்ம பந்தமாய் அவர்கள் உறவு தொடர வேண்டுமென்று... தன்னவனின் காதலையும்... அவன் காதல் சொன்ன பார்வையையும்... அவன் மேல் தான் கொண்ட காதலையும் மனதின் அடி ஆழத்தில் நிறைத்தாள்.

எதையும் புயல் போல் செய்பவள்... தன் காதலை... அதன் சுகந்தமான நினைவுகளை... மட்டும் தனக்குள் அடக்க ஆரம்பித்திருந்தாள்... தீக்ஷா...

அதிகாலையிலேயே தீக்ஷா ஜெயந்தியால் எழுப்பப் பட...

அன்றும் தீக்ஷா... "அம்மா... இன்னும் கொஞ்ச நேரம்... ப்ளீஸ்!" என்று சொல்ல... ஜெயந்திக்கு எரிச்சல் வந்தாலும்... வழக்கம் போல் திட்டாமல்... அவளைத் தயார்ப் படுத்தும் பொறுப்பை ராதாவிடம் விட்டபடி...

"இவளுக்கு என்னைக்குத்தான் பொறுப்பு வருமோ...? கடவுளே, அந்தத் தம்பிய நீதான் காப்பாத்தணும்..." என்று தன் குமுறலைக் கடவுளிடம் கொட்டியபடி போனார்.

அதன் பின்... தீக்ஷாவும் தன் அண்ணியிடம் வம்பு செய்யாமல் தன் திருமணத்திற்குத் தயாரானாள்...

கிட்டத்தட்ட முகூர்த்த நேரம் நெருங்கும்போது... தீபன் உள்ளே வந்து தன் மனைவியிடம்,

"ராதா, ரெடியா இருங்க!" என்றபோது... அவனுக்கு மௌனமாய்த் தலை அசைத்தாள் ராதா.



கணவன் - மனைவி இருவரின் விழிகளும் ஒருவரை ஒருவர் உரசிச் சென்றாலும்... அவள் விழிகளில் விரக்தியும்... இவன் பார்வையிலோ பரிதவிப்பும் இருக்க... இருவருமே அவரவர் நிலையில் இருந்து மீளாமல் இருந்தனர்.

தீக்ஷா இருவரையும் கவனிக்காமல் இல்லை... இந்த நான்கு வாரங்களாக... இருவரும் பேருக்கு அனைவரின் முன்னிலையில் பேசிக் கொண்டிருக்கின்றனர். தீக்ஷாவும், இது அவர்களின் பிரச்சனை... தானாகச் சரி ஆகிவிடும் என்றுதான் நினைத்தாள்.

ஆனால் இன்றுவரை... அதே நிலையில்தான் இருக்கிறார்கள் என்றபோது அவளுக்குக் கவலையாக வர... தன் அண்ணியிடம் தனியாகப் பேச வேண்டுமென்று தன்னைச் சுற்றி இருந்த அனைவரையும் வெளியில் அனுப்ப...

ராதா அவளைக் கேள்விக்குறியோடு பார்த்தாள்.

"அண்ணி... முதல்ல என்னை மன்னிச்சுக்கோங்க... நான் உங்க பெர்சனல் விசயத்தில் தலையிடக் கூடாதுதான்... ஆனால்... அதுக்கு மூல காரணமே நான் எனும்போது என்னால பேசாம இருக்க முடியலை...

"என் அண்ணா பண்ணினது தப்புதான்... ஆனா அதுக்காக இப்படி அவன் கூடப் பேசாம அவனைக் கொல்லாதீங்க, அண்ணி... என் அண்ணா பாவம் அண்ணி!" என்ற போது...

"ப்ளீஸ், தீக்ஷா... இப்போ இது தேவையா?" என்று ராதா அவளைத் திசை திருப்ப...

"எனக்கு இது தேவைதான் அண்ணி..." என்றவள்... தன் அண்ணியின் கைகளைப் பிடித்து யாசகம் கேட்பவள் போல...

"அண்ணி... நான் வேறொரு வீட்டுக்கு வாழப் போறேன். பிறந்த வீட்டுச் சீதனமா... எனக்கு என் அண்ணா, அண்ணியோட வாழ்த்துக்கள்... அவங்க நெறஞ்ச மனசோட எனக்கு வேணும். எனக்குத் தருவீங்களா, அண்ணி...?" என்ற வளின் கண்கள் அவளை மீறிக் கலங்கி இருக்க...

ராதா வேகமாய்... "ஹேய்... இது என்ன சின்னப் பிள்ளையாட்டம்...!" என்று அவள் கண்களைத் துடைக்க...

"அண்ணி, ப்ளீஸ்!" என்றவளிடம் ராதாவும் மனம் திறந்தாள்.

"தீக்ஷா... தீபன் அன்னைக்கு இருந்த சூழ்நிலை யில்... என்ன வேணும்னாலும்... என்ன வேணும்னாலும்னா... என்... அண்ணனை அடிச்சிருந்தால் கூட... நான் தப்பா எடுத் திருக்க மாட்டேன். ஏன்... என்னை இனிமேல் என் பிறந்த வீட்டோட... உறவே இருக்கக் கூடாதுனு என்னைக் கூட்டி வந்திருந்தால் கூட எனக்கு இந்த அளவு வலி இருந்திருக் காது, தீக்ஷா... ஆனா என்னை... சுனந்தாவை... அப்படியே விட்டுட்டு வந்தார், தீக்ஷா... அதை என்னால தாங்க முடியலை தீக்ஷா...

"இந்த நிமிசம்வரை என்னால மறக்க முடியலை... எப்படி என்னை அவர் வாழ்நாள் முழுசும் என்னைக் கூட் டிட்டுப் போவார்... என்னை எங்காவது விட்டுட்டுப் போயிடு வாரோனு ஒரு பயம்தான், தீக்ஷா...!" என்றவளிடம் தீக்ஷாவும் தன் அண்ணனுக்காகப் போராடினாள்.

"அண்ணி, உங்களுக்குத் தீபன் மேல காதல் இல்லையா...? அவன் என்னதான் பண்ணினாலும், உங்க காதல் மனசு அவனை மன்னிச்சு விட்டுறாதா...?"

சிரித்தாள் ராதா... "நீ என் அண்ணனை மன்னிச் சுட்டதை மறைமுகமாச் சொல்றியா, தீக்ஷா? ஆனா... என்



அண்ணா உனக்குப் பண்ணியதெல்லாம் அவர் மேல உனக்கு விருப்பம் வருவதற்கு முன்னால்... நீ அவர் பண்ணியதெல்லாம் மறந்து அவரை ஏத்துக்கிட்டது... உனக்கு அவர் மேல காதல் வந்த பின்னால...

"ஆனால், எனக்கு அப்படியா தீக்ஷா...? நீ சொல்லு தீக்ஷா... காதல் வந்த பின்னால என் அண்ணனை... அவர் பண்ணிய காரியங்கள் எல்லாம் உனக்கு... பின்னால போயிருக்கலாம்... என் அண்ணனை நீ விரும்பாமல் இருந்திருந்தால்... நீ அவரை மன்னிச்சிருப்பியா, சொல்லு?"

தன் அண்ணியின் காதல் மனம் கேட்கும் கேள்வி களுக்குப் பதில் சொல்ல முடியாமல் தலை குனிந்த தீக்ஷா, தான் அன்று சுனந்தா பிறந்த நாள் விழாவிற்குப் போகாமலே இருந்திருக்கலாமோ என்றுதான் நினைத்தாள்...

"அண்ணி... எல்லாமே என்னாலதான், அண்ணி..." என்று மீண்டும் தழுதழுத்தவளாய்... "எல்லாமே... என் அவசர புத்திதான் காரணம்... இப்போ நினைத்தாலும்..." என்றவள்...

"ஆனாலும் அத்தான் பண்ணியது தப்புதான்!" என்றவள், "என்னை அடைச்சு வச்சதைச் சொல்லலை... ஆர்த்தியைக் கடத்தினது..." என்று திருத்த...

ராதா, தீக்ஷாவுடனான உரையாடலை நீட்டிக்காமல்,

"லேட் ஆகுது, தீக்ஷா," என்று அவளை அவசரப் படுத்த...

"அண்ணி... நான் கேட்ட சீதனம்..." என்று தீக்ஷாவும் விடாமல் பிடித்த பிடியிலேயே இருக்க...

தீபனுக்குப் போன் செய்தாள் ராதா...

"உங்க தங்கை இங்க பிடிவாதம் பிடிக்கிறா... வந்து என்னனு கேளுங்க..." என்று வேறு எதுவும் பேசாமல் போனை வைக்க...

தீபன் விழுந்தடித்துக் கொண்டு மேலே வந்தான்... தீக்ஷா கீழே இறங்கி வராமல்தான் பிடிவாதம் பிடிக்கிறாள் என்று அவனே கற்பனை செய்து கொண்டான்.

அவன் தீக்ஷா இப்படி ஏதாவது பண்ணுவாள் என்று தான் பயத்தில் இருந்தான்... விஜய்யைப் பழி வாங்க இப்படித் தான் முடிவெடுப்பாளா என்று பயந்து மேலே வர... அங்கு ராதாவும் தீக்ஷாவும் சிரித்தபடி பேசிக் கொண்டிருந்தனர்...

பெருமூச்சை விட்டவன்... ராதாவை முறைத்தபடி தீக்ஷாவை நோக்கி...

"என்ன தீக்ஷா... என்ன பிடிவாதம் பிடிக்கிற...?" என்று கோபமாய்ப் பேச...

"டேய் அண்ணா... உனக்காக... மேக்கப் கூட கலைஞ்சு... கண் கலங்கிப் பேசுனா.... என்னை மொறைக்கிற!" என்று பேச...

ராதாவைப் பார்த்தான் தீபன்...

"நீதானே பிடிவாதம் பிடிக்கிறானு போன் பண்ணின...?" என்று கேட்டவனிடம்...

குனிந்து கிசுகிசுத்தாள் ராதா...

"சுனந்தாவுக்கு அடுத்து அவளுக்கு இன்னொரு மருமகன் வேண்டுமாம்... அதுதான் உங்க அண்ணா சம்மதம் இல்லாம ஓ.கே.னு சொல்ல மாட்டேன்னு சொன் னேன்..." என்று சொல்ல...

தீபன் இப்போது இன்னும் சீறினான். "என்ன ரெண்டு பேரும் விளையாடுறீங்களா...? சீக்கிரம் கிளம்பி வாங்க. ஒரு



நிமிசம் ரெண்டு பேரும் என் வயித்துல புளியக் கரைச்சுட் டீங்க..." என்றவனிடம்,

"டேய் அண்ணா... டீலா நோ டீலா?" என்று தீக்ஷா விடாமல் கலாய்க்க...

ராதா, தீக்ஷா இருக்கிறாள் என்றுதான் ஏதோ பேசிக் கொண்டிருக்கிறாள் என்று நினைத்தவனாய்...

"தீக்ஷா... நீ விஜய் கூடச் சந்தோசமா வாழணும்னு நான் வேண்டாத தெய்வம் இல்லை... நீ என்னடானா இந்த நேரத்தில் கூட விளையாடுற..." என்று அலுக்கும்போதே, கீழே மணமகளுக்கான அழைப்பு வர...

"விஜய் அத்தான் கூடச் சந்தோசமா இருக்கத்தானே மேரேஜ் பண்றேன்... உன்னை மாதிரிப் பொண்டாட்டி கூட மொறச்சுகிட்டு இருக்கிறதுக்கா மேரேஜ் பண்றேன்...?" என்ற தீக்ஷா, தன் அண்ணியிடம் திரும்பி,

"அண்ணி... இவன் சரிப்பட மாட்டான்... அவனை வழிக்குக் கொண்டு வர்றது உங்க பாடு... எனக்காக எங்க அத்தான் வெயிட் பண்ணிட்டு இருக்காரு... வாங்க, போக லாம்... காலையில இருந்து என் ஆளு என்னைப் பார்க்காத ஃபீல்ல இருப்பாரு... என் வேலை முடிஞ்சது... உங்க ஆளைப் பார்த்துக்கங்க..." என்றவள்...

தன் அண்ணனிடம்... "டேய், மரமண்டை... உனக் காகப் பேசி அண்ணியை டைவர்ட் பண்ணி வச்சா... பெருசா சீன் போட்டுட்டு இருக்க... வேஸ்ட்டுடா நீ..." என்றபடி கிளம்ப ஆயத்தமாக...

தீபன் அவளைப் பார்த்து நம்ப முடியாமல் ஆச்சரி யத்தில் விழி உயர்த்த...

"என்னைப் பார்க்காதே... அங்க ஓட்டு உன் ஃபிலிமை..." என்ற போதே, ஜெயந்தி வர...

தீக்ஷாவை அழைத்துக் கொண்டு ராதா மண மேடைக்குக் கிளம்பினாள்.

தன் தங்கையின் கைப் பிடித்து... தோழியர் சூழ... மணமகளாய்... மணமகளின் நாணத்தோடு தலை குனிந்து வந்தவளைக் கண்ணில் நிரப்பிய விஜய்... தான் சபையில்... மணமகனாய் அமர்ந்திருக்கிறோம் என்ற நினைவு வந்து... தன்னவளின் மேல் இருந்த பார்வையினை மீட்டெடுத்தவன்... அவள் தன் அருகில் வந்து அமரும்வரை மீண்டும் அவளை நோக்கவில்லை.

இதை அறியாமல் தீக்ஷா வரும் வழியிலே அவ்வப் போது விஜய்யைப் பார்க்க... அவனோ அவளைப் பார்க்கவே யில்லை.

மனதுக்குள்ளே திட்டிக் கொண்டு வந்து அவனருகில் அமர்ந்தாள் தீக்ஷா.

'இவன் இந்தக் கெத்தை எல்லாம் எப்போதான் விடப் போறானோ!' என்று உள்ளுக்குள் குமுறிய போதே...

"என்னதான் நீ அலங்காரம் பண்ணியிருந்தாலும்... நேத்து என் முன்னாடி வந்து நின்னேல்ல... அதுக்கு மட்டம் தான் தீக்ஷா..." என்று விஜய் கிசுகிசுக்க... தீக்ஷா முறைக்க...

விஜய் அதைப் பார்த்துச் சிரிக்க... அந்த நிமிடத்தை... நிழலாய்த் தனக்குள் உள்வாங்கியது... கேமரா.

தீக்ஷாவின் முறைப்பில்... "இருந்தாலும்... சூப்பரா இருக்கடி... தென், லேசா கண் கலங்கி இருக்கு... என்ன சென்டிமெண்டா...?" என்று பார்வையை மேடையில் வைத்த படி உதடுகளைக் கூட அசைக்காமல் சொல்ல...

தன்னை இந்த அளவுக்குக் கவனித்திருக்கிறானா.... என்று தீக்ஷா விழி விரியத் தன்னவனைப் பார்க்க...



அவனோ... "என்னைப் பார்க்காதே... மணமேடை இது..." என்று கண்களாலே அவளுக்குச் சைகை செய்தான்.

அவனின் வார்த்தைகளற்ற மொழியைப் புரிந்து கொண்டவளாய்... தலையை மட்டும் அசைத்தவள்... மணமகளாய்க் குனிந்தாள்... திருமதி தீக்ஷா விஜயேந்தர் ஆகும் நிமிடத்தை எதிர் பார்த்து...

அந்த மங்கல நிமிடமும் வர... ஒரு முடிச்சைக் கூடத் தன் தங்கைக்குக் கொடுக்காமல்... விஜய் தீக்ஷாவின் கழுத்தில் மங்க நாணைப் பூட்டினான்...

இரு குடும்பத்தினருக்கும்... இந்த நிகழ்வு எப்படிச் சாத்தியமானது என்று நம்ப முடியாமல் இருந்தனர்...

இருவரின் பெற்றோர்களும் ஆனந்தக் கண்ணீரோடு வாழ்த்த... மணமக்களின் உடன் பிறந்தவரோ சந்தோசத்தில் வாழ்த்தினர்.

அங்கு கூடியிருந்த ஒவ்வொருவரும் மணமக்களை வாழ்த்த... மணக்கோலத்தில் இருந்த இரு இளம் உள்ளங் களும்... அத்தனை ஆசிர்வாதங்களையும் தங்கள் இல்லற வாழ்க்கையின் ஆதாரமாக... பூரிப்போடு ஏற்றுக்கொண்டன.

விஜய் தன்னவளை... கண்ணின் இமையாக... அவளை விட்டு நீங்காத நிழலாக... காலம் முழுவதும் காத்து வாழத் தனக்குள் உறுதி கொள்ள...

தீக்ஷாவோ... எதைப் பற்றியும் சிந்திக்காமல், தன்னவனின் அருகில் இருக்கிறோம்... இனி எப்போதும் இருப்போம் என்ற சந்தோசத்தில் மூழ்கியிருக்க...

இளமாறன் என்னும் குள்ள நரி அவர்கள் இருவரின் சந்தோசத்திற்கும்... குழி பறிக்கும் நாளினை எதிர்பார்த்துக் கொண்டிருந்தான்...

# 36

**தி**ருமண உற்சவங்கள் எல்லாம் முடிந்து... தீக்ஷா, விஜய் இருவரும் தம்பதி சகிதமாய்... விஜயேந்தர் வீட்டில் ஒரு நல்ல நேரத்தில் அடி எடுத்து வைத்தனர்...

நெருங்கிய உறவினர்கள் புடைசூழத் தீக்ஷா மாடி அறையில் இருக்க... இனி இருவரும் தனியறையில் சந்திக்கும்வரை... தனித் தனியே இருக்க வேண்டும் என்ப தால்... விஜய் கீழே வந்து விட்டான்.

தீக்ஷாவுக்குத் தனக்கு முதல் இரவு என்பதை விட, விஜய்யை எப்போது இனி பார்க்க முடியும்... அவனோடு பேச முடியும் என்று தவித்துக் கொண்டிருக்க... அப்போது... விஜய்யே தீக்ஷாவைப் போனில் அழைத்தான்.

அவனின் அழைப்பைப் பார்த்ததும்... தனியாகத்தான் பேசத் தன் கணவன் அழைக்கிறான் என்று நினைத்தவளாய், தீக்ஷா வேகமாய்ப் போனை எடுக்க... அவனோ யாரோ ஒரு முக்கியமான உறவினர் வந்திருப்பதாகச் சொல்லிக் கீழே அழைத்தான் அவளை...

பெருமூச்சு விட்டவளாய்... இவனுக்கும் ரொமான் ஸுக்கும் ரொம்பத் தூரம் போல, தீக்ஷா... உன் பாடு கஷ்டம் தான் போல... என்று தனக்குள்ளே சொல்லிக் கொண் டவள்... கீழே இறங்கினாள்.

கீழே விஜய் தன் தந்தையின் அருகில் அமர்ந்து பெரியவர் ஒருவரிடம் பவ்யமாகப் பேசிக் கொண்டிருந்தான்.

அவர்தான் அன்று ராதா திருமணத்தில் விஜய்யிடம் தீக்ஷாவைத் திருமணம் செய்யச் சொன்னவர்.

தீக்ஷாவும் ராதாவுமாய் இறங்கி வர... தீக்ஷாவைப் பார்த்ததும்... அந்தப் பெரியவர் சத்தமாகச் சிரித்தபடி விஜய்யின் தந்தையிடம்... "நான் சொன்னேன்ல, வேந்தா! உன் பெரிய பையனுக்கு இந்தப் பொண்ணுதான்னு...



"நீதான்டா பேரா... ரொம்ப சிலிர்த்துக்கிட்ட..." என்று விஜய்யையும் விட்டு வைக்காமல் சொல்ல...

விஜய் மாட்டிக் கொண்டவனாய் ஒரு அப்பாவிப் பார்வை பார்த்து வைத்தான்.

அப்போது தீக்ஷாவும் அருகில் வர... கேட்டுக் கொண்டேதான் வந்தாள், அந்தப் பெரியவரின் வார்த் தைகளை...

'இவர் எப்போ நம்மைப் பார்த்தார்...' என்ற எண்ண ஓட்டத்துடன்...

"வாம்மா..." என்று பாசத்துடன் அழைக்க,

விஜய், தீக்ஷா இருவருமாய்ச் சேர்ந்து அவர் காலில் விழுந்து ஆசிர்வாதம் வாங்கினர்.

அவரும் மனப்பூர்வமாக... நெஞ்சார... "நான் சொன்ன வாய் முகூர்த்தம் ரெண்டு பேரும் மணக் கோலத்தில் இருக்கீங்க... நீங்க ரெண்டு பேரும்... பதினாறும் பெற்றுப் பல்லாண்டு வாழணும் குழந்தைங்களா...!" என்று வாழ்த்த...

அவரின் வாழ்த்து அந்தக் கடவுளே நேரில் வந்து வாழ்த்துவது போல் இருக்க... மனமார ஏற்றனர் அந்த இளம் உள்ளங்கள்...

அப்போது தீக்ஷா மெதுவாய் விஜய் காதில்...

"அத்தான்... இவர் எப்போ நம்ம ரெண்டு பேரையும் ஜோடி சேர்த்தார்...?" என்று கிசுகிசுக்க...

"அதெல்லாம் 2 வருசத்துக்கு முன்னாலே... ராதா - தீபன் கல்யாணத்தில்..." என்று அவனும் கிசுகிசுப்பாய்ப் பதில் சொல்ல...

"ஓ... அதுதான் அன்னைக்கு டிஸ்கவரி சேனலுக்கு லோகோ போடுற மாதிரி உம்முனு... சுத்திட்டு திரிஞ்சீங் களா...?" என்று வேகமாய்ச் சொல்ல...

முறைத்தான் விஜய்... இவளோ கண் சிமிட்ட...

"பேரான்டி... என்ன சொல்றா என் பேத்தி?" என்று அவரும் அவர்கள் பேச்சில் இடையே பேச...

நம் நாயகியோ அவரின் அருகில் அமர்ந்து...

"இல்ல தாத்தா... உங்க பேர் என்னன்னு அத்தான்கிட்ட கேட்டுட்டு இருக்கேன்... ஏன்னா, எங்களுக்குப் பிறக்கிற குழந்தைக்கு உங்க பேர்தான் தாத்தா வைக்கப் போறோம்..." என்று தலையில் பெரிய ஐஸ் கட்டியையே வைக்க...

அவரும் உச்சி குளிர்ந்தவராய்... "இந்தப் பொண் ணையா... உனக்கு ஒத்து வராதுன்னு சொன்னே விஜய்...!" என்று அவர் உருகிப் போக...

அதைப் பார்த்த ராதா சிரித்தபடி...

"தாத்தா... இதெல்லாம் எப்போ நடந்தது...?" என்று அவரிடம் கேட்க...

"எல்லாம் உன் திருமணத்தில்தாம்மா..." என்றவர், அன்று நடந்ததைச் சொல்ல...

தீக்ஷா அவரிடம், "நீங்க அவர்கிட்ட சொன்னதுக்குப் பதிலா என்கிட்ட சொல்லிருக்கலாம் தாத்தா... இரண்டு வருசம் வேஸ்ட்..." என்று அவர் அருகில் அமர்ந்து பேச ஆரம்பிக்க...

அவரும் தீக்ஷாவின் பேச்சில் கலந்து கொள்ள... விஜய் பார்வையாளனாய் மாறினான்.

கிட்டத்தட்ட... 7 மணி அளவில்...

விஜய்யின் அறையில்... ராதாவும் தீபனும் இருந் தனர்.

தீக்ஷாவின் புகைப்படத்தை அந்த அறையில் அவ ளுக்குத் தெரியாமல் மாட்ட... ஏற்கெனவே எல்லா ஏற்பாடும் செய்திருந்தான் தீபன். அப்படியே அன்றைய இரவுக்கான ஏற்பாடும் அவர்கள் பொறுப்பில் விடப்பட்டிருக்க...



இதுதான் சமயம் என்று தீபன் ராதாவிடம் தன் வேலையைக் காட்டிக் கொண்டிருந்தான்... ஒரு கட்டத்தில் ராதா பொறுக்க முடியாமல்...

"தீபன்... நம்ம ரெண்டு பேருக்கும் ஒண்ணும் இங்க அலங்கரிச்சுட்டு இருக்கலை... வந்தோமா... வேலையைப் பார்ப்போமானு இல்லாம... இது என்ன விளையாட்டு... தீக்ஷா போட்டோவை மாட்டணும்னுதானே இந்த வேலைய நான் கேட்டு வாங்கினேன்..." என்று செல்லமாய்க் கோபிக்க...

தீபனோ... சல்லாபமாக... "அப்படியே டு இயர் பேக் அடிங்க மேடம்..." என்றபடி அருகில் நெருங்க... அவன் மனைவியும் அவனிடம் மயங்க ஆரம்பித்தாள்.

முதலில் கொஞ்ச ஆரம்பித்தவன்... பின் நெகிழ்ச்சி யாக... "சாரி..." என்றவனின் வாயைத் தன் கைகளால் மூடிய ராதா... கணவனின் கைகளில் நெகிழ ஆரம்பிக்க... ஒரு மாதமாய்த் தன் மனைவியை விட்டு விலகியிருந்த கணவ னாகத் தீபன் தன் ஏக்கங்களை அவளிடம் காட்ட ஆரம் பித்தான்.

கதவு தாழிடாமலே இருப்பதை இருவரும் உண ராமல்... தங்கள் மோன நிலையில் இருக்க...

விஜய் எதார்த்தமாகத் தன் அறைக்குள் நுழைய... சட்டென்று விலகினர் இருவரும்.

விஜய்யும்... அவர்களின் நிலை உணர்ந்து... தன்னைத் தானே திட்டிக் கொண்டவனாய் வந்த வழியே மீண்டும் திரும்ப...

தீபன்தான் முதலில் சுதாரித்தவனாய்... "விஜய்..." என்று அழைத்தபடி... விஜய்யின் அருகில் செல்ல...

ராதா... தன் அண்ணன் புறம் திரும்பாமல்... வேகமாய் நகர்ந்து வேலை செய்வது போல் பாவனை செய்ய ஆரம் பித்தாள்.

"விஜய்... தீக்ஷாவோட போட்டோ மாட்ட... அதுதான்..." என்று தட்டுத் தடுமாறித் தீபன் பேச...

விஜய் அப்போதுதான் கவனித்தான்... தீக்ஷாவின் புகைப்படம் ப்ளோ-அப் சைஸில் மாட்டியிருக்க... விஜய் எதுவுமே பேசாமல்.. தலையாட்டியபடி வெளியேறியவன்... சற்றுத் தூரம் சென்று நினைவு வந்தவனாய்...

"ராதா..." என்று அழைக்க... ராதா வந்தாள்...

"என்னோட ரூம்... எப்போதும் போலவே இருக்கட்டும்... இதெல்லாம் வேண்டாம்..." என்று அலங்காரத்திற்கு வைக்கப் பட்டிருந்த பூக்களைச் சுட்டிக் காட்டியவன்... வேகமாய் வெளி யேறியும் விட்டான்...

விஜய் போனவுடன்... "ஆனாலும் உங்க அண்ண னுக்குக் கொஞ்ச நஞ்ச திமிர் இல்ல..." என்ற கணவனை ராதா முறைக்க... அவளின் முறைப்புக்கு எல்லாம் பயப் படாமல்...

"நம்ம எல்லோர் விசயத்திலயும் அவர் முடிவெடுப்பார். ஆனா... அவர் விசயத்தில் யாரையும் தலையிட விட மாட் டார். இந்த அலங்காரம்லாம் பண்ணினா என்ன... என் தங்கைக்கு நான் பண்ணுவேன்..." என்றவன் பிடிவாதமாய்... அலங்கரிக்க ஆரம்பிக்க...

ராதா... அவனின் பிடிவாதத்தில் சற்றுக் கலவரம் ஆன வளாய்...

"என்ன தீபன், இப்படிப் பிடிவாதம்... எங்க அண்ணா கூட இந்த மாதிரி எல்லாத்துக்கும் ஏட்டிக்குப் போட்டியா பண்ணுவீங்களா... என்ன?" - தன் பயத்தைக் கேட்டுவிட...

தீபன் சிரித்தபடி... "ஏய், நீ உடனே சீன் போடாத... சும்மாத்தான் விளையாண்டேன்..." என்று இருவரும் அறையை விட்டு வெளியேற ஆயத்தமாக...



அப்போது ராதா கேட்டாள்...

"தீபன்... எங்க அண்ணா மேல உங்களுக்குக் கோபமே இல்லையா...? எங்க அம்மா தீக்ஷாவைப் பொண்ணு கேட்டபோது... எனக்கே பயமா இருந்துச்சு... எங்க நீங்க... அன்னைக்கு இருந்த சூழ்நிலையில் கோபமா எதுவும் பேசிடுவீங்களோனு...

"ஆனா நீங்க ஒண்ணுமே சொல்லாம... தீக்ஷாகிட்ட சம்மதம் கேட்கச் சொல்லிட்டீங்க... எனக்கே ஆச்சரியம் தான்..." என்றவளை ஆதுரமாய் அணைத்தவன்,

பிறகு தீவிரமாய்ப் பேசினான். "கோபம்தான் ராதா... இன்னும் சொல்லப் போனால்... நிச்சயதார்த்தம் அன்னைக்கு விஜய் வந்தது கூடப் பிடிக்கலை எனக்கு... ஏன்னு தெரி யுமா?" என்றபடி கேள்வியாய் நிறுத்தினான் தீபன்...

ராதாவுக்கு அதற்குப் பதில் தெரியாதா என்ன...! வேக மாய்ச் சொன்னாள்... அதே நேரத்தில் வலியோடு.

"பாப்பா பிறந்த நாள் விழாவில் அவர் பண்ணிய வேலைக்குக் கோபம் வராமல் எப்படி இருக்கும், தீபன்...? கண்டிப்பா அவர் வந்தது உங்களுக்குப் பிடிக்காதுதான்... எங்க அண்ணா பண்ணிய தப்புக்கு அவருக்குப் பதிலா நான் மன்னிப்புக் கேட்கிறேன்..." என்றாள், மனம் முழுக்க ஆதங் கத்தோடு...

தீபன் அவளை அணைத்தபடி, "ப்ச்ச்... பழைய கதையை விடு... உங்க அண்ணா... அன்னைக்கு வரு வார்னு நினைத்தாயா?" என்று மீண்டும் அவளிடமே வினாத் தொடுக்க...

"ம்ஹூம்... எதிர்பார்க்கலை... என் அண்ணனோட இயல்பே அது இல்லை..." என்றவளாய் அவனையே பார்த் திருக்க...

“கரெக்ட்... உனக்கு ஒரு விசயம் தெரியாது... விஜய் என்னைப் பார்க்க என் ஆபீஸுக்கு வந்திருந்தார் ராதா... எங்களை வீட்டை விட்டு வெளியே அனுப்பின அடுத்த நாளே!” என்றவன்... “அதுவும் மன்னிப்புக் கேட்க...” என்று நிறுத்த...

ராதா அதிர்ச்சியாய்ப் பார்த்தாள் கண் கலங்கி...

“எங்க அண்ணா... மன்னிப்புக் கேட்க வந்தாரா... எனக்காகவா...?” என்றபோதே தன் அண்ணன் தனக்காக அவ்வளவு தூரம் இறங்கி வந்தாரா... நினைக்கும் போதே கண்களில் முத்துக்கள் கன்னத்தில் இறங்க...

தீபன் அவளின் அழுகையைத் துடைத்தபடி...

“ஹ்ம்ம்ம்... ஆனால் உனக்காக மட்டும் இல்லை, ராதா... நான் கூட உனக்காகத்தான் இவ்ளோ தூரம் இறங்கி வந்து மன்னிப்புக் கேட்கிறார்னு நினைத்தேன்... ஆனால்... அவர் தீக்ஷாவைப் பார்க்கத்தான் துடித்தார்...

“அவர் கண்களில் அத்தனை வலி... அந்த வலி அவளை அவமானப்படுத்திட்டோம்னு உணர்வில் மட்டும் வந்த வலி இல்லை... அதுக்கும் மேல... தீக்ஷாவைப் பார்க் கணும்னு என்கிட்ட கிட்டத்தட்ட கெஞ்சினார்...

“எனக்குப் பயம் அப்போதுதான் வந்தது. இன்னும் கொஞ்ச நாளில் திருமணம் ஆகப் போகிற பொண்ணுக்காக அவர் வலியோட பேசும்போது... ஒரு அண்ணனா... என் தங்கையோட திருமணம் விஜய்யால நின்னுடுமோன்னு பயந்தேன்...

“உங்க அண்ணாவுக்குத் தீக்ஷா மேல ஏதோ ஒரு ஈர்ப்பு. அது காதலா என்றெல்லாம் எனக்குத் தெரியல... ஆனால் எனக்கு முள் மேல நடக்கிற ஒரு ஃபீல்... தீக்ஷா திருமணம் நல்லபடியா முடிய வேண்டும் என்ற எண்ணம் தான் எனக்கு...



“உங்க அண்ணன் நிலைமை எல்லாம் எனக்குப் பெருசாத் தெரியலை... அவரால தீக்ஷா வாழ்க்கைல மறுபடியும் எதுவும் தப்பா நடந்துடக் கூடாதுனு ஒரே எண்ணம் தான் எனக்கு... ஆனால் எல்லாமே தலைகீழா ஆகிருச்சு...” என்று பெருமூச்சு விட்டவன்...

“அத்தை கேட்டதனாலதான் உங்க அண்ணா ஒத்துக் கிட்டார்னு நினைக்கிறீங்க எல்லோரும்... எனக்கு மட்டும்தான் உணர முடிஞ்சது... உங்க அண்ணாதான் உங்க அம்மா மூலமாகக் கேட்க வச்சிருக்கார்னு... அதுனாலதான் தீக்ஷா கிட்ட முடிவை விட்டுட்டேன்...” என்றவன் சிரித்தபடி...

“நான் எல்லாம் காதலுக்கு மரியாதை செய்றவன் ஆச்சே...! அதுதான் எதுவும் சொல்லலை... அது மட்டும் இல்லை. உங்க அண்ணாக்கு மட்டும் நான் சம்மதம் சொல்லலைனா நீ விட்டுருப்பியா என்ன... மனைவிக்கும் மரியாதை...!” என்று புருவம் உயர்த்தி அவளிடம் கேலியாய்ச் சொல்ல...

“அண்ணனும் தங்கையும் பேசியே ஆளுங்களைக் கவுத்திடுங்க...” என்று அவனிடம் சந்தோசமாய்ச் சலித் தவள்...

“ஆனா தீக்ஷா எப்படிச் சம்மதம் சொன்னாள்...?” என்றவளின் கேள்விக்குத் தீபனிடமும் விடையில்லை.

“என்னவோ ரெண்டு பேருக்கும் இடையில நடந் திருக்கு... அது மட்டும் உண்மை... விட்டுப் பிடிப்போம்... தீக்ஷா மேல எனக்குக் கொஞ்சம் டவுட்டாத்தான் இருக்கு... பழி வாங்கத் திட்டம் ஏதும் தீட்டறாளோனு...

“ஆனா... அவளோட முகத்தில் இருக்கிற சந்தோசம் - அவ அப்படிப்பட்ட எண்ணத்தில இல்லைனு சொல்லுது... இனி... தீக்ஷா, விஜய்யோட மனைவி... விஜய் சமாளிச்சுடு

வாரு..." என்று மணியைப் பார்த்தவன்... "ராதா, லேட்டா கிடுச்சு..." என்று அலற...

ராதாவும், "ஆமாம்... தீக்ஷாவை ரெடி பண்ணி அனுப்ப வேண்டும்..." என்றவளிடம்,

தீபனோ... "நான் அவங்களுக்குச் சொல்லலை, செல்லம்..." என்று வழிய...

முறைத்த ராதாவிடம்...

"அண்ணனும் தங்கையும் மொறச்சே கொன்னுடுங்க எல்லாரையும்...!" என்று தீபன் வம்பளக்க ஆரம்பிக்க...

அவன் திட்டம் புரிந்தவளாய்ச் சுட்டு விரலை உயர்த்திய ராதா... வேகமாய் அவனை விட்டு நகர்ந்து... தீக்ஷாவினைப் பார்க்கச் சென்றாள்.

**வி**ஜய் தன் அறையை ஒரு முறை சுற்றிப் பார்க்க... அவனது அறை அவனுக்கே புதியதாக இருந்தது... அவனைச் சுற்றித் தீக்ஷா இருப்பது போலவே பிரமை அவனுக்கு.

பிரமையே என்றாலும் அது உண்மையே... அவளின் புகைப்படம் தீபனால் மாட்டப்பட்டிருக்க... அதன் எதிர்ப்புறம்... காலையில் திருமணத்தின் போது எடுத்த புகைப்படம் உடனடியாக லேமினேட் செய்யப்பட்டு விஜய்யால் மாட்டப்பட்டிருந்தது.

அதன் முன்தான் விஜய் நின்றிருந்தான்... அப்புகைப் படத்தில்...

விஜய் இதழ் விரித்த சிரிப்புடன்... கண்களில் காதலுடன் இருக்க... தீக்ஷாவோ அவனைக் குறும்பாய் முறைத்தபடி இருந்த புகைப்படம்.

இருவரின் இயல்புக்கு மாறாய் இருந்த புகைப்படம் வித்தியாசமாய் இருக்க... விஜய் உடனே புகைப்படத்தை டெவலப் செய்து... தன் அறையில் மாட்டியும் விட்டான்.



அதற்காக வந்தபோதுதான் தீபனும் ராதாவும் அவனிடம் மாட்டினர்.

அது வேறு ஞாபகம் வர... தன் தங்கையும் அவள் கணவனும் பிரச்சனை எல்லாம் நீங்கிச் சந்தோசமாய் இருந்தது அவனுக்குப் பெரும் நிம்மதியைத் தந்தது என்றே சொல்லலாம்.

கிட்டத்தட்ட அனைத்துப் பிரச்சனைகளும் நீங்கி... அதிலும் தீக்ஷா தன்னிடம் மனம் திறந்த நினைவு இப்போது தித்தித்தது... மனமே இறகு போல் இலேசாக இருப்பது போல் அவனுக்குத் தோன்றியது.

இருந்த உற்சாகத்தில் அவனுக்குத் தன் முன் இருந்த தன் மனைவியின் புகைப்படமே போதும் என்றிருக்க... தன் மனைவியின் நிழலோடு அப்போது பேச ஆரம்பித்தான்.

"தீக்ஷா... எப்படிடி என் மனசுல வந்த...? உன்னை முழுசா என் மனசுல கொண்டு வந்த பின்னால... அப்படியே காத்துல பறக்கிற மாதிரி ஃபீல்டி...!" என்றபடி பேசிக் கொண்டிருக்க...

உள்ளே வந்த தீக்ஷா... அவன் புகைப்படத்தைப் பார்த்துப் பேசிக் கொண்டிருப்பதைப் பார்த்து.... சத்தமில்லாமல் பின்னாலே நின்று... தன் கைகளைக் கட்டியபடி... அவன் பேசுவதைக் கேட்க ஆரம்பித்தாள்.

"என்னை உம்முன்னு இருக்கக் கூடாதுனு சொல்லிட்டு... நீ மட்டும் சிடுமூஞ்சியா போஸ் கொடுத்திருக்க...!" என்ற விஜய்யின் பேச்சினைக் கேட்டவள்...

"என்ன பண்றது... அது சிடுமூஞ்சியோட மனைவி ஆச்சே...!" என்று அவனுக்குப் பதில் சொல்ல...

பின்னால் திரும்பாமலே... "கரெக்ட்தான்... ஆனா இந்த வாயாடியோட புருசன் ரொம்ப சிரிக்கிறானே...!" என்று மீண்டும் புகைப்படத்தைப் பார்த்து விஜய் பேச...

"ஹலோ சார்... என்ன போட்டோ கூடவே குடும்பம் நடத்தத் திட்டமா...?" குரலைக் கேலியாக உயர்த்திக் கேட்டாள், தீக்ஷா.

தீக்ஷா மனதுக்குள் நுழைந்ததைத்தான் கொஞ்சம் தாமதமாய் உணர்ந்தான்.

அதற்காக அவள் தன் அறைக்குள் உள்ளே வருவதைக் கூட உணர முடியாதவனா விஜயேந்தர்... அந்த அறைக்குள் அவள் முதலடி எடுத்து வைத்த போதே அவள் வருவதை உணர்ந்து விட்டான் விஜய்.

அவளின் புகைப்படத்தில் அவளின் இதழைக் கைகளால் தொட்டவன்... "இந்தப் பொண்ணுக்கு ரொம்ப வாய் ஜாஸ்தி..." என்றபடி... தன் பின்னால் நின்ற அவளை இழுத்துத் தன் முன் நிறுத்திய விஜய்...

"பேசுற வாய்க்குத் தண்டனை கொடுக்கலாமா...?" என்றபடி, அவளின் அருகே நெருங்கியவனிடம்...

"ஓ! தாராளமா... ஆனால் வாழ்நாள் முழுதும் ஒரு நொடி கூட உங்களால தண்டனை கொடுக்கிறதை நிறுத்த முடியாது... வசதி எப்படி... எனக்கு ஓ.கே... அங்க எப்படி...?" என்று கொஞ்சம் கூடத் தயங்காமல் சொன்னவள்... அவனைத் தன்னோடு இழுக்க...

விஜய்தான் இப்போது தடுமாறிக் கிறங்கிப் போனான்.

"பொண்ணாடி நீ... என்னை ஆட்டிப் படைக்க வந்த ராட்சஷிடி..." என்று விஜய் அவளிடம் கிசுகிசுக்க...

அவன் மார்பில் சாய்ந்தவள்...

"ராட்சஷனுக்கு ராட்சஷிதான் பொருத்தமான ஜோடி... அத்தான்...!" என்றவளைத் தன்னோடு அணைத்தபடி அந்தப் புகைப்படத்தோடு சாய்ந்தவன்... அந்தக் கணத்தை அனுபவித்து இருக்க...



அவனின் அமைதி உணர்ந்து... அவனை நிமிர்ந்து பார்க்க...

"என்னை மன்னிச்சுட்டியா, தீக்ஷா...? இந்தக் கணம் நிஜமானு என்னால நம்பவே முடியலை..." வேதனையோடு தழுதழுத்தான் விஜய்.

திடுக்கிட்டுப் பார்த்தாள் தீக்ஷா...

"அத்தான்..." என்றவளின் குரலில் இருந்த குறும்புத்தனம் எல்லாம் நீங்கி நெகிழ்ச்சியாய் வார்த்தைகள் வர...

"உன்னை மாதிரி ஒரு பொண்ணெல்லாம் எனக்கு அதிகம், தீக்ஷா... என்னை எப்படி மன்னித்துத் திருமணம் செய்ய ஒத்துக்கிட்ட...? தப்பு செய்தவனுக்குத் தண்டனை கிடைக்காமல் வரம் கிடைச்சிருக்கு... நான் ரொம்ப அதிர்ஷ்ட சாலி, தீக்ஷா...!" என்றவன் மனமாரச் சொல்ல...

தீக்ஷாவுக்கும் அன்றைய ஞாபகங்கள் வர...

"அத்தான், அதை மறந்துடுங்க... நம்ம வாழ்க்கைல அந்த நாளை ஒரு கெட்ட கனவா நினைத்து மறந்திடுவோம்... ப்ளீஸ்..." என்றவளிடம்,

மறுப்பவனாய்த் தலை அசைத்தான் விஜய்...

"மறக்க மாட்டேன் தீக்ஷா... ஏன்னா... அந்த நாள் தான் நான் என் காதலை உணர்ந்த நாள்... காதலோட வலியை உணர்ந்த நாள்..."

விஜய் உணர்ச்சி வசப்பட்டுச் சொல்ல... தீக்ஷா புரியாமல் பார்த்தாள்...

"என்ன பார்க்கிற...?" என்றவனிடம்,

'உங்க பார்வையை விடக் கம்மிதான்...' என்று மனதுக்குள்ளே சொல்லிக் கொண்டவள்... அவன் சொல்ல ஆரம்பித்ததைக் கவனிக்க ஆரம்பித்தாள்.

"ஆனால் காதலை உணர்ந்த நாளே... நீ நல்லா இருக்கணும்னு என் மனசுக்குள்ளேயே என் காதலைப் புதைச்சுக்கிட்டேன், தீக்ஷா... ஆனா உன் மன்னிப்பு மட்டும் எனக்குக் கிடைத்தால் போதும்னு... உன் அண்ணனைப் பார்க்கப் போனேன்.

"தீபன் உன்னைப் பார்க்க விடலை... அதனால்தான் உன்னோட ரூமுக்கு வந்தேன்... என் நல்ல நேரம் அந்த ராகேஷ் வராமல் போய்... எனக்கு என் தேவதை கிடைச் சுட்டா..."

விஜய் சொல்லி முடிக்கவில்லை...

"ராகேஷ் வராம போய்ட்டார்னு நான் உங்களை மேரேஜ் பண்ணிக்கிட்டேன்னு நினைக்கிறீங்களா அத்தான்...?" என்றவளை விஜய் நம்ப முடியாமல் திகைப்பாய்ப் பார்த்தான்.

வேகமாய்க் கேட்டான்.

"என்னை... என்னை... உனக்கு ஏற்கெனவே பிடிக்குமா தீக்ஷா...?" என்றவனிடம்,

இல்லையென்று இட வலமாய்த் தலை அசைத்தாள், தீக்ஷா.

"உங்களை எனக்கு... என் அண்ணியோட அண்ணனா எப்போதுமே பிடிக்கும்... அந்த வகையில் யாரிடமும் விட்டுக் கொடுக்க மாட்டேன்... ஆனால் சில விசயங்கள்...

"சரி, விடுங்க... ராகேஷ் வந்திருந்தாலும், அந்த நிச்சயம் நின்றிருந்திருக்கும்... நானே நிறுத்தியிருப்பேன்... ஏனென்றால்..." என்றவள்...

அன்று நடந்ததை... ராகேஷ் கடிதத்தை... இவனின் பார்வையில் மொத்தமாய் வீழ்ந்ததை... ஒன்று விடாமல் சொல்ல...



"உண்மையா, தீக்ஷா...? என்னால நம்பவே முடியல... என் கண்ணைப் பார்த்து..."

அவனால் அதற்கு மேல் பேசவே முடியவில்லை...

தீக்ஷா சிரித்தபடி, "பவர்ஃபுல் ஐஸ் தான் அத்தான், உங்களுக்கு... இதில் கோபம்... எரிச்சல்... ஏளனம்... ஆத்திரம்... பாசம்... எல்லாமே உணர்ந்தவளுக்கு... அதில் இருக்கிற காதல் மட்டும் தெரியாதா...? கண்டு பிடிச்சுட்டோம்ல.

"அதில் விளையாட்டும்... அதே நேரத்தில் உணர்வும் சரிவிகிதத்தில் இருந்தது... இருந்தும் இப்போ அந்தக் கண் ணிலே வேற ஏதோ இருக்கே..." என்று அவனை வம்பிழுக் கவும் மறக்கவில்லை தீக்ஷா.

மணமகளாய் இந்த இரவில் ஒரு பெண்ணுக்கு இருக்கும் தயக்கம் எதுவும் இல்லாமல்... தன்னோடு வம்பளக்கும் தீக்ஷாவைப் பார்த்து வாய்விட்டே சிரித்து விட்டான், விஜய்..

"என்ன இருக்கு... அதையும் கண்டுபிடிச்சுச் சொல்லிடு."

அவள் சொல்லாமல் விட்ட அவன் கண்களின் தாபம் அவன் வார்த்தையில் மட்டும் இன்றி அவன் விரல்களிலும் சரசமாட...

அதை உணர்ந்த தீக்ஷா அவனை விட்டு விலக எத்தனிக்க... அவள் விலகலை உணர்ந்தவனாய்...

"சரி... சரி... ஒண்ணும் பண்ணலை..." என்று தன் அத்துமீறலை நிறுத்தி... மீண்டும் தன்னோடு அணைக்க... விஜய் அவளிடம் கேட்டான்.

"நீ என்னோட காதலை என் கண் மூலம் உணர்ந்த மாதிரி... என்னோட காதலை எனக்கு உணர வச்சது எது தெரியுமா?"

"ப்ச்... இந்தப் பொண்ணை ரொம்ப அசிங்கப்படுத்திட் டோம்னு பாவம் பார்த்து வந்திருக்கும்..."

விளையாட்டாய்ச் சொன்னாலும் அவளையும் மீறி வார்த்தைகள் வேதனையாய் வர...

"பாவம் பார்த்தோ... பரிதாபப்பட்டோ காதல் வருமா, தீக்ஷா...? உன்கிட்ட இருக்கற ஒரு பவர்ஃபுல் தான் காரணம்!" என்று அவள் இதழைத் தன் கைகளால் சுட்டிக் காட்டியவன்...

"சும்மா கூட இந்தப் பாணம் என் மேல பாயலடி... சாயம்லாம் பூசி ஒரேயடியா சாய்ச்சுடுச்சு..." கண் சிமிட்டினான் விஜய்...

தீக்ஷாவுக்குப் புரியவே இல்லை. "என்ன சொல்றீங்க அத்தான்...? சுத்தமா ஒண்ணுமே புரியவில்லை."

"புரியலையா... சொல்றேன்..." என்றவன்... "ம்ஹும்... சொல்றதை விட, மேடமே பாருங்க... நீங்க செஞ்ச திருவிளை யாடலை..." என்றபடி...

தான் பத்திரப்படுத்தி வைத்திருந்த அவன் சட்டையை அவளுக்கு எடுத்துக் காட்ட...

முதலில் பார்த்தவளுக்கு... அதில் அப்படி என்ன இருக்கிறது என்று தெரியவில்லை. சற்று உற்றுப் பார்க்க... இப்போது அதில் இதழ்களின் லேசான ஒற்றல் இருக்க... அவன் ஏன் அன்று, தான் அணிந்திருந்த சட்டையைக் கழற்றிய காரணம் விளங்க... விஜய்யைப் பார்த்தவளின் கண்களில் முத்துக்கள் கோக்க ஆரம்பித்தன.

"இதனாலதான் சட்டையைக் கழட்டுனீங்களா, அத்தான்...? நான் உங்களைப் போய் ரொம்பக் கேவலமா நினைச்சுட்டேன், அத்தான்..." என்று கேவிக் கேவி அழ ஆரம்பித்தவள்...



"நீங்க ரொம்ப நல்லவங்க அத்தான்...!" என்று மூக்கை உறிஞ்சியபடி அவனோடு சாய்ந்து... மீண்டும் அழ ஆரம் பிக்க...

"ஹேய் லூசு...!" என்று அவளின் இடையைச் சுற்றி வளைத்தவன்... "உன் அத்தான் நீ நினைக்கிற அளவுலாம் நல்லவன் இல்லை... கொஞ்சம் அயோக்கியன்தான்... இல்லேனா... இங்க இருக்கிற மச்சத்தை யெல்லாம் பார்ப் பேனா..." என்று தீக்ஷாவின் கழுத்துக்குக் கீழே இருந்த மச்சத்தைத் தொட்டுக் காட்டியபடி... அவளை இறுக்கி அணைக்க...

தீக்ஷா எதுவுமே பேசவில்லை... மௌனமாகவே இருந்தாள்...

"ஹேய்... தீக்ஷா! இப்போ சொல்லு. நான் நல்லவனா கெட்டவனா?" என்று சீண்ட...

"ஹ்ம்ம்... ஆன்டி-ஹீரோ..." என்றபோது தீக்ஷாவும் சகஜமாகி இருந்தாள்.

"அய்யோ! ஆன்டி-ஹீரோவா... அது யாரும்மா...? நான் இந்த வாயாடி தீக்ஷாவோட அப்பாவி ஹீரோ..." என்றவனை முறைக்க... "ஓ.கே... ஓ.கே... அப்பாவில்லாம் கிடையாது..." என்றவன்... கொஞ்சல் பாதி கெஞ்சல் பாதியாய்க் குழைந்த படி...

"என்ன இப்படியே பேசி நேரத்தை ஓட்டிடலாம்னு பிளானோட வந்திருக்கியாடி... எத்தனை நாள் ப்ளான்..." என்றபடி கட்டிலை நோக்கி நகர...

அவன் குறும்புக்கார மனைவியோ அந்த இடத்தை விட்டு நகராமல் நிற்க...

விஜய் திரும்பிப் பார்த்தான்.

திரும்பிப் பார்த்தவனிடம்... அவனை நோக்கிக் கைகளை நீட்டியபடி தீக்ஷா நின்றிருக்க...

அவள் அருகில் மீண்டும் வந்தவன்... தனக்குத் தானே பேசிக் கொள்வது போல்...

"இதுக்குத்தான் ஓவர் கெத் காட்டக் கூடாதுடா, விஜயேந்தர்..." என்று பெருமூச்சு விட...

"தூக்குங்க அத்தான்..." என்று செல்லமாய்ச் சிணுங்கினாள் தீக்ஷா.

"இருடி..." என்றவன்... தன் சட்டையின் கைப்பகுதியை முழங்கை வரை மடித்தவன்... கட்டியிருந்த பட்டு வேஷ்டியை முழங்கால்வரை மடித்துக் கட்டியவன்... தன்னவளைப் பூப் பந்தாய்த் தூக்கி... ஒரு சுற்றுச் சுற்ற... தீக்ஷா அவன் இதயத் துடிப்பாய்க் கலந்துவிடத் துடித்தாள்தான், அவனின் அன்பில்...

தன் காதருகில் ஒலித்த அவனின் இதய ஒலியைக் கண் மூடித் தன் காதுகளின் வழியே தன் இதய ஓட்டத்தோடு... தன் உடலின் நாடி நரம்புகளில் கலக்கவிட்டாள்.

எத்தனை ஜென்மம் எடுத்தாலும்... இந்த ஒலியும்... இவனின் தீண்டலும் போதும்... தன்னவனைக் கண்டு பிடித்து அவனோடு சேர்ந்து விடும் நம்பிக்கை அவளிடம் வந்திருந்தது... அந்த அளவிற்குத் தன் இதயத்தை அவனிடம் இழந்திருந்தாள் தீக்ஷா.

தீக்ஷா என்ற அந்த விளையாட்டுத்தனம் நிரம்பிய பெண்... வெளியில் குறும்பாய்த் தெரிந்தாலும்... தன் மனதில் தன் கணவனின் காதலை... அதன் ஆழத்தை... தன் மனதின் ஆழத்தில் சேகரித்துக் கொண்டே இருந்தாள்.

உணர்வுகளின் தாக்கத்தில் தன்னவள் போய்க் கொண்டிருப்பதை உணர்ந்த விஜய்யின் கைகளிலும் அவளுக்கு ஈடாய் அழுத்தம் கூட...



குரலில் காதல் வழிந்தோட... "இந்தர்... ஐ லவ் யூ!" என்றாள் தீக்ஷா.

அவளின் காதலில்... விஜய் அவளைத் தன்னோடு இன்னும் இறுக்கமாக அணைக்க...

"அத்தான்... இந்த நிமிசம்... இந்த நொடி... இப்படியே செத்துடலாம்னு இருக்குத்தான்... இறந்தால் கூட... உங்க கையிலதான் சாகணும் அத்தான்... இதுக்குப் பேர்தான் காதலா அத்தான்...?" என்றவளின் பிதற்றலான வார்த்தைகளில்...

"லூசுதான்டி நீ... இந்த வாய் இருக்கே... இப்போதான் வாழ்க்கையையே ஆரம்பிச்சிருக்கோம்... உடனே சாவைப் பத்திப் பேசுற...!" என்றவன் வார்த்தைகளில் அதட்டலும் இருக்க, அதையெல்லாம் கண்டு கொள்ளாதவளாய்...

"இந்தர்..." என்றாள் தாபமாய்.

"ஹ்ம்ம்..." என்றான் விஜய்யும் அதை விடத் தாபமாய்.

"நீங்க பாடுவீங்கதானே... எனக்காக ஒரு பாட்டு, ப்ளீஸ்..." என்றவள் இன்னும் கண் திறக்காமல் தான் இருந்தாள்.

"அடிப் பாவி... இவ்ளோ நேரம் பேச்சு... இனி பாட்டா!" என்றவன் கட்டிலில் சாய்ந்து தன்னவளையும் தன்னோடு சாய்க்க...

"ப்ளீஸ்!" என்று கெஞ்சலாய் அவள் முடிக்கவில்லை... விஜய் கண் மூடி வாய் திறந்தான்... தீக்ஷா அவன் குரலில் உருகித்தான் போனாள்.

"புத்தம் புதுப் பூப் பூத்ததோ
எண்ணங்களில்தான் தேன் வார்த்ததோ
மொட்டவிழ நாள் ஆனதோ
சொல்லடி என் செல்லக் கிளியே

வாய் பேசும் வார்த்தை எல்லாம்
கண் பேசும் அல்லவோ!
கண் பேசும் வார்த்தையைத்தான்
கண்ணீரும் சொன்னதோ

பால் நிலா தேய்கின்றதென்று
பகல் இரவும் என் நெஞ்சம்
பழி விழுமோ என்றஞ்சும்!

ஆதவன் நீ தந்ததன்றோ
நிலவு மகள் என் வண்ணம்
நினைவுகளில் உன் எண்ணம்
கருணை கொண்டு நீதான்

காயம் தன்னை ஆற்ற
பார்வை கொண்டு நீதான்
பாச தீபம் ஏற்ற
உயிரென நான் கலந்தேன்

புத்தம் புதுப் பூ...

வாழ்வென்னும் கோலங்கள் இன்று
அறிந்தது உன் பொன் உள்ளம்
நெகிழ்ந்தது என் பெண்ணுள்ளம்
ஈதிசை பூபாளம் என்று
எழுந்தது பார் நம் கானம்
விடிந்தது நம் செவ்வானம்
கூந்தல் மீது பூவாய்
நானும் உன்னைச் சூட
தோகை உன்னை நான்தான்
தோளில் இன்று வாங்க
உனக்கென நான் பிறந்தேன்!"



பாடி முடித்தவனின் கண்களின் ஓரத்தில் ஈரம் இருக்க... தன் இதழால் அவன் கண்ணீரைத் துடைத்து விட்ட தீக்ஷா... அவனிடம்,

"அத்தான்... ப்ளீஸ்... அன்னைக்கு நடந்த விசயத்தை விட்டு வெளியில் வாங்க..." என்றவளிடம்,

"ஹ்ம்ம்... மறக்க முடியல தீக்ஷா...! என் மேல கோபமே இல்லையாடி உனக்கு...?" என்ற விஜய்யால் இன்னும் அவளின் காதலைக் குற்ற உணர்ச்சி இல்லாமல் ஏற்றுக் கொள்ளவே முடியவில்லை.

தீக்ஷாவுக்கு அவனை அந்த நினைவுகளில் இருந்து எப்படி வெளி வர வைப்பது என்றும் தெரியவில்லை.

"எனக்குக் கோபம்லாம் இருந்தது, அத்தான்.. ஆனால் தெரியலை... எப்படிப் போனதுன்னு... கோபம் இருந்த இடத்தில் எல்லாம் காதல் வந்து நிரப்பியிருச்சுத்தான்... அதிலும் இந்த நெத்தியில வலிக்கும் போதெல்லாம் உங்களை செம திட்டு திட்டி இருக்கேன்... ரொம்ப வலி அத்தான்..." - என்றவளின் நெற்றியில் ஒத்தடமாய்த் தன் இதழை ஒற்றி னான் விஜய்.

"கொஞ்சம் மெதுவாத் தள்ளி விட்டுருக்கலாம்... கட்டில்ல முட்டிட்டேன்..." - சாதாரணமாகச் சொன்னாள் தீக்ஷா அன்று...

"என்ன தண்டனை வேண்டுமென்றாலும் கொடு... உன் இந்தர் அதை வாங்கிக்கத் தயாரா இருக்கேன்...!" என்றவன் குரல் உண்மையிலேயே அவள் என்ன தண்டனை கொடுத்தாலும் ஏற்கும் மன நிலையில் இருக்க...

காலம் அவனுக்குத் தகுந்த தண்டனையை அவள் மூலமாகவே கொடுக்கக் காத்திருப்பது தெரியாமல்... தீக்ஷா வும் தண்டனையை இதழ்களால் கொடுக்க ஆரம்பித்தாள்.

விஜய் அவளிடம்... "தண்டனை கூட உனக்கு ஒழுங்கா கொடுக்கத் தெரியலடி...!" என்று கிண்டல் செய்தவன்...

கடுமையான தண்டனை கொடுக்கும் வழிகளை அவளுக்குக் கற்றுக் கொடுக்க ஆரம்பித்தான், அவள் வழியிலேயே போய்.

தீக்ஷாவும் அதில் முதலில் மூழ்கி... பின் திணற ஆரம்பித்தவள்... "இந்தர்! இன்னும் கொஞ்ச நேரம் பேசிட்டு இருக்கலாமா...?" என்றவளை நம்பித் தலையாட்ட...

பேச ஆரம்பித்த தீக்ஷா... இள வயது திருச்சி போய்... தற்போதைய சென்னை வந்து முடித்திருக்க... விஜய் அயர்ந்தே போய் விட்டான்.

அவள் பேச்சை எப்படி நிறுத்துவது என்று யோசிக்க ஆரம்பித்தவனிடம்...

"ப்ச்... நான் பாருவை ரொம்ப மிஸ் பண்றேன், அத்தான்..." என்று குரல் கம்மச் சொல்ல...

"லூசு மாதிரி... அவன் அண்ணன் பண்ணினான்னா நீ உன் ஃப்ரெண்ட் கூடப் பேசி இருந்திருக்கலாம்..." என்று சொல்ல...

"பேசி இருந்தா... அவளே கேட்டுருப்பா... என் அண்ணனைப் பிடிச்சுருக்கா, இல்லையானு. நான் பதில் சொல்லி இருக்கணுமே... என்னமோ தெரியலை... அவங்க அண்ணனைப் பிடிக்கலைனு சொல்லப் பிடிக்கலை..."

முறைத்தான் விஜய்.

"உண்மையிலேயே, அத்தான்... பாரு அண்ணா ரொம்ப நல்லவங்க..." என்றபோதே... விஜய்யின் உக்கிர முறைப்பில்... அவனைப் பார்த்தபடி...

"நான் லூசு மாதிரி உளறல... ஒருத்தரைப் பிடிக்கிறது வேற... காதல்னால பிடிக்கிறது வேறனு... உங்க மேல காதல்னு ஒண்ணு வந்த பின்னால்தான் உணர்ந்தேன்..." என்றவள்... விஜய்யின் கோபம் முகம் மாறாமல் இருப்பதை உணர்ந்து...



"ஆனால் அத்தான்... ஒரு நல்ல பையன் மேல வராத காதல்... இந்த சிடுமூஞ்சி... கோபக்கார... விருமாண்டி... விஜய் மேல எப்படி வந்துச்சுனுதான்... தெரியலை..." என்று கண் சிமிட்ட...

கோபம் நீங்கிச் சிரித்த விஜய்...

"கதவைத் திறந்து விடறேன்... வெளியில இருக்கற வங்ககிட்ட கேட்டுச் சொல்றியா...?" என்று நக்கலாய்ச் சொல்ல,

"அவங்ககிட்ட எல்லாம் ஏன் கேட்கணும்...? என் இந்தர் சொல்ல மாட்டானா...?" என்றவளுக்குப் பதில் சொல்ல ஆரம் பித்தான், தன் உடல் மொழியால்...

அவன் சொன்ன பதிலை எல்லாம் தீக்ஷாவும்... தட்டுத் தடுமாறிப் புரிய முயற்சிக்க... விஜய் மெதுவாய் அவளறியாமலே அவளை ஆள ஆரம்பித்தவன்... தங்கள் வாழ்க்கையின் அடுத்த கட்டத்திற்குத் தன்னவளையும் கூட்டிப் போக, அப்போது தீக்ஷா வேகமாய் அவனைத் தள்ளி விட்டு எழுந்தாள்.

அவளின் எதிர்பாராத விலகலில்... விஜய் அதிர்ந்து நோக்க...

அவளோ, "அத்தான்... நான் அறியாப் பிள்ளை இல்லைதான்... ஆனா நீங்க நினைக்கிற மாதிரி எல்லாம்... தெரிஞ்ச பிள்ளை இல்லை... அதுனால..." என்று அப்பாவி யாய்ச் சொல்ல...

உண்மையிலேயே முறைத்த விஜய்... "கஷ்டம்டி..." என்று தலையில் அடிக்காத குறையாக நொந்து சொல்ல...

அப்போதும் அடங்காத தீக்ஷா... "உன்னைக் கட்டிக்கப் போறவன் சொல்வான்னு சொன்னீங்கல்ல, அத்தான்... அதுதான் இதுவா...?" என்றவளின் இதழ்ப் பேச்சுக்கு... விஜய்யின் வலிமையான உதடுகள்... வேலை மாற்றம் கொடுக்க... தீக்ஷாவின் இதழ்களும்... பேச்சுப் பணியை மட்டுமின்றி... அவன் இட்ட பணியையும் செவ்வனே நிறை வேற்றி மீள...

அவளின் காதில், "இன்னும் கொஞ்ச நேரத்தில் தெரிஞ் சுடும்... நீ அறியாப் புள்ளையா... இல்லை, எல்லாம் அறிஞ்ச புள்ளையா...?" என்றவன் புயலுக்கே புயலை அறிமுகப் படுத்த... தீக்ஷா என்னும் அந்தப் பெண் புயல் தன் கணவ னுக்காக உருமாறி... சூறாவளியையும் சமாளிக்கும் நாண லாய் வளைந்து கொடுக்க ஆரம்பிக்க...

அவர்கள் இருவரின் வாழ்க்கையிலோ காலம் என்னும் புயல் தன் மையத்தை நிறுத்தியது.

நடக்கப் போவது ஏதும் அறியாமல்... தன்னை முழுவதுமாய்த் தன் கணவனிடம் ஒப்படைத்த தீக்ஷா... பூரண திருப்தியுடன் அவனோடு ஒன்றித் துயில ஆரம்பிக்க... முழுவதுமாய்த் தன்னவளாகிப் போனவளை... உறங்கும் போது கூடப் பிரிய மனமில்லாமல்... தன் கை வளைவிலேயே வைத்தபடி உறங்க ஆரம்பித்தான், அவளின் மணவாளன்.

## 37

அந்த வளாகம்... இரவின் நிசப்தத்தில் மருத்துவ மனைக்குரிய அமைதியைத் தாங்கி இருக்க... விஜய் தன் கைகளில் ஒரு பெண்ணைத் தாங்கி இருந்தான்.

முகமெங்கும் கோரமாய்... உயிருக்குப் போராடிக் கொண்டிருக்க... விஜய் மனமெங்கும் வலியோடு... அவன் கண்களில் தேடல்... தேடல் மட்டுமே இருக்க... அவனை



விட்டுத் தூரமாய்... வெகு தூரமாய்... தீக்ஷா கண் மூடிக் காட்சி தர... அவளைப் பார்த்தபடியே... அவளை நோக்கிப் போனவனின் கண்களில் சந்தோசம் இல்லை.

தன் கையில் இருந்த பெண்ணை அப்படியே விட்டுப் போகவும் மனம் இல்லாமல்... தீக்ஷாவினை நோக்கிப் போக... அவளுக்கும் அவனுக்குமான இடைவெளி அதிக மானதே தவிர... இடைவெளியும் குறையவில்லை.... அவளை நெருங்கவும் முடியவில்லை.

தன்னை விட்டு விலகி விலகிப் போனவளின் கொடுமை தாள முடியாமல்... 'தீக்ஷாஆஆ...' என்று அலறியபடி எழுந் தான் விஜய்... ஆனால் அவனால் எழ முடியவில்லை.

தீக்ஷா அவன் தோளில் சாய்ந்து படுத்திருக்க... தன் கண்களை விரித்து... தன்னருகே உறங்கிக் கொண்டிருந்த தீக்ஷாவைப் பார்த்த பின்னும் விஜய்க்கு அந்தக் கனவின் தாக்கம் குறையவே இல்லை...

மீண்டும் மீண்டும் தன்னவளைத் தொட்டுப் பார்த்த வனுக்குத் தீக்ஷா தன்னருகில்தான் இருக்கிறாள்... என்று முழுவதுமாய் நம்பிய பின்னேதான் பெரு நிம்மதி வந்தது.

தன்னவளை இன்னும் தன்னோடு இறுக்கி அணைத்துக் கொண்டவன்... கண்ணிமைக்காமல் தீக்ஷா வையே பார்த்தபடியே இருந்தான்.

புது மணப் பெண்ணுக்கு இருக்கும் வழக்கமான பொலிவோடு... நேற்றைய இரவில் தன்னோடு ஒன்றாகிப் போன நினைவில் உடலெங்கும் நாண ரேகைகள் ஓடி... அவள் முகத்தைச் சிவக்கச் செய்திருக்க... அதைப் பார்த்தபடி இருந்த விஜய்யின் முகத்திலோ இப்போது கவலை ரேகைகள் ஓடி, அவன் முகத்தை வெளிறச் செய்தன... இப்போது வந்த கனவின் நினைவுகள்!

இத்தனை நாள்வரை எப்போதாவது வரும் அதே தெளி வற்ற கனவுதான்... இன்று அதன் தெளிவை... அதன் காட்சியைக் காட்ட... விஜய்க்கு நினைக்க நினைக்கப் பயங்கர மாய்த் தலை வலிக்க ஆரம்பித்து இருந்தது.

இத்தனை நாள் தெளிவாய்த் தெரியாத காட்சிகள்தான் அவனைக் குழப்பின... என்ன கனவு என்று தெரியாமல் குழம்பியவனுக்கு... இன்று கனவின் காட்சிகள் தெரிந்தாலும் அதன் காரணம் புரியவில்லை.

தீக்ஷாவுக்கு ஏதோ தீங்கு... என்பது மட்டும் தெள்ளத் தெளிவாகத் தெரிந்தது... அது மட்டும் இல்லை... தங்கள் திருமண வாழ்க்கையில்... தங்கள் வாழ்க்கையைத் தொடங் கிய முதல் இரவிலேயே ஏன் இந்தக் கனவு... இதற்கு முன் கூட இரண்டு மூன்று முறை வந்தது என்று யோசித்த வனுக்கு...

ஓரளவு விளங்கியது... அவனின் விபரம் அறியாத வயதிலேயே அவனுக்கு இரண்டு முறை இதே போல கனவு... அதற்கும் தீக்ஷாவுக்கும் சம்பந்தமிருக்குமா என்றெல்லாம் அவனுக்குத் தெரியவில்லை...

ஆனால்... தீக்ஷாவை முதன்முதலாய்ப் பார்ப்பதற்கு முன், அதன் பிறகு... தன் வீட்டில் முதன் முதலாய்க் காலடி எடுத்து வைத்தபோது... அதன் முந்தைய நாள்...

தீக்ஷாவை முதன் முதல் பார்த்தபோது, அவள் முதன் முதல் தன் வீட்டுக்கு வந்தபோது... இப்போது... இப்போது அவளோடு வாழ்க்கையை ஆரம்பித்தபோது... விஜய்க்குள் கலவரம் அதிகமாகத் தொடங்கி... அவன் உடல் அவனை யுமறியாமல் நடுங்கியது.

"இது என்ன கனவு... என்னை விட்டு உன்னை எங்கேயும் போக விட மாட்டேன்டி... ஆனா பயமாயிருக்கே,



தீக்ஷா..." என்று தனக்குள் அரற்றியவனின் மனமும் உடலும் அதிர்ச்சியில் நடுங்கத்தான் செய்தது.

கனவாக இருந்த போதிலும், தன் கையில் இருந்த இன்னொரு பெண் தீக்ஷா இல்லை என்று மட்டும் அவனால் நன்றாக உணர முடிந்தது.

அந்தப் பெண் யார்... என்று ஒருபுறம் யோசிக்க ஆரம்பித்தவனுக்கு... அவன் இருந்த படபடப்பில் தொடர்ந்து யோசிக்கக் கூட முடியவில்லை.

ஏதோ ஒரு கனவு என்றும் விட முடியவில்லை... குழப்ப மாய் உழன்றவனுக்குத் தூக்கம் சுத்தமாய்த் தொலைந்து போக...

அப்போது அலாரம் சத்தமாய் அடிக்க ஆரம்பிக்க... விஜய்க்கு எங்கு அடிக்கிறது என்றே தெரியவில்லை...

கட்டிலின் அருகே இருந்த மேஜையின் மேல் இருந்த தீக்ஷாவின் மொபைல் அடித்துக் கொண்டிருந்தது.

"இந்தக் கும்பகர்ணி... 5 மணிக்கு அலாரம் வைத்து எழுவாளா... நம்ப முடியவில்லையே...!" கிண்டலாக எண்ண ஆரம்பித்தவனுக்குக் கனவின் தாக்கம் மெல்லக் குறைய... எழுந்து ஆஃப் செய்வாளா... என்று தீக்ஷாவைப் பார்க்க... அவளோ கொஞ்சம் கூட அசையவில்லை.

'சரி, தானாவது எழுந்து போய் அணைப்போம்,' என்று அவளை நகர்த்தி எழப் போக...

அவளோ... "இந்தர்... எங்க போறீங்க...?" என்று தூக்கத்திலேயே கேட்டாள்.

"அலாரம் அடிக்குதும்மா... உன் பக்கம் இருக்கு... ஆஃப் பண்ணு..." என்றவனிடம்,

"ப்ச்... எனக்குத் தூக்கம் வருது... நீங்களே ஆஃப் பண்ணிடுங்க..." என்றவளின் பதிலில்...

"உன்னையெல்லாம் திருத்த முடியுமா...?" என்றவன், அவளை விட்டு எழப் போகத் தடுத்து நிறுத்திய தீக்ஷா... அவன் மேலே புரண்டு அந்தப் பக்கம் போக...

இப்போது அவளின் போனை எடுத்து அணைத்த வனுக்குச் சற்று முன் வந்த கனவின் அச்சம் அவனிட மிருந்து போய்... தீக்ஷாவும் தூங்கவில்லை என்பது புரிய... மனைவியிடம் தன் வேலையை ஆரம்பித்தான்.

"தீக்ஷா... தூக்கம் வரலை. பேசிட்டு இருப்போமா...?" என்று வலை விரிக்க...

தீக்ஷாவாவது மாட்டுவதாவது...!

"நீங்கதானே... நல்லாப் பேசுவீங்க... உங்க வாய் பேசுமா... இல்லை, கை பேசுமான்னு எனக்கு மட்டும்தான் தெரியும். எனக்குத் தூக்கம் வருது... நீங்களும் தூங்குங்க... காலையில எல்லோர் முன்னாடியும் தூங்கி விழுந்துடா தீங்க...!" என்று அவனுக்கு வேறு அறிவுரை கூற...

"எல்லாம் நேரம்..." என்று முணுமுணுத்தவனைத் தன்னோடு கட்டிக் கொண்ட நாயகியின் அணைப்பில்... தலை வலி போய் மீண்டும் உறக்கம் தழுவியது.

**தீ**க்ஷா விழித்தபோது மணி எட்டு.

லேசாய்க் கண் திறந்து பார்க்க... அவள் முன் விஜய் அவளைப் பார்த்தபடி அமர்ந்திருந்தான்.

"குட் மார்னிங் அத்தான்..." என்றவளிடம்...

"மணி எட்டு!" என்று விஜய் பதிலாய்ச் சொல்ல...

"குட் மார்னிங் சொன்னா... பதிலுக்கு குட் மார்னிங் சொல்லணும், அத்தான்..."

சொன்னவளுக்கு அதன் பின்தான் அவன் சொன்ன எட்டு மணி ஞாபகம் வர... வேகமாய் எழுந்து உட்கார்ந் தவள்... தலையில் கை வைத்தவளாய்...



"என்னது, எட்டு மணியா...? அலாரம் வச்சேனே... அதை நீங்க ஏன் ஆஃப் பண்ணுனீங்க... இப்போ பாருங்க, லேட்... சாரி சாரி..." என்று அவனுக்குப் பயப்படுவது போல் பாவனை காட்ட...

அவளைக் குளியலறைக்குள் தள்ளிய விஜய்... அவளிடம் வம்பு செய்யவும் தவறவில்லை.

அதன் பின் தீக்ஷா தயாராக ஆரம்பிக்க... புது மணமகனாய் விஜய்யும் தன் லீலைகளை ஆரம்பிக்க... அதற்கெல்லாம்... புது மனைவியாகச் சமாளித்தவள்... அவனிடம் கேட்டாள்.

"விஜய் அத்தான்... 5.30க்கெல்லாம் எழுந்துடு வீங்கள்ல... யுகி சொல்லி இருக்கான்... எக்சர்சைஸ் பண்ண கொஞ்சம் லேட்டா வந்தால் கூடத் திட்டுவீங்களாம்... பாவம் என் ஃப்ரெண்ட்!" என்றபடி, அவன் கேசத்தைத் தன் கைகளால் கலைக்க...

தன் மடியில் இருத்தியபடி... "சார் உங்ககிட்ட கம்ப் ளெயிண்டா..." என்றவன்... "விஜயேந்தர்க்குக் கோபம் வரும்... ஆனால் தீக்ஷாவோட இந்தருக்கு வராது..." என்றவன், கண் சிமிட்டியபடி... சொன்ன காதல் வார்த்தை களில்... லேசாய் வெட்கப்பட... அவளை ரசித்தபடி...

"விஜய் அத்தான் எப்படிம்மா இந்தர் ஆனான்...?" என்று அவள் மூக்கோடு தன் மூக்கை உரசியவன்... அதே வேகத்தில்...

"அம்மா கோவிலுக்குப் போகணும்னு கீழே வரச் சொன்னாங்க... போகலாமா?" என்று அவளைத் தன்னோடு அணைத்தபடி வெளியே வர... ஞாபகம் வந்தவனாய்...

"தீக்ஷா, ஒரு விசயம்..." என்று தயங்கியவன்... "த்ரீ மன்த்ஸ்... என்னால எங்கேயும் நகர முடியாது. என்னோட

ட்ரீம் ப்ராஜெக்ட்... அதுக்காகக் கொஞ்சம் வொர்க் பண்ண வேண்டும்... சோ, புரிஞ்சுக்கோ... அதனால இந்த..." என்று இழுக்க...

தீக்ஷா அவன் அந்த வாக்கியத்தை முடித்தாள்.

"இந்த ஹனிமூன்... அது இதெல்லாம் என்கிட்ட எதிர் பார்க்கக் கூடாது..." என்று அவனைப் போலவே பேசிக் காட்டியவள்... இன்னும் தொடர்ந்தாள்.

"அதுக்கப்புறம் இந்த புராஜெக்ட் ஓ.கே. ஆகிருச்சுமா... சோ இதை நல்லபடியா முடிச்சுக் கொடுக்கணும்... அதனால நிறைய உழைக்கணும்னு அடுத்து சொல்வீங்க... இப்படியே அடுத்த ப்ராஜெக்ட்... உங்களைப் பத்தித் தெரியாதா... ஆனால் நான் உங்க பொண்டாட்டின்கிறதை மட்டும் மறக்காம வச்சுக்கோங்க..." என்றவளிடம்...

"சரிங்க மேடம்... வேணும்னா... உங்க பேரை இங்க எழுதிடுங்க..." என்று தன் நெஞ்சைத் தொட்டுக் காட்ட...

அவன் சொன்ன அடுத்த வினாடி...

"தீக்ஷா, விஜய்..." என்று கைகளால் எழுதி முடித் தவள்...

"இப்போதைக்கு இது போதும்... தேவைப்பட்டால்... பச்சை குத்திடுவேன்... பி கேர்ஃபுல்..." என்றபடி கை காட்டிச் சிறு குழந்தை போல் மிரட்ட...

அவளுக்கு விஜய்யும் பயந்தவனாய் நடிக்க...

"இது... இந்தப் பயம் இருக்கட்டும், என் இந்தர்க்கு!" என்று அவள் சிரிக்க...

விஜய்யும் அவளின் சிரிப்பில் கலந்தவன்... வெளியே வந்த பின் அவளை விட்டு விலகி நடக்க...

தீக்ஷாவோ அவனை விடாமல்... அவன் கைகளோடு கோத்தபடி வர...



விஜய்... "இந்த வீட்டில்... நீ நான் மட்டும் இல்லை..." என்று கீழே காட்ட...

இருவரின் குடும்பமும் இருவருக்காகக் காத்துக் கொண்டிருக்க... மனமில்லாத போதும்... நாகரிகம் கருதி... விஜய்யின் கைகளைத் தீக்ஷா விடப் போக... அவள் உணர்வைப் புரிந்த விஜய்... தன் சுண்டு விரலை மட்டும் அவளிடம் கொடுக்க... சந்தோசத்தில் தீக்ஷா தன் இதழை அவன் முகத்தில் பதித்து... அதே வேகத்தில் எடுத்திருந்தாள்.

அவள் இதழ் பதித்த அதிர்ச்சியில்... அதை அனுபவித் தானோ... இல்லையோ... யாரும் பார்த்து விட்டார்களோ... என்று விஜய் வேகமாய்க் கீழே பார்க்க... நல்ல வேளை யாரும் பார்க்கவில்லை... நிம்மதிப் பெருமூச்சு விட்டவன்... அவளை முறைக்க...

அவளோ, "இதெல்லாம் புதுசா கல்யாணமானவங் களுக்குச் சகஜம்.. இப்போதானே உங்களுக்கு மேரேஜ் ஆகி இருக்கு. பழகிடும்... வாங்க..." என்று கொஞ்சம் கூட அலட்டல் இல்லாமல் அலட்சியமாய்ச் சொல்லியபடி நகர...

அவளின் அதிரடியான செய்கையில் அடைந்த அதிர்ச்சியில் விஜய் அங்கேயே நிற்க... அவனையும் இழுத்துக் கொண்டு நடக்க ஆரம்பித்தாள் தீக்ஷா.

படிகளில் இறங்கும் போது விஜய்... தன்னை மீட்டெடுத்த விஜய்... வழக்கமான விஜய்யாய்க் கம்பீரமாய் நடக்க...

தீக்ஷாவுக்கு அனைவரையும் பார்த்த பின்னால்... நாணம் வர... சற்றுப் பின் தங்கியே வர... கீழே இருந்தவர் களின் மனங்களோ மகிழ்ச்சியில் நிறைந்தது.

ஜெயந்திக்கு மட்டுமே கொஞ்சம் பயம் இருந்தது... இப்போது தீக்ஷாவின் முகத்தில் இருந்த சந்தோசமும்...

அதில் இருந்த பூரிப்பும்... பார்த்தவளுக்கு... நிம்மதியில் உள்ளம் கூத்தாட... அன்னையாய்க் கண்களில் ஆனந்தம் வர... தன் அருகில் வந்த தன் மகளை... அன்போடு அணைத்தார்.

தன் அன்னையிடம் சாய்ந்தபடியே... "ஹேய் வைஜெயந்தி ஐ.பி.எஸ்... என்ன திட்டாம... என்னையே பார்த்துட்டு இருக்கீங்க..." என்றவளைத் தன் கைகளால் நெட்டி முறிக்க...

"அத்தை... உண்மையைச் சொல்லுங்க... இனி இவ தொல்லை இல்லைன்னுதானே ஆனந்தக் கண்ணீர் வடிக் கிறீங்க..." என்று யுகி கிண்டல் செய்ய...

தன்னைக் கிண்டல் செய்த யுகியை விடுவாளா...!

வேகமாய் ராதாவிடமிருந்த சுனந்தாவினை வாங்கிய தீக்ஷா... "சுனோ செல்லம்... அத்தை சொல்றதைச் சொல் லுங்க... ஏ ஃபார்... ஆ..." என்று ஆரம்பிக்க...

கிண்டல் செய்து கொண்டிருந்த யுகி, சட்டென்று அடங்க... நிறுத்தினாள் தீக்ஷாவும்.

விஜய்க்கும் சுரேந்தருக்கும்... யுகியின் அமைதி புரிய... தீக்ஷா அவனைக் கிண்டல் அடித்ததின் மூலம்... தீக்ஷாவுக்கும் யுகியின் காதல் தெரிந்திருக்கிறது என்பதும் விளங்கியது.

விஜய் மட்டும் தன் மனைவியை நினைத்துப் பெரு மிதம் அடைந்தான்...

நேற்று இரவு... அவ்வளவு பேசியவள்... ஒரு வார்த்தை கூட யுகியின் காதல் பற்றி தன்னிடம் வாய் திறக்கவில்லை அவள்... நட்பின் ரகசியத்தைக் கணவனிடம் கூட வெளிப் படுத்தாமல் இருக்கும் தன் மனைவியின் குணத்தை நினைத்து அவனுக்குப் பெருமையாகத்தான் இருந்தது...



இருந்தும்... அவளாகச் சொல்லும்வரை... தானும் வாய் திறக்கக் கூடாது என்று முடிவெடுத்த விஜய்... சுற்றம் மறந்து தன்னவளையே பார்த்துக் கொண்டிருக்க...

தீக்ஷாவும் அவன் பார்வையை உணர்ந்தவளாய்... நிமிர்ந்து பார்த்தவள்... ஆட்கள் சுற்றி இருக்கிறார்கள் என்று கைகளால் சைகை செய்ய...

'இங்கே வா!' என்று விஜய்யும் அவளைப் போலவே கண்களால் சைகை செய்ய...

இருவரின் மௌன மொழிகளை அங்கு யாரும் கவனிக்கவில்லை. சேருமிடம் மட்டுமே அடைய... தீக்ஷா அதைப் புரிந்து அவனருகில் வந்து அமர... பேச்சு மொழி இன்றி... மௌன மொழியின் அத்தியாவசியத்தை விஜய்... என்கின்ற இந்தருக்கு உணர்த்த ஆரம்பித்திருந்தாள் அவன் மனைவி...

நாட்கள் வாரங்களாக... வாரங்கள் ஓடி... மாதம் ஒன்றும் முடிந்திருக்க... விஜய் - தீக்ஷா இருவரும் ஒருவரின் மேல் ஒருவருக்கு இருந்த காதலை ஏதாவது ஒரு வகையில் புரிந்து கொண்டும்... உணர்த்திக் கொண்டும்... தங்கள் காதல் வாழ்க்கையை அனுபவித்துக் கொண்டிருந்தனர்...

அன்றைய தினம்... விஜய் எப்போதும் தாமத மாகத்தான் வருவான்.

வழக்கம் போல் அவனுக்காகத் தீக்ஷா காத்துக் கொண்டிருக்க...

அவனுக்குப் பதில் குறுஞ்செய்தி வந்திருந்தது. தனக் காகக் காத்திருக்க வேண்டாம் என்று... இருந்தும் அவனுக் காகக் காத்திருக்க... விஜய்யும் சுரேந்தரும் சேர்ந்தே வந்தனர்.

வந்த இருவரின் முகமுமே சரியாக இல்லை... ஏதோ பிரச்சனை என்று தீக்ஷாவுக்கும் புரிய... அவளின் முகத் திலும் கவலை ரேகை தானாக வர... தன் கணவனைப்

பார்க்க... விஜய்யோ வேகமாய்த் தன் அறைக்குச் சென்று விட... தீக்ஷாவும் அவன் பின்னே சென்றாள்.

தன்னை ரெஃப்ரெஷ் செய்து கொண்டு வெளியே வந்தவனைப் பார்க்க... முதலில் இருந்த இறுக்கம் எல்லாம் விஜய்யிடம் இப்போது இல்லை... இவளைப் பார்த்துப் புன்னகைக்க...

"ஏதாவது பிரச்சனையா அத்தான்...?" என்று கவலையோடு விசாரித்தவளைத் தன்னருகே இழுத்தவன்...

"பிரச்சனைதான்... பட் பெருசா இல்லை..." என்றவனின் ஈரமான வெற்று மார்பில் சாய்ந்தவள்...

"உங்களுக்காக நான் வெயிட் பண்ணிட்டு இருக்கேன்... நீங்க வெளியில சாப்பிட்டு வந்திட்டீங்க. உங்க மேலே தீக்ஷா கோபமாக இருக்காத்தான்..." என்று செல்லம் கொஞ்சியவளிடம்,

"சாரி..." என்றவன், அவளை விலக்கியபடி, "சுரேந்தர் கிட்டே பேசணும்... லேட் ஆகும்மா. வெயிட் பண்ணாமல் சாப்பிட்டுத் தூங்கு தீக்ஷா," என்றவன், அவனது அலுவலக அறைக்குச் செல்லத் தயாராக...

"சுரேந்தர் அத்தானுக்கும் உங்களுக்கும் பிரச்சினையா அத்தான்...? அவர் முகமும் சரியாக இல்லையே...!" என்றபோதே, அவள் குரலில் கலக்கம் அதிகமாய் ஆக,

"அவனுக்கும் எனக்கும் பிரச்சினையா? இது வேற விஷயம்... இளமாறன் விஷயமாக. நான் சமாளிச்சிருவேன்... நீ நல்ல பிள்ளையாத் தூங்கு..." என்றவனிடம்,

தலை சாய்த்துக் கண் சிமிட்டியவள்,

"நல்ல பிள்ளையாத் தூங்கிடுவேன்... எழுப்பக் கூடாது," என்ற கோரிக்கை வைத்தபடி குறும்பாய் அவனிடம் வம்பிழுக்க...



"வாயாடி..." அவள் இதழ்களைத் தன் கையால் சுண்டியவன்,

"இந்த நல்ல பிள்ளையை எப்படிக் கெட்ட பொண்ணா மாத்தறதுன்னு இந்த வாயாடிப் பொண்ணோட இந்தருக்குத் தெரியும்..." என்றவன், அவளின் இதழில் தன் இதழைப் பதித்து... விட்ட போது... கிறக்கத்தில் அவனோடு ஒன்றிய வளிடம்,

"ஜஸ்ட் ஒன் ஹவர்டா... வெயிட் பண்ணுவீங்கதானே மேடம்...?" என்றபோதே,

"ஒன் ஹவர் தான். இல்லை... நல்ல பொண்ணு, உங்க தம்பி முன்னாடி கெட்ட பெண்ணாகி விடுவேன்..." என்று மிரட்டித்தான் வெளியே அனுப்பினாள் தீக்ஷா.

**வி**ஜய் முன் சுரேந்தர் அமர்ந்திருந்தான். சுரேன் கோபமாக இருப்பதை, அவனின் முகமே விஜய்க்குக் காட்ட,

"டேய்... இப்போ எதுக்குடா இவ்வளவு டென்ஷன் ஆகுறே...? நான் இளமாறன் கிட்டே பேசிட்டேன்டா. அவன் மேல் எந்தத் தப்பும் இல்லைடா... அவனும் ஃபீல் பண்ணினான். இனிமேல் எச்சரிக்கையா இருக்கேன்னு சொல்லி இருக்கான்டா..." என்று அவனின் கோபத்தைத் தணிக்கும் வகையில் பேச,

எரிச்சலும் கோபமும் வந்து விட்டது சுரேந்தருக்கு.

"ஏன் அண்ணா... இன்னுமா அவனை நம்புறீங்க...? நாலு பில்டிங்குக்காக வாங்கிய மெட்டீரியல்ஸ்லேயும் தரமில்லை. அதைக் கண்டு பிடிக்க முடியாதபடி ஒவ்வொரு ப்ராஜெக்ட்லேயும் வேறு வேறு மெட்டீரியல்ஸ். அது எப்படிண்ணா அவனுக்குத் தெரியாம இருக்கும்? நேருக்கு நேரா மோதுற தீனா கூடப் பரவாயில்லண்ணா... இவன் சரி இல்லை. ஏன் புரிஞ்சுக்க மாட்டேங்கிறீங்க...?

"நான் மட்டும் கண்டு பிடிக்காமப் போயிருந்தா... நீங்க இத்தனை நாள் வாங்கி வெச்சிருந்த பேர் எல்லாமே எங்க ளாலே போயிருக்கும். விஜய் பில்டர்ஸ் பேர்ல இருக்கிற நம்பிக்கையைக் காப்பாற்ற வேண்டியது என் பொறுப்பு அண்ணா..." என்று முடிக்கும் போது, சுரேந்தர் நெகிழ்வாய் இருக்க...

விஜய் பில்டர்ஸ் உருவானதே போட்டியில்தான். தனக்கும் தீனாவுக்குமான நட்பு போய், அவனுடனான போட்டியில்... விஜய்க்கு இப்போது நினைத்தாலும் மனம் கனத்தது. தீனாவின் நட்பு, இனி அது ஒருபோதும் கிடைக் காது என்றாலும், தீனாவின் நட்புக்காக மனம் ஏங்கத்தான் செய்தது.

தீனா போதையில் பேசிய வார்த்தைகளைப் பிடித்துக் கொண்டு, அதை மறக்காமல் அவனுக்குப் போட்டியாக விஜய் பில்டர்ஸை ஆரம்பித்து... வேதனை தாங்க முடியாமல் கண்களை மூடிய விஜய்க்கு, அவன் மனைவியின் குணம் நிழலாடியது. தீக்ஷாவின் குணம் மட்டும் அவனுக்கு இருந் திருந்தால், ஒரு நல்ல நட்பை இழந்திருக்க மாட்டான்தான்.

இனி நினைத்து என்ன பிரயோஜனம்? இப்போதும் இவன் மனம் வைத்தால் கூட, தீனாவுடனான நட்பு மீண்டும் உருவாகலாம். தீக்ஷா மாதிரி மன்னிப்போம், மறப்போம் என்ற குணமா இவனுக்கு...! அவன் ஈகோ அவனைக் கீழே இறங்க விடவில்லை.

இப்போது இளமாறனின் நட்பு...! ஏனென்று தெரிய வில்லை... தான் அவனுக்கு வாக்குக் கொடுத்து, அதைக் காப்பாற்ற முடியாத போதெல்லாம்... இளமாறன் இவனின் நட்பை விடாமல், இவனோடு இருக்கிறான் என்ற எண்ணமே... விஜய்க்கு அவனின் நட்பை விட முடியாமல் தவிக்க விட, சுரேந்தரோ இன்று அவன் மேல் புகாரோடு வந்து நிற்க, கொஞ்சம் தடுமாறினான்தான் விஜய்.



இளமாறனிடம் பேசி விட்டான். ஆனால், அவனுக்கே தெரியாமல் நடந்த தவறுக்கு, பாவம், இளமாறன் என்ன செய்ய முடியும்? அதைச் சொன்னால் சுரேந்தர் புரிந்து கொள்ள மாட்டேன் என்கிறானே என்று வேதனைப் பட்டான் விஜய்.

ஒரு வழியாகச் சுரேந்தரைச் சமாதானப் படுத்தி யவன்...

"இனிமேல் இது மாதிரி நடந்தால், கண்டிப்பாக இளமாறனோட பார்ட்னர்ஷிப்பைப் பற்றி யோசிப்போம்டா... எடுத்தோம் கவிழ்த்தோம்னு முடிவெடுக்க வேண்டாமே... என்னாலே ரெண்டு முறை பாதிக்கப்பட்டவன் சுரேன்..." என்று சொல்லிப் பார்க்க,

"அண்ணா... உங்க முடிவு எதுவாக இருந்தாலும், நான் இது வரை மறுத்துப் பேசியிருப்பேனா...? ஆனா, இளமாறன் எனக்குப் பிடிக்கலை. எனக்குப் பிடிச்சவங்களைக் கூட உங்களுக்காக விட்டுக் கொடுப்பேன்... ஆனால், பிடிக் காத இளமாறன் கூட முடியலைண்ணா. எனக்கு நடிக்கத் தெரியாது. ப்ளீஸ்... நான் அவனோடு சேர்ந்து இனி வொர்க் பண்ண மாட்டேன்..." என்று பிடிவாதமாய் மறுத்து விட்டான், சுரேந்தர்.

விஜய் எவ்வளவோ எடுத்துக் கூறியும், சுரேந்தர் கேட்கவே இல்லை. இளமாறனுக்காகச் சுரேந்தரை விட்டு விட முடியுமா? இதற்கு நல்ல தீர்வு எடுக்க முடிவு செய்தவன்,

"சரி... இனி இளாவோடு சேர்ந்து பண்ண வேண்டாம். நம்ம ப்ராஜெக்ட்ஸ் எல்லாம் தனியாக நீயே பாரு..." என்று சொல்ல, சுரேந்தர் நிம்மதி ஆனான்.

அதன் பிறகு இருவரும் சகஜமாகி... தற்போது நடந்த தவறினால் தடைப்பட்ட வேலைகளை எல்லாம் சரிக்கட்டுவது என்று சுரேந்தர் விவாதிக்க ஆரம்பிக்க...

விஜய்யோ, சுரேந்தர் அறியாமல் தன் கைக் கடிகாரத்தைப் பார்க்க, தீக்ஷா சொன்ன ஒரு மணி நேர அவகாசத்தை எப்போதோ கடந்து போய் இருந்தான் விஜய். ஆனால், சுரேந்தரிடம் அதைச் சொல்லாமல்... சொல்ல முடியாமல்... சுரேந்தர் சொல்வதை எல்லாம் கேட்டுக் கொண்டிருந்தான் அவஸ்தையாய்.

அப்போது எதேச்சையாய் நிமிர, தீக்ஷா அறை வாசலில் முறைத்தபடி நின்று கொண்டிருந்தாள். விஜய், கண்களினாலே அவளிடம் அவகாசம் கேட்டவனாய், சுரேந்தரிடம் என்ன சொல்லி இங்கிருந்து கிளம்பலாம் என்று யோசிக்க ஆரம்பிக்க,

தீக்ஷாவோ, அவனிடம் சைகையில் பேச ஆரம்பித்தாள்.

ஒன்றரை மணி நேரம் கடந்து விட்டது என்பதை, ஒரு விரலை உயர்த்திக் காட்டி... அதில் பாதியை மறு விரலால் வெட்டிக் காண்பிக்க,

இவனோ, அவளுக்குப் பதில் சொல்ல முடியாமல் விழித்தபடி இருக்க... ஒரு கட்டத்தில் சுரேன், ஏதோ சந்தேகம் என்று ஃபைல்களில் பார்வையை ஓட விட, அந்தச் சந்தர்ப்பத்தில் விஜய், தீக்ஷாவிடம் கெஞ்சினான்.

'5 மினிட்ஸ் போதும்...' என்று விரல் குவித்துக் கெஞ்சிக் கொஞ்சி, அவளை அந்த இடத்தை விட்டுப் போகச் சொல்ல, அவளோ போகாமல் முரண்டு பிடித்துக் கொண்டிருந்தாள்.

அவன் கவலை அவனுக்கு. எங்கு சுரேந்தர் முன்னால் ஏதாவது செய்து விடுவாளோ என்று. சுரேந்தர் இன்று இருக்கிற கடுப்பில், அவ்வளவுதான். நினைக்கும்போதே நிமிர்ந்த சுரேந்தரிடம்,

விஜய் பேச ஆரம்பிக்கப் போக...



"அண்ணா... அந்த ஃபைல் இது இல்லை. என் ரூம்ல இருக்கு போல... நாம நாளைக்குப் பேசலாமா?" என்று கேட்க,

நிம்மதியாய் ஆன விஜய், பெருமூச்சு விட்டபடி, வேகமாய்த் தலை ஆட்ட, சுரேந்தர் வெளியேறினான், உள்ளுக்குள் சிரித்தபடி.

வெளியில் அறை வாசலில் நின்று கொண்டிருந்த தீக்ஷா, அந்த அறையில் இருந்து வெளியே வந்த சுரேந்தரைப் பார்த்து, "குட் நைட் அத்தான்... அப்புறம் தேங்க்ஸ்," என்று குறும்பாய்ச் சொல்ல,

சுரேந்தர் அவளிடம், "மேடம்... சைகையில பேசுறதெல்லாம் சரிதான்... ஆனால், எனக்கு முன்னால இருந்த ஜன்னல் கண்ணாடியைப் பார்க்கலையா...?" என்று நக்கலாய்ச் சொல்ல,

தீக்ஷாவா அசருபவள்...

"சுரேன் அத்தான்... ஜன்னல் கண்ணாடி தெரியாமலா சைகை பண்ணினேன்...? தெரிஞ்சுதான் பண்ணினேன். என் ஆளு நான் சொன்ன வுடனே அப்படியே வந்துருவாரு பாருங்க... என்ன சொல்றதுன்னு இன்னும் யோசிச்சுட்டு இருப்பாரு... நீங்க அப்படியா? கண்ணாடியில் பார்த்தினாலேதானே இப்போ கிளம்புறீங்க... ஸ்மார்ட் சுரேந்தர் அத்தான்ல நீங்க..." என்று பெரிய ஐஸ் கட்டியை அழகாய்த் தூக்கி வைக்க,

இதுவரை முகத்தில் இருந்த கடுமை எல்லாம் போய்ச் சிரிக்க ஆரம்பித்தான் சுரேந்தர்.

"அப்போ... தெரிஞ்சே பண்ணினியா...?" என்றவன், "உன்னை..." என்று போலியாய் மிரட்டியவன்,

"பாவம் எங்க அண்ணா... அவரை இந்தப் பாடு படுத்துறே...!" என்றபடி,

"போ... தலைவர் வெயிட்டிங். நான் வேறே டென்ஷன் பண்ணிட்டேன்... கூல் பண்ணு!" என்றவன், வேகமாய் அவளைக் கடந்து செல்ல, தீக்ஷா உள்ளே நுழைந்தாள்.

விஜய், அவன் இருக்கையிலே கண் மூடி அமர்ந்திருக்க... அறைக் கதவை மூடியவள்,

அவன் மடியில் அமர... கண் மூடியபடியே அவளைத் தன்னோடு சாய்த்தவனிடம்,

"என்னத்தான்... ரொம்ப டென்ஷனா இருக்கீங்களா...?" என்று கேட்க,

"ப்ச்... அதெல்லாம் இல்லை..." என்று பெருமூச்சு விட்டவன்,

"கொஞ்ச நேரம் பேசாம இரு," என்று அவளை அணைத்தபடியே அமர்ந்திருக்க,

"பேசாம இருக்கணுமா? அது மட்டும் என்னால முடியாதுப்பா... அதை ஸ்டாப் பண்ணணும்னா, என் இந்தராலே மட்டும்தானே முடியும்? விஜய், எப்போ இந்தர் ஆகப் போறீங்க...?" என்று அவனின் தற்போதைய நிலையை மாற்ற முயல,

"இந்த தீக்ஷா பக்கத்தில் இருந்தாலே இந்த விஜய் இந்தர்தான்டி..." என்றவன், தன் கவலையை எல்லாம் ஒதுக்கி வைத்தவன், வேகமாய் எழ, தீக்ஷாவோ அங்கேயே நின்று கொண்டிருக்க,

"என்ன...?" என்று பார்வையை வீசினான் அவள் கணவன்.

"எக்ஸ்ட்ரா அரை மணி நேரம் வெயிட் பண்ணிட்டு இருந்தேன்ல... கால் வலிக்குது அத்தான்..." சிணுங்கியவளிடம்,



பதில் ஏதும் பேசாமல், அப்படியே அவளை அள்ளியவன், தன் அறையில் வந்து படுக்கையின் அருகில் இறக்கி விட,

"அத்தான்... இப்போதெல்லாம் நீங்க தூக்கித் தூக்கி, நடந்து போகவே பிடிக்க மாட்டேங்குது..." என்றவள் வாயிலேயே செல்லமாய் இரண்டு அடி போட்டவன்,

"மவளே... யாரும் இல்லைன்னு உன்னைத் தூக்கிட்டு வந்தா... நீ இன்னும் பேசுவே, இதுக்கு மேலேயும் பேசுவே... உன்னை..." என்றவனிடம்,

"ஏன்...? யாரும் இல்லைன்னாதான் தூக்குவீங்களா? எல்லோருக்கும் முன்னால் உங்களை நான் தூக்க வைக்கவா...?" என்று சவாலாய்க் கேட்க,

"அது மட்டும் நடக்காது மேடம்..." என்றவனிடம்,

"ஹலோ சார்... கண்டிப்பா நடக்கும். பார்க்கலாமா...?" என்று அவனோடு வீம்பாய்ச் சொல்ல,

"நடக்காத ஒண்ணைப் பத்தியெல்லாம் பேசக் கூடாது, கண்ணம்மா..." என்று இவனும் சளைக்காமல் போட்டி போட... அவனைச் சிரித்தபடி பார்த்தவள்,

"நான் இறந்து போயிட்டேன்னா... என்னை உங்க கையால தூக்க மாட்டீங்களா?" என்று கேட்க, விஜய்க்கு ஏனோ கனவின் ஞாபகம் வர... கலக்கம் அவன் கண்ணில் வர...

"அப்போ எல்லோர் முன்னாலேயும் என்னைத் தூக்குவீங்கதானே! என் கிட்டே எல்லாம் போட்டி போட்டீங்கன்னா தோத்துப் போயிடுவீங்க அத்தான்..." என்றவளின் பேச்சுக்கு, விஜய்யின் கைகள்தான் பதில் சொல்லின, அவளது கன்னத்தில்.

"அத்தை உன்னைத் திட்டும் போதெல்லாம்... ஏன் இப்படித் திட்டுறாங்கன்னு நினைப்பேன். கரெக்ட்தான்டி... பேசுறதெல்லாம்..." என்று கடுப்பாய்ப் பேசியபோதே... அதையும் சாதாரணமாக எதிர் கொண்டவள்,

"அடப் போங்கத்தான்... நெருப்புன்னா வாய் வெந் திடுமா என்ன...? எங்க அம்மாவை விட நீங்க ரொம்ப சென்ட்டிமென்ட் பார்க்கிறீங்க... டு பேட்..." என்றவள்,

"வலிக்குது..." என்றபடி, அவன் உதடுகளில் தன் கன்னத்தை வைக்க,

"போடி... ஒண்ணும் கிடையாது. நீ பேசுன பேச்சு இங்கே வலிக்குது..." என்று தன் இதயத்தைக் காண்பிக்க,

"இவ்வளவுதானா...! வலிக்கு மருந்து கொடுத்தாப் போச்சு...!" என்றபடி அவன் மனைவி வைத்தியம் பார்க்க ஆரம்பிக்க... அவனும் நோயாளியாய் மாறித் தனக்கு எங் கெங்கே வலி என்று ஒவ்வொன்றாய்ச் சொல்ல ஆரம் பித்தான்.

கடந்த கால நினைவில் இருந்த விஜய், ரண வேதனை யில் துடிக்க ஆரம்பித்தான். அவனின் இந்த வலிகளெல்லாம் நீங்கும் காலம் வருமா? அவன் வலிக்கான மருந்து, அவனுக்கு மீண்டும் கிடைக்குமா?

## 38

வழக்கம் போல் தீக்ஷா, அலாரம் வைத்து எழாமல் இருக்க,

எத்தனையோ முறை சொன்னாலும், அவன் மனைவி கேட்டால்தானே! வழக்கம் போல் தானே எழுந்து, அதனை அணைத்து விட்டு, உடற்பயிற்சிக்குக் கிளம்பத் தயாரானவன்,

அப்போதுதான் கவனித்தான், புதிதாக மற்றுமொரு புகைப்படம் அவர்களின் அறையில் மாட்டப்பட்டிருப்பதை.



சிறிய அளவில் இருந்தாலும், இருவரும் புன்னகையுடன் இருக்கும் புகைப்படம். 'இதைச் சொல்லத்தான் மேடம் நேற்று வெயிட்டிங்கா...!' என்றபடி அந்தப் புகைப் படத்தைப் பார்க்க, அது சற்றுக் கோணலாக இருக்க, ஒழுங்கா மாட்டுவோம் என்று அதைக் கழட்டினான்.

அங்கு, 'தீக்ஷா - விஜய்' எனப் பல கோணங்களில் எழுதப் பட்டு இருக்க, திரும்பித் தன் மனைவியைப் பார்த் தவன், இதழில் நகையோடு அவளின் அருகில் அமர்ந்து,

"திட்டுவேன்னு... சுவரில் எழுதியதை மறைக்கப் போட்டோவா...? வெவரம்தான்டி நீ..." என்று அவள் காதைப் பிடித்துத் திருக,

"அத்தான்..." என்று வலியோடு தூக்கக் கலக்கத்தில் எழுந்தவளின் கண்களில் புகைப்படம் கழட்டப் பட்டிருப்பது பட... நாக்கைக் கடித்தபடி,

"பார்த்துட்டீங்களா...? சுவரில் எழுதக் கூடாதுன்னு காலையிலேயே அட்வைஸ் எல்லாம் பண்ணிக் கொன்னு டாதீங்க... ப்ளீஸ்... தூக்கம் வருது," என்றபோதே,

"உன்னை... வந்து கவனிச்சுக்கிறேன்," என்றபடி அங்கிருந்து கிளம்பியவனிடம்,

"போடா விருமாண்டி..." என்று முனகியபடி மீண்டும் படுக்கப் போக...

தீக்ஷா, விருமாண்டி என்று அழைத்தாலே விஜய்க்குக் கொஞ்சம் கோபம் வரும்... ஏனோ அந்தப் பேரில் அழைத்தால், தன்னை விட்டு அவள் விலகி இருப்பது போல் படும். அதனாலோ என்னவோ அவனுக்குப் பிடிக்காது.

"போடி..." கையில் இருந்த துண்டை அவள் மேலேயே வீசிவிட்டு, அந்த இடத்தை விட்டுக் கிளம்ப... தீக்ஷாவோ

அவன் வீசிய பூத்துவாலையில் தன்னவனின் வாசம் உணர்ந்தபடி, மீண்டும் உறங்க ஆரம்பித்தாள்.

விஜய் மீண்டும் வந்தபோது, தீக்ஷா குளியலறையில் இருக்க... விஜய் அந்தப் புகைப்படத்தைச் சரியாக மாட்டி வைத்துக் கொண்டிருக்க... அமைதியாக அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

அவளின் அமைதியை உணர்ந்தவன்,

"ஏன் ஒரு மாதிரி இருக்கே...? திட்டப் போறேன்னு ஆக்ட் பண்றியா? நீ உங்க அம்மா கிட்டே போடுற வேஷமெல்லாம் இந்த விருமாண்டி கிட்டே செல்லாது, செல்லம்..." என்றவனிடம்,

அப்போதும் ஏதும் பேசாமல் அமைதியாகவே இருக்க, விஜய்க்கு அவளின் அமைதி மனதினைப் பிசைய...

"ஹேய்... ஏன்... என்ன ஆச்சு...? ஃபீவரா...?" என்றபடி அவள் நெற்றியில் கை வைத்துப் பார்க்க,

"ப்ச்... நத்திங்..." என்றபடி கீழே இறங்கிப் போய் விட்டாள்.

விஜய்க்குத்தான் அவள் அமைதி என்னவோ செய்தது.

ஹாலிலோ... அதை விட...

சுரேந்தர் ஒரு பக்கம் அமைதியாகச் சாப்பிட, எப்போதும் பேசிக் கொண்டிருக்கும் யுகி கூட அமைதியாக இருக்க, விஜய் தலையைப் பிய்த்துக் கொண்டான்.

சுரேந்தரின் மௌனம் கூட அவனுக்கு ஏன் என்று தெரியும். யுகி ஏன் இப்படி இருக்கிறான்...? அதை விட அவன் வாயாடி மனைவி... நேற்றிரவு வரை வாயடித்தவள்... அவளின் திடீர் அமைதி ஏன் என்று தெரியாமல் குழம்பினான் அவள் கணவன்.



ஒரு காலத்தில் அவள் வாயைத் திறந்தாலே காத தூரம் ஓடியவனா அவன்...?

தனக்குள் சிரித்துக் கொண்டான் விஜய்.

ஆனாலும்... இப்போது அவனுக்கு இதையெல்லாம் விட வேறொரு முக்கியமான பிரச்சினை இருக்கிறது. அது, இளமாறனிடம் பேச வேண்டும்... என்ன பேசுவது...? எப்படிப் பேசுவது...? பார்ட்னர்ஷிப்பை விலக்கிக் கொள்ளலாம் என்றால் என்ன சொல்லுவான் என்று ஒரு புறம் குழம்பியபடியே தன் காரை எடுத்தான்.

அவனது கார் ஓட்டுநர், வேலையை விட்டுச் சென்றிருந்தான்.

அது மட்டுமில்லாமல், அவன் மனைவி வழியனுப்ப கார் வரை வருவதாலும், இரவு இவன் லேட்டாக வருவதாலும், தானே காரின் ஓட்டுநராக இருப்பது வசதியாகவே இருந்தது அவனுக்கு. அதனால் புதியதாக எந்த ஓட்டுநரையும் அவன் தேடவில்லை.

வழக்கம் போல அவனை வழி அனுப்ப வந்த தீக்ஷா, அவனிடம் குனிந்து,

"இளமாறன் கிட்டே என்ன சொல்லப் போறீங்க...? சுரேந்தர் அத்தான்தான் நமக்கு முக்கியம்..." என்று முகம் முழுவதும் தேக்கிய கவலையோடு சொல்ல,

விஜய் சிரித்தபடி, "இதுதான் என் புயலோட அமைதிக்குக் காரணமா? அதை நான் பார்த்துக்கிறேன்..." என்றவன், சைகையாலே கேட்டான், நெற்றி வகிட்டில் குங்குமம் எங்கே என்று.

அவன் மனைவியும் ஒன்று, இரண்டு, மூன்று என்று சைகை மொழி சொல்ல, புரிந்தவனாய்,

"அதுக்கும் குங்குமம் இல்லாததுக்கும் என்ன சம்பந்தம்...?" என்று கேட்க,

"சாமியறைக்குப் போக முடியாது... வேற குங்குமம் எடுத்து வைக்க வேண்டும்..." என்று சொல்லிக் கொண் டிருக்கும் போதே... அவன் வீட்டின் முன் இருந்த மாடத்தில் இருந்த குங்குமத்தைத் தன் நெற்றியில் வைத்து விட்டுக் காரில் அமர்ந்தவனை, வித்தியாசமாகப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

காரில் அமர்ந்தவன், தன்னவளைத் தன் அருகில் அழைக்க... தன் கணவன் ஏதோ சொல்லத்தான் அழைக் கிறான் என்று, தீக்ஷா அவன் அருகில் சென்று குனிய, தன் நெற்றியில் இருந்த குங்குமத்தினை அவளது தலை வகிடுக்கு மாற்றினான் விஜய்.

"ஹ்ம்... கலக்கறீங்கத்தான்... செம சென்ட்டிமெண்ட் சீன் அத்தான்..." என்றவளின் குரலில் கேலி இருந்தாலும், அவள் உள்ளம் அவன் செயலில் நெகிழ்ந்துதான் இருந்தது. இருந்தும் தன் நெகிழ்வை மறைத்தவளாய்க் கிண்டல் செய்து கொண்டிருந்தாள்.

'வந்ததே ஓ ஓ குங்குமம்
தந்ததே ஓ ஓ ஓ சம்மதம்...'

என்று அவனைச் சீண்டியபடி பாடலைப் பாட,

"உனக்கு இருக்கிற நக்கலுக்கு... ஆனாலும் இந்த நக்கல், குறும்பு இல்லேன்னா... உன் இந்தர் மனசு தவிக்குதே!" என்றவன்,

"வரவா...!" என்று சொல்லியபடி காரைக் கிளப்ப, அவன் போவதையே பார்த்தபடி நின்று கொண்டிருந்தாள் தீக்ஷா.

'விஜயேந்தர்... தன் ஒவ்வொரு செயலிலும், பார்வை யிலும், அவளின் இந்தராக இருப்பதை நினைக்க நினைக்க...



அவன் தன் கணவனாகக் கிடைக்க, அவள் வரம்தான் வாங்கி வந்திருக்கிறாள்...' என்று நினைத்தாள் தீக்ஷா.

இந்த வரம் தன் வாழ்நாள் முழுவதும்... இந்த ஜென்மம் மட்டுமில்லை... தான் பிறக்கும் ஒவ்வொரு ஜென்மமும் தனக்கு மட்டுமே கிடைக்க வேண்டும் என்ற வேண்டுதல்தான்... அவள் மனதோடு செய்து கொண்டிருக் கிறாள் தினமும்.

விஜயேந்தராவது தன் மனைவி மீதான காதலைத் தன் செயலிலும், பார்வையிலும், வார்த்தைகளிலும் உணர்த்தி விடுவான். தீக்ஷா பொதுவாக எல்லா உணர்வுகளையும் வெளியில் கொட்டி விடுபவள். ஆனால், தன் காதலை மட்டும் தன் மனதினுள்ளே வளர்த்துக் கொண்டிருந்தாள். தன் மீதான தன்னவனின் காதலைத் தனக்குள்ளேயே அனுபவித்துக் கொண்டிருந்தாள். ஆனால், வெளியிலோ காதலில் கூடக் குறும்புத் தனத்தைத்தான் காட்டிக் கொண்டிருந்தாள்.

தீக்ஷாவிடம், அவள் மனம் நோக வேண்டாம் என்று ஆறுதலாய்ப் பேசி விட்டு வந்தாலும்... இளமாறனுக்கு என்ன பதில் சொல்வது என்று மண்டைக்குள் குடைச்சலாக இருக்க... குழப்ப ரேகையோடே அவர்களின் அசோசியேஷன் மீட்டிங் சென்றான் விஜய். அங்கு தீனாவும் கார் பார்க்கிங்கில் இருக்க... விஜய்யின் காரைப் பார்த்தவன், அவனருகில் சென்றான்.

"ஹாய் விஜய்..." என்று அவனை நெருங்க, விஜய் அவனை ஆச்சரியமாகப் பார்த்தபடி,

'இவன் எதற்கு வலிய வந்து பேசுகிறான்...?' என்ற குழப்பத்தோடு, "ஹாய்..." என்று சொல்ல,

"ரொம்ப நாளைக்கப்புறம் உன்னைப் பார்க்கிறேன்... திடீர்த் திருமணம்... வாழ்த்துகள் முன்னாள் நண்பா... வொய்ஃப் பேர் என்ன, தீக்ஷாவாமே...!" என்றவன்,

"உன் ராசிப்படி 'தீ' ஒட்டாதே!" என்று சீண்டலாகவும் சொல்லி விட்டுக் கேலியாகப் பார்த்தான்.

"இந்த 'தீ'னாவைத்தான் பாதியிலேயே கழட்டி விட்டுட்டே... உன் 'தீ'க்ஷா கூடன்னாலும் ஒழுங்கா வாழு..." என்றவனின் முகத்திலும் வேதனை ரேகைகள் ஓட, விஜய்யின் முகமும் அதையே பிரதிபலித்தது.

இளமாறனும் அப்போது வர... அவனைப் பார்த்த தீனா,

"விஜய்... இவனோடெல்லாம் ஃபிரெண்ட்ஷிப் மெயின் டெயின் பண்றே... பார்க்கலாம், எத்தனை நாளைக்குன்னு..." என்று இளமாறனை அற்பமாகப் பார்க்க,

அதுவரை அவனின் வார்த்தைகளில் கொஞ்சம் நெகிழ்ந்திருந்த விஜய், தீனாவைப் பார்த்தபடியே... அருகில் வந்த இளமாறனை அணைத்தவன்,

"உன்னை மாதிரி இல்லை இவன்... எங்க நட்பு எந்த அளவுக்குன்னு உனக்குத் தெரியணுமா...? என்னோட ட்ரீம் ப்ராஜெக்ட்ல பார்ட்னர்ஷிப் வைக்கிற அளவுக்கு...!" விஜய் சொல்ல, தீனா, விஜய்யைக் கோபமாகப் பார்த்தான். பின் சொன்னான்:

"யாரின் துணையும் இல்லாமல் தொழிலை நடத்து வேன்னு சொன்னே அன்னைக்கு... மறந்துட்டியா...? ஒரு பக்கம் சுரேந்தர்... இப்போ இவனா? ஆக மொத்தம் இப்பவும் நான்தான் உன்னை விட ஒரு படி மேலே இருக்கிறேன்..." என்று நிறுத்த, விஜய் பதில் பேச முடியாமல் வேறு புறம் பார்க்க,

தீனா ஏளனமாகச் சிரித்தபடி, இன்னும் தொடர்ந்தான்.

"உங்க வீட்டுக் கடைசிச் சிங்கத்துக்கு ஏதும் வேலை இல்லையா...? என் தங்கை பின்னாலே சுத்திட்டு இருக்கு...



நீங்க ரெண்டு பேரும் எனக்குத் தொழில்ல பிரச்சினை பண்ணினால்... சார் என் குடும்பத்துக்குள்ளேவா...! எப்படிடா...?"

"ஏய்... என் தம்பி மேலே மட்டும் தப்புச் சொல்லாதே..." என்றவன், ஆர்த்தியை ஏதும் சொல்லாமல் நிறுத்த,

"ஆர்த்தி நெக்ஸ்ட் வீக் யு.கே. போகப் போகிறாள்... உன் தம்பி இதுக்கு மேலே அவ வழியில வந்தான்... அவனுக்கு அது நல்லதில்லை..." என்றவன், வேகமாய்ப் போக,

விஜய்க்குக் கோபத்தில் முகம் சிவந்தது.

'பார்க்கலாம்டா... ஆர்த்தி எங்க வீட்டுப் பொண்ணு... நீ எங்கே நாடு கடத்தினாலும், அவ என் தம்பிக்குத்தான்...' என்று மனதுக்குள் சபதமேற்க,

அருகில் இருந்த இளமாறனோ, நடக்கும் எதுவுமே தெரியாமல் விழித்துக் கொண்டிருந்தான்.

'தான் விஜய்யோடு பார்ட்னரா? அதுலும், அவனது புது ப்ராஜெக்ட்டிற்கு...! தான் எதை எதிர்பார்த்து விஜய்யோடு நட்பு வைத்துக் கொண்டோமோ... அது நடக்கப் போகிறதா?' இளமாறனால் நம்பவே முடியவில்லை. சுரேந்தர் ஏதாவது கோல்மால் செய்து, தன்னைக் கழட்டி விட வைத்து விடு வானோ என்று குழம்பியிருந்தவனுக்கு, விஜய், தீனாவிடம் சொல்லிய செய்தியில், மனம் ஆகாயத்தில் பறந்தது.

இறுகிய முகத்தோடு நின்ற விஜய்யிடம்,

"விஜய்... என்ன சொல்றே நீ...?" என்றபடி தன் ஆவலை மறைத்தபடி பேச ஆரம்பிக்க,

"நான் ஈவ்னிங் பேசுறேன் இளா... என் மூடையே ஸ்பாயில் பண்ணிட்டான்..." என்றவன், தன் அலுவலகத்

துக்குப் போகாமல், அசோஸியேஷனில் தன் வேலையை முடித்து விட்டு, மீண்டும் தன் வீட்டிற்கே கிளம்பினான்.

தீக்ஷா, கலைச்செல்வி மற்றும் யுகேந்தர் மட்டுமே வீட்டில் இருந்தனர்.

சுரேந்தருக்கும் அந்த வருடத்திலேயே திருமணம் முடித்து விடலாம் என்று கலைச்செல்வி நினைத்து இருந்த தால், சில வரன்களைப் பார்த்து வைத்திருந்தார்.

அது சம்பந்தமாக மாமியாரும் மருமகளுமாகப் பேசியபடி, புகைப்படங்களைப் பார்த்துக் கொண்டிருந்தனர்.

"அத்தை... சுரேன் அத்தானுக்குச் சீக்கிரமா மேரேஜ் பண்ணி வைக்க வேண்டும். இப்போதெல்லாம் உங்க பெரிய பையனை விட அதிகமாகக் கோபம் வருது... எப்படித்தான் இத்தனை வருஷம் இந்த ரெண்டு பேரையும் வெச்சுச் சமாளிச்சீங்களோ...!" என்று அலுத்தபடி புகைப்படங்களைப் பார்வையிட்டவள், அருகில் இருந்த யுகியைப் பார்த்தபடியே...

"அத்தை... அப்படியே இந்தப் பொண்ணுங்கள்ல யுகிக்கு யாராவது செட் ஆகியதுன்னா... முடிச்சிடலாமா...?" என்று அவனை வம்பிழுக்க,

யுகி எதுவுமே பேசாமல் எழுந்து போய் விட, யுகியின் வித்தியாசமான நடவடிக்கையில் தீக்ஷா குழம்பினாள்.

கடந்த ஒரு வாரமாகவே அவன் இப்படித்தான் அமைதியாக இருக்கிறான் என்பது புரிய...

'என்னாச்சு... பையன் இவ்வளவு டல் அடிக்கிறான்... நம்ம ஆளு ஏதாவது திட்டிட்டாரா? இருக்காதே! அவனைத் திட்டினால் எனக்குப் பிடிக்காதுன்னு திட்ட மாட்டாரே...' என்றெல்லாம் யோசித்துக் கொண்டிருந்தவள்,

"அத்தை... இவங்க யாருமே எனக்குப் பிடிக்கலை. யுகிக்குக் கூடப் பிடிக்கலை போல... பாருங்க... புள்ள



போட்டோஸ் பார்த்தே அலறி ஓடுறான். மந்திரிச்சால்தான் சரி வரும் போல..." என்றபடி எழுந்தவள், நேராகச் சென்றது யுகியின் அறைக்குத்தான்.

தீக்ஷாவுக்கு யுகியோடு அரட்டை அடிக்காமல் இருக்கவே முடியாது. எப்படியாவது, எதையாவது சொல்லி, அவனை வம்பிழுத்துக் கொண்டு திரிவாள்.

இப்போது அவனின் கவலை என்னவாக இருக்கும் என்று அவனிடமே கேட்போம் என்று அவனது அறைக்குப் போனாள்.

தீக்ஷா, எவ்வளவுதான் விளையாட்டுத் தனமாய் இருந்தாலும், எப்போது பொறுப்பாக இருக்க வேண்டுமோ... அப்போது பொறுப்பாக, அந்த வீட்டின் மருமகளாக இருப்பது கலைச்செல்விக்கு மிகவும் பிடிக்கும்.

யுகி கவலையாக இருக்கிறான் என்று கலைச் செல்விக்கும் புரிந்தது. ஆனால், கேட்டும் மழுப்பி விட்டான். எப்படியும் தீக்ஷா அவனிடம் பேசித் தன் இளைய மகனின் கவலையைக் கண்டு பிடித்துப் போக்கி விடுவாள் என்று மருமகளை நம்பினார்.

கலைச்செல்வியின் நம்பிக்கையைத் தீக்ஷாவும் காப் பாற்றினாள்.

யுகி அறைக்குள் சென்றவள், யுகியைப் பார்க்க... கண் மூடிப் படுத்திருந்தான் அவன்.

"யுகி... என்னடா ஆச்சு...? ஏன் இப்படி இருக்கே...?" என்று அவனருகில் அமர,

"ஒண்ணும் இல்லை..." என்றபோதே, அவன் முகம் வாடி இருக்க, அதைக் காணவே சகிக்கவில்லை தீக்ஷா வுக்கு.

அவனின் முக வாட்டத்திற்குக் காரணம் அறியாமல் அவனை விடுவாளா அவனது தோழி.

யுகியை வம்படியாக இழுத்துக் கொண்டு மாடிக்குச் சென்றாள்.

"சொல்லுடா... என்ன பிரச்சினை உனக்கு? உங்க அண்ணா திட்டிட்டாரா... சொல்லு. அவரை ஒரு வழி பண்ணிடுவோம். இந்த விருமாண்டி கிட்டே யுகி செல்லத்தைத் திட்டக் கூடாதுன்னு சொன்னாலும், அடங்க மாட்டேங் கிறாரே...!" என்று அவனிடம் கிண்டலாய்ப் பேச ஆரம்பிக்க,

யுகியோ, "விளையாடாதே தீக்ஷா... நான் இருக்கிற கடுப்புல... நீ வேற..." என்று வேறு புறம் திரும்ப,

"அதுதான் என்னன்னு கேட்கிறேன்... நீ வேற காண்டுல என் புருஷன் மேலே ஏதாவது சாபம் விட்டுட்டேன்னா... நான் பாவமில்ல..." அப்பாவியாய் அவன் முன்னால் போய் நிற்க,

"தீக்ஷா..." என்று அதட்டினான் யுகி.

"இது சரிப்பட்டு வராது..." என்றபடி மாடிக் கைப்பிடிச் சுவரின் மேல் ஏறி அமர்ந்தவள்,

"சோ... நீ இந்த அளவு ஃபீல் பண்றேன்னா... ஆர்த்தி தான் காரணம்னு நினைக்கிறேன். இப்போ சொல்லு... என்ன நடந்துச்சு?" குரலில் தீவிரம் கலந்து கேட்க, யுகியும் மனம் திறந்தான்.

"ஆர்த்தி நெக்ஸ்ட் வீக் யு.கே. போறா... தீனா திடீர்னு அனுப்புறான். அவளுக்குப் போகவே பிடிக்கலை. என்னையும் கூப்பிடறா... நான் எப்படிப் போறது தீக்ஷா...? அண்ணா ஆயிரம் காரணம் கேட்பார்..." என்றவனிடம்,

"உங்க அண்ணா பண்றதுக்கெல்லாம் எல்லார் கிட்டேயும் காரணம், விளக்கமெல்லாம் சொல்றாரா? அது



மாதிரி நீயும் அடாவடியாக் கிளம்பிடு..." என தீக்ஷா வழி கண்டு பிடித்துச் சொல்ல,

முறைத்தான் யுகி. "உனக்கென்னம்மா... நீ ஈஸியா சொல்லிடுவே... யார் பாட்டு வாங்குறது...?" என்று சலிக்க,

"ஏன்டா... உங்க அண்ணா நல்லாத்தானே பாடுவார்..." நேரம், காலம் தெரியாமல் அவனிடம் விளையாடிக் கொண்டிருந்தாள் தீக்ஷா.

"டேய் யுகி... உனக்குத் தேவைதான்டா..." யுகி தன்னையே நொந்து கொள்ள,

"யோசிச்சிருக்கலாம்டா... ஆர்த்தியை லவ் பண்றதுக்கு முன்னால் யோசிச்சு இருக்கலாம்டா. இப்படி ஒரு அண்ண னுக்கு நீதான் தம்பியாப் பிறந்தேன்னா... அப்படி ஒரு அண்ணனுக்குத் தங்கையாப் பிறந்த ஆர்த்தியை லவ் பண்ணியிருக்கலாமா? கஷ்டம்தான். இப்போ என்ன பண்ணலாம்? ஆனா ஆர்த்தி இங்கே இருக்கும் போது மட்டும் நேர்லேயா பார்த்து லவ் பண்றே...? என் கண்ல கூட இன்னும் காட்டலை... போன்ல தானே லவ் ட்ராக் ஓடுது. அதையே மெயின்டெயின் பண்ணு... என்ன, ஐ.எஸ்.டி. பில்தான் எகிறும். பரவாயில்லை..." என்றவளை,

"தீக்ஷா... எனக்கு வர்ற கோபத்துக்கு... அண்ணன் பொண்டாட்டின்னு கூடப் பார்க்க மாட்டேன். அப்படியே தள்ளி விடப் போறேன் பாரு..." என்றவனிடம், தீக்ஷா சிரித்த போதே... கீழே கார் வரும் ஓசை கேட்க, திரும்பிப் பார்த்தவளுக்கு... விஜய்யின் கார் என்பது புரிய, ஒரே குதியில் யுகியின் முன் குதித்தவள்,

"நீ தள்ளி விடுவேன்னு சொல்லி முடிக்கலை... என் ஆளு வந்துட்டாரு பாரு. எனக்கு ஒரு ஆபத்துன்னா... ஓடோடி வந்துருவாரு..." என்றவளிடம்,

"நடத்துங்க... நடத்துங்க..." என்று கிண்டலடித்தவன்,

"ஏய் தீக்ஷா... விருமாண்டி கிட்டே சொல்லி கொஞ்சம் ரெகமெண்ட் பண்ணி... ஆர்த்தி போற நாட்டுக்கே என்னையும் நாடு கடத்த ட்ரை பண்ணேன்... ப்ளீஸ்!"

"ஹ்ம்... யுகிக்காக இந்த தீக்ஷா எதுவும் செய்வா... நீ லேசா ஆரம்பி... நான் ஜாயின் பண்ணிக்கிறேன். ஓ.கே.வா?" என்றபோதே விஜய்யும் மாடிக்கு வந்து விட்டான்.

வரும்போதே தீக்ஷாவைத் தீப்பார்வை பார்த்தபடிதான் வந்தான்.

"உனக்கு எத்தனை தடவை சொல்றது... சுவரில் ஏறி உட்காரக் கூடாதுன்னு... கேட்கவே மாட்டியா?" என்றவன், இருவரையும் நக்கலாகப் பார்த்தபடியே,

"என்ன, வட்ட மேஜை மாநாடு... உங்க சங்கம் பெரிய சங்கம் ஆச்சே! அதுல போடுற திட்டமெல்லாம் பெரிய திட்டமால்ல இருக்கும்," என்றவன், இப்போது யுகியை மட்டும் பார்க்க,

"அண்ணா..." என்றவன், தயங்கியபடி, தன் நண்பன் ஒருவன் யு.கே.யில் இருப்பதாகவும், அவனோடு சேர்ந்து வேலை பார்க்கப் போவதாகவும் சொல்ல...

விஜய்க்கு, தீனா சற்று முன், தான் ஆர்த்தியை அங்கு அனுப்பப் போவதாகக் கூறியது ஞாபகத்திற்கு வர... அதுமட்டும் இன்றி, அவன் பேசியது வேறு நினைவுக்கு வர...

யுகியிடம் தன் கோபத்தைத் தட்டாமல் காட்டினான்.

"நீ எங்கேயும் போக வேண்டாம். அங்கே என்ன கிழிக்கப் போறேன்னு எனக்கும் தெரியும். உன்னை எங்கே, எப்போ அனுப்பறதுன்னு எனக்குத் தெரியும். நான் சொல்லும் போதெல்லாம் இங்கே இருந்து போக மாட்டேன்னு பெருசாப் பேசினே... இப்போ என்ன திடீர்னு... பார்க்கலாம். என் ஃபிரெண்ட் இங்கே அவனோட ஆபீஸுக்கு வரச் சொல்லி இருக்கான்..." சொல்லும்போதே தீக்ஷா ஏதோ சொல்ல வர,



"அவனுக்கு சப்போர்ட்டா நீ எதுன்னாலும் பேசுன..." என்று எச்சரிக்க, யுகியைப் பரிதாபகமாகப் பார்த்தவாறே, தீக்ஷா வாய் மூடினாள்.

யுகி அதற்கு மேல் எதுவும் பேச முடியுமா?

"சரிண்ணா..." என்றபடி, வேறெதுவும் பேசாமல் கீழே இறங்கிப் போக, தீக்ஷாவுக்கு அதைத் தாங்கவே முடிய வில்லை.

"விருமாண்டிதான்... இவன் பண்ற அடாவடி இருக்கே...!" என்று வாய்க்குள் முனக,

"என்னடி... அங்கே வாய்க்குள் முனகுற... காலையில ஒண்ணு ரெண்டு மூணுன்னு சீன் போட்டே... இப்போ மேலே ஏறி உட்கார்ந்திருக்கே..."

என்றவனிடம், உம்மென்றே இருக்க,

"சரி... வா, கீழே போகலாம்," என்றவனிடம்,

"யுகியை அனுப்பினா என்னத்தான்...? அவன் எப்படிப் போறான் பாருங்க... அவன் வேலைக்குத்தானே போறேன்னு சொல்றான். பாருங்க... இன்னும் கொஞ்ச நாள்ல உங்க ஃபிரெண்ட் கம்பெனியை விடப் பெருசா வைப்பான்," என்று பொரும,

"ஏற்கெனவே செம கோபத்தில் இருக்கேன்... நீயும் கடுப்படிக்காதே!" என்றவனிடம், இன்னும் முறைத்துக் கொண்டேதான் இருந்தாள் தீக்ஷா. அப்போது வானம் தூறல் போட, தீக்ஷாவை இழுத்தபடி மாடி அறைக்குள் நுழைந்தான் விஜய்.

அங்கும் உம்மென்று இருக்க,

"இப்போ என்ன ஆச்சுன்னு இப்படி இருக்கே...? அவனை அங்கு அனுப்ப முடியாது தீக்ஷா... நீ சொல்றதுக் கெல்லாம் நான் ஆட முடியாது. புரிஞ்சுதா...?"

"புரியுது... நான் கீழே போறேன்," என்று கோபமாய்த் தன்னை விட்டு விலகியவளை இழுக்க,

அவன் மேலேயே விழுந்தாள் தீக்ஷா.

"விடுங்க... நான் போகணும்..." என்ற பல்லவியை அவள் பாட,

"போ... யார் உன்னை வேண்டாம்னு சொன்னா..." என்றவனின் வாய் சொன்னாலும், கைக்குள் அவள் சிறைப் பிடிக்கப்பட்டு இருக்க...

"விடுங்கத்தான்..." என்றவளை முறைத்தபடியே விட்டவன்,

"போடி... ரொம்பத்தான் சிலிர்த்துக்கிறே... உன்னைத் தேடி வந்தேன் பாரு... என்னைச் சொல்லணும்," என்று சலிப்பாய்ச் சொல்ல,

தீக்ஷாவுக்கு அந்த மாடி அறை பிடிக்காது. காரணம், அங்கு நடந்த கசப்பான அனுபவமே இன்னும் கண் முன் நிற்கும். அந்தக் கசப்பான நிகழ்வுகளுக்குக் காரணமான வனையே காதல் செய்து, திருமணம் முடித்து, அவனோடு சந்தோஷமாய் வாழ்ந்த போதும்... ஏனோ அந்த அறை பிடிக்காது.

ஆனால், விஜய்க்கோ எதிர்மாறாய், மாடியறைதான் அவன் காதலின் சின்னமாய் இருந்தது. அந்தக் காரணத் தாலே அந்த அறையின் மீதான வெறுப்பை, விஜய்யிடம் அவள் ஒருபோதும் சொன்னதில்லை. அவனோடு அவ்வப் போது மாடி அறைக்குப் போக நேர்ந்தாலும், ஏதாவது ஒரு காரணம் சொல்லி, அங்கிருந்து வெளியேறி விடுவாள்.



இப்போதும், அவள் அந்த அறையை விட்டுப் போக நினைக்க, அப்போதுதான் தீக்ஷாவுக்கு ஞாபகம் வந்தது, தன் கணவன் மீண்டும் வீடு வந்தது.

அவனின் முகம் சோர்வாய் வேறு இருக்க, 'இள மாறனைப் பார்த்துப் பேசிவிட்டு வந்திருக்கானோ... அவன் ஏதாவது சொல்லி விட்டானோ!'

மனம் சுணங்கியவளாய், "இளமாறனோடு ஏதாவது பிரச்சினையா அத்தான்...?" என்றபடி அவன் அருகே போனாள் மீண்டும்.

"இல்லை..." என்று ஒரு நொடி அமைதியாக இருந் தவன்,

"தீனா ரொம்பப் பேசிட்டான்..." என்றபோதே, தீக்ஷா,

'டேய் யுகி... நல்ல நேரம் பார்த்துத்தான் நீ வந்து பேசி இருக்கே... சிங்கம் கொலை வெறியோட வந்திருக்கும் போல... ஏதோ தப்பிச்சே மகனே...' என்று மனதுக்குள் நினைத்தவள், அவனை மூடை மாற்றும் விதத்தில், விஜய்யிடம் சிறிது நேரம் பேசிக் கொண்டிருந்தாள். பின்,

"அத்தான்... என் ஃபிரெண்ட் சிவா இருக்கான்ல... அவன் இந்த வாரம் கிரிக்கெட் மேட்ச் விளையாடப் போறான். அவன்தான் அண்டர் லெவன் டீமோட கேப்டனாம்... போகவா...?" என்று அவன் அனுமதியைக் கேட்க, விஜய் தலையில் அடித்துக் கொண்டான்.

"நீங்க எதுக்குத் தலையில் அடிக்கிறீங்க...? நான்தான் அடிச்சிக்கணும். சிவா கேட்கிறான்... உன் ஆளுக்கு கிரிக்கெட் டெல்லாம் விளையாடத் தெரியாதான்னு... ஒரே ஷேமாப் போயிருச்சு..." என்றவளிடம்,

"பெரிய்ய்ய அவமானம்தான் உனக்கு. ஏன், உன் புருஷனுக்குக் கோலி விளையாடத் தெரியாதா? பல்லாங்குழி விளையாடத் தெரியாதான்னு கேட்டு உன்னை அவமானப் படுத்துற ஃபிரெண்ட்ஸெல்லாம் இல்லையா உனக்கு?" நக்கலாகவும், அதே நேரத்தில் கோபமாகவும் கேட்க,

"ப்ச்... அத்தான், பேச்சை மாத்தாதீங்க. போகட்டுமா அத்தான்... ப்ளீஸ்... என் இந்தர்ல..." என்று கெஞ்ச, விஜய்யோ அவ் வார்த்தைகளைச் செவிமடுக்கவே இல்லை.

ஒரு கட்டத்தில் அவன் கன்னத்தில் தன் லஞ்சத்தை வைத்து, அவன் சம்மதத்தை வாங்கி, சிறு பிள்ளையாய் அவனை விட்டு விலகி ஓடியவளை ரசித்தவனாய், மாடி அறையில் கண் மூடினான் விஜய். வரும் போது இருந்த கோபம் எல்லாம் போய் இருக்க...

தன்னவளின் குறும்புத்தனமான குணமும், அதே நேரம் ஆர்த்தி பற்றி ஒரு வார்த்தை கூட அவள் தன்னிடம் இது நாள் வரை சொல்லாமல் இருக்கும் அவளின் இன்னொரு குணமும் ஆச்சரியமாக இருந்தது அவனுக்கு.

இன்னொரு பக்கமோ...

தீனா பேசிய ஆத்திரத்தில்... இளமாறனிடம் வாய் விட்டு வந்தது வேறு ஞாபகம் வர... இளமாறனை இந்த ப்ராஜெக்ட்டில் சேர்ப்பது பிடிக்கவில்லைதான்... இருந்தும், அவனுக்குக் கொடுத்த வாக்குறுதிகளை எல்லாம் நிறைவேற்ற முடியாமல் போனதற்குக் கடவுளே ஒரு வாய்ப்பளித்தது போல் இருக்க, மனம் சமாதானமாகியது.

அது விஷயமாக, அன்று மாலை இளமாறனைச் சந்திக்கச் சென்றவன், வரும்போது போதையின் துணையோடு வந்தான்.



## 39

இளமாறனிடம், விஜய் தன் முடிவைச் சொல்ல, நம்பவே முடியவில்லை அவனால்.

"ஆனால், நீ ஒரு வைராக்கியத்தோடு, தனியாகத்தான் இந்த ப்ராஜெக்ட்டைப் பார்க்கணும்னு சொன்னே...?" என்று சந்தேகமாய் இழுக்க,

சுரேந்தர்தான் காரணம் என்று சொல்ல முடியுமா? இல்லை, தீனா மேல் இருந்த கோபத்தில், அவனிடம் பேசிய வேகத்தில் வார்த்தைகளை விட்டு விட்டேன் என்று சொல்ல முடியுமா? மறைத்தான் விஜய். அதற்குப் பதில்...

"இந்த உலகத்தில் தனியா சாதிக்க முடியாது, இளா. ஒருவரை ஒருவர் சார்ந்துதான் இந்த உலகமே இயங்குது..." என்று சமாளிப்பாகச் சொல்ல,

இளமாறன் அவனை நக்கலாகப் பார்த்தான்.

"புது மாப்பிள்ளைதானே... வரும், வரும் இந்த டைலாக்ஸெல்லாம்," என்று கிண்டல் செய்ய,

அவனின் கிண்டலைப் புரிந்தவனாய்... தன் மனைவியின் நினைவில், லேசாய் இதழ் விரித்தவன், பின் சமாளித்தவனாய்,

"இளா... நான் என்ன பேசிட்டு இருக்கேன்... நீ என்ன பேசிட்டு இருக்கே...?" என்றவனின் வார்த்தைகளில் இதம்தான் இருந்தது.

"ப்ச்... சுரேந்தர் என் கூடச் சேர்ந்து வேலை பார்க்க மாட்டேன்னு சொல்லிட்டான். நீ என் கிட்டே அதை எப்படிச் சொல்றதுன்னு இந்த ப்ளான் பண்ணியிருக்கே... சரிதானே...!" என்றான் இளமாறன், குரலில் சுரத்தே இல்லாமல்.

இளமாறனின் வார்த்தைகளில் விஜய் திகைத்தாலும்,

"இளா... அவன் சின்னப் பையன். அவனை முழுசா நம்பிப் பொறுப்பை ஒப்படைத்ததால... அவனுக்குக் கொஞ்சம் உறுத்தலாகியிருக்கு. எங்கே நான் காப்பாற்றி வைத்திருக்கிற நம்பிக்கை அவனாலே போயிடுமோன்னு... அதனாலதான் அவன் கொஞ்சம் டென்ஷனாகிட்டான். நீ என் கூட ஜாயின் பண்ணிக்கோ..." என்றவனிடம், விரக்தியான பாவத்தில், கைகளில் வைத்திருந்த மது பானத்தையே பார்த்தவன்,

"இப்போதெல்லாம் எனக்கு இதுதான் துணை..." என்று சொல்ல,

அவனை நோக்கி நெரித்த புருவங்களின் மத்தியில் விழுந்த முடிச்சாய், தன் கேள்வியை நிறுத்தினான் விஜய்.

"ஆமாம் விஜய்... எனக்கு யார் கூடேயும் ஒட்ட மாட்டேங்குது... உனக்கு ஒரு விஷயம் தெரியுமா...? என் மனைவி இப்போ என் கூட இல்லை..." லேசாய்ச் சிரித்தபடி,

"மே பி... அதனால கூட வேலையில மிஸ்டேக் ஆகி இருக்கலாம்..." என்றவனை அதிர்ச்சியோடு பார்த்தான் விஜய்.

"இளா... என்ன சொல்ற...? என்ன பிரச்சினைடா? சொல்லு... ஏன் உன் மனைவி நிர்மலா கூட சந்தோஷமாத் தானே இருந்தே...?" என்றவனின் குரலில், நண்பனின் வாழ்க்கை குறித்த அக்கறை இருக்க... தொடர்ந்தான் இளமாறன்.

"நிர்மலா, என் வாழ்க்கையை நிர்மூலமா ஆக்கிட்டுப் போயுட்டாடா... எல்லாம் முடிஞ்சிருச்சு. டைவர்ஸ் நோட்டீஸ் இன்னைக்குத்தான் வீட்டுக்கு வந்திருக்கு... அவ ஏற்கெனவே ஒருத்தனை விரும்பி இருப்பா போல... அவளைக் கட்டாயப் படுத்தி மேரேஜ் பண்ணி வெச்சிருக்காங்க. எனக்கு இதெல் லாம் ஒரு மாதத்துக்கு முன்னாலதான் தெரிய வந்தது.



என் கூட அவ சந்தோஷமாகவே வாழலைடா. கருவைக் கூடக் கலைச்சிட்டு வந்துட்டாடா..." என்றவனை, நம்ப முடி யாமல் பார்த்தான் விஜய்.

கொஞ்சம் உள்ளுக்குள் உதறல் கூட வந்தது. ராதாதான் அவன் கண் முன் தோன்றினாள். ஏனோ மன தினுள் ஊசியைக் கொண்டு குத்தியது போல் இருந்தது, அவன் அன்று செய்ய இருந்த செயல்.

அன்று தீபனைக் காதலித்த தன் தங்கையைத்தான் இளமாறனுக்குத் திருமணம் செய்ய முன் வந்தது ஞாபகம் வர... தலையை உதறிக் கொண்டான் விஜய்.

இளமாறனின் மனைவியை இரண்டு மூன்று முறை பார்த்திருக்கிறான். அமைதி என்றால் அத்தனை அமைதி. அவள் குரலைக் கூட அவன் கேட்டதில்லை. வீட்டிற்குப் போனால் ஒரு சிறு புன்னகை. அந்தப் பெண்ணா... தன் வயிற்றில் வளர்ந்த கருவைக் கலைக்கும் அளவுக்குப் போனாள்? நம்பவே முடியவில்லை.

"நீ கொஞ்சம் எடுத்துச் சொல்லிப் பார்த்திருக்க லாம்லடா... கண்டிப்பாப் புரிஞ்சிருப்பாதானே உன் மனைவி..." என்றவனிடம்,

"என் கிட்டே அவ எதிர்பார்த்ததே அவளோட டைவர்ஸ் தான்... அது கிடைத்தால்தானே அவள் அவளோட முன்னாள் காதலனோட குடும்பம் நடத்தலாம்..." என்றவன்,

"சரி, விடு. முடிந்த கதையைப் பற்றிப் பேசி ஒண்ணும் ஆகப் போறதில்லை..." என்றவன், குடிக்க ஆரம்பித்தான்.

விஜய்க்கு அவனைப் பார்க்கவே பாவமாய் இருக்க, அவனையே பார்த்தபடி இருந்தான்.

"என்ன பார்க்கிறே...? எல்லாம் என் நேரம்..." என்றபடி அவன் வேலையைத் தொடர,

"ஏன் இளா என் கிட்டே சொல்லலை...? இதெல்லாம் எப்போ நடந்தது?" வருத்தத்தோடு கேட்டான் விஜய்.

"அவளோடு வெளிநாடு போனேன்டா... அப்போதான் எல்லாக் கண்ராவியும் நடந்தது. வந்தவ, அவ அப்பன் வீட்டுக்கே போயிட்டா. உன் கிட்டே சொல்லலாம்னா... நீ உன் கல்யாண வேலையில பிஸி ஆகிட்டே... இளமதி டென்ஷன் வேறு... சொல்லலை. உன் கிட்டே சொல்லி மட்டும் என்ன ஆகப் போகுது...?" என்றவனின் புலம்பலில், விஜய் அவனிடம் ஆறுதல் வார்த்தைகள் கூற, அவனோ விஜய் யிடம் மதுபானத்தை நீட்டினான், கம்பெனி தருமாறு.

விஜய் முதலில் தயங்க,

"ப்ளீஸ்... வேண்டாம்னு சொல்லாதே! லெட்ஸ் செலிப்ரேட் யுவர் மேரேஜ் அண்ட் நியூ ப்ராஜெக்ட் பார்ட்னர் ஷிப் அஸைன்மென்ட்... அஸ் வெல் அஸ்... ஷேர் மை ஃபீலிங்ஸ்... ப்ளீஸ்..." என்று தட்டுத் தடுமாறியபடியே சொன்னவனின் வார்த்தைகளை மீற முடியாமல், தன் கைகளில் வாங்கிய விஜய்க்கு, தீக்ஷாவை நினைத்தும் கொஞ்சம் பயம்தான்.

தான் புகை பிடிப்பதையே சொல்லாமல் சொல்லிக் காட்டியவள் என்பதும் உறுத்த, இந்த ஒரு மாதமும் இவனுக்கு இப்படி ஒரு சூழ்நிலை ஏற்படவில்லை. என்ன சொல்வாளோ என்றிருக்க... சும்மாவே பக்கம் பக்கமாய்ப் பேசுவாள்... போன் செய்து சம்மதம் கேட்டு விட்டுக் குடிக்கலாமா என்றெல்லாம் யோசனை செய்து...

'சரி... இன்னைக்கு எப்படியும் அவள் அருகில் நெருங்க முடியாது. எப்படியாவது சமாளிப்போம்...' என்றெல் லாம் யோசித்துக் கொண்டிருக்க,

இளமாறன் மீண்டும் வலியுறுத்த, அவன் வார்த்தை களை மீற முடியாமல், விஜய் நண்பனுக்கு ஈடு கொடுத்தான்.



கணவன் இங்கு அவன் நண்பனின் துக்கத்தைப் போக்க, இப்படி இருக்க...

அவன் மனைவியோ, தன் நண்பனின் துக்கத்தை எப்படியாவது போக்கி, அவன் விரும்பிய ஆர்த்தி இருக்கும் இடத்திற்கு அனுப்ப, எப்படியாவது தன் கணவனிடமிருந்து சம்மதம் வாங்கித் தந்து விட வேண்டும் என்று, அவனுக்காகக் காத்திருந்தாள், வீட்டில்.

மணி இரவு 11 ஆகி இருக்க, சுரேந்தர் அப்போதுதான் வந்தான். வந்தவன், விஜய், இளமாறனைப் பார்க்கப் போயிருப்பதாகச் சொல்ல,

தீக்ஷா அவனிடம் கேட்டாள்.

"அவர் மட்டும் தனியா ஏன் போனார்? எப்போதும் நீங்களும் அவர் கூடப் போவீங்கதானே அத்தான்...?" என்று கேட்க,

சுரேந்தர் அவஸ்தையாய்ப் பார்த்தான்.

"இல்லை தீக்ஷா... அவனைப் பார்க்கவே எனக்குப் பிடிக்கலை. அண்ணா கூப்பிட்டாரு... எனக்குத்தான் போக இஷ்டம் இல்லை. அது மட்டும் இல்லை... அவன் இவ்வளவு தவறு பண்ணியும், இன்னும் கூட வெச்சிருக்கறது எனக்குப் பிடிக்கலை. தப்புப் பண்றாரோன்னு தோணுது..." என்று தன் மனதில் உள்ளதை மறைக்காமல் கூற, தீக்ஷா முகம் வெளிறினாள்.

அவள் முகம் மாறுவதைப் பார்த்த போதுதான், சுரேந்தர் தான் உளறியதை உணர்ந்தான்.

உடனே, "ஹேய் தீக்ஷா... நீ உடனே டல் ஆகிடா தேம்மா... பார்த்துக்கலாம். அண்ணா எது பண்ணினாலும் அதில் காரணம் இருக்கும். ஓ.கே.வா? நீ போய்த் தூங்கு. நான் ஒரு லூசு... உன் கிட்டே உளறிட்டு இருக்கிறேன் பாரு..." என்று படிகளில் ஏற,

"சுரேந்தர் அத்தான்..." என்று மீண்டும் தயக்கமாய் தீக்ஷா அழைக்க,

திரும்பி வந்தான்.

அவள் முகம் இன்னும் தெளியாததைக் கண்டு,

"என்ன தீக்ஷா...?" என்று சுரேந்தர் அக்கறையாய்க் கேட்க,

"எப்போதும் அவர் பேச்சைக் கேட்பீங்கதானே...! நீங்க இளா கூடச் சேர்ந்து வேலை பார்க்க மாட்டேன்னு சொன்ன தினாலேதானே... நீங்க கோபமா இருந்ததினாலேதானே உங்க அண்ணா இந்த முடிவெடுத்தார்... இந்த ப்ராஜெக்ட்ல இளமாறனைச் சேர்த்துக்கிட்டார்.. எனக்கென்னமோ அந்த இளமாறனையும் பிடிக்கலை... அவன் சிடுமூஞ்சித் தங்கை யையும் பிடிக்கலை..." என்றவளிடம் சிரித்த சுரேந்தர்,

"ஹப்பா... இங்கே தீக்ஷா, தீக்ஷான்னு வெட்டியாப் பேசிட்டு, அடுத்தவங்களை எல்லாம் ஓட்டிட்டு இருக்கிற பொண்ணு ஒருத்தி இருந்தாளே... அவளைப் பார்த்தாக் கொஞ்சம் சொல்லு... புருஷன் மேலே என்ன ஒரு அக்கறை... புல்லரிக்குது," என்று நக்கலாய்ச் சொல்ல,

முறைத்த தீக்ஷா, "லேட்டா வந்தீங்களே... அத்தை நீங்க வந்தா சாப்பாடு எடுத்து வைக்கச் சொன்னாங்கன்னு வெயிட் பண்ணினால்... என்னையே ஓட்டறீங்களா...? சாப்பாடு கட்..." என்று பொய்யாக மிரட்ட,

"இந்த சுரேந்தர் இதெல்லாம் யோசிக்காமல் வருவேனா... வரும்போதே சாப்பிட்டுட்டு வந்துட்டேன். நீ உன் ஆத்துக்காரருக்காக வெயிட் பண்ணும்மா..." என்று வேகமாய்ப் போய் விட,

"முன்னெச்சரிக்கை முத்தண்ணா..." என்று முனகிய படி, கணவனுக்காகக் காத்திருக்க ஆரம்பித்தாள், உறக்கக் கலக்கத்தோடு.



எப்படியாவது பேசி, யுகியின் வெளிநாட்டுப் பயணத் திற்குத் தன் கணவனிடமிருந்து அனுமதி வாங்கி விட வேண்டு மென்று தீக்ஷா ஒரு முடிவோடு இருக்க... விஜய்யின் கார் வரும் ஓசையும் கேட்க... ஆவலோடு வெளியில் ஓடினாள் தீக்ஷா.

ஓடிய வேகம், அவனைப் பார்த்த நொடியிலே மறைந்து, ஆணி அடித்தாற்போல் நின்றாள் தீக்ஷா.

மதுவின் பிடியில் இருந்தாலும், நிலை தடுமாறாமல் தான் வந்தான் விஜய். என்னதான் இருந்தாலும் போதை யின் தாக்கம் அவன் கண்களில் இருக்கத்தான் செய்தது.

தீக்ஷா, தன் கணவனைப் பார்த்த நொடியிலே, அவன் குடித்திருக்கிறான் என்று உணர, கண்ணில் நீர் கரித்தது.

தீக்ஷாவைப் பார்த்தபடியே வந்த விஜய், சிரித்தபடி, சாதாரணமாக அவளை நெருங்க... அவனை விட்டு விலகியவளாய், மௌனமாய் முன்னே நடக்க, அவளின் விலகலை உணர்ந்தவன், ஒன்றும் சொல்லாமல் அவள் பின்னால் சென்றான்.

அவன் சாப்பிடுவதற்காக எடுத்து வைக்கப் போக... விஜய்யோ சாப்பிட்டு வந்ததாகக் கூறிவிட்டு மேலே சென்று விட்டான்.

தீக்ஷா, விட்டால் அழுது விடுவாள் போல... அந்த அளவு மனம் கனமாக இருந்தது. அவள் அப்பாவையோ இல்லை... அண்ணாவையோ இப்படி ஒரு நாளும் அவள் கண்டதில்லை. தன் கணவனை நினைக்கும்போதே அவள் கண்களில் கண்ணீர் முத்துக்கள் சிந்த ஆரம்பித்து விட, அதைவிட வேகமாய்த் தன் கண்ணீரைத் துடைத்தாள் தீக்ஷா.

'அவன் குடிக்கிறான் என்று தெரிந்திருந்தால்கூட, அவள் காதலிக்காமல் இருந்திருப்பாளா...? அவன் எப்படி

இருந்தாலும், அவள் மனம்தான் அவனிடம் சாய்ந்து விட்டதே... இனி அழுது மட்டும் என்ன பிரயோஜனம்?' என்று தன்னை நொந்தபடி தங்கள் அறைக்குச் செல்ல, அவனோ குளியல் அறையில் இருந்தான்.

வேகமாய்த் தன் படுக்கையைக் கீழே விரித்தவள், எங்கே விஜய் வெளியில் வந்தால், இருவருக்கும் வாக்கு வாதம் வந்து விடுமோ என்று... வராத உறக்கத்தை வருவிக்கும் வகையில், கண்களை இறுக மூடித் தூங்க ஆரம்பித்தாள்.

தலையைத் துவட்டியபடி வெளியே வந்த விஜய், தீக்ஷா கீழே படுத்திருப்பதைப் பார்த்தவன், அவள் அருகில் அமர, தீக்ஷா இன்னும் கண்களை இறுக மூட, விஜய் அவளை எதுவும் தொந்தரவு செய்யாமல், அவளைத் தூக்கப் போக...

அதை உணர்ந்த தீக்ஷா... எழுந்தவள், அவன் கை தன் மீது படாமல் ஒதுங்கி அமர்ந்தாள்.

விஜய்க்கு, அவளின் ஒதுக்கம் கூட வேதனை தரவில்லை. அவளின் மௌனம்தான் அவனைக் கொன்றது. எதுவும் பேசாமல், அவளையே பார்த்தபடி இருந்தான்.

'மௌன யுத்தம் பண்றியாடி... உனக்கு இது அதிகம் ஆச்சே! பார்க்கலாம், எத்தனை நாளைக்குன்னு...' அவளிடம் மனதோடு பேசியவன்,

'தம் அடித்ததை விட்டது போல், இனி குடிக்கவும் கூடாது...' என்று தன் மனதுக்குள் உறுதி எடுத்துக் கொண்ட படி, அவளின் அருகிலே சற்றுத் தள்ளி அவனும் படுக்க...

தீக்ஷாவுக்கு எரிச்சலாகவும் கோபமாகவும் வந்தது. விஜய் மீது கோபம் என்பதை விட, தான் என்ன செய்ய முடியும் என்ற இயலாமைதான் அவளின் கோபத்திற்குக் காரணம்.



ஒருபுறம், அவன் கீழே படுத்திருக்கிறான் என்பது வேறு அவள் மனதினை அறுக்க, எழுந்து அமர்ந்தவள்...

"விஜய் அத்தான்..." என்றபோது, அவள் குரலா எனும் அளவிற்குத் துள்ளல், உற்சாகமெல்லாம் போயிருக்க,

விஜய்யோ... எதுவும் பேசாமல், அவளையே பார்த்த படி படுத்திருந்தான். அவள் குரல் கேட்டபோதும் மௌன மாகவே இருந்தான்.

வேறு வழியின்றித் தீக்ஷாவே அவனது அருகில் அமர்ந்தவள்,

"பேசக் கூடாதுன்னுதான் பார்த்தேன்..." என்றவளை, அடுத்து ஒரு வார்த்தை கூடப் பேச விடாமல், தன்னோடு அணைத்தவன்,

"ஹ்ம்ம்... பேசலாம்... காலையில்..." என்றவன், அதற்கு மேல் பேசாமல் கண் மூட ஆரம்பிக்க, தீக்ஷா வுக்குத்தான் தூக்கம் போய் விட்டது எனலாம்.

'கொஞ்சம் கூட இறங்கி வருகிறானா இவன்? செஞ்சது தப்பு. ஒரு சாரி... இல்லை, சமாதானப்படுத்துற மாதிரிப் பேச்சு... இவனை எல்லாம் வெச்சுக்கிட்டு... தீக்ஷா, உன் பாடு கஷ்டம்தான்டி...' என்று புலம்பியபடி படுத்தவள், எப்போது உறங்கினாள் என்றே தெரியவில்லை.

அதிகாலையில் வழக்கம் போல இவள் தாமதமாகவே எழ, விஜய் அறையில் இல்லை. அதன் பின் குளிய லறைக்குள் நுழைந்தவள், வெளியே வந்த போது, அவள் கணவனின் எதிர்பாராத அணைப்பில் திகைத்துப் பின் தன்னைச் சமாளித்தவள்,

"விடுங்கத்தான்... போய்க் குளிங்க," என்றபடி திமிற,

"சாரி..." என்றவனின் வார்த்தைகள், கிறக்கமாக அவள் காதில் விழ,

"ரொம்பச் சீக்கிரமாச் சொல்லிட்டீங்க. ஆமாம்... எதுக்கு சாரி அத்தான்?" என்று நக்கலாய்க் கேட்டாள்.

"நைட்டே சொல்லி இருக்கலாம்தான். ஆனா குடிகாரன் பேச்சு விடிஞ்சாப் போச்சுன்னு நீ பழமொழி சொல்லி, என்னை மொக்கை போட்டுட்டேன்னா..." என்றவனின் வார்த்தைகளில், தீக்ஷா கலகலவெனச் சிரிக்க ஆரம்பித்தாள்.

"ஹை அத்தான்... இது என்ன... என்னை மாதிரியே நீங்களும் பேச ஆரம்பிச்சிட்டீங்க, மொக்கை அது இதுன்னு...? ஹா ஹா..." என்று சிரிக்க,

சிரித்த அவள் இதழில், அழுத்தமாய் விஜய்யின் இதழ் பதிய... தீக்ஷாவின் கண்கள், கணவனின் காதலை - அதன் தாபத்தை உள் வாங்கியபடியே மூட... விஜய் அவளை ரசித்தபடியே தன் வேலையில் கவனமாய் இருக்க, தீக்ஷா தான் அவனிடமிருந்து தன்னை விடுவித்தாள். விடுவித்தவள், அவன் மார்பில் சாய்ந்தபடியே,

"இந்தர், நேத்து நைட் முழுவதும் உங்களை மனசுக் குள்ளே தாளிச்சிட்டேன். சாரி," என்று வருத்தமாய்ச் சொல்ல,

"நீ என்னைக்குத்தான் என்னை நல்லவனாப் பார்த்தே... இதெல்லாம் சகஜம்தான் எனக்கு. நேத்து நைட் என்னை விருமாண்டியா மாற்றித் திட்டியிருப்பே. இப்போ நான் உனக்குச் சாதகமாகச் சொன்ன வுடனே... இந்தரா மாற்றிக் காதல்ல உருகுற. இததானே வழக்கமா நடக்குது எனக்கு...?" என்று சிரித்தபடி சொன்னவனின் வார்த்தை களை ரசித்தபடி,

"இந்தர்... எனக்கு ஒரு சந்தேகம்..." என்றவளிடம்,

"என்ன சந்தேகம்...? சொல்லு," என்றவனின் விரல்கள், அவள் இதழில் கோலமிட, இதழோ, மீண்டும் அவள் இதழைச் சரணடைய ஆவலாய் இருக்க,



"நானும் எத்தனையோ கொடுக்கிறேன். ஆனாலும் ஒரே முத்தத்திலே ஆளையே அசரடிச்சுடறீங்க. அது எப்படித் தான்...?" என்று அப்பாவியாய்க் கேட்க,

"எது...? ஆ ஊன்னா இந்தக் கன்னத்துல வைக் கிறியே... அதுக்குப் பேரெல்லாம் முத்தம்னு வெளியில சொல்லிடாதேடி..." என்று போலி எரிச்சல் காட்ட, இவளோ முறைத்தாள்.

"இனிமேல் பாருங்க..." என்றவளிடம்,

"ஏன்... ஸ்ட்ராங்கா... டைரக்டா இங்கேயே கொடுக்கப் போறியா?" என்று தன் இதழைக் காட்ட,

"ஸ்ட்ராங்தானே... இனி லைட் கூடக் கிடையாது," என்று அவனை விட்டு விலக,

"நீதானே... பார்க்கலாம்," என்றவனிடம்,

சிரித்தாள் தீக்ஷா. அவனிடம் மீண்டும் சாய்ந்தவள்,

"இந்தப் பையன் கிட்டே மட்டும் என் சாமர்த்தியம் செல்லவே மாட்டேங்குது..." என்றவள், அவன் நெஞ்சத்தில் இதழ் பதித்தாள், வழக்கம் போல்.

"ஹேய் வாயாடி... உன் கிட்டே நான் ஒண்ணு பேச வந்தால், அப்படியே டைவர்ட் பண்ணி, வேற ரூட்ல கூட்டிட்டுப் போயிட்டு இருக்கே..." என்றவன்,

"என் மேல் கோபமே இல்லையா உனக்கு?" என்று கேட்க,

"எதுக்குக் கோபம்? ஓ...! நேத்து தண்ணியடிச்சிட்டு வந்தீங்களே... அதுக்கா? ப்ச்... என்னைக்கோ ஒரு நாள் தானே... அட்ஜஸ்ட் பண்ணிக்கிறேன். ஆனா அடிக்கடி இந்த மாதிரி வந்திங்க...?" என்று எச்சரிக்கை செய்தவள்,

"அடிக்கடி வர மாட்டீங்கதானே! ஆனா அப்படி நீங்க வந்தாலும், என்னால ஒண்ணும் பண்ண முடியாது. ஆனால்,

அத்தான்... என் இந்தர் கண்ல இருக்கிற காதல், என் இந்தரோட ஸ்பரிசம்... இதெல்லாம் நேத்து வித்தியாசமாத் தெரிந்தது. அதைத்தான் தாங்க முடியலை..." என்றபோதே அவள் குரல் கம்ம, விஜய் உருகித்தான் போனான்.

"நான் தம்மடிப்பேன், தெரியுமா?"

"ஹ்ம்ம்..." என்றவளின் குரல், தன் கணவனுக்கு இருக்கும் கெட்ட பழக்கங்களைக் கேட்க முடியாத ஆதங் கத்தில்... ஏமாற்றத்தில்... இன்னும் உள்ளே போக,

"ஆனால், இப்போ அடிக்க மாட்டேன். ஏன்னு தெரியுமா?" என்றபோது, தீக்ஷா நிமிர்ந்து விழி விரித்துப் பார்க்க,

"என் ரோசக்காரப் பொண்டாட்டியோட வண்டிக்கு... சாரி, சாரி... அவளோட பிங்கிக்குத் தம் அடிச்சாப் பிடிக்காதுன்னு விட்டுட்டேன். அவளோட வண்டிக்கே பிடிக்காதுன்னு விட்டவன், அவன் தீக்ஷா செல்லத்துக்குப் பிடிக்காதுன்னு தெரிந்தால், செய்வானா?

"இனி, தண்ணி அடிக்கிறதையும் விடப் போறேன். இந்த ரோசக்காரியோட இந்தருக்கு... அவன் பொண்டாட்டி யோட ஒரு நொடி மௌனம் கூட, விலகல் கூட, பாராமுகம் கூடத் தாங்க முடியாது..." என்றவனிடம், தீக்ஷா எதுவுமே பேசாமல் இருக்க,

"ஹேய்... இப்போ ஒரு முத்தம் எதிர்பார்த்தேனே...! இல்லையா...?" என்று விஜய் கேட்க,

"எதுக்கு...?" என்று புரியாமல் கேட்டாள் தீக்ஷா.

"உனக்காக, உன் புருஷன் தம்மடிக்கிறதை விட்டுட் டேன்... தண்ணியடிக்கிறதை விடப் போறேன்னு சொன்னதுக் குத்தான்," என்று சிரிக்க,



"ஆமாம்... இவர் பண்ணிட்டிருந்தது எல்லாம் ரொம்ப நல்ல காரியம். இதை எனக்காக விட்டுட்டேன்னு சொன்ன வுடனே, இவருக்கு நாங்க முத்த மழை கொடுக்கணும். இதெல்லாம் அடிப்படையா இருக்கணும், அத்தான்... என் இந்தருக்கு அது இல்லையேன்னு எனக்கு வருத்தம்தான்..." என்று சொல்ல,

மிகப் பெரிய மொக்கை வாங்கிய பாவம் வந்திருந்தது, விஜய்யின் முகத்தில்.

"உன்னைப் புரிஞ்சுக்கவே முடியலைடி. உனக்காகப் பண்றேன்னு சொல்றேன்... அதுக்கு எஃபெக்ட் இவ்ளோ தானா?" என்றவனிடம்,

"எனக்காகக் கெட்ட பழக்கத்தை விட்டுட்டீங்கன்றதை விட, எனக்காக நல்ல காரியம் பண்ணினேன்னு சொன் னால், எவ்ளோ சந்தோஷப்படுவேன், தெரியுமா...?" என்று விஜய்யைத் தன் வலையில் அழகாய்ச் சிக்க வைத்தாள் அவன் மனைவி.

"அப்படியா...? சொல்லு... உனக்காக என்ன பண்ணி னால் சந்தோஷப்படுவாய்?" என்று விஜய் ஆவலாய்க் கேட்க,

தீக்ஷா உற்சாகமாய்,

"எனக்காக... நான் என்ன கேட்டாலும் செய்வீங் களா...? ப்ராமிஸ்..." என்று கை நீட்ட,

"இப்படி எதுக்கெடுத்தாலும் ப்ராமிஸ் கேட்கிறதை நிறுத்து," என்றபடி,

"சொல்லு... ஆனா லூசுத்தனமா எதுவும் கேட்கக் கூடாது," என்றவனிடம்,

எச்சரிக்கையாய், இன்னும் சற்றுத் தள்ளி நின்றவள்,

"என் ஃபிரெண்ட் யுகியை, அவன் ஆசைப்பட்ட மாதிரி யு.கே.க்கு அனுப்புவீங்களா? ப்ளீஸ்... எனக்காக. பாவம்

இந்தர் அவன்..." என்று சொன்னவளுக்குக் கணவனுக்கு கோபம் எந்த அளவு வருமோ என்று கூடப் பயம்தான்.

விஜய் சற்று நேரம் எதுவும் பேசாமல் இருக்க,

"நீங்க ஒத்துக்க மாட்டீங்க... சரி, விடுங்க," என்று கீழே இறங்கப் போனவளை, விஜய் தன் அருகில் இழுத்தான்.

"உன் ஃப்ரெண்ட் அங்கே போக ஏன் ஆசைப் படுறான்னு, உண்மையான காரணம் உனக்குத் தெரியுமா?" என்றவனின் கண்கள், அவள் கண்களை நோக்க,

பேசாமல் தலை குனிந்தாள் தீக்ஷா.

"உனக்குத் தெரியும்... என்ன காரணம், சொல்லு... பார்க்கலாம்..." என்றவனுக்கு, மௌனத்தையே பதிலாகத் தந்தாள் அவன் மனைவி.

"என் கிட்டே இப்போ கூடச் சொல்ல மாட்டேங்கிறே... ஆர்த்திதானே காரணம்...?" என்று விஜய் சொல்ல, வியப்பும் அச்சமும் கலந்த பார்வையைத் தீக்ஷா கொடுக்க,

"அது... அது..." என்று இழுத்தவள், 'இவனுக்கு எப்படித் தெரியும்...?' என்று யோசித்தபடியே,

"ஆர்த்தியும் ஒரு காரணம். ஆனால், வேலைதான் முதல் காரணம். ஏன்னா, யுகி உங்க தம்பிதானே! உங்க மாதிரிதானே இருப்பான். தொழில்தான் முதலில்... அப்புறம் தான் மற்றது எல்லாம்..." என்று கூசாமல் பொய் வேறு சொல்ல,

முறைத்தான் விஜய்.

"இந்தக் காதுல பூ சுத்துற வேலையை எல்லாம் வேற யார் கிட்டேயாவது வெச்சுக்கோ. அவன் பண்ற மொள்ளமாரித்தனத்துக்கு நீ ஜால்ரா வேற... உனக்கு அவன் விஷயம் தெரிஞ்சிருந்தும், என் கிட்டே ஒரு வார்த்தை



சொல்லலையில்ல... என்னை விட அவன் உனக்கு முக்கிய மாப் போயிட்டான்..." என்று கோபமாய் உறும,

"அப்படியெல்லாம் இல்லத்தான்... நானே சொல்ல லாம்னுதான் நினைத்தேன். சொன்னால் திட்டு வாங்கு வேன்னு தெரியும். அதனாலதான்..." என்று சமாளிக்க,

"உனக்குச் சமாளிக்கச் சொல்லியா தரணும். அவன் ஆடுறதுக்கெல்லாம் என்னால சரின்னு சொல்ல முடியாது. தீனா, ஆர்த்தியை அனுப்புனதுக்குக் காரணமே, யுகிதான் தெரியுமா? இவங்க காதல் எங்க ரெண்டு பேருக்குமே தெரியும். தீனா இத்தனை நாள் கண்டுக்காமதான் இருந் தான். இப்போ என்னவோ தெரியலை, இப்படிப் பண்றான்..." என்றபோதே,

"யுகிக்குப் பயந்தெல்லாம் இல்லை... உங்களுக்குப் பயந்துதான்..." என்று தீக்ஷா பதில் கொடுக்க,

புருவம் சுருக்கிப் பார்த்தான்.

"என்ன பார்க்கிறீங்க...? நீங்கதானே ஆர்த்தியைக் கடத்துனீங்க...?" மெதுவாய்ச் சொன்னாள், தீக்ஷா.

"ஆர்த்தி, சின்ன வயதில் இருந்தே, எங்க கூட வளர்ந்தவ... அவளை நான் கடத்திட்டேன்னு தீனா பயந் துட்டானா...?" என்று சிரித்தான் விஜய்.

"அவன் பாதுகாப்பை எல்லாம் மீறிக் கடத்திட்டேன்னு தான் அவன் கோபப்பட்டானே தவிர, ஆர்த்தியோட பாது காப்பை நினைத்து இல்லை. அவனுக்குத் தெரியும் என்னைப் பற்றி..." என்றவன்,

"ஓ...! அதனாலதான் அண்ணியை மட்டும் பாது காப்பா வீட்ல கொண்டு போய் விட்டீங்களா, அத்தான்? என்னையெல்லாம் கடத்தி பிளாக் மெயில் பண்ண மாட் டாங்கன்னு தெரிஞ்சுதான், அப்படியே விட்டுட்டுப் போயிட்

டாங்களா, அத்தான்..." வார்த்தையில் கிண்டல் இருந்தாலும், தன் மனதுக்குள் இருந்ததை நறுக்கென்றும் கேட்டாள், அவள் கணவனுக்கு உறைக்கும்படி.

விஜய்க்கு ஞாபகம் இல்லாமல் இல்லை.

"உன்னை அப்படியே விட்டுட்டுப் போனாங்கன்னு உனக்குத் தெரியுமா? உன்னை ராதாவோடு கூட்டிட்டுப் போகலாம்னுதான் பார்த்தேன். ஆனால், நீ உன் வண்டியிலே வந்திருந்தே... உன்னைக் கூப்பிட்டா... என் பிங்கி, மங்கின்னு சீன் போடுவே... அதனால்தான்.

"அப்போ நீ பேசினாலே எரிச்சல் வேற வரும் எனக்கு. அதனால, அசோக் கிட்டே சொல்லி, நீ வீடு வருகிறவரை பாதுகாப்பா வரச் சொன்னேன்," என்று முடிக்க,

"ஓ...! அன்னைக்கு வந்தது அசோக்கா...?" என்றவள்,

அவனைத் தள்ளி நின்று முறைத்தபடி,

"என் பிங்கியைச் சந்தடி சாக்கில் மங்கின்னு சொல் றீங்க..." மூக்கு விடைத்தபடி அவள் கேட்க,

கண் சிமிட்டிய விஜய்,

"ஆமா... நீ மட்டும்தான் பட்டப் பேர் வைப்பியா? நாங் களும் வைப்போம்ல... பிங்கி... மங்கி... அப்படித்தான் சொல்வேன். போடி!" என்று தன் நிலையெல்லாம் மறந்து, அவளோடு வழக்காடிய விஜய்யைப் பார்த்து,

"ஆமா... பொண்டாட்டியைச் செல்லப் பேர் வைத்துக் கூப்பிடத் தெரியலை... இதுல என் பைக்குக்குப் பட்டப் பேர் வெச்சுட்டேன்னு பெருமை வேற... பேச்சை மாத்தாதீங்க. உங்க தீனா கதையைச் சொல்லுங்க..." என்று நொடிக்க,

விஜய் சொல்ல ஆரம்பித்தான்.

"தீனா, ரொம்ப நல்லவன் தீக்ஷா. அவனோட நட்பை அநியாயமா இழந்துட்டேன். இனி அது கிடைக்காதுன்னு



தெரியும். எல்லாத்துக்கும் என் கோபம், ஈகோதான் காரணம். நானும் தீனாவும் காலேஜ் வரை க்ளோஸ் ஃபிரெண்ட்ஸ்...

"எங்க அப்பாவும், அவன் அப்பாவும் தொழில் தொடங்கி... உண்டான குடும்ப நட்பு எங்கள் வரை தொடர்ந்தது. நாங்க ரெண்டு பேரும் சேர்ந்து தொழில் தொடங்க முடிவு பண்ணியிருந்தோம். எல்லாமே நல்லாத் தான் போயிட்டு இருந்தது. ஒரு நாள், ஒரு பார்ட்டியில, போதையில தீனா உளறினான்... அவங்க அப்பா துணை இல்லாமல், எங்க அப்பா ஒண்ணுமே பண்ணியிருக்க முடியாதுன்னு...

"போதையில இருந்த எனக்கும் கோபம் வந்தது. வார்த்தைகள் தடித்து... யார் துணை இல்லாமலும் இந்தத் துறையில் முன்னேறுவேன்னு சபதம் போட்டேன். அந்தப் பிடிவாதம், அப்படியே எங்க ரெண்டு பேரையும் மட்டும் இல்லை... எங்க குடும்பத்தையும் பிரிச்சிடுச்சு..." அன்றைய நிகழ்வுகளில் பெருமூச்சை விட்டபடி தொடர்ந்தான்.

"தீனா, தன் தவறு உணர்ந்து மன்னிப்புக் கேட்டான் தான். நான்தான் மன்னிக்கலை. நான் பண்ணியதெல்லாம் தவறுன்னு எப்போ தெரியுமா உணர்ந்தேன்... நீ என்னை மன்னித்து ஏத்துக்கிட்ட நிமிடத்தில்தான் உணர்ந்தேன். ஆனாலும், இன்னும் என் ஈகோ... இந்த நிமிஷம் வரைக்கும் என்னை அவன் கூடப் பேச விட மாட்டேங்குது..." என்று உண்மையிலேயே வருத்தப்பட்டுச் சொல்ல, தீக்ஷாவுக்கு உண்மையிலேயே இந்தத் தகவல் எதிர்பாராத ஒன்றாக இருந்தது.

'தீனா, விஜய் இருவரும் இந்த அளவுக்கு நெருக்க மானவர்களா...? தன் கணவன் இந்த அளவுக்கு வருந்து கிறான் என்றால், தீனா கண்டிப்பாக நல்ல நண்பனாகத்தான்

இருந்திருக்க வேண்டும்...' என்று நினைத்தவளாய், அவனையே பார்த்தபடி இருந்தவள்,

"இதெல்லாம் ஒரு சண்டை... இதுக்கு இந்தியா - பாகிஸ்தான் ரேஞ்சுக்கு பில்டப் வேற..." என்றபோதே, கணவனின் முறைப்பில் பேச்சை மாற்றியவள்,

"யுகி - ஆர்த்தியைச் சேர்த்து வையுங்க பாஸ். உங்க சண்டை எல்லாம் சீக்கிரம் தீர்ந்திடும், பாருங்க. ரெண்டு பேரும் சேர்ந்து கண்டிப்பா ஒரு கம்பெனி ஸ்டார்ட் பண்ணு வீங்க. இதெல்லாம் நடக்கணும்னா, யுகியை அனுப்பி வையுங்க அத்தான். சிடுமூஞ்சி அண்ணனுங்க தொல்லை இல்லாம லவ் பண்ணட்டும். என்ன ஒரு காதல் தெரியுமா? பார்க்காமலே, போன்லேயே லவ்ஸ். அதெல்லாம் உங்க ளுக்கு எங்கே புரியும்? ப்ளீஸ்... எனக்காக..."

கெஞ்சினாள், தீக்ஷா. அப்போதும் இறங்காமல் இருக்க,

"உங்க கிட்டே போய்க் கெஞ்சுறேன் பாருங்க... என்னைச் சொல்லணும்," என்றபடி அறையினை விட்டு வெளியேறப் போக,

"நில்லு...!" என்ற விஜய்யின் குரல் தடுத்து நிறுத்தியது.

"உன்னைத் தூது விட்டவன் கிட்டே போய்ச் சொல்லு... இன்னும் மூன்று மாதம் கழித்து அவனை அனுப்புறேன்னு..." என்று முடிக்க,

"அது என்ன மூன்று மாதம்...?" என்று எதிர்க் கேள்வி கேட்டவளைப் பார்த்து முறைக்க,

"இல்லை... அவன் கேட்பான். பதில் சொல்லணும்ல...", அசடு வழிந்தாள் தீக்ஷா.

"ரொம்ப அக்கறைதான்டி..." என்றபடி,



"நான் தொழில் ரீதியா கொஞ்சம் பிஸி ஆகிடுவேன். அப்போ அவன் சுரேந்தருக்கு உதவியா இருக்கணும்... அதனால்தான். தென்... ஆர்த்தி விஷயம் எனக்குத் தெரியும்னு இப்போதைக்கு அவன் கிட்டே சொல்லாதே..." என்று அவன் முடிக்கவில்லை,

தன் நண்பனிடம் சொல்லத் தீக்ஷா வேகமாய் ஓட, அவளை எட்டிப் பிடித்தான் விஜய்.

"காரியம் ஆன வுடனே கழட்டி விட்டுட்ட பார்த்தியா? நீ லஞ்சம் எதுவும் கொடுக்காமலே, நீ கேட்ட விஷயத்துக்கு ஓ.கே. சொல்லியிருக்கேன்ல..." என்றவனிடம்,

"லைட்டாகவும் கிடையாது, ஸ்ட்ராங்காகவும் கிடை யாது..." என்று தீக்ஷா சொல்ல, விஜய் அப்பாவியாய்ப் பரிதாபமாகப் பார்க்க, உதட்டைக் கேலியாகச் சுழித்த தீக்ஷா,

"மூன்று நாள் கழித்துப் பெரிய ட்ரீட்டே தருகிறேன் என் இந்தருக்கு... அப்படின்னு சொல்ல வந்தேன்," என்றபடி, போனவளை விடுவானா விஜய்...?

"நீ உன் ட்ரீட்டை மூன்று நாள் கழித்துக் கொடு. இப்போ என் ஸ்ட்ராங் கிஸ்ஸை வாங்கிட்டுப் போ..." என்று அவளைத் தன்னோடு இழுத்து அணைத்தவன், அழுத்தமாய் இதழ் பதித்து, அவளைத் திணறடித்து விட்டுத்தான் விட்டான்.

**யு**கியிடம் தீக்ஷா விஷயத்தைச் சொல்ல, யுகி மகிழ்ச்சிக் கடலில், அப்போதே கனவில் மூழ்க ஆரம்பித் தான்.

"தீக்ஷா... ரொம்ப ரொம்ப தேங்க்ஸ், தீக்ஷா..." என்றவனிடம்,

"ஆர்த்தியைக் கவனிக்கிறதோட, கொஞ்சம் உங்க அண்ணா கிட்டே சொல்லிட்டுப் போகிற காரியத்திலேயும் கவனம் வெச்சுக்கோ... இல்லை, இங்கே எனக்குப் பாட்டு கிடைக்கும்," என்று தீக்ஷா சொல்ல,

யுகி கண்ணடித்தான்.

"எங்க அண்ணாதான் சூப்பராப் பாட்டுப் பாடுவார்ல... அதைக் கேட்கக் கசக்குதா என்ன...!" என்று சொல்ல,

"ஹ்ம்... எனக்கேவா? இது சரிப்படாது... நீ போறதுக்கு முன்னாடியே இந்தப் பேச்சுப் பேசுறே... போயிட்டு வந்தேன்னா, என்னையெல்லாம் மதிக்க மாட்டே. உனக்கு இந்தியாதான் லாயக்கு. போன்ல லவ் பண்றதுதான் உனக்குத் தலை விதின்னு இருக்கும்போது, யாரால மாத்த முடியும்?" என்று மிரட்ட,

"ஐயோ அண்ணி... என் தெய்வமே... உங்களுக்கு எதிரா இந்த யுகி ஒரு வார்த்தை பேசுவானா? என்னை மன்னிச்சு ஏத்துக்கோங்க..." என்றவனைப் பார்த்துச் சந்தோஷமாய்ச் சிரித்த தீக்ஷாவின் சிரிப்பில் கலந்த இதே யுகிதான்... ஒரு நாள் தன் அண்ணனின் நிலை தாங்காமல், அவளிடம் பேசாமலும் இருந்தான்.

## 40

மங்கிய இரவு விளக்கின் ஒளியில் அந்த அறை நிரம்பியிருக்க, ஏதோ சப்தம் கேட்க, தீக்ஷா அசைந்தாள். கண் விழிக்காமலே கணவனின் அருகாமையைத் தேட... அவன் அருகில் இல்லை என்பதை உணர்ந்த தீக்ஷா, சட்டென்று வேகமாய் எழுந்து உட்கார்ந்தவளின் காதுகளில், குளியலறையில் தண்ணீர் விழும் சப்தம் கேட்க, மணியைப் பார்த்தாள். அதுவோ மூன்று என்று காட்டியது.

'இந்த நேரத்தில் ஏன் குளிக்கிறார்...?' என்றபடி, யோசனையுடன் மீண்டும் படுத்தவள், கணவன் வெளியில் வரும் சத்தம் கேட்டு, அவன் வரும் திசை நோக்கிப் பார்த்தபடி இருக்க... அவனோ விளக்கையே போடாமல், மொபைல் விளக்கின் ஒளியுடன், ஏதோ செய்து கொண்டிருந்தான்.



எழுந்த தீக்ஷா, விளக்கைப் போட்டபடியே,

"என்ன பண்ணிட்டு இருக்கீங்க, அத்தான்...?" என்று அவனை நோக்கிக் கேட்க,

"உன்னை டிஸ்டர்ப் பண்ணக் கூடாதுன்னுதானே லைட் போடாமல் ரெடி ஆகிட்டு இருக்கேன். நீ தூங்கு," என்றபடி தன் வேலையில் கவனமாக இருக்க,

"என்னது...? ரெடி ஆகிட்டு இருக்கீங்களா...? எங்கே? எதுக்கு? இந்த நேரத்திலேயா...?" என்றவளின் படபட கேள்விகளுக்கு எல்லாம் பதில் சொல்லாமல்,

"வந்து சொல்கிறேன்..." என்று நிதானமாகச் சொல்லி விட்டுத் தன் அலுவலக அறையை நோக்கிச் செல்ல, இவளும் வேகமாய் அவன் பின்னே போக எத்தனிக்க... ஏனோ தலை சுற்றுவது போல் இருக்க... அவன் பின்னே போகாமல் அப்படியே அமர்ந்து விட்டாள்.

'இத்தனை சீக்கிரமாக எழுந்ததுதான் தன் தலை சுற்றலுக்குக் காரணம் போல்...' என்று தவறாகக் கணித்தவள், தன்னை ஆசுவாசப்படுத்தியபடி, குளியலறைக்குள் நுழைந்தாள்.

குளியலறைக்குள் நுழைந்த வேகத்திலேயே வெளியே வந்தவள், அடுத்துக் கணவனின் முன்தான் நின்றாள்.

"எங்கத்தான் கிளம்பறீங்க...?" என்றபடி அவன் எதிரில் அமர்ந்தாள்.

"ஆபீஸுக்கு..." என்ற வார்த்தைகள்தான் வந்தன. பார்வை கோப்புகளில் இருந்தது. அவனையே பார்த்தபடி பத்து நிமிடம் இருந்தவளுக்கு... அதுவே அதிகமாய்ப் பட,

"ஏன் இவ்ளோ சீக்கிரம்...?" என்று அடுத்த கேள்வியைக் கேட்க,

"பேசாமல் இருக்கியா...!" என்றவன், அடுத்த நொடியே...

"அது முடியாது உன்னாலே. அதனாலே, ரூமுக்குப் போறியா? எனக்கு வேலை இருக்கு..." குரலில் கெஞ்சல் எல்லாம் இல்லை... கண்டிப்புதான் இருந்தது.

வாயே திறக்காமல், அமைதியாக இருந்தாள். சாதனைதான், அவளைப் பொறுத்தவரை.

விஜய், அவ்வப்போது எழுந்து, அலமாரியில் அடுக்கி வைக்கப்பட்டிருந்த ஃபைல்களை எல்லாம் எடுத்தபோது, உதவி செய்ய எழுந்தவளைக் கூட, வேண்டாம் என்று சொல்லி விட,

இவ்வளவு தீவிரம் என்றால், அது எந்த ப்ராஜெக்ட் என்று தீக்ஷாவுக்கும் ஓரளவு புரிய... தன் சாதனையின் கால அளவை நீட்டினாள்.

ஆனாலும் அவளால் சும்மா இருக்க முடியவில்லை.

விஜய்யின் மொபைலை எடுத்து நோண்டியபடி இருந்தவள், அதில் பாடலை ஒலிக்க விட,

'ரோஜாப்பூ ஆடி வந்தது ராஜாவைத் தேடி வந்தது
பூவைக் கொஞ்சம் நீ சூடு பூவின் தேனில் நீராடு
பேசிப் பேசித் தீராது ஆசை என்றும் ஆறாது
லவ் லவ் என்பதா சொல் சொல் மன்மதா
சொன்னால் போதுமா தாகம் தீருமா...'

விஜய் நிமிர்ந்து, வழக்கமான முறைப்பை வீச,

'பேசக் கூடாதுன்னுதானே சொன்னீங்க... பாட்டுக் கேட்கலாம்ல...' என்று சைகையால் சொல்ல,

விஜய் பதிலாய் வேறென்ன கிடைத்திருக்கும் அவளுக்கு... அவன் கண்களின் முறைப்புதான்.



அதை எல்லாம் லட்சியம் செய்பவளா அவன் மனைவி. பாடலை ஒலிக்க விட,

நேற்று நீர் விட்டது இன்று வேர் விட்டது
நெஞ்சில் அம்மாடியோ நூறு பூப் பூத்தது...
சின்னஞ்சிறு பருவம் இன்னும் கொதிப்பதோ
சொல்லிச் சொல்லிப் பொழுதை இன்னும் கழிப்பதோ!

தொடு தொடு தொடாமல்
நாவின் மேனி நாளெல்லாம் மீட்டுதே
ரோஜாப்பூ ஆடி வந்தது ராஜாவைத் தேடி வந்தது

நீயும் அச்சம் விடு நூறு முத்தம் இடு
மீதம் மிச்சம் எடு மேலும் சொல்லிக் கொடு
அந்திப் பகல் இரவு சிந்தை துடிக்குது
அந்தப்புர நினைவில் சிந்து படிக்குது
இதோ இதோ உன்னாலே
விடாமல் மோகம் வாட்டுது தாங்குமா
ரோஜாப்பூ ஆடி வந்தது ராஜாவைத் தேடி வந்தது

பாடல் தன் வேலையைக் காட்டியது.

விஜய்யின் கவனம் அந்தப் பாடல் ஆரம்பித்தபோது எங்கு இருந்ததோ, அதே வரியில் இருக்க... ஃபைலை மூடி வைத்தவன் நிமிர்ந்தான்.

'என்ன...' என்று கண்களால் சமிக்ஞை காட்டிக் கேட்க... விஜய் பேச ஆரம்பித்தான்.

"இந்தப் பாட்டு முடிந்தவுடன் ஹீரோ கையால ஹீரோயின் கன்னத்துல செம அடி கிடைக்கும், தெரியுமா... வாங்க ரெடியா?" – நக்கலாகத்தான் கேட்டான்.

தீக்ஷா தலை சாய்ந்து, அவன் முன் கண் சிமிட்டி னாள்.

"இது அந்த சாங் இல்லத்தான்... அது வேற சாங். தீக்ஷாவா கொக்கா... அதெல்லாம் போட... இந்தப் பாட்டு முடிந்தவுடனே ஹீரோ ஹீரோயினைத் தூக்கிட்டுப் போற மாதிரிதான் சீன் வரும். தூக்க ரெடியா...? நான் ரெடிப்பா!" என்றவளின் வார்த்தைகளில் விஜய் தான் அப்பாவியாய் மாறிப் போக... பேந்தப் பேந்த விழித்தான்.

"தேவையா இந்தர்..." என்று சிரிக்க...

பல்லைக் கடித்த விஜய்... "தயவு செய்து கிளம்புறியா?" என்று தன் பொறுமையை இழுத்துப் பிடித்தபடி பேச...

"உங்களுக்காக உங்க மனைவி ரொமான்டிக்கா சாங் போட்டால்... கௌம்புறியானு கேட்கிறீங்க... நான் ஏதாவது பேசினேனா... நீங்கதானே ஆரம்பிச்சீங்க... கான்சென்ட்ரேஷன் வேண்டும் பாஸ்... நான்தானே பாட்டு கேட்டுட்டு இருக்கேன். நீங்க உங்க ஃபைலைப் பார்க்க வேண்டியதுதானே... நீங்க ஏன் பாட்டைக் கேட்கிறீங்க?" என்று ஒன்றுமே இவள் பண்ணாதது போல் கேட்க...

விருமாண்டியாகவே மாறி விட்டான் விஜய்.

"உன்னை..." என்று கோபமாய் எழ... அடுத்த பாடலை ஒலிக்க விட்டாள்.

தூங்காத கண்களால் நீங்காமல் காண்கிறேன்
நீதானே என் காலைகளின் சூர்யோதயம்
தாங்காமல் பெண் நிலை தாலாட்டுக் கேட்கிறேன்
நீயில்லையேல் பாவை மனம் பாலை வனம்
ஹே ப்ரம்ம தேவா தர வேண்டும் நூறாண்டுகள்
நான் காதல் செய்யப் போதாது நூறாண்டுகள்
கண்ணே உன் வாசகம் என் ஜீவ யாசகம்
கண்ணா என் மன்னா நீ கோடிப் பேரில் மானுடன்



விஜய்... இப்போது இந்தராய் மாறி இருக்க வேண்டும்தான்... அந்த உருகலான பாடலில்... இன்று இருக்கும் சூழ்நிலையில்... அவனால் விருமாண்டியாகவும் மாற முடியாது. இந்தராகவும் மாற முடியாது. ஏனெனில் அதற்கெல்லாம் அவனுக்கு நேரம் இல்லை.

இந்தக் கோப்புகளை எல்லாம் சரி பார்த்து முடித்து... இன்னும் நிறைய வேலைகள் வரிசையில் இருக்க... அவன் நிலை தெரியாமல் அவன் மனைவி விளையாடிக் கொண் டிருந்தாள்.

விஜய் அவளிடம் வழக்கடித்தால் அவனுக்குத்தான் தோல்வி கிடைக்கும். எனவே மௌனமாய்... தன் வேலையில் கவனம் செலுத்த ஆரம்பித்தான்.

பூந்தென்றலே நீ பாடி வா
பொன் மேடையில் பூச் சூட வா
ஏன் இந்தப் பெண் மனம் ஏகாந்தமானது
நீ பாடினால் பூவானது தேனானது
நீ வந்து காவியம் நிஜமாகிப் போனது
வார்த்தைகளில் தீராதது நான் கண்டது
பூலோக சொர்க்கம் கண் முன்னே நான் காண்கிறேன்
நீ தேவ வர்க்கம் உன் நெஞ்சில் நான் வாழ்கிறேன்
காலங்கள் மாறினும் தேகங்கள் போயினும்

தீக்ஷா அந்தப் பாடலில் லயித்திருக்க... விஜய்க்கும் அந்தப் பாடல் பிடிக்கும்.

சற்று முன் பாடலின் காட்சியைப் பற்றிப் பேசியதால் இந்தப் பாடலின் காட்சியும் அவனையும் அறியாமல் வந்து போக... அந்தப் பாடலின் முடிவில்... கதாநாயகி மின்சாரம் தாக்கி இறந்து போகும் காட்சி கண் முன் வந்து போக... ஏதோ ஒரு உணர்வில்... விஜய் சட்டென்று மொபைலை எடுத்து அணைத்து விட்டான்.

பாடல் முடியும் முன்னே... தீக்ஷா தன் கணவனின் எண்ணம் புரிந்தவளாய்...

"அரை குறையாத்தான் பார்ப்பீங்களா பாஸ்... இது ஒன்லி ஃபீமேல் வாய்ஸ்தான். இதில் ஹீரோயின் சாக மாட்டாள். அது ஹீரோ – ஹீரோயின் சேர்ந்து பாடும்போது..." என்றவளின் வார்த்தைகளில்,

"எதுவோ பாட்டு ஒண்ணுதானே... ப்ளீஸ் தீக்ஷா... என்னை வேலை பார்க்க விடு..." – கையெடுத்துக் கெஞ்சியே விட...

"சரி, போங்க... உங்களைப் பார்த்தா ரொம்பப் பாவமா இருக்கு. அதனால தீக்ஷா விடறா... உங்க மேல பாவப் பட்டுல்லாம் இல்ல... என் இந்தருக்கு இந்த முகம் செட் ஆகல..." என்றபடி, அதற்கு மேல் பேசாமல்... ஹெட்செட்டைத் தன் காதுகளில் மாட்டியவள்... அதன் பாடல்களில் ஐக்கியமாகி விட, விஜய்யும் தன் வேலைகளில் மூழ்கி அதை முடித்தும் விட்டான்.

விஜய் அழைத்தபோதுதான்... தீக்ஷா அவனைக் கவனித்தாள்.

"முடிச்சுட்டீங்களா, அத்தான்...?" என்றபடி, "அத்தான், சூப்பர் சாங். ரிபீட்டட் மோட்ல போட்டுக் கேட்டுட்டு இருக்கேன். கேட்கிறீங்களா...?" என்றவளிடம்,

"அதெல்லாம் கேட்க டைம் இல்ல... வா..." என்ற போதே,

"அய்யோ... அத்தான்... நீங்க கேட்கணும். ஏன்னா... நீங்க இதை எனக்காகப் பாடணும். நேயர் விருப்பம்," என்று கெஞ்சலாகக் கூற, அதற்கெல்லாம் பதில் சொல்லாத விஜய்,

"என் மொபைல்ல யாரைக் கேட்டு இந்தப் பாடல் எல்லாம் பதிவு பண்ணி வெச்சிருக்கே...? உன்னை..." என்றவனிடம்,



"யாரைக் கேட்க வேண்டும்? இங்கே நான்தானே இருக்கேன். என் கிட்டேயே நான் கேட்கணுமா?" என்று அவனின் இதயம் இருக்கும் இடத்தில் கை வைக்க,

அவளது பேச்சை, அவனையும் மீறி ரசித்தவன்,

"உங்க அம்மா கிட்டேதான்டி கேட்கணும். பிறக்கும் போது நீ பேசிட்டே பிறந்தியான்னு..." என்றவன், ஞாபகம் வந்தவனாய்,

"என் மொபைலில், உங்க அம்மா பேரை ஜெயந்தின்னு மாற்றி வெச்சிருக்கே... என்னைக்கு உங்க அம்மா கிட்டே நான் வாங்கிக் கட்டிக்கப் போறேனோ..." என்று கவலை யாய்ச் சொல்ல,

"ச்சேய்... அம்மா உங்களுக்கெல்லாம் தோசைக் கரண்டி சூடு வைக்க மாட்டாங்க. அவ்ளோ மரியாதை! சோ, நோ பயம்..." என்றவள், நக்கலாய்க் கண்ணடிக்க,

சிரித்த விஜய், அவளது உதட்டைத் தன் கையால் இழுத்தபடி,

"இது வாயா... இல்லை, வேற எதுவுமா...?" என்று சுண்ட,

"ஸ்ஸ்... ஆ... அத்தான்... வலிக்குது," என்று எம்பிக் குதித்தவள், "பேச்சை மாத்தாதீங்க... பாட்டுப் பாடுவீங்களா, மாட்டீங்களா...?" என்று தன் பிடியிலே நிற்க,

விஜய், அவளை ஒரு மாதிரியாகப் பார்த்தபடி,

"ஏன்... அது குத்துப் பாட்டா? என்னைப் பாட வைக்க இவ்ளோ ஆர்வமா இருக்கே நீ... மொத்தமா என்னை டேமேஜ் பண்றதில் உன்னை அடிச்சுக்க ஆளே கிடையாதே!" என்றவனை முறைத்த தீக்ஷா,

"ஏன்... குத்துப் பாட்டுன்னா பாட மாட்டீங்களோ...? அதுவும் சாங்தானே!" என்றவள்,

"ஹீரோன்னா, எல்லாம் பண்ணணும். ரொமான்ஸ், அம்மா சென்ட்டிமென்ட், தங்கை சென்ட்டிமென்ட், வில்லத் தனம், டான்ஸ்... இப்போ இருக்கிற ஹீரோல்லாம்... எல்லாம்தானே பண்றாங்க... குத்துப்பாட்டுக்குக் கூட டான்ஸ் ஆடுறாங்க. உங்களை ஆடவா சொல்றேன்... பாடத்தானே சொல்றேன்..." என்று பேசிக் கொண்டே போக,

விஜய்யால் முடியவில்லை. ஒரு கட்டத்தில் அவள் வாயைப் பொத்தியவன்,

"தெரியாம சொல்லிட்டேன்டி..." என்று நொந்து போனவனாய்ச் சொல்லும்போதே...

"கையால் வாயை மூடுறான்... இவனெல்லாம்..." வாய் அவனது கரங்களில் சிறைப்பட்டிருந்த போதும், எண்ண ஓட்டம் அவன் கண்களில் நக்கலாய் வர,

அவளின் எண்ண ஓட்டம் புரிந்து, கலகலப்பாய்ச் சிரித்த விஜய்,

"மேலோட்டமா வாயை மூட மாட்டான் உன் இந்தர். அப்புறம், எல்லாம் கெட்டுச்சு. இளா வெயிட் பண்ணிட்டு இருக்கான். வாங்க செல்லம்... என்னை ரொம்பச் சோதிக் காதே!" என்று சொல்ல, 'இளா' என்று விஜய் சொன்னதாலோ என்னவோ... அமைதி ஆகி விட்டாள் தீக்ஷா. அதற்கு மேல் அவனிடம் வாயாடவில்லை.

விஜய், அவளுடன் மீண்டும் அறைக்கு வந்தபோது,

"அத்தான்... உங்க தீவிரத்தைப் பார்த்தால் **BURJ KHALIFA**-க்குப் போட்டியா சென்னையிலேயே கட்டிருவீங்க போல..." என்று கிண்டலடிக்க,

"என்ன, நக்கலா?" என்றவனிடம்,

"ஏன்... என் அத்தானாலே முடியாதா என்ன...?" என்று சவால் விடுபவள் போலப் பேசிய தீக்ஷாவைத் தன்னருகே அழைத்தான் விஜய்.



"தீக்ஷா... இந்த ப்ராஜெக்ட் என் வாழ்க்கையில ரொம்ப முக்கியமான விஷயம்..." என்று முடிக்கவில்லை அவன்,

அவனவளோ, "என்னை விடவா...?" என்று எதிர்க் கேள்வி கேட்க,

முறைத்தான் விஜய்.

"சொல்றதை மட்டும் கேளு. அதிகப்பிரசங்கித்தனமாப் பேசாதே!" தான் இத்தனை சீக்கிரமாய்க் கிளம்பும் காரணத்தைச் சொல்ல,

அதைக் கேட்டவள், "தீனாவுக்குத் தெரியாதா? அவருக்குத் தெரியாமல் பிளான் பண்ணி, துபாய் போறீங்களா? என்னைக்குப் போறீங்க?" என்றபோது, அவளையும் அறியாமல் குரல் கம்ம,

"தெரியவில்லை..." என்று கூசாமல் பொய் சொன் னான் விஜய். ஏனெனில், இன்றே கிளம்பும் முடிவில்தான் இருந்தான். கிட்டத்தட்ட 99% உறுதி ஆகி இருக்க... மனைவி யிடம் அதைச் சொல்லவில்லை அவன்.

அதன் பிறகு, கார் நிறுத்துமிடம் வரை வந்த தீக்ஷாவுக்கு, ஏனோ மனம் கனமாயிருக்க,

"அத்தான்... நான் நம்ம ஸ்ட்ரீட் வரைக்கும் வரவா?" வாய்தான் அனுமதி கேட்டதே ஒழிய, அவள் செயல் அப்படி இருக்கவில்லை. அவன் அனுமதி அளிக்கும் முன்னே காரில் ஏறி அமர்ந்தவள்,

"சீக்கிரம் போறீங்க... சீக்கிரமா வரணும். உங்களுக்கு இன்னைக்கு ஒரு சர்ப்ரைஸ்..." என்றவள், "இல்லை யில்லை... ரெண்டு சர்ப்ரைஸ்..." என்று சொல்ல,

"என்ன...?" என்று கேட்டான் விஜய்.

"அதுதான் சர்ப்ரைஸ்னு சொல்லிட்டேன்ல..." என்ற போது, அவனுக்கும் தெரியாமல் இல்லை. நாளை தீக்ஷாவின் பிறந்த நாள் என்று அவனுக்கும் தெரியும்.

அதனாலே அவளிடம் தன் பயணத்தை மறைத்தான், விஜய். அலுவலகம் சென்று, அங்கே முடிவெடுத்தது போல... அவளிடம் சொல்லி விட்டு... அங்கிருந்தே கிளம்பு வதே அவனின் திட்டம். ஆனால், ரெண்டு சஸ்பென்ஸ் என்று சொல்கிறாளே... என்று யோசித்தவன், சிந்தனையில் இருக்க...

அவன் யோசிப்பதைப் பற்றி எல்லாம் கவலைப்படாமல் அவள் பேசிக் கொண்டிருக்க, தெரு முனையும் வந்து விட, காரை நிறுத்திய விஜய்... அவனும் இறங்கி,

"வா... கேட் வரை விட்டுட்டு வர்றேன்," என்றான்.

"சாரி அத்தான்... உங்க டென்ஷன் எனக்கும் புரியுது. நான் செய்வதெல்லாம் ஓவர்னு எனக்கும் புரியுது. ஆனால், என்னை மாத்திக்க முடியலை. ஆனால், நீங்க நான் பண்றதையெல்லாம் எப்படி அத்தான் பொறுத்துக்கிறீங்க...?" என்று அவன் கரம் கோத்துத் தோள் சாய்ந்தவளை அணைத்தபடி நடந்தவன்,

"இவ்ளோ பேசுறவ... கொஞ்ச நேரம் முன்னால் கேட்டேல்ல... என் வாழ்க்கையிலே முக்கியமான விஷயம் நீயா, இல்லை என் தொழிலான்னு... ஏன் அப்படிக் கேட்டே...?" என்றபோது,

சிரித்தவள், மௌனத்தையே பதிலாகத் தந்தாள். அதன் பிறகும் பேசவில்லை. விஜய்க்கு அவளின் மௌனம் ஆச்சரியம் அளிக்கத்தான் செய்தது.

பதிலுக்குப் பதில் எப்போதும் பேசுவதால்... சாதா ரணமாக விஜய்யால் அவளின் வேகத்திற்கு ஈடு கொடுத்துப்



பேச முடியாது. இன்று அவளின் மௌனம் அவனைப் பேச வைத்தது. இல்லையில்லை, உளற வைத்தது என்றே சொல்லலாம்.

"தீக்ஷா..." என்றபோதே அவன் குரலில், அவளது ஒவ்வொரு எழுத்தும் கொஞ்சலாய் வெளிவர, இவளோ...

"ஹ்ம்..." என்றாள் ஒற்றை வார்த்தையில். ஏனோ வார்த்தைகள் அவளிடமிருந்து வரவில்லை.

"இங்கே நீ இருக்கேன்னு சொன்னேல்ல... நீ அங்கே இருக்கிறது மட்டும் இல்லை. அதில் ஒலிக்கிறது கூட தீக்ஷா... தீக்ஷா... என்கிற உன் பேர்தான்." அக்மார்க் கணவனாய்ப் பிதற்றலில் இறங்க ஆரம்பித்தான் அவள் மனைவியின் இந்தர்.

இதுவரை அவனுள் மூழ்கி மௌனமாக இருந்த தீக்ஷா, அவன் வார்த்தைகளில் சுயத்திற்கு வந்தவள்,

"ஏன் லூசுத்தனமா உளர்றீங்க...? அதெல்லாம் தீக்ஷா... தீக்ஷான்னெல்லாம் சொல்ல வேண்டாம். லப் டப்னு துடிச்சாலே போதும்," என்று கறாராய்ச் சொல்ல,

விஜய், உச்சகட்ட எரிச்சலுடன் பார்த்தான்.

"ஏன்டி... நீ பேசுறது இது வரைக்கும் ஏதாவது உருப் படியா இருந்திருக்கா...? அதெல்லாம் நான் கேட்டுக்கலை. நானே என்னைக்காவதுதான் இப்படிப் பேசுவேன். கேட்டுட்டுப் போயிட்டே இருப்பாளா... நான் லூசுத்தனமா பேசுறேன்னா... அப்புறம் நீ பேசுறது எல்லாம் என்ன...?" என்று கோபமாய்க் கேட்டே விட்டான் விஜய்.

"அய்யோ அத்தான்... தப்பா எடுத்துக்காதீங்க... நான் ஏன் சொன்னேன்னா..." என்று இழுத்தவள்,

"தீக்ஷா, தீக்ஷா, தீக்ஷான்னு தொடர்ந்து சொன்னா... அது ஒரு கட்டத்தில் சக்தின்னு மாறிடும். என் இந்தர் நெஞ்சில்

அவனோட தீக்ஷா பேர் மட்டும்தான் இருக்கணும். அதனால தான் அப்படிச் சொன்னேன்," என்று தீவிரமாய் விளக்கம் அளிக்க,

அவளை அணைத்திருந்த விஜய், தீக்ஷா, தீக்ஷா, தீக்ஷா என்று சொல்ல ஆரம்பிக்க, அது சக்தி என்று முடியவே இல்லை. புருவம் உயர்த்தியபடி அவளைப் பார்த் தவன்,

"எத்தனை தடவை சொன்னாலும் என் நாக்குப் பிறளாது செல்லம். டங் ட்விஸ்டர் எத்தனை சொல்வேன் தெரியுமா? அது மட்டும் இல்லாமல், பாட்டு கிளாஸ் வேற போய் இருக்கேன்..." என்று பேசிக் கொண்டே போனவனை மனதோடு ரசித்தபடி, மௌனத்தைத் தன் மொழியாக மாற்றி இருந்தாள் தீக்ஷா விஜயேந்தர்.

அதன் பின் அவனிடமிருந்து விடை பெற்றவள், அவனை விட்டு இரண்டு அடி எடுத்து வைக்கவில்லை... மீண்டும் அவனிடம் திரும்ப,

"இந்தப் பழக்கத்தை மாத்தவே மாட்டியா நீ...?" என்று சிரித்தபடியே கிண்டலடிக்க, அவன் நக்கல் எல்லாம் அவள் காதில் விழவில்லை.

அந்தத் தெருவே நிசப்தமாய் இருக்க, சுற்றும் முற்றும் ஒருமுறை பார்த்தவள், அவன் அருகே நெருங்க... அவள் எண்ணம் புரிந்தவனாய்... அவனும் சுற்றும் முற்றும் பார்க்க ஆரம்பிக்க, அதற்கெல்லாம் நேரம் கொடுக்காமல் அவனைத் தன்புறம் இழுக்க... சுதாரிக்க ஆரம்பித்த விஜய், வேகமாய்த் தன் கைகளால் அவளை மறிக்கப் பார்க்க...

விஜய்யின் வேகம் அவளிடம் எடுபடவில்லை. அவன் இதழில் அழுத்தமாய்த் தன் முத்தத்தைப் பதித்து விட்டுத்தான் அவனை விட்டாள் தீக்ஷா.



விஜய் இதை எதிர்பார்க்கவே இல்லை. கன்னத்தில் கொடுக்கப் போகிறாள் என்றுதான் சுதாரிக்கப் போனானே தவிர, இதழில் எதிர்பார்க்கவே இல்லை. என்னதான் கணவன் மனைவி என்றாலும்... தெருவில் போய்... அவளது இதழ் ஒற்றலில் மோகத்தில் சொக்காமல், கோபத்தில் கண் சிவந்தான் விஜய். அதன் விளைவாக,

"ஏய்... அறிவிருக்காடி உனக்கு...?" என்று திட்ட ஆரம்பித்தவனின் வாயைத் தன் கைகளால் பொத்தியவள்,

அவன் கண்களை நேருக்கு நேராகப் பார்த்து, அழுத்தமாய்ச் சொன்னாள்...

"இந்தர்... உங்கள் வாழ்க்கையில , நான் முக்கிய மானவளாக இருக்கலாம். ஆனால், என் வாழ்க்கையே நீங்கதான். அதைப் புரிஞ்சுக்கங்க. இந்தர் இன்றி, இந்தத் தீக்ஷா இல்லை..." என்றவளின் வார்த்தைகளில் விஜய் ஸ்தம்பித்து நிற்க, அவனின் கண்களோடு மீண்டும் கலந் தவள், தன் பார்வையை விலக்கித் தன் கைகளை அவன் உதடுகளில் இருந்து விடுவித்து, அவனை விட்டு விலகி ஓடியவள்... அதன் பிறகு அவன் புறம் திரும்பவே இல்லை.

**வி**ஜய் அப்படியே நின்றிருந்தான். எத்தனை நிமிடம் நின்றிருந்தானோ... அவனைக் கலைத்தது இளமாறனிட மிருந்து வந்த அழைப்புதான். நொடியில் தன்னைச் சுதாரித்த விஜய், அவனோடு பேசியபடி, பயண விபரத்தையும் சொல்ல ஆரம்பித்தவன், நாயகியின் நாயகனாக இருந்த நிலை மாறி, விஜய் பில்டர்ஸின் தலைவனாய் மாறி இருந்தான்.

இவன் நிலை இப்படி இருக்க... இளமாறனோ தன் திட்டங்களை எல்லாம் ஆரம்பித்து இருந்தான். விஜய்யோடு பேசி வைத்தவன், அடுத்துத் தன் போனில் இருந்த ஒரு எண்ணுக்கு அழுத்தினான்.

"மோகன்... உனக்கு மூன்று நாள்தான் டைம். நான் உன் கிட்டே கொடுத்திருக்கிற போட்டோவுல இருக்கிற பொண்ணைக் கடத்தணும். அவளைச் சின்னாபின்ன மாக்கிடு. இதில் என் பேர் எக்காரணத்தைக் கொண்டும் வரக் கூடாது. நீயும் டைரக்ட்டா இன்வால்வ் ஆகக் கூடாது..." என்றவனின் கட்டளைக்கு மறுமுனை பணிந்தது.

இளமாறன் சந்தோஷத்தில் துள்ளினான்.

'இதோ... தான் கனவாக நினைத்த ப்ராஜெக்ட், தன் கைக்கு வரப் போகிறது. விஜய்யோடு கூட்டணிதான்... ஆனால், துபாய் போய்த் திரும்பி வரும்போது, அவன் விஜய்யாவா இருப்பான்...? தன் மனைவியை எண்ணி, எண்ணி... அவளின் நிலையை எண்ணி... சுத்தமாய் இத்துப் போவான். தான் மட்டுமே இனி இந்த ப்ராஜெக்டின் முதலாளி...' எக்காளமிட்டது அவன் மனம்.

'தன் கனவும் நிறைவேறிவிடும்... அந்தத் தீக்ஷாவை யும் பழி வாங்கி விட்டோம்... விஜய் மனைவி என்பதாலேயே அவளுக்கும் இந்த அதிகப்படியான தண்டனை...' என்று தன் திட்டங்களில் சிலாகித்தவன்,

'சோ சாரி மிஸஸ் விஜயேந்தர்...' என்று தனக்குள் சொல்லிக் கொண்டவனுக்கு... காலமும் சோ சாரி என்று சொல்லத் தயாராக ஆகி இருந்தது.

கிட்டத்தட்ட இரண்டு மணி அளவில், தீக்ஷா வழக்கம் போல் தன் அரட்டைப் பணிகளை முடித்தவள், அறைக்கு வந்தபோது, கணவனிடம் அவள் சொல்லி இருந்த முதல் சர்ப்ரைஸ் காரணத்தை நினைத்துப் பார்த்தாள்.

'சொன்னால் கணவன் தன்னைக் கேலி செய்வானோ...?' என்று எண்ணியவள்...

'என்ன சொன்னாலும் பரவாயில்லை... கேலி பண்ணி னாலும் பரவாயில்லை...' தனக்குள் சொல்லிக் கொண்டாள்.



காரணம்... இன்றைய தினம் அவர்களின் திருமணம் முடிந்து நூறாவது நாள். 'காலையில் மட்டும் சொல்லி யிருந்தேன்... விருமாண்டியா மாறியிருப்பான். இல்ல... பெரிய இவன் மாதிரி... லூசு மாதிரி இதையெல்லாம் கவுண்ட் பண்ணுவியான்னு நக்கல் பண்ணியிருப்பான்...' என்றபடி தன் உலகில் சஞ்சரித்தவளுக்கு,

அவனின் வெளிநாட்டுப் பயணம் மனதில் தோன்ற... மனம் ஏதோ சரி இல்லாதது போல் இருக்க... சுனந்தாவைப் பார்த்து வருவோம் என்று முடிவெடுத்தவளாய்... தீக்ஷா, ஆடை தேடலில் மூழ்கியவளின் கண்களில் பிங்க் வண்ணப் புடவை பட...

'இதைக் கட்டிட்டுப் போனோம்... வைஜெயந்தி ஒரு பெரிய புராணமே ஆரம்பிச்சுருவாங்க...' என்றபடி மீண்டும் வைத்தவளின் கண்களில், அதன் அருகே இருந்த பிங்க் வண்ணச் சட்டை இருக்க... அவளையுமறியாமல் அவள் கரம் அதை எடுத்து அவளோடு சேர்த்தது.

தன் இதழ் பதிந்திருந்த தடம் லேசாய் இருக்க...

வேகமாய்த் தன் ட்ரெஸ்ஸிங் டேபிள் அருகே போனவள்... அடர் சிவப்பு நிற உதட்டுச் சாயத்தைத் தன் இதழ்களில் தடவியவள், அழுத்தமாய் அதன் அச்சாரத்தை அந்தச் சட்டையில் பதித்தவள்,

'ஹ்ம்... இப்போ கரெக்ட்டா இருக்கு... ஹேய் இந்தர்... லேசா நான் கொடுத்ததுக்கே ஒரேயடியா சாஞ்சுட்டே... இப்போ என்ன பண்ணப் போறே...?' தன் கணவனின் காதலில் கசிந்துருகினாள் தீக்ஷா.

'விருமாண்டிக்குள்ள இப்படி ஒரு காதலா...!' அவனை முதன் முதலில் பார்த்த ஞாபகம் முதல், இன்றுவரை தனக்குள் ஓட்டியவள்,

'தனக்காக இந்த அளவு இறங்கியிருக்கிறான்... ஆனால், நான் அதே குறும்போடு... விளையாட்டுத் தனமாய்... கொஞ்சம் கூட மாறாமல், அப்படியேதான் இருக் கிறேன். என்னதான் முயற்சித்தாலும் மாற முடியவில்லை.'

எண்ண ஓட்டங்களில் இருந்த தீக்ஷா, தன் மொபைலை எடுத்துக் கணவனை அழைக்கப் போக... அவனே அடித்தான்.

வியந்தபடியே... "அத்தான்... ஆயுசு நூறு உங்க ளுக்கு..." என்று தன் வழக்கமான பாணியில் பேச ஆரம் பிக்க,

"ஆரம்பிச்சிட்டியா...? என்ன திடீர்னு..." என்றவனின் குரலில்,

"இப்போதான் உங்களை நினைத்தேன். போன் பண்ணலாம்னு மொபைலைக் கையில எடுத்தேன். நீங்களே பண்ணிட்டீங்க..." என்றவளின் துள்ளலான பேச்சில்,

"சோ... அப்பப்பதான் என்னை நினைக்கிறே... ஆனா, உன் இந்தர் அப்படி இல்லம்மா..." என்றவனின் காதல் வார்த்தையில் உள்ளுக்குள் உருகினாலும்,

"எனக்கு மூன்று வயசுலேயே என் தாய் மாமா மடியில் வெச்சுக் காது குத்திட்டாங்க அத்தான். ஏன் மறுபடியும் குத்த நினைக்கிறீங்க...?" என்று சலிப்பாய்ச் சொல்ல,

சிரித்த விஜய், "உன்கிட்ட எல்லாம் பேசி ஜெயிக்க முடியுமா? அது மட்டும் இல்லாமல் எனக்கு நேரமும் இல்லை. நான் போன் பண்ணிய விசயத்தை விட்டுட்டு... வேற ஏதேதோ பேசிட்டு இருக்கேன் பாரு... அப்படியே டைவர்ட் பண்ணிருவடி..." என்றவன், தான் உடனடியாகத் துபாய் கிளம்ப வேண்டுமென்று... அங்கிருந்தே கிளம்பிப் போக வேண்டுமென்று சொல்ல...



அமைதியாய் இருந்தாள் தீக்ஷா. எதுவுமே பேசவில்லை.

விஜய்க்கும் கஷ்டமாகத்தான் இருந்தது. என்ன செய்வது... போயாக வேண்டுமே... அவளின் பதிலுக்குத் தவிப்புடன் காத்திருக்க...

"போயிட்டு வாங்கத்தான்... கண்டிப்பா உங்களுக்கு வெற்றிதான் கிடைக்கும்..." என்றவளின் அமைதியான குரலில்...

"தீக்ஷா..." என்று அவனின் குரல் உள்ளுக்குள் போக...

"சொல்லுங்க, அத்தான்..." என்றபோது தீக்ஷாவின் குரல் சாதாரணமாக ஆகியிருக்க....

"நான் இங்கே இருந்தே கிளம்புறேன்னு சொல்றேன்... கோபம் வரலையா உனக்கு?" - அடங்கிய குரலில் சொற்கள் வெளிவந்தன.

"கோபம் இல்லை. ஆனால் உங்களைப் பார்க்க முடியலேன்னு லேசா கஷ்டமா இருக்கு... அவ்ளோதான்... எத்தனை நாள் அத்தான்...? சீக்கிரமா வந்திடுங்க..."

"த்ரீ டேஸ் தான். ஓ.கே.வா... தென்... பன்னிரண்டு மணிக்கு எப்படியாவது உனக்கு கால் பண்ணிடுவேன். சாரி, தீக்ஷா... நம்ம மேரேஜ் முடிந்து உனக்கு வருகிற முதல் பிறந்த நாள். என்னால இருக்க முடியலை... நேத்து நைட்தான் எனக்குத் தகவல் வந்துச்சுடா!" - வார்த்தைகள் அவள் கணவனிடமிருந்து குற்ற வுணர்வில் வந்து விழ...

அவன் மனைவியோ... "ஹலோ பாஸ்... ரொம்ப ஃபீல் பண்ணாதீங்க. பிறந்த நாள்தானே. அது வருசம் வருசம் வரும். இந்த ப்ராஜெக்ட் அப்படியா...? விடுங்க பாஸ்... அடுத்த பிறந்த நாளை ஜாம் ஜாம்னு கொண்டாடிடலாம்..." என்று கணவனை ஓட்ட...

விஜய்யோ, "என் தீக்ஷாவை அடிச்சுக்க ஆளே கிடையாதுடி..." என்றபடி,

"செல்லம்... அத்தான் த்ரீ டேஸ் போறேன். பெருசா ஏதாவது... இந்தப் போன்ல என்ன கொடுக்க முடியுமோ அதை மட்டும்..." என்று முடிக்கவில்லை அவன்.

"ஆமா, பெரிய இவராட்டம்... காலையில சீன் போட்டீங்க. இப்போ ஒண்ணும் கிடையாது. நேரில் கேட்டிருந்தால் கூடப் போனாப் போகுதுன்னு கொடுத்திருப்பேன்..." என்று கெத்தாய்ச் சொல்ல...

அவளே அவ்வளவு கெத்தாய்ச் சொல்லி விட... இவன் இறங்கிப் போவானா... விட்டு விட்டான்.

போனை வைக்கப் போனவனிடம்... "அத்தான், எப்போ கிளம்புவீங்க?" என்று கேட்க...

"இன்னும் ஒரு மணி நேரத்தில் கிளம்பிடுவேன்..." என்று பதில் சொல்ல...

அவனின் மனைவியாக... "பை இந்தர்!" என்ற வார்த்தைகளோடு விடை பெற்றாள் தீக்ஷா.

போனை வைத்தவளுக்கு ஏமாற்றமாய் இருந்தாலும்... தன் கணவனுக்காகப் பொறுத்துக் கொண்டவள்... சற்று நேரம் எதுவும் செய்யத் தோன்றாமல் அப்படியே அமர்ந்திருந்தாள்.

அப்போது திடீரென்று... அவன் போனில் தன்னிடம் ஏக்கமாய்க் கேட்டது ஞாபகம் வர... 'இவனுக்கு இருக்கிற கெத்தை எல்லாம் எப்போதான் விடுவானோ...? இன்னொரு தடவை கேட்டிருந்தா கொடுத்திருக்க மாட்டேன்..." என்று தனக்குள் அவனைச் செல்லமாகத் திட்டியவள்...

தனக்கும் வசைமாரியைப் பொழிந்து கொண்டாள்.



'உனக்கும் வர வரத் திமிர் கொஞ்சம் ஆகிருச்சு, தீக்ஷா... அவன் கேட்ட வுடனே கொடுத்திருக்கலாம்ல... பெருசா சீன் போட்ட... இப்போ புலம்பு..." என்று தன்னையும் திட்டியவள்...

மணியைப் பார்க்க.. இன்னும் தன் கணவன் கிளம்ப 45 நிமிடம் இருக்க... வேகமாய்க் கிளம்பினாள், விஜய்யைப் பார்க்க...

ஏனோ அவனை ஏக்கத்துடன் வழி அனுப்ப மனமே வரவில்லை...

முடிவெடுத்த பின்னால் படு வேகமாய்க் கிளம்பினாள், தீக்ஷா... அவசரத்தில் கட்டிலில் கிடந்த பிங்க் வண்ணப் புடவையையே அணிந்தவள்... மாடிப் படிகளில் இறங்கினாள் அதே அவசரத்தோடு...

அவளுக்கிருந்த அவசரத்தில்... படிகளில் காலை வைத்தவளின் கால் வழுக்கி விட... கிட்டத்தட்ட விழப் போனவளை... எதிர்ப்பக்க அறையில் இருந்து அப்போதுதான் வந்து கொண்டிருந்த யுகி, சட்டென்று எட்டி வந்து அவள் கைகளைப் பிடிக்க... விழாமல் தப்பித்தாள் தீக்ஷா...

"ஏய்... என்ன அவசரம்... கண்ணு மண்ணு தெரியாமல் போயிட்டிருக்க..." என்று திட்டியவனிடம்...

"இல்லடா... உங்க அண்ணா அந்த ப்ராஜெக்ட் விசயமாக ஆஃபீஸ்லருந்தே கிளம்புறாராம்... அதுதான்!" என்று கூற...

"ஓ!" என்று இழுத்தவன்...

"ஹ்ம்ம்ம்... காதல் காவியம்தான் ஓடுது..." என்று ஓட்ட ஆரம்பிக்க...

திரும்பி முறைத்தவள்... "வந்து வச்சுக்கறேன்... இப்போ எனக்கு உன்கிட்ட பேசல்லாம் நேரம் இல்லை..." என்றவளிடம்...

"தனியாவா போற... இரு. நான் வந்து ட்ராப் பண்ணு கிறேன்..." என்று அவனும் கிளம்ப...

"வேண்டாம்... என் பிங்கியோட ஸ்பீடுக்கெல்லாம் உன் கார் வராது..." என்றவள்...

யுகியின் முறைப்பில் சிரித்தபடி கீழே இறங்கி... கலைச்செல்வியிடமும் சொல்லிக் கொண்டு கிளம்பியவள்... அடுத்த அரை மணி நேரத்தில் விஜய் பில்டர்ஸில் தான் நின்றாள்.

ஆனால் விஜய் பில்டர்ஸ் வாசலிலேயே அசோக்கும் சுரேந்தரும் நின்றிருக்க... அவர்கள் முன் வண்டியை நிறுத் தினாள் தீக்ஷா...

அவளைப் பார்த்த சுரேந்தர்... அசோக்கிடம் அர்த்தப் புன்னகை ஒன்றை வீசினான்.

ஏனென்றால்... விஜய் தீக்ஷாவிடம் பேசி விட்டுப் போனை வைத்தவன்... சுரேந்தரிடம்...

"சுரேன்... நான் உடனே கிளம்பறேன்... தீக்ஷா பற்றி எனக்கு நல்லாத் தெரியும்... இவ்ளோ பவ்யமாப் பேசிப் போனை வைக்கிறாள்னா... கண்டிப்பா அவ இங்க வருவ தற்கு பிளான் பண்ணியிருப்பாள்..." என்றபடி வேகமாய்க் கிளம்ப...

"அண்ணா... வந்தா என்ன... பேசிட்டுப் போங் கண்ணா..." என்று சுரேனும் சொல்ல...

"அவளைப் பற்றித் தெரியாது உனக்கு... டைவர்ட் பண்ணிருவாடா... பேசவா சொல்லித் தரணும்..." என்று அவனிடம் சொன்னாலும்...

மனதுக்குள்ளே, 'என்னைப் பற்றியும் உனக்குத் தெரி யாதுடா... அவளைப் பார்த்துப் பேசிட்டு... அதுவும் அவளோட பிறந்த நாள் அதுவும் அவளை விட்டு என்னால போக முடி



யாதுடா... உன் அண்ணன் அந்த அளவுக்கு மாறிட்டேன்டா!" என்ற போதே, யுகியும் விஜய்க்குக் கால் செய்து... தீக்ஷா அங்கு வந்து கொண்டிருப்பதாகக் கூற...

விஜய் சுரேந்தரைக் கீழே அனுப்பி வைத்தவன்... கையோடு தன் போனையும் தீக்ஷாவிடம் கொடுக்கச் சொல்லி... தான் கிளம்பி விட்டதாக அவளிடம் சொல்லச் சொன்னவன்... மேலேயே தங்கிவிட்டான்.

இதன் காரணமாகவே தீக்ஷா வந்ததும்... சுரேந்தர்... அசோக்கைப் பார்த்துப் புன்னகைத்தான்.

சுரேந்தரையும் அசோக்கையும் பார்த்தவள்...

'நந்தி தரிசனம் இல்லாமல் சிவ தரிசனம் கிடைக்காதே!' என்று மனதுக்குள்ளே சொல்லிக் கொண்டவள்... இன்னும் பெரியதாய் அவர்களைப் பார்த்துச் சிரிக்க...

சுரேன் சிரித்தபடி... "மனசுக்குள்ள நீ என்ன ரேஞ்சுக்கு என்னை நெனச்சுருப்பேனு... உன் சிரிப்பே சொல்லுது..." என்று சொல்ல...

"முன்னேறிட்டீங்கத்தான்... கீப் இட் அப்!" என்று சொல்லி விட்டு... அசோக்கைப் பார்க்க...

"வழக்கமா ஒரு நந்திதானே இருக்கும்னு பார்க் கிறியா...?" என்று சுரேந்தர் கேட்க...

"ப்ச்ச் அத்தான்... உங்ககிட்டலாம் அப்புறமாப் பேசு கிறேன்..." என்று அவர்களைத் தாண்டிப் போக...

வழி மறித்த சுரேன்... விஜய் கிளம்பி விட்டதாகச் சொல்ல... முதலில் நம்பவில்லை தீக்ஷா.

விஜய்யின் போனைக் காட்டிய பின்தான் நம்பினாள் தீக்ஷா... அவனின் போனைச் சுரேனிடமிருந்து வாங்கிய தீக்ஷா ஏமாற்றத்துடன் கிளம்பினாள்.

இதை எல்லாம் மேலே இருந்து அவளைப் பார்த்தபடி இருந்த விஜய்... தீக்ஷா கிளம்பிப் போகும் போதுதான் கவனித்தான். அவளின் பைக் சைட் ஸ்டாண்ட் போடப் படாமல் இருப்பதை...

தீக்ஷாவை முன்னே விட்டு... அவள் பின்னே சென்று கொண்டிருந்த அசோக்கை அழைத்து... விஜய் சொல்ல...

அசோக் வேகமாய்த் தீக்ஷா முன்னாடி நின்று... தீக்ஷாவிடம் அசோக் சுட்டிக் காட்ட...

பைக்கை நிறுத்தி ஸ்டாண்டை உள்ளே தள்ளியபடியே தீக்ஷா... "அசோக், உண்மையைச் சொல்லுங்க. அத்தான் ஆஃபீஸ்ல தானே இருக்கிறார்... என் பைக்ல சைட் ஸ்டாண்ட் போடாததெல்லாம் உங்க கண்ணுக்குத் தெரியுமா?" என்று கேட்க...

அசோக் தடுமாறினான்... இருந்தும் சமாளித்து விட...

"சரி... சரி... என்னை ஃபாலோ பண்ற உங்க பணியைச் செவ்வனே முடிங்க. எங்க அண்ணன் காதல்ல ஆரம்பிச்சது... இன்னைக்கு வரைக்கும் முடியலை..." என்று அவனைக் கிண்டல் செய்தபடி... தன் தாய் வீட்டை அடைந்தாள் தீக்ஷா.

அசோக்கும்... தீக்ஷா வீடுவரை பின்னால் வந்து விட்டு விட்டுத் தன் வழியில் கிளம்பி விட்டான்.

"அம்மா..." என்றபடியே உள்ளே நுழைந்த தீக்ஷாவின் கத்தலுக்கு... அவளின் எதிரொலியே பதிலாகக் கிடைக்க... அடுத்து "அண்ணி..." என்று கத்த...

அந்தக் கத்தலுக்குப் பதில் இல்லாமல் போக... அவர்கள் வீட்டில் வேலை செய்யும் பெண்மணிதான் வந்தாள்.

"அக்கா... வீட்ல யாரும் இல்லையா?" என்றபடி அமர்ந் தவளிடம்...



"கோவிலுக்குப் போயிருக்காங்கம்மா... வர ரெண்டு மணி நேரமாகுமே..." என்றபடி உள்ளே போக...

"ம்ஹூம்... என்ன, இன்னைக்கு ஒண்ணும் சரி இல்லை. எங்க போனாலும்... நமக்கு பே பே காட்டுறாங்க..." என்று புலம்பியவள் ஒரு மணி நேரத்தை அங்கேயே கடத்தி யும் இருந்தாள்...

அப்போது...

"தீக்ஷா பாப்பா... இந்தப் புடவையில என் கண்ணே பட்டுடும் போல இருக்கு, பாப்பா..." என்ற வேலைக்காரப் பெண்மணியின் வார்த்தையில்... அப்போதுதான் கவனித் தாள் தீக்ஷா...

"ஆஹா! அவசரத்தில் இந்தப் புடவையிலயா வந்துட் டோம். தீக்ஷா... வைஜெயந்தி வர்றதுக்குள்ள எஸ்கேப்!" என்றபடி... மீண்டும் தன் பிங்கியில் பறந்தாள்.

'அத்தானைத்தான் பார்க்க முடியலேனு... இங்க வந்தா அம்மாவையும்... சுனந்தாவையும் கூடப் பார்க்க முடிய வில்லையே...'

மனம் எங்கும் ஏமாற்றம் சூழ ஓட்டி வந்தவள்.. அப்போதுதான் தன்னைப் பின் தொடர்ந்து வந்த மாருதி வேனைப் பார்த்தாள்.

முதலில் ஏதோ ஒரு வண்டி என்று சாதாரணமாய் எண்ணியவளுக்கு... தன்னைத்தான் தொடர்ந்து வரு கிறார்கள் என்பது அடுத்த சில நிமிடங்களில் கருத்தில் பட... இதயத் துடிப்பு எகிறியது.

எப்படியாவது... தப்பித்துவிட வேண்டுமென்று அதிவேக மாக ஓட்டியவளை அதே வேகத்துடன் அந்த மாருதியும் துரத்த... வேகமாய்ப் போனவள்... குறுக்கே வந்த லாரியைக் கவனிக்காமல் போக... இருந்தும் கடைசி நொடியில் கொஞ்சம்

சுதாரித்து நிறுத்தியவளுக்கு... தலையே சுற்றுவது போல் இருந்தது.

அந்த நிமிடத்தை நினைக்கவே பயங்கரமாய் இருந்தது. இதயம் படபடவென்று அடித்துக் கொள்ள... அதிர்ச்சியில் அவளால் யோசிக்கக் கூட முடியவே இல்லை.

கொஞ்சம் கவனிக்காமல் இருந்திருந்தால்... என் இந்தரை விட்டுப் போய் இருப்பேனோ...?

நடுக்கத்தில் கை கால் ஆட... அவளால் இனி பைக்கை ஒழுங்காக ஓட்ட முடியுமா என்று கூடத் தெரிய வில்லை.

அப்போது... அவளது தலைக்கு மேலே வெகு அருகில் விமானச் சத்தம் கேட்க... ஏனோ அவள் அத்தானே அதில் இருப்பது போல் கற்பனை செய்தவளுக்கு அவனின் அருகாமை இங்குதான் என்பது போல... அந்த விமானம் தன்னை விட்டுப் போகும்வரை அதையே பார்த்தபடி இருந்த வளுக்கு... இப்போது தைரியமும் வர... பைக்கை நிறுத்தி விட்டு... தன்னை நோக்கி வந்த மாருதியினைப் பார்த்து... சிறிதும் பயப்படாமல் அதை எதிர் நோக்கியபடி இருந்தாள் தீக்ஷா...

கண்டிப்பாக இது தீனாவின் வேலையாகத்தான் இருக்கும். தன் கணவனைத் திசை திருப்பும் உத்தியாக... தன்னைக் கடத்தப் போகிறார்கள் போல... தீனாவின் ஆட்கள் தானே... என்ன செய்து விடுவார்கள்... பார்க்கலாம் என்று மிக மிகத் தவறாக முடிவெடுத்த தீக்ஷா...

உள்ளுக்குள் கொஞ்சம் அச்சம் இருந்தாலும்... தைரியத்தை முகத்தில் தேக்கி... விஜயேந்தரின் மனைவி யாக... நிமிர்ந்து நின்றிருக்க... மாருதியில் இருந்து இறங்கிய அந்த இருவரும் அவளை நோக்கி நடந்தனர்.



## 41

ஏர்போர்ட்டில் அமர்ந்திருந்த இளமாறன்... கையில் இருந்த ப்ரீஃப்கேஸில்... விஜய்யின் ப்ளான் மற்றும் இதர தகவல்களைப் பார்த்தபடி... மனமெங்கும் வெற்றி எக்காளத்துடன் அமர்ந்தி ருந்தான்.

விஜய்யின் திட்டமெல்லாம்... இனி இவன் திட்டமே... அக்ரீமெண்ட்டில் இவனை 2ஆவது பார்ட்னராக மட்டுமே விஜய் போட்டிருக்க...

விஜய் வருவதற்குள்... வருவதற்குள் என்ன வருவ தற்குள்... வரவே போவதில்லை... தன் மனைவியைக் கட்டிக் கொண்டு கதறி அழவே அவனுக்கு நேரம் போதாது. அவனாவது வருவதாவது...

அக்ரீமெண்ட்டைத் தன் பேருக்கு முழுவதுமாக மாற்ற முடியாது... ஏனெனில் விஜய் பில்டர்ஸ் பேரை வைத்துத்தான் அங்கு போகவே முடியும்... பெரும்பான்மையான லாபங்கள் இவன் வசம் கையகப்படுத்துவது போல மட்டுமே அக்ரீ மெண்ட்டை மாற்ற முடியும்... எப்படியோ... தன் கையில்தான் இனி அந்த ப்ராஜெக்ட்...

அதே சந்தோசத்தோடு... வெளிநாட்டில் இருக்கும் தங்கைக்குப் போன் செய்ய...

“சொல்லுங்கண்ணா...” எரிச்சலோடு பதில் வந்தது, இளமதியிடமிருந்து...

“இளமதி... உங்க அண்ணனுக்கு அந்தப் பெரிய ப்ராஜெக்ட் கிடைக்கப் போகுது...” என்றவனின் வார்த்தைகள் அவனின் தங்கைக்கும் சந்தோஷம் தந்தாலும்... அதை எல்லாம் விட்டவள்...

“அதெல்லாம் விடுங்க, அண்ணா... அண்ணியோட சேர்ந்து வாழவே முடியாதா? டைவர்ஸ் நோட்டீஸ் அனுப்

பிட்டாங்கனு... அம்மாவும் அப்பாவும் ரொம்ப ஃபீல் பண்றாங் கண்ணா..." என்று தன் வருத்தத்தை வெளியிட...

"நான் என்ன பேசிட்டு இருக்கேன்... நீ என்ன பேசுற..." என்றவனின் குரலில் இருந்த எரிச்சலும் கோபமும் அவளைச் சென்றடைய...

அவளும் அதே கோபத்தில் பேச ஆரம்பித்தாள்...

"அண்ணிகிட்ட நான் பேசினேன்... நீ பண்ணின வேலைக்கெல்லாம் அவங்க உன்னை ஜெயில்ல தள்ளாம விட்டாங்கன்னு சந்தோசப்பட்டு இருக்கேன்... அவங்களை எத்தனை தூரம் கொடுமைப்படுத்தி இருக்க... அவங்களைக் கருவைக் கலைக்கச் சொல்லி டார்ச்சர் பண்ணியிருக்க... எல்லாமே என்கிட்ட சொல்லிட்டாங்க... இப்போ கூட பரவா யில்லை அண்ணா... அவங்ககிட்ட பேசு அண்ணா..."

"இளமதி... அவ எவனையோ லவ் பண்ணிட்டு..." என்று பல்லைக் கடித்தவன்... "அந்தக் குழந்தைக்கு என் பேரை இனிஷியலா போட நான் சம்மதிக்கணுமா?" என்று நாக்கில் நரம்பே இல்லாமல் பேச...

"ச்சே! எப்படிண்ணா இப்படில்லாம்... இன்னைக்கு இவ்வளவு தூரம் பேசுறவன்... அந்த விஜயேந்தர் தங்கச்சி ராதா... அவளும் எவனையோ விரும்பினாள்தானே... அன்னைக்கு மட்டும் ஏன் சம்மதம் சொன்ன?" என்று சூடாய்க் கேட்க...

"அதெல்லாம் இதோ இந்த ப்ராஜெக்டுக்காகத்தான்..." என்று கூசாமல் சொன்னவனின் குரலில் இளமதி அதிர்ந்து,

"உன்கிட்ட எனக்குப் பேசவே விருப்பம் இல்லை... நீயா போன் பண்ணினதால் நானும் பேசிட்டேன்... எப்படியோ போ... நான் போனை வைக்கிறேன்... உன் வாழ்க்கை உன் கையிலதான்..." என்றபடி போனை வைக்கப் போக...



"உனக்கு ஒரு நல்ல விசயம் சொல்லலாம்னு போன் பண்ணினால்... நீ என்னையே எரிச்சல் படுத்துற..." என்று சலிப்பாய்ச் சொல்ல...

இளமதிக்குக் கேட்கப் பிடிக்கா விட்டாலும்... "என்ன?" என்று விருப்பமில்லாத தன்மையோடு கேட்க...

"விஜய் பில்டர்சுக்குக் கிடைக்க வேண்டிய லாபம் எல்லாம் இனி நமக்குத்தான்..." என்றவனின் வார்த்தை களில் மிகவும் கடுப்பானாள் இளமதி.

விஜயேந்தர்... தீக்ஷா என்ற வார்த்தைகளைக் கேட் டாலே அவளுக்குப் பற்றித்தான் எரியும்... இருந்தும் தன் வாழ்க்கையில் அவர்களைக் கடந்தும் வந்து விட்டாள்தான்... இந்த இளமாறனால்தான் அவ்வப்போது... விஜய்யைப் பற்றி காதில் விழுந்து தொலைக்கும்... இவளும் எரிவாள்...

இன்றும் அதே எரிச்சலோடு... "அந்த விஜய்க்கு லாபம் கிடைத்தால் என்ன... கிடைக்கவில்லைன்னா என்ன... அதை எதுக்கு என்கிட்ட சொல்ற... என்னண்ணா ஆச்சு உனக்கு...? அவனைப் பத்தி என்கிட்ட ஏன் பேசுற...? எத்தனை தடவை சொன்னாலும் கேட்க மாட்டியா...?" என்று பொரிய ஆரம் பிக்க...

"ஹேய், ஹேய்! கூல் கூல்... அவனைச் சுத்த வச்சுட்டுத் தான் உன் அண்ணன் இப்போ சந்தோசமாப் பேசிட்டு இருக்கான்..."

"புரியல..." என்றபடி இளமதி இழுக்க...

"உன்னைக் கேவலமா பேசுனானு சொன்ன அந்த தீக்ஷா இப்போ நம்ம ஆளுங்க கஸ்டடியில... உனக்கு இதைச் சொல்லத்தான் போன் பண்ணினேன்..."

"அவளை வச்சு நீ என்ன பண்ணப் போற...?" வேக வேகமாய் வார்த்தைகள் விழ...

"அது கூடிய சீக்கிரம் உனக்கே தெரியும்... சரி, நான் வைக்கிறேன்... ஃப்ளைட்டுக்கு லேட் ஆகிருச்சு!" என்றபடி விடை பெற்றவனை இந்த உலகமும் சற்று நேரத்தில் விடை கொடுத்து அனுப்பப் போவது தெரியாமல்... தன் முடிவை நோக்கி நடந்தான் இளமாறன்...

அவரவர்க்கான பாவத் தண்டனைகள்... ஜென்ம ஜென்மமாய்த் தொடரும் என்பதெல்லாம் போய்... அவ்வப் போதே இப்போதெல்லாம் தீர்மானிக்கப் படுகிறது போல... இளமாறனின் மரணமும் அதை நிரூபித்தது.

நகைக் கடையின் வைரங்கள் பிரிவில் இருந்தான் விஜய்... இந்த நகைத் தேர்வெல்லாம் அவனுக்குப் பழக்கமே இல்லை... தாயோடும் தங்கையோடும் அவ்வப்போது வந்திருந்தாலும்... தேர்வெல்லாம் செய்ததில்லை.

எடுத்த பொருள்களுக்கு பில் கட்டுவதோடு சரி...

இன்று தன் மனைவியின் பிறந்த நாளுக்குப் பரிசளிக்க விரும்பிய விஜய்க்கு, எதை எடுப்பது... எப்படி எடுப்பது என்று தெரியவில்லை...

'இதெல்லாம் தேவைவ்யா...? தீக்ஷாவையே கூட்டி வந்து எடுத்துக் கொடுக்கலாம்...' என்றெல்லாம் நினைத்தவன்... பின் அந்த எண்ணத்தை எல்லாம் கைவிட்டுவிட்டு...

'பெரிய கம்ப சூத்திரமா... டேய் விஜய், செலக்ட் பண்ற... உன் பொண்டாட்டிகிட்ட பாராட்டு வாங்குற...' என்று தனக்குத் தானே சொல்லிக் கொண்டவன்... நகைத் தேர்வில் இறங்கி னான்.

தான் எவ்வளவு விலை உயர்ந்த பொருளை எடுத்துக் கொடுத்தாலும் அதை எல்லாம் விட... இன்று அவள் முன் எதிர்பாராமல் போய் நிற்கப் போவதுதான் அவள் பிறந்த நாளின் மிகப் பெரிய சர்ப்ரைஸாகத் தன்னவளுக்கு



இருக்கும்... என்று நினைத்தபடியே தேர்வு செய்து கொண்டி ருந்தவனின் கண்களில்... அந்த பென்டண்ட் தென்பட்டது.

இதய வடிவில் அமைந்திருந்த அதன் நடுவில் மற்றொரு இதயம் வைரங்களால் பதிக்கப்பட்டிருக்க... அவனையுமறியாமல் கைகள் அதை நோக்கிச் செல்ல... அடுத்த சில நிமிடங்களில் அவன் கைகளில், அவன் சொந்த மாக இருந்தது, அந்த பென்டண்ட்.

பில் போடும் முன் தன் கைகளில் அதை வைத்துப் பார்த்தான். வெளியில் தங்கத்தால் இருக்கும் இதயம் அவனுடையதாகவும்... உள்ளே வைரக் கற்கள் பதிக்கப் பட்டிருந்த அந்தச் சிறிய இதயம்... தன்னவளுடையதாகவும் கற்பனை செய்து பார்த்தவன்... தங்கள் திருமணத்தின் முந்தைய இரவில் அவளுக்கு அணிவித்த செயினோடு சேர்த்து, இதை அவளிடம் ஒப்படைக்க வேண்டும் என்று முடிவு செய்தவன்... அந்த வைர பென்டண்டைத் தன் உள்ளங்கையில் வைத்துப் பார்த்தபடி தனக்குள்ளே சிரித்துக் கொண்டான்.

சாதாரணக் கரிதான் வைரமாய் உருமாறுகிறது... அது போல... தன் நிலை மாற்றத்தினை வைரத்தின் நிலை மாற்றத்தோடு ஒப்பிட்டவனுக்குச் சிரிப்புதான் வந்தது.

ஆனால் விஜயேந்தர் என்னும் வைரம் இன்னும் ஜொலிக்கப் பட்டை தீட்டப்பட வேண்டும் போல... அவனின் உறுதி அவன் மனைவி மூலமே சோதிக்கப்படப் போகிறது என்பதை உணராமல் அப்போது சிரித்தான்.

ஆனால் இன்னும் சில மணித் துளிகளில் அவன் சிரிப்பெல்லாம்... அவன் மனைவியின் நிலை போலவே அடங்கப் போகிறது என்று தெரியாமல்... உள்ளம் நிறைந்த காதலோடு... தன் மனைவியைச் சந்திக்கும் நேரத்திற்காக ஏங்க ஆரம்பித்தான் விஜய்.

அடுத்த ஒரு மணி நேரத்தில்... தன் வேலையெல்லாம் முடித்தவன் அலுவலகத்திற்குச் சென்று விட்டு... அதன் பிறகு கொஞ்சம் தாமதமாகத்தான் வீடு கிளம்ப முடிவு செய்தான்.

கிட்டத்தட்ட 12 மணி அளவில்... போனில் தன் வாழ்த்தை எதிர் பார்த்திருக்கும் அவனது மனைவிக்கு... நேரில் சென்று வாழ்த்தைக் கூறி... அவள் முக மலர்ச்சியைத் தன் மனதில் பதிவு செய்யும் எண்ணத்தில்தான் தாமதமாகப் போக முடிவு செய்ததே...

ஆனால் அதற்கு முன்னமே கிட்டத்தட்ட 8 மணி அளவில் சுரேந்தர் கால் செய்தான்.

எடுக்கும் போதே குரலில் இருந்த பதட்டம்... விஜய்க்குத் தூக்கி வாரிப் போட...

"என்ன சுரேன்..." என்றபோது விஜய்யின் குரலில் லேசான நடுக்கம் வரத்தான் செய்தது.

"அண்ணா... இளமாறன் போன ஃப்ளைட்... ஆக்ஸிடெண்ட்..." என்றவனால் அதற்கு மேல் பேசவே முடியவில்லை.

ஒன்று இளமாறன் இறப்புச் செய்தி...

மற்றொன்று... தன் அண்ணனும் இதே ஃப்ளைட்டில் போக முடிவு செய்திருந்ததும்தான்... அவனின் இந்தப் பதட்டத்திற்குக் காரணம்...

விஜய்க்கு ஒரு நிமிடம்... அதிர்ச்சியில் வார்த்தைகளே வரவில்லை... அவன் பயணத்தினை ரத்து செய்த காரணமே... தீக்ஷாதான்...!

தீக்ஷாவைப் பார்த்த விஜய்க்கு... அதிலும் அந்தப் புடவையில் தன்னவளைக் கண்ட பின்னர்... ஏனோ மனம் மனைவியையே சுற்றி வந்து கொண்டிருக்க... தனது இன்றைய பயணத்தை ஒரு நாள் தள்ளி வைத்தான்.



இளமாறனிடம்... முக்கியக் கோப்புகளை எல்லாம் கொடுத்து... பார்க்க வேண்டிய நபரின் விபரங்களை எல்லாம் கொடுத்து அனுப்பி வைத்திருந்தான். ஆனால் நடந்ததோ...?

விஜய் போய் இருந்தால்... அதை நினைக்கையிலே அவனின் முகம் வியர்த்துக் கொட்ட ஆரம்பித்தது. ஆக, தீக்ஷாவின் காதல்தான்... அவளது காதல் மட்டுமே அவள் கணவனைக் காப்பாற்றியது என்பதே உண்மை.

சுரேந்தருக்கு... இன்னும் அதிர்ச்சியில் இருந்து மீள முடியவில்லை. தொலைக்காட்சியில் ஃப்ளாஷ் நியூஸ் பிரிவில் விமான விபத்துச் செய்தி ஓடிக் கொண்டிருக்க... வீட்டில் அனைவருக்கும் அது ஒரு செய்தியாக இருக்க... சுரேந்தருக்கு மட்டுமே உள்ளம் பதைபதைத்தது...

தன் அண்ணன் மட்டும் இந்த விமானத்தில் போயிருந்தால்... அது நடக்கவில்லை என்ற உளநிறைவில் தன்னை மீட்டெடுத்தவனுக்கு... இளமாறனைப் பிடிக்காத போதும் அவனுக்காக அவன் மனம் சாந்தியடைய வேண்டிக் கொண்டான்.

அதன் பிறகு தன்னை நிலைப்படுத்திக் கொண்டவன்... இன்னும் தகவல்களைச் சேகரித்து... இளமாறன் இறந்ததையும் உறுதி செய்தவன்... உடனடியாகத் தன் சகோதரனிடமும் தெரிவிக்க...

விஜய்யும்... இளமாறனுக்காகப் பரிதவிக்க ஆரம்பித்தான்... எல்லாம் தன்னால்தானோ... என்று தன் தம்பியிடம் புலம்ப ஆரம்பித்தவனை... குற்ற உணர்ச்சியில் தவிக்க ஆரம்பித்தவனை... என்ன சொல்லித் தேற்றுவது என்று புரியாமல் தவித்தான் அவனின் தம்பி.

சுரேந்தருக்கும்... இளமாறன் மேல் பரிதாபம்தான்... இப்படி அல்ப ஆயுளில் அவன் வாழ்க்கை முடிந்துவிட்டதே... என்ற வேதனை அவனையும் வாட்ட...

"அண்ணா, வீட்டுக்கு வாங்க... இளமாறன் வீட்ல நேரடியாகத்தான் சொல்ல வேண்டும்..." என்று போனை வைக்கப் போனவனிடம்...

விஜய்... "தீக்ஷா எங்கே?" என்றபோது...

"தீக்ஷா... ராதா வீட்டுக்குப் போயிருக்காண்ணா... நைட் வீட்டுக்கு வந்துருவானு அம்மா சொன்னாங்க..." என்று சுரேன் சொல்ல...

"டேய்... அவளுக்கும் நான் துபாய் போறது தெரியும்ல... ஃப்ளாஷ் நியூஸ் பார்த்து டென்ஷனாகப் போறா...!" என்றவன்,

"சரி... நானே போன் பண்றேன்... அவளைக் கூட்டிட்டு வீட்டுக்கு வருகிறேன்..." என்று போனை வைத்தவன்... தீக்ஷாவுக்குப் போன் செய்ய...

அதுவோ... அணைக்கப்பட்டு இருக்க... உடனே ராதாவிற்கு கால் செய்தான்.

ராதாவோ... தீக்ஷா வந்த விபரத்தைச் சொல்லிவிட்டு... தாங்கள் கோவிலுக்குப் போய் விட்டு வருவதற்கு முன்னரே... கிளம்பி விட்டதாகக் கூற...

விஜய் நெஞ்சில் சுரீர் என்று வலித்தது... தீக்ஷாவைப் பற்றி அறியும் முன்னரே...!

அடுத்த ஒரு மணி நேரத்தில்... தீக்ஷாவைக் காணவில்லை... என்று இரு குடும்பத்தாருக்கும் தெள்ளத் தெளிவாகப் புரிய... அங்கு கலக்கம் சூழ்ந்தது.

விஜய்க்கு ஒரு புறம் இளமாறனின் இறப்பு... மறுபுறம் தீக்ஷா... அப்படியே சில நிமிடங்கள் அமர்ந்திருந்தவன் மனக் கண்ணில்... தீனா முன் வந்து நிற்க... காரை எடுத்தவன்... ஆவேசத்துடன் அவன் வீட்டின் முன்தான் நிறுத்தினான்.



இறந்த இளமாறனின் வேலை என்று அவனால் நினைத்துக் கூடப் பார்க்க முடியுமா என்ன...? தீனா மாட்டினான்.

வேலை ஆட்கள் தடுத்தும்... தீனா வீட்டினுள் நுழைந்தவன்... "தீனா..." என்று பெருங்குரலில் கர்ஜிக்க... தீனாவுக்கு என்ன ஏதென்று கூடத் தெரியவில்லை...

விஜய் ஏன் வீட்டிற்கு வந்து இப்படிக் கத்துகிறான் என்று கூடப் புரியவில்லை...

இருவருமே தொழில்ரீதியான பிரச்சனை என்றால்... அலுவலகத்தில்... பொது இடங்களில்தான் தங்கள் வெறுப்பைக் காட்டுவார்களே தவிர... வீட்டிற்கு வர மாட்டார்கள்.

தீனா குழம்பிய முகத்தோடு வர... விஜய் பாய்ந்து அவனின் சட்டையைப் பிடித்தான்.

"இங்க பாரு... உனக்கு இந்த ப்ராஜெக்ட்தானே வேண்டும்... நான் தலையிடல... என் தீக்ஷாவை விட்டுரு... உன் தங்கையைக் கடத்தினது தப்புதான்டா... நீயும் அதே தப்பைச் செய்யாத...!" என்றபடி பேசிக் கொண்டே போனவனை... விசித்திரமாகப் பார்த்தவன்,

"விஜய்... நீ என்ன சொல்ற...? உன் மனைவியை நான் கடத்தினேனா...?" என்றபோதே, விஜய்யின் உள்ளம் திடுக் கென்றது.

தீனா கடத்தி இருப்பான்... என்றுதான் விஜய் நினைத்தான். அதனால்... தீனா மேல் கோபம் கொண்டானே தவிர... தீக்ஷாவின் பாதுகாப்பில்... அவனுக்குப் பயம் வரவில்லை... தீனாவினைப் பற்றி அவனுக்குத் தெரியும்...

விஜய்க்குக் குரலும் உள்ளமும் ஒரு சேர உடைய...

"பொய் சொல்லாதடா... நீதானேடா கடத்தி வச்சுருக்க... உண்மையைச் சொல்லுடா..." என்றபோது தீனாவுக்கும் கொஞ்சம் பதற்றம் வந்திருந்தது.

'தங்கள் இருவருக்கும் இடையில்... இன்னொரு எதிரியா...?' நினைத்த தீனா...

"விஜய், ரிலாக்ஸ்டா... நான் உன் மனைவியைக் கடத்தலைடா... அப்படியே பண்ணி இருந்தால் கூட உனக்குப் போன் செய்திருப்பேன்..." என்று அவன் கூறும்போதே...

சுரேந்தர், யுகி... தீபனும் அங்கு வந்து சேர...

தீனாவும் கடத்தவில்லை என்பது உணர்ந்தபோது, அனைவரின் முகமும் வெளுக்க ஆரம்பித்திருக்க... விஜய்க்கு என்ன செய்வது... ஏது செய்வது... ஒன்றுமே புரியவில்லை. தலையில் கை வைத்து அப்படியே அமர்ந்து விட்டான்.

காவல் துறையில்... தனக்குத் தெரிந்த உயரதிகாரியுடன் ரகசியமாக விசாரிக்கச் சொன்ன சுரேந்தர்... தீக்ஷா பற்றிய விபரங்களை அவரிடம் கொடுக்க உடனடியாகக் கிளம்பியும் சென்றான்.

யுகியும் தீபனும்... தீக்ஷா வழக்கமாய்ச் செல்லும் அவள் தோழிகளின் வீட்டில் விசாரிக்கச் செல்ல...

விஜய் தீனா வீட்டிலேயே அமர்ந்திருந்தான், இறுகிய பாறையாய்...!

தீக்ஷாவினைப் பற்றிய எண்ண ஓட்டமே... விஜய்க்குள் ஓடிக் கொண்டிருக்க... தலையெல்லாம் சம்மட்டியால் அடித்தது போல் இருந்தது.

யாரிடம் மாட்டினாளோ...? அவளை என்னவெல்லாம் கஷ்டப்படுத்துகிறார்களோ...? இவள் வாயை வைத்துக் கொண்டும் சும்மா இருக்க மாட்டாள். ஏதாவது பேசி... நினைக்க நினைக்க... அவனின் ஊனும் உயிரும் கருகியது.

தீனாவுக்கு... என்ன சொல்வது என்றே தெரியவில்லை.

"விஜய், வா... வீட்டிற்குப் போகலாம்..." என்று அவனை அழைத்துச் சென்றபோது...



பதில் கூடப் பேசாமல்... அவனோடு சென்றான், இயந்திரமாய் விஜயேந்தர்...

தீனாவுக்குத் தன் நண்பனின் நிலைமையைப் பார்த்த போது... கண்ணுக்குத் தெரியாத அந்த மூன்றாம் எதிரியின் மேல் கொலை வெறிதான் வந்து போனது எனலாம்.

அவனின் நோக்கம் என்ன?

தொழிலில் சிக்கல் ஏற்படுத்துவதா...? இல்லை, விஜய்யின் குடும்ப வாழ்க்கையில் பிரச்சனை ஏற்படுத்துவதா?

விஜய்... கண் மூடி அமர்ந்திருந்தான்.

கண்ணுக்குள்... அவள் மனைவியின் நிழலே துரத்த... வீட்டில் நுழையும்போது... தன்னிடம் விளையாட்டிற்காகக் கண்ணாமூச்சி ஆடினேன் என்று தன் மனைவி தன்னைத் தேடி ஓடி வர மாட்டாளா என்று ஏங்கினான்...

அதைத் தாண்டி அவனால் சிந்திக்கவே முடியவில்லை... அவளுக்கு ஒன்றும் ஆகாது... ஆகி இருக்காது. தான்தான் விஷயத்தினைப் பெரிதாக்குகிறோமோ என்று கூட நினைத்தபடி எல்லாம் வீடு வந்து சேர்ந்தவனின் காதில் ஜெயந்தியின் அழுகுரல்தான் விழுந்தது.

இவனைப் பார்த்த ஜெயந்தி... இன்னும் பெருங்குரலெடுத்து அழ... தீக்ஷாவின் தந்தை ஜெயந்தியை ஆறுதல்படுத்தியபடி இருந்தவர்... விஜய்யைப் பார்த்தவுடன்... அவரும் உடைந்தார்.

"தம்பி... என் பொண்ணு பற்றி ஏதாவது..." வைத்தீஸ்வரனால் பேசக் கூட முடியவில்லை...

ராதா... கலைச்செல்வி... ராகவேந்தர் அனைவரும்... இவனைத் துக்கத்தோடு கேள்விக் கணையால் தாக்க...

எவருக்கும் பதில் சொல்லக்கூடிய நிலைமையிலா விஜய் இருந்தான்...? விஜய்யால் அங்கு நிற்கவே முடிய

வில்லை... வேகமாய்த் தன் அறைக்குள் நுழைந்தவனின் பார்வையில்... கட்டிலில் கிடந்த... விஜய்யின் பிங்க் வண்ணச் சட்டை கண்ணில் பட... அதைக் கைகள் நடுங்க எடுத்துப் பார்த்தவனின் கண்களில்... அவளின் இதழ் ஒற்றல்... அதுவும் அழுத்தமாய் இரத்தச் சிவப்பு நிறச் சாயத்தில்...

விஜய்யின் கண்கள் அவனையுமறியாமல்... நீரை வடிக்க... அதைக் கூட அவன் துடைக்க நினைக்கவில்லை.

"எங்கடி... போயிட்ட...? இப்படி என்னைத் துடிக்க வைக்கிற...! நீ மட்டும் இன்னைக்கு ஆபீஸ் வரலேன்னா... நான் துடிக்கிற மாதிரி நீ துடிச்சுருப்படி... நான் இப்போ உயிரோட இருக்கேன் என்றால்... நீ... நீ மட்டும்தான் காரணம்... நீ என் மேல வைத்திருக்கிற காதல்தான் காரணம். நீ என்னை விட்டு அவ்வளவு சீக்கிரம் போக மாட்ட... உன்னால போக முடியாது... உன்னைப் போக விட மாட்டேன்...!" என்று தனக்குள் புலம்பியபோதே...

தீக்ஷாவின் பழைய குவார்ட்டர்ஸ் ஞாபகம் வந்தது. 'அவள் அவ்வப்போது அந்தச் சிறுவர்களைப் பார்க்கச் செல் வாளே... அங்கு போயிருப்பாளோ...?' - மனதில் எண்ணம் ஓடியது.

ஆனால், விஜய்யின் போன் தீக்ஷா கையில் சிக்கி இருந்ததால்... அவர்களைத் தொடர்பு கொள்ள முடியாமல் போக... நேரிலேயே போய்ப் பார்க்கலாம் என்று அங்கு விரைந்தான் விஜய்.

அங்கும் அவனுக்கு ஏமாற்றமே மிஞ்ச... விஜய்க்குள் கலவரம் சுழல... காரை ஓட்டி வந்தவன் கைகளில் நடுக்கமும் வர... திக்குத் தெரியாமல்... எங்கு போகிறோம் என்று கூட அறியாமல்... தன் போக்கில் சென்று கொண்டிருந்தான்...

எங்கும் இருள் சூழ்ந்திருக்க... எங்கு இருக்கிறான் என்று அவனுக்கே தெரியவில்லை..



ஒரு கட்டத்தில், தான் இப்போதுதான் தைரியமாக இருக்க வேண்டும்... தானே நம்பிக்கையை இழந்தால்... தன்னவளை யார் காப்பாற்றுவது... ஓரளவு திடமாய் யோசிக்க ஆரம்பித்தான் விஜய்.

தன் எதிரிகள்... தீக்ஷா தன்னிடம் பேசினதில் இருந்து அவளுக்கு யாராவது தொல்லை கொடுப்பவர்கள்... என்று மனம் படு வேகத்தில்.. பல கோணத்தில் சிந்தித்துக் கொண டிருக்க... மணி இரவு 12-ஐ நெருங்கிக் கொண்டிருந்த வேளையில்... சுரேன் அழைக்க... வேகமாய்ப் போனை எடுத்தான் விஜய்...

சுரேன் பேசும் முன்னே, "தீக்ஷா வந்துட்டாளாடா?" வார்த்தைகளில்... அவனின் ஏக்கம் வெளிப்பட...

எதிர் முனை மௌனிக்க...

சுரேந்தரின் மௌனம்... விஜய்க்கான பதிலைச் சொல் லாமல் சொல்ல... விஜய்யின் கரம்... அவனையுமறியாமல் போனை கட் செய்தது.

அதன் பிறகு... காரை ஓட்டிய கை வேலை நிறுத்தம் செய்ய... அப்படியே அமர்ந்திருந்தான் விஜய். மணி 11.55 என்று இருக்க... 12 மணிக்கு... இவன் போன் செய்யும்வரை ஸ்விட்ச் ஆஃப் செய்து வைத்திருப்பாளோ... என்று ஒரு நப்பாசையில்... போன் செய்ய... ஏமாற்றம்... ஏமாற்றமே...!

வீட்டிற்கே போகப் பிடிக்கவில்லை அவனுக்கு. விமான விபத்தில் இறந்தே போயிருக்கலாம் போல் இருந்தது இப்போது.

இளமாறன் விமான விபத்தில் இறந்த செய்தியைக் கேட்ட போது... அவனின் இறப்பில் மனம் துடித்த போதும்... தான் மட்டும் இளமாறனோடு போயிருந்திருந்தால்... தன் மனைவியை இந்த உலகத்தில்... தனியே விட்டுப் போயிருந் திருப்பேனே... என்று தன் உயிரைப் பற்றிக் கூட அவன்

நினைக்கவில்லை... தன் மனைவியின் நிலைமைதான் அவன் கண் முன் நின்றது.

இப்போது தன்னைத் தவிக்க விட்டு அவள் எங்கு போனாள்... தன் புயலின் நினைவுச் சூறாவளியில் தொலைந்து கொண்டிருந்தான் விஜய்.

அப்போது, அவனையும் தாண்டி... படு வேகத்தில்... டாடா சுமோ போக... விஜய் கவனத்தை முதலில் அது எந்த ஒரு வித்தியாசத்தையும் விளைவிக்கவில்லை...

ஆனால் அதில் இருந்து ஒரு கரம் வெளியில்... வந்து உதவி கேட்பது போல் அசைக்க... விஜய்க்கு அந்த இரு ளிலும்... சாலை விளக்குகளின் வெளிச்சத்தில்... நன்றாக விழ... தன் உணர்வுக்கு வந்த விஜய்... வேகமாய் அந்தக் காரைத் தொடர்ந்தான்.

முன்னே சென்ற கார்... எவ்வளவுதான் வேகமாய்ப் போனாலும்.. இவனின் வேகத்துக்கு ஈடு கொடுக்க முடியாமல் போக... அந்தக் காரைத் தாண்டி முன்னே சென்று... சாலையை வழி மறித்துத் தன் காரைக் குறுக்காக நிறுத்திய விஜய்... இறங்கி நிற்க...

அந்த டாடா சுமோ தயங்கி நின்றது. அதில் இருந்த வர்கள் என்ன நினைத்தார்களோ தெரியவில்லை. அதில் இருந்து ஒரு பெண்ணைத் தள்ளி விட...

பதறி ஓடிய விஜய்யின் கண் முன்னாலே... அந்தப் பயங்கரம் நடந்தது.

காரில் இருந்த ஒருவன்... எதையோ அந்தப் பெண் ணின் மேல் வீச.. அலறித் துடித்த அந்தப் பெண்ணின் குரல் விஜய்க்கு நன்றாகக் காதில் விழ... அவன் அவளை நோக்கிப் போவதற்குள்... அந்த வண்டி... பின் வாங்கி வேகமாய்க் கடந்து செல்ல... விஜய்க்கு என்ன நடக்கிறதென்று ஒன்றுமே புரியவில்லை...



வண்டி எண்ணை ஏற்கெனவே நோட் செய்திருந்ததால் அவர்களை விட்டு விட்டான்.

கதறித் துடித்துக் கொண்டிருந்த பெண்ணின் அருகில் வந்தான் விஜய்.

முகத்தில் வீசப்பட்டிருந்த ஆசிட்டின் வீரியம் தாங்க முடியாமல் துடித்துக் கொண்டிருந்தவளுக்கு... அருகில் யாரோ வரும் உணர்வில்.. அந்தச் சூழ்நிலையிலும் தன் மானத்தை மறைக்கப் போராட... அதை உணர்ந்த விஜயேந்தர் தான் அணிந்திருந்த சட்டையைக் கழற்றி... அவள் மீது போட்டு... கலைக்கப்பட்டிருந்த ஆடையைச் சரி செய்தவன்... அவளைத் தூக்கப் போக... முதலில் மறுப்பது போல் விரைத்தவள்... அதன் பின் தளர்ந்தாள்.

இதுவரை... தன்னைச் சூறையாடிய கைகள் போல் இல்லாமல்... தன் அபாயத்தைப் போக்கியது போல்... அரவணைத்த கரங்களை உணர்ந்த அந்தப் பெண்ணின் கண்கள் விஜய்யை நன்றியோடு பார்த்துப் பின் மயங்க... விஜய்யோ அவசரத்தில் அதை எல்லாம் பார்க்கும் நிலையில் இல்லை...

தன் மனைவியையே... தன் வாழ்க்கையையே.. தவற விட்டு விட்டு நின்ற அந்த நிலையிலும் விஜய்... தன் கண் ணில் பட்ட அந்தப் பெண்ணைக் காப்பாற்றப் போராடினான்... நேராய் நின்றது மருத்துவமனையில்தான்.

முதலில் மறுத்த மருத்துவர்... விஜய்யின் கட்டாயத் தால்... சிகிச்சை அளிக்கும் பொறுப்பை ஏற்க...

விஜய் அவரிடம், "மேடம்... யார் கேட்டாலும் இந்தப் பொண்ணுக்கு... ஆசிட் லேப்ல பட்டுருச்சுனு... ஏதாவது காரணம் சொல்லிடுங்க... உண்மையான காரணம் தெரிய வேண்டாம்..." என்றபடி கீழே இறங்கி வந்தான்.

மருத்துவ மனையின் அந்த வளாகத்தில்... சுரேந்தர்... தீனா... தீபன்... யுகி வந்திருக்க... கூடவே போலீஸ் அதிகாரியும் நின்றிருந்தார்.

"யாருண்ணா அது?" என்று சுரேன் விசாரிக்க...

நடந்ததைச் சொன்னவன்... "தெரியலைடா... அந்தப் பொண்ணால பேசவே முடியலை... என்ன நடந்துச்சுனு தெரியலைடா..." என்றவன்... மருத்துவ மனைச் சூழல் அவனை யுமறியாமல் அந்தக் கேள்வியைக் கேட்க வைத்தது, போலீஸ் அதிகாரியிடம்...

"சார்... என் வைஃப் தீக்ஷாவுக்கு... ஏதாவது ஆக்சிடெண்ட்..." என்று தடுமாற்றமாய்க் கேட்க,

"இல்ல விஜய்... ஆக்ஸிடெண்ட் லிஸ்ட்லாம் பார்த்துட்டோம்... அது மட்டுமில்லை... உங்க மனைவியோட ஸ்கூட்டி கூடக் கிடைக்கவில்லை... அவங்கள யாராவது கடத்தி இருந்தால்... ஸ்கூட்டி கூடக் கிடைக்காமலா போயிருக்கும்... ஸேஃபாத்தான் இருப்பாங்க... கவலைப் படாதீங்க..." என்று ஆறுதல் படுத்தியவர்...

"உங்க மிஸஸ்சுக்கும் உங்களுக்கும் மிஸ்அண்டர் ஸ்டாண்டிங் எதுவுமில்லையே, விஜய்...?" என்று காவல் துறை அதிகாரியாய்க் கேள்வியை வீச...

தன் உதடுகளை அழுந்தித் தன் உணர்வுகளை அடக்கியவன்... தலையை மட்டும் இட வலமாய் ஆட்டினான்.

அதன் பிறகு... விஜய்யால் காப்பாற்றப்பட்ட பெண்ணிற்குத் தேவையான உதவிகளை மேற்கொண்டு செய்யச் சுரேந்தர் செல்ல... யுகியும் காவல்துறை அதிகாரியுடன் சென்று விட... தீனா மற்றும் தீபன் விஜய்யின் அருகில் இருந்தனர்.

விஜய்... வெட்டவெளியை வெறித்தபடி இருக்க...



தீபன்... அவனிடம், "விஜய், இங்க இருந்து என்ன பண்ணப் போறீங்க... வாங்க, வீட்டுக்குப் போகலாம்!" என்று அழைக்க...

விஜய் பதிலே பேசவில்லை.

கடத்தியது தீனா இல்லை என்று எப்போது அவன் உணர்ந்தானோ அப்போது உடைந்தவன்தான்... இன்னும் அதிலிருந்து மீளவில்லை...

யாரிடம் என்ன பேச... என்ன பதில் சொல்ல... அவன் மனைவி போல அவ்னைப் பேச வைப்பவர்கள் யார் இங்கே இருக்கிறார்கள்... ஆறு மணி நேரத்திற்கு மேல் ஆகி விட்டது, அவள் குரலைக் கேட்டு... வாய் ஓயாமல்... அவள் பேசும் பேச்சினைக் கேட்க அவன் உள்ளம் துடித்தது.

பேச்சுக்குப் பேச்சு... பதிலுக்குப் பதில்... கேள்விக்குக் கேள்வி... என்று வாய் மூடாமல் பேசியவள் அவன் மனைவி...

இப்போது அவள் நிலை...

இறுகிக் கொண்டிருந்தான் விஜய்...

தீபனும் தங்கையின் நினைவில் ஒரு புறம் வேதனையில் மூழ்க... தீனாதான் தீபனைச் சமாதானப்படுத்தி... வீட்டிற்கு அனுப்பி வைத்தான்.

விஜய்யை அமைதியாக விட்ட தீனா... ஒரு கட்டத்தில் அவன் நிலை தாங்க முடியாமல் அவனின் அருகே போனவன், "டேய்.. உன் மனைவி மேல நீ இந்த அளவு அன்பு வச்சுருக்கல்லடா... கண்டிப்பா... உன்கிட்ட வந்துருவாடா..." என்று விஜய்யைத் தன் தோளோடு சேர்த்து ஆறுதல் படுத்த,

தன் தோழனின் தோள் சாய்ந்த விஜய் உடைந்து கதறினான், துக்கம் தாளாமல்... தன்னவளின் நிலை அறியாத வேதனையில்...!

42

விஜய் தன் கையில் வைத்திருந்த... சிறு பெட்டியைத் தீனாவிடம் காண்பித்தான்.

"இன்னைக்கு அவ பிறந்த நாள்டா...!" என்ற போதே அவன் குரல் உடைய...

தீனா... சமாதானப்படுத்த வார்த்தைகளைத் தேடிக் கொண்டிருந்தான்...

விஜய் தொடர்ந்தான்...

"பேசிட்டே இருப்பாடா... ஒரு நொடி வாயை மூட மாட்டாள் தெரியுமா... ரொம்ப விளையாட்டுத்தனம்... ஆனால் அவளுக்குத் தவறுன்னு தெரிந்தால் எதிர்த்துக் கேட்காமல் விட மாட்டாள்... ஆர்த்தியைக் கடத்தி உன்னை மிரட்டினப்ப... அவ பண்ணின ஆர்ப்பாட்டம் இருக்கே..." அன்றைய நினைவுகளின் தாக்கத்தோடு தொடர்ந்தான்.

"எனக்குப் பயமா இருக்குடா... கத்தி எடுத்தவனுக்குக் கத்தியிலதான் சாவுன்னு கேள்விப்பட்டிருக்கேன்... அது போல எனக்கும் நடந்திடுமோன்னு பயமா இருக்கு, தீனா...!" என்றவன்...

"இப்போ இந்தப் பொண்ணைக் கூட அவங்க வீட்ல தேடுவாங்கள்ல தீனா...?"

விஜய் விழிகள் அலை பாய்ந்தன.

"சரிடா... நான் கிளம்புறேன்..." என்று எழப் போன வனை நிறுத்திய தீனா... "எங்க போற?" என்று கேள்வி யினைக் கேட்க...

"ப்ச்... எங்கேயோ... தெருத் தெருவாத் தேடப் போறேன். அவ கிடைத்தால் விஜய்யா வருவேன். இல்லை... பொணமா வருவேன். என் உயிரே அவதான்டா... இந்த நிமிசம் என் இதயம் துடிக்குதுன்னா... அப்போ அவளுக்கு ஒண்ணும் ஆகி இருக்காது..." என்றவன், தன் நண்பனிடம்...



"ஒண்ணும் ஆகி இருக்காதுல்லடா..." நப்பாசையாய் வார்த்தைகள் விழுந்தன.

தீனா... பதில் சொல்லாமல், அவன் கைகளை ஆறுத லாய்ப் பிடித்துத் தலை அசைக்க...

"என் தீக்ஷா எனக்குக் கிடைப்பாள்டா...!" இப்போது நம்பிக்கையாய் உறுதியாய்ச் சொன்னான் விஜய்.

அதே வார்த்தைகளை அவனுக்குள்ளே சொல்லிக் கொள்வது போல... தனக்குள்ளே பல முறை சொல்ல... தீனாவுக்கு உள்ளுக்குள் உதறல் எடுத்தது.

"விஜய்... நம்பிக்கையைத் தளர விடாதடா...! நீ தைரியமா இருந்தால்தான்... நாங்க எல்லோரும்... தைரி யமா இருக்க முடியும்... நீ இப்படி தளர்ந்து போனேன்னா... உன் குடும்பமே இடிஞ்சு போய்டும்டா...!" என்று முடிந்தவரை ஆறுதல் சொல்ல... விஜய் அதை எல்லாம் கவனிக்கும் நிலையில் இல்லை.

அவன் போக்கில் பேசிக் கொண்டே இருந்தான்...

"தீனா... இதுதான் என் மனைவி... நீ பார்க்கவே இல்லல்ல..." என்று தன் மொபைலில் இருந்த புகைப் படத்தைப் பார்த்தபடி சொன்னவன்... தீனாவிடம் அதைக் காட்டவில்லை...

அதையே பார்த்தபடி இருந்தவன்... "டேய், இரண்டு சர்ப்ரைஸ்னு சொன்னா... ஒண்ணு அவ பிறந்த நாள்... இன்னொன்னு என்னவா இருக்கும்...?" என்று தனக்குள் தான் பேசிக் கொண்டான்.

தீனாவுக்கு அவனின் நிலை புரியாமல் இல்லை... அவன் தனியே இப்படியே புலம்பினால் அவனுக்கு நல்ல தில்லை... இந்த நேரத்தில் அனைவரும் விவேகமாக... வேகமாகச் செயல்பட்டாக வேண்டும்...

சும்மா புலம்புவதில்... இல்லை... ஆறுதல் படுத்துவதில் எதுவும் நடக்காது என்று முடிவு செய்தவன்...

"விஜய்... பேசிப் பேசி ஒண்ணும் ஆகாது... வா. போகலாம்."

அந்த இடத்தை விட்டு அவனைக் கூட்டிக் கொண்டு தீனா நகரப் போகும் போது... சுரேந்தர் போன் செய்தான்... மருத்துவர் விஜய்யைப் பார்க்க வரச் சொன்னதாக.

தீனா விஜய்யை அழைத்துக் கொண்டு, அங்கே போக... அங்கும் அதிர்ச்சி காத்திருந்தது.

"இந்தப் பொண்ணு ஒரு பேஷண்ட்... ஒரு இதய நோயாளி... அவளைப் போய்ப் பலாத்காரம் பண்ண முயற்சி செய்து இருக்காங்க... ஆசிட் வேற ஊற்றி இருக்காங்க... ரொம்ப டேஞ்சரஸ் கண்டிஷன்லதான் இருக்கா, அந்தப் பொண்ணு... எங்களால முடிந்தவரை ட்ரை பண்றோம்..." என்று முடிக்க...

வெளியில் வந்தனர் கனத்த இதயத்துடன்.

நிலை குலைந்து போயிருந்த விஜய்யைக் கூட... அதிர்ச்சிக்குள்ளாக்கியது...

இப்போது விஜய் ஓரளவுக்குத் தன் உணர்வுக்கு வந்திருந்தான்.

"தீனா, இந்த நம்பர்தான்டா அவனுங்க வந்த கார்... நம்ம செல்வாக்கைப் பயன்படுத்தி... அவனுங்களை உள்ளே தள்ளணும்டா... ஆனால், அந்தப் பொண்ணு விசயம் வெளி வராமல் பார்த்துக்கோ..." என்றவன்... "அதற்கு முன்னால் இவளைப் பற்றித் தெரியணுமே..." என்று குழப்பமாய் முடிக்க...

தீனா அவனிடம்... "நான் பார்த்துக் கொள்கிறேன்... நீ உன்னையே குழப்பிக்காத...!" என்றபடி சுரேந்தரைத் தனியே அழைத்துக் கொண்டு போனான்.



"சுரேன்... விஜய் ரொம்ப டிஸ்டர்பா இருக்கான்... கொஞ்ச நேரத்துக்கு முன்னால அவனையுமறியாமல் பேசிட்டு இருந்தான்... இப்போ டாக்டர் இந்தப் பொண்ணைப் பற்றிப் பேசியதில்... கொஞ்சம் நார்மல் ஆகி இருக்கான்... அவன் தீக்ஷா நினைவுல தன்னை மறக்கிறப்பல்லாம்... இந்தப் பொண்ண வச்சுத்தான் டைவர்ட் பண்ணணும்...

"நாம காப்பாற்றின பெண்... அவளுக்கு ஒண்ணும் ஆகிடக் கூடாதுனு ஒரு அக்கறை அவன் மனசுல வந்திருக்கு. தீக்ஷா கிடைக்கிறவரை... விஜய்யை நாம இத வச்சுத்தான் அவனைக் கொண்டு போகணும். இல்லை, உங்க அண்ணா நிலை ரொம்ப மோசமாகிடும்!" என்று சொல்ல...

சுரேனுக்குத் துக்கம் தாள முடியவில்லை...

தனியே நின்று கொண்டிருந்தான் விஜய்... கண்ணாடி யின் வழியே... உயிருக்குப் போராடிக் கொண்டிருக்கும் அந்தப் பெண்ணையே பார்த்தபடி இருந்தான்...

போராட்ட நிலையிலும் அவள் தன்னை நோக்கிக் கை கூப்பியது, ஞாபகம் வர... அவனையுமறியாமல் கண்கள் கலங்கின... அந்த அபலைப் பெண்ணுக்காக மனமார வேண்டிக் கொண்டவனின் உள்ளம்... தன்னவளையும் தன்னிடம் கொண்டு வந்து சேர்த்திட வேண்டி... தவிக்க ஆரம்பித்தது.

சுரேந்தர் விஜய்யிடம் வந்து... "அண்ணா... நானும் தீனாவும்... போகிறோம். நீங்க இங்க இருங்க... இந்தப் பொண்ணுக்கு ட்ரீட்மெண்ட்டை ஸ்டார்ட் பண்ண வேண்டு மென்று டாக்டர் சொன்னார்..." என்று ஆரம்பிக்க...

விஜய்... எதுவும் பேசவில்லை... பேச முடியவில்லை.

அவர்களுக்குப் பதில் சொல்லாமல்... தீக்ஷாவின் எண்ணையே தொடர்பு கொண்டிருந்தான் இப்போது... அது

அணைக்கப்பட்டிருப்பதையே திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டிருந்தது, இவனின் நிலை புரியாமல்...

சுரேந்தரும் தீக்ஷாவிடமிருந்த விஜய்யின் நம்பருக்கு முயற்சி செய்து கொண்டுதான் இருந்தான். அணைக்கப்பட்ட நிலையிலே அந்த எண்ணும் இருக்க... ஒரு கட்டத்தில் விட்டு விட்டான். ஆனால்... விஜய் இன்னும் விடாமல் தொடர்பு கொண்டிருப்பதைப் பார்த்தவனுக்கு உயிர் துடித்தது.

சற்றுத் தள்ளி வந்து... அவன் அண்ணன் நம்பருக்குத் தொடர்பு கொண்டான்... நம்பிக்கையின்றித்தான்... ஆனால் நடந்ததோ வேறு.

அதுவரை அவன் முயற்சித்த போதெல்லாம் அவனை ஏமாற்றிய அந்த எண்... இப்போது அவனை ஏமாற்ற வில்லை... ஆனால் எதிர்முனையில் இருந்து பதில்தான் இல்லை... ரிங் மட்டுமே போனது... இருந்தும் பரபரத்த உள்ளத்துடன்... மீண்டும் தொடர்பு கொண்டான்.

எதிர் முனையில்... "ஹலோ..." என்ற ஆணின் கர கரத்த குரல் வந்து... மீண்டும் கட் ஆகியது.

சுரேந்தர் தன் அண்ணனின் அருகில் போனான், கத்தியபடி... "அண்ணா... உங்க போன் ரிங் போகுது... எடுத்தாங்கண்ணா... ஆனால் தீக்ஷா இல்லை..." என்ற போதே விஜய்யின் முகம் வாடியது.

மீண்டும் சுரேந்தர் போன் செய்ய... இப்போது ஹலோ வெல்லாம் பதில் வரவில்லை.

"சார்... நீங்க தீக்ஷாவுக்கு என்ன வேண்டும்... அவங்க எங்க கூட இருக்காங்க... விஜய் சார் கிட்ட நாங்க பேச முடியுமா?" என்ற போதே சிக்னல் விட்டு விட்டுக் கிடைக்க... மீண்டும் கட் ஆக.. சுரேன் மனம் நிம்மதியில் லேசாகியது.

"அண்ணா, நம்ம தீக்ஷா கிடைச்சிட்டாண்ணா... உங்க கிட்டப் பேசனுமாம்..." என்றபோதே அவன் குரல் நடுக்கமும்



சந்தோசமுமாய் வெளி வர... விஜய் நம்ப முடியாமல் அவனைப் பார்த்தான்.

"அண்ணா, சிக்னல் ஒழுங்காக் கிடைக்க மாட் டேங்கிறது..." என்று மீண்டும் தொடர்பு கொள்ளப் போக,

"யாருடா அவங்க...?"

"தெரியலண்ணா... அனேகமா கடத்துனவங்களாக் கூட இருக்கலாம்."

விஜய் சொன்னான். "அவனுங்க பேசினால் நான் ஃப்ளைட் ஆக்சிடெண்ட்ல செத்துட்டேன்னு சொல்லுடா... பரிதாபப்பட்டாவது என் தீக்ஷாவை என்கிட்ட கொண்டு வந்து சேர்த்துடுவாங்க..." என்றவனின் வார்த்தைகளில், சுரேந்தர் அதிர்ச்சியாய்ப் பார்க்க...

"அவளைக் கடத்தி வச்சுட்டு பிளாக்மெயில் பண்ற வனுங்க... நானே இல்லைன்னு தெரிந்தால் அவளை விட்டுருவாங்கடா... அதனாலதான்டா..." என்ற வார்த்தை களில் சுரேந்தரும்... அரை மனதாகத் தலையாட்டியபடி மொபைலில் கால் செய்ய ஆரம்பிக்க...

விதி விஜய் வாழ்க்கையில் அவன் வார்த்தைகளை வைத்தே மீண்டும் விளையாட ஆரம்பித்தது.

எதிர் முனை எடுக்கப் பட்டவுடன்...

சுரேந்தர் வேகமாய்ப் பேச ஆரம்பித்தான்...

"இங்க பாருங்க... நீங்க யார்..?. தீக்ஷா எப்படி உங்க கிட்ட மாட்டினாள்... அவகிட்ட போனைக் கொடுங்க... இப்போ அவ கணவனுடைய நிலை என்னன்னு தெரியுமா?" என்று வேக வேகமாய்ச் சொல்ல...

"சார்... எங்களை மன்னிச்சுருங்க... விஜய் சாருக்கு என்ன ஆச்சு...? அதை மட்டும் சொல்லுங்க..." என்றது எதிர்க் குரல்...

சுரேந்தருக்கு எரிச்சலாக வந்தது.

'தீக்ஷா பற்றிக் கேட்டால்... இவன் நம்மகிட்ட பதில் சொல்லாம கேள்வி கேட்கிறான்...' என்றபடி...

"விஜய் சார் பேசற நிலைமையில இல்லை... புரிஞ்சுக்குங்க... நான் அவர் தம்பிதான்... தீக்ஷாகிட்ட போனைக் கொடுங்க..." என்று கோபத்தோடு சொல்ல...

விஜய் பதறினான்...

"டேய், கோபப்படாமல் பேசு..." என்று சைகை காட்ட...

"விஜய் சார் பேசற நிலைமையில இல்லைனா...?" இழுத்தது அந்தக் குரல்...

சற்று நேரத்தில்... "தீக்ஷா தங்கச்சிட்ட போனைக் கொடுக்கிறேன்... பேசுங்க!" என்று போன் மாறியபோது...

"டேய், புரிஞ்சுக்கோங்க... பேசுற நிலைமையில இல்லை என்றால்... இன்னைக்கு நடந்த ஃப்ளைட் ஆக்சி டெண்ட்ல..." என்றவன் அதற்கு மேல் சொல்லப் பொய்யாகக் கூட வார்த்தை வராமல் நிறுத்த,

"சு...ரே..ன்... அ..த்...தா...ன்..." என்ற தீக்ஷாவின் நடுங்கிய அதிர்ச்சியான குரல்தான் அவனை அடைந்தது.

அவளின் நிலை தெரியாமல் சுரேன் மனம் துள்ள... சந்தோஷத்தோடு... "தீக்ஷா, நான் சுரேன் அத்தான் பேசு றேன்மா..." என்று அவன் முடிக்கவில்லை.

விஜய் பறித்து... "தீக்ஷா, தீக்ஷா... நான் நான்... இந்தர் பேசறேன்... உன் இந்தர் பேசறேன்..." உணர்வுக் குவியலாய்ப் பேசியவனின் குரலுக்கு எதிர் முனையில் பதில் இல்லை.

மௌனமே அவனுக்குப் பதிலாய் வர... விஜய்... ஏதேதோ பேசினான்... எதற்கும் பதில் வராமல் போக... இப்போது... தீக்ஷாவுக்குப் பதில் வேறொரு குரல் பேசியது.



"சார், நாங்க வீட்டுக்கு வருகிறோம். ஆனால் அட்ரஸ் தெரியலை... உங்க போனையும் ஆபரேட் பண்ண முடி யலை... விஜய் பில்டர்ஸுக்குப் போய்ட்டு இருந்தோம்..." என்று முடிக்கவில்லை.

"அவளுக்கு என்ன ஆச்சு... ஏன் பேச மாட்டேன்கிறா?" என்று கோபமாய்க் கேட்டான் விஜய்.

"அவங்க அதிர்ச்சியில இருக்காங்க சார்... அவங்க டி.வி.யில் நியூஸ் பார்த்து... ஃப்ளைட் ஆக்ஸிடெண்ட்ல..." என்றபோதே.

"டேய், நான் அவ புருசன்தான்டா பேசுறேன்... பேசச் சொல்லுங்கடா!" என்றபோதே விஜய்க்குக் குரல் உடைய... உடல் நடுங்க... அவனை உணர்ந்த தீனா... போனை வாங்கிப் பேசினான்.

'தீக்ஷா அதிர்ச்சியில் இருக்கிறாள்...' என்பதை உணர்ந்த தீனா... தாங்கள் இருக்கும் மருத்துவமனை முகவரி சொல்ல...

சற்று நேரத்தில் தீக்ஷா அங்கு வந்தாள்... வந்தாள் என்று சொல்வதை விட... கூட்டி வரப்பட்டாள் என்றுதான் சொல்ல வேண்டும்.

அது மட்டுமில்லை... தீக்ஷா அங்கு வருகிறாள்... என்று இரு வீட்டாருக்கும் சொல்லப்பட... அனைவரும் குழுமி விட்டனர்.

யார் அவளைக் கடத்தியது...?

அவளைக் கூட்டிக் கொண்டு வருபவர் யார்?

எந்த விபரமும் தெரியவில்லை, அங்கிருந்த அனை வருக்கும்... போனில் பேசி... எதையும் குழப்பாமல் அந்த நபர்களை... அவர்கள் வரும் வழியை எல்லாம் கேட்ட சுரேந்தர்... அவர்கள் சொன்ன தகவல்கள் எல்லாம் உண்மை

தானா என்று அறிய... தங்கள் ஆட்களை அனுப்பி இருந்தான்.

கிட்டத்தட்ட அரைமணி நேரத்தில்... அதுவரை அனைவரையும் தவிக்கவிட்ட தீக்ஷா... அவர்கள் கண் பார்வையில் தோன்றினாள்.

விஜய் பாய்ந்து அந்தக் காரின் அருகே போக... தீக்ஷா வழக்கம் போல்... தன் துள்ளலுடன் இறங்குவாள் என்று எதிர்பார்க்க... அவளோ தான் இருந்த இடத்தை விட்டு அசையாமல் இருக்க...

விஜய் காரின் உள்ளே போய் அவள் அருகே அமர்ந்து... ஒரு முறை... முழுவதுமாய்ப் பார்வையால் அலசியவன்... நிம்மதியில் தன் தோளோடு சாய்க்க... தீக்ஷாவின் உடல் நடுக்கத்துடன் தூக்கி வாரிப் போட்டது.

"நான் உயிரோடதான் இருக்கேன்... என்னைப் பாரு, தீக்ஷா.. எனக்கு ஒண்ணும் ஆகலடா!" என்று அவள் முகம் திருப்ப...

அவள் கண்கள் மட்டுமே சுழன்றன... ஆனால் அதில் நிராசை மட்டுமே இருக்க... விஜய்யைப் பார்த்தபடியே கண் மூடினாள் தீக்ஷா.

ஏதேதோ சொல்லிப் பார்த்தான்... பதில்தான் வரவில்லை.

"பேசுடி... என்னைப் போக விடாமல் பண்ணி... என்னைக் காப்பாத்திட்ட தீக்ஷா... நம்ம காதல் என்னைக் காப்பாத்திருச்சுடி... பேசு, தீக்ஷா..." என்று மனைவியைத் தோளில் சாய்த்தபடி பேசியவனிடம்... தீபன்தான் பேசினான்...

"விஜய், அவ அதிர்ச்சியில இருக்கா... கொஞ்சம் நேரம் ஆச்சுன்னா சரியாகிடுவா...!" என்று சொல்ல...



விஜய்... தானே தூக்கப் போனான்... ஆனால், அவனால் முடியவில்லை... கை காலெல்லாம் நடுங்கியது.

யாரோ ஒரு பெண்ணுக்கு ஆபத்து என்றபோது... வேகமாய்ச் செயல்பட்ட அவன் மனமும் உள்ளமும்... அவன் மனைவி விசயத்தில் வேலை நிறுத்தம் செய்ய... தடுமாறினான் விஜய்...

அதைக் கவனித்த தீபன்... அவனைத் தடுத்து... தன் தங்கையைத் தூக்கியபடி மருத்துவ மனைக்குப் போக... ஜெயந்தி முதல் அனைவரும் அவன் பின்னால் போக... விஜய் வெறித்தபடி அமர்ந்திருந்தான்.

அவனுக்குத் தீக்ஷா அவனைப் பார்த்தபடியே கண் மூடியது ஞாபகம் வந்து, உயிரைக் கொல்ல... அவளைக் கூட்டி வந்தவர்களைப் பார்க்க... அவர்கள் இருவரும் அவளைக் காப்பாற்றிக் கூட்டி வந்தவர்கள் போல இல்லை. அக்மார்க் ரவுடிகள் போல் இருக்க... விஜய் அசோக்கிடம் சொல்லி... இருவரையும் அவன் கஸ்டடியில் வைத்திருக்கச் சொல்லி விட்டு... தன் மனைவியை நோக்கிப் போனான்.

தீக்ஷாவைப் பரிசோதித்த மருத்துவர்... "அவளுக்கு ஒன்றுமில்லை... அதிர்ச்சி மட்டும்தான்... ஓய்வெடுத்தால் சரி ஆகிவிடும்..." என்று சொல்ல... நிம்மதியில் இரு குடும்பமும் அப்போதுதான் பெருமூச்சு விட்டது.

விஜய் மட்டும்... அப்போதும் ஏதும் பேசவில்லை... நிம்மதியாய் இருக்க முடியவில்லை... எங்கோ மனம் நிம்மதி அடைய மறுத்தது.

அவள் தன்னைப் பார்த்து இந்தர் என்று சொல்லும் வரை அவனின் மனம் சாந்தமாகாது... என்றே அவனுக்குத் தோன்ற... இறுகிய முகத்தோடு தன் மனைவியின் அருகில் அமர்ந்திருந்தான்.

இடையில்... இத்தனை பேர் அங்கிருந்தால் மருத்துவ மனையின் சூழல் பாதிக்கப்படும் என்பதை உணர்ந்த சுரேந்தர்... அனைவரையும் அழைத்துக் கொண்டு கிளம்ப... யுகியும் ஜெயந்தியும் மட்டுமே விஜய், தீக்ஷாவோடு இருந் தனர்.

தீனா... விஜய்யிடம் சொல்லிக் கொண்டு கிளம்ப... விஜய் அவனைப் பிடித்து நிறுத்தினான்.

"தேங்க்ஸ்டா... இந்த மாதிரி இக்கட்டான சூழ்நிலையில் நான் வந்து உதவி பண்ணி இருப்பேனா என்று தெரிய லைடா... ஆனால் நீ..." என்று சொன்னபோது விஜய்யின் குரல் கிணற்றுக்குள் இருந்து வருவது போல் இருந்தாலும்... உணர்ச்சியின் பிடியோடு சொல்ல...

"என்னடா மச்சான்... எந்த நேரத்தில் எதைப் பேசுறதுனு உனக்குத் தெரியாதா...? முதலில் உன் மனைவியைக் கவனி. நீயும் ரொம்பத் தளர்ந்து இருக்க... உன்னையும் பார்த் துக்கோ... நான் அந்தப் பெண்ணைக் கடத்துனவங்களை விசாரிக்கச் சொல்லி இருக்கேன்... டேக் கேர்!" என்றபடி நகரப் போக... விஜய் அவன் கைகளை விடவே இல்லை.

"தீனா... இன்னைக்கு மட்டும் என் கூட இருக்கியா...? ஒரு மாதிரி நடுக்கமா இருக்குதுடா... தீக்ஷா கண் விழிக்கிற வரை... ப்ளீஸ்!" என்று சிறுவன் போல் கெஞ்சியவனைப் பார்த்த தீனா... மறுப்பேதும் சொல்லாமல் அவனருகில் அமர்ந்தவன்... "சரி. நான் கீழே இருக்கேன்.. நீ இங்கேயே இரு..." என்று கீழே இறங்கினான்.

ஜெயந்தி... மகளின் அருகில் சத்தமில்லாமல் அழுது கொண்டிருந்தார்... மகளுக்கு ஒன்றுமில்லை என்று மருத் துவர் சொன்னாலும்... தாயாக அவரின் மனமும் சஞ்சலப் பட்டது... அதுவே அவரின் அழுகையாக வந்து கொண் டிருக்க... விஜய், தீக்ஷாவின் கையைப் பிடித்தபடி அவளின் தலைமாட்டில் தன் தலையை வைத்துக் கண் மூடினான்...



அவன் அவனாகவே இல்லை என்றுதான் சொல்ல வேண்டும்... நினைவுகள் எதைப் பற்றியும் இல்லை... வெறுமையாக இருந்தன. இனி, என்ன ஆகும் என்று யோசிக்கவும்... இதுவரை என்னவெல்லாம் நடந்தது என்று பின்னால் செல்லவும் இல்லை.

தன்னவள் கண் விழித்துத் தன்னை இந்தர் என்று கூப்பிடும் நிமிடத்தைத்தான் அவன் எதிர்நோக்கிக் காத்திருந் தான்.

யுகியோ கண்ணாடியின் வழியே... தன் அண்ணா வையும்... தீக்ஷாவையும் பார்த்தபடியேதான் நின்று கொண் டிருந்தான்... விழிகள் அவனையுமறியாமல் கண்ணீரை உகுத்தன.

தீக்ஷாவை முதன் முதலில் பார்த்ததில் இருந்து... அவள் கடைசியாக, அவன் காரை விட அவள் பைக்கைப் பெருமையாகப் பேசியது ஞாபகம் வர... துக்கம் நெஞ்சை அடைத்தது.

அவனால் தீக்ஷாவின் நிலையைத் தாங்கவே முடிய வில்லை... அதை விடத் தன் அண்ணனின் நிலை... ஒரே இரவில் தன் கம்பீரம் தொலைத்து... தன் சுயத்தை இழந்து... அனைவரின் பரிதாபப் பார்வைக்கும் ஆளானது போல் தோன்ற... உதடுகள் துடித்தன யுகிக்கு.

ஜெயந்தி அழுதபடியே வெளியே வர... யுகி அவரின் அருகில் போய் அமர்ந்து... "தீக்ஷாவுக்கு ஒண்ணும் ஆகாது, அத்தை... இன்னும் கொஞ்ச நேரத்தில் எழுந்து உட்கார்ந்து நம்ம அத்தனை பேரையும் ஓட்டுவா... பாருங்களேன்..." என்று தன் துக்கமெல்லாம் தூரப் போட்டு விட்டு அவரை ஆறுதல் படுத்த...

"இதுபோல ரெண்டு தடவை ஆகியிருக்கு, தம்பி... ரெண்டு மணி நேரத்தில் எழுந்துட்டா... இப்போ என்னமோ

பயமா இருக்கு..." - கண்களைத் துடைத்தபடியே சொன்ன வரை, நம்பிக்கையோடு பார்த்தான் யுகி.

"இன்னைக்கும் அதே போலத்தான் நடக்கும், வைஜெயந்தி அத்தை..." என்று சிரிக்க,

ஜெயந்தி விசும்பலோடே சிரித்து வைத்தார்.

அப்போது ஒரு செவிலி வேக நடை எடுத்து வைத்து அவர்களை நோக்கி வர... யுகியும் அருகில் போனான்.

"சார், அந்த ஆசிட் கேஸ்... கார்டியன்..." என்று இழுக்க,

"சொல்லுங்க..." என்று யுகியும் பதட்டமாய்க் கேட்க,

"அவங்க ட்ரீட்மெண்ட்டுக்கு கோ-ஆபரேட் பண்ண மாட்டேங்கிறாங்க. அது மட்டுமில்லாமல் அவங்க பக்கத்தில் யாருமே இல்லை..." என்று வேக வேகமாய்ச் சொல்ல...

யுகி முன்னே போக... ஜெயந்தியும் ஒரு பெண்ணின் தாய்தானே. அவரின் தாயுள்ளம் உருக ஆரம்பிக்க... யுகி பின்னாலே அவரும் சென்றார்.

அங்கு திமிறியபடி இருந்த அந்தப் பெண்ணைப் பார்த்த யுகிக்கு, என்ன செய்வது என்றே தெரியவில்லை. என்ன சொல்லி அழைப்பது... பெயர் கூடத் தெரியாது.

யுகி அவஸ்தையாய் ஜெயந்தியைப் பார்க்க...

"நீங்க விஜய் தம்பியைக் கூட்டிட்டு வாங்க..." என்றபடி, வலியால் முனகக் கூட முடியாமல் தவித்த அந்த இளம் பெண்ணின் அருகில் தாய்மை உள்ளத்தோடு அமர்ந்து... அவள் தலை கோத... அந்தப் பெண் அப்போதும்... மருத்துவ சிகிச்சைக்கு ஒத்துழைக்காமல் இருக்க... விஜய் வந்தான்.

"என்னாச்சு?" என்றபடி வர, திமிறிக் கொண்டிருந்த அவள் இவன் குரலைக் கேட்டதும்... தன் போராட்டத்தைத் தளர்த்த...



"சார், கொஞ்சம் கூட ஒத்துழைக்க மாட்டேன்கிறாங்க. எப்படி ட்ரீட்மெண்ட் ஆரம்பிக்கிறது...?" - அங்கிருந்த நர்ஸ் எரிச்சலுடன் கூற...

விஜய் அந்தப் பெண்ணின் அருகில் அமர்ந்து... அவள் கைகளை ஆறுதலாகப் பிடித்தபடி...

"உன் பேர் கூடத் தெரியாதும்மா எனக்கு... நீ சரி யானால்தான்... உன்னைச் சேர்ந்தவங்களைக் கண்டுபிடிச்சு உன்னை ஒப்படைக்க முடியும். நீ இப்போ இருக்கிற நிலைமை யில... உன்னாலும் சொல்ல முடியலை. உனக்கு ஒண்ணும் ஆகலை... நீ தைரியமா இருக்கணும்..." என்றபோதே,

தைரியம் என்ற வார்த்தைகளைக் கேட்ட போதே... சக்தியின் கண்களில் நீர் வழிந்தது. அவளின் பெயரிலே சக்தி இருக்கிறது. ஆனால், தனக்கு நடந்ததைத் தடுக்க முடியாத கோழையாகிப் போனேனே...

தன் தாய், தந்தை நினைவுகள் ஒருபுறம் வாட்ட... தனக்குள் முடிவு செய்தவளாய், விஜய்யின் கைகளை... அவளது கை அழுத்தமாய்ப் பற்றி விட... விஜய் அவள் முகத்தைப் பார்க்க... அதில் கண்ணீர் வழிய... அதைத் துடைக்கக் கூட அவனால் முடியவில்லை.

அவள் அமைதியானாள். ஆனால் விஜய் உள்ளம் எரிமலையாய்க் குமுறியது. அதன் பிறகு அங்கிருந்த மருத் துவர்கள்... சிகிச்சை மேற்கொள்ள ஆரம்பிக்க... ஜெயந்தியும் விஜய்யும் வெளியேறினர்.

தீனா வெளியே இருந்து இதையெல்லாம் கவனித்துக் கொண்டேதான் இருந்தான்.

ஜெயந்தியை மட்டும் அங்கே விட்டு விட்டு... தீனா... விஜய்யிடம் தனியே வந்து பேச ஆரம்பித்தான்.

"விஜய், அந்தப் பொண்ணு பேரு சக்திடா. அந்தப் பசங்களைப் பிடிச்சுட்டாங்க. இவகிட்ட தப்பா நடக்க ட்ரை

பண்ணியது... அவளோட காதலன்தானாம். அவங்க அப்பா, அம்மா டீடெயில்ஸ்லாம் கலெக்ட் பண்ணியாச்சு. வந்துட்டு இருக்காங்க..." என்றவனிடம்,

"ஹ்ம்ம்..." என்று தலையாட்டியவனைக் கவலையோடு பார்த்தவள்...

"தென்... தீக்ஷாவைக் கூட்டிட்டு வந்தவங்க... தீக்ஷா கண் முழிக்காமல்... அவளைப் பார்க்காமல் போக மாட்டேன்னு பிடிவாதம் பிடிக்கிறாங்கடா... என்ன பண்ண...?" என்றபோது நிமிர்ந்தான் விஜய்.

"யாரு அவங்க?" விட்டேற்றியாகக் கேட்டான்.

"அவங்க..." என்று ஆரம்பிக்கும் போதே...

மருத்துவர்... விஜய்யை மீண்டும் பார்க்க வரச் சொன்னதாகக் கூற, விஜய் அங்கு சென்றான்.

நேற்று மாலை தொடங்கிய அலைச்சல்... இன்னும் அவனை விட்ட பாடில்லை. உடலும் மனமும் சோர்ந்து போய் இருந்தாலும், உறக்கம் என்பது அவனை எட்டவே இல்லை.

இந்தப் பெண் சக்தியைப் பார்த்து விட்டு வந்த பிறகு... மனம் முழுக்க ஒரே ஒரு கேள்விதான் அவனை ஆட்சி செய்து அரித்துக் கொண்டிருந்தது.

அது என்னவென்றால்... சில மணி நேரத்திற்கு முன் தான் அந்தப் பெண் சக்தி தன்னைப் பார்த்தாள். அதற்குள் ளாகவே என் குரலை... என்னை... உணர்ந்து கொண்டாள். ஆனால், தீக்ஷா... தன் மனைவி... தன்னை உணராமல் இருக்கிறாளே என்ற நினைவுதான்.

தன்னையே நொந்தபடி மருத்துவரின் தனி அறை நோக்கி நடந்தான்.

அவனுக்கு எதையும் எதிர் கொள்ளவே பயமாய் இருந்தது. ஒரு புறம் இளமாறனின் இறப்பு... மனதில்



உறுத்திக் கொண்டிருந்தது. இன்னொரு புறம் தீக்ஷா... அவள் கிடைத்து விட்டதால் மனம் இலேசாக வேண்டும் தான்... ஆனால் முடியவில்லை.

இதை எல்லாம் விட்டு அந்தச் சக்தி... பரிதாபமாக இருந்தது, அவளை நினைத்து. ஒரு பெண்ணாக அவள் அனுபவிப்பது எல்லாம் கொடுமையாகத் தோன்றியது விஜய்க்கு. காதலித்தவனே அவளுக்கு எதிராக மாறி நடந்தது இன்னும் வேதனையை அளிக்க... பல எண்ண ஓட்டங் களுடன்தான் அவன் மருத்துவரைச் சந்தித்தான்.

அங்கு மட்டும் அவனுக்கு நல்ல செய்தியா காத் திருக்கும்... அதிர்ச்சிகளின் தொடர்ச்சி அவனைத் துரத்தியது.

கையில் ரிப்போர்ட்டோடு இருந்த ரேவதியின் முன் அமர்ந்தபோது... விஜய் குழப்பமாய் அவளையே பார்க்க...

ரேவதியின் கணவன் விஜய்யின் தோழன்...

ரேவதியின் தாய் தான் இந்த மருத்துவ மனையின் தலைவர்.

"என்ன ரேவதி..." என்றபோதே,

"விஜய் அண்ணா... தீக்ஷா பற்றி அம்மா உங்க கிட்ட பேசணும்னு சொன்னாங்க. வெயிட் பண்ணுங்க..." என்றபோதே அவள் தாய் உள்ளே வர...

விஜய்க்கு இன்னும் குழப்பம்... 'தீக்ஷாவுக்கு என்ன...' என்று குழப்பத்தோடு பார்க்க...

"விஜய், நான் உனக்கு மருத்துவராக மட்டும் தெரிந்திருந்தால் இந்த விசயத்தை எந்தத் தடங்கலும் இல்லாமல் சொல்லி யிருப்பேன்..." என்று நிறுத்த,

விஜய்யின் இதயம் படபடவென அடித்துக் கொண்டது. வார்த்தையே வராமல் நிலை குத்திய விழிகளுடன் அவரையே பார்க்க...

சொல்லித்தான் ஆக வேண்டும் என்பதால்... அவரும் தொடர்ந்தார். "உன் மனைவிக்கு அதிர்ச்சியில்... நினைவு தப்பியது மட்டுமில்லை. கருச்சிதைவும் ஏற்பட்டிருக்கிறது. 35 நாள்..." என்று சொல்லி விஜய்யைப் பார்க்க...

விஜய் அந்தச் சூழ்நிலையிலும் தன்னை அடக்க முயற்சித்தான். உதடுகளை அழுந்த மூடியவன்... உட்கார்ந்திருந்த நாற்காலியின் முனையை அழுத்தமாகப் பற்றினான். இருந்தும் அவன் கண்கள் கலங்கியதை அவனால் தடுக்க முடியவில்லை.

ஒருவாறு தன்னைச் சரிப்படுத்தியவன், "எ... எனக்குத் தீக்ஷா நல்லபடியா கிடைத்தால் போதும், ஆன்ட்டி... அது போதும் ஆன்ட்டி..." என்றவனின் குரல் தடுமாறி வெளிவர...

"விஜய்! கண்ட்ரோல் யுவர்செல்ஃப். இந்த மாதிரியான சூழ்நிலையில் நீ தைரியமா இருக்க வேண்டும்..." என்றபடி... "அது மட்டுமில்லை. உன் மனைவிக்கு முன் தலையில் சமீபத்தில் அடிபட்டிருக்கிறது போல..." என்று எடுத்த ரிப்போர்ட்டைக் காட்ட... விஜய்யின் ரத்த ஓட்டத்தோடு அமிலம் கலந்தது போல துடித்து நிமிர...

"இதுவும் ஒரு காரணம். அவளோட இப்போதைய நிலைக்கு... ஒரே நேரத்தில் பல அதிர்ச்சிகள். மனதளவிலும்... உடலளவிலும்..." என்றபோது, விஜய் என்கின்ற விஜயேந்தர் அதன் பின் அவர் என்ன பேசினார்... என்ன சொன்னார் என்றெல்லாம் கவனிக்கும் நிலையில் இல்லை.

தீக்ஷா கோமா ஸ்டேஜில் இருக்கிறாள் என்று காதில் விழுந்த விசயங்களைச் சேகரித்து மூளை நிரப்ப... விஜய் நடைபிணமாய்த் தன்னவளை நோக்கிப் போனான்.

இடையில் வந்த யுகி கேட்ட கேள்விகளுக்கு எல்லாம் அவன் பதில் சொல்லாமல்... தன் அடையாளமே இல்லா



மல்... அமைதியாய்க் கண் மூடிப் படுத்திருந்த தீக்ஷாவின் முன் மண்டியிட்டு அமர...

அவனைத் தொடர்ந்து வந்த யுகிக்கும் கலவரம் கூடியது. "என்னாச்சு அண்ணா...?" என்றபோதே,

விஜய்யின் கண்களில் கண்ணீர் வர... "உன்னோட இந்த நிலைமைக்கு நான்தான் காரணமா, தீக்ஷா...!" என்று தன்னையே கட்டிலின் முனையில் முட்டிக் கொள்ள... பதறித் தடுத்தான் யுகி.

"என்னை விடுடா... நான் ஒரு பாவிடா... அரக்கன். உயிரோடவே இருக்கக் கூடாது. இன்னைக்கு இந்த நிலைமையில இருக்காளே, அதுக்குக் காரணம் எதுன்னு தெரியுமா? அன்னைக்கு நான் தள்ளி விட்ட வேகத்தில் நெற்றியில் முட்டியதுதானாம். இவதான் எல்லாத்தையும் ஈசியா எடுத்துக்கிடுவாளே... ஈசியா விட்டுட்டா...

"இன்னைக்கு... என்னை நோக்கி எல்லாமே திரும்பி வருதுடா... அவளை எழுந்து என்கிட்ட பேசச் சொல்லுடா... என்ன தண்டனைன்னாலும் அவளைக் கொடுக்கச் சொல்லுடா. ஆனா, அவளை வருத்தி எனக்குத் தண்டனையைக் கொடுக்கிறாடா... எனக்குப் பயமாயிருக்கு, யுகி... எனக்குப் பைத்தியம் பிடிக்கிற மாதிரி இருக்குடா..." என்று துடித்தவனைப் பார்த்த யுகி... கதறினான்.

"என்னண்ணா சொல்றீங்க...? தீக்ஷாவுக்கு என்னாச்சு?" என்றபோதே...

"எனக்கு... என் தீக்ஷா கிடைப்பாளாடா...? பயமா இருக்குடா...!" என்றபோதே, விஜய்யின் மொபைலுக்கு இளமதியிடமிருந்து கால் வர... யுகி தான் எடுத்தான்.

போனை வைத்தபோது... யுகியின் கண்கள் சிவந்திருக்க...

"அந்த இளமாறனை நம்புனீங்கல்ல... நம்ம தீக்ஷாவைக் கடத்தச் சொன்னதே அவன்தானாம். கடத்த மட்டும் இல்லண்ணா... அதுக்கும் மேல..." என்றபோதே, அவனால் சொல்ல முடியவில்லை.

"அவன் இப்படி இறந்திருக்கக் கூடாது... என் கையால சாகாமல் விபத்தில் போயிட்டானே...!" இறுகினான் யுகி.

புரியாமல் பார்த்தான் விஜய். "அவன் ஏன்டா தீக்ஷாவைக் கடத்தணும்?" என்றபோதே,

யுகி எரிந்து விழுந்தான். "இப்போ கூட அவனை நம்புறீங்களா...? தீக்ஷாவைக் கடத்தி... அவளை... அவளை..." என்றவனின் வார்த்தைகள் விஜய் காதில் தீயாய் விழ... தீக்ஷாவை அவன் விழிகள் அவசர அவசரமாய் அள வெடுக்க ஆரம்பிக்க... அவனால் தாங்க முடியாமல் கீழே ஓடினான் விஜய்.

தீனா, யுகி பிடித்து நிறுத்த முயற்சித்தும் முடியாமல் பைத்தியக்காரன் மாதிரி ஓடியவனைப் பார்த்த இருவரும் அவன் பின்னே ஓட...

விஜய் நின்றது... தீக்ஷாவைக் கூட்டி வந்தவர்களிடம் தான்.

அவன் அவர்களிடம் கோபம் கொண்டு அவர்களைக் குதறவில்லை. மாறாக, விஜய் அவர்கள் முன் கை கூப்பிக் கேட்டான். தன் கம்பீரம் எல்லாம் தொலைத்து, "என்ன ஆச்சு, என் தீக்ஷாவுக்கு...? எதையும் மறைக்காதீங்க. உங்களுக்கு எல்லாம் தெரியும்தானே... என்னடா பண்ணீங்க அவளை...? அவ இருக்கிற இடம் எப்படி இருக்கும் தெரியுமா? சூறாவளி மாதிரிச் சுத்திட்டு இருந்தவளை இப்படி ஒரே நிலையில படுக்க வச்சுட்டீங்களே..." என்றபோதே அவன் அவர்கள் முன்னே தொய்ந்து விழுந்தான், அதற்கு மேல் பேச முடியாமல்...



"அய்யோ, தம்பி... எங்களை மன்னிச்சிடுங்க. எல்லாமே எங்களாலதான்..." என்று சொல்ல ஆரம்பித்தனர்.

தீக்ஷா கைகளைக் கட்டியபடி... தன்னை நோக்கி வந்தவர்களைப் பார்த்து நின்றிருக்க...

"டேய், என்னடா... இந்தப் பொண்ணு கொஞ்சம் கூடப் பயம் இல்லாம நிற்குது..." - தங்களுக்குள் பேசிக் கொண்டே அருகில் வர...

"என்னைக் கடத்தப் போறீங்களா...? சரி, வாங்க போகலாம்..." என்றபடி அவர்கள் வந்த வாகனத்தை நோக்கி முன்னே நடக்க... குழம்பினர் வந்த இருவரும்.

"என்ன அங்கேயே நிற்கிறீங்க...? வாங்கப்பா!" என்றவள்... "ஒரு நிமிசம்... இந்தப் பைக் சாவியைப் பிடிங்க... நீங்க ஓட்டிட்டு வாங்க..."

அவளிடமிருந்து சாவியை வாங்கியவன்... "டேய், நீ போடா. நீ போய்க் காரை ஓட்டு. பொண்ணு தப்பிச்சுப் போகப் போறா..." என்று சொல்ல...

இவன் போவதற்குள் தீக்ஷா வாகனத்தில் அமர்ந்திருந்தாள்.

"ஓ.கே. போகலாமா? இது என்னோட போன். ஸ்விட்ச் ஆஃப் பண்ணிட்டேன்..." என்றபடி அவனிடம் கொடுத்தவளின் கைகளைக் கட்டப் போக...

"கையைக் கட்டுறதெல்லாம் சரி. நான் பேசிட்டேதான் வருவேன். இவ்ளோ ஒத்துழைப்புக் கொடுக்கிறேன். அதனால வாயெல்லாம் கட்டக் கூடாது..." என்றவளை வித்தியாசமாய்ப் பார்த்தான் காரில் அமர்ந்தவன்.

"ஹலோ, உங்க ரவுடி ஃப்ரெண்ட் என் பிங்கியை ஓட்டிட்டுக் கிளம்பிட்டாரு... கிளம்புங்க!" என்று சிரித்தவளைப் பார்த்தவனுக்குச் சந்தேகமே வந்து விட்டது.

எதற்கும் மீண்டும் சரி பார்த்துக் கொள்வோம் என்று ஒரு முறைக்கு இருமுறை தன்னிடமிருந்த புகைப்படத்தைப் பார்த்து உறுதி செய்தபடி... காரைக் கிளப்பினான்.

தீக்ஷாவுக்கு உள்ளுக்குள் பயம் இருந்தாலும்... அவளுக்கும் வேறு வழியில்லை என்றே தோன்றியதால்... மிதமிஞ்சிய தைரியம் என்று தெரிந்தும் இவர்களுடன் ஏறி விட்டாள்தான்.

தீனாவின் ஆட்கள் என்று நம்பியதாலே அவளின் இந்தத் தைரியம்... ஒன்றும் செய்ய மாட்டார்கள் என்று தீனாவின் மேல் இருந்த ஏதோ ஒரு நம்பிக்கையில் ஏறியவளுக்கு... தன்னால், அவன் கனவாகிய இந்த ப்ரா ஜெக்ட்டைத் தன் கணவன் இழந்து விடுவானோ என்றுதான் கவலை.

சரி, கடவுள் விட்ட வழி என்று தன்னைச் சமாதானப் படுத்திக் கொண்டவள்... "அண்ணா!" என்று ஏதோ பேச ஆரம்பிக்க...

"என்னது, அண்ணா..." என்று காரை ஓட்டியவன் உறும...

அவனின் உறுமலில் தீக்ஷாவும், 'என்ன... ஆரம்பமே சரியில்லை. சரி, கொஞ்ச தூரம் போனதும் பேச ஆரம் பிக்கலாம்...' என்று வெளியில் வேடிக்கை பார்க்க ஆரம்பித் தாள்.

## 43

தீக்ஷா வெளியில் அச்சம் சிறிதும் இல்லாமல் இருப்பது போல் காட்டிக் கொண்டா லும்... மனதுக்குள் எண்ண ஓட்டங்கள் சுழல ஆரம்பித்தன.

விஜய்க்கு இம்மென்றாலே கோபம் வரும். தீனா தன்னைக் கடத்தியிருக்கிறான் என்று தெரிந்தால்... என்ன ஆகுமோ...? அவனின் காதல் மட்டும் உணர்ந்தவள் அல்ல... அவனின் கோபமும் இவள் அறிவாள் அல்லவா?



தீனாவின் மேல் இன்னும் கோபம்தான் வளரும் என்று கூட வருத்தம் வந்து விட்டது. தான் கொஞ்சம் அஜாக்கிரதையாக இருந்திருக்கா விட்டால்... இந்தச் சூழ்நிலையே வந்திருக்காது. இப்போது இந்த ப்ராஜெக்ட் மட்டும் கைவிட்டுப் போனால்... விஜய்யை நினைக்கவே பயம் வந்து விட்டது. நம்மை வேறு திட்டித் தொலைப்பானே என்று கூட நினைத்தாள்.

'எல்லாவற்றிலும் விளையாட்டுத் தனம். உன்னைக் கல்யாணம் பண்ணி... என் தொழில் போனதுதான் மிச்சம்னு வேற கத்துவானே...!' என்று வேறு கலங்கியவள்...

அடுத்த நிமிடமே, 'தீக்ஷா, உன் வாய் சாமர்த்தியத்தை எல்லாம் காமிச்சு... விருமாண்டியை மலை இறக்கணும்...' என்று தனக்குள் சொல்லிப் பெருமூச்சு விட்டவள்... 'இனி மேல் கொஞ்சமாவது அவனுக்குத் தகுந்த மனைவியாக இருக்க வேண்டும்... தன் விளையாட்டுத் தனத்தினை எல்லாம் மூட்டை கட்டி வைக்க வேண்டும்!' என்று உறுதி கொண்டவள்... அமைதியாகவே வந்து கொண்டிருக்க... அப்போது கேக் வேர்ல்ட் அவளைத் தாண்ட...

சற்று முன் தான் எடுத்த உறுதியை எல்லாம் காற்றில் பறக்க விட்டவளாய், "அண்ணா, அண்ணா... காரை நிறுத்துங்க..." என்று கத்த... காரின் வேகம் குறையவில்லை.

"காத்தமுத்து அண்ணா... உங்களுக்குக் காது கேட்காதா?" என்று சத்தமாகச் சொல்ல...

காத்தமுத்து என்று தீக்ஷாவால் நாமகரணம் சூட்டப்பட்டவன்... திடுக்கிட்டான்தான். ஆனாலும் காரை நிறுத்தாமல் வர... "அந்தக் கடையில எனக்கு ஒண்ணு வாங்கணும்..." என்று வேகமாய்க் கண்ணாடியைப் பார்த்துச் சொல்ல... காரின் வேகம் குறைந்தது.

அவனின் வேகம் குறைந்ததைப் பார்த்தவள், "எனக்கு நாளைக்குப் பிறந்த நாள். ஒரு பிறந்த நாள் கூடக் கேக் வெட்டாமல் விட்டதில்லை. இன்னைக்குப் பாருங்க... இப்படி மாட்டிக்கிட்டேன். யாரைக் கேட்டு இன்னைக்குக் கடத்துனீங்க...? நேத்து இல்லை நாளைக்குக் கடத்தி இருக்கலாம்ல... சோ, தப்பு செஞ்சது நீங்கதான். ஒழுங்கா கேக் வாங்கிட்டு வாங்க... நான் வெட்டணும்... இதுக்குத்தான் எதைச் செஞ்சாலும் நேரம் காலம் பார்த்துச் செய்யணும்..." என்று தன் பாட்டில் பேசிக் கொண்டே போக...

காத்தமுத்து காரையே நிறுத்தி விட்டான். கேக் வாங்க அல்ல... தாங்கள் இருவரும் சரியான நபரைத்தான் கடத்தி வந்திருக்கிறோமா என்று அவனுக்குச் சந்தேகம் முற்றிலும் வர... தன் சட்டைப் பையில் இருந்த புகைப்படத்தை மீண்டும் மீண்டும் பார்த்தவன்... தீக்ஷாதான் அது. உறுதியாகத் தெரிந்த போதும்... சந்தேகமாய்க் கேட்டான், அவளிடமே.

"உன் பேரு தீக்சாதானே!" என்று கேட்க,

"இல்லையே..." என்று சட்டென்று சொன்னாள் தீக்ஷா.

காத்தமுத்து விழிக்க ஆரம்பிக்க... "தீக்ஷா... நாட் தீக்சா..." என்று திருத்த,

முறைத்த காத்தமுத்து காரை ஓட்ட ஆரம்பித்தான்.

"நீங்களா என்னைக் கடத்துனீங்க...? நானேதானே வந்தேன். அதுக்காகவாவது என் பிறந்த நாளைக் கொண்டாடலாம்ல... ப்ச்... உங்களை என் அண்ணனா நினைச்சுத் தானே கேட்கிறேன்..." - பரிதாபமாய் முகத்தை வைத்துக் கொண்டு பேச... அவனுக்கும் இப்போது ஒரு நெகிழ்வு வர...

அதைக் கவனமாகப் பிடித்துக் கொண்ட தீக்ஷா, "சொல்லுங்க... காத்தமுத்து அண்ணா... என்னைக் கட்டின புண்ணியவான்தான்... தன் தொழில் ப்ராஜெக்ட் முக்கியம்னு



போயிட்டார். உங்க தங்கச்சியைப் பார்த்தா பாவமா இல்லை...!" என்று உரிமையாகப் பேச...

"ஆமா, அது யாரு காத்தமுத்து?" என்று இவன் தன் சந்தேகத்தைக் கேட்டான்.

"ஒரிஜினல் பேர் சொன்னாலே இந்த தீக்ஷா பட்டப் பேர் வைப்பா. நீங்க பேரே சொல்லலை. அதனால நானே உங்களுக்குப் பொருத்தமா பேர் வச்சுட்டேன்... இனி, நீங்களே உங்க பேர் சொன்னாலும் நான் மாத்த மாட்டேன்... காத்தமுத்து அண்ணா!" என்று சொல்ல...

"அப்போ அவனுக்கு...." தன் கூட்டாளியைப் பார்த்துச் சுட்டிக் கேட்டான்.

"அவர் முறுக்கு மீசை வச்சிருக்காரா... அதனால முருகேசன்..." என்றவள், "ஷார்ட்டா முருக்குன்னு கூடச் சொல்லலாம். எப்படி... சூப்பரா இருக்குல்ல...!" சத்தம் குறைத்துப் பெருமையாகச் சொல்ல... காத்தமுத்து தாங்க முடியாமல் சிரிக்க ஆரம்பிக்க...

"சூப்பர் தங்கச்சி... இப்போ பாரு..." என்றபடி... "முருகேசன்..." என்று இவனும் அழைத்தான்.

விபரத்தைச் சொல்ல... தீக்ஷாவின் பைக்கில் வந்தவன் முதலில் திகைத்தாலும், 'சரி... இவன் தன் பேரை இனி இவள் முன்னால் இப்படித்தான் கூப்பிடுவான் போல...' என்று பேர் காரணத்தை விட்டவன்... கேக் வாங்கி வரச் சொன்னதில் கோபமாகி... காத்தமுத்துவைத் திட்டித் தீர்த்து விட்டான்.

"காசு யாருடா... உன் அப்பனா வந்து கொடுப்பான்...? நாம அந்தப் பொண்ணைக் கடத்தி யிருக்கிறோம். ஞாபகம் இருக்கா?" என்று பைக்கில் இருந்தபடியே, கார் சன்னலின் அருகில் வந்து உள் நோக்கி உறும...

"ஹலோ... நீங்க கடத்தல. இந்த தீக்ஷாவா வந்துருக்கா... அண்ணே, சொல்லுங்கண்ணே..." என்றவள்,

"காசு... என்னைக் கடத்தச் சொன்ன தீனா தருவான். வாங்கிக்குங்க. விஜய் மனைவின்னா சும்மாவா... பட்ஜெட் கொஞ்சம் அதிகமாகத்தான் ஆகும், பாஸ்..." என்று அவள் சொன்னபோது,

"தீனாவா... அது யாரு?" என்று காத்தமுத்துவும், முருகேசனும் புரியாமல் பார்வை பார்க்க...

"டேய், வாங்கிட்டு வாடா..." என்று காத்தமுத்து சொல்லி விட, முருகேசன் இறங்கினான்.

அப்போது... தனக்குப் பிடித்த ஃபிளேவர் பெயர் சொல்லி அதை வாங்கி வருமாறு தீக்ஷா சொல்ல... முருகேசன் அவளை முறைக்கவில்லை. ஆனால் காத்தமுத்துவைப் பார்த்து உறும... தீக்ஷாவோ... அதற்கெல்லாம் கலங்கவில்லை.

"இதை விடவெல்லாம் நான் பார்த்துட்டேன்... என் விருமாண்டியிடம்!" என்ற ரேஞ்சில் இருக்க...

"டேய், அந்த ஐட்டம் இல்லேன்னா... திரும்பி வந்துடுவேன். வாங்கிட்டு வருவதே அதிகம். இந்தப் பொண்ணு என்னடான்னா... இந்தப் பேச்சுப் பேசுது..." என்று சொல்ல... அவனின் பேச்சை எல்லாம் காதில் வாங்காமல்...

"அண்ணா, உங்களுக்குப் பிடிச்ச கேக் எது...? சொல்லுங்க...!" என்றதும்,

காத்தமுத்து சொல்ல... முருகேசன் முகம் இன்னும் கொடூரமாக மாறியது.

இப்போது தீக்ஷா, "உங்களுக்கு என்ன பிடிக்கும்?" என்று முருகேசனைப் பார்க்க... அவன் பதில் சொல்லாமல் இருக்க... தோளைக் குலுக்கியபடி... "ஓ.கே. முதல் சாய்ஸ் என்னோடது... இரண்டாவது சாய்ஸ் முருக்கு அண்ணாவோட சாய்ஸ்... மூணாவது காத்தா அண்ணாவோட சாய்ஸ்... போய் வாங்கிட்டு வாங்க. நம்ம மூணு பேருக்கும் பிடிச்ச அயிட்டம் ஒண்ணு கூட இல்லேன்னா... இந்தக் கடையே வேண்டாம். நாம வேற கடை பார்த்துப்போம்..." - தீக்ஷா பெரிய நாட்டாமை போல முடித்து வைக்க...



முருகேசன் அசந்தே போனான். "அப்போ கூட கேக் வேண்டாம்னு சொல்லுதா இந்தப் பொண்ணு..." என்று யோசித்தபடி, கடைக்குள் நுழைய... இங்கோ காத்தமுத்து உம்மென்று அமர்ந்திருந்தான்.

"ஏன் இப்படிப் பண்ணுன? நான்தானே உனக்குக் கேக் வாங்கிட்டு வரச் சொன்னேன். கடைசி சாய்ஸா என்னைத் தள்ளிட்ட!" என்று தான் யார்... என்ன செய்து கொண்டிருக்கிறோம் என்பதெல்லாம் மறந்து... தன் குமுறலைக் கொட்ட...

சிரித்த தீக்ஷா, "அய்யோ அண்ணா... அது ஏன்னா... வாங்கப் போறது அவர்தானே. அதனால அப்படிச் சொன்னேன்..." என்றவள், ரகசியம் கூறுவது போல், "எல்லா வகையும் இருந்தாலும்... அவருக்குப் பிடிச்ச ஐட்டம்தான் வாங்கிட்டு வருவாரு, பாருங்க... எனக்குச் சைக்காலஜி தெரியும்..." என்றபோதே முருகேசனும் வந்திருந்தான்.

"இந்த ஃப்ளேவர்தான் இருக்குன்னு சொன்னாங்க..." என்று அவனுக்குப் பிடித்த ஃபிளேவரின் பெயரைச் சொல்லியபடி... அலட்சியமாய்க் காரின் முன்சீட்டில் வைக்க... காத்தமுத்து தீக்ஷாவைப் பார்த்துப் புன்னகைக்க...

தீக்ஷா வேகமாய் ஹை-ஃபை கொடுப்பது போல் அவன் முன்... கைகள் கட்டியிருந்த நிலையிலே கொடுத்தபடி... "சொன்னேன்ல... எப்புடி..." என்று புருவம் உயர்த்த...

"எப்படி தங்கச்சி..." என்றான் காத்தமுத்து, வாய் விட்டே.

முருகேசன் ஆச்சரியமாய்ப் பார்த்தான். இவன் தங்கச்சி என்று அழைத்ததும்... இருந்தும் எதுவும் பேசாமல் இருக்க...

முருகேசனுக்கும் ஐஸ் வைத்தாள் தீக்ஷா. "நீங்க ரொம்ப ஸ்பெஷல்ண்ணா..." என்றபோது முருகேசன் புரியாமல் பார்க்க...

"என் பிங்கியைத் தொடுறதுக்கு என் இந்தர்க்குக் கூட ரூல்ஸ் அண்ட் ரெகுலேசன்ஸ்... ஆனால் நீங்க... எங்கேயோ போயிட்டீங்க..." என்றபோது, முருகேசனின் முகத்திலும் லேசாய் இதம் பரவ... நகர்ந்தான். அவர்களின் பயணம் தொடர்ந்தது.

தீக்ஷாவுக்கோ இந்தர் என்று சொன்னதும்... அவள் மனம் அவளின் இந்தரை நோக்கிச் செல்ல... முகம் வாட்டமாய் மாறியது.

'எல்லோரும் என்னைத் தேடிட்டு இருப்பாங்களோ...? இந்நேரம் விஜய் அத்தான் காதுக்குப் போயிருக்கும்...' மனம் தவிக்க ஆரம்பிக்க... மௌனமானாள் தீக்ஷா.

இப்போது காத்தமுத்து பேசிக் கொண்டே வர... சிறிது நேரத்தில் தன் நிலை தெளிந்து தீக்ஷாவும் அவனோடு பேசியபடி வந்தவள்... ஓரளவு அவனைப் பற்றித் தெரிந்து கொண்டாள். அவனோடு வந்த முருகேசனையும் தெரிந்து கொண்டாள். இதில் அவர்களின் இயற்பெயர்களும் அறிந்தாள்தான்.

ஆனாலும் இனிமேல் அதை வைத்தெல்லாம் கூப்பிடுவாளா... நம் நாயகி! காத்தமுத்து... முருகேசன் என்பதிலேயே அவள் நிலைத்து நின்று விட்டாள். நாமும் நாயகியைப் பின் தொடர்வோம்.

அடுத்த சில மணி நேரங்களில்... அவர்கள் நின்றது, சென்னையின் புறநகர் பகுதியைத் தாண்டித்தான்.



மணி இரவு எட்டுக்கும் மேல் ஆகியிருக்க... தீக்ஷா மிரட்சியான விழிகளுடன்தான் இறங்கினாள். அதைப் பார்த்த காத்தமுத்துவுக்கே ஒரு மாதிரி ஆகி விட்டது.

'இந்தப் பொண்ணை எதுக்காகக் கடத்திட்டு வரச் சொல்லி யிருக்காங்க?' என்று யோசித்துக் கொண்டிருக்கும் போதே, முருகேசன் அவனிடம்... "இன்ஃபார்ம் பண்ணிட்டேன்டா..." என்றபடி கதவைத் திறக்க... காத்தமுத்துவுக்குத் தீக்ஷாவைப் பார்க்கப் பாவமாக இருந்தது.

அவனோ, முருகேசனோ... கட்டளைப்படி அவர்கள் தொழில் நியாய தர்மப்படி கடத்தி வந்து விட்டார்கள். இன்னும் சற்று நேரத்தில் அவர்களிடம் ஒப்படைத்து விட்டுக் கிளம்பியும் விடுவர்.

ஆனால், அதன் பிறகு இந்தச் சிறு பெண்ணை என்ன செய்வார்களோ என்று கலக்கமாக இருந்தது. அவனுக்கே அந்த உணர்வு புதிதுதான். எத்தனையோ நபர்களைக் கடத்தியிருக்கிறான். இந்த மாதிரி எல்லாம் ஒரு முறை கூட யோசித்தது இல்லை.

இன்று ஏனோ இப்படி யெல்லாம் யோசிப்பது அவனுக்கே புது மாதிரியாக இருக்க... அங்கேயே தேங்கி நின்றான் காத்தமுத்து.

முருகேசன் முன்னே செல்ல... காத்தமுத்து காரின் அருகில் நிற்க... இருவருக்கும் இடையில் நின்ற தீக்ஷா... அவனிடம், "என்ன... உங்களுக்கே பயமா இருக்கா?" என்று காத்தமுத்துவின் அருகில் போய்க் கேலியாகச் சொல்ல...

சட்டென்று முகத்தை இறுக்கமாய் மாற்றிய காத்தமுத்து... தீக்ஷாவை உள்ளே அழைத்துக் கொண்டு போனான்.

இதுவரை கடத்தியவர்களை எல்லாம் இழுத்துக் கொண்டுதான் போயிருக்கிறான். முதல் முறை அழைத்துக்

கொண்டு போகிறான். வித்தியாசமாகத்தான் இருந்தது, இந்த அனுபவம்.

சுற்றிலும் வீடு எதுவும் இல்லாமல்... ஆள் அரவம் இல்லாமல்... தன்னந்தனியாக இருந்த அந்த வீட்டினுள் நுழைந்தபோதே... துணுக்கென்று இருந்தது தீக்ஷாவிற்கு. இதயம் படபடவென்று அடிக்க ஆரம்பிக்க... இருந்தும் வேறு வழி யில்லையே அவளுக்கு.

ஹாலில் ஒரு தொலைக்காட்சிப் பெட்டி இருந்தது. வேறொன்றுமில்லை. எட்டி அங்கிருந்த அறைகளை நோட்ட மிட... கட்டில், நாற்காலி எல்லாம் இருந்தது.

அருகில் சமையலறை. அங்கேயும் பார்க்க... சாப்பாடுப் பொட்டலங்கள்... மது பாட்டில்கள்... அது மட்டு மில்லாமல்... விலை மாதுக்களின் வரவும் இருந்தது என்பதை அங்கிருந்த குப்பைத் தொட்டியில் கிடந்த பொருட்கள் அவளுக்குச் சொல்லாமல் சொல்ல...

அந்த இடத்தின் தோற்றம்... பெண்ணாய்த் தீக்ஷாவின் மனதில் கலவரத்தை உருவாக்க ஆரம்பிக்க... அவளின் முகத்திலும் பயம் அப்பட்டமாய் வெளியே தெரிய ஆரம்பித்து வெளுக்க ஆரம்பித்தது.

தன் கணவன் வேறு ஊரில் இல்லை என்பதே அவளுக்கு இப்போது பெரும் வருத்தத்தைத் தர... அமைதி யாக அமர்ந்து விட்டாள். தான் இங்கிருந்து வெளியேறும் நிமிசம் உடனே வராதா என்றிருக்க... கண்ணீர் கசிய ஆரம்பித்தது.

தன்னைக் கடத்திய இருவரும் பார்க்கும் முன்னரே... தன் கைகளால் துடைத்தவளுக்கு அந்த நிலையில் ஒன்று தோன்றியது.

'நல்ல வேளை. இவனுங்க முன்னால கையைக் கட்டினானுங்க... என் ஆளு மாதிரிப் பின்னாடி கட்டி என்



சாபத்தை வாங்கிக் கட்டிக்கலை. பொழச்சானுங்க...' என்பது தான் அது.

அதுவரை பேசிக் கொண்டிருந்த தீக்ஷா, சட்டென்று அமைதியானதை முருகேசன் உணரவில்லை. ஆனால் காத்தமுத்து உணர... "இதெல்லாம் பார்த்துப் பயந்துட்டியா என்ன? இப்போதான் எங்களைப் பார்த்தால் ரவுடி மாதிரி தெரியுதா?" என்று சிரிக்க...

அவனிடம் பேசாமல்... தீக்ஷா முருகேசனிடம், "எத்தனை மணி நேரம் இங்க வச்சிருப்பீங்க...? எனக்கு இந்த இடமே பிடிக்கலை...!" - உண்மையிலேயே பீதியாகக் கேட்டாள்.

"ஏன்... மேடமுக்கு ஸ்டார் ஹோட்டல்தான் வேணுமா...?" - நக்கலாய்க் கேட்டான் முருகேசன்.

மௌனித்தாள் தீக்ஷா. பதில் சொல்லவில்லை. பசி வேறு வயிற்றைக் கிள்ளியது. கடைசியாய் அவளது தாய் வீட்டில் தண்ணீர் அருந்தியதுதான். ஆனால் வீட்டுக்குப் பத்திரமாய்ப் போய்ச் சேரும்வரை... இந்த இடத்தில் எதுவும் சாப்பிடக் கூடாது என்று தீர்மானத்துடன்தான் இருந்தாள்.

அவர்கள் கொடுத்த சாப்பாட்டைக் கூட மறுத்து விட்டாள் தீக்ஷா. அவளுக்குப் பசியில் மயக்கமே வருவது போல்தான் இருந்தது. இருந்தும் வீம்பாய் இருந்தாள்.

உடலும் மனமும் ஒருசேரச் சோர்ந்தது போல் இருக்க... மனம் கணவனின் அருகாமையைத் தேடியது. அதில் முக வாட்டம் அதிகமாகியது தீக்ஷாவுக்கு.

காத்தமுத்து முருகேசனை அழைத்துக் கொண்டு தனியே சென்றான்.

"டேய், பாவமா இருக்குடா அந்தப் பொண்ணைப் பார்த்தா...! நாளைக்கு வீட்டுக்குப் போயிடலாமானு கேட்குது...

யாரோ தீனான்ற பேர்லாம் சொல்லுது... யாருடா கடத்தச் சொன்னது?"

"தெரியலை. இப்போ வந்துட்டு இருக்காங்களாம். அவங்ககிட்ட ஒப்படைச்சுட்டு நாம கிளம்பணும்..." என்ற போதே...

"அவனுங்க யாருடா... நம்ம ஆளுங்களா?" என்று இன்னும் விசாரித்தான் காத்தமுத்து.

உதட்டைப் பிதுக்கியபடி, "காசை வாங்கிட்டு இடத்தைக் காலி பண்ண வேண்டியதுதான் நம்ம வேலை. நீ ஏன்டா இந்த அளவுக்கு உருகுற?" என்றபடி உள்ளே போக...

காத்தமுத்துவுக்கோ, தீக்ஷாவை வருபவர்களிடம் விட்டுப் போக மனமே வரவில்லை. என்ன செய்யப் போகிறார்களோ என்று அப்போதே மனம் கணக்கிடத் தொடங்க ஆரம்பிக்க... முதலில் இந்தப் பெண்ணின் விபரங்களைக் கேட்டு வைப்போம் என்று தீக்ஷாவிடம் பேச்சுக் கொடுக்க ஆரம்பித்தான்.

முருகேசனோ... எதைப் பற்றியும் கவலைப்படாமல் உள்ளறைக்குள் சென்று விட்டான்.

"உன் வீட்டுக்காரர் பேர் என்னம்மா?" - அக்கறையாய்க் கேட்டான் காத்தமுத்து.

"விஜயேந்தர்..." என்று ஒற்றை வார்த்தை மட்டும்தான் வந்தது. காரணம் அவளால் பேசவே முடியவில்லை என்பது தான் நிஜம்.

அவளின் நிலை தாங்க முடியாமல்... தண்ணீர் பாட்டிலைக் கொடுத்த காத்தமுத்து, "சத்தியமா இதில் எல்லாம் ஒண்ணும் கலக்கலம்மா... என்னை உன் அண்ணனா நெனச்சுக்க..." என்றபோது சிரித்தவள்...

"பரவாயில்லண்ணா... எனக்கு எதுவும் வேண்டாம்... சமாளிச்சுருவேன்..." என்ற போதே அவள் குரல் தடுமாறியது.



"மயங்கிடுவ போல இருக்கும்மா..." என்றபோதே, அவளுக்கு அப்படித்தான் இருந்தது.

வேகமாய்த் தன்னைச் சுதாரித்தவள்... தன் கவனத்தை வேறெதிலாவது மூழ்கடிக்க விரும்பியவள்...

"அண்ணா, ஜெயிலுக்குல்லாம் போயிருக்கீங்கள்ல... போரடிக்கும்போது என்ன விளையாடுவீங்க..." என்றபடி அவனோடு மீண்டும் பேச ஆரம்பிக்க... பழைய தீக்ஷாவாக வந்திருந்தாள்.

காத்தமுத்துவும் அவளின் யோசனைப்படி... ஆடு புலி ஆட்டம் என்று ஏதோ காய்களை வைத்துச் சொல்லிக் கொடுக்க... அதில் தீக்ஷா ஆர்வமாய்த் தன்னை மூழ்கடித் தாள்.

"உன் வீட்டுக்காரர் மேல இருக்கிற கோபத்திலதான் உன்னைக் கடத்தச் சொல்லி இருக்காங்களா...?" என்றபடி இப்போது காத்தமுத்துவும் தொடர்ந்தான்.

விளையாட்டில் கவனம் வைத்தபடியே இவளும் பேச ஆரம்பித்தாள்.

"ஹ்ம்ம்... அவருக்குத் தொழில்ல நிறையப் போட்டிண்ணா... இப்போ முக்கியமான ஒரு ப்ராஜெக்ட்... அதனாலதான் என்னைக் கடத்துனா அவர் விலகிடுவார்னு கடத்தியிருக்காங்க போல... ஆனால், அவருக்குத் தேவைதான் இது. இப்போ தெரியும், கடத்துனவங்களைச் சார்ந்தவங்க எந்த மாதிரிக் கஷ்டப்படுவாங்கன்னு... ஈசியாச் சொன்னார்ல... அனுபவிக்கட்டும்!" என்று தனக்குள் புலம்பி யவள்...

"ப்ச்ச்... பாவம், என் இந்தர்... எவ்வளவு கஷ்டப் படுறாரோ... ஊரில் கூட இல்லை..." என்று கணவனை நினைத்து மறுகியவள்... "என் மேல அவருக்குப் பிரியம் அதிகம். கோபம்... பிடிவாதம்... பாசம்... போட்டி... ஈகோ...

எல்லாமே எக்ஸ்ட்ரீம் லெவல்தான். என் மேல இருக்கிற காதலும்..." - சிரித்தபடி தன் கணவனின் நேசத்தினை நினைத்தவள்... விளையாட்டைக் கூடக் கோட்டை விட்டு விட்டாள்.

சில மணித் துளிகள் கடக்க... "மணி என்ன?" என்று தீக்ஷா கேட்க...

"11.50..." என்று பதில் சொன்ன காத்தமுத்து, "கேக் வெட்டலாமா...? அது சாப்பிடுவேல்ல...?" என்று அக்கறையாய்க் கேட்டவனைப் பார்த்துக் குறும்பாகச் சிரித்தவள்...

அப்போது முருகேசனும் அவர்கள் இருந்த முன்னறைக்கு வர...

"இவர் தொழிலுக்குப் புதுசா என்ன... கடத்திட்டு வந்தவங்க கிட்ட பேசற மாதிரியே தெரியலயே... தொழிலுக்குப் பழகணும் போல இருக்கே..." - தான் இருந்த நிலையிலும் கிண்டலடிக்க... காத்தமுத்து, முருகேசனைப் பார்க்க...

அவனோ... இது உனக்குத் தேவைதான் என்பது போல் காத்தமுத்துவைப் பார்த்து விழுந்து விழுந்து சிரித்தபடி... தீக்ஷாவின் கைக்கட்டை அவிழ்த்து விட்டான்.

தீக்ஷா இருவரையும் பார்த்துப் புன்னகைத்தபடி... கேக்கை வெட்ட ஆரம்பிக்க...

"பர்த்-டே சாங் பாடத் தெரியுமா... 5, 4, 3, 2, 1 கவுண்டவுன் சொல்வேன். பாடுங்க..." என்றபடி, அவர்களையும் பாட வைத்துக் கேக்கை வெட்டியவள்...

"முதல் பீஸ்... என் விருமாண்டி இந்தருக்கு. 2ஆவது..." நிறுத்தி என்று இருவரையும் பார்க்க... கண் சிமிட்டியபடி... "2ஆவது பர்த்-டே பேபி த கிரேட் தீக்ஷா விஜய்க்கு..." என்று ஒதுக்கியவள்... "3ஆவது, 4ஆவது என்னோட புது அண்ணனுங்களுக்கு..." என்று ஒரே நேரத்தில் கொடுக்க... அந்த இரும்பு மனிதர்களுக்கும் கண்களில் நீர் கசிந்தது.



தீக்ஷா வெட்டிய கேக்கையும் சாப்பிடவில்லை. இதைக் கவனித்த முருகேசன்... "இப்போ கூட நம்பலை. வாய்தான் அண்ணன்னு சொல்லுது... அப்படித்தானே!" என்றபோதே கேக் அவள் வாயில் இருக்க...

முருகேசனும் காத்தமுத்துவும் சந்தோசமாய்ச் சிரித்தனர்.

காத்தமுதது அவளிடம், "ரொம்ப டல் ஆகிட்ட... ஒரு வாய் சாப்பிடும்மா..." என்றபடி பார்சலை நீட்டியவன்... "உனக்குச் சந்தேகம்னா நான் சாப்பிட்டுக் கூடக் காண்பிக்கிறேன். அப்போதாவது நம்புவியா...?" என்று கெஞ்சாத குறையாகக் கேட்க...

"இல்லண்ணா... என்னைக் கட்டாயப்படுத்தாதீங்க. ஒருவேளை சாப்பிடவில்லை என்றால் ஒன்றும் ஆகாது..." என்றாள், நாளை வீட்டுக்குப் போய் விடலாம் என்ற எண்ணத்தில். பின் வேகமாய், "உடனே அண்ணன் தங்கைனு சென்ட்டி டயலாக்லாம் விடக் கூடாது. தீக்ஷாவுக்கும் சென்டிமென்ட்டுக்கும் ரொம்பத் தூரம்..." என்றவளைச் சாப்பிட வைக்க முடியாமல் தோற்றனர் இருவரும்.

விஜய் கண்டிப்பாகத் தன்னைத் தொடர்பு கொள்ள முயன்று கொண்டிருப்பான் என்று தீக்ஷாவுக்குத் தோன்ற... அணைத்து வைக்கப்பட்டிருந்த மொபைல் இருந்த தன் கைப்பையை ஏமாற்றத்துடன் பார்த்துக் கொண்டிருந்தாள்.

அவளின் பார்வை உணர்ந்த முருகேசன்... "உன் வீட்டுக்காரரு தேடிட்டு இருப்பாருன்னு ஃபீலிங்ஸா...?" என்று கிண்டல் செய்ய...

"பேசுங்க பேசுங்க... என்கிட்ட ஈசியாப் பேசற மாதிரி... என் இந்தர் கிட்ட பேச முடியாது, பாஸ்... நீங்க மட்டும் கையில மாட்டுனீங்க... ரெண்டு பேரும் கைமாதான். ஆனால், நான் உங்களை மாட்டி விட மாட்டேன்..."

"பார்க்கலாம், பார்க்கலாம்..." என்றபடி முருகேசன், தொலைக்காட்சிப் பெட்டியை ஆன் செய்ய... ரிமோட்டைப் பறித்து வைத்துக் கொண்டவள்...

"உங்க ஃபேவரைட் சேனல் என்ன?" என்று இருவரிடமும் கேட்க... இருவரும் ஆர்வமுடன் சொல்லிவிட்டு அவளைப் பார்க்க...

"ஓ.கே. கண்டிப்பா அதை வைக்க மாட்டா, இந்தத் தீக்ஷா... என்னோட ஃபேவரைட் மட்டும்தான். ஏனென்றால்... நான்தான் இன்னைக்கு பர்த்டே பேபி..." என்று தனக்குப் பிடித்த சேனலைப் போட ஆரம்பிக்க...

"பாவம் தங்கச்சி, அந்தத் தம்பி..." என்று நிஜமாகவே உணர்ந்து சொன்னான். இத்தனை மணி நேரத்திற்குள் ளாகவே புரிந்து கொண்டு விட்டான் தீக்ஷாவை.

"யாரு, அவரா...? அவருக்கெல்லாம் என்னை மாதிரி ஆள்தான் கரெக்ட். இல்ல... அவ்ளோதான். ஆனாலும் பாவம்தான்... என்னையெல்லாம் சமாளிக்கிறது கொஞ்சம் கஷ்டம்தான்..." என்று சிரித்தவள்...

"அழுத்தக்காரர்... வாயைத் திறந்து எதையும் சொல்ல மாட்டார். பெரிய கெத்தோடவே திரிவார். இப்போ இந்த நிமிசம் யார்கிட்டயும் மனசைத் திறந்திருக்க மாட்டார். துக்கத்தைக் கூட வெளியே சொல்ல மாட்டார். சந்தோசமோ அதை விட... கல்லுளிமங்கன்னு சொல்லலாம், அண்ணன்..."

அவள் சொன்ன நிமிடங்களில் தான்... விஜய் தன் நண்பனிடம் அவள் நினைவில் தனக்குள் உடைந்து கொண்டிருந்தான்.

"அவரை நாலு வார்த்தை பேச வைக்கிறதுக்குள்ள நான் படுற பாடு இருக்கே... ஏதோ இப்போதான் ஆளைத் தேத்திக் கொண்டு வந்துட்டு இருக்கேன்..."



கடத்தி வந்த இருவருமோ... கதை போல் அவள் சொல்லிக் கொண்டிருந்ததனைக் கேட்டுக் கொண்டிருந்தனர்.

"ரொம்பப் பிரியமோ உன் மேல அந்தத் தம்பிக்கு...?" - முருகேசன் இழுக்க...

"அதை அந்தத் தம்பிகிட்டதான் கேட்கணும்... கேட்டுச் சொல்றீங்களா?" - முருகேசன் போலவே சொல்லிக் காட்டி... கண் சிமிட்டினாள் தீக்ஷா.

மூவருக்குமே கவனம் தொலைக்காட்சியில் ஓடிக் கொண்டிருந்த காட்சிகளில் இல்லை. இவள் அவளின் இந்தரைப் பற்றிப் பேசியதால் அதில் கவனம் வைக்க வில்லை. அவர்கள் இருவரும் இவள் பேசுவதைக் கேட்டுக் கொண்டிருந்ததால் கவனம் வைக்கவில்லை.

"லவ் மேரேஜா?" - காத்தமுத்து சந்தேகம் கேட்ட போதே, அவன் முகத்தில் அவ்வளவு அபிநயம்.

அவனைப் பார்த்துச் சிரித்த தீக்ஷா, "அதுக்கு நீங்க ஏன் இவ்ளோ வெட்கப்படுறீங்க?" என்று அவனை ஓட்ட... காத்தமுத்து நெளிந்தான்.

"லவ் மேரேஜா...?" என்று இழுத்த தீக்ஷா, "விருமாண்டியும் என்னை லவ் பண்ணி... மேரேஜ் பண்ணிக் கிட்டாலும்... அட, நீங்க வேற..." என்று சலித்தவளாய்... "அதெல்லாம் பெரிய கதை. என் விருமாண்டியை இந்தரா மாத்துறதுக்குள்ள..." என்றவள்... அப்போதுதான் திரையில் ஓடிய ஃப்ளாஷ் நியூஸை வாசிக்க ஆரம்பித்தாள்.

'சென்னையிலிருந்து துபாய் சென்ற விமானம் விபத்துக்குள்ளானது...' - வாசிக்கும்போதே தீக்ஷாவுக்குள் படபடப்பு ஆரம்பிக்க... அவளின் பார்வையில் பீதி பரவியது.

அவளின் பார்வை போன திசையில் மற்ற இருவரின் கவனமும் அனிச்சையாய்த் திரும்பியது.

விஜயேந்தர் சென்ற விமானம் பற்றி விபரம் தெரிய வில்லை என்றாலும்... தீக்ஷாவுக்கு அதிர்ச்சிதான். இருந்தும் தன்னைத்தானே சமாளிக்க முயன்றாள்.

வார்த்தைகள் எல்லாம் அவளை விட்டுப் போனது போல் உணர்வு... விபத்து நடந்த விமானத்தில், தன் இந்தர் போயிருந்திருக்க மாட்டான் என்ற ஒரு நம்பிக்கையைத் தனக்குள் கொண்டு வந்தாள் என்பதை விட... கொண்டு வர முயற்சித்தாள்.

யாரிடம் கேட்பது... எப்படி உறுதி செய்வது? - மனம் யோசிக்க ஆரம்பிக்க... கண்களில் நீர் ததும்பியது.

எதிலும் வேகம் இருக்கும் தீக்ஷாவிடம். விவேகம் என்பது பெரும்பாலான சமயங்களில் இருக்காது. ஆனால் இன்று அவளின் குணத்திற்கு மாறாய் நிதானமாய் இருக்க முயற்சி செய்தாள். தன்னவன் தன்னை விட்டு அத்தனை சீக்கிரம் போக மாட்டான் என்ற நம்பிக்கையே அவளது அந்த நிதானத்திற்குக் கூடக் காரணம்.

ஆனாலும் அவளை மீறிப் படபடப்பும் இருக்க... வேகமாய்த் தன் கைப்பையை எடுத்தாள். இதற்கிடையே காத்தமுத்து, முருகேசன் இருவரும் நியூஸ் சேனல் மாற்றிப் பார்க்க ஆரம்பித்தனர்.

இவளோ, தன் மொபைலை எடுத்து ஆன் செய்ய ஆரம்பித்தாள்.

அப்போது கதவு தட்டும் ஓசை கேட்க முருகேசன்தான் திறந்தான்.

தீக்ஷாவின் கவனம் எல்லாம் அங்கு இல்லை. தன் மொபைலை ஆன் செய்வதிலே இருக்க... முருகேசனையும்... காத்தமுத்துவையும் அங்கிருந்து வெளியேறச் சொன்னார்கள் வந்த ஐவரும்.



வந்திருந்ததில் மூன்று பேர் போதையில் நிதானத்திலே இல்லை.

பணத்தை எடுத்து முருகேசனின் கைகளில் ஒருவன் கொடுக்க... மற்றொருவனோ தீக்ஷாவின் அருகில் போய் நின்றிருந்தான்.

தீக்ஷாவோ, அவனின் அருகாமையோ... இல்லை அவனின் போதையின் நெடியோ எதையும் உணரும் நிலை யில் இல்லை.

அவளின் கையைப் பற்றி இழுத்தான், அருகில் வந்தவன்.

அப்போதுதான் தீக்ஷா அங்கிருந்தவர்களைப் பார்த் தாள். ஆனால் அவர்களைப் பற்றி எல்லாம் யோசிக்காமல்... அவனிடமிருந்து கையைப் பறிக்க முயற்சித்தபடி போனிலேயே கவனம் வைக்க...

அங்க வந்தவர்களின் நோக்கம் தெளிவாகக் காத்தமுத்துவுக்குப் புரிய... பதறித் தீக்ஷாவின் அருகில் வந்திருந்தான்.

“இங்க பாருங்க, அந்தப் பொண்ணோட புருசன்... விமான விபத்தில இறந்து போயிட்டாருன்னு அந்தப் பொண்ணே மனசொடிஞ்சு போய் இருக்கு... விட்டுருங்கடா!” என்று கெஞ்சியவன்... அவள் கைகளை அவனிடமிருந்து விடுவிக்கப் போராட...

தீக்ஷா பட்டென்று நிமிர்ந்து, “என் இந்தர் என்னை விட்டுப் போகலை. அப்படிச் சொல்லாதீங்க... உங்களுக்குத் தெரியுமா, அவர் இந்த ஃப்ளைட்ல போனார்னு... அவர் என்னை விட்டுட்டுப் போக மாட்டார்...” - ஆவேசமாகப் பதில் சொன்னவள்... தன் மொபைலில் கை வைக்கப் போனாள்.

ஆனால் அவனோ காத்தமுத்துவைத் தள்ளியபடி... மொபைலையும் பறித்துத் தூர எறிந்தபடி... “அவ புருசன்

போனா என்னடா... நாங்க இருக்கோம் எல்லாத்துக்கும்..." என்றபோதுதான் தீக்ஷாவுக்குத் தான் எந்த நிலைமையில் நிற்கிறோம் என்று மூளைக்குப் பதிய... கைகள் நடுங்கின.

'தன் கணவன் இருக்கும்வரை... அவன் மூச்சுக் காற்று தன்னைச் சுற்றும்வரை ஆபத்து ஒருபோதும் தன்னை அணுகாது...' என்று எப்போதும் நம்பும் அந்தப் பேதையின் உள்ளம்... இப்போது தனக்கு வந்த ஆபத்தைத் தன் கண வனின் உயிரோடு ஒப்பீடு செய்ய ஆரம்பித்தது.

"நீங்க இருக்கும்போது எனக்கு ஆபத்து நெருங்காது தானே அத்தான்...?" ஆனால், அவள் உள்ளம் தனக்கு வந்த ஆபத்தை எண்ணி... நேரப் போகும் மான பங்கத்தை எண்ணி எல்லாம் துடிக்கவில்லை.

'தன்னவன் தன்னை விட்டுப் போய் விட்டானோ...!' என்றுதான் பதைபதைத்தது. அந்த நினைவே அவளுக்கு மூச்சு முட்டுவது போல் இருக்க... அசையாமல் நின்றாள். காத்தமுத்துவும், முருகேசனும் வந்த கயவர்களோடு போராடிக் கொண்டிருந்தனர்.

"நீ இங்கயிருந்து போம்மா...!" என்ற அவர்களின் குரல் எல்லாம் அவள் காதில் விழவே இல்லை. பிரமை பிடித்தது போல் தீக்ஷா நிற்க...

அவள் அருகில் நின்றவன்... காம வெறியோடு தீக்ஷாவின் அருகில் நெருங்கினான்.

தீக்ஷா அவனைப் பார்த்து விலகவில்லை. அவளின் நினைவுகள் எல்லாம் தன் கணவனின் நினைவோடு கலந்து போயிருக்க... அவன் இழுத்துக் கொண்டு போனபோதும் அவள் எதிர்க்கவில்லை. அவன் இழுத்த திசைக்குப் போய்க் கொண்டிருந்தாள், தன்னை மறந்த நிலையில்...

ஆனால், அவளின் பார்வை எல்லாம் திரையில் ஓடிக் கொண்டிருந்த விமானம் வெடித்துச் சிதறிய காட்சியில்தான்



இருந்தது. அதைப் பார்த்தபடியே நின்றவளை... அருகில் இருந்த அறையை நோக்கி வலுக்கட்டாயமாக இழுத்துக் கொண்டு போக... பார்வையின் திசையை மாற்றாமல்... தன்னை இழுத்தவனைக் கூட உணராமல்... எதிர்க்காமல்... தீக்ஷா சென்று கொண்டிருக்க...

முருகேசன் தான் சுதாரித்து... தன்னோடு சண்டை யிட்டுக் கொண்டிருந்தவர்களைத் தள்ளி விட்டு... தீக்ஷாவின் பின் ஓட ஆரம்பித்தான். தீக்ஷாவை இழுத்தபடி போனவ னிடமிருந்து... தீக்ஷாவைக் காப்பாற்றி... அவனை அறைக்குள் தள்ளி அறைக் கதவைச் சாத்தியவன்... தீக்ஷா வின் நிலை அறிந்து, "தீக்ஷா... தீக்ஷா..." என்று சத்தமாய் அழைக்க...

அவளோ அதை எல்லாம் உணராமல்... அவளது மொபைலுக்கு உயிர் எப்போது போனது... தெரியவில்லை. கீழே சுக்கல் சுக்கலாய்க் கிடக்க... அதைப் பொறுக்கிக் கொண்டிருந்தாள் குனிந்து... அதுதான் முக்கியம் என்பது போல.

முருகேசனுக்கு ஒன்றுமே புரியவில்லை. வேறு வழியும் தெரியவில்லை. வேகமாய்த் தீக்ஷாவின் கைகளைப் பற்றியபடி... அவளது கைப்பையை எடுத்தபடி... காத்த முத்துவை அழைத்து, "நான் இந்தப் பொண்ணைக் கூட்டிட்டுப் போறேன். நீ எப்படியாவது இங்கயிருந்து வந்திடு..." என்றபடி வெளியேறினான்.

அங்கிருந்தவர்களைச் சமாளித்து... அவர்கள் இருவரும் காரில் ஏறவும்... காத்தமுத்துவும் அங்கு வரச் சரியாய் இருக்க...

இருவரும் நிம்மதிப் பெருமூச்சுடன் காரை வேகமாக எடுக்க... கார் அருகில் இருந்த தீக்ஷாவின் ஸ்கூட்டியின் மேல் இடித்து... அவளின் வண்டி அவளைப் போலவே நிலை குலைந்து கீழே விழுந்தது.

தீக்ஷாவின் கண்கள் நிலை குத்திட்டு நின்றன. பார்வை அவளின் பிங்கியின் மீது இருக்க... பதறவில்லை. துடிக்க வில்லை.

அவள் மனம்... அவள் எண்ணமெல்லாம் அவளின் இந்தரிடம்தான் இருந்தது.

முதன் முதலில் இதே போல் நடந்த மோதல் ஆரம்பித்த இடத்தில் இருக்க... அவளை மறந்து அவளின் எண்ணங்களில் பயணித்துக் கொண்டிருந்தாள்.

காத்தமுத்து விஜய் பில்டர்ஸை நோக்கிக் காரைச் செலுத்த ஆரம்பித்தான்.

முருகேசன் தீக்ஷாவின் கைப் பையை ஆராய, அதில் இன்னொரு போனும் இருக்க... வேகமாய் ஆன் செய்தான். ஆனால் ஆன் மட்டுமே செய்ய முடிந்தது. அதற்கு மேல் அதை உபயோகப்படுத்த பாஸ்வேர்ட் தெரிந்திருந்தால் மட்டுமே முடியும்.

“டேய்... இதுல ஒரு போன் இருக்குடா. ஆனால் பாஸ்வேர்ட் தெரியலடா...!” என்று அவனிடம் சொல்லிக் கொண்டே தீக்ஷாவைப் பார்க்க... தீக்ஷா அதெல்லாம் கவனிக்கும் நிலையில் இல்லை. வெறித்த பார்வையோடு மட்டுமே வந்தாள்.

முருகேசனால் தாங்கவே முடியவில்லை.

வரும்போது இருந்த உயிர்ப்புடன் இருந்த அவளின் விழிகள்... இப்போது அவற்றின் ஜீவனை இழந்திருந்தன.

இருவரும்... “முகவரி என்ன...” என்று ஆரம்பித்து என்னென்னவோ கேள்விகள் கேட்க... தீக்ஷாவின் இதழோ அதற்கான மறுமொழிகளைச் சொல்லத் திறக்கவேயில்லை.

தீக்ஷாவோ... அவளது நினைவுகளில் புதைய ஆரம் பித்து இருந்தாள்.



அவளது இந்தர்... அவளிடம் தன் பார்வையில் தன் காதலை வெளிப்படுத்திய தருணங்களில் இருக்க... அப்போது முருகேசனின் கையில் இருந்த போன் அலற ஆரம்பிக்க...

காத்தமுத்து அவனிடம், “டேய், எடுத்துப் பேசுடா. விஜய் சாருக்கு என்னாச்சுன்னு கேளு...” என்று அவசரப்படுத்த... முருகேசன் எடுத்துப் பேச... இப்போது தீக்ஷாவின் கண் பாவை லேசாய் அசைந்தது.

சிக்னல் கிடைக்காமல் அழைப்பு கட் ஆக...

“டேய், கட் ஆகிருச்சுடா... சிக்னல் இல்லை...” என்று சொல்லியபடி, மீண்டும் போன் காலுக்காகக் காத்திருக்க ஆரம்பிக்க... அதுவும் அடிக்க...

முருகேசன் இந்த முறை ஹலோவெல்லாம் சொல்ல வில்லை. நேரிடையாகப் பேச ஆரம்பிக்க... ஆனால் மீண்டும் கட் ஆக... கடுப்பானான் முருகேசன்.

சிக்னல் இருக்கும் இடம் பார்த்து... காரை நிறுத்தி விட்டுக் காத்திருக்க ஆரம்பித்தனர்.

மீண்டும் போன் வர... பேசிய முருகேசன்.... பதற் றத்தில் வார்த்தைகளை விட்டான்.

“டேய்... விஜய் சார் பேசுற நிலைமையில இல்லைன்னு சொல்றாங்கடா...” என்றபோதே, தீக்ஷா போனைப் பறிக்க...

முருகேசனும், தீக்ஷாவிடம் கொடுப்பதாய்ச் சொல்லி அவளிடம் கொடுக்க,

“இன்னைக்கு நடந்த ஃப்ளைட் ஆக்சிடெண்ட்ல..” என்ற சுரேந்தரின் குரலைத்தான் கேட்டாள் தீக்ஷா... கையிலிருந்த போன் தானாய் நழுவ...

அதுவரை அவள் பிடித்து வைத்திருந்த நம்பிக்கை எல்லாம் அவளை விட்டு ஓடியது, சுரேந்தரின் வார்த்தை களில்....

அவளின் உடலும், மனமும், தன்னவனின் குரலையும்.... அவன் ஸ்பரிசத்தையும்... நினைவிலே கொண்டு வர முயற்சிக்க... அவளால் முடியாமல், எதிலோ மூழ்குவது போல்... எதுவோ அவளின் மனதினை அழுத்துவது போல் திணற ஆரம்பித்தவளின் காதுகளில், சுரேனின் குரல் கேட்க... அவள் மனமோ அவளவனின் குரலுக்காக ஏங்க ஆரம்பித்தது... அடுத்த நொடியே விஜய்யின் குரல் அவள் காதுகளில் விழ... ஆனால், கேட்ட தீக்ஷாவின் நிலைமை தான் வேறாய் இருந்தது.

நிஜமாய் ஒலித்த அவளின் இந்தரின் குரலை... கற்பனையாகவே அனுமானித்தாள். தன்னவன் குரல், கற்பனை ஆகிப் போனதை அவள் மனம் ஏற்க முடியாமல் போராட ஆரம்பிக்க... ஒரு கட்டத்தில் அந்தக் கற்பனையை அவளால் ஏற்றுக் கொள்ள முடியாமல்... அவளின் மனம் சோர்ந்து... அடங்கத் தொடங்கியது. எதிர்முனையில் துடித்த விஜய்யின் குரலில்... அவனின் ஒவ்வொரு வார்த்தையிலும், அவன் மனைவி... தனக்குள் தன்னை அழிக்கத் தொடங்கியிருந்தாள். நிஜம் அங்கு நிழலாகி... அந்த நிழலைத் தனக்குள் ஏற்க முடியாமல், தீக்ஷா போராட ஆரம்பித்தாள். காற்றோடு கலந்த குரலில் கலக்க நினைத்தவள், காரின் கதவைத் திறந்து வெளியே குதிக்க எண்ணினாள்தான். ஆனால், செயலாற்ற முடியவில்லை. ஏனெனில், அவளின் உறுப்புகள் எப்போதோ வேலை நிறுத்தம் செய்ய ஆரம்பித்திருந்தன.

மருத்துவ மனையின் முன் வந்து நின்றபோது... தன் முன் நின்ற தன் கணவனை அவளால் உணர முடிந்தது. அதில் இருந்த சோகம், அவளைத் தாக்கியதுதான் என்றாலும்... இதுவரை அவள் பார்த்தறியாத அவன் பார்வை மொழியினை... அதன் வலியினை உணர்ந்தாள் தீக்ஷா.



தன் முன் நின்றவனின் துக்கம் தாளாதவள்... அதைத் துடைக்க எண்ணியவள்... அவனோடு அவன் கண்களோடு கலந்து... அவன் இருக்குமிடம் போகத் துடித்தபடி கண் மூடினாள். அது விண்ணுலகம் என்றாலும்...

## 44

**கா**த்தமுத்துவும், முருகேசனும் சொல்லி முடிக்கும் போது, விஜய் முற்றிலும் நிலை குலைந்து போய்த் தொய்ந்து கீழேயே அமர்ந்து விட்டான். தீனாவும் அதிர்ச்சியின் உச்சத்தில் இருக்க... யுகி மட்டும் தாங்க முடியாமல், இருவரையும் பந்தாடி விட்டான்.

முருகேசன், காத்துமுத்து இருவருமே அதை எல்லாம் அமைதியாக ஏற்றுக் கொண்டனர், யுகியின் தாக்குதலை எல்லாம். ஒரு கட்டத்தில் யுகி தன் ஆட்களிடம் சொல்லி, அவர்களை அங்கிருந்து கொண்டு போகச் சொல்ல... இருவரும் விஜய்யிடம் கெஞ்சினர்..

"தம்பி... நாங்க தங்கச்சி கண்ணு முழிக்கிறவரை இங்கேதான் இருப்போம்.... எங்களால போக முடியாது. சொல்லுங்க. எங்களாலதான் அதுக்கு இப்படி ஒரு நிலைமை. அதை மறுபடியும் பழைய நிலைமையில் பார்க்கிறவரை இங்கிருந்து போக மாட்டோம். நாங்க ரவுடிங்கதான் தம்பி... கூலிக்கு மனச்சாட்சியை விக்கிறவங்கதான்... ஆனா எங்களையும் மனுசனா பார்த்துச்சு, தம்பி... எங்களை மட்டும் இங்கே இருந்து போகச் சொல்லிடாதீங்க தம்பி."

விஜய், யாருக்கும் பதில் சொல்லாமல்... எதையும் தடுக்காமல்... அமைதியாக இருந்தான், சிலை போல.

தீனாதான் யுகியைச் சமாதானப்படுத்தி அங்கிருந்து கூட்டிச் செல்ல... விஜய், யாருக்கும் எந்தப் பதிலும் சொல்லாமல், தன் மனைவியை நாடிச் சென்றான்.

அவனுக்கு இளமாறனின் மேல் எல்லாம் கோபம் இல்லை, கோபம் இல்லை என்பதை விட... கோபம் வரவில்லை. ஆனால், இளமாறன் செய்த துரோகத்துக்குச் சரியான தண்டனைதான் என்று சமாதானமும் அவனுக்குள் வரவில்லை. அவன் மட்டுமா அந்த விமானத்தில் போனான்...? அவனோடு பயணித்த ஒவ்வொரு பயணியும் இவனைப் போலத் துரோகிகளா...? அந்த நேரத்திலும் அவன் மனம் இவ்வாறெல்லாம் யோசிக்க...

அதுமட்டுமில்லாமல், தீக்ஷாவின் இந்த நிலைக்குக் காரணம்... அவனால் வேறு யாரையும் பழி போட முடியவில்லை. அவளுக்கு நடந்த எல்லாவற்றிற்கும் காரணம் தான்... தான் மட்டுமே... இந்த எண்ணத்தில்தான் இருந்தான் விஜய்.

அன்று கோபத்தில் கண் மண் தெரியாமல் மாடி அறையில் அவளைத் தள்ளி விட்ட அவனின் வெறித் தனம்... இன்று அதைவிட அதிகமான உக்கிரத்தோடு அவளை நோக்கித் திரும்பியிருந்தது.

இளமாறன் கடத்தினான்... நம்பிக்கைத் துரோகம் செய்தான் என்று சொன்னாலும்... இவனின் மனைவி என்ற ஒரே காரணத்தால் மட்டுமே தீக்ஷா கஷ்டம் அனுபவித்தாள்... அனுபவித்துக் கொண்டிருக்கிறாள் என்பதை எண்ணி மறுகினான் விஜய்.

கிட்டத்தட்ட தீக்ஷாவின் மானமே பறி போக வேண்டிய நிலை... அது கூட அறிய முடியாத நிலையில் இருக்கிறாள் தன் மனைவி. காரணம், இவனின் நிலை பற்றி அறியாத அவளின் மனக் குழப்பம்... அவள், அந்தச் சூழ்நிலையில் தன்னைக் காப்பாற்றிக் கொள்ளக் கூட முயற்சிக்கவில்லை என்று நினைத்தபோது... அதற்கும் காரணம், அந்த அளவு அந்த விபத்துச் செய்தி அவளை அடியோடு தாக்கி யிருக்கிறது. அதன் பிறகு சுரேனின் வாய் வார்த்தைகளில்,



அவள் அனுமானித்த தன் மரணத்தை... உறுதிப்படுத்த முடியாமல்... மயங்கி விட்டாள். இதற்கும் தானே காரணம். சுரேன் வாய் வார்த்தையில், தான் உயிரோடிருப்பதாகச் சொல்லி இருந்தால்... தன் மனைவி இந்த நிலைக்குப் போயிருக்க மாட்டாளோ...?

மனச்சாட்சியின் கேள்விகளுக்குப் பதில் சொல்ல முடியாமல், உழன்றான் விஜய்.

ஆக மொத்தம்... தீக்ஷாவின் இந்த நிலைக்கு விஜய் தான் முழுக்க முழுக்கக் காரணம்... என்று உணர்ந்த போது,

அவனின்... ஆணவம்... கோபம்... தொழில் மேல் உள்ள வெறி... தான் எடுத்த முடிவுகள்... என அவனின் ஒவ்வொரு நடவடிக்கையுமே... அவனைப் பூமராங் போலத் திரும்பி வந்து அவனையே தாக்கின... அவன் மனைவியின் உருவின் மூலம்.

ஆனால், எப்போதோ போயிருக்க வேண்டிய தன் உயிர்... தீக்ஷாவின் கணவன் என்ற காரணத்ினாலே இன்னும் தங்கியிருக்கிறது. அவளால், தான் வேதனைகளை அனுபவிக்கவில்லை.. அவள் நினைவோடு இருந்தவரை அதை அனுபவிக்கவும் விட்டதில்லை. என் மனைவி என்னைத் தேடி வருவாள்... என்னைத் தவிக்க விட மாட்டாள்... அவளின் இந்தரை ஒரு போதும் அவள் தவிக்க விட்டதில்லையே...! காதலில் கூடத் தவிக்க விடவில்லை... கணவனாய் ஏங்க விட்டதில்லை... ஆனால், இன்று ஒட்டுமொத்தமாய்த் தன்னை உருக்குலைய வைக்கிறாளே... இதற்குத்தான் விதி இருவரையும் சேர்த்ததா...? நொந்து கொண்டிருந்தான் விஜய், ஒவ்வொன்றையும் நினைத்து.

மனைவியின் தலை மாட்டில் அமர்ந்தவன்... அவள் கைகளைப் பிடித்தபடி தலை சாய்த்தவன்தான்... அதே நிலையிலேயே அப்படியே அமர்ந்து விட்டான்.

யார் வந்தார்கள், போனார்கள் என்றெல்லாம் உணரும் நிலையில் இல்லை. தீக்ஷாவிடமிருந்து சிறு அசைவினை மட்டும் எதிர்பார்த்தபடி... அவள் கைகளைப் பிடித்தவன்தான்... அவளின் மூடிய விழிகள் திறக்க வேண்டுமென்று கூட அவன் பேராசைப்படவில்லை. அவளின் மூடிய விழிகளின் கண்பார்வை அசையாதா என்றுதான் அவன் ஏங்கினான்.

அவளின், 'இந்தர்' என்ற அழைப்புக்கு அவன் தவிக்கவில்லை. ஆனால், அவளின் முனகல் சத்தமாவது வருமா என்று காத்திருந்தான். பட்டினிக் கொடுமையால் போகப் போகும் உயிர், பாலும் பழத்துக்கு ஏங்குமா...? நாவறட்சியைப் போக்கும் ஒரு துளி நீருக்கு ஏங்குவது போல.... அந்த நிலையில் இருந்தான் விஜய்.

அவள் மனைவி, அவனின் ஏக்கத்தினைத் தீர்ப்பாளா...?

இதை எல்லாம் உணராமல்... ஆழ்ந்த மயக்கத்தில் இருந்தாள் தீக்ஷா. நிம்மதியாகவா என்றால், அது இல்லை என்பது அவளின் முகம் சொன்னது. அதில் இறுக்கம் உறைந்திருந்தது. கணவனின் மரணச் செய்தியைக் கேள்விப்பட்ட வேதனையோடு உறைந்திருந்தாள் தீக்ஷா. வேலை நிறுத்தம் என்பதை அறியாத அவளின் உதடுகள்... அழுத்தமாய் மூடி இருந்தன. வேதனையின் சாயல், அவள் முகத்தில் அப்படியே நின்று போயிருந்தது. உறங்கும் போது கூடத் தன் மனைவியை ரசித்திருக்கிறான் விஜய். அப்போது கூட அவளின் முகம் மலர்ந்திருக்கும். இந்தச் சில கால வாழ்க்கையில்... அவன் அருகில் அவள் உறங்கும்போது கூட... அவனின் அருகாமை இல்லாமல் அவள் உறங்கியதே இல்லை. அவனாய்ச் சற்று விலகினால் கூட... தூங்கிய நிலையிலே அவனைத் தேடிச் சிறு குழந்தை போல.... அவனோடு ஒன்றுவாள். இன்று...



படபட பட்டாசாய் வர்ண ஜாலம் காட்டியவள்... அவளின் வர்ண ஜாலத்தின் கோலத்தில் திளைத்திருந்த அவளின் கணவனுக்கு வெற்றிடத்தைக் காட்டி... அவனின் உணர்வுகளை எல்லாம் தன்னோடு சேர்த்து வாங்கி... தனக்குள் அடக்கி... தானும் அடங்கியிருந்தாள்.

எத்தனை மணி நேரம் விஜய் அப்படியே அமர்ந்திருந்தான் என்று தெரியவில்லை. திடீரென்று விஜய்யின் கால்களில் யாரோ விழுவதைப் போல உணர்ந்தான். அப்போது கூட விஜய் அசையவில்லை. ஆனால், கால்களில் பட்ட ஈரம்... அவனைப் பதறச் செய்ய... வேகமாய் எழ... நடுத்தர வயதுத் தம்பதி...

விஜய் பதறிப் போய் நகர... நர்ஸும் அங்கு வர... அந்தப் பெரியவர்களை அழைத்தபடி வெளியே வந்த விஜய்க்கு... அவர்கள் இருவரும் சக்தியின் பெற்றோர் என்று புரியாமல் இல்லை.

"என் பொண்ணை எங்க கிட்டே காப்பாற்றிக் கொடுத்ததுக்கு நன்றி சார்... உயிருக்குப் போராடிட்டு இருக்கிற பொண்ணு கிட்டே.. இப்படி நடப்பான்னு நாங்க எதிர்பார்க்கலை சார்," என்று சக்தியின் பெற்றோர் கதறி அழ...

"கவலைப்படாதீங்க... உங்க பொண்ணுக்கு ஒண்ணும் ஆகாது... சீக்கிரம் குணமாகிடுவா. அது மட்டும் இல்லாமல்... அவங்க ட்ரீட்மெண்ட்டுக்கும் நான் ஏற்பாடு பண்ணச் சொல்லி இருக்கேன்..." என்ற போது, தன் கவலை மறைத்து விஜய் தெளிவாகப் பேசினான்.

"அவ காதலிச்ச பையனே இப்படிப் பண்ணுவான்னு தெரியாமப் போச்சே... என் பொண்ணை இப்படிப் பண்ணிட்டானே..." என்று அவர்கள் வாய்விட்டு அழ,

விஜய்தான் ஆறுதல் கூறித் தேற்றி அனுப்பி வைத்தான். சுரேந்தரிடம் சொல்லி அவர்களைக் கவனிக்கும்படியும் வைத்துக் கொண்டான்.

ஒருபுறம் சக்தியின் உடல் ஓரளவு முன்னேறிக் கொண்டிருக்க... தீக்ஷாவின் நிலையிலோ ஒரு மாறுதலும் இல்லை. ஒரு வாரம் கடந்திருக்க... விஜய்யைத் தவிர மற்ற அனைவரும் அன்றாட வாழ்க்கைக்குத் திரும்பியிருந்தனர் என்றே சொல்லலாம்.

விஜய் போட்டி இடாததால், அடுத்த இடத்தில் இருந்த தீனாவுக்கு... சுலபமாக அந்த ப்ராஜெக்ட் கையகம் ஆகி இருந்தது. ஆனால், தீனாவால் அந்த வெற்றியைச் சுகிக்க முடியவில்லை. ஏனோ அவன் மனம், அந்த வெற்றியில் ஈடுபாடு இல்லாமல் போய்விட்டிருந்தது.

கேள்விப்பட்ட விஜய், வாழ்த்துகள் கூறியதோடு சரி... அதற்கு மேல் பெரிதாக அதைப் பற்றிப் பேசவில்லை.

காத்தமுத்துவும், முருகேசனும், சக்தியின் பெற்றோரோடு மருத்துவ மனைக்கு அருகிலே வீடெடுத்துத் தங்க வைக்கப் பட்டனர்.

சக்தியும் ஓரளவு சரியாக ஆரம்பித்து இருந்தாள். ஆசிட்டின் வீச்சு ஒரு பக்கக் கன்னம்... கழுத்தின் முன் பகுதி என்பதால்... அந்தத் தாக்கத்திலிருந்து வெளி வந்து விட்டாள். ஆனால், அவள் அதிர்ச்சி எல்லாம் அவளின் காதலன் நடந்து கொண்ட முறையில்தான். தன் உயிர் என நினைத்தவன்... தன் நோயின் காரணத்தால் அவனுக்காக... அவனின் நல் வாழ்க்கைக்காக அவனை விட்டுத் தள்ளிப் போக நினைக்க... அவன் இவளை நேசிக்கவில்லை... இவளுடைய மனதை நேசிக்கவில்லை... உடலை மட்டுமே விரும்பியிருக்கிறான்... அவளின் இதயம் சுரீரென்று வலித்தது.

தவறான ஒருவனை இதயத்தில் வைத்துப் பூஜித்த காரணத்தினாலோ என்னவோ... அந்த இதயமே அவளுக்குப் பயனற்றதாகி விட்டது போல... காதலின் ஏமாற்றம்... அதன் துரோகம்... அந்த இதயத்துக்குத் தந்த வலியை விட... தனக்கு வந்த நோயால் வந்த வலி... அந்த இதயத்துக்குப் பெரிதாய் இருக்கவில்லை.



ஓரளவு சரியானவள்... முதலில் தேடியது தன்னைக் காப்பாற்றிய ஆபத்பாந்தவனைத்தான். அவனைத் தவிர, யார் யாரோ வந்தார்கள். வந்த ஒருவரைக் கூட இவளுக்குத் தெரியவில்லை.

அதே போல், தான் இருக்கும் இடமும் உணர்ந்தாள். அந்த மருத்துவ மனையின் தரம் அவளுக்கும் புரிய... தாய், தந்தையிடம் முதலில் அதைத்தான் விசாரித்தாள்.

சக்தியின் தாய், விஜய்யைப் பற்றிச் சொல்ல... சக்திக்கு, விஜய்யின் மேல் இன்னும் மரியாதைதான் பெருகியது. அவளைப் பொறுத்தவரை... அவன் அவளுக்குக் கடவுளுக்கு நிகரானவன். அவன் மட்டும் அங்கு வந்திருக்காவிட்டால்... நினைக்கும் போதே அவள் உள்ளம் நடுங்கியது. காதலனே கயவனாக மாறிய நிலை... எந்த ஒரு பெண்ணுக்கும் நடக்கக் கூடாத ஒன்று.

விஜய்யைப் பார்க்க வேண்டுமென்று சைகையால் சொல்ல... விஜய் இருக்கும் சூழ்நிலையில்... அது முடியாமல் போனது.

விஜய் அன்று வந்து சக்தியைப் பார்த்ததுதான். அதன் பிறகு தன் மனைவியை விட்டு நகர மறுத்தான். அவள் கண் விழிக்கும்போது, அவள் அருகில் தான் இல்லாமல் போய்விடக் கூடாது... என்று அனைவரிடமும் சொன்னவனுக்கு, மனதில் வேறொரு பயமும் இருந்தது. அது, எங்கே தான் இல்லாத நேரத்தில் காலன் தன் மனைவியை அபகரித்து விடுவானோ என்ற பயம்தான்.

தீக்ஷா சொல்வது போல... தன் அத்தான் இருக்கும் இடத்தில் தன்னைத் துன்பம் நெருங்காது என்று... அதைக் கடைப்பிடித்தான் அவளின் இந்தர்.

அவளின் இதயத் துடிப்பைப் பார்த்தபடியே இருந்தவனுக்கு... ஏதேதோ நினைவுகள் வாட்டின. இப்போது அவனின் உயிரே மானிட்டரில் ஓடும் அலைகளில்தான் இருந்தது. அதன் சத்தம்தான் அவனின் இதயத்தின் அடுத்த துடிப்பை உறுதி செய்து கொண்டிருந்தது.

களைப்பில் சற்றுக் கண் மூடினாலும்... அவனின் கைகள் அவன் மனைவியின் மேலேயே இருக்க... காதுகள் அந்தப் பெட்டியின் ஒலியிலே கூர்மையாக இருந்தன. அவன் உறங்கவே இல்லை என்று கூடச் சொல்லலாம்.

ராதா... இல்லை, கலைச் செல்வி, இருவரில் ஒருவர் அவனை எப்படியோ கட்டாயப்படுத்திச் சாப்பிட வைத்து விடுவர். சாப்பிடுவான்... அவ்வளவுதான் சொல்ல முடியும்... ஒரு வாரமாய் இப்படியே விஜய்யின் நிலையும் இருக்க...

அவன் நிலை சற்றுக் கவலை தந்தது அனை வருக்கும். ஒழுங்கான உறக்கம் இல்லை... ஒழுங்கான சாப்பாடு இல்லை... உட்கார்ந்த நிலையிலேயே இப்படியே இருந்தால் என்ன ஆவது...? அவனைச் சேர்ந்த அனைவரும் துடிக்க ஆரம்பித்தனர், இவனைப்பார்த்து.

கலைச் செல்வி... தான் பார்த்துக் கொள்வதாகக் கூறி அவனை வீட்டுக்கு அனுப்ப முயற்சித்ததெல்லாம், விழலுக்கு இறைத்த நீராய் வீணாக ஆனது என்றே சொல்லலாம்.

ஜெயந்தி, வைத்தீஸ்வரன் நிலைமையோ அதைவிட... மகளின் நிலை தாங்காமல் வைத்தீஸ்வரனின் உடல்நிலை சரி இல்லாமல் போக... ஜெயந்தி தன் கணவனையும் தேற்ற வேண்டிய நிலைமைக்கு ஆளாகியிருந்தார்.

அன்று விஜய் நல்ல உறக்கத்தில் இருந்தான்... அப்போது, இந்தர் என்ற அழைப்புக் கேட்க... விஜய் அசைந்தான். ஆனால், விழிக்க முடியவில்லை.



ஆனால், அவனால் தீக்ஷாவினைப் பார்க்க முடிந்தது. அவளின் இளம் பிங்க் வண்ணப் புடவையில்... அவன் முன் சிரித்தாள்.

'தீக்ஷா...' அவனின் வாய், அவனையுமறியாமல், அழைக்க... அவனால் எழ முடியவில்லை. அது ஏனென்றும் தெரியவில்லை.

"அத்தான்! நீங்க தூங்குங்க... நான் டிஸ்டர்ப் பண்ணலை. ஆனால், எனக்காக நீங்க வாங்கி வந்தீங்கல்ல... அந்த கிஃப்டை மட்டும் கொடுங்க... அதை வாங்கிட்டுப் போகிறேன். சீக்கிரம் போகணும், அத்தான்... எனக்கு லேட் ஆகிருச்சு," என்றவள், புன்னகைக்க...

விஜய்க்கு, அவள் எதைச் சொல்கிறாள் என்றே புரியவில்லை..

"எதும்மா...?" என்றான் வாய்விட்டே.

"என் பர்த் டே கிஃப்ட்... சீக்கிரம், அத்தான்... அதற்காகத் தான் வெயிட்டிங்... இல்லை, எப்போதோ போயிருப்பேன்." வழக்கம் போல அவனை அவசரப்படுத்த...

விஜய் இப்போது சுதாரித்தான்.

"இல்லை, நான் தர மாட்டேன்... தர மாட்டேன்... நான் அதைக் கொடுத்தால் என்னை விட்டுப் போய்விடுவாய்," என்று கத்தியபடி எழ முயற்சிக்க... அவனால் அப்போதும் முடியவில்லை.

ஒரு கட்டத்தில் தன்னை முழு முயற்சி செய்து எழுந்தவன்... உட்கார... எதிரில் அதே நிலைமையில்தான் தீக்ஷா படுத்திருந்தாள். தீக்ஷாவின் அருகில் கலைச்செல்வி தலை சாய்த்துப் படுத்திருக்க...

தன் மனைவியைப் பார்த்தவன்... அவளின் நிலைமையை ஒரு முறைக்கு இரு முறை ஆராய்ந்தவன்...

அப்போதுதான் உணர்ந்தான்... தான் அருகில் இருந்த கட்டிலில் இருப்பதை.

'இங்கு எப்படி வந்தோம்...?' என்று ஆராய்ச்சிக்கு முதலில் போனவன்... கனவில் தீக்ஷா அவனிடம் பேசியதை உணர... தன் ஆராய்ச்சியை எல்லாம் விட்டு விட்டு, வேகமாய் எழுந்தவன்...

அந்த டாலர் இருந்த பெட்டியைத் தேடினான். அங்கு இருந்த பீரோவில் பத்திரமாய் இருக்க... அவசர அவசரமாய் எடுத்தவன்... குளியலறைக்குள் நுழைந்து, நொடி கூடத் தாமதிக்காமல் டாய்லெட்டில் எறிந்தவன்... அதை ஃப்ளஷ் செய்து... அந்த வைர டாலர் தன் கண்ணை விட்டு மறையும் வரை பார்த்திருந்தவன்... அது மறைந்தவுடன் நிம்மதியாக வெளியே வந்தான்.

'அவள் கேட்ட பொருளைக் கொடுத்தால்தானே தன்னை விட்டுப் போவாள்...! இனி அவள் தன்னை விட்டுப் போக மாட்டாள்...' என்ற குருட்டு நம்பிக்கையில்... கொஞ்சம் மனம் ஆறுதல் ஆனவன்... அறையை விட்டு வெளியேறி வந்தான்.

அப்போது சக்தியின் ஞாபகம் வர...

'ச்சேய்... அந்தப் பொண்ணைப் பார்க்கவே இல்லையே...' என்று தனக்குள் திட்டியபடி... சக்தியின் அறைக்குப் போக... சக்தியும் நல்ல உறக்கத்தில் இருந்தாள்.

அவள் அருகில் சில நிமிடங்கள் நின்றிருந்தவன்... கிளம்புவோம் என்று வெளியேறப் போக... அப்போது சக்தியும் விழித்தாள்.

எப்படித்தான் இவனை உணர்ந்தாளோ, தெரிய வில்லை. விஜய்யைப் பார்த்த அவள் விழிகளில், அத்தனை பிரகாசம்.. அதைப் பார்த்த விஜய்... இதழ்களில் வலிய வரவழைத்த புன்னகையோடு அவள் அருகில் அமர...



"நன்றி சார்," என்று இதழ் திறந்து சொல்ல... விஜய்...

"இப்போ எப்படி இருக்கே சக்தி...?" அவன் கவலையோடு கேட்டான். 22 வயதிருக்கும் அவளுக்கு... இந்த வயதில் இத்தனை போராட்டமா இவளுக்கு...? மனம் வலித்தது, அவளைப் பார்த்த விஜய்க்கு.

விரக்தியாய்ச் சிரித்தவள்...

"இருக்கேன்... தப்பான ஒருத்தனை வாழ்க்கையில் நேசிச்சதுக்குத் தண்டனைதான் என்னோட இந்த நிலைமை..." கசப்பாய்ச் சொன்னாள்.

"அவனும் அவனோட ஃப்ரெண்ட்ஸும்... இப்போ ஜெயில்ல இருக்காங்க சக்தி. வேற கேஸ்ல உள்ளே தூக்கிப் போட வெச்சுட்டோம்... வெளியிலேயே வர முடியாதபடி..." என்ற போது, சக்தியின் கண்களில் ஆவேசம்தான் வந்தது.

"அவன் மனுசனே இல்லை சார்... அவனெல்லாம் இந்த உலகத்துல வாழத் தகுதி இல்லாதவன்..." என்ற போதே, அவள் உணர்ச்சி வசப்பட்டுப் பேச ஆரம்பிக்க... அவளால் முடியவில்லை. படபடப்பாய் உணர்ந்தவளின் இதயம் வேகமாய்த் துடிக்க ஆரம்பிக்க,

"சக்தி, அமைதி..." வாய் வார்த்தைகளால் அமைதிப் படுத்த முயல... அவனால் முடியவில்லை.. அங்கு நடந்த போராட்டத்தில் சக்தியின் பெற்றோரும் எழுந்து விட... அவர்களாலும் முடியவில்லை. விஜய் அவளைச் சமாதானப் படுத்த... அதன் பிறகுதான் அவளும் தணிய... அதன் பின் சிகிச்சை அளிக்க... சகஜமானாள் சக்தி.

விஜய்யால் சக்தியின் துடிப்பைப் பார்க்கச் சகிக்கவே முடியவில்லை. வாழ வேண்டிய பெண், இந்த நிலைமையில் கிடக்கிறாளே... அவர்களின் பெற்றோரின் நிலையோ பரிதாபமாக இருந்தது.

அதை விட முக்கியமானது...

விஜய், தான் இருக்கும் நிலையில் அவன் அடுத்தவர் மீதும் பரிதாபப்பட்டுக் கொண்டிருந்தான்.

அதிக நேரம் தூங்கியதாலோ... இல்லை, அதிகாலைச் சில்லென்ற காற்று அவனுக்குப் புத்துணர்ச்சியை ஊட்டியதோ தெரியவில்லை... இல்லை... மனைவி கேட்ட அந்த கிஃப்ட்டைத் தூக்கி எறிந்ததால், அவள் தன்னை விட்டுப் போக மாட்டாள் என்று நம்பிக்கை வந்ததாலோ என்னவோ... அன்று வரை தீக்ஷாவின் அருகிலே, அந்த அறையிலே அடைந்து கிடந்தவன்.. வெளியேறிக் கீழே வந்தான்.

வந்தவனின் கண்களில் காத்தமுத்துவும் முருகேசனும் பட... 'இவர்கள் இருவரும் இன்னும் இங்கு இருக்கிறார்களா...?' ஆச்சரியமுடன் அவர்களை நோக்கிப் போனான். இருவரும் டீயோ காஃபியோ குடித்துக் கொண்டிருக்க...

அவர்களின் எதிர்ப்புறம் இருந்த பெஞ்சில் அமர்ந்தான், விஜய்.

இவனைப் பார்த்த அவர்கள் இருவரும், எழ முயல... பார்வையால் அவர்களை அமரும்படி சொன்னவன், தனக்கும் ஒரு டீ வாங்கி வரச் சொல்ல... இருவரும் தயங்கி...

"தம்பி..." என்று இழுத்தனர்,

விஜய் புருவம் சுருக்கிப் பார்க்க...

"இது இங்கே இருக்கிற கடையிலே வாங்கியது... உங்களுக்குப் பிடிக்குமான்னு தெரியலை..." என்றபோதே,

"பரவாயில்லை, வாங்கிட்டு வாங்க... நீங்க குடிக்கிறீங்கல்ல... நல்லா இருக்கிறதினாலேதானே குடிக்கிறீங்க..." என்றவன், "நல்லா இல்லைன்னாலும் குடிப்பேன்... எனக்குச் சூடா ஏதாவது சாப்பிடணும் போல இருக்கு.." என்றான், ஒரு மாதிரிக் குரலில்.



"இதோ..." என்று முருகேசன் கிளம்ப...

விஜய், காத்தமுத்துவிடம், "உங்க உண்மையான பேர் என்ன?" என்று விசாரிக்க...

"தீக்ஷா தங்கச்சி வந்து, ஒரு நாள் உங்க கிட்டே சொல்லும் தம்பி, எங்க உண்மையான பேர் என்னவென்று... அதுவரை நாங்க சொல்ல மாட்டோம்," என்று உணர்வின் தாக்கத்தில் சொல்ல,

ஒரு வாரம் கழித்து, அன்றுதான் இதழ் விரித்தான் விஜய்.

"எனக்கு உங்க தங்கச்சி வெச்சுருக்கற பேர் என்னன்னு தெரியுமா...?"

"இந்தர்னு சொல்லிச்சு..." இதைச் சொன்னவன் முருகேசன். அவனிடமிருந்து டீ டம்ளரை வாங்கிய விஜய்...

"அது என் பேர்லே பாதிதானே... அது இல்லை... உங்க மாதிரியே எனக்கும் பேர் வெச்சுருக்கா... என்னைத் திட்டறப்பவெல்லாம் அந்தப் பேர்தான் எனக்கு... என்ன தெரியுமா...? விருமாண்டி..." என்றவன்,

"எப்படி இருக்கு என்னோட பேர்..." என்று டீயை உறிஞ்சியபடி பேசியவன் கண்களில் பிங்கி காட்சி அளிக்க...

குடித்த டீயை அப்படியே வைத்தவன்... வேகமாய் அதன் முன் வந்து, அதில் இருந்த தீக்ஷா - விஜய் என்ற பெயரைப் பார்த்தபடி இருந்தவனிடம்...

"அன்னைக்கு கார் எடுத்த வேகத்திலே மோதி, கொஞ்சம் டேமேஜ் ஆகிருச்சு... நேத்துதான் மெக்கானிக் ஷாப்லேருந்து எடுத்து வந்தோம். சில பார்ட்ஸ் மட்டும் மாத்தியிருக்கோம், தம்பி..."

அவர்களுக்குப் பதில் சொல்லவில்லை. ஆனால், மனதோடு பிங்கியோடு பேசிக் கொண்டிருந்தான்.

'தீக்ஷாவாக இருந்தவரை அவளுக்கும் பிரச்சினை இல்லை.. உனக்கும் பிரச்சனை இல்லை... என்றைக்கு அவ தீக்ஷா விஜய்யா மாறினாளோ... அவ மட்டும் பிரச்சினையில் சிக்கவில்லை... நீயும் சிக்கிக் கிட்டே...' என்று ஆசையோடு அதைத் தடவியவன்...

'நீ வந்த மாதிரி... என் தீக்ஷா என் கிட்டே வந்துருவாளா...?' அவனின் கேள்விக்கு அங்கிருந்து பதில் வரவில்லை. வாய் ஓயாமல் பேசும் அவன் மனைவியே பேசா மடந்தையாகி விட்டபோது... அந்த உயிரற்ற பொருள் பேசும் என்று எதிர்பார்க்கலாமா அவன்...?

சிறிது நேரம் அவர்களிடம் பேசிக் கொண்டிருந்தவன், அவர்கள் மருத்துவ மனையின் அருகில் ஒரு வீடெடுத்துத் தங்கியிருப்பதை அறிந்த விஜய்க்கு.. வார்த்தையே வரவில்லை.

இவனாவது அவள் கணவன்.... இவர்கள் தீக்ஷாவுக்கு என்ன உறவு...? எப்படி இப்படி ஒரு பாசம்... தீக்ஷா தன் தங்கையின் கணவனின் தங்கை என்ற உறவு முறையில் இருக்கும்போது கூட ,அவள் மயங்கி விழுந்தபோது... தான் சுயநலமாய் நடந்தது நினைவுக்கு வர... அப்போது தனக்குத் தெரிந்தே இரு முறை மயங்கி இருக்கிறாள் என்பது வேறு அவனைக் கொல்ல...

சிந்தனைகளின் ஓட்டத்தில் இருந்தவனுக்கு, நேற்று இரவு வந்த கனவு ஞாபகம் வர... அந்த அளவு தான் தூங்கி இருக்கிறோமோ என்று நினைத்தபோது... 'ஒரு வாரம் களைப்பில் உறங்கி விட்டோம் போல...' என்று முதலில் விட்டு விட்டான்.



## 45

அடுத்த இரண்டு நாட்களிலும் அதே போல் விஜய்யின் தூக்கம் தொடர... அதிலும் அவன் உணராமலே எப்படித் தூங்குகிறான் என்பது கூட அவனுக்கு ஆச்சரியம் இல்லை... 'அருகில் இருந்த படுக்கையில் சென்று உறங்கு வதைக் கூட உணர முடியாத அளவிற்குத் தூக்கம் நம்மை ஆட் கொள்கிறதா...?' என்பதுதான் அவன் ஆச்சரியம்.

அன்று ராதா இரவுச் சாப்பாடு கொடுக்கும்போது... ஏனோ பசிக்காமல் இருப்பது போலத் தோன்ற, மறுத்தவன்... அப்படியே மனைவியின் அருகில் தலை சாய... பாலையாவது குடிக்குமாறு ராதா கட்டாயப்படுத்த ஆரம்பித்தாள்.

ஒரு கட்டத்தில், விஜய் அவளின் கட்டாயம் தாங்காமல் வாங்கப் போக... ராதாவின் கை லேசாய் ஆடியது.

தங்கையை யோசனையோடு பார்க்க... அவன் பார்வையின் தீர்க்கம் தாங்க முடியாமல், ராதாவின் கண்களில் நீர் வழிய... விஜய்க்கு அப்போதுதான் புரிந்தது... தன்னை மறந்த தூக்கத்தின் காரணம்.

விஜய் கோபமெல்லாம் படவில்லை. கையில் வைத்திருந்த டம்ளரையே வெறித்துப் பார்த்தவன்...

ராதாவின் கைகளில் மீண்டும் கொடுத்தபடி...

"ராதா... உன் அண்ணா.. அவன் பொண்டாட்டி பக்கத்தில் இப்படிப் பைத்தியக்காரன் மாதிரி உட்கார்ந்திருக் கானேன்னு பார்க்கிறியா...? இது அவ கண் விழிக்கிற நொடிக்காக மட்டும் இல்லம்மா.. ஒரு வேளை... நான் கண் மூடி இருக்கிற நேரத்தில் என்னை விட்டுப் போய்ருவா ளோன்னு கூட..." என்று அவன் முடிக்கவில்லை...

வார்த்தைகளை முடிக்க விடாமல்... ராதா அவனின் வாயைக் கைகளால் மறித்தாள்.

"நம்ம தீக்ஷாவுக்கு ஒன்னும் ஆகாதுண்ணா...!" என்று கலங்கிய விழிகளாய்ச் சொல்ல....

விஜய் விரக்தியாய்ச் சிரித்தான். விதி ஆடும் ஆட்டத்தில் கைப்பாவையாய் இருக்கும் அவனின் நிலையை, அவன் ஓரளவு உணர்ந்து கொண்டு விட்டான். ஆனால், அதன் சுழலில் சிக்கிக் கொண்ட நிலையைத் தாண்டி வரும் நிலை அவனுக்குப் புலப்படவே இல்லை. அந்தச் சுழலோடு போராடிக் கொண்டிருந்தான்... போராடப் பழக ஆரம்பித்தான்.

அதன் பிறகு, தன் வீட்டில் இருந்து வந்த எந்த உணவையும் சாப்பிடப் பயந்த விஜய்... காத்தமுத்து, முருகேசன் வாங்கி வந்த உணவைச் சாப்பிடுவதைப் பழக்கமாக்கிக் கொண்டான்.

மாதம் ஒன்றைக் கடக்க... சக்தி நடமாட ஆரம்பிக்க... விஜய்யின் நிலை அறிந்து... தீக்ஷாவையும் பார்த்து வந்தாள். சக்தி நன்றாகத் தேறி விட்டாள்., அவளுக்கு இருக்கும் ஒரே அபாயகட்டம்... அவளின் இதயத்தில் உள்ள குறைதான்.

அதற்கான சிகிச்சைக்கு.... விஜய் ஏற்பாடு செய்யச் சொல்லி இருந்தான்.

சக்தியின் பெற்றோருக்கு ஆறுதல் சொல்வது... காத்தமுத்து, முருகேசனிடம் தீக்ஷாவைப் பற்றிப் பேசிக் கொண்டிருப்பது... என்று தன் வட்டத்தைச் சுருக்கிய விஜய்...

சுரேந்தர், தீனா இருவரும் தொழில் ரீதியாகப் பேச வந்தால் கூடத் தவிர்த்தான். இவனைப் பார்க்க... தீக்ஷாவைப் பார்க்க என யார் வந்தாலும்... மௌனம்தான். கொஞ்சம் கொஞ்சமாய்த் தன் அடையாளத்தை, உருவத்தில் மட்டுமில்லாமல்... பழக்க வழக்கங்களிலும் மாற்ற ஆரம்பித் திருந்தான் விஜய்.

கலைச்செல்வியும்... ராகவேந்தரும்... தன் மகனின் நிலை தாங்காமல் துடிக்க ஆரம்பிக்க...



கலைச்செல்வி ஒரு கட்டத்தில் ராதாவைத் திட்ட ஆரம்பித்து விட்டாள், அவளால்தான் தன் மகனுக்கு இந்த நிலைமை என்று. இவள், தீபனைத் திருமணம் செய்திருக்காவிட்டால், இப்படியெல்லாம் நடந்திருக்காது என்று, அன்னையாய் அவர் வேதனை.

ஜெயந்திக்கோ... யார் கண் பட்டதோ... இப்படி ஆகி விட்டதே தன் மகளின் நிலை என்று துக்கத்தில் உழல... இரு குடும்பத்தின் நிம்மதியையும் தீக்ஷா - விஜய் சேர்ந்தே பறித்தனர் என்று சொல்லலாம். அவள் தன் உணர்வு மறந்திருக்க... இவனோ... விஜயேந்தர் என்னும் அடையா ளத்தையே இழக்க ஆரம்பித்திருந்தான்.

அன்று சுரேந்தர், தீனாவின் வீட்டை அடைந்தபோது, மாலை 6 மணி. தீனா திடீரென்று சுரேந்தருக்குப் போன் செய்து, தன் வீட்டிற்கு வரச் சொல்லியிருந்தான்., என்ன விசயம் என்று கேட்டதற்கும் பதில் சொல்லவில்லை தீனா.

விஜய், மருத்துவ மனையே கதி என்றிருக்க, யுகிக்கும் அனுபவம் இல்லாததால் தடுமாற, சுரேந்தருக்குத்தான் வேலைப் பளு தாக்கியது. ஒருபுறம் அலுவலகம் மற்றும் கட்டடங்கள்... மறுபுறம் குடும்பம்... என ஒரே நேரத்தில் சுரேந்தரைத் தாக்க ஆரம்பிக்க... சமாளிக்க முடியாமல் தவித்தான் சுரேந்தர்.

விஜய் இருந்தவரை... அவன் கண்காணிப்பில் இவன் எடுத்துச் செய்வானே தவிர... இத்தனை தூரம் இவன் மெனக்கெட்டதில்லை. வீடு, மருத்துவ மனை, அலுவலகம் என, கிடைக்கும் நேரம் போதாமல் இருக்க... சுரேந்தரே இப்படி எனும்போது.. யுகியின் நிலைமை அதைவிட... இத்தனை நாளும் விளையாட்டாய்த் சுற்றித் திரிந்தவனால், திடீரென்று பொறுப்புகளை ஏற்க முடியாமல், திணறினான்.

அவர்கள் குடும்பத்துக்கு இடையில் வந்த தீபனுக்கு, இவர்களின் குடும்ப வழக்கத்திற்குள் திடீரென்று நுழைய

முடியவில்லை. இருந்தும் அவனும் முடிந்தவரை இவர்களுக்குத் தோள் கொடுத்தான்தான்.

ஆக மொத்தம்... புயலின் அமைதியில்... அவளின் திருவாளன் தேங்கிப் போக... இரு குடும்பங்களும் திணறின. புயலின் சீற்றத்தில்தான் அழிவும் சேதாரமும் அதிகம் என்று கேள்விப்பட்டிருக்கிறோம்... இங்கு, தீக்ஷா என்னும் புயலின் அமைதியில் அது நடந்தது.

'தீனா ஏன் அழைத்திருக்கிறான்...?' என்ற யோசனையில் சுரேந்தர் அமர்ந்திருக்க... 'சுரேந்தரிடம் எப்படி ஆரம்பிப்பது...?' என்று தெரியாமல் தீனா யோசித்துக் கொண்டிருந்தான். இருந்தும் சுரேந்தரிடம் சொல்லி ஆக வேண்டுமே...!

"சுரேன்... எப்படிச் சொல்றதுன்னு தெரியவில்லை. ஆனால், உன் குடும்பம் இருக்கிற சூழ்நிலையில் உன்னிடம் மட்டும்தான் சொல்ல முடியும்..." என்று ஆரம்பித்தான்.

"தீனா... சுத்தி வளைச்செல்லாம் பேசாதே... ப்ளீஸ்... நான் இருக்கிற நிலைமையில, சத்தியமா யோசிக்கிற அளவுக்குக் கூட எனக்குத் தெம்பு இல்லை..." என்ற போது தீனாவுக்கும் அவன் நிலை பரிதாபமாக இருந்தது.

"நரேன் மீட் பண்ணினான் என்னை..."

நரேன்... விஜய், தீனா இருவரின் தோழனும் ஆவான். அவன் மனைவி ரேவதி. தீக்ஷாவைக் கண்காணிக்கும் மருத்துவக் குழுவில் அவளும் இருந்தாள்.

ரேவதி, தீக்ஷா பற்றி அவன் கிட்டே சொல்லி இருப்பா போல... "ரொம்பக் கஷ்டமா இருக்குடா... தீக்ஷாவோட நிலைமை இப்படியே போனது என்றால்..." என்று ஆரம்பிக்க,

சுரேந்தர் மனம் கலங்க,

"என்ன சொன்னாங்க...? தீக்ஷாவுக்கு வேற ஏதாவது ப்ராப்ளமா...? இங்கே முடியாதுன்னா.. நாங்க வேற எங்கேயாவது பார்த்துக் கொள்கிறோம்..." வேகமாய்ச் சொல்ல,



"சொல்றதைக் கேளு..." என்று அவனைச் சமாதானப் படுத்தியவன், நரேன் சொன்ன தகவலைச் சொன்னான்...

"தீக்ஷா எதற்கும் ரெஸ்பான்ஸ் பண்ணவில்லை என்பதால், மூளைச்சாவிற்கான பரிசோதனைகள் அவளுக்கு எடுக்கப்படப் போவதாக ரேவதி சொல்லி இருந்ததாகவும்... அப்படி அவர்களின் சந்தேகம் முடிவாகி விட்டால்..." யோசனையுடன் கவலையாய் நோக்கினான் தீனா.

அதன் பிறகு தீக்ஷா... விஜய்... இவர்களின் குடும்பம்... நிலைமையை யோசிக்கவே முடியவில்லை அவனால்.

சுரேன் இடிந்து போனான். 'இதை எப்படித் தன் அண்ணனிடம் சொல்வது...?' தவித்தவனைத் தீனாதான் தேற்றினான்.

"சுரேன், இப்போதைக்கு நாம யார் கிட்டேயும் சொல்ல வேண்டாம். முடிவு வரட்டும்... அதுவரை, குறிப்பாக விஜய்க்குத் தெரிய வேண்டாம்..." என்று சொன்னவன்,

"சுரேன்... டெஸ்ட் ரிஸல்ட் எதுவாக இருந்தாலும் ஏற்றுக் கொள்கிற பக்குவத்தை இப்போதே உருவாக்கிக்கோ... ஏனென்றால், நீதான் திடமா இருக்க வேண்டும் இந்த சிச்சுவேஷன்ல..." என்ற போதே சுரேன் உடைந்திருந்தான்.

"எப்படித் தீனா எங்க அண்ணா இதைத் தாங்குவாரு...? என்னாலேயே முடியலை... வாழ வேண்டிய பொண்ணு அவ... அவளுக்கு ஏன் இந்த நிலைமை தீனா... என் கண்ணு முன்னால பம்பரமாச் சுத்திட்டு இருந்த பொண்ணை, இப்படிப் படுத்த படுக்கையா பார்க்கிறதே கொடுமையா இருக்கு. இன்னும் நாங்க என்னவெல்லாம் படணும்... எங்க அண்ணா என்ன பண்ணினார்... அவருக்கு

ஏன் இந்த வேதனை...? நாங்க எப்படி அவரை மீட்டெடுக்கிறது...?" என்று புலம்ப ஆரம்பிக்க...

"சுரேன்... இந்த உலகத்தில பிறக்கிற எல்லோரும் ஒரு நாள் போய்த்தான் ஆக வேண்டும். விஜய்க்கு இது கஷ்டம் தான். ஆனாலும் இப்படியே இருந்து விடப் போகிறானா...? கண்டிப்பாக இதை எல்லாம் சமாளிச்சு வெளியே வருவான்..." எனும்போதே,

தன் அண்ணனை நினைத்துக் கவலையில் மூழ்கிய சுரேந்தர்... அப்படியே அமர்ந்திருக்க...

"சுரேன்... நாளைக்குத்தான் எல்லா டெஸ்ட்டும் எடுக்கப் போறாங்க... நீ அதுவரை யாருக்கும் தெரியாமல் பார்த்துக்கோ... உன் கிட்டே மட்டும் சொல்ல வேண்டும் என்று தோன்றியது," என்றவன்,

"தென்... சக்திக்குக் கூட இதய மாற்று அறுவைச் சிகிச்சைக்கு டோனர் தேடிட்டு இருக்காங்கல்ல..." என்று சந்தேகமாய் இழுக்க...

அவனின் உள்நோக்கம் புரிந்த சுரேந்தர், அடிவரை ஆடிப் போனான்.

"ப்ளீஸ் தீனா... இது மாதிரியெல்லாம் பேசாதே... எங்க தீக்ஷாவுக்கு ஒண்ணும் ஆகாது..." என்றவன் குரல் கம்ம ஆரம்பிக்க,

"சுரேன்... கவலைப்படுவதை விட்டு விட்டு, இனி என்ன பண்ணினால் நல்லது நடக்கும்னு யோசி... அந்தப் பொண்ணு சக்தி மேலே விஜய்க்கு ஒரு சாஃப்ட் கார்னர் இருக்கு... அது மட்டும் இல்லாமல், சக்திக்கு ப்ளாஸ்டிக் சர்ஜரி பண்ணணும்னு சொன்னாங்க... எல்லாத்தையும் யோசிச்சுப் பாரு... சக்தியை ஏன் இந்த மாதிரிச் சூழ்நிலையில் விஜய் கண்ணில் காட்ட வேண்டும்...?" தீனா பேசிக் கொண்டே போக...



சுரேனின் மனதில் குழப்பம்... ஏற்கெனவே குழம்பிய நிலையில் இருந்தவன், இப்போது முற்றிலும் குழம்ப... தீக்ஷாவின் நிலையில் இருந்து மாறி... தன் அண்ணனின் நிலையை எண்ணிக் கலங்கியவனுக்கு.. சக்தியை வைத்துத் தன் அண்ணனின் வாழ்க்கையைச் சரி செய்யலாம் என்று முடிவெடுத்தான்.

ஓரளவு அவனைச் சமாதானப்படுத்திய தீனா... உடனடியாக அவனுக்குத் தெரிந்த மருத்துவத் தோழியிடம், விபரங்களை அனுப்பச் சொல்ல, 'சொன்னதைச் செய்யுமாம் கிளிப்பிள்ளை...' என்பதைப் போல, சுரேனும் தீனா சொல்வதை எல்லாம் செய்தான்.

எப்போதும் சுரேந்தர் எதைச் செய்தாலும், கொஞ்சம் யோசிப்பான்.

ஆனால், அன்று எதையும் யோசிக்காமல் செய்து விட்ட பின்தான் சிந்தித்தான், சக்தியின் மனநிலையை.

"தீனா... சக்தியை வைத்து அண்ணனைச் சரி பண்ணலாம்னு சொல்றீங்க... ஆனா... சக்தி இதற்குச் சம்மதம் சொல்வாளா...? அவள் ஒப்புதல் இல்லாமல் இப்படிச் செய்து விட்டேனே...!" என்று கலங்க ஆரம்பிக்க... தீனாவுக்கும் உள்ளூர நெருடலாக இருந்தாலும்...

"சக்திக்கு இந்த மாதிரி ஒரு வாழ்க்கை, கனவுல கூடக் கிடைக்காதுடா...! கண்டிப்பாகச் சம்மதம் சொல்வாள்," என்று சுரேந்தரைச் சமாதானப் படுத்தினான். சக்தியிடமும் சென்றனர்.

ஆனால், நிலைமையோ தலை கீழாய் இருந்தது.

சக்தியிடம் இருந்து வந்த எதிர்ப்பில் சுரேனும் தீனாவும் அதிர்ந்தனர்.

இருவரின் அதிர்ந்த முகத்தினைப் பார்த்த சக்தி...

"சாரி சார்... என்னைத் தப்பா எடுத்துக்காதீங்க... விஜய் சாருக்கு இப்படி ஒரு கஷ்டம்னு நினைக்கும் போது மனதுக்கு வருத்தமாகத்தான் இருக்கிறது. ஆனால், நீங்க சொல்றது எதுவுமே நடக்காது சார். ஏனென்றால், விஜய் சார் என்னைக் காப்பாற்றிய போது... பரிதவித்து நின்ற பாஞ்சாலியைக் காப்பாற்றிய அந்தக் கண்ணன் போலத்தான் எனக்கும் தோன்றினார். பாஞ்சாலிக்குக் கிருஷ்ணர் ஆபத்பாந்தவன் மட்டுமல்ல... அண்ணன் என்ற உறவு முறையும்தான். அந்த முறையில்தான் நானும் விஜய் சாரை நினைக்கிறேன். அவர் மனைவிக்காக நான் வேண்டிக்கிறேன்... அவரோட நல்ல மனதுக்கு அவங்களுக்கு ஒண்ணும் ஆகாது..." என்று முடிக்க,

சக்தியிடமிருந்து இதை எதிர்பார்க்கவே இல்லை இருவரும். அதற்கு மேல் ஒன்றும் பேசாமல்... பேச முடியாமல் சென்றனர் இருவரும்.

ஏன் சக்தியின் பெற்றோரே அதிர்ந்துதான் போயினர், சுரேன், தீனா சொன்ன தகவலில்.

தனிமையில் சக்தி மன்றாட ஆரம்பித்தாள். தன்னை நினைத்து அல்ல... விஜய்யின் மனைவியை நினைத்து.

சக்திக்குத் தீக்ஷாவின் நிலைமை, தாங்கவே முடியவில்லை. 'அவள் விஜய்க்காகவாவது உயிர் பிழைக்க வேண்டும்...' என்று மனதார வேண்ட ஆரம்பித்தாள்.

'தன் உயிர் போனால் கூடப் பரவாயில்லை... தன் மானத்தினைக் காப்பாற்றிய விஜய் நன்றாக இருக்க வேண்டும்... தான் வாழ்ந்து என்ன பிரயோசனம்...? தன் பெற்றோருக்குத்தான் பாரம். ஆனால், தீக்ஷா பிழைத்தால்... எத்தனை பேருக்குச் சந்தோசம்...' பிரார்த்திக்க ஆரம்பித்தாள் சக்தி.



தீக்ஷாவின் நிலை எதுவும் அறியாத விஜய்... தீக்ஷாவின் அருகில் விழிகள் மூடி விழித்திருந்தான், வழக்கம் போல்.

ஒழுங்கான தூக்கம் இல்லாமல்... அடுத்த நிமிடம் என்ன ஆகுமோ என்று, நேரத்தையும் நாட்களையும் கடத்திக் கொண்டிருந்தான். துக்கம் ஒரு புறம்... மற்றவர்களின் பரிதாபம் ஒரு புறம்... என விஜய்யை அலைக்கழித்தன என்றாலும்... எப்படியும் தன் மனைவியைக் காப்பாற்றி விட வேண்டும் என்ற உந்துதல் அவனை ஓரளவுக்கு மனிதனாய் நடமாட வைத்தது. இதற்கிடையே சக்தியின் உடல் நிலையையும் அவ்வப்போது மருத்துவர்களிடம் விசாரித்துக் கொண்டான்.

எப்போது கண் அயர்ந்தான் என்றே தெரியவில்லை. திடீரென்று அடித்த அலாரச் சத்தத்தில் விழித்தவன்... அதை அணைக்காமல் தீக்ஷாவையே பார்த்தபடி அமர்ந்திருந்தான். சாதாரண நாட்களிலேயே தீக்ஷா எழுந்து அணைத்து விட்டுத்தான் மறுவேலை பார்ப்பாள்... இப்போது அவள் அதை எடுத்து அணைப்பாளா...? இருந்தும் அதை எதிர்பார்த்தான்... அவளின் அப்பாவிக் கணவனாய்.

அவளது கைகளின் வெம்மையைத் தன் கன்னங்களில் சிறிது நேரம் வைத்திருந்தவன்... இறுக அழுத்தமாய் மூடியிருந்த அவளின் இதழ்களில்... தன் கன்னம் வைத்து ஒற்றியவன்...

"குட்மார்னிங் தீக்ஷா," என்றபடி அவளின் பதிலை எதிர்பாராமல் தன் அன்றைய நாளைத் தொடங்கினான்.

சக்தியைப் பரிசோதிக்கும் மருத்துவர், சக்தி ஓரளவு தேறி விட்டதாகவும்... வழக்கம் போல் எடுக்கும் மாத்திரைகளை அவள் எடுத்துக் கொண்டாலே போதும் என்றும்... விரைவில் வீடு திரும்பலாம் என்றும் சொல்லி இருந்தார்.

ஆனாலும் சக்தி, தன் வாழ்நாட்களை எண்ணிக் கொண்டிருக்கிறாள் என்ற நிலையில் மாற்றம் இல்லைதான். அதனால் விஜய் அவளின் இதய நோய்க்கான சிகிச்சையை விரைவில் ஏற்பாடு செய்யவும் சொல்லி இருந்தான்.

இன்று அல்லது நாளை சக்தி வீடு திரும்பலாம் என்று சொல்லி இருந்ததால், சக்தியைப் பார்த்து விட்டு வருவோம் என்று தீக்ஷாவை அவளது தாயின் கண்காணிப்பில் விட்டு விட்டு, சக்தியின் அறைக்குச் சென்றான்.

ஆனால், சக்தி வழக்கமாய் இருந்த அறையில் இல்லாமல் போக.... அவள் சற்று முன்தான் தீவிர சிகிச்சைப் பிரிவுக்கு மாற்றப்பட்ட செய்தி கிடைக்க... அங்கு விரைந்தான்.

அங்கு, சக்தி, மருத்துவ உபகரணங்களுக்கு மத்தி யில்... தன் உயிரைப் பிடித்து வைத்திருக்க... விஜய்க்குத் துக்கம் தொண்டையை அடைத்தது.

'நேற்று மாலை வரை நன்றாகத்தானே இருந்தாள்...' என்று நினைத்தபடி, விஜய் அவள் அருகில் போனான்.

இவன் எப்போது வருவான் என்று அவள் காத்திருந் தாள் போல....

விஜய்யைப் பார்த்த வுடன் புன்னகைத்துத் தன் அருகே வரச் சொன்னவள்...

"விஜய் அண்ணா...!" என்று அழைக்க... விஜய்க்கும் கண்ணீர் அரும்பியது.

"நான் உங்க மனைவி தீக்ஷா ஆக முடியுமான்னு உங்க தம்பி சுரேன் சார் கேட்டாங்க... அவர் கிட்டே சொல்லிடுங்க... இந்த சக்தி என்னைக்கும் தீக்ஷா ஆக முடியாது... அவங்க இதயத்தை... அவங்க முகத்தை எனக்கு மாற்றினால்கூட, நான் அவங்களா ஆக முடியாது..." என்ற போதே விஜய் எதுவும் புரியாமல் பார்க்க...



"உங்க மனைவிக்கு ஒன்றும் ஆகாது. கேடு கெட்ட ஒருத்தனை நேசித்ததினாலோ என்னமோ... அவனைச் சுமந்த இதயம் கூட வீணாகிருச்சு... ஆனா, உங்க மனைவி உங்களை அவங்க இதயத்தில் வெச்சிருக்காங்க.. அவங்க உங்களை விட்டு எங்கேயும் போக மாட்டாங்க..." என்ற போதே அவள் கண்களில் கண்ணீர் இறங்கியது.

"தீக்ஷா மேடம் உங்களை விட்டுப் போய்டுவாங்கன்னு தான் கடவுள் என்னைக் காட்டி இருக்கிறார்னு தீனா சார் சொன்னாங்க. அது உண்மை இல்ல. சாகப் போற என் மூலமா... உங்க இக்கட்டான சூழ்நிலையில் கடவுள் உங்களுக்குப் பரிட்சை வைத்திருக்கிறார். அதில் நீங்க பாஸ் பண்ணீட்டீங்க. உங்க மனைவியைக் கூடிய சீக்கிரம் உங்களுக்குத் தந்து விடுவார் பாருங்க... நான் உங்க தீக்ஷா ஆக முடியாது. ஆனால், உங்க மனைவி என் அப்பா அம்மாவுக்குச் சக்தியா இருப்பா," என்று தன் பெற்றோரைப் பார்த்துச் சொல்ல...

அவளின் பெற்றோர், துக்கம் தாளாமல், விசும்ப ஆரம்பித்தனர்.

விஜய்க்கு ஒன்றுமே புரியாமல், அவர்களிடம் என்ன நடந்தது என்று விசாரிக்க... சுரேந்தர் மற்றும் தீனா வந்து போன விஷயத்தைச் சொன்னார்கள், இருவரும்.

விஜய்க்குப் பூமி சுற்றுவது போல் இருந்தது. தீக்ஷா என்று மனம் கதறத் தொடங்க ஆரம்பிக்க... அங்கிருந்து வெளியேறினான். அவனின் மொத்த சக்தியும் அவனை விட்டுப் போனாற்போல் இருக்க... பிரமை பிடித்தவனாய்த் தன்னவளை நோக்கிப் போனான்.

அங்கோ... தீக்ஷா பரிசோதனையின் நிமித்தம்... அதற்கு ஆயத்தம் செய்யப்பட்டுக் கொண்டிருக்க, ஜெயந்தி எதுவும் தெரியாமல்,

"என்ன தம்பி... நம்ம தீக்ஷாவுக்கு ஏதோ டெஸ்ட் எடுக்கணுமாம்... சுரேன் தம்பியும் ஒண்ணும் சொல்ல மாட்டேன்கிறாங்க... எனக்குப் பயமா இருக்கு. என் புள்ளைக்கு ஒண்ணும் இல்லைல்ல...?" என்று அழ ஆரம்பிக்க... விஜய்யின் பார்வையில், சுரேந்தர், தீனா இருவரும் தலை குனிந்தனர்.

"அண்ணா, ஒரு சின்ன டெஸ்ட்..." என நின்று கொண்டிருந்த சுரேந்தர் சொல்ல ஆரம்பிக்க...

சுரேந்தருக்கும் தீனாவுக்கும், சூரியனின் உக்கிரத்தைத் தன் பார்வையாலே காட்டினான் விஜய்.

இவர்களின் உணர்வுகள் எல்லாம் தெரியாமல்... தீக்ஷாவை ஸ்ட்ரெச்சரில் ஏற்ற... விஜய் எதையும் தடுக்கவில்லை. தடுக்கும் நிலைமையிலும் இல்லை. தன்னை நோக்கிக் கொண்டு வரப்பட்ட தீக்ஷாவை வெறித்தபடி நின்று கொண்டிருக்க... ஜெயந்திக்கு, இப்போது ஏதோ சரியில்லை என்று தெளிவாய்த் தெரிய ஆரம்பிக்க...

"அய்யோ! என் பொண்ணை எங்கே கொண்டு போறீங்க...?" என்று பெருங்குரலெடுத்து அழ ஆரம்பிக்க... விஜய்யைத் தாண்டித் தீக்ஷா கொண்டு செல்லப்பட்டாள். விஜய் கல்லாய்ச் சமைந்து நின்றான், திரும்பிக் கூடப் பார்க்காமல்.

அப்போது... எதிர்பாராமல் பணியாளர் ஒருவர் தடுமாற... ஸ்ட்ரெச்சர் லேசாய்க் கதவில் மோத... விஜய் அப்போதுதான் திரும்பினான்.

வழக்கமாய் அவள் மனைவிதான் அவனைத் திரும்பிப் பார்ப்பாள். இன்றும் பார்ப்பாளா என்று பார்க்க... அவனின் எதிர்பார்ப்பை நிறைவேற்றி இருந்தாள் தீக்ஷா. ஆம், அங்கு நடந்த மோதலில், விழி திறக்காமல், தீக்ஷாவின் தலை மட்டும் இவன் புறம் திரும்பி இருந்தது.



இறுகிய சிலையாய் அவளின் அருகே வந்த விஜய்... தன் மனைவியைக் கைகளில் அள்ளியபடி... 'எங்கே போக வேண்டும்...?' என்று கேட்டதோடு சரி... வேறு எதுவும் பேச வில்லை. வெளியே ஜடமாய்த் தெரிந்தாலும்... அவனின் இதயம், பேராழியின் கொந்தளிப்போடு குமுறிக் கொண் டிருக்க... பரிசோதனைக்கான அறையில் தன் மனைவியைக் கிடத்தி வந்தவன் மனதில்... அவளின் நாவண்ணம் இன்று பல கேள்விகளுக்கான விடைகளைச் சொல்லியது.

'மூச்சு இல்லாம கூட தீக்ஷா இருப்பா... பேச்சு இல்லாம இருக்க மாட்டாள்...'

'நமக்குப் பிடிச்சவங்க, நம்மை விட்டுப் போறதுதான் பெரிய வலி.'

'இந்தத் தீக்ஷாவுக்காக, நல்ல காரியம் பண்ணினால் சந்தோசப் படுவா.'

'உனக்கு அழிவு காலம் ஆரம்பிச்சுருச்சுடா...'

'தீக்ஷா டூ சக்தி... சக்தி டூ தீக்ஷா.'

'நான் உயிரோட இருக்கும் போதே என்னை நாலு பேர் முன்னால தூக்க வைக்கிறேன்.'

அவன் காதில் ஒவ்வொரு வார்த்தையும் சம்மட்டியால் அடித்தது போல் அடிக்க... தாங்க முடியாமல், விஜய் தள்ளாட ஆரம்பித்தான்.

சுரேந்தர் ஓடிவந்து தன் அண்ணனைத் தாங்கிப் பிடித்தான்.

"விடுடா என்னை... அவ என்னை விட்டுப் போக நெனச்சுட்டா... மூச்சை விட்டுட்டு யாரோடோ போகப் போறாடா... என்னை மொத்தமா மூழ்கடிச்சிட்டுப் போகப் போறாடா... லூசுத்தனமா பேசுறான்னு சொல்வேன்டா... உருப்படியாப் பேசுன்னு சொல்வேன்... அவ எல்லாம்

தெரிஞ்சுதான் பேசி இருக்கா... நான்தான் எதையும் புரிஞ்சுக்க முடியாத லூசா இருந்திருக்கேன்... எல்லாத்தையும் உணர்த்திட்டாடா...!" என்று சுவரோடு சாய்ந்தவன்...

தீனாவைப் பார்த்து வெறித்தான்.

"என்னைப் பழி வாங்க... உனக்கு வேற வழியே தெரியலையாடா.. என் தம்பியவே எனக்கு எதிரா மாத்திட்டியாடா...?" என்று கோபத்திலும் துக்கத்திலும் வார்த்தைகளை விட...

என்ன நடக்கிறது என்பது புரியாமல், ஜெயந்தி... விஜய்யின் அருகில் அழுதபடி அமர...

"உங்க பொண்ணா இருக்கிற வரை அவளுக்கு ஒண்ணும் ஆகலை அத்தை... இந்தப் பாவப்பட்டவன் கைப்பிடிச்சு... இப்போ என்னை விட்டுப் போகப் போறா அத்தை..." என்றவனின் புலம்பல் வார்த்தைகள் தொடர, ஜெயந்தி உறைந்து போனார்.

விஜய் இருக்கும் நிலையில்... தீக்ஷாவின் பரிசோதனை முடிவுகள் வரும்வரை அவனைக் கட்டுக்குள் கொண்டு வர முடியாமல் போக... வேறு வழியின்றி அவனுக்கு மயக்க மருந்து... ஊசி மூலம் செலுத்தப்பட...

விஜய் திமிறினான்.

"விடுடா... நான் திரும்ப முழிக்கும் போது அவளைப் பார்க்க முடியுமாடா...? எனக்கு இது வேண்டாம்...." என்றவனின் வார்த்தைகள் காற்றில் பறக்க... அவன் திமிறத் திமிற, அவனுக்கு மருந்து செலுத்தப்பட, விஜய் கொஞ்சம் கொஞ்சமாய் அடங்கினான்.

அடங்கியவனின் பார்வை, அவன் எதிரில் இருந்த கண்ணாடியில் பட்டு... அவன் நெஞ்சத்தில் நிலைகுத்தி நின்றது. அன்று உதட்டின் சாயத்தால் அச்சாரம்



இட்டிருந்தாள் அவன் மனைவி. இன்று... அந்த இடத்தில் அவளின் இரத்தம் கறையாய் வழிந்து கொண்டிருக்க... விஜய் அதைப் பார்த்தபடியே மயங்கினான், இதழில் புன்னகையோடு.

தன் மனைவி... தன்னை விட்டுப். போக மாட்டாள் என்ற நம்பிக்கையோடு... தன்னை உணர்கிறாள் என்ற உவப்போடு.. அவளின் உடலில் உணர்வுகள் அவளை விட்டு அற்றுப் போகவில்லை என்ற உறுதியோடு... நிம்மதியாகக் கண் மூடினான், வெகு நாட்களுக்குப் பிறகு.

## 46

**வி**ஜய் கண் விழித்த போது, அருகில் சுரேந்தர் மற்றும் தீனா இருவரும் நின்றிருக்க... இருவரையும் இலட்சியம் செய்யாமல் எழ முயற்சித்த விஜய், லேசாய்த் தடுமாற... சுரேந்தர் அவனைப் பிடித்து நிறுத்த முயற்சி செய்தான்.

ஆனால், விஜய்யோ அவன் கைகளைத் தட்டி விட்டுத் தானே எழுந்து அமர்ந்தவன்... வேகமாய்ச் சுவர்க் கடிகாரத்தைப் பார்க்க, அது மூன்று மணியைக் காட்டியது. சுரேந்தரைப் பார்த்த விஜய்யின் கண்களின் நரம்புகளில், நீண்ட நாட்களுக்குப் பிறகு கோபத்தின் சிவப்பு.

விஜய்யின் செயலில்... அதிர்ந்த சுரேன்...

"அண்ணா..." என்ற போது,

"என்ன சொல்லப் போறே... தீக்ஷாவுக்கு நாம... இல்லை, இல்லை... நீங்க நினைத்த மாதிரி... எதுவும் இல்லை... இதுதானே சொல்ல வருகிறாய்..." என்று இருவரையும் பார்க்காமல் சுவரை வெறித்தபடி சொல்ல...

விஜய்க்கு எப்படித் தெரியும் என்று தீனா, சுரேந்தர் இருவரும் ஒருவரை ஒருவர் கேள்வியாய்ப் பார்த்துக் கொண்டனர்.

அவர்களுக்கு அவன் பதில் சொல்லவில்லை. அவனுக்கான பதிலை அவன் மனைவி சிந்திய ரத்தத் துளிகள்... அவள் இன்னும் உணர்வுகளோடு இருக்கிறாள் என்பதை அவனுக்குச் சொல்லாமல் சொல்லிச் சென்றதை இவர்கள் அறிவார்களோ...?

தட்டுத் தடுமாறி எழுந்தவன், நின்றிருந்த சுரேந்தர் மற்றும் தீனாவிடம்,

“என்னை விரோதியா நினைத்த போதே அவ என்னைப் பழி வாங்க நினைக்கவில்லை. என்னை அவளோட உயிரா நினைக்கும் போதுதான் என்னைப் பழி வாங்கப் போகிறாளா...? என்னை விட்டு அவ்வளவு சீக்கிரம் போக மாட்டாடா... கண்டிப்பா நாங்க ரெண்டு பேரும் வாழுவோம்... நீங்க பார்க்கத்தான் போறீங்க...” என்று சொல்லியபடி நடந்த போக,

“அண்ணா... சக்திக்குத் திடீர்னு சீரியஸாகி...” என்று நிறுத்திய சுரேந்தர்,

“டாக்டர்ஸ் எவ்வளவோ ட்ரை பண்ணியும் முடியலண்ணா!” என்ற வார்த்தைகளில், விஜய் ஆணி அடித்தவன் போல் நின்றவன்... மீண்டும் கட்டிலில் வந்து கண் மூடி அமர்ந்தவன்தான்... சற்று நேரம் எதுவுமே பேசவில்லை.

அவனிடம் இவர்களும் பேச்சுக் கொடுக்கவில்லை. சிறிது நேரம் கழித்து,

“நேற்று அந்தப் பொண்ணுகிட்ட என்னடா பேசுனீங்க...? ஏற்கெனவே இதய பலகீனமுள்ள பொண்ணு... நான் அவ அம்மா, அப்பா முகத்தில் எப்படி விழிப்பேன்...? பாவம், ஒரே பொண்ணு... அவளால ஏகப்பட்டதை அனுபவிச்சுட்டாங்க... அவளை எப்படியாவது காப்பாற்றிக் கொடுக்கலாம்னு நெனச்சேன்...” என்று புலம்பிய விஜய்... நேராய்ப் போனது சக்தியின் பெற்றோரை நோக்கித்தான்... அவன் மனைவியைக் கூடப் பார்க்கவில்லை..



இவனைப் பார்த்த சக்தியின் பெற்றோர்... துக்கம் தாளாமல் கதறி அழ... விஜயேந்தருக்கு என்ன சொல்லி ஆறுதல் படுத்துவது என்றே தெரியவில்லை.

இறந்தவர்கள் நிம்மதியுடன் போய் விடுவர். ஆனால், அவர்களைச் சார்ந்தவர்களின் நிலை... கொடுமையாக இருந்தது விஜய்க்கு.

விஜய் கூட அதன் வாசலில் சில மணி நேரத்திற்கு முன்தான் நின்றிருந்தான். நேசிப்பவர்களை இழப்பதென்பது எவ்வளவு வலி என்பதைக் கூட அவள் மனைவி அவனிடம் காட்டியிருந்தாள்.

இருவரிடமும் பேசாமல்... அவர்களைத் தன்னோடு அணைத்தவன்...

“உங்க பொண்ணு... உங்களைத் தனியா விட்டுப் போகலை. உங்களுக்கு ஒரு மகனை விட்டுட்டுப் போயிருக்கான்னு நெனைச்சுக்கங்க அம்மா...!” என்று சொல்ல,

“இல்லப்பா... மகன்னு சொல்லு... சக்தி சொன்னா.. கண்டிப்பா விஜய் சாரோட மனைவி தீக்ஷா சுய நினைவுக்கு வந்து... ரெண்டு பேரும் சந்தோஷமா உங்க கிட்டே வருவாங்க... தீக்ஷா மேடம் கண்டிப்பா... சக்தியை விட உங்களை நல்லாப் பார்த்துப்பாங்கன்னு சொன்னா..”. என்று அந்தச் சூழ்நிலையிலும் விஜய்யிடம் சொல்லித் தங்களைத் தாங்களே ஆறுதல் படுத்திக் கொண்டவர்கள்...

“சக்தி, ஏதோ கொஞ்சம் உணர்ச்சி வசப்பட்டுச் சொல்லிட்டா தம்பி. தீக்ஷா ஏத்துக்கிடுதோ இல்லையோ... இனி எங்க வேண்டுதல் எல்லாம்... தீக்ஷாவும் நீங்களும் நல்லா வாழணும் என்பதுதான். என் பொண்ணு மனசும் அப்போதான் சாந்தி அடையும் தம்பி. உயிரோட இருக்கிற வரை... தப்பான ஒருத்தனை நேசிச்சுட்டோம்னு.... மனசு வெறுத்துத்தான் வாழ்ந்துச்சு...” என்று கண் கலங்க,

காத்தமுத்துவும், முருகேசனும் அவர்களின் அருகில் வந்து....

"கவலப்படாதீங்க ரெண்டு பேரும்... நம்ம தீக்ஷா கண் முழிச்சு... விஜய் சார் கூட சீக்கிரம் வாழும். உங்களைக் கூட சக்தியை மறக்க வைக்கும் பாருங்க," என்று சொல்லி ஆறுதல் படுத்த,

விஜய், அதை ஆமோதிப்பது போலத் தலை ஆட்டினான். அந்த ஆறுதல் அவனுக்குத் தெம்பூட்டுவது போல்தான் இருந்தது.

அதன் பிறகு... சக்தி சம்பந்தப்பட்ட எல்லா விஷயங்களையும் விஜய் தானே எடுத்துக் கொண்டான். அவளின் ஈமக் காரியங்களில் இருந்து... அவளின் காதலன்... இல்லையில்லை, அந்தக் கயவனுக்குத் தகுந்த தண்டனை கிடைக்கும்வரை அவன் ஓயவில்லை.

சக்தியின் பெற்றோரே அவனுக்கும்... காத்தமுத்து, முருகேசனுக்குச் சமையல் செய்து தர.., விஜய், தன் குடும்பத்தை விட்டே தனித்திருந்தான். யாரிடமும் பேச வில்லை. பேசவும் விரும்பவில்லை. இந்த வாழ்க்கைக்கு ஒரு மாதிரித் தன்னைப் பழக்கிக் கொண்டான் என்றே சொல்லலாம்.

கலைச்செல்வி எவ்வளவு கெஞ்சியும், வீட்டுப் பக்கம் எட்டிப் பார்க்கவில்லை. தீக்ஷாவோடுதான் வருவேன் என்று பிடிவாதம் பிடித்தான் விஜய்.

சுரேந்தரோடு பேசுவதே கிடையாது. அவன் ஏதாவது தொழில் ரீதியாகச் சந்தேகம் கேட்டால் கூட,

"சார்தான் பெரிய ஆளாகிட்டீங்க இல்ல... எல்லா முடிவும் நீங்களே எடுத்துத் தன்னிச்சையாப் பண்ற அளவுக்கு பெரிய ஆளாகிட்டீங்க.. நீங்களே பார்த்துக்கங்க. இவன் பைத்தியக்காரன் ஆகிட்டான்னு முடிவு பண்ணித்தானே, பைத்தியத்தைச் சக்தி மூலமாகத் தெளிய வைக்க நெனைச் சீங்க.. அப்படி மட்டும் ஏதாவது பண்ணி இருந்தீங்க..." என்று சுரேந்தரைச் சாடியவன், சுரேந்தரிடம் மட்டும் இன்றித் தீனாவிடமும் பேச மறுத்துவிட்டான்.



யுகியைக் கூடத் தேற்ற ஆர்த்தி இருந்தாள்... சுரேந்தர் தான் சுத்தமாய் நொந்து போனது.

இதற்கெல்லாம் விடிவு காலம் எப்போது வருமோ என்று ஒவ்வொருவரும், காலத்தின் கையில் போட்டு விட்டு... அன்றாட வாழ்க்கையை ஏதோ வாழ்ந்து கொண்டிருந்தனர்.

அந்த நாளும் வந்தது. விடிவு காலமா என்பது தெரியவில்லை. தீக்ஷா கண் விழித்தாள்தான். ஆனால், நிலைமைதான் வேறாய் இருந்தது. விஜய்க்கு விடிவு காலம் என்பது கேள்விக் குறியாகவே இன்னும் நின்றது என்றே சொல்லலாம்.

ஜெயந்தி மற்றும் விஜய் மட்டுமே தீக்ஷா இருந்த அறையில் இருந்தனர்.

அன்றைய இரவும்... தீக்ஷா அருகில் தலைவைத்துப் படுத்திருந்தான் விஜய், அவளின் கைகளைப் பிடித்தபடியே.

நிசப்தமான இரவின் மத்தியில்... தீக்ஷா கடினப்பட்டு இமைகளைப் பிரித்தாள். 2 மாதம் ஒரே நிலையில் இருந் தாள். அவளின் உடல்... அவள் மூளையின் கட்டளைக்கு ஏற்றுச் செயல்படச் சிரமப்பட... கண்களைச் சுழற்றினாள் தீக்ஷா.

எழுந்து அமர முயற்சி செய்தாள். ஆனால், முடிய வில்லை. வறண்டு போன உதடுகளை ஈரமாக்கியவள், பேச நினைத்தாள்தான்... முடியவில்லை. தன் கைகளின் மேல் இருந்த ஆண் கரத்தினை உணர்ந்தவள்... வேகமாய்ப் பறிக்க முயற்சித்தவளுக்கு, அது முடியவில்லை.

தான் யார் என்பதே தெரியாத போது... அவள் தன் கணவனை அறிவாளோ...?

தான் யார்...? எங்கிருக்கிறோம்...? என்று தன் ஞாபகங்களின் அடுக்கில் தேட முயற்சித்தவளுக்கு... விமானம் தரை இறங்கிய போது வெடித்துச் சிதறிய காட்சி மட்டுமே எஞ்சி இருக்க... அவளுக்கு அது தலையில் பெரும் இடி இடித்த வலியின் வேதனையைத் தர... வேகமாய்த் தன்னைச் சுற்றிப் பின்னப்பட்டிருந்த வயர்களை எல்லாம் பிய்த்து எறிந்தபடி எழ முயற்சி செய்ய.,. விஜய் திடுக்கிட்டு எழுந்தான். எழுந்தவன் கண்களில் சந்தோஷமா... ஏக்கமா,... எதைக் காட்டுவதெனத் தெரியவில்லை.

தன்னவள் கோமா நிலையிலிருந்து வெளி வந்து விட்டாள் என்பதே அவனுக்கு உற்சாகத்தினைத் தர...

"தீக்ஷா..." என்றபடி தன் புறம் பற்றி இழுத்தவனை... உணர்ச்சி இல்லாமல் பார்த்தவள்... அவனைத் தள்ளி விட்டு எழ முயற்சிக்க... விஜய் முதலில் பெரிதாக எடுக்கவில்லை. அவளைத் தன்னோடு அணைத்து அமைதிப்படுத்தும் முயற்சியில் ஈடுபடப் போராடிக் கொண்டிருக்க... இப்போது ஜெயந்தியும் கண் விழிக்க... தன் மகளிடம் சந்தோஷமாய் ஓடி வந்தார்.

முதலில் போராடிய தீக்ஷா... விஜய்யின் அரவணைப் பில் ஒன்றிய பின்னோ... தான் யார் என்றறியாத நிலை யிலும், "இந்தர்..." என்று அலறினாள்.

"என் இந்தர்... என்னை விட்டு ஏன் போனார்...?" என்று விஜய்யிடமே கேள்வி கேட்டவள், தன் கழுத்தில் தொங்கிய தாலியைத் தூக்கி எறிய...

ஜெயந்தி அதிர்ச்சியில்... "என்னடி ஆச்சு உனக்கு...? மாப்பிள்ளை உன் பக்கத்தில்தான் நிற்கிறார்..." என்று பதறிச் சொல்ல,



"நான் அவர் கிட்டேப் போகணும்..." என்று விஜய்யிட மிருந்து விடுபட்டாள். தீக்ஷா எப்போது தாலியைத் தூக்கி எறிந்தாளோ, அப்போதே விஜய் தன்னிலையில் இல்லை.

அவனிடமிருந்து தள்ளிப் போன தீக்ஷா... தன்னவனின் இழப்பைத் தாங்க முடியாத தீக்ஷா... தன்னைத் தானே அழிக்க முயற்சிக்கும் வண்ணம்... அதற்கு ஏதுவாக அங்கிருந்த பொருட்களை எல்லாம் தேட... எதுவும் கைக்குக் கிடைக்காமல் போக... பைத்தியக்காரி போல அங்கிருந்த நீடில்களைப் பிரிக்க ஆரம்பித்தாள், தன் கைகளைக் கீறுவதற்காக. விஜய்க்கு முதலில் அவளின் செயல்கள் புரியாமல் விழித்தவன், இப்போது அவள் செய்யப் போவதை உணர்ந்தவன்...

"தீக்ஷா..." என்று கத்தியபடி அவற்றை எல்லாம் அவளிடமிருந்து பறிக்க... அவளோ வெறித்தனமாய்ப் பிடிவாதம் பிடித்தாள்.

எப்படியோ சமாளித்து அவளைத் தன் அணைப்புக்குள் கொண்டு வந்தவன்... அவளை அணைத்தபடி... அவசர உதவி எண்ணை அழைத்தும் விட்டான்.

விஜய்யின் இதயத் துடிப்பை உணர்ந்த தீக்ஷா... தனக்குள் பேசியவளாய்... இந்தரின் நினைவுகளைத் தனக்குள் கொண்டு வர முயற்சிக்க... அவளால் முடியாமல்... அவளின் கண் முன் விமான விபத்தின் காட்சிகளே பிம்பம் ஆக வர... அவளால் அதை ஏற்க முடியாமல்... போராட ஆரம்பித்தவள்... அது முடியாமல்... அழுத்தம் அதிகம் ஆக... அதிக அழுத்தத்தில், அவள் கண்கள் இரத்தமாய்ச் சிவக்க ஆரம்பிக்க... இப்போது மூக்கில் இருந்து ரத்தம் வழியத் தொடங்கியது. சிறிது நேரத்தில் மயங்கியும் போனாள் தீக்ஷா.

விஜய்க்கு அதிர்ச்சியில் என்ன செய்வதென்றே தெரியவில்லை.. அவள் முற்றிலும் நினைவுடன் எழவில்லை என்பது அவனுக்குப் புரியவே நிமிடங்கள் கடந்தன.

ரத்தம் வழிவதைப் பார்த்த பின்தான் தன் உணர்வுக்கு வந்தான். வேகமாய்த் தன் கைகளை வைத்துத் துடைக்க... நின்ற பாடில்லை. தீக்ஷாவின் நடவடிக்கைகளைப் பார்த்த ஜெயந்தி அலறியபடி, ஒரு புறம் மயங்கிப் போனார்.

அதன் பின் அன்றையப் பணியில் இருந்த செவிலி உடனடியாகத் தீக்ஷாவுக்கு முதலுதவி செய்ய... ஓரளவு தீக்ஷா கட்டுக்குள் கொண்டு வரப்பட்டாள்.

தன்னிலைக்கு வந்திருந்த ஜெயந்தி, ஒருபுறம் புலம்பிக் கொண்டிருந்தார்.

தரையில் கிடந்த மாங்கல்யத்தினைக் கை நடுங்க எடுத்த விஜய்யைப் பார்த்த ஜெயந்தி, மயக்க நிலையில் இருக்கும் தீக்ஷாவின் கழுத்தில் மீண்டும் போட்டு விடச் சொல்ல... விஜய் மறுத்தபடி... அதைத் தன் பாக்கெட்டில் பத்திரப்படுத்தியவன், தீக்ஷாவின் காலில் இருந்த மெட்டியையும் அவளிடமிருந்து தன் கையாலே கழட்ட... ஜெயந்திக்குத் தாயாய் உள்ளம் தூக்கி வாரிப் போட்டது.

ஒருபுறம் ஜெயந்தியின் மனம் சஞ்சலப்பட்டது என்றே சொல்லலாம். 'எங்கு தன் மகள் பைத்தியக்காரி என்று முடிவு செய்து விட்டானோ... இதைச் சாக்காக வைத்துத் தன் மகளைத் தள்ளி விடுவானோ... வசதி படைத்தவர்கள் அவர்கள்... இந்த நிலைமையில் இருக்கும் தன் மகளை வைத்து வாழுவார்களா...? தன் மகளின் வாழ்க்கை இனி என்ன ஆகுமோ...?' என்று பதறியவருக்கு, விஜய்யிடம் பேசத் தைரியம் வராமல், உள்ளுக்குள் மனம் குமைந்தார்.

சில மணித் துளிகளிலேயே மீண்டும் எழுந்த தீக்ஷா... மீண்டும் பிதற்ற... வேறு வழியின்றி மயக்க மருந்தின் உதவியுடன் அடக்கி வைக்கப்பட்டாள்.

அவள் நிலையைப் பார்த்த மொத்தக் குடும்பமும் நரக வேதனையில் துடிக்க.. விஜய், இப்போது அவள் அருகில் இல்லை. சற்றுத் தள்ளியே நின்று கொண்டான். அவனால் அவளின் வேதனையைக் காணவே சகிக்க முடியவில்லை.



மீண்டும் மருத்துவர்களின் தீவிரக் கண்காணிப்புக்கு உள்ளானாள் தீக்ஷா.

அவளுக்கு மன ரீதியாகவும் உடல் ரீதியாகவும் மருத்துவச் சிகிச்சை அளிக்க ஆரம்பிக்க... தீக்ஷா ஓரளவு நார்மலானாள்.

மருத்துவர்களின் சிகிச்சைக்கும் ஓரளவு ஒத்துழைப்புக் கொடுக்க ஆரம்பித்து இருந்தாள்.

சொன்னதெல்லாம் கேட்டுக் கொண்டாளே தவிர... எங்கோ வெறித்த பார்வை... கண்களில் விரக்தி.. என்றிருந்தவளை, மருத்துவக் குழு, முதல் ஒரு வாரம் யாரையும் நெருங்க விடவில்லை. ஜெயந்தி மட்டுமே இப்போது அவள் துணையாய் இருக்க... விஜய்யைக் கூட இப்போது அந்த அறையில் அனுமதிக்கவில்லை.

இதுவரை விஜய் அவள் அருகில் இருந்த நிலை போய்... இப்போது சற்றுத் தள்ளி நிற்கும் நிலை ஏற்பட்டது.

அது மட்டும் இல்லாமல்...

இரண்டு மாதங்களாய் ஏற்றப்பட்ட மருந்தின் தாக்கம் குறைய... ஓரளவு வெளிக்காற்றும் பட... தீக்ஷாவின் மன நிலையிலும் சிறிது சிறிதாகத் தன்னை உணர ஆரம்பித்தாள். உணர ஆரம்பித்தாள் என்பதை விட மருத்துவர்களால் அந்த நிலைக்கு உந்தப்பட... இந்தக் காலகட்டங்களில் அவளின் தேடலில் அவளின் இந்தரைப் பற்றிய நினைவுகள்... அடியில் போக... ஓரளவு தான் யார் என்று தனக்குள்ளே ஆராய ஆரம்பித்தாள்.

நினைவடுக்குகள் முன்னுக்கு வர ஆரம்பிக்க... அவளின் முதல் நிலை நினைவகம் வேலை செய்யத் தொடங்க... தானாகவே பேச ஆரம்பித்தாள். அவளின்

தேவைகளை அவளாகவே கேட்க ஆரம்பித்தாள். அது கூட மிகவும் யோசித்து யோசித்துப் பேச ஆரம்பிக்க... மருத்துவர் களுக்கு அவளின் முன்னேற்றம் மிகவும் திருப்தியை அளிக்க ஆரம்பித்தது.

ஜெயந்தி, தீபன், வைத்தீஸ்வரன்... இவர்களை அறியும்வரை தடுமாற ஆரம்பித்த தீக்ஷா, அதன் பிறகு வெகு வேகமாய்க் குணமடையத் தொடங்கினாள்.

கொஞ்சம் கொஞ்சமாய் அவளுக்கு நிகழ்ச்சிகள் சொல்ல ஆரம்பிக்கப்பட... தீக்ஷாவும் மெது மெதுவாய் உள் வாங்கித் தன் நினைவுகளையும் பகிறத் தொடங்க ஆரம்பித் திருக்க...

தீக்ஷாவின் நினைவுத் திறனை ராதாவை வைத்துத் தான் அடுத்த கட்டத்திற்குக் கொண்டு போக முடியும் என்பதால்...

இதுவும் ஒரு சிகிச்சை என்பதால்... ராதா மற்றும் அவளின் குடும்பத்தினர் அனுமதி அளிக்கப்படவில்லை.

பின் தீக்ஷாவே ஒரு நாள் கேட்டாள்...

"அண்ணி எங்கே...? எனக்கு ஏன் இப்படி ஆச்சு...?" என்று வரிசையாய்க் கேட்க ஆரம்பிக்க...

சந்தோஷத்தில்... தீபன், விஜய்யிடம்தான் வந்தான்.

"விஜய்... இன்னைக்கு அவ ராதாவைக் கேட்டாள்..." என்ற போதே, விரக்தியாய்ச் சிரித்தான்.

அவன் நிலை புரியாமல் இல்லை... தீபனுக்கும்.

"கண்டிப்பா... உங்களை நாளைக்கே தேடுவா பாருங்க..." என்றவன... "இன்னைக்கு ஒரு கவுன்சிலிங் இருக்கு... அதை முடித்த பின்னால் பார்க்கலாம் விஜய்..." என்று தேற்றியவன்...



"இனியாவது நீங்க வீட்டுக்குப் போகலாம்ல விஜய்... அத்தை ரொம்பக் கஷ்டப்படுகிறார்கள்..." என்று விஜய்யின் வீட்டிலிருப்பவர்களின் நிலையை எடுத்துச் சொல்ல...

வாய் திறந்தான் விஜய்...

"அப்போ உங்க தங்கச்சியை என் மனைவியா அனுப்புங்க... அவ இல்லாமல் நான் போக மாட்டேன்..."

என்றவன், அங்கு நிற்காமல் அவனைக் கடந்தும் போக.. தீபனுக்கு அவனையே பார்த்தபடி நிற்பதைத் தவிர வழியே தெரியவில்லை.

ஜெயந்திக்கோ, தன் மகள் ராதாவைக் கேட்டவுடன் வந்த சந்தோஷத்திற்கே அளவே இல்லை எனலாம்.

தீபன் அந்தப் பக்கம் போன வுடன்... வேகமாய்... ஏற்கெனவே வீட்டில் இருந்து எடுத்து வந்திருந்த தன் மகளின் திருமணப் படத்தை எடுத்தவர்... அதை முதலில் காட்டாமல்...

தீபன் - ராதா திருமண ஆல்பத்தைக் காட்ட...

ஆவலாய்ப் பார்த்த தீக்ஷா... உற்சாகமாய்ப். பேச ஆரம்பித்தாள். சில தகவல்கள் அவளாகச் சொல்ல... ஜெயந்தியும் உற்சாகமானார். முற்றிலும் ஞாபகம் வந்திருந் தால், விஜய்யைப் பற்றிக் கேட்காமல் இருப்பாளா என்று தோன்றவில்லை.

இவ்வளவு தூரம் பேசுகிறாள் என்ற உந்துதலில் மட்டுமே ஜெயந்தி இருக்க...

பக்கங்களைத் திருப்பிய தீக்ஷா... ராதா அவர்களின் சகோதரர்களோடு இருந்த புகைப் படத்தினைப் பார்த்தவளின் கண்களில் விஜய் முதலாய்ப் பட.. அதுவரை முகம் மலர்ந்து பார்த்தவள்...

அப்படியே மூடி வைத்தவள்...

சில வினாடிகள் அமைதியாக இருந்தவள்...

"அம்மா... எனக்கு ஆக்ஸிடென்ட்னு சொன்னீங்கல்ல... எப்போ நடந்தது...?" என்றவள்...

"நாம வேற வீட்டுக்குப் போய்ட்டோமா அம்மா...? அவன் கொடுத்த வீட்லே இல்லேல்ல... அதற்குப் பிறகு ஏதாவது பிரச்சினை பண்ணினானாம்மா.. யுகி ஏன்மா என்னைப் பார்க்கவே வரலை..." தொடர்ந்து கேள்வி கேட்க...

ஜெயந்திதான் குழம்பினார்.

"என்னம்மா சொல்றே... அவன்னு யாரைச் சொல்ற...?" நடுக்கமாய்க் கேட்டாள்.

"ப்ச்... எனக்குத்தானே எல்லாம் மறந்து போச்சுன்னு சொன்னீங்க... உங்களுக்குமா...?" எரிச்சலாய்க் கேட்டாள் தீக்ஷா.

"இத்தனை நாள் அண்ணியையும் நான் பார்க்கலை... ஏதாவது பெரிய பிரச்சினையாம்மா...? அண்ணிக்குக் குழந்தை பிறந்திடுச்சாம்மா...?" என்று கேட்க...

தீக்ஷா முன்னுக்குப் பின் முரணாகப் பேச...

ஜெயந்தி விழித்தார்.

"சுனந்தா தெரியலையா தீக்ஷா... அவ பிறந்த நாள் கொண்டாடினது ஞாபகம் இல்லையா உனக்கு...?"

படபடப்பாய்ப் பேச...

தலையைப் பிடித்தாள் தீக்ஷா. அப்படியே தன் தாயின் மடி மீது தலை வைத்துப் படுத்தவள்...

"எனக்கு என்னம்மா ஆச்சு...? இதனாலதான் ராகேஷ் என்னை வேண்டாம்னு சொல்லிட்டுப் போய்ட்டாரா...?" என்று இழுத்தவள்,

"இல்லை... இல்லை... அவன்தான் லெட்டர் எழுதி வெச்சுட்டுப் போய்ட்டான்ல... இந்தர்..." என்று தன் நிலை மறக்க ஆரம்பிக்கும் போதே...



வேகமாய்த் தான் மறைத்து வைத்திருந்த புகைப் படத்தை எடுத்த ஜெயந்தி...

"ஏன்டி இப்படிக் கொல்லுறே... எவனைப் பத்தியெல்லாமோ ஞாபகம் வெச்சுப் பேசுறே... உனக்குத் தாலி கட்டினவனைத் தெரியலையாடி... கட்டின தாலியையும் தொலச்சுட்டு... உன்னையும் தொலச்சுட்டு நிக்கிறியே... இப்படி ஒரு நிலையில பார்க்கத்தான் உன்னைப் பெத்தேனாடி..." என்று அவளின் முன் புகைப் படத்தை ஆவேசமாய்த் தூக்கிப் போட... அதைக் கையில் எடுத்த தீக்ஷா...

சட்டென்று எழுந்து அமர்ந்தவள்... அதையே பார்த்தபடி இருந்தவள்...

"இந்தர்...." என்று நிராசையாய்த் தழுவியவள்...

ஜெயந்தி ஆர்வமாய் அவளையே பார்த்தபடி இருக்க...

அவர், மகளோ... மயங்கிச் சரிந்தாள்.

விஜய் தீக்ஷாவின் மருத்துவரின் முன் அமர்ந்திருந்தான்.

"என்ன டாக்டர் அவளுக்குப் பிரச்சனை... ஓரளவு எல்லா ஞாபகமும் வந்து விட்டது... என்னைக் கூட உணர முடியுது.... இந்தர்னு சொல்றான்னா.... என்னை ஞாபகம் இருக்குதானே டாக்டர்... என்னால முடியலை... ஏதாவது பண்ணுங்க..." கெஞ்சல் பாதி, ஆத்திரம் பாதி எனக் கலந்து கேட்க...

"விஜய்... உங்க மனைவி இந்த அளவுக்கு வந்ததே பெரிய விசயம். இவ்வளவு சீக்கிரம் ரெக்கவர் ஆவாங்கனு நெனச்சுக் கூடப் பார்க்கலை. ஆனால், உங்க நினைவுகள்..." என்று அமைதியானவர்...

"இப்போதைக்கு அவங்க அண்ணியோட அண்ணனா மட்டுமே உங்களை உணர்கிறாங்க... உங்க நினைவுகள்

வராமல் இல்லை... வரும்போதே உங்களோட விபத்துதான் அவங்க கண் முன்னால நிற்குது... அதை அவங்களால ஏத்துக்க முடியலை. அந்த நினைவுகளை மறக்கணும்னா... உங்களோடான நினைவுகளையே அவங்க மறக்க முயற்சிக்கிறாங்க... சரியாச் சொல்லணும்னா... மனதளவில் உங்க இறப்பை ஏத்துக்க முடியலை... உடலளவில் தன்னை அழிச்சுக்க நினைத்தவங்க, இப்போ தன் உணர்வுக்ளை... உங்க நினைவுகளை அழிச்சுக்கிட்டாங்க. நீங்க இல்லவே இல்லைன்ற மனத் துக்கத்தை... இந்த வகையில் போக்கிக்கிறாங்க... யெஸ்... மன ரீதியா அவங்க பாதிக்கப் பட்டிருக்காங்க. அம்னீஷியான்னு சொல்வதைக் காட்டிலும்... மனதளவில் தனக்குள்ளாகவே அடங்கி இருக்காங்க. அதையும் மீறிச் சில விஷயங்கள் உங்களை ஞாபகப்படுத்தும் போது... ஐ மீன்... உங்க திருமணப் புகைப்படம் பார்த்து இப்போ அதிர்ச்சி ஆனாங்கல்ல... அதுபோல... அந்த நிலை வரும் போது... அவங்களால் மன அழுத்தத்தைக் கட்டுப்படுத்த முடியாமல் போராட ஆரம்பிக்கும் போது வருவதுதான் இந்த மூக்கில் இருந்து இரத்தம்..." என்று நிறுத்தியவர்...

"இது கூடத் தற்கொலைதான். உடல் ரீதியா இல்லாமல் மன ரீதியா... தன்னை அழிச்சுக்க ட்ரை பண்றாங்க. அவங்க இப்போ இருக்கிற நிலைமையில் இது கூடப் பாதுகாப்பான நிலைதான் விஜய். இல்லை, உடல் ரீதியா தன்னை அழிச்சுக்குவாங்க. ஆனால், இதையும் நீடிக்க விடக்கூடாது. மனச் சிதைவுக்கு முற்றிலும் ஆளாக நேரிடலாம். பார்க்கலாம்... கண்டிப்பா மாத்திடலாம் விஜய். கொஞ்சம் பொறுமை வேண்டும்..." என்றவரிடம்,

"இதுக்கு என்னதான் தீர்வு டாக்டர்... நான் என்ன பண்ண வேண்டும்...?" பாரம் தாங்காமல் கேட்டான்.

ஆறுதலாகப் புன்னகைத்தவர்...



"இப்போ கூட நீங்கதான் அவர் கணவர்னு சொன்னா உங்க கூட வாழுவாங்கதான். ஆனால், எதெல்லாம் உங்களை ஞாபகப்படுத்துற விஷயங்கள்னு தெரியல. கொஞ்ச நாள் நீங்க அவங்களை விட்டுத் தள்ளி இருக்கிறது ரொம்ப நல்லதுன்னு நினைக்கிறேன். இதற்குத் தீர்வு என்ன வென்றால்... நடந்ததை ஏத்துக்கிற மனப்பக்குவம் அவங்களுக்கு வர வேண்டும். நீங்க இறந்து போய்ட் டீங்கன்னு நம்புற அவங்க... அதை உணர்ந்து, அவங்க வாழ்க்கையை வாழ ஆரம்பிக்க வேண்டும். அது என்று நடக்குதோ... அன்றைக்கு..." என்று முடித்தார்.

தீக்ஷாவைத் தொலைவில் இருந்தே... அவள் அறியா வண்ணம் பார்க்கும் வழக்கத்திற்குத் தன்னைப் பழக்கப் படுத்திக் கொண்டான் விஜய்.

முதலில் போல் இல்லாமல் தீக்ஷா கலகலப்பாகப் பேச ஆரம்பித்து இருந்தாலும்... அவளோடு யாராவது இருக்கும் போதே அவள் அப்படி இருந்தாள். தனிமையில் எதையோ இழந்தது போல், தேடுவதைப் போல் இருந்த மன உணர்வை அவளால் தடுக்க முடியாமல் போக... தனக்குச் சிகிச்சை அளித்த மருத்துவரிடம் கூட, அது ஏன் என்று தீக்ஷா கேட்டாள்.

அந்த மாதிரியான சமயங்களில்... உட்கொள்ளும் மாத்திரைகளையும் அவர் கொடுக்க... நாட்களை எப்படியோ தள்ளிக் கொண்டிருந்தாள் தீக்ஷா.

இதற்கிடையே தன்னை வந்து அடிக்கடி பார்த்துப் போகும் யுகி, சுரேந்தர் மற்றும் ராதாவின் பெற்றோர் அனைவரிடமும் மனதில் எதுவும் இல்லாமால் கலகலப்பா கவே பேசினாள். விஜய்யை அவள் தேடவும் இல்லை.. அவனைப் பற்றிக் கேட்கவும் இல்லை.

யுகியிடம் பேசும் போது கூட... மறந்தும் விஜய்யைப் பற்றி எந்த விஷயமும் வராமல் பார்த்துக் கொண்டாள்.

சுனந்தாவை அடிக்கடி வர வைத்துத் தன்னோடு வைத்துக் கொண்ட தீக்ஷாவுக்கு... தனக்கு மிகவும் பிரியமான தன் அண்ணன் மகளை மறந்து போய் விட்டோமே என்றுதான் அவ்வப்போது தன் தாயிடம் சொல்லி மனம் கலங்குவாள்.

அன்றும் சுனந்தாவை மடியில் வைத்துக் கொஞ்சிக் கொண்டிருந்தவள்... யுகி மற்றும் ராதாவோடு பேசிக் கொண்டிருந்தாள். அப்போதுதான் அறையினுள் நுழைந்த முருகேசனைக் கவனித்தாள்.

முருகேசன், காத்தமுத்து இருவரையும் பார்த்த தீக்ஷாவுக்கு, அவர்களைப் பார்த்த ஞாபகமே இல்லை என்பதை உறுதி செய்த விஜய்... இருவரையும் அவள் முன் நடமாட விட்டான்.

ஆனால், சக்தியின் பெற்றோரிடம் மட்டும் மறுத்து விட்டான். அவர்கள் யாரென்று சொல்லி... அதைக் கேட்கும் நிலைக்கு இன்னும் அவள் பக்குவப்படவில்லை. அது மட்டும் இல்லாமல், ஏதாவது தீக்ஷா பேசி விட்டால்... அந்தச் சூழ்நிலையில் அதுவும் கஷ்டம் என்று சக்தியின் பெற்றோரை அப்போதைக்கு அனுமதிக்க மறுத்து விட்டான்.

தீக்ஷாவின் அருகில் இல்லை என்றாலும்... அவளைச் சுற்றி வேறு யாரும்... தீக்ஷாவைப் பாதிக்கும் எதையும் நினைவுபடுத்தா வண்ணம் பார்த்துக் கொண்டான் விஜய்.

முருகேசன் உணவு கொண்டு வரும் போதெல்லாம் அவனைப் பற்றிக் கேட்க நினைப்பாள். விட்டு விடுவாள். அன்றோ.. ஜெயந்தியிடம்,

"யாரும்மா இது...? புதுசா இருக்காங்க..." என்று சந்தேகத்துடன் இழுக்க...

ஜெயந்தி பதில் சொல்லும் முன்னே முருகேசனே பேசினான்.



"நான் உங்க வீட்டு வாட்ச்மேன்... தங்கச்சி..." என்று வேகமாய்ச் சொல்ல,

"புது வாட்ச்மேனா...?" என்று இழுத்தவள்...

சந்தோசமாய்...

"அம்மா.. நாம வேற வீட்டுக்குப் போய்ட்டோமா...?" என்று கட்டி அணைத்துத் துள்ள...

ராதாவும் யுகியும் ஒருவரை மாற்றி ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

ஜெயந்தி தயங்கியபடி....

"இல்லேடா... அங்கேயேதான் இருக்கோம்..." என்று எச்சில் விழுங்கிப் பேச,

"ஏம்மா... உங்களுக்கு எவ்வளவோ பட்டும் திருந்தலையா...? இல்லை, இந்தச் சுக போக வாழ்க்கையை விட்டுப் போக மனசில்லையா...? அவன் அவ்வளவு அவமானப் படுத்தியும்..." என்று ஆரம்பித்தவள்...

யுகி மற்றும் ராதா இருப்பதை உணர்ந்தவள்... தன்னை அடக்கிக் கொண்டவள்...

எரிச்சலுடன்...

"ஏதாவது மாத்திரை இருக்கா... போட்டு நிம்மதியா கண்ண மூடறேன். கண்டதையெல்லாம் நினைக்கிறதுக்கு, தூங்குவது எவ்வளவோ பெட்டர். வைஜெயந்தி... உன் புள்ளை வந்தா அவனுக்கு இருக்கு கச்சேரி..." என்றபோதே தீபனும் வர....

"என்ன தீக்ஷா.... என்ன சத்தம் போட்டுட்டு இருக்க?" என்று கேட்டபடியே வேறு வர...

"ஒண்ணுமில்லை... பாசமலர் அண்ணனை என் கண்ணு தேடுச்சு. அதுதான்..." என்று நொடித்தவள், வேறு எதுவும் பேசவில்லை.

பேசினால் விருமாண்டியைப் பற்றி வார்த்தைகளை விடுவாள். அது கண்டிப்பாக யுகியையும் தன் அண்ணியையும் பாதிக்கும் என்று அமைதி ஆனாள்.

யுகியும் ராதாவும் முகம் கோணுவதை அவளால் தாங்க முடியாது. அதனால் அப்போதைய விவாதத்தை முடித்தவளுக்கு... வீட்டிற்குப் போவதே பிடிக்கவில்லை என்றுதான் சொல்ல வேண்டும். ஏன் தன் வீட்டினர் வீட்டை மாற்றவில்லை என்ற புது ஆராய்ச்சியில் இறங்க... தீபன் அதற்கெல்லாம் விடாமல்...

"இன்னைக்கு நீ உயிரோட இருக்கக் காரணமே ராதாவோட அண்ணன்தான். தப்பு செய்தார்தான்.. அதற்கு வருந்தி மன்னிப்பும் கேட்டுட்டாரும்மா!" என்று விஜய்யை அவள் மனதில் நல்லவிதமாய்ப் பதிய வைக்க முயன்றான் தீபன்.

அதையெல்லாம் விட்டுவிட்டாள் தீக்ஷா...

"ஏன்... என்னை ஹாஸ்பிட்டல்ல வெச்சுப் பார்க்கக் கூட உனக்கு வசதி இல்லையா...? தப்பு செஞ்சதுனாலதான என்னைப் பார்க்கக் கூட வர முடியலையா...? தப்பு பண்ணிட்டோம்னு ஃபீலெல்லாம் பண்றாரா அந்த விருமாண்டி...?" என்றவள்,

"யுகி, நீ கௌம்பு... அண்ணி! நீங்களும் கிளம்புங்க..." என்று சுனந்தாவைக் கொடுத்துப் போகச் சொல்ல...

தீபன் சுதாரித்து, "நானும் போக வேண்டும் தீக்ஷா... நாளைக்கு உனக்கு டிஸ்சார்ஜ்... அதனாலதான்டா..." என்றபடி வெளியேறியவனைக் கசந்த பார்வையுடன் எதிர் கொண்டவள்... ஜெயந்தியைப் பார்த்து முறைத்து விட்டுப் பேசாமல் படுக்க... மாத்திரையை நீட்டினார் அவள் அன்னை.

அவள் இருந்த ஆத்திரத்தில், மாத்திரையை வாங்கித் தூர எறிந்தவள்...



"இதை மட்டும்தான் தூக்கி எறிய முடியும் என்னால... உங்களை எல்லாம் தூக்கி எறிய மனசு வரலை... அதுதான் இதையாவது தூக்கி எறிஞ்சு என் மனசைத் தேத்திக்கிறேன்... மகன் சந்தோசமாக வாழ்ந்தா போதும்னு நினைச்சுட்டீங்க... அப்படித்தானேம்மா...?" என்று பொருமியவள்...

"விஜய்..." என்று ஆரம்பித்து, ஜெயந்தி ஏதோ பேச ஆரம்பிக்க... உடனே காதை மூடிய தீக்ஷா,

"தயவு செஞ்சு அவனைப் பத்திப் பேசி என்னை நோகடிக்காதீங்கம்மா... என்னை விட்ருங்க... ப்ளீஸ்..."

என்று கண்ணை மூடியவளை... வேதனையுடன் பார்த்தார் ஜெயந்தி.

அடுத்த நாள் காலை தீக்ஷாவுக்கு அனைத்து விதமான பரிசோதனைகளும் எடுக்கப்பட... தீக்ஷாவும் அதில் பிஸி ஆகி விட்டாள்.

எல்லாம் முடிந்து, தலைமை மருத்துவரின் அறைக்குள் இருந்தாள் தீக்ஷா. அங்கு உள்ளறையில் அவள் இருக்க... விஜய் அதை அறியாமல் அவரின் அறைக்குச் செல்ல.. மருத்துவர், தீக்ஷா இருக்கும் விபரம் சொல்லும் முன்னே தீக்ஷாவும் வெளியே வர...

விஜய்க்கு அவளைப் பார்த்து என்ன விதமான உணர்ச்சியைக் காண்பிப்பது என்று தெரியவில்லை. சிரித்தும் சிரிக்காமலும் அவளைப் பார்க்க...

அந்த மருத்துவர்தான் நிலைமையைச் சமாளிக்கும் பொருட்டு...

"உட்காரும்மா.. உன்னோட ரிப்போர்ட்ஸ்தான்... விஜய் வாங்க வந்திருக்கிறார்..." என்றபடி நர்சிடம் அவளை அங்கிருந்து அழைத்துப் போகச் சொல்ல... தீக்ஷா அங்கு எதுவும் சொல்லாமல் வெளியேறினாள்.

ஆனால், வெளியிலேயே விஜய் வரும் வரை காத்திருக்க ஆரம்பித்தாள். 'இவன் எதுக்கு என் ரிப்போர்ட்டை வாங்க வந்திருக்கான்... வரட்டும்...' என்ற ஆத்திரத்தோடு...

விஜய், மருத்துவரின் ஆலோசனை எல்லாம் கேட்டபடி... அடுத்து ஒரு அரை மணி நேரத்தில் வெளியே வர... தீக்ஷா அங்கு நின்று கொண்டிருப்பதைப் பார்த்தவன்... அவளை விட்டுப் போக மனம் இல்லாமல்...

அவளின் அருகே வந்து... "நீ ஏன் இங்கே வெயிட் பண்றே...? நான் பில் கட்டிட்டு வருகிறேன்... நீ ரூமுக்குப் போ...!" என்று அவளைப் பார்த்தும் பார்க்காமலும் பேசியவன்...

ஜெயந்திக்குப் போன் செய்து, "அத்தை... தீக்ஷாவைத் தனியா விட்டுட்டு என்ன பண்றீங்க...?" என்று ஜெயந்தியைச் சாட...

அதைப் பார்த்த தீக்ஷா, இதழைச் சுழித்தாள்.

விஜய் போனை வைத்த வுடன் கை நீட்டினாள்... ரிப்போர்ட்டைத் தருமாறு.

விஜய், முதலில் அவள் எதற்குக் கை நீட்டுகிறாள் என்று தெரியாமல் விழித்தவன்... புருவம் சுருக்க...

"என் ரிப்போர்ட்..." என்று சுட்டிக் காட்ட,

"அது எதுக்கு...? நான் கொண்டு வருகிறேன்... நீ போ தீக்ஷா," என்றவனிடம்...

"ஹலோ... என் ரிப்போர்ட் அது... கொடுங்க," என்று பிடிவாதமாய் நிற்க...

"தீக்ஷா... பிடிவாதம் பிடிக்காதே... போ..." என, அவளோ அதை எட்டிப் பறிக்க முயற்சித்தாள்.

ஃபைலில் இருந்த டாக்குமெண்ட்ஸெல்லாம் மிஸஸ் தீக்ஷா விஜயேந்தர் என்று கொடுக்கப்பட்டிருந்தது. அதனால் விஜய்க்கு முகம் வெளிறியது.



"தீக்ஷா..." என்று பல்லைக் கடித்தான் விஜய். அதில் உரிமையும் கோபமும் சரி விகிதத்தில் இருக்க...

"என் பேரைச் சொல்லாதேடா..." என்றவளின் உக்கிரமான வார்த்தையில்... துடித்து நிமிர்ந்தான்.

"என்ன பார்க்கிறே... என் அண்ணியோட அண்ணன்ற மரியாதை எல்லாம் எப்பவோ போய்டுச்சு... தேவையில்லாமல் என் விஷயத்தில் தலையிட்டே..." விரல் நீட்டி எச்சரிக்க...

விஜய்க்குத் தலை சுற்றியது. ஏதோ சரித்திரம் மீண்டும் திரும்புவது போல...

இருந்தும் தன்னைச் சமாளித்தவன்...

வேகமாய் ரிப்போர்ட்டைத் தன்புறம் இழுத்தபடி...

"உன் பேரைச் சொல்லக் கூடாது... அவ்ளோதானே! சரி, சொல்லவில்லை..." என்று முன்னே போக...

வேகமாய் அவன் முன் நின்றாள்.

"ரிப்போர்ட்டைக் குடுடா!" பத்ரகாளியாய்த் தீக்ஷா நிற்க...

விஜய், தனக்குள் மூச்சை இழுத்துவிட்டவன்...

"ஏற்கெனவே என் கூட மோதி என்ன ஆனதுன்னு ஞாபகம் இருக்குதானே..." என்றவன்... இகழ்ச்சியாக...

"அது மட்டும்தானே என்னைப் பற்றி உனக்கு ஞாபகம் இருக்கு... வழியை விடு..." என்று சொல்லிவிட்டு... அவள் திகைப்போடு இருக்கும் போதே... அதைப் பயன்படுத்தி... வேகமாய் அவளை விட்டு நகர்ந்தான்.

விஜய்யும் அந்த நிகழ்வை இழுக்க விரும்பவில்லை தான். ரிப்போர்ட்ஸை அவள் கைப்பற்றாமலும்... அந்த லாபியில் இருவரும் வாக்குவாதம் நடத்தும் நிலை பிடிக்காமலும்... வேறு வழி இன்றிச் சொல்லி விட்டு அவளை விட்டு அகன்றவன்... தீபனிடம் சொல்லி... அவளை அறைக் குள் கூட்டிச் செல்லச் சொல்லியும் சென்றான்.

ஒருபுறம் தீக்ஷா... தன் வீடு திரும்பத் தயாராகிக் கொண்டிருக்க... விஜய்யிடம் கலைச்செல்வியும் ராகவேந்தரும் வந்தனர்.

"விஜய், நீயும் எங்க கூட இன்னைக்கு வருகிறாய் தானே...?" கலைச் செல்வி ஆவலாய்க் கேட்க...

மறுப்பாய்த் தலை அசைத்தான் விஜய்.

இதுவரை பொறுமையாய் இருந்த ராகவேந்தர் பொங்கி விட்டார்.

"என்னடா... என்ன... எதுவும் கேட்கக் கூடாது... நம்ம பையனுக்கு எல்லாம் தெரியும்னு ஒதுங்கி இருந்தா... இஷ்டத்துக்கு ஆட்டம் போடுற... இப்போ நீ வீட்டுக்கு வரலை... தீக்ஷா கிட்டே எல்லா விஷயத்தையும் சொல்லி, உன் கூட வர வெச்சுடுவேன்... உனக்கு உன் பொண்டாட்டி, கூட வரணும்... அவ்வளவுதானே...!" என்று சத்தம் போட ஆரம்பிக்க...

"அப்பா... நீங்க கூட என்னைப் படுத்தாதீங்க..." என்று கெஞ்ச ஆரம்பிக்க... அவன் பெற்றோரோ விடாப்பிடியாய் நிற்க... வேறு வழியின்றி விஜய்யும் தன் வீட்டிற்குச் செல்லத் தீர்மானித்தான்.

கிளம்பும் முன்னர்... விஜய், ஜெயந்தியிடமும் வைத்தீஸ்வரனிடமும் வந்தவன்...

"அத்தை... உங்க பொண்ணு தெரிஞ்சோ தெரியாமலோ தாலியைக் கழட்டி வீசிட்டா... அது கூட நல்லதுக்குத்தான். இதை அவ கழுத்திலே போட்டு விட்ருங்க..." என்று அவள் கழுத்தில் அணிவித்த அந்தச் செயினை நீட்ட... அதில் VD என்று தங்கத்தில் பொறிக்கப்பட்ட டாலருடன் இருந்தது அந்தச் சங்கிலி.

வைத்தீஸ்வரன்... வேகமாய்... "அவ தூங்கும் போது நீங்களே போட்டு விடுங்க தம்பி..." என்று சொல்ல...



"ப்ச்... அப்படிப் போட்டா மட்டும் என்ன ஆகப் போகுது? இதோட மதிப்பு உங்க பொண்ணா இப்போ இருக்கிற அவளுக்குத் தெரியாது. ஆனால், என் மனைவியா அவளுக்குத் தெரியும்..." என்றவன்,

"சரி, லேட்டாகிருச்சு... கிளம்பணும்..." என்று சொல்லிக் கொண்டு கிளம்ப,

"தம்பி... என்ன சொல்லி இதை அவ கிட்டே கொடுப்பேன்..." என்று ஜெயந்தி கேள்வியாய்க் கேட்க...

"இந்தச் செயின்... என் மனத் திருப்திக்கோ... இல்லை, உங்க பொண்ணு மேலே எனக்கு இருக்கிற உரிமையிலோ நான் போடலை அத்தை... கொஞ்ச நாளா... உங்களுக்கு ஒரு சஞ்சலம் வந்திருக்கு... அது உங்க கண்ணுல இருக்கு... அதைப் போக்கத்தான்... உங்க நம்பிக்கைக்காகத்தான்... இதைக் கொடுக்கிறேன். இதை அவளைப் போட வைக்கிறது உங்க பாடு... இப்படி எல்லாம் போட்டுத்தான் அவ என் மனைவின்னு நான் ஞாபகப்படுத்திக்கிற அளவுக்கு நான் அவளை விட்டுத் தள்ளிப் போகலை... என்னை விட்டும் அவளும் தள்ளிப் போகல..."

சொல்லிவிட்டு விஜய் சென்று விட்டான்.

ஜெயந்தி எப்படியோ பாடுபட்டு... அந்தச் செயினையும் போட்டு விட்டார். அம்மன் சன்னிதியில் வைத்துப் பூஜை பண்ணிக் கொடுத்தது என்று பொய் சொல்லி... தீக்ஷாவின் கழுத்தில் போட்டு விட்ட பின்னர்தான் ஜெயந்தி நிம்மதி ஆனார்.

ஒரு வழியாக 3 மாத மருத்துவ மனை வாசம் முடித்தவர்கள்... அதை விட்டு வீடு திரும்பினர்.

தீக்ஷா காரில் தன் பெற்றோரோடு அமர... தீக்ஷா அமர்ந்த பின் அவள் அமர்ந்த காரில் ஏறிய விஜய்... காத்த முத்துவை அழைத்துக் காரினை ஓட்டச் சொல்ல...

தீக்ஷா பார்வையால் எரித்தாள் - விஜய்யை அல்ல... தன் பெற்றோரை.

இருந்தும் காரை விட்டு இறங்கும் முட்டாள் தனம் எல்லாம் செய்யாமல், அமைதியாக வந்தவள்...

வழக்கம் போலத் தன் வாய்த் துடுக்கில்... "நீங்களும் புதுசா...? உங்க பேர் என்ன...?" என்று காத்தமுத்துவைக் கேட்க...

காத்தமுத்து, விஜய்யைப் பார்க்க... விஜய், அவனுக்கு மட்டும் கேட்கும்படி... "சீக்கிரம் சொல்லுங்க. இல்லை, இன்னொரு பேர் வெச்சிறப் போறா... அது அவளுக்குத் தண்ணி பட்ட பாடு," என்று புன்னகையுடன் சொல்ல...

"காத்தமுத்து," என்று வேகமாய்த் தன் பெயர் சொல்ல...

"ஓ... என்று இழுத்தவள், காத்தமுத்துவின் தோற றத்தை ஆராய்ந்தவள்...

"உங்களைப் பார்த்தால் டிரைவர் மாதிரியே தெரிய லையே...!" என்றவள், சீட்டை விட்டுச் சற்று முன்னோக்கி வந்து...

"டு இன் ஒன் பர்ப்பஸா... டிரைவர்... அப்புறம்.. உங்க பாஸ் ஏதாவது ஆளைக் கடத்தணும்னா அதற்கும் வசதியா ஆள் பார்த்திருக்கார் போல..." விஜய்க்கும் கேட்டதுதான். பதில் பேசவில்லை.

தன் மனைவியை அவளின் பிறந்த வீட்டில் இறக்கி விட்டவன்.. வீட்டிற்குள் கூட நுழையாமல்... வந்த துக்கத்தைத் தனக்குள் அடக்கியவன்... அங்கிருந்து வெளியேறினான்.

வெகு நாட்களுக்குப் பிறகு தன் வீட்டிற்கு வந்தவன்... தன் அறைக்குள் நுழைந்தவனுக்கு... அதற்கு மேல் தன் துக்கத்தை அடக்க முடியவில்லை.



தீக்ஷாவின் பிரிவு, அந்த அறைக்குள் வந்த போதுதான் விஸ்வரூபமாய்த் தாக்க... அவளின் புடவையைத் தனது சட்டையோடு சேர்த்து வைத்தவன்... தன் மனைவியாகத் தீக்ஷா தன்னோடு சேரும் நாளுக்காகத் தவிக்க ஆரம்பித் தான், வேதனையோடு.

## 47

**கா**ரை விட்டு இறங்கிய தீக்ஷாவுக்கு, அதுவரை இருந்த உற்சாகமெல்லாம் போனது போல் இருந்தது.

விஜய், வீட்டிற்குள் வராமல் போனபோது... தன் தந்தையும், அண்ணனும் அவனிடம் வீட்டிற்குள் வரச் சொல்லிக் கெஞ்சிய காட்சியும்... அவன், அதைக் கொஞ்சம் கூட லட்சியம் செய்யாமல், திமிராய்ச் சென்றதும், அவளுக்கு இன்னும் கோபத்தைத் தர...

அவளின் நினைவுகளில் சட்டென்று வந்தது... விஜய், அவளை அவன் வீட்டை விட்டு வெளியே அனுப்பிய நினைவுகள்தான்.

இத்தனை மாதங்கள் கடந்தும், வீட்டை இவர்கள் மாற்ற வில்லை என்றால், என்ன நடந்திருக்கும் என்றெல்லாம் யோசித்தவள்... தன் ஸ்கூட்டியாகிய பிங்கி நிறுத்தப்பட்டிருக்கும் இடத்தை வேதனையோடு பார்த்தாள். அதைத்தான் விற்று விட்டார்களே என்ற பெருமூச்சு விட்டவளை... அடுத்து யோசிக்க விடாமல், ராதா ஆரத்தி எடுத்து உள்ளே அழைத்துப் போக...

வழக்கமான அவளின் குறும்புத்தனத்தோடு, யுகியிடம் மட்டும் மெதுவாய்ச் சொன்னாள்...

"ஆரத்தி எனக்கு எடுத்ததுக்குப் பதிலாக உங்க விருமாண்டிக்கு எடுத்திருக்கலாம்... வெத்தலை பாக்கு, ஆரத்தி எடுத்துக் கூப்பிட்டால்தான் வருவாராமா...?

ரொம்பத்தான் பிகு பண்ணிட்டுப் போறாரு..." என்று நக்கல் பாதி கோபம் பாதியாய்க் கேட்க...

யுகி பதில் பேசவில்லை. மௌனமாகவே இருக்க,

"என்னடா... உம்முன்னு இருக்கே..." என்றவள், அதற்கு மேல் எதுவும் பேசாமல் உள்ளே போனவளை ஒவ்வொருவரும் பாச மழையில் மூழ்கடிக்க... அதில் நனைந்தவளுக்கு... ஏனோ அதில் முற்றிலும் திளைக்க முடியவில்லை. அவள் மனதில் இருந்த வெறுமையை அங்கிருந்த யாராலும் நீக்க முடியவில்லை.

அரைமணி நேரத்திலேயே கலைச்செல்வி தங்கள் வீட்டுக்குக் கிளம்ப... ஜெயந்தி உடனே,

"வந்த வுடனே கௌம்புறீங்க..." என்று கேட்க,

"இல்லை... விஜய் வீட்டுக்குப் போயிருக்கான். அதுனாலேதான்..." என்று சொல்லிக் கிளம்பிய கலைச் செல்வி...

தீக்ஷாவிடம்...

"சீக்கிரம் நம்ம வீட்டுக்கு வாம்மா!" என்று கலங்கிய கண்களாய் மறைமுகமாய்ச் சொல்ல...

தீக்ஷா முகத்தில் அடித்தாற் போல் பதில் சொல்லவில்லை என்றாலும்... அந்தக் கேள்வியையே புறக்கணித்தவள் போல்... வேறு திசையில் பார்வையை மாற்றிக் கொண்டாள்.

கலைச்செல்விக்கோ, தன் மூத்த மகன் இன்றுதான் வீட்டிற்கு வந்திருக்கிறான்... அவனைக் கவனிக்க வேண்டும் என்ற ஆவலில், அங்கிருந்து வேகமாய்க் கிளம்பி, வீட்டிற்குள் வந்து, தன் மகனைத் தேடி, அவன் அறைக்குப் போக... வேரிழந்த மரமாகத் தன் படுக்கையில் படுத்திருந்தான்.



கண் மூடிப் படுத்திருந்தான் விஜய். அவன் படுத்திருந்த கோலமே... அவன் உறங்கவில்லை என்பதைச் சொல்ல...

"விஜய்..." என்று ஆறுதலாய் அணைத்தபடி அவனருகில் அமர...

"அம்மா... நான் உங்க மடியிலே படுத்துக்கிறேன்மா... என் கிட்டே எதையும் கேட்காதீங்க. எனக்கு அவ ஞாபகம் இல்லாமல் தூங்கணும் போல இருக்கு. ஆனால், முடியலம்மா... ஹாஸ்பிட்டல்ல இருந்தவரை கூட இப்படி வெறுமையா இல்லம்மா... ஆனா, இன்னைக்கு இந்த ரூமுக்குத் தனியா வரும்போது என்னால முடியலம்மா... அவ இந்த அளவுக்கு என்னை ஆக்கிரமிச்சுருக்கான்னு இப்போதான் தெரியுது..." என்றவன், மடியில் படுத்தபடியே புகைப் படத்தில் இருந்த தீக்ஷாவைப் பார்த்தபடி பேச ஆரம்பித்தவன்...

"27 வயசு வரை அவ யாருன்னு கூடத் தெரியாது... ராதாவால அவ நம்ம குடும்பத்துக்குள்ள வந்தப்போ கூட... பெருசா அவ என்னைப் பாதிக்கலை. ஆனால், இப்போ அவ இல்லாமல் இருக்க முடியலம்மா. என்னை எப்படிக் கண்ட்ரோல் பண்றதுன்னே தெரியலம்மா. என்னை விரோதி மாதிரியே பார்க்கிறாம்மா. அவ பேர் நான் சொல்லக் கூடாதாம். ரொம்பப் பேசுறாம்மா..." என்றவனை,

"தூங்குப்பா!" என்று சாந்தப்படுத்த, அவனோ புலம்பலை நிறுத்தவில்லை.

"ஆனாலும் எனக்குக் கோபமே வரலம்மா... அவ பேச்சைக் கேட்போமான்னு ஏங்கிட்டு இருந்த எனக்குக் கோபமே வரலம்மா... அவ பேசுறதைக் கேட்டுட்டே இருக்கணும் போல இருக்கு. என்ன பேசினாலும் ரசிக்கணும் போல இருக்கு. ஆனால், இப்போ என்னால அவ பக்கம் கூட நெருங்க முடியலை. வாயை மூடு... வாயை மூடுன்னு

சொல்வேன்... இன்னைக்கு என் நிலைமையைப் பார்த்தீங்களாம்மா...? எதற்குமே என்னை ஏங்க விட்டதில்லை அவ... இப்போ அவள் அறியாமலே என்னைப் படுத்துறா. அவ தெரிஞ்சே செய்யலைதான்... ஆனா என்னாலதான் தாங்க முடியலை..." என்று புலம்பியபடியே உறங்கியும் போனான் விஜய்.

கலைச்செல்விக்கோ,... தன் மகன் கடந்த சில மாதங்களாய்ப் பட்ட துக்கமெல்லாம் கண் முன் வர... தன் கம்பீரமெல்லாம் கலைந்த கோலமாய்த் தன் மடியில் உறங்கிக் கொண்டிருந்தவனைத் தன் மடியை விட்டு இறக்காமல்... பார்த்தபடியே இருந்தார்.

சிறு வயதில் இருந்து... பெரிய மனிதத் தனமாய் இருப்பவன். அது அவன் இயல்பிலேயே இருக்கும். யாராலும் சுலபமாக அவனை நெருங்க முடியாது. பார்வையிலேயே தள்ளி நிறுத்துவான். இப்படி ஆகி விட்டானே என்று நினைக்கும் போதே, தன் மருமகளின் மீது ஏனோ... கோபம் தான் வந்தது. அவள் சந்தோஷமாய்ச் சிரித்தபடி அங்கு இருக்கும்போது... இவன் இங்கு அவள் நினைவால் அல்லாடுகிறானே... என்றெல்லாம் கலங்கினார் அவன் அன்னை.

அடுத்த ஒரு நாள் முழுவதும் விஜய் தீக்ஷாவைப் பார்க்காமல் வீட்டிலேயே அடைந்து கிடந்தான்தான். அதுவே அவனால் முடியவில்லை. 'என்ன செய்கிறாளோ... அவளை எப்படிப் பார்த்துக் கொள்கிறார்களோ.. தனியே விட்டால் என்னவெல்லாம் யோசிப்பாளோ...?' என்றுதான் அவன் மனம், அவன் மனைவியைச் சுற்றிச் சுற்றி வந்ததே தவிர.... அவனின் வேலை... அவனின் உடல் நலம்... இதெல்லாம் அவன் கவனத்தில் இம்மியளவும் இல்லை. தீக்ஷாவைத் தவிர... அத்தனை பேரிடமும் விசாரித்துக் கொண்டே இருந்தான். மற்றவர்களைத் தொந்தரவு செய்கிறோம் என்று



உணர்ந்த போதும், அவனால் முடியவில்லை. அவனின் உடல் மட்டும் அவன் வீட்டில் இருக்க... அவன் ஆவியெல்லாம் அவனின் தீக்ஷாவிடம் இருந்தது. ஒரு கட்டத்தில் அவனால் முடியாமல், நேராய் அவள் வீட்டிற்கே செல்ல... அவளோ இவன் வந்திருக்கிறான் என்று தெரிந்ததால்... அவள் அறையை விட்டே வரவில்லை.

ஒரு வாரம் இப்படியே போக... சுரேந்தர் வேறு விஜய்யிடம் நச்சரிக்க ஆரம்பித்தான்.

"அண்ணா... நீங்க கம்பெனிக்குக் கூட வர வேண்டாம்... ஜஸ்ட் என்னை கைட் பண்ணுங்க, அது போதும். மெண்ட்டல் டார்ச்சரா இருக்கு. நான் சக்தி விஷயத்தில முடிவெடுத்தது தப்புதான். அதை அவளே எனக்கு உணர்த்திட்டா. உண்மையைச் சொன்னால்... என்னால முடியலண்ணா... ப்ளீஸ்ணா..." என்று பலமுறை கெஞ்ச... விஜய்க்கும் ஒரு மாறுதல் தேவைப்பட... சுரேந்தருக்குத் தலை அசைத்தான். ஆனால், உடனே முடியாதென்றும்... சில நாட்கள் தனக்கு அவகாசம் வேண்டுமென்றும் அவனிடம் கேட்டுக் கொள்ள, அதன் பின் சுரேந்தரும் தன் அண்ணனைத் தொல்லை செய்யவில்லை.

அந்த ஒரு வாரத்திலேயே தீக்ஷாவின் உடல் நிலை குறித்து... அவள் வீட்டு உறவினர்கள் விசாரிக்க ஆரம்பித்தனர். தீக்ஷா மருத்துவ மனையில் இருந்த வரை... அவர்களின் விசாரிப்புகள் ஆறுதலாக இருந்தன, தீக்ஷா குடும்பத்தாருக்கு.

ஆனால், தீக்ஷா பிறந்த வீட்டிற்கே வர.... அவர்களின் விசாரிப்புகள் எல்லாம் வேறு மாதிரி இருந்தன.

"ஏன் அவங்க இங்கே விட்டுப் போனாங்க...?"

"நம்ம தீக்ஷாவுக்கு எல்லாம் மறந்து போச்சா...? இப்படி இருப்பாளா இந்தப் பொண்ணு...? பணக்காரச் சம்பந்தம்

கெடச்சும் இப்படி ஆகிவிட்டதே!" என்றெல்லாம் வித விதமான விசாரிப்புகள் வர...

இதற்கெல்லாம் முத்தாய்ப்பாக... ஜெயந்தியின் அண்ணன் மனைவி... அவளுக்கு தீக்ஷாவைத் தன் மகனுக்கு எடுக்க வேண்டும் என்ற எண்ணம் இருக்க... அந்தப் பேச்சை அதன் ஆரம்பக் கட்டத்திலே மறந்து விட்டிருந்தாள்.

"ஜெயந்தி... இதெல்லாம் விதின்னு சொல்றதைத் தவிர, வேறென்ன சொல்ல..., நம்ம லக்ஷ்மி பொண்ணைக் கூட நம்ம தீக்ஷா மாதிரி பெரிய இடத்திலதான் கொடுத்தாங்க... இந்தப் பொண்ணுதான் வேணும்னு ஒத்தைக் கால்ல நின்னு கல்யாணம் பண்ணிட்டுப் போனானாம்... 2 வருசம் என்னமா ஆட்டம் போட்டாங்க... இப்போ ஆடி அடங்கிக் கிடக்கிறாங்க... வாரிசு இல்லைன்னு கொண்டு வந்து விட்டுட்டுப் போயிட்டாங்க... போன வாரம் அந்தப் பையனுக்கு வேறொரு கல்யாணம் நடந்துருச்சு... நீயும் அது மாதிரி ஏமாந்துராதே... என்னத்தைச் சொல்லு... நம்ம பொண்ணு இந்த மாதிரி ஆகிருச்சே..." என்றவள்,

"பைத்தியம்னு சொன்னா... ஈஸியா டைவர்ஸ் கிடைச்சிடுமாமே... இவர் சொன்னாரு. யார் கண்ணு பட்டுச்சோ..." அவள் பேசி முடிக்கவில்லை... ஜெயந்தி போனை வைத்து விட்டார்.

விஜய் அன்று பேசிய போது நிம்மதி அடைந்த ஜெயந்தியின் மனம்... மீண்டும் கல்லெறிந்த குளமாகக் கலங்க ஆரம்பித்தது.

எத்தனை நாட்கள் விஜய்யும் பொறுத்திருப்பான். அதுவும் இந்த வயதில்... விஜய்யை விடக் கலைச்செல்வியை நினைத்துத்தான் இப்போது ஜெயந்திக்குப் பயம் வர ஆரம் பித்தது. தன் மகனுக்கு இப்படி ஆகியிருந்தது என்றால்... இவள் தாயாக என்ன முடிவெடுப்பாள்...?



எல்லாம் சேர்த்து ஜெயந்தியைத் தாக்க... கோவில் கோவிலாகப் போக ஆரம்பித்தாள்.

அன்றும் அவள் அப்படி அருகில் இருந்த கோவிலுக்குப் போக... ராதா வீட்டில் இருந்தாள்.

ஆனால், சுனந்தாவுக்குத் திடீரென்று உடல் நலம் சரியில்லாமல் போக... ராதாவும் மருத்துவ மனை சென்று விட்டாள். தீக்ஷா தனியாக இருக்கிறாள் என்று ஜெயந்தியிடம் சொல்லி விட்டுத்தான் சென்றாள்.

ஆனால், ஜெயந்தியால் உடனடியாகப் பூஜையின் இடையிலேயே விட்டு வர முடியவில்லை.

தீக்ஷா தனியாக இருக்கிறாள் என்ற விஷயம் உடனடியாக விஜய்க்கு, முருகேசன் மூலம் சொல்லப்பட... விஜய் அடுத்த அரை மணி நேரத்தில் அங்கு வந்தான், கோபத்தோடு.

இவர்களை நம்பி விட்டுப் போனால்... ஆளாளுக்கு அவங்கவங்க வேலையைக் கவனிக்க ஆரம்பித்து விட்டார்கள் என்ற கோபம்தான் அது.

அவனின் கோபத்தையும் சாதாரணமாக விட முடியாது. தீக்ஷா தனிமையில் இருந்தாலே விஜய்யைத் தேட ஆரம் பித்து விடுவாள். அவளின் தேடலின் முடிவு... நன்மையைக் கொடுத்தால், பரவாயில்லை... வேதனைதான் எனும்போது, விஜய் அதை அறவே வெறுத்தான்.

தன்னை நினைத்து அவள் போராடித் தன்னையே மாய்த்துக் கொள்வதை விட... தன்னை மறந்து வாழும் அவளின் இந்த நிலைமையே அவனுக்கு ஆறுதலாக இருந்தது என்றே சொல்லலாம்.

கார் சத்தம் கேட்ட தீக்ஷா... சுனந்தா வந்து விட்டாள் என்று வேகமாய் எட்டிப் பார்க்க... அது விஜய்யின் கார்.

முகம் சுருங்கியவள்... அறையிலே இருந்து விட்டாள். எப்படியும், யாரும் இல்லை என்றால் போய் விடுவான் என்று நினைத்தவள்... ஒரு பத்து நிமிடம் அறையிலே இருந்தாள். கார் திரும்பிப் போகும் ஓசை கேட்காமல் இருக்க... வீட்டில் வேலை செய்யும் பெண்மணியை அழைத்தாள்.

"அக்கா... வீட்ல யாருமில்லைன்னு விஜய் அத்தான் கிட்டே சொல்லிருங்க... அவர் கௌம்பிடுவாரு..." என்று சொல்ல,

அந்தப் பெண்ணும் தலை ஆட்டியபடி சென்றாள்.

பால்கனியில்தான் அமர்ந்திருந்தாள் தீக்ஷா. விஜய்யோ வீட்டை விட்டு வெளியேறாமல் இருக்க... அறையில் இருந்தே கத்தினாள்,

"அக்கா..." என்று.

ஹாலில் அமர்ந்திருந்த விஜய் பதட்டமாக...

"உங்களைக் கூப்பிடறா... என்னன்னு பாருங்க..." என்று அப்பாவிக் கணவனாக அந்த வேலைக்காரப் பெண்மணியை மேலே அனுப்ப,

"உங்க கிட்டே என்ன சொல்லச் சொன்னேன்... சொன் னீங்களா இல்லையா...? அம்மா... அண்ணி யெல்லாம் இல்லைன்னு... வர லேட்டாகும்னு சொல்லுங்க..." என்று இப்போது சத்தமாகச் சொன்னாள், விஜய் காதில் விழுமாறு.

விஜய் தன்னை நினைத்து நொந்து கொள்ளவில்லை. எதிரில் புன்னகைத்தபடி புகைப்படத்தில் இருந்த தீக்ஷாவைப் பார்த்துச் சிரித்துக் கொண்டான். வேறு வழி...?

திரும்பி வந்த வேலைக்காரப் பெண்மணி, என்ன சொல்வது என்று தெரியாமல் விழி பிதுங்கி விஜய்யைப் பார்க்க...

"நான் பார்த்துக்கிறேன்... நீங்க போங்க," என்றவன், அன்றைய செய்தித் தாளில் மூழ்கிவிட்டான்.



விஜய் இன்னும் இருக்கிறான் என்பதை உணர்ந்த தீக்ஷா... அவனுக்கு எதிரே வந்து அமர்ந்தாள்.

அவள் வந்ததை உணர்ந்தும் விஜய் அவளை நிமிர்ந்து பார்க்கவில்லை.

விஜய் அத்தான் என்று தீக்ஷாவுக்கு அவனை அழைக்க விருப்பமில்லை. அதனால்,

ரிமோட்டை ஆன் செய்து, டி.வி.யை உயிர்ப்பித்து அவன் கவனத்தைத் தன்னை நோக்கித் திருப்ப முயல... அப்போதும் அவன் இவளைப் பார்க்கவில்லை.

எரிச்சல்தான் வந்தது தீக்ஷாவிற்கு. தொலைக் காட்சியை இன்னும் மிகவும் சத்தமாய் வைக்க... வேறு வழியின்றி அவளைப் பார்த்தவன், அவள் கையில் இருந்த ரிமோட்டைப் பறித்து ஆஃப் செய்து விட்டு, மீண்டும் பேப்பரில் மூழ்க...

டிவியின் சத்தத்தைக் கூட்டினால் அவனுக்கு எரிச்சல் வருகிறது என்பதை உணர்ந்த தீக்ஷா... மீண்டும் ரிமோட்டை எடுத்து, அதிகபட்ச சத்தத்தில் வைக்க... விஜய் அவளை முறைத்தபடி ரிமோட்டை வாங்கப் பார்க்க,

வேகமாய் ரிமோட்டைத் தனக்குள் கையகப்படுத்தி னாள் தீக்ஷா, சிறு குழந்தை போல.

"சின்னப் பிள்ளை மாதிரி விளையாடாதே. ரிமோட்டைக் கொடு..." என்று இவன் கேட்க... அவளோ, ரிமோட்டை அவன் பறிக்க முடியாதவாறு, அழுத்தமாய்ப் பிடித்துக் கொள்ள...

விஜய் அதற்கு மேல் அவளிடம் ஒன்றும் பேசாமல்... எழுந்து போய், மெயின் ஸ்விட்சை ஆஃப் செய்துவிட்டு அமர...

"அண்ணி, அம்மா இல்லை. அப்பா, அண்ணா ஆஃபிஸ் போயிட்டாங்க... நீங்க பெரிய பிசினஸ் மேன்... ஏன் வேஸ்ட்டா டைமைச் செலவு பண்றீங்க...?" தீக்ஷாவுக்குப் பேசப் பிடிக்கவில்லைதான்! இருந்தும் பேச...

"எனக்குத் தெரியும் என்ன செய்யணும்னு... என்னோட டைம் வேஸ்ட்டாகிறதைப் பற்றியெல்லாம் நீ கவலைப்படாதே. அத்தை வந்ததும் நான் போயிருவேன்... நீ உன் ரூமுக்குப் போ!" என்று சாதாரணமாகச் சொன்னான் விஜய்.

இவள் வள்ளென்று விழுந்தாள்.

"அத்தையா... ரொம்ப உரிமையாச் சொல்றீங்க... என்ன வம்பு பண்றீங்களா... யாருமில்லைன்னு..." இவள் பேசும் போதே யுகியும் அங்கு வந்திருந்தான். அவனை இருவருமே கவனிக்கவில்லை. டி.வி.யின் சத்தம் வைக்கும் போதுதான் யுகி கார் உள்ளே நுழைந்ததால், அதை இருவருமே உணரவில்லை.

"தீக்ஷா... இப்போ யாரு உன்கிட்ட வம்பு பண்றா...?" என்றபோதே,

"என் பேரைச் சொல்லாதேன்னு சொன்னேன்ல... உன்னைப் பார்த்தாலே எனக்கு..." என்று பல்லைக் கடித்தவள்,

"முதல்ல கூட உன் மேலே கோபம் இல்லை. தப்பு செஞ்ச உன்னை இந்தத் தாங்கு தாங்குறாங்க எங்க வீட்ல... அதைப் பார்க்கும் போது எப்படி வருது தெரியுமா எனக்கு... என்னடா சொல்லி அவங்களை மாத்தி வச்சிருக்க...?

"எனக்கு ஆக்ஸிடெண்ட்னு சொன்னாங்க... எனக்கு டவுட்டா இருக்கு... நீயே எனக்கு ஆக்ஸிடெண்ட் பண்ணி என்னைக் காப்பாத்துற மாதிரி நடிக்கிறியா...? உன் தங்கச்சி நல்லா வாழணும்னு... இப்படி ஏதாவது பண்ணி, நல்ல பேர் வாங்கிட்டியா...? உனக்குச் சாதகமா நடக்கணும்னா நீ என்ன வேணும்னாலும் பண்ணுவியே!"

"லூசு மாதிரிப் பேசாதே தீக்ஷா..." என்ற போதே,

"இன்னொரு தடவை என் பேரைச் சொல்லாதே. இங்கே பாரு... உன் கிட்டே பேச எனக்கு இஷ்டம் இல்லை...



மத்தவங்க முன்னால பேசாம இருக்கிறேன் என்றால்... நீ பண்ணியதெல்லாம் மறந்துட்டேன்... மன்னிச்சுட்டேனெல்லாம் நினைக்காதே. அது இந்த ஜென்மத்தில் மறக்காது... நீயா போனாய் என்றால் உனக்கு மரியாதை... இல்லை..." என்று நிறுத்த...

விஜய்யோ, 'நீ என்னவோ பேசிக்கொள்' என்பது போல் சாவகாசமாய் அமர்ந்து கொண்டிருக்க...

அதைப் பார்த்த தீக்ஷாவுக்குக் கோபம் உக்கிரமாய் வர ஆரம்பிக்க... விஜய், அதை உணரவில்லை, அது கூட அவளுக்கு ஆபத்து என்பதை.

வேகமாய் அவன் முன் நின்றவள்...

"ஓ! இது நீ கொடுத்த வீடுதானே... அதுதான் இவ்வளவு தெனாவெட்டா உட்கார்ந்திருக்கே.. இங்கே இருக்கிறது எல்லாம் உன் ஆளுங்கதானே... நீ இப்படித்தான் இருப்பே... இதுக்காகத்தான் இந்த வீட்டை விட்டுப் போகணும்னு நெனைச்சேன்... அந்த ராகேஷை மேரேஜ் பண்ணிப் போயிருந்தால் கூட உன் மூஞ்சியில முழிச்சிருக்க மாட்டேன்," என்றவள், ஏதோ யோசித்தவளாய்,

"ராகேஷ் கிட்டே என்னடா சொன்னே...? ஏன் அவன் வரலை...? நீ என்னமோ பண்ணிட்டே, நான் சந்தோஷமா இருக்கக் கூடாதுன்னு..." என்று ராகேஷைப் பற்றிப் பேசும் போதே,

"அவன் தான் லெட்டர் எழுதி வெச்சுட்டுப் போயிட்டான்ல... என் இந்..." என்று அவளாகப் பேச ஆரம்பிக்க...

அப்போது, "தீக்ஷா... இதுக்கு மேலே ஏதாவது பேசினே..." என்று யுகி, அவள் முன் நிற்க... யுகியைப் பார்த்த தீக்ஷா... தன் நினைவுகளை நிறுத்தி நிதானமாய் ஆனாள்.

யுகியோ கோபத்தைக் கட்டுப்படுத்த முடியாமல்... அவள் பேச்சுக்கெல்லாம் பதில் சொல்லாமல் கேட்டுக்

கொண்டிருக்கும் தன் அண்ணனின் நிலை தாங்க முடியாமல், இதற்கு மேல் வேடிக்கை பார்ப்பது சரியாய் இருக்காது என்று இடையில் வந்து விட்டான்.

வந்தவன்,

“சாரி அண்ணா,” என்று சொல்ல...

விஜய் அதைக் கண்டு கொள்ளாமல்... யுகி வந்து விட்டான் என்பதால்...

“யுகி... அத்தை வருகிறவரை இங்கே இரு... நான் கிளம்புகிறேன்...” என்று சொல்ல...

இது தன் அண்ணனா என்று யுகிக்கே தாள முடிய வில்லை.

விஜய் கிளம்ப... தீக்ஷா அவனிடம்,

“ராகேஷ் இல்லைன்னா என்ன... எனக்குன்னு ஒரு சாரகேஷ் இல்லாமலா போவான்...?” என்று வேகமாய் அவளையறியாமல் வார்த்தைகளை விட,

அதைக் கேட்ட விஜய், ஸ்தம்பித்துத் திரும்பிப் பார்க்க...

தீக்ஷாவுக்கும் அதிகமாய்ப் பேசியது போல் இருக்க, இருந்தும் திமிராய் அவனைப் பார்த்தாள்.

அவளின் மற்ற வார்த்தைகளை எல்லாம் தூசு போல் தட்டியவனால்... இதைக் கேட்டுச் சும்மா போக முடியவில்லை.

“எவன் வந்தாலும்... என்னைத் தாண்டி உன்னை நெருங்க முடியாது...” என்று கசப்பாய் வார்த்தைகளை விட,

ஏளனமாய்ப் பார்த்தாள் அவனை.

“நான் வழக்கமா லூசு மாதிரிப் பேசுறேன்னு நினைக்காதே... சாரகேஷ் என் ஃப்ரெண்ட் பாருவோட அண்ணன்... உன் பூச்சாண்டி வேலை எல்லாம் அவர் கிட்டே செல்லாது...” திமிராய்ச் சொல்ல...



அதற்கு மேல் பேசினால், அவள் எல்லை மீறிப் பேசுவாள் என்பதை உணர்ந்த விஜய்... பேசாமல் நிற்கும் போதே ஜெயந்தியும் உள்ளே வர,

“சரி... நான் போகலாமா...? உங்க அம்மா வந்துட்டாங்க,” என்று வெளியேறிப் போக...

உள்ளே வந்த ஜெயந்தி, விஜய் முன்னாலே அவனே எதிர்பார்க்காமல், தீக்ஷாவின் கன்னத்தில் அறை விட்டார்.

விஜய் பதறித் தடுக்க...

தன் தாய் அறைந்த அறையால், வலியில் எரிந்த தன் கன்னத்தைப் பிடித்தபடி கண் கலங்கி நின்ற நிலையிலும் கூட...

“நீ எதுக்குடா தடுக்கிறே...? அவங்க எங்க அம்மா... என்னைக் கொன்னு கூடப் போடுவாங்க. நீ உன் வேலையைப் பார்த்துட்டுப் போ. நான் தப்பாப் பேசினேன்... அதனால எங்க அம்மா அடிக்கிறாங்க... உனக்கு என்ன வந்துச்சு...? எங்க வீட்டைக் கன்ட்ரோல் பண்ற வேலையை வெச்சுக்காதே...” என்று அழுதபடியே சொன்னவள்...

“என் அம்மா கையாலே அடி வாங்க வெச்சுட்டேல்ல...” என்று அழுகையை நிறுத்தியவள்...

“என் சாபமெல்லாம் உன்னை விடாதுடா... உன் ட்ரீம் ப்ராஜெக்ட் கை விட்டுப் போயிருச்சு... அந்த இளமதிக்கும் உனக்கும் கூட மேரேஜ்லாம் இல்லையாமே...! இவ்வளவு பட்டும் கூட இன்னும் திருந்தாம இருக்கே...” என்று அவள் முடிக்கவில்லை... விஜய் வாய் திறக்காமலே வெளியேறி விட்டான்.

யுகி, சிவந்த கண்களோடு, தன் அண்ணன் பின்னாலே போக... அந்த நிலையிலும் யுகியைக் கையைப் பிடித்து நிறுத்தினாள்.

"எங்கடா போறே...? நீ இரு..." என்று நிறுத்த,

"என் அண்ணனுக்கு மரியாதை இல்லாத இடத்திலே எனக்கு மட்டும் என்ன வேலை...?" என்று அவள் கையைத் தட்டி விடப் போக... அதற்கு முன்னரே தீக்ஷா அவன் கையை விட்டிருந்தாள்.

கண் கலங்கியவளாய்....

"அன்னைக்கு உன் அண்ணன் என்னைக் கழுத்தைப் பிடிச்சு வெளியே தள்ளினானே... அப்போ எனக்காக நீ துடிக்கலை... என் குடும்பத்தையே வெளியே போன்னு கை நீட்டிச் சொன்னானே... அப்போதெல்லாம் நீ... நீ என்ன... உன் குடும்பமே வாயை மூடிட்டுத் தானே இருந்துச்சு...? அதை எல்லாம் விட உன் அண்ணன் இன்னைக்கு அவமானப் பட்டுட்டாரா...? இந்த நிமிசம் வரைக்கும் நாங்க உங்களுக்கு அடிமையாத்தானே இருக்கோம்," என்று முடிக்கவில்லை...

யுகி, விஜய் போல வாயை மூடிக் கொண்டு அமைதியாக நிற்கவில்லை. அவனும் பேச ஆரம்பித்தான்.

"ஹ்ம்.... எல்லாம்தான் பண்ணிட்டியே... இன்னும் என்ன பண்ணணும்னு இருக்கே...? என் அண்ணனை மட்டும் இல்லை... எங்களையும்தான் கையைக் கட்டிட்டு... வாயை மூடிட்டு இருந்தோம்னு... என் குடும்பத்தையே தலை கீழா மாத்திட்டியே... எங்க வீட்டை வந்து பாரு, எப்படி இருக்குன்னு. எவனையோ ஒருத்தனை நீ கல்யாணம் பண்ணிட்டுப் போயிருந்தாய் என்றால் கூட... என் அண்ணனை இந்த அளவுக்குப் பழி வாங்க முடியாதுன்னு... அவரை..."

"யுகி..." என்ற தன் அண்ணனின் வார்த்தையில் நிறுத்தினான்.

தீக்ஷாவோடு நடந்த வாக்குவாதத்தில் கார் கீயை அங்கேயே விட்டு விட... அதை எடுக்க வந்தவன்...



நல்லவேளை அடக்கி விட்டான். அது மட்டும் இல்லாமல்... அவனைத் தன்னோடு இழுத்தும் வந்து விட்டான். யுகி இன்னும் ஆத்திரமாய் இருந்தான்.

யுகி போன பின்னால்... தீக்ஷாவுக்கு இருந்த கோபத்தில், யாரோடும் பேசாமல் மாடியில் போய்ப் படுத்து விட்டாள்.

என்னதான் யுகி, தன்னிடம் நண்பனாய்ப் பழகியிருந்த போதும்... அண்ணனை விட்டுக் கொடுக்காமல் இப்படித் தன்னைப் பேசி விட்டானே என்று மனம் கனத்தது தீக்ஷாவுக்கு.

விஜய், அதன் பின் ஜெயந்தியிடம்....

"அத்தை... அவ ரொம்ப டென்சனில் இருக்கிறாள். டேப்லட் போட்டுத் தூங்க வெச்சிடுங்க... அவளோட வாதம் பண்ணாமல், நீங்க சமாதானமா... அவளுக்கு ஆதரவாப் பேசுங்க... கன்வின்ஸ் ஆகிடுவா..." என்று போனை வைக்க...

வரும் வழி முழுவதும் யுகிதான் புலம்பியபடி வந்தான்.

"எப்படிண்ணா இப்படி இருக்கீங்க...? என்னால முடியலை... உன் அண்ணன் அனுபவிப்பான்னு சொன்னா.... நடத்திக் காட்டிட்டா... எனக்கு அண்ணியா போனதினாலே மட்டும்தான் விட்டுட்டு வந்தேன். இல்லை..." கண் சிவக்கச் சொல்ல...

"அவ உனக்கு ஃப்ரெண்ட்... அடுத்து அண்ணி. ஆனால், அவ என்னில் பாதி. என் மேலேயே எனக்குக் கோபம் வருமான்னு சொல்லு... நான் இன்னைக்குப் படற கஷ்டமெல்லாம் நான் பண்ணின தவறுகளினாலே மட்டும் அல்ல... என்னோட காதல்னாலதான்... அவளோட ஆதி அந்தமா நினைக்கிறாடா என்னை... அதனாலதான் இந்த நிலைமையில இருக்காடா... என்னை வெறும் தாலி கட்டின

கணவன்னு மட்டும் நெனைச்சிருந்தா... இப்படி இருந்திருக்க மாட்டாடா... அதுக்கும் மேலே என்னை நினைக்கிறா..." கண்கள் மூடியபடி சொன்னவன்,

"காதல்ல நான் உன்னை விட ஜூனியர்தான் யுகி. ஆனால், அதோட ஆழம் உணர்ந்தவன் நான்!"

என்றவனைத் திடுக்கிட்டுப் பார்த்தான், தன் விஷயம் தன் அண்ணனுக்கு எப்படித் தெரியும் என்று.

விஜய் அப்போது கண் திறக்கவில்லை.

"உன் மேலே அவளுக்கு ரொம்பப் பாசம்டா... ஆர்த்தியைப் பற்றி நானாகக் கேட்ட போதுதான் வாய் திறந்தாள். நீ அவ கூட UK போக என் கிட்டே எந்த அளவுக்குப் பேசினா தெரியுமா...? அப்போ கூட ஆர்த்தி பற்றிச் சொல்லாமல்தான் போராடி... என்னைச் சம்மதம் சொல்ல வெச்சாள். அவளைப் போய்..." என்று நிறுத்த, யுகியோ...

"என்ன வேண்டும்னாலும் அவ எனக்குப் பண்ணி யிருக்கட்டும்... அவ மனசிலே எங்கோ ஒரு ஓரத்தில் உங்க மேலே இருந்த வஞ்சம் போகாமல்தான் இருந்திருக்கு... அது இருந்ததினாலதான்... இன்னைக்கு இவ்ளோ பேசுறா..."

சமாதானம் அடைய முடியாத தன் தம்பியை வேதனையோடு பார்த்தவன்...

"எனக்கொரு ப்ராமிஸ் பண்ணிக் கொடு, அவ கிட்டே எதையும் உளற மாட்டேன்னு..." என்று கை நீட்ட,

யுகியோ மறுத்து விட்டான்.

"சாரிண்ணா... என்னாலே ப்ராமிஸெல்லாம் பண்ண முடியாது. நான் இங்கே இருந்தேன் என்றால், என்றாவது நானே அவ கிட்டே எல்லாத்தையும் என்னை அறியாமல் சொல்லிருவேன். நான் UK போறேன்..." என்றவன், அடுத்த 2 நாட்களிலே கிளம்பவும் செய்தான்.



தீக்ஷாவுக்கு, ஒரு நாள் வரை யுகியின் மேல் கோபம் இருந்தது. ஒரு நாள்தான் அந்தக் கோபம் கூட. போன் செய்தாள் அவனுக்கு. அவனோ... போனை எடுக்கவே இல்லை. இவளும் விடாமல் அடித்தாள். அவனும் எடுத்தான், வேண்டா வெறுப்பாய்.

"சாரி யுகி... நான் அன்னைக்குப் பேசினதெல்லாம் தப்புதான்... உனக்குப் பிடிக்கலைன்னா, உன் அண்ணனைக் கூடத் திட்டலை... நீ மட்டும் பேசாம இருக்காதேடா!" என்று பேச,

"தேங்க்ஸ்... உன்னோட ஃப்ரெண்ட்ஷிப்புக்கு. நான் இப்போ ஏர்போர்ட் போயிட்டு இருக்கேன். திடீர்னு கிளம்பிட்டேன்... பை..." என்று பட்டென்று கூறியவன், போனை வைக்க...

தீக்ஷாவுக்கு, அவனைப் பார்க்க வேண்டும் போல் இருக்க... தீபனை நச்சரித்து அவனோடு கிளம்பினாள்.

விஜய் கூடத் தீபனிடம் சொல்லிப் பார்த்தான். யுகி ஏற்கெனவே ஏர்போட்டுக்கு வந்தாகி விட்டது... இன்னும் சில நிமிடங்களில் கிளம்பிடுவான் என்று. அதையெல்லாம் கேட்காமல் தீக்ஷா, தீபனுடன் கிளம்ப... அவள் கிளம்புவதைத் தடுக்க முடியாத விஜய்... கோபத்தில் தன் அருகில் இருந்த யுகியைத்தான் முறைக்க முடிந்தது.

தீனாவும் வழி அனுப்ப வந்திருந்தான் யுகியை.

இரு குடும்பத்திற்கும் யுகி - ஆர்த்தி காதல் தெரிந்து, அதற்குச் சம்மதம் தெரிவித்து விட்டனர், விஜய்யின் பெற்றோருக்குத் தன் இளைய மகனாவது சந்தோஷமாக இருக்கட்டும் என்று, யுகியின் பயணத்தில், ஓரளவு சந்தோசமாகவே இருந்தனர்.

தன் காதல் வெற்றி அடைந்ததில்... யுகி சந்தோஷ மாகத்தான் இருக்க வேண்டும். ஆனால், அவனால்

முடியவில்லை. அதன் காரணம் ஒன்று... தீக்ஷா, அவனிடம் சொல்லாமல் கிளம்பியது... மற்றொன்று அவளால் தன் அண்ணனின் நிலை.

சஞ்சலத்துடன் அன்று விமானத்தில் பறந்தவன், மீண்டும் இங்கு திரும்பியது... தன் அண்ணனின் திருமண நாளின் போதுதான். அதிலும் சாரகேஷ் விஷயம் கேள்விப்பட்டு, அன்று தீக்ஷா, சாரகேஷ் பற்றி வார்த்தைகளை விட்டதை நிறைவேற்றி விட்டாள் என்பதில் தான் பெருங்கோபம் கொண்டான்.

யுகி கிளம்பிய சில நிமிடங்களிலே தீபன், விஜய்க்கு கால் செய்தான். தீக்ஷா வரும் வழியில் மயங்கி விட்டாள் என்றும்... மூக்கில் இருந்து ரத்தம் வருகிறது என்றும்... மருத்துவ மனையில் இருப்பதாகப் பதறிச் சொல்ல... விஜய் வேகமாய் அங்கு சென்றான், பதட்டத்தோடு.

மறுபடியும் தன்னைத் தவிக்க விட்டு கோமா நிலைக்கு மீண்டும் போய் விடுவாளோ என்று தவித்த விஜய்... மருத்துவ மனை போன போது, தீக்ஷா சுய நினைவோடு இருக்க... நிம்மதியில், அவனுக்குப் போன உயிர் மீண்டும் வந்தது.

மருத்துவர்கள் குழு... விஜய்யிடம் ஒரு காரணம் சொன்னது.

உங்க நினைவு வராம இருக்கிறதுதான் இப் போதைக்கு அவங்களோட உயிருக்குப் பாதுகாப்பு. ஆனால், எது எதெல்லாம் அவன் நினைவை அவளுக்குத் தருகிறது என்பதை, யாராலும் அனுமானிக்க முடியவில்லை.

விஜய் அருகில் இருந்த போது, அவள், அவனை உணரவில்லை. ஆனால், கணவனாய் அவனின் நெருக்கம்... அவனை அவளுக்கு உணர வைக்கிறது என்பதாலே விஜய் அவளைத் தள்ளி விலகி வந்து... தன் உணர்வுகளை எல்லாம் மறைத்து... அவள் முன் நடமாடிக் கொண்டிருக்கிறான்.



இது தவிர... இருவரும் சேர்ந்திருந்த புகைப்படம் பார்த்து... விமானச் சத்தம் கேட்டு... மயங்கியது என்று ஓரளவு தீக்ஷாவைப் பாதிக்கும் நிகழ்வுகளைத் தெரிந்து கொண்டனர்.

இதுவரை அவர்கள் அறியாதது... தீக்ஷாவின் நினைவுகளில் ராகேஷ் சுழலும்போது... அவனால் அவளின் இந்தர் காதல் நினைவுகள்... ராகேஷின் நினைவுகளோடு தொடர்ந்து வருகிறது என்பதுதான்.

ராகேஷின் நினைவுகள் வரும்போது, தன் இந்தரின் நினைவுகளில் சுழன்றடிக்கப்பட்டுக் குழம்புபவள்... ராகேஷை நேரில் பார்க்கும் போது... அவள் நிலை என்ன ஆகும்...? பொறுத்திருப்போம், காலம் என்ன வைத்திருக்கிறது... விஜய் - தீக்ஷா வாழ்க்கையில்.

மருத்துவ மனையில் இருந்து வந்த தீக்ஷாவைப் பார்த்து, வழக்கம் போல ஜெயந்தி புலம்பித் தீர்க்க... தீக்ஷா எரிச்சலுடன், தன் அறைக்கே போய் விட்டாள்.

யுகி சமாதானமாகாமல் போய்விட்டானே என்ற கவலைதான் அவளுக்கு இப்போது. யுகி பேசினால் தன்னிடம் கொடுக்கும்படி ராதாவிடம் சொல்லி வைக்க... ராதாவும் அவ்வாறே செய்தாள்.

"யுகி, சாரிடா... நான் பேசியது தப்புதான். அதுக்காக உன் கிட்டே ஆயிரம் முறை வேணும்னாலும் மன்னிப்புக் கேட்டுக்கிறேன். இனி அந்த விருமா... சாரி, சாரி... உன் அண்ணனை ஒண்ணும் உன் முன்னாலே திட்ட மாட் டேன், போதுமா...? என்கிட்ட பேசுடா.... சொல்லாமல் கூடப் போயிட்டே... அந்த அளவுக்கு நான் வேண்டாதவள் ஆகிட் டேனா...?" என்று இவள் இறங்கிப் பேசியும்... அவன் மௌனத்தையே பதிலாகத் தர,

"உன்னைப் பார்க்க வரும்போது... எனக்குக் கொஞ்சம் உடம்பு சரியில்லைடா... ஏர்போர்ட் வரை வழி அனுப்ப வந்தேனடா... ஆனால், உன்னைப் பார்க்க முடியலை..." எனும் போதே,

"எனக்கு உன் மேலே கோபம் இல்லை. ஆனால், உன் ஹெல்த் ப்ராப்ளம் ரீசனாலதான்... நீ பேசுறதெல்லாம் கேட்டு என் அண்ணன் அமைதியா இருக்கிறார். அதை மட்டும் புரிஞ்சுக்கோ... என் அண்ணனைப் புரிஞ்சுக்க ட்ரை பண்ணு... அது போதும் எனக்கு," என்று போனை வைத்து விட, தீக்ஷா குழம்பினாள்.

அந்த அளவுக்கு என்ன ஆனது என்று யோசிக்க ஆரம்பித்தாள் தீக்ஷா. ஆக்ஸிடெண்ட் ஆன நினைவு இல்லை... ஏன், உடலில் காயங்கள் கூட இல்லை... தனக்கு என்ன பிரச்சினை...? விஜய் கூட அந்த ரிப்போர்ட்டைத் தர மறுத்தானே...!

பல மாதங்கள் கோமா... அதன் பின் குணமாகி வந்த பின், நேற்றைய மயக்கம்... தனக்கு உண்மையிலேயே என்ன... என்று குழம்பியவளுக்கு... மண்டையில் பிரளயமே வெடிக்க... நல்ல வேளையாக அவள் தாய் வர... தன் தாயின் மடியில் தலை சாய்ந்தாள்.

"அம்மா..." என்று மடியில் படுத்திருந்தவாறே தன் தாயை அழைக்க... அவள் தாயும் செவி மடுத்தாள்.

"எனக்கு என்ன பிரச்சினை...? உண்மையைச் சொல்லுங்க... அந்த விருமாண்டி இல்லைன்னா நான் பிழைச்சிருக்கவே மாட்டேன்ற மாதிரி எல்லோரும் அவனுக்குக் கோவில் கட்டாத குறையா கும்பிடறீங்க... அப்படி என்னம்மா பெரிய பிரச்சினை... ஆனா எனக்கு ஏதோ நடந்திருக்குன்னு மட்டும் தெரியுது... அவனும் நான் என்ன பேசினாலும் பரிதாபமாகவே பார்க்கிற மாதிரி தோணுது..." என்று தன் தாயிடம் மெல்லத் தன் விசாரணையை ஆரம்பிக்க...



ஜெயந்தி தன் மகளைப் பார்த்துத் துக்கம் தாளாமல் அழ ஆரம்பிக்க... தீக்ஷா, மீண்டும் எரிச்சல் ஆனாள்.

"என்ன ஏதுன்னு சொல்லித் தொலையாமல் எப்போ பார்த்தாலும் அழுதழுது இம்சையைக் கூட்டாதீங்கம்மா. சொல்லுங்க... நீங்க இப்படி டேங்கைத் திறக்கிறது ரீசனபிளா இருக்கான்னு பார்க்கலாம்..." அந்தச் சூழ்நிலையிலும் கிண்டலாகக் கேட்க,

ஜெயந்தி அப்போதிருந்த சூழ்நிலையில் உண்மையை உளறிவிடும் மனநிலையில் இருக்க... அப்போது,

"அத்தை..." என்ற விஜய்யின் குரல் கேட்க... இருவரும் அறை வாசலை நோக்கினர்.

விஜய், அவள் அறை வாசலில், இவர்களின் உரையாடலை எல்லாம் கேட்டபடி நின்று கொண்டிருந்தான்.

"உள்ளே வாங்க தம்பி..." என்று கண்களைச் சேலைத் தலைப்பால் துடைத்தவர்... எழுந்து நிற்க...

தீக்ஷா அவனை நிமிர்ந்து கூடப் பார்க்கவில்லை. விஜய்யும் அவளைப் பார்க்கவில்லை.

"என்ன தெரியணுமாம் உங்க பொண்ணுக்கு...?" என்று ஜெயந்தியிடம் கேட்டபடியே அமர்ந்தவன்... "இந்த டேப்லெட்ஸ்லாம் டாக்டர்ஸ் மாற்றி இருக்காங்க..." என்று மிகப் பெரிய பட்டியலையே ஜெயந்தியிடம் சொல்லியபடி அதைக் காட்டிக் கொண்டிருக்க...

தீக்ஷா இடையிலேயே,

"அம்மா... கண்டவங்க சொல்றதையெல்லாம் சாப்பிட முடியாது... எடுத்துட்டுப் போகச் சொல்லுங்க... எனக்கு ஒண்ணும் இல்லை..." என்று பேச ஆரம்பிக்க, அதை வழக்கம் போலச் சட்டை செய்யாதவனாய்,

"இது, உனக்குப் படபடப்பாக வருகிற மாதிரி நீயே உணரும் போது போட வேண்டிய டேப்லட்ஸ். எப்போதும் கூடவே வைத்திருக்க வேண்டும்..." என்று தீக்ஷாவிடமே கொடுக்க... இன்னும் கோபமானாள் தீக்ஷா. ஆனாலும்,

இன்னும் இங்கிருந்தால் ஏதாவது பேசி விடுவோமோ... என்று பயந்தவளாய்த் தன்னை அடக்கி, அங்கிருந்து நகர... விஜய், அவள் போவதைத் தடை செய்யவில்லை.

அவள் போன பின் ஜெயந்தி, விஜய்யிடம்...

"தம்பி... எனக்கு என்ன ஆச்சுன்னு கேள்வி கேட்கிறாள். என்ன சொல்றதுன்னே தெரியலை. அவளைச் சமாளிக்க முடியலை. உண்மையைச் சொல்லிடலாம் தம்பி... அவ உங்க கூட வாழ்ந்தாலே நல்லாயிடுவா தம்பி...." என்று கண்ணீரை உகுக்க...

ஜெயந்தியின் கண்ணீரில் எல்லாம் கரையாமல்... மௌனத்தையே பதிலாகக் கொடுத்துவிட்டு, விஜய் கிளம்பி விட... அவன் எப்போது போவான் என்று காத்திருந்த தீக்ஷா, அறைக்குள் மீண்டும் வந்தாள்.

வந்தவள், வந்த வேகத்திலேயே தன் தாயின் கைகளில் இருந்த மாத்திரைக் கவரைப் பறித்துத் தூர எறிய... ஜெயந்தி திடுக்கிட்டு நிமிர்ந்தார்.

"இதெல்லாம் போட மாட்டேன் நான்... அவன் என்னமோ பெரிய டாக்டர் மாதிரிக் கொடுக்கிறான்... நீங்களும் ஒண்ணும் சொல்லாமல் வாங்கி வைக்கிறீங்க... இதெல்லாம் போடலேன்னா நான் என்ன செத்தா போய்டுவேன்...?" என்று உச்சஸ்தாயியில் கத்த...

மகளின் இன்றைய நிலை... பதிலேதும் சொல்லாமல் சென்ற விஜய் மேல் கோபம்... என ஜெயந்தியும் ஆவேச ரானார்.



"போடு... இல்லை போடாமல் போ... யாரு இங்கே என் பேச்சைக் கேட்கிறாங்க... போடலேன்னா வந்து அந்தப் பையனே வந்து போட வைக்கட்டும்... என்ன கேட்ட... செத்தா போயிடுவேன்னா... ஆமா... செத்துத்தான் போயிருவ... போதுமா...? உன் உயிரைக் காப்பாத்திக் கொண்டு வர நாங்க பட்ட பாடு தெரியமா உனக்கு...? நீ பேசாமல் படுத்துட்ட... இப்போ மட்டும் என்ன... உயிரோட வந்திருக்கே... அவ்வளவுதான்!" என்று கத்த,

"அதுதான் எனக்கு என்ன ஆச்சுன்னு கேட்கிறேன்... என்னன்னே தெரியாமல் இத்தனை மாத்திரை போட... பயமா இருக்கும்மா... அது மட்டும் இல்லை... இவன் கொடுக்கிறதுதான் எனக்கு ரொம்பப் பயமா இருக்கும்மா... அவன் சரி கிடையாதும்மா... அவனை என்னாலே நம்பவே முடியலைம்மா.... எது பண்ணினாலும் உள் நோக்கத்தோடே பண்ணுவான்..." என்று விசும்ப...

"அம்மாவை நம்புடா... உனக்கு நான் கெடுதல் செய்வேனா...?" மகள் துக்கம் தாளாமல் ஜெயந்தியும் இறங்க... தன் தாயை அணைத்தவள்,

"உங்களை நம்புறேன்... ஆனால், அவனை..." என்றவள், தாயின் கலங்கிய விழிகளைப் பார்த்ததும்,

"சரி, விடுங்க.. நான் டேப்லெட் போடறேன்... உங்களுக்காக... போதுமா...?" என்றபடி...

மெதுவாய்த் தன் தாயைத் தன் வலைக்குள் விழ வைத்தாள்.

"விஜய் அத்தான் கிட்டே கேட்டு எனக்கு என்ன நோய்னு சொல்றீங்களா...? அப்போதுதான் எனக்கும் ஒரு பயம் வரும்... நான் நல்லா இருக்கணும்னு கரெக்ட்டா மாத்திரை போட்டுப்பேன்..." என்று தன் தாயைக் கட்டிக் கொண்டே பேச...

தலை அசைத்த ஜெயந்தியும் சமாதானமாகியபடி...

"தீக்ஷா... விஜய் தம்பியை... அவன் இவன்லாம் பேசக் கூடாதும்மா... ராதா கேட்டா எவ்வளவு வருத்தப்படுவா!" என்று தீக்ஷாவைத் திருத்த,

முறைத்த தீக்ஷா, "மகளைப் பற்றி யோசிக்காதீங்க... எப்போ பாரு மருமகள்தான் உங்களுக்கு முக்கியம்..." என்றவள்,

பெருமூச்சு விட்டபடி... "எனக்கும் இந்த மாதிரி ஒரு மாமியார் கிடைப்பாங்களா...? இனிமே எனக்கு மாப்பிள்ளை பார்க்கும் போது... மாப்பிள்ளைக்கு மட்டும் இல்லை... மாமியாரையும் எக்ஸாம் வைத்துத்தான் செலெக்ட் செய்ய வேண்டும்..." என்று கண்ணடிக்க...

ஜெயந்தி திரு திருவென்று முழித்தார்.

தன் அன்னையின் பார்வையில் தெரிந்த வித்தியா சத்தைக் கூர்மையாக நோக்கியவள்...

"என்னம்மா...?" என்று கேட்க...

"இல்லை, ஒண்ணும் இல்லை..." என்று அவசரமாய் எழுந்த ஜெயந்தியை மீண்டும் அமர்த்தினாள் தீக்ஷா.

"எனக்கு வேறொரு டாக்டர் கிட்டே போய்ச் செக் பண்ணிக்கத் தெரியாதாம்மா...? உங்களுக்குத் தெரிஞ்ச விஷயத்தைச் சொல்லுங்கம்மா. நான் மேரேஜ்... மாப்பிள்ளை.... மாமியார்னு சொன்னவுடனே உங்க முகம் டோட்டலா மாறிடுச்சு... சொல்லுங்கம்மா... என்னைக்காவது தெரியத்தானே போகுது... எனக்கு என்னம்மா...?" என்று கலங்கினாள் தீக்ஷா.

முதன் முதலாய்த் தன் உயிர் பற்றிய பயம் அவளுக்கு வந்திருக்க... அது தீக்ஷாவின் கண்களில் அப்பட்டமாய்த் தெரிந்தது.



"உனக்கு ஒண்ணும் இல்லைடா...!" சமாளிக்கப் பார்த்தார் அவள் அன்னை.

"அம்மா..." என்று இவள் கெஞ்ச...

ஜெயந்திக்கு, சக்திக்கு இருந்த நோயின் பெயர் நன்றாகத் தெரியும். மகளுக்கு அந்த நோயைப் பற்றித் தெரியப் போவதில்லை. அதைச் சொல்லி வைக்கலாமா என்று யோசித்தவளுக்கு, அதைச் சொல்லவே வாய் வரவில்லை.

ஆனால், விஜய் அவனோடு தன் மகளைக் கூட்டிச் செல்லாத வரையில் மகளின் கேள்விகளுக்குப் பதில் சொல்ல வேண்டுமே... இதோ நாளைக்கே... ஏன் எனக்குத் திருமணம் செய்யாமல் இருக்கிறீர்கள் என்று கேட்டால், என்ன சொல்வது...? விஜய்யும் சொல்ல மாட்டான்... சொல்லவும் விட மாட்டான். இவளிடம் மாட்டிக் கொண்டு முழிப்பது நான் தானே என்று விஜய் மீது அதிருப்தி கொண்ட ஜெயந்தி, அந்த மன நிலையிலேயே சக்திக்கு இருந்த நோயின் பெயரைச் சொன்னவர்... "இப்போது கவலைப்படத் தேவையில்லை, தீக்ஷா. அபாயகட்டத்தை எல்லாம் கடந்து வந்து விட்டாய்..." என்று சொல்லிச் சென்று விட்டார்...

தீக்ஷாவுக்கு அந்தப் பெயரே தெரியவில்லை. விபரமும் புரியவில்லை. தாய் சொல்லாவிட்டால் என்ன... அவள் சொன்ன பெயரை வைத்து... நெட்டில் ஆராய்ந்தவளுக்கு... அந்த நோயின் கொடூரம் புரிய... தன் தாய் ஏன் சொல்லாமல் மறைக்கிறாள் என்பதும் புரிய... தன்னை மீறித் தனக்காகவே அழ ஆரம்பித்தாள் தீக்ஷா.

தான் இன்னும் சில காலம்தான் வாழப் போகிறோம் என்று உணர்ந்தவளுக்கு... உயிரின் மதிப்புப் புரிய... யாருக்கும் தெரியாமல் தனக்குள்ளே மறுகினாள். ஜெயந்தியிடம் கூட அதன் பிறகு அதைப் பற்றி விசாரிக்க

வில்லை... உயிர் பயம் வந்த பிறகு.... மாத்திரைகளை எல்லாம் போடப் பிடிவாதம் பிடிக்கவில்லைதான்.

ஒருவாரம் தன் நிலையை எண்ணி வருந்தியவள்... அதன் பிறகு... தன் சுய பரிதாபத்தில் இருந்து வெளியே வந்தவள், இனி என்ன செய்யலாம் என்று யோசிக்க ஆரம்பித்தாள்.

அதன் தீர்வு... இந்தத் தனிமையை விட்டு வெளியே வருவது... அதற்கு வேலைக்குப் போகலாம் என்று நண்பர்களிடம் விசாரிக்க...

அனைவருக்கும் தீக்ஷா நிலைமை தெரியும் என்பதால்... தயங்கினர் என்பதே உண்மை.

பேசிய அனைவரும் பரிதாபமாய்ப் பேசியே அவளைக் கொல்ல... தீக்ஷா அவர்களைத் தவிர்த்து... தானே வேலை தேடத் தீர்மானிக்க... வழக்கம் போல் விஜய் அவளின் முடிவுக்கு முட்டுக் கட்டையாக நின்றான்.

## 48

இரவு 9 மணி ஆகியிருக்க... விஜய், தனது அலுவலக அறையில் இருந்து அப்போது தான் தன் அறைக்கு வந்திருந்தான்.

தீக்ஷா வேலைக்குச் செல்ல விரும்புவ தாகத் தீபன் வந்து கூறியதும்...

“திடீரென்று ஏன் இந்த முடிவுக்கு வந்தாள்...?” என விஜய் விசாரிக்க... வேறு வழியின்றி ஜெயந்தி, தீக்ஷாவிடம் அவளுக்கு நோய் இருப்பதாகத் தான் சொன்ன விஷயத்தைக் கூறி.. அதன் பிறகுதான் தீக்ஷா இந்த முடிவுக்கு வந்ததாகவும் கூற... விஜய்க்கு வந்த கோபத்திற்கு அளவே இல்லை. ஆனால், அதற்காக ஜெயந்தியை அவனால் திட்டவும் முடியவில்லை.



“இல்லை தம்பி... இப்போ எல்லாம் சரி ஆகிவிட்டதுன்னு அவ கிட்டே சொல்லிட்டேன். அதனால பெரிய பிரச்சினை இல்லை. எனக்கும் வேற வழி தெரியலை தம்பி...” என்று அவனின் கோபத்தை உணர்ந்த ஜெயந்தி, பயந்து சொல்ல... விஜய்யும் ஒன்றும் சொல்லாமல்... தான் பார்த்துக் கொள்வதாகக் கூறி அடுத்த 2 நாட்களிலேயே பம்பரமாய்ச் சுழன்று VD ப்ரொமோட்டர்ஸை ஆரம்பித்து விட்டான். ஏற்கெனவே இருக்கும் விஜய் பில்டர்ஸின் இரண்டாம் கட்ட வேலைகளான விளம்பரம்... வாடிக்கை யாளர்கள் தொடர்புகள்... நிதி நிலை... எனச் சில பொறுப்பு களை இதில் மாற்றியவன்... தன் மனைவி மற்றும் தன் பெயரிலேயே ஆரம்பித்தான். ஆனால், தீக்ஷாவிடம் சொல்லப்பட்டதோ விஜய் மற்றும் தீபன் பெயரில் ஆரம்பிக்கப் பட்டது என்று.

சுரேந்தருக்கு மிகப் பெரிய ஆறுதலாக இருக்க... இத்தனை வேகமாக VD ப்ரொமோட்டர்ஸ் உருவாக, அவனின் பங்கு அதிகமாக இருந்தது. ஆனால், யாருக்காக ஆரம்பிக்கப்பட்டதோ அவளோ தனக்கு அனுபவம் இருக்கும் மென்பொருள் துறைக்கே செல்ல விரும்புவதாகப் பிடிவாதம் பிடிக்க.. யாராலும் அவளின் பிடிவாதத்தை மாற்ற முடியவில்லை. அதே போல் விஜய்யும் தன் பிடிவாதத்தில் நிற்க... தன் விஷயத்தில் முடிவெடுக்க அவன் யார் என்ற கோபத்தில் இன்னும் பிடிவாதத்தில் நின்றாள்.

விஜய்க்குத்தான் என்ன சொல்லி அவளைச் சம்மதிக்க வைப்பது என்று தெரியவில்லை. தீக்ஷா மட்டும் சம்மதித்து விட்டால்... பகல் முழுவதும் அவன் பார்வையில் இருப்பாள். அது மட்டும் தான் அவன் எண்ணம் முழுவதுமாய் ஓட... அதிலேயே சுழன்று கொண்டிருந்தான். இப்போதும் அதே நினைவோடுதான் படுக்கையில் விழுந்து, விட்டத்தை வெறித்த படி இருக்க... அப்போது அவனின் மொபைலுக்கு அழைப்பு வர...

எடுத்துக் காதில் வைத்தவனின் காதுகளில், "விஜய் அத்தான்... நான் தீக்ஷா பேசுறேன்..." என்ற தீக்ஷாவின் குரல் தேனாய் விழ... படுக்கையில் இருந்து உற்சாகமாய் எழுந்து உட்கார்ந்தான். ஆனால், பதில் கூடச் சொல்லாமல்... தன் மனைவியின் குரலில் ஆழ்ந்து போயிருக்க...

"அத்தான்...." என்று இந்த முனையில் இருந்து தீக்ஷா கத்த... விஜய் சுதாரித்து...

'என்ன என் பொண்டாட்டி... இவ்ளோ பவ்யமா பேசுறா...? இவ இப்படி பேசுறான்னா... கண்டிப்பா காக்கா பிடிக்கிறதுகாகத்தானே இருக்கும்...'

தனக்குள் யோசித்தவன்...

"சொல்லு," என்று மட்டும் விளிக்க...

"நான் நாளைக்கு உங்க கிட்டே தனியாப் பேசணும்... எனக்காகக் கொஞ்சம் டைம் ஒதுக்குவீங்களா...?" இது கூடப் பணிவாகத்தான் கேட்டாள்.

விஜய்யும் ஓரளவு யூகித்தான், எந்த விசயம் என்று. எப்படியும் அவளுக்கு இவன் சம்மதம் சொல்லப் போவதில்லை. ஆனால், அவளோடு தனியாகப் பேச வாய்ப்புக் கிடைக்குமே என்று மறுநாள் வருவதற்குச் சம்மதம் சொன்னவன்...

"எத்தனை மணிக்கு வீட்டுக்கு நான் வரட்டும்?" உள்ளிருந்து வந்த ஆவலை மறைத்து விஜய் கேட்க...

"வீட்டுக்கா...? அங்க வேண்டாம். நாம பப்ளிக் ப்ளேஸ்ல... ஏதாவது ஒரு ரெஸ்டாரண்ட்ல பார்க்கலாம்... நீங்க வந்து என்னைக் கூட்டிட்டுப் போங்க..." என்றவள், "ட்ரைவர் கூடத்தானே வருவீங்க...?" என்று எச்சரிக்கையாகப் பேச...

அவனோடு தனியாக வர அவள் விரும்பவில்லை என்பதை மறைமுகமாகச் சொல்கிறாள் என்பதை உணர்ந்



தவன் முகம், இங்கு மாறியது. அந்த எரிச்சல் அவன் குரலிலும் வர...

"ரெஸ்டாரண்ட்ல கூட காத்தமுத்துவை இடையில் வைத்துத்தான் பேசுவியா...? அப்புறம் என்ன... தனியாப் பேச...?" என்று பல்லைக் கடிக்க...

"இல்லை, இல்லை... அங்க நம்மைச் சுத்தி ஆட்கள் இருப்பாங்கல்ல... சோ அங்கே காத்தமுத்து தேவை யில்லை..." என்று விம் போட்டு விளக்காத குறையாகச் சொல்லி வைத்தவள்... எப்படியும் விஜய்யைச் சம்மதிக்க வைத்து விடலாம் என்று முடிவோடு இருந்தாள். அவன் முடியவே முடியாது என்றால்... தன் மேல் அவனுக்குத் தற்போது இருக்கும் பரிதாபத்தைப் பயன்படுத்தியாவது... தன் காரியத்தைச் சாதிக்க வேண்டும் என்ற நம்பிக்கையோடு உறங்க..

அவள் கணவனோ, "என்னை நம்பித் தனியா வரமாட்டியாடி நீ...?" என்று பொங்கிக் கொண்டிருந்தான், அவனின் படுக்கையில்.

"போனைப் போட்டு அத்தான் பொத்தான்னு உசுப் பேத்தி விட்டுட்டு, நீ தூங்கியிருப்பே... என்னைப் புலம்ப வெச்சுட்டியேடி..." என்றவனுக்கு, இத்தனை நாட்களாய் அடக்கியிருந்த... அடக்கி வைக்கப்பட்டிருந்த அவன் தேகத்தின் தேவைகள், அவனை மீறி அவன் மனைவியைத் தேட ஆரம்பிக்க... விஜய்யின் அரைகுறைத் தூக்கத்தையும் துரத்திய புண்ணியத்தையும் கட்டிக் கொண்டாள் அவனின் மனைவி.

ரெஸ்டாரண்ட்டில் தன் எதிர்ப்புறமாய் அமர்ந்திருந்த தன் மனைவியை, நேற்றைய மோகத்தின் தாகம் தீராமல் ரசித்தபடி அமர்ந்திருந்தான் விஜய், அணிந்திருந்த கண்ணாடி யின் வழியே.

இத்தனை நாள் மருத்துவ மனை வாசத்தில் அவள் தேகம் இன்னும் இளைத்திருக்க... கண்களில் பழைய

துள்ளல் எல்லாம் இல்லை. இவனை நேரடியாகப் பார்ப்பதைத் தவிர்த்தவளாய்... சுற்றிலும் பார்வையினை ஓட்டிக் கொண்டிருக்க... விஜய்க்கு அது இன்னும் வசதியாகப் போக... சந்தோஷமாய்த் தன் பார்வையின் பயணத்தில் பயணித்துக் கொண்டிருக்க... தீக்ஷா அப்போதுதான் அவனைக் கவனித்தாள்.

“அந்த கூலரைக் கழட்றீங்களா...?” என்றவள், மனதிற்குள்ளே...

‘ஏற்கெனவே வில்லன் ரேஞ்ச்தான்... இதுல இது வேற...!’ தாளித்தபடி அமர்ந்திருக்க... வேறு வழியின்றி விஜய்யும் அதைக் கழட்டி மேஜையில் வைத்தபடி,

“ம்ம்... சொல்லு. என்ன விசயம்...? அதுவும் தனியே வந்து பேசுகிற அளவுக்கு...” என்ற போதே அவனின் மொபைலும் அடிக்க, எடுத்துப் பார்த்தான்.

“இளமதி...” என்று முணுமுணுத்தவாறே போனைக் காதில் வைக்க...

“விஜய்.... எப்படி இருக்கீங்க...? ரெண்டு பேரும் சேர்ந்து வந்திருக்கீங்க... கூலர்ல சூப்பரா...” என்று அவளை முடிக்கவிடவில்லை...

“ஹேய்... இங்கேதான் இருக்கியா...? எங்கே இருக்கே?” என்றபடி விஜய் சுற்றும் முற்றும் தேட... தீக்ஷாவும் அவனோடு சேர்ந்து, யார்.... என்று ஆவலாய்ப் பார்த்தாள். இளமதி இரண்டு டேபிள் தள்ளி அமர்ந்திருந்தாள்.

விஜய்யைப் பார்த்துக் கையசைத்த இளமதி... தான் அங்கு வருவதாகக் கை காட்டிச் சொல்ல... விஜய் வேகமாய் மறுத்து, தான் அங்கு வருவதாய்க் கை காட்டியவன்...

“5 மினிட்ஸ்...” என்று தீக்ஷாவிடம் சொன்னபடி இளமதியை நோக்கிச் செல்லப் போக... தீக்ஷாவோ அவனைத் தடுத்து நிறுத்தும் விதமாக,



“5 மினிட்ஸ்தான்... நான் பேசிட்டுப் போயிடறேன்... அதுக்கப்புறம்... உங்க கேர்ள் ஃப்ரண்டோட பொறுமையாப் பேசிட்டு வாங்க,” என்று வெடித்தாள் தீக்ஷா.

அவளையும் மீறி வார்த்தைகளில் பொறாமை, ஜ்வாலை விட்டு எரிய... விஜய்... அதை எல்லாம் லட்சியம் செய்யாமல் இளமதியின் அருகில் போயிருந்தான்.

முதலில் இளமதி தீக்ஷாவைப் பற்றித்தான் விசாரித்தாள்.

இன்னும் அதே நிலையில்தான் தீக்ஷா இருக்கிறாள் என்றும்...

எங்கு ஏதாவது இளமதி உளறி விடுவாளோ என்று பயந்துதான், தானே அவளை நோக்கி வந்ததாகவும் விஜய் கூற... இளமதி, தீக்ஷாவை ஒரு பார்வை பார்த்தபடியே, விஜய்யைப் பார்த்து ஆறுதலாய்ப் புன்னகைத்தாள்.

“எல்லாம் என் அண்ணனாலே வந்தது...” என்று விஜய்யிடம் தன் அண்ணனைச் சாட...

விஜய், அதற்கு எந்தப் பதிலும் சொல்லாமல்....

“இளமதி... அவளுக்கு இளமாறன் இறந்த விபரம் எதுவும் தெரியாது...” என்று மட்டும் சொன்னவன், இளமதியோடு சில வார்த்தைகள் பேசிவிட்டு... மீண்டும் தீக்ஷாவிடம் வர... தீக்ஷா முகத்தில் எள் போட்டால் வெடித்துவிடும் அளவில், கொதி நிலையில் அமர்ந்திருந்தாள்.

“சாரி. எக்ஸ்ட்ரா ஃபைவ் மினிட்ஸ் ஆகிருச்சு...” என்று அமர்ந்தவனை முறைத்தவளுக்கு,

“அவளை எல்லாம் பார்த்தவுடன்... முகத்தில் பிரகாசம் வரும். என்னைப் பார்த்தால் மட்டும் கடுப்பு வரும் இவனுக்கு!” மானசீகமாகத் திட்டியபடி அமைதியாகவே இருக்க...

அவளின் திடீர் மௌனம் உணர்ந்த விஜய்...

"சொல்லு...!" என்று தானே ஆரம்பித்தான்.

"பரவாயில்ல... நீங்க அவங்க கூடவே பேசிட்டு வாங்க. நான் வீட்டுக்குப் போகிறேன்... நாம இன்னொரு நாள் கூடப் பேசிக்கலாம்..." படபடவெனப் பொரிந்தாள் தீக்ஷா.

அவளின் பேச்சை... கோபத்தை... மனதோடு மட்டும் ரசித்தவன்... அவளிடம்,

"இப்போ உன் பிரச்சனை என்ன? இளமதி இங்க வந்ததா? இல்லை..." என்று இழுக்க,

வேகமாய், "அவ வந்தா எனக்கு என்ன பிரச்சனை?" என்று பட்டென்று சொன்னவள்... உடனடியாகத் தன் குரலை மாற்றி, "எனக்கு உங்க ஆஃபீஸுக்கு வரப் பிடிக்கலை... அது தான் என் பிரச்சனை. எனக்குப் பிடித்த வேலை பார்த்தா தான் எனக்கு ஆறுதலா இருக்கும்.

"எங்க வீட்டில் உங்ககிட்ட பேச மாட்டேங்கிறாங்க. அதனாலதான் சாட்சிக்காரன் காலில் விழுவதை விட... சண்டைக்காரன் காலில் விழலாம்னு சொல்வாங்கள்ல..." என்று நிறுத்தி அவனை நேருக்கு நேராய்ப் பார்க்க...

"யார் சண்டைக்காரன்...?" என்று இவன் முறைத்தான்.

"ப்ச்ச்... எனக்குப் பதில் வேண்டும். என் விசயத்தில் ஏன் நீங்க தலையிடுறீங்க... நான் வாழப் போற கொஞ்ச நாளில் என் விருப்பம் போல வாழ விடுங்க. உங்களைக் கெஞ்சிக் கேட்டுக்கறேன்."

அவள் சொல்லும்போதே விஜய் முகம் சுருக்கினான்.

"என்ன லூசு மாதிரி... வாழப் போற கொஞ்ச நாள்னு... என்ன உளர்ற...?" என்று அதட்ட,

"எனக்கு எல்லாம் தெரியும். அம்மா சொல்லிட்டாங்க. என் மேல அந்தப் பரிதாபம் இருக்கிறதுனாலதானே... நான் என்ன பேசினாலும் பொறுமையா இருக்கீங்க..."



"வாயை மூடு. உன் மேல எனக்கு எந்தப் பரிதாபமும் இல்லை... அதே விஜய்தான் நான்... நீ வேலைக்குப் போக வேண்டும் என்றால் என்னோடு வர வேண்டும். இல்லை வீட்டில்... ரெண்டு ஆப்ஷன்ல எது வேண்டுமென்றாலும் உன் இஷ்டம்... போதுமா?" என்று இவனும் சுள்ளென்று விழ...

அதற்கு மறுத்துத் தீக்ஷாவும் பேசப் போக... அப்போது அங்கு வந்த இளமதி...

"பை விஜய்... பை தீக்ஷா!" என்றவள்... விஜய்யிடம், "விஜய், கூலர்ல சூப்பரா இருந்தீங்க..." என்று வேறு சொல்லித் தீக்ஷாவைப் பார்க்க...

'ஏன் முறைக்கிறோம்...' என்று புரியாமலே தீக்ஷா அவளை முறைத்தாள், தன் இயல்பை மாற்றி.

"விஜய்... தீக்ஷா ரொம்ப சூடா இருக்காங்க போல... கூல் பேபின்னு சொல்வாங்க. என்ன விசயம்... எனி வே... கூல் பேபிக்குக் கூலா வாங்கிச் சமாதானப்படுத்திக் கூட்டிட்டுப் போங்க..." என்று விளையாட்டாய்ச் சொன்னாலும்... தன் பல நாள் குமுறலை ஏதோ ஒரு வகையில் ஆற்றியவள்... அங்கிருந்து அகல...

விஜய்க்குத்தான் இப்போது டென்சன் ஏறியது. இருந்தும் மறைத்தபடி... இளமதியைப் பார்த்துப் புன்னகைத்து வழி அனுப்ப...

விஜய் கழற்றி வைத்திருந்த கண்ணாடியைப் பார்த்த படியே... தீக்ஷாவும் கடுப்பில் இருந்ததால்... இளமதியின் வார்த்தைகள் அவளைப் பெரிதாகப் பாதிக்கவில்லை.

'ஏன் தனக்கு இவ்வளவு கோபம் வருகிறது...' என்று உணரவும் முடியாத நிலையில் இருந்தவள்... எரிச்சலில் இன்னும் அதிகக் கோபத்துடன்,

"நான் உங்க ஆஃபீஸுக்கு வந்தேன் என்றால் உங்க ளுக்குத்தான் தலைவலி அதிகம். என்னை வலுக்கட்டாயமா

வரச் சொன்னால்... நீங்கதான் என்னால் அனுபவிக்கணும். அதுக்கப்புறம் அம்மா, தாயேனு கையெடுத்துக் கும்பிட்டு நீங்களே என்னை வீட்டுக்கு அனுப்புவீங்க..." என்று இகழ்ச்சி யாய்ப் பார்க்க...

"அப்படி ஒரு நிலை வராது. போதுமா?" என்று விஜய்யும் சளைக்காமல் பேச...

"ஓ... நீங்க கையெடுத்துல்லாம் கும்பிட மாட்டிங்கல்ல... ஸ்டேட்டஸ் தடுக்கும். கழுத்தைப் பிடிச்சுத்தானே தள்ளி விடு வீங்க. அதுதானே உங்க பழக்கம்..." என்றவளின் குத்தலான வார்த்தைகளில் பதில் சொல்ல முடியாமல் வாயடைத்துப் போனவன் அவள் கணவன்தான்.

அமைதியாக அமர்ந்திருந்தவனிடம், "உங்களை நம்பி என்னை அனுப்பி வைக்க நினைக்கிறாங்க... நான் உங் களைப் பற்றி உங்க தம்பி யுகி கிட்ட மட்டும்தான் சொல்லி வச்சேன். அவனே உனக்கு சப்போர்ட் பண்ணும்போது... உன்னைப் பற்றித் தெரியாத என் அம்மா, அப்பா, அண்ணாவை எப்படிக் குத்தம் சொல்ல முடியும்?" என்று முடிக்கவில்லை.

"நான் அன்னைக்கு என்னடி பண்ணினேன் உன்னை? என்னமோ ரொம்ப சீன் போடற...!" என்று பொறுக்க முடியாமல் விஜய்யும் பேச ஆரம்பிக்க... தீக்ஷா கனலாய்ச் சிவந்தாள்.

"யார் சீன் போடுறா...? அப்போ எதுக்குடா சட்டையைக் கழற்றிட்டு உள்ளே வந்த? அதுக்குப் பதில் சொல்லு..." என்று சத்தமாய்ப் பேச...

விஜய் அதற்கு என்ன பதில் சொல்வது என்று தெரி யாமல் மௌனித்து... அவளை விடுத்து வேறு திசையில் வெறிக்க ஆரம்பித்தான்.



"சொல்ல முடியலதானே... என்னை நேருக்கு நேராகக் கூடப் பார்க்க முடியவில்லை தானே... ஆனாலும் உன் கேவலமான புத்தியை எங்க வீட்ல இதுவரைக்கும் சொல்லாம இருக்கிறதுக்கு ஒரே காரணம் என் அண்ணிதான்..." தன் படபடப்பை உணர்ந்தவள்... அதைக் குறைத்து,

"இங்க பாருங்க... நான் மறக்க நினைக்கிற விசயத்தை மறுபடியும் பேச வைக்காதீங்க... என்னை விட்டுருங்க... என் விசயத்தில் தலையிடாதீங்க!" என்று அவனுக்கு மரியாதையை மீண்டும் கொடுத்து... சமாதானமாய்ப் பேசி முடித்து நிமிர...

"மாட்டேன்னு சொன்னா என்ன பண்ணுவ... எனக்கு ஒரு வாய்ப்புக் கொடு. நான் நல்லவன்னு உனக்கு நிரூபிக் கிறேன்... போதுமா? இதுதான் என் முடிவு. என்னோட என் ஆஃபீஸுக்கு வரலாம்... இல்லை, வீட்டில் இருக்கலாம்... யோசிச்சு இரண்டில் ஒண்ணைச் சொல்லு. இப்போ வா, போகலாம்!" என்று எழுந்தே விட்டான் விஜய்.

அவனது இந்தப் பிடிவாதத்தால் ஏற்கெனவே விஜய் மேலிருந்த கோபத்தின் அளவு இன்னும் அதிகமாகத்தான் செய்தது தீக்ஷாவுக்கு...

இருந்த ஆத்திரத்தில் அவன் மேசை மீது விட்டுப் போன கண்ணாடிக்குத்தான் பாதிப்பாகியது... கோபத்தோடு காரின் அருகே வந்தவள்... விஜய் பார்க்கும்படி அந்தக் கண்ணாடியைக் கீழே போட்டு உடைக்க...

விஜய் அவளிடம்... "கோப்த்தை என்கிட்ட காட்டு... மனசுல வச்சு... உன்னை நீயே அழிச்சுக்காத!" என்றவனிடம், அதற்கு மேல் பேசாமல் உள்ளுக்குள் பொருமியபடியே வீடு வந்து சேர்ந்தாள் தீக்ஷா.

'நான் எதுக்குடா என்னை அழிச்சுக்கணும்... என் கோபத்தினால உன்னைத்தான் அழிப்பேன்..." என்றவள்...

"உன்னைப் பழி வாங்கக் கடவுளா எனக்குச் சந்தர்ப்பம் கொடுத்திருக்கார்னு நெனச்சுக்கிறேன்... நான் ஒதுங்கிப் போகலாம்னுதான் பார்த்தேன். நீயே வலிய வந்து இம்சை வேண்டும்னு சொல்ற...' மனதுக்குள் திட்டம் வகுத்தவள்... தன் வீட்டில் விஜய்யோடு வேலைக்குச் செல்லச் சம்மதம் சொல்லி... அதைச் செயலாற்றவும் ஆரம்பித்தாள்.

விஜய் அலுவலகத்திற்கு அழைக்க அவளது வீட்டுக்கு வந்தால்... குறைந்தது ஒரு மணி நேரமாவது அவனைக் காக்க வைத்து, அதன்பின் கிளம்புவது... முக்கியமான வேலையில் இருக்கும்போது... தான் வீட்டிற்குப் போக வேண்டும் என்று உடனே கிளம்புவது... மெயில்களை எல்லாம் டெலிட் செய்வது... கஸ்டமர்களிடம் ஒழுங்காய்ப் பதில் சொல்லாமல் தவிர்ப்பது... என்று அவனுக்குத் தொழில் ரீதியாகத் தொல்லை கொடுக்க... விஜய் ஓரளவு தாக்குப் பிடித்தான்தான்.

ஆனால் கஸ்டமர்களிடம் அவளின் நடவடிக்கைகள்... வேறு சில பிரச்சனைகளை இழுத்துவிட,

கஸ்டமர் சம்பந்தமான பணிகளுக்கு எல்லாம்... வேறொரு ஆளை நியமித்து விடலாம் என்று விஜய் முடிவெடுத்து... அதற்கும் ஆள் எடுக்க... அந்தப் பெண்களிடம் இந்த அலுவலகம் சரியில்லை என்று ஆரம்பித்து... ஏதாவது சொல்லிப் பயமுறுத்த... வந்த இரண்டு பெண்களும் வந்த 2 நாட்களிலேயே வேலையை விட்டுச் செல்ல, சுரேந்தர் ஓரளவு நிலைமையை யூகித்தவன்... விஜய் பில்டர்ஸில் வேலைக்கு வந்திருந்த சாருமதி என்ற பெண்ணைப் பற்றி விஜய்யிடம் சொன்னான்.

"அண்ணா... அந்தப் பொண்ணு ரொம்பத் தைரியசாலி. எதையும் ஆராய்ந்து பண்ணுவா... கண்டிப்பா தீக்ஷா சொல்றதை எல்லாம் நம்ப மாட்டானுதான் நினைக்கிறேன். நம்ம வேலைக்கும் ஏற்ற கேண்டிடேட்... வெறும் கஸ்டமர் பாயிண்ட் ஆஃப் வியூ-ல எடுக்காமல் மேனேஜ்மெண்டுக்கும் சேர்த்து அப்பாய்ண்ட் பண்ணலாம்... இது என்னோட ஒப்பீனியன் மட்டும்தான்!" என்று அண்ணன் மனம் கோணாத வாறு முடிக்க... விஜய்யும் யோசிக்க ஆரம்பித்தான்.

விஜய் முதலில் எடுத்த பெண்கள் எல்லாம்... வாடிக்கையாளர் சேவைக்கு மட்டும்தான்...

இப்போது சுரேந்தர் சொல்வதை யோசித்தவனுக்கு... சுரேன் சொன்னது போல சாருமதியை வி.டி. ப்ரமோட்டர்ஸ்க்கு நியமனம் செய்ய ஒப்புக் கொண்டான்.

இதற்கிடையே தீனாவின் ப்ராஜெக்ட் பல குளறுபடிகளால் நிறுத்தபட்டிருக்க... தீனாவுக்கு விஜய்யின் உதவி தேவைப்பட... விஜய்யோ பிடிவாதமாய் மறுத்து ஒதுங்கி விட்டான்.

**அ**ன்று சாருமதி வி.டி. ப்ரமோட்டர்ஸில் சேரும் தினம். வழக்கம் போல விஜய்யைக் காக்க வைத்துப் பின் கிளம்பிய தீக்ஷா... போகும் வழியில், "இன்னைக்குப் புதுசா இரு கேண்டிடேட் வராங்களாமே... சுரேந்தர் அத்தான் சொன்னாரு. ஆஃபீஸ்ல இருக்கிறது 30 பேரு... ஏற்கெனவே ஒரு 10 பேர் என் புண்ணியத்தில் ஓடிப் போயிட்டாங்க... பார்க்கலாம், இந்தப் பொண்ணை..." என்று விஜய்யைப் பார்த்துச் சொல்ல...

"நீ எத்தனை பேரை விரட்டினாலும்... என்னை விட்டு வெளியில் போக முடியாது!" என்றவனிடம்...

"உங்களுக்குக் கல்யாணம் ஆகிற வரைதான் ஆடுவீங்க. அதுக்கப்புறம் பார்க்கலாம்..." எள்ளலாய்ப் பார்க்க...

இதற்குப் பதில் சொல்லவில்லை விஜய்... வெளியில் வேடிக்கை பார்த்தபடி வந்தவனைப் பார்த்தபடி வந்தவள்... விஜய்யின் இன்றைய தோற்றம் உறுத்த...

"நீங்க ஏன் இளமதியை வேண்டாம்னு சொன்னீங்க?" என்று கேள்வியைச் சந்தேகமாய் இழுக்க...

விஜய் இதற்கு வாய் திறந்தான்.

"எனக்கு மேரேஜ் ஆகிடுச்சுனா... உன்னை எப்படி மிரட்டுறது... அதுனாலதான்!" - சொன்ன வார்த்தைகள் அவனுக்கே புரியவில்லை எனும்போது... தீக்ஷாவுக்குப் புரியுமா?

தீக்ஷா விழிக்க... அதை உள்ளுக்குள் ரசித்தபடி,

"என்னை ஒருத்தி கண்ட்ரோல் பண்ண வந்துட்டானா.. என்னோட கெத்து என்னாகிறது... அதனாலதான் வேண்டாம்னு சொல்லிட்டேன்..." விளக்கமாய்ச் சொல்ல...

தீக்ஷா புரிந்தும் புரியாமலும் முறைத்தவள்...

லிஃப்ட்டுக்கு வரும்வரை அவன் சொன்னதன் அர்த்தத்தை அனைத்துக் கோணத்திலும் யோசித்தவள்...

'என்னை மிரட்டுறதுக்காகக் கல்யாணம் வேண்டாம்னு சொல்லிட்டானா...? இல்லை, ஒரு பொண்ணோட தன் வாழ்க்கையை ஷேர் பண்ணிக்கக் கூட விரும்பாதவனா... இவன் என்ன சொல்ல வருகிறான்? என்னையவே குழப்பிட்டான்...!' என்று குழம்பியபடி லிஃப்டினுள் நுழைந்தவள்...

விஜய், காத்தமுத்து இருவரும் வரும் முன்னரே மூடியபடி மேலே ஏற...

விஜய், காத்தமுத்துவிடம்... "ஒரு டூ மினிட்ஸ் லேட் பண்ணினேன். என்ன பண்ணிட்டா பாருங்க... தனியாப் போய்ட்டு இருக்கா!" என்று வேகமாய்ப் படிகளில் ஏறினான்...

இவனது அலுவலகம்... 6ஆவது தளம்... மூச்சிரைக்க வேகமாய் ஏறியவன்... தீக்ஷா கதவைத் திறந்து உள்ளே நுழைவதைப் பார்த்த பின்தான் தன்னை ஆசுவாசப்படுத்தி மூச்சை இழுத்து விட்டான்.



அதன் பின் உள்ளே நுழைய....

தீக்ஷாவிடம் அந்தப் பெண் உரிமையாய்ப் பேசிக் கொண்டிருக்க... தீக்ஷா சந்தோசமாய்ப் பேசிக் கொண்டிருக்கிறாள் என்பது அவள் பின்புறமிருந்தே உணர்ந்தவன்... அவள் அருகே கடந்து செல்ல...

"உனக்கு வேற ஆஃபீசே கிடைக்கலையாடி... போயும் போயும் இதுதான் கிடைத்ததா?"

அவன் காதுகளில் கேட்ட வார்த்தைகளில் நிமிர...

தீக்ஷாவின் முன் நின்ற அந்தப் பெண் விஜய்யைப் பார்த்து விழித்தாள்.

அவள் பணி நியமனத்திற்கு வந்த புதிய பெண் என்பதை உணர்ந்த விஜய்க்கு... அவள் தீக்ஷாவுக்குத் தெரிந்த பெண் என்பது புரியாமல் இல்லை.

முதலில் வேலைக்கு எடுப்போம்... அதன் பின் எந்த அளவுக்கு நெருக்கமானவள் என்பதை வைத்தே அவளிடம் தீக்ஷாவைப் பற்றிச் சொல்ல வேண்டும் என்று முடிவு செய்து...

சாருமதியை உள்ளே அழைக்க... அவளோ... தீக்ஷாவின் பள்ளித் தோழி பார்வதி என்பதும்... அதிலும் சாரகேஷ் இவள் அண்ணன் என்பதும் தெரிய வர... விஜய் மனது ஆட்டம் கண்டது.

சாரகேஷ், தீக்ஷாவிடம் மீண்டும் பழைய காதலைப் புதுப்பிப்பானோ என்றுதான் அவன் மனம் தூக்கி வாரிப் போட... விஜய்க்குப் படபடப்பு அதிகமாக அலுவலகத்தை விட்டு வெளியேறி வந்தவனுக்கு... ஏனோ அவனுக்குச் சிகரெட்டின் துணை தேவைப்பட... அதை நாடிப் போனவனுக்கு... ஏனோ அதை வாயில் வைத்து அனுபவிக்க முடியவில்லை.

ஒரு பாக்கெட் முழுவதையும் கையில் வைத்துக் கீழே போட்டவன்... அசோக்கை அழைத்து சாரகேஷ் பற்றிய

விபரத்தைச் சேகரிக்கச் சொல்லி விட்டுத்தான் மீண்டும் அலுவலகம் வந்தான்.

அதன் பிறகு பார்வதி, சாரகேஷ் மூலம் தீக்ஷா செய்த திருவிளையாடல்களை நினைத்துச் சிரித்தவன்... தன்னவள் எப்படியோ தன்னிடம் வந்து சேர்ந்து விட்டாள்தான். ஆனால் தன் மனைவியாய் வரவில்லையே... ஆற்றாமையில் கண்கள் கரித்தன விஜய்க்கு.

தன்னைக் கணவனாய்த் தேடித் தன் வீட்டிற்கு வந்தவள்... தன்னைக் கணவனாய் உணர்ந்து வரவில்லையே என்ற துக்கம் அவனுக்குள்ளே அவனைச் சுழன்றடிக்க...

தீக்ஷாவின் ஞாபகம் வாட்டும் போதெல்லாம்.. அவளின் பழைய குவார்ட்டர்ஸின் இளம் தோழர்கள்தான் இவனுக்கு ஆறுதல்.

விளையாட்டு மைதானத்தில், கடந்த கால நினைவுகளில் சங்கமித்திருந்தவனை... சிவா அழைத்தான்.

"விஜய் அண்ணா... அடுத்து நாம் ஃபீல்டிங் பண்ணப் போறோம்... எப்படியாவது ஜெயிக்கணும், அண்ணா...!" என்று அழைத்துக் கொண்டு போக... விஜய் தன் துக்கம் மறந்து... மறைத்து... அவர்களோடு சென்றான்.

**சா**ரகேஷ்... வீட்டிற்குள் நுழைந்த வேகத்திலே.... அவன் நிதானம் தவறி இருப்பது புரிய... பார்வதி அவன் அருகில் வேகமாய் வர... சாரகேஷ் தடுமாறினான்.

அவன் விழாமல் பிடித்து நிறுத்திய பார்வதி... "என்ன அண்ணா... என்ன ஆச்சு... ஏன் இப்படி இருக்க...?" என்று விசாரிக்க,

"நம்ம தீக்ஷா ப்ரெயின் டெத்ல இறந்து போயிட்டாளாம்... இப்போ இருக்கிறது சக்தி..." என்று திக்கித் திணறி ஆரம்பித்தவனை...



அதிராமல், அவனை முறைத்தாள் பார்வதி.

அவளின் முறைப்பை லட்சியம் செய்யாமல் அகல்யா சொன்னவற்றைச் சொல்ல...

பார்வதியோ, "சத்தியமா நீ டாக்டருக்குப் படிச்சுதானே வந்த... இல்ல, காப்பி அடிச்சு வந்துட்டியா... என் ஃப்ரெண்ட் எனக்குத் தெரியாதா... நீ உண்மையிலேயே அவளை லவ் பண்ணியிருந்தா... உனக்குத் தீக்ஷா பற்றிய சந்தேகமே வந்திருக்காது..." என்றவள், வேகமாய் உள்ளே போய் விஜய் கொடுத்திருந்த டாக்குமெண்ட்ஸை எடுத்து வந்து அவன் முன் வைத்தவள்...

"நானும் இதை இன்னும் பார்க்கலை. ஆனால் என் ஃப்ரெண்ட் தீக்ஷா உயிரோட இருக்கானு உறுதியா சொல்வேன்..." என்று சாரகேசைப் பார்க்க...

அப்போதும் நம்பிக்கை இல்லாமல் ஃபைலில் பார்வையைப் பதித்து... பக்கங்களை வேகமாய்த் திருப்ப... அது திருமதி தீக்ஷா விஜயேந்தரைப் பற்றிய விபரங்களை எல்லாம் சொல்லி முடித்திருக்க.. சாரகேஷ் நிம்மதியாகப் பார்வதியைப் பார்த்தான்.

விஜய் வீட்டிலோ... விஜயேந்தரை எதிர்பார்த்துக் காத்திருந்த தீக்ஷாவிடம் யுகி வசமாய் மாட்ட... விஜய்யிடம் காட்ட வேண்டிய தன் ஆவேசத்தை எல்லாம் யுகியிடம் காட்டிக் கொண்டிருந்தாள் தீக்ஷா.

## 49

**அ**றையில் தன் கணவனுக்காகக் காத்திருந்த தீக்ஷாவுக்கு, அவன் வருவான் என்று காத்து விழி பூத்துப் போனதுதான் மிச்சம். போன் அடித்தாலும் விஜய் எடுக்கவில்லை.

இவள் அடங்குவாளா என்ன... விஜய் வந்து என்னைத் திட்டித் தீர்த்தாலும் விடுவதில்லை என்ற முடிவோடு அவனுக்கு ரிங் அடித்துக் கொண்டே இருந்தாள்... அவன் மொபைலை சைலண்ட் மோடில் போட்டுத் தன் நினைவுகளில் ஆழ்ந்து போயிருந்ததை அவள் அறிவாளா?

மொபைலைக் கையில் எடுத்து... ரிங் போட்டபடியே தன் அறையை விட்டு வெளியே வரவும்... யுகி போனும் கையுமாகத் தன் அறைக்குப் போகவும் சரியாய் இருக்க... யுகியைப் பார்த்தவள்.. தன் கணவனை அழைக்கும் பணியை விடுத்துத் தன் நண்பனைத் தேடிச் சென்றாள், அவனின் அறைக்கு.

யுகி வழக்கம் போல் ஆர்த்தியோடு போனில் பேசிக் கொண்டிருக்க... புயலென உள்ளே நுழைந்த தீக்ஷா... முதல் காரியமாய்ச் செய்தது அவனிடமிருந்து போனைப் பறித்தது தான்.

இதை எதிர்பார்க்காத யுகி... முறைத்தான் தீக்ஷாவைப் பார்த்து.

போனை வாங்கியவள்... "சாரி ஆர்த்தி! யுகி கொஞ்ச நேரம் கழிச்சு உன்கிட்ட பேசுவான்..." என்றவள், அவளின் சம்மதம் கிடைத்த பிறகு போனை வைக்க...

"கொஞ்சம் கூட மேனர்ஸ் இல்லை..." என்று கோபமாய் முறைத்தான்.

இவளோ சிரித்தபடி, "அதெல்லாம் நமக்கெதுக்கு... நீ நான்லாம் அதைப் பார்க்கிறவங்களா என்ன...!"

அவனின் கோபம் புரிந்தும் அதை எல்லாம் தூரப் போட்டவளாய்ப் பேச...

யுகியும் நிதானத்திற்கு வந்து... "என்ன விசயம் தீக்ஷா...?" என்று சாதாரணமாய்ப் பேசுவதற்கு முயற்சி செய்ய... அது போதாதா அவனின் தோழிக்கு!



"முக்கியமான விசயம்... வா, மாடிக்குப் போகலாம்..." என்று கண்களைத் தீவிரமாக வைத்துச் சொல்ல...

"சரி... 10 மினிட்ஸ் கழித்து வரு... " என்று சொல்லக் கூட விடவில்லை. அவனின் கைப் பற்றி இழுத்துக் கொண்டு மாடிக்குப் போனாள்.

"விடு, தீக்ஷா..." என்று கைகளை உதறியவனிடம்...

"சார்... என்ன விஜயேந்தர்... சுரேந்தர்... இவங்க ரெண்டு பேரோட தம்பின்னு நிரூபிக்கிறீங்களோ... ரொம்ப தான் பிகு பண்ற... என்னமோ பழையபடி பேச ட்ரை பண்றேன்னு சொன்ன... எனக்கும் விருமாண்டிக்கும் உள்ள பிரச்சனையில் நீ தலையிடாதே!" என்று மிரட்டும் தொனியில் பேசியவள்... தான் விருமாண்டி என்று சொன்னதை நினைத்துத் தலையில் அடித்தபடி...

"விஜய் அத்தானே என்னைப் புரிஞ்சுக்கிட்டார்லடா... அவர் என்னைப் பார்த்துப்பாரு... என்னை மட்டும் அல்ல... எங்க வாழ்க்கையையும்..." என்று அழுத்தமாய் முடித்தவள்...

"காயா, பழமா!" என்று விரல் நீட்டியபோது அவனின் தோழியாகக் குறும்பில் கண்கள் மின்னச் சிரிக்க...

யுகி அப்போதும் இறுக்கமாகவே நின்று கொண்டிருந் தான்.

"டேய், என்னைப் பார்த்தால் பாவமா இல்லையாடா...?" என்று தன் விளையாட்டை எல்லாம் நிறுத்தி... உருக்கமாக அவனைப் பார்த்தவளின் கண்களில் நீர் கசிந்தது.

"என்னை யாருமே புரிஞ்சுக்க மாட்டீங்களா...? உன் கிட்ட என்னால உரிமையா சண்டை போட்டு என் கோபத்தைக் காட்ட முடியுது... ஆனால் உன் அண்ணன் கிட்ட என்ன பேசுறது... எப்படிப் பேசுறதுனு கூடத் தெரியலடா எனக்கு. என் நிலைமை எந்தப் பொண்ணுக்கும் வரக் கூடாது, யுகி.

"உன் அண்ணனைப் பழி வாங்கிட்டேன்னு சொல்லித் தானே பேச மாட்டேன்கிற... அதைச் சரி செய்ய இப்போ நான் தயாரா இருக்கேன். ஆனால் அவர் தயரா இல்லைடா..." என்று நெகிழ்வாய்ப் பேச...

அவளின் பேச்சில் எள்ளலாகச் சிரித்தான். இருந்தும் அதில் வேதனையின் சாயலே விஞ்சியிருக்க...

"இதை விட என் அண்ணன் கஷ்டப்பட்டார்னு சொன்னா உனக்குத் தெரியுமா... இல்ல, புரியுமா... சொல்லு, தீக்ஷா! நீ பார்த்த என் அண்ணனாவா இருக்கார்... சுத்தமா அவரோட இயல்பையே மாற்றி... இப்போது கூடப் பராவாயில்லை. இந்த வீட்டுக்குக் கூட வராமல்... இந்த வீட்டுச் சாப்பாடு கூடச் சாப்பிடாமல்... உன் பக்கத்திலேயே தன் உயிரை மட்டும் கூட்டுக்குள் வச்சுக்கிட்டு அவர் அனுபவிச்சது உனக்குத் தெரியுமா...?

"நான் பார்த்தேன். பக்கத்தில் இருந்து பார்த்தேன்... உன்னை மட்டும் மேரேஜ் பண்ணாமல் இருந்திருந்தால் கண்டிப்பாக அவருக்கு இந்த நிலைமை வந்திருக்காது..."

வார்த்தைகளால் அவளைப் பந்தாடிக் கொண்டிருந்த வனைப் பார்த்தபடியே நின்று கொண்டிருந்தாள் தீக்ஷா, வார்த்தைகள் கூட மறந்து...

விஜய்யை அவளால் அப்படி நினைத்துக் கூடப் பார்க்க முடியவில்லை என்பதுதான் நிஜம்... கற்பனை கூடச் செய்ய முடியவில்லை அவளால்.

"என்ன பேசி என்ன பயன்... உன்னால முடிந்த அளவு படுத்திட்ட... இன்னும் வேற ஏதாவது மிச்சம் மீதி இருக்கா என்ன... அதையும் முடிச்சு அந்த மனுசனை உயிரோட கொன்னுடு. ஏனென்றால் அது மட்டும்தான் என் அண்ணன் கிட்ட இருக்கு..." என்ற போதே...



யுகியைத் தன் பேச்சால் பந்தாட நினைத்தவள்... அவன் வார்த்தைகளின் வீச்சுத் தாங்காமல்... தாங்கும் திராணியற்றுப் போனவளாய்... சுவரோடு சரிந்து உட்கார்ந்த தீக்ஷா அழ ஆரம்பிக்க... யுகி பதறித் தன் கோபத்தை யெல்லாம் விட்டு விட்டு... அவளின் கைகளை ஆறுதலாகப் பற்ற... அதில் தீக்ஷா இன்னும் அழ ஆரம்பித்தாள்.

"முடியலடா எனக்கு... அவராவது இத்தனை மாதங்கள் தாங்கிக்கிட்டார்... என்னால 2 நாள் கூடத் தாங்க முடியலை... புரிஞ்சுக்க மாட்டேங்கிறார்டா... பழைய தீக்ஷாவா தான் இருக்கேன்... ஆனால் அவரோட மனைவியா... அது தான்டா எனக்கு முடியலை... எனக்கு ஞாபகம் வரலைன்னா கூட ஞாபகப்படுத்த எல்லோரும் ட்ரை பண்ணுவீங்கதானே... அதை அவர் பண்ண மாட்டேன்கிறார்டா...

"அவரோட வாழ்ந்த வாழ்க்கையை நான் வேற யார் கிட்ட கேட்க முடியும்... நீயே சொல்லு. ஆனால் பிடிவாதம் பிடிக்கிறார்டா!" ஆதங்கம் பாதி... கோபம் பாதி... எனத் தன் நண்பனிடம் கொட்ட,

அவளின் அருகில் அமர்ந்த யுகி, "அண்ணா பிடிவாதம் லாம் பிடிக்கலை, தீக்ஷா... உன் உடல் நிலை அந்த மாதிரி இருக்கு. அவரும் என்ன பண்ணுவார்... சரி, விடு... அழாதே. இனி நல்லதே நடக்கும்னு நினைப்போம்..." என்று தேற்ற முயன்றான்.

"என் பைத்தியம் எனக்குத் தெளிஞ்சுருமாடா...?" என்று தேம்பியபடி கேட்டவளிடம்...

வாய் விட்டுச் சிரித்த யுகி... "எது.. விருமாண்டி மேல இருக்கிற பைத்தியமா...?" என்று கண்ணடிக்க...

அழுகையைத் துடைத்த தீக்ஷா, சிரித்தபடி... "அது என்றைக்குமே போகாது..." என்று வேகமாய்ச் சொல்ல...

"யப்பா... இந்தக் கொசுத் தொல்லை தாங்க முடியலடா, யுகி... காதல் மழையில உன்னையே தாக்குறாங்கடா..." என்று நெஞ்சைப் பிடித்துப் போலியாய் நடிக்க...

"உன்னை..." என்று அவனை அடிக்க எழுந்த தீக்ஷாவை விட்டு யுகி வேகமாய் நகர்ந்து கீழிறங்கி ஓட...

விஜய் மாடிப் படிகளில் இவர்களைப் பார்த்தபடியே ஏறி வந்தான்.

விஜய்யைப் பார்த்த அடுத்த நொடியே தீக்ஷா அப்படியே நின்று விட... யுகி தன் அண்ணனின் பின்னால் நின்றவன்... "அண்ணா... என் கூடப் பேச மாட்டியா நீன்னு அடிக் கிறாண்ணா... எனக்கே இந்த நிலை... பார்த்து..." என்று பயந்தவனாய் நடித்து விஜய்க்கும் எச்சரிக்கை செய்தவன்,

"ஹேய் தீக்ஷா... சின்னப் பையனைக் கூட்டி வந்து மிரட்டுனேல்ல... உன் ஆளே வந்துட்டாரு... பிடிச்சுக்கோ..." என்று தன் அண்ணனை அவள் புறம் தள்ளிவிட்டு ஓடிப் போய் விட...

விஜய், தீக்ஷாவிடம்... "ஹ்ம்ம்... ஃப்ரெண்ட்ஸ் ரெண்டு பேரும் சமாதானம் ஆகிட்டீங்க போல..." என்றபடி... "கீழே அம்மா தேடிட்டு இருக்காங்க உன்னை... வா, போகலாம்..." என்று சொல்லி விட்டு, மீண்டும் வந்த வழியே போன வனை... எட்டிக் கைப் பிடித்து இழுத்தாள் தீக்ஷா...

அவன் இழுத்தால் இவள் மேலே போய் விழுவாள்... விஜய் விழுவானா... அந்த இடத்திலேயே நின்றவன்...

"என்ன..." என்று மட்டும் கேட்டான், அவள் புறம் திரும்பாமலே...

தீக்ஷாவுக்கு உள்ளுக்குள் உதறல் எடுத்தாலும்.. அவனைப் பற்றியிருந்த தன் கரங்களின் நடுக்கத்தை உணர்ந்தாலும்... மனதில் அவன் தனக்கு யார் என்ற உறவினை அழுத்தமாகப் பதிய வைத்தவள்... அதே அழுத்தத் தோடு அவன் கைகளைப் பற்ற... விஜய்க்கும் உள்ளம் துடித்தது.



தவிக்கும் தன்னவளை... அதே நிலையில் இருக்கும் அவனால் புரிந்து கொள்ள முடியாதா என்ன...? அவளைத் தன்னோடு இழுத்து அணைத்து... இருவரின் வேதனை யையும் களைய முடியாத தங்கள் இயலாமையை எண்ணி மறுகியவன்...

இத்தனை நாள் அவள் தள்ளி இருக்கும்போது... தன்னை அடக்கி அவளை விட்டு விலகி இருக்க முடிந்த அவனால் இன்று அது முடியாமல் திணறினான்... இருந்தும் ஆழப் பெருமூச்சை இழுத்து விட்டவன்...

தன் கரம் சேர்ந்த அவள் கரத்தைத் தன் மற்றொரு கையால் மனம் வலிக்கப் பிரித்தவன்... அப்படியே நின்றான்.

தீக்ஷாவுக்கு யுகியிடம் பேசியது போல விஜய்யிடம் பேச முடியவில்லை...

'என்ன பேசுவது... எப்படிப் பேசுவது... தான் பேசி னாலே அவன் முகம் சுழிப்பானே... இல்லை, அப்படி எல்லாம் இப்போது நினைக்க மாட்டான்...' என்று யோசித்து மண்டை காய்ந்ததுதான் மிச்சம்...

தன் காதலை எப்படி அவனிடம் புரிய வைப்பது... அவனோடு வாழ வந்தாகி விட்டது. அதுவும் அவனின் மனைவியாகவே... இன்னும் என்ன எதிர்பார்க்கிறான் இவன்...? மனதோடு போராடினாள் தீக்ஷா.

தன் கையை வேறு விஜய் விலக்கி விட... அதன் வெளிப்பாடாக,

"இதற்குப் பதில் நான் செத்திருக்கலாம் அத்தான்...!" என்று கோபத்தோடு சொன்னவளை, அதே கோபத்தோடு பார்த்தான்.

"என்ன பார்க்கிறீங்க..." என்று தன் பயம் எல்லாம் தெளிந்து பேச...

"வேற என்ன என்னைப் பண்ணச் சொல்ற...?" என்று ஆரம்பித்தவன்... பின் அமைதியான குரலில், "சுரேன் - பாரு விசயமா அம்மா பேச வரச் சொன்னாங்க..." என்று காரணம் சொல்லி மீண்டும் நகர்ந்தவனை...

தன் பயம், தன் தயக்கமெல்லாம் தூக்கி எறிந்த தீக்ஷா...

"என்ன வேணும்னாலும் பண்ணலாம்... அது எல்லாத் துக்கும் நான் தயாரா இருக்கேன். கழுத்துல தாலி இல்லாமல் கூட... போதுமா? நான் சொல்ல வருவது புரியுதா...? இல்லை, இன்னும் விளக்கமாச் சொல்லணுமா...?" என்று நிறுத்த...

"ஓ... அவ்வளவு பெரிய ஆளாகிட்டீங்களா நீங்க... எனக்குப் புரியலையே... நீங்க விளக்கமாச் சொல்லுங்க, மேடம்!" என்று எகத்தாளமாய்க் கேட்டவனின் கண்கள், அவளை உரசாமல் வேறெங்கோ இருக்க...

விஜய்யின் எகத்தாளமான பேச்சு... தீக்ஷாவை இன்னும் அதிகமாய் உசுப்பேற்ற...

சுற்றும் முற்றும் பார்த்தவளுக்கு... மாடியில் இருந்த அறை ஏதுவாய்ப் போக... விஜய்யை இழுத்தபடி அங்கு செல்ல... விஜய் எதிர்ப்புக் காட்டாமல், இலகுவாகவே அவள் பின் சென்றான்.

உள்ளே சென்றவன்... அங்கிருந்த கட்டிலில் அமர்ந்தபடி... என்னதான் செய்யப் போகிறாள் என்று பார்க்க ஆரம்பித்தான்.

கதவைத் தாழிட்டவள்...

அவனருகில் வந்து அமர்ந்தாள்.



அவனைப் பார்க்க... அவனோ மொபைலில் ஆராய்ச்சி செய்து கொண்டிருக்க, ஆத்திரத்துடன் மொபைலைப் பறித்துப் போட்டு விட்டு... அவனை முறைத்தபடி இருக்க...

"ஏய்... என்னை எதுக்கு இப்போ முறைக்கிறே... இதுக்குத்தான் கூட்டிட்டு வந்தியா?" என்று தனக்கு நடந்து கொண்டிருந்த ரணகளத்திலும்... ஒரு ஓரத்தில் குதூகலமாய்க் கேட்க...

"என்ன ஏய்... என் பேரு தீக்ஷா... தீக்ஷா விஜயேந்தர்... ஒழுங்கா பேரைச் சொல்லிக் கூப்பிடுங்க..."

விஜய்க்கு அவளின் பேச்சு, அவனை மீண்டும் அவர்களின் வசந்த காலத்துக்கு இழுத்துச் சென்றாலும்... அவனால் மூழ்க முடியவில்லை. தன்னைத்தானே சமாளித் தவன்... எழுந்தபடி,

"விளையாடாதே... கீழே தேடப் போறாங்க..." என்று.

"ஆமா... எனக்கு ரொம்ப ஆசை, உங்களோட இப்படி விளையாட..." நக்கலாய்ச் சொல்ல... விஜய் ஆச்சரியமான பார்வையைப் பார்க்க...

"உங்களுக்குப் பயம்... எங்கே என் கிட்டே தோத்துப் போயிருவோம்னு... என் கிட்ட பேசக் கூடப் பயப்படறீங்க..." சவாலாய்க் கேட்டவளிடம்... திரும்பிய விஜய்,

"உன் கிட்ட மொத்தமா என்னைத் தோற்றதினால தான்... என்னை நானே இன்னைக்கு ஜெயித்து வெளியே வர முடியாமல் இருக்கிறேன்..." என்று நகர...

அவன் கைகள் அவள் கைகளோடு சிறைப்பட்டி ருந்தன.

"ஐ லவ் யூ விஜய் அத்தான்..." 5 வார்த்தைகள் தான். ஆனால், தீக்ஷாவுக்கு அதை அவனிடம் சொல்லி முடிக்கும்

முன், அவளின் இதயம் ஆயிரம் முறை துடித்திருக்கக் கண்களும் கலங்கியிருந்தன.

தன்னவளின் கண்கள் காணச் சகியாத விஜய்... மீண்டும் அமர்ந்து... கட்டிலோடு சாய்ந்து, கண்களை மூடியபடி... சில நொடிகள் இருந்தவன்... 'எப்படி இவளைச் சமாளிப்பது?' என்று யோசிக்க ஆரம்பித்தான்.

விஜய்யின் அமைதியில் கலக்கம் கொண்டவளாய்...

"அத்தான்..." மெல்லக் குரல் கொடுக்க... "ம்ம்..." என்ற ஒலியில், தன் பதிலை அவளுக்குக் கொடுத்தவன், தொடர்ந்தான்.

"நீ வேறே நான் வேறே இல்லைடி... உன் உயிரோடும், உடலோடும் இரண்டறக் கலந்தவன் நான். நான் உன்னைத் தள்ளி வைக்க நினைக்கலை... புரிஞ்சுக்க... உன் பேர் சொல்லிக் கூப்பிட என் உயிர் வரை துடிக்கிறேன்.. நீ சொன்னதாலே நான் உன் பேரைக் கூப்பிடாமலிருக்கிறேன் என்று நினைக்கிறாயா...? ஒரு வைராக்கியம்தான். இந்தர்னு ஆசையோடு கூப்பிட்ட உன் குரலுக்காக ஏங்கிட்டு இருக்கேன். அதுவரை நானும் உன் பேரைக் கூப்பிட மாட்டேன்னு எனக்குள்ளே ஒரு சபதம்..." என்ற போதே,

"ஐ லவ் யூ இந்தர் அத்தான்...!" என்று கணவன் ஏங்கிக் கேட்ட பெயரைச் சொல்லி விட்டுச் சிறு பிள்ளை போல் ஆவலாய்ப் பார்த்தவளை... வலியாய்ப் பார்த்தான் அவள் கணவன்.

இதுவா அவன் எதிர்பார்த்தது? தன்னிடம் காதல் உணர்ந்த நொடியே அவள், அவன் மீது எடுத்துக் கொண்ட உரிமை, இந்தத் தீக்ஷாவிடம் இல்லையே...!

'இந்தர் அத்தானா...? நீ என்னை இந்தர் என்று மட்டும்தான் சொல்வாய் என்று திருத்த முடியுமா...? இப்போதும்



தீக்ஷாவிடம் காதல் இருக்கிறதுதான்... ஆனால், விஜய்யால் அதை அந்நியமாக நினைக்க முடிகிறதே தவிர... அனுபவிக்க முடியவில்லை. இன்னொன்று, இதை அனுபவிக்க ஆரம் பித்தால், என் தீக்ஷா எனக்குக் கிடைக்காமல் போய்விடு வாளே...!' உள்ளம் பதைபதைத்தது.

தீக்ஷாவை அவளுக்குப் புரிய வைக்க முயற்சித் தவனாய்...

"சரி... உன் வழியிலேயே வருகிறேன்... நீ என் மனைவி... அது மறுக்க முடியாத உண்மை. அதே போல நான் உன் கணவன்... அதுவும் மாற்றவே முடியாத ஒன்று. நீ என்னை விட்டுப் பிரியும் வரை... நீயும் நானும்... கணவன் மனைவி என்ற பந்தத்தில் சந்தோஷமாய்க் கூடி வாழ்ந்தி ருக்கிறோம். ஆனால், அதை எதையும் ஞாபகப்படுத்தும் இழி செயலை நான் செய்ய மாட்டேன். அப்படிச் செய்தால், நம் தாம்பத்தியமே கேவலம் ஆகி விடும். நாம வாழ்ந்த வாழ்க்கை ஒரு துளியேனும் உன் உடலிலும்... மனதிலும் இருக்கிறது என்றால்... நீ சொன்னாய் அல்லவா, எல்லா வகையிலும் உன்னைத் தரத் தயாராக இருக்கிறேன் என்று... அதெல்லாம் வேண்டாம்... அந்தப் பேராசையெல்லாம் எனக்கு இல்லை.

"ஆனால், என்னைக் காதலோடு அணைத்து ஒரே ஒரு இதழ் தீண்டல்... இங்க கூட வேண்டாம்... இங்கே... உதடுகளைத் தாண்டி..." கன்னத்தில் விரல் வைத்துக் காண்பித்தவன்... அதற்கு மேல் பேசமுடியாமல் நிறுத்த... தீக்ஷா...

தன் கணவன் சொன்னதைச் செய்து விடும் உத்வேகத்துடன் அவனருகில் நெருங்கி... அவனை நோக்கிக் குனிந்தவளால்... அதற்கு மேல் அவள் பெண்மை இடம் கொடுக்கவில்லை. தன்னை ஆராதிக்கும் ஆணிடத்தில் கூடத் தயக்கம் காட்டுவதுதான் பெண்மையின் இயல்பு. இது திரியில்

தூண்டப்படும் ஒளியைப் போன்றது. தூண்டல் இன்றித் தீக்ஷாவின் பெண்மை தயக்கமாய் நின்று விட... கண்களில் வழிந்த கண்ணீர் முத்துகள்தான் அவள் கணவனின் கன்னங்களை முத்தமிட்டன.

கண் திறந்த விஜய், "நான் உன் கணவன்னு இந்த நொடி என்னால உன் கிட்டே நிரூபிக்க முடியும், உடல் ரீதியாகவும்... மன ரீதியாகவும். ஆனால், அது உன்னால முடியாதுடி..." அதற்கு மேல் விஜய்யால் சொல்ல முடியாமல்... உணர்வுகளின் தாக்கத்திற்கு ஆளானவன்... தீக்ஷா அழுகையை உணர்ந்து அவனையுமறியாமல்,

அவனின் கரங்கள்.... அவளை ஆறுதல் படுத்துவது போலத் தன்னோடு அணைத்துக் கொள்ள... மழையில் நனைந்த கோழிக் குஞ்சுக்குத் தன் தாய்க் கோழியின் அரவணைப்புக் கிடைத்தது போல ஒன்றியவளின் தேகம்... விஜய்யின் தேகம் உரசிய போது, தயக்கத்தில் நடுங்கத்தான் செய்தது.

இருந்தும், தன் தயக்கம் எல்லாம் தூரப் போட்டு அவனோடு நெருங்கியவள்... அதில் மூழ்காமல்... அவன் தீண்டலில்.... மனமும் உடலும் தன் இந்தரைத் தேட ஆரம்பிக்க... அந்த ஏக்கத்தில், அவள் தன்னவனோடு ஆழப் புதைய ஆரம்பிக்க... தீக்ஷாவின் அணைப்பு இறுகியதை உணர்ந்த விஜய்... உடனே அவளை நிமிர்த்த... அவளோ மயங்கிச் சரிந்திருந்தாள்.

தன் தவறை எண்ணித் தலையில் அடித்துக் கொண்ட விஜய்... உடனே அங்கிருந்து அவளைத் தங்கள் அறைக்கு அழைத்துச் சென்று... வேகமாய் அவளுக்குரிய மாத்திரைகளைக் கொடுத்து, அவளை உறங்க வைத்தவன்... அனைவரையும் கோபத்தில் திட்டித் தீர்த்து விட்டான். முக்கியமாக யுகேந்தர்தான் அவனிடம் பெரியதாய் வாங்கிக் கட்டிக் கொண்டான்... அவனால் தான்... அவன் உண்மை



யைச் சொன்னதால்தான் இந்த நிலைமை... என்று விஜய் கருதியதால் யுகிக்குத் திட்டு அதிகமாய் விழுந்தது.

இடையில் எழுந்தவள்... மீண்டும் கொடுக்கப்பட்ட மாத்திரைகளின் காரணமாக மறுபடியும் உறங்க ஆரம் பித்தாள்.

அதிகாலைதான் தீக்ஷா மீண்டும் கண் விழித்தாள். தன் எதிரில் இருந்த சோபாவில் உட்கார்ந்திருந்தபடியே கண் மூடி இருந்த விஜய்யைப் பார்த்தவளுக்கு... அழுகை கட்டுக் கடங்காமல் பெருகியது.

இப்போது தன் நிலைமை தெளிவாக விளங்க... தன் கணவன், தன்னை விட்டு விலகியிருக்கும் காரணம் புரிந்து... மௌனமாய் அழுதாள், எங்கு இவள் அசைந்தால் அவன் எழுந்து விடுவானோ என்று.

ஆனால், அவன் உட்கார்ந்த நிலையிலேயே கண் மூடி இருப்பதைப் பார்த்தவள்... கட்டிலை விட்டு இறங்கி... அவனின் தூக்கம் கலையாமல் தலையணையை வைக்கப் போக... விஜய் எழுந்து விட்டான்.

அவனிடம் எதுவும் பேசாமல்... தலையணையை நீட்டியவள்... தன் படுக்கையில் மீண்டும் வந்து படுத்தபடி கண்ணீரால் தன் தலையணையை நனைக்க ஆரம்பித்தாள்.

விஜய்யும் தீக்ஷாவைத் தொந்தரவு செய்யாமல் உறங்க முயற்சி செய்ய... விதியின் கைகளில் கைப்பாவையாய் ஆன அந்த இரு உள்ளங்களுக்கும் நடந்த உணர்ச்சிப் போராட்டத்தில், உறக்கம் கூட அவர்களை விட்டுத் தள்ளி நின்று சிரிக்க ஆரம்பித்தது.

அடுத்த 2 நாட்களிலேயே... பார்வதியின் வீட்டுக்குப் பெண் பார்க்கும் படலத்திற்கு ஏற்பாடு செய்திருந்ததால்... விஜயேந்தர் குடும்பம் பரபரப்பாக இருந்தது.

கலைச்செல்வி – ராகவேந்தர் நீண்ட நாட்களுக்குப் பிறகு, தன் குடும்பத்தின் உற்சாகத்தில், தங்கள் மூத்த மகனின் வாழ்க்கையில் நடந்த துக்கத்தையெல்லாம் ஒதுக்கி விட்டுச் சுரேந்தரின் திருமணத்தில் மூழ்கினர்.

தன் தோழியே இந்த வீட்டுக்கு வரும் உற்சாகத்தில், தீக்ஷா அன்று காலையில் இருந்தே தலை கால் புரியாமல் ஆடிக் கொண்டிருந்தாள். விஜய்தான் அவளை அடக்க முடியாமல் பரிதாபமாய் இருந்தான்.

தீக்ஷா இந்த 2 நாட்களில் விஜய்யிடம் சரளமாகப் பேச ஆரம்பித்திருந்தாள். அவள் கணவன் என்று நினைத்து, அதன் உறவில் தன் நிலையைக் குழப்பிக் கொள்வதை விட்டவள்... தன் வழக்கமான இயல்பிலேயே அவனோடு பழக ஆரம்பித்து இருந்தாள். அதனால்...

“அத்தான்... எனக்கு இந்தப் புடவை நன்றாக இருக்கிறதா...? அந்தப் புடவை நன்றாக இருக்கிறதா...?” என்று அவனை வேறு இம்சைப் படுத்த ஆரம்பிக்க...

விஜய், ஜெயந்திக்குக் கால் செய்து, “அத்தை... கொஞ்சம் மேலே வந்து, இவளை என்னன்னு கேட்டுட்டுப் போங்க...” என்ற பிறகுதான் தன் அலம்பலை நிறுத்தி... ஒழுங்காய்த் தயாராக ஆரம்பித்தாள்.

பார்வதியின் வீட்டுக்கு அகல்யா வந்திருந்தாள். பார்வதியை அலங்கரித்துக் கொண்டிருந்தவள்... வெளியில் கார் சத்தம் கேட்க... எட்டிப் பார்க்க... இறங்கிய அத்தனை பேரிலும் அவள் கண்களில் முதலில் பட்டது தீக்ஷாதான்.

தீக்ஷாவின் கடந்த காலத்தை... சாரகேஷ் மற்றும் பார்வதி, சுரேந்தர் மூலம் கேட்டறிந்து இருந்தனர். அது அகல்யாவுக்கும் சாரகேஷ் மூலமாகச் சொல்லப்பட்டிருக்க... தீக்ஷாவைப் பார்த்த அகல்யாவுக்கு... தீக்ஷா மேல் அதிகப் பரிதாபமும்... அதே நேரத்தில் கொஞ்சம் பொறாமையும்



வந்தது. தன் மனம் கவர்ந்தவனின் மனதினைக் கொள்ளை அடித்தவள் ஆயிற்றே!

பின் தன்னைச் சரிப்படுத்தியபடி... வந்திருந்த அனைவரையும் வரவேற்றாள் அகல்யா, சாரகேஷோடு சேர்ந்து.

தீக்ஷாவும் அகல்யாவைக் கவனித்தபடிதான் இருந்தாள்.

பெரியவர்கள் பேசிக் கொண்டிருக்க, தன் தோழியின் அறைக்குச் சென்றாள் தீக்ஷா.

தீக்ஷாவைப் பார்த்த பார்வதிக்கு... தீக்ஷாவின் கடந்த காலத்தை நினைத்து அவளையும் மீறிக் கண் கலங்கி விட...

“ஹேய், கல்யாணப் பொண்ணு... இந்த நேரத்தில் கண் கலங்கலாமா...?” என்று தன் நிலையை மறைத்து அவள் முன்னே சிரிக்க...

பார்வதி, தீக்ஷாவை அணைத்தபடி...

“என்ன... உன் ஆளு உன் கிட்டே ஒழுங்கா இருக்கிறாரா...? இல்லை... உன் ஃப்ரெண்ட்டோட ஹெல்ப் ஏதும் வேண்டுமா...?” என்று அவளைச் சீண்ட...

தீக்ஷாவுக்கும் தன் வாழ்க்கை குறித்த கலக்கம், அவள் முகத்தில் நொடியில் தோன்றி மறைந்தாலும்... சமாளித்தபடி...

“என்னை விடு பாரு... அவங்க யாரு... அவங்கதான் பாப்புவா...?” என்றபடி சாவதானமாய்ப் பார்வதியின் முன்னால் இருந்த டேபிளில் அமர்ந்தபடி கேட்க... பாரு புரியாமல் திகைத்து நோக்கினாள்.

தோழி... புரியாத பார்வையை உள்வாங்கியபடி...

“வகூல் ராஜா எம்.பி.பி.எஸ்.ஸோட பாப்புவான்னு கேட்டேன்... போதுமா...?” என்றபோதே அகல்யாவும் உள்ளே

நுழைந்தவள்... பார்வதியை அழைத்து வரச் சொன்னதாக வந்து, பார்வதியை அழைக்க...

"ஹ்ம்... டாக்டரம்மா... இப்பவே சார்ஜ் எடுத்துட்டாங்க போல... மருகமகள்ன்ற ஸ்தானத்தை..." பார்வதிக்கு மட்டும் கேட்குமாறு சொன்னவள்... சற்று நேரத்தில் ஹாலிற்கு வந்து, விஜய்யின் அருகில் அமர்ந்தும் விட்டாள்.

பார்வதி, அனைவருக்கும் காபி எடுத்து வர... சுரேந்தரின் அருகில் வந்தவள்... அவனை ஒரு நொடி பார்க்க... சுரேந்தரும் அதே நொடி பார்க்க...

பார்வதி வரும்போதே தீக்ஷா, விஜய்யின் அருகில் குனிந்து...

"அத்தான்... என்னைத் திட்டக் கூடாது... யுகியையும் முறைக்கக் கூடாது... எதுவா இருந்தாலும்... நம்ம வீட்ல வெச்சுக்கலாம்... ஓ.கே.வா...?" என்று முன்னறிவிப்புக் கொடுக்க...

விஜய்க்குத் தூக்கி வாரிப்போட்டது.

'தீக்ஷா என்ன செய்யப் போகின்றாளோ... இல்லை, என்ன செய்து வைத்திருக்கின்றாளோ...' என்று...

அவனையு மறியாமல்...

"என்ன பண்ணி வெச்சுருக்க... யுகியும் கூட்டா உனக்கு...?" என்று பல்லைக் கடிக்க,

"கூல் அத்தான்... இனிமேல்தான் பண்ணப் போகிறேன்..." என்று விஜய்யிடம் சொல்லி, ஏற்கெனவே மடக்கி வைத்திருந்தாள்.

சுரேந்தரின் அருகில் பார்வதி வந்ததும்... யுகி தீக்ஷாவைப் பார்த்துக் கண் சிமிட்ட...

தீக்ஷா, யுகி மொபைலுக்குக் கால் செய்ய...



அது...

கண்ணும் கண்ணும் தூரிக்கொள்ள
வெக்கம் கரை மீறிச் செல்ல
அக்கம் பக்கம் யாரும் இல்ல
அய்யய்யோ என்னாகுமோ?
நெஞ்சும் நெஞ்சும் ஒட்டிக் கொள்ள
அச்சம் மட்டும் விட்டுத் தள்ள
சொல்ல ஒரு வார்த்தை இல்ல
அய்யய்யோ என்னாகுமோ?

யுகியின் மொபைல், சுரேந்தரின் கைளில் இருக்க... ஒரு நிமிடம் சுரேந்தருக்கு ஒன்றும் புரியாமல், விழிக்க... பார்வதியின் முகம் நாணத்தில் செவ்வானமாகி, என்ன செய்வதென்று புரியாமல், சுரேந்தரைப் பார்க்காமல், வேறு திசை பார்க்க...

விஜய், தீக்ஷாவைப் பார்த்து முறைக்க..

கண் சிமிட்டினாள் தீக்ஷா.

"அத்தான், என்னைப் பார்க்காதீங்க... அப்புறம் யுகி மொபைல் உங்க கிட்டே வந்துரும். சுரேந்தர் அத்தான் நிலைதான் உங்களுக்கு... ஆனால், நான் பார்வதி மாதிரி வெட்கமெல்லாம் பட மாட்டேன்..." - என்று அவன் காதில் கிசுகிசுக்க...

விஜய், அவளை முறைக்க முயன்று... அது முடியாமல் முகம் இதமாய் மாற... வேறு புறம் திரும்பினான்.

அங்கு சூழ்நிலை அழகாய்... இதமாய்... அவரவர் எண்ணங்களுக்கு ஏற்ப... வண்ணமாய்த் தூரிகை போட... பார்வதியைச் சுரேந்தர் பெண் பார்க்கும் படலம் இனிதாய் முடிந்தது.

அதன் பிறகு நிச்சயம்... திருமணம் என அடுத்து வரப்போகும் மங்கள நிகழ்வுகளைப் பற்றிப் பேச ஆரம்பிக்க... தீக்ஷா மட்டும், பார்வதி வீட்டின் மொட்டை மாடிக்கு யாரும் அறியாது சென்றாள். அங்கு அவள் ஏற்கெனவே எழுதி இருந்த முற்றுப் பெறாமல் இருந்த "Deeksha V" யை "Deeksha Vijay" என்று முடித்தவள், திரும்ப... அங்கு சாரகேஷ் நின்று கொண்டிருந்தான்.

சாரகேஷைப் பார்த்தவுடன்... திகைத்துப் பின் தன்னைச் சமாளித்துப் பேச்சை மாற்றியவள்,

"பாரு அண்ணா... டாக்டரம்மா ரொம்பப் பொறுப்பா இருக்காங்க... எனக்கு அப்படியே ஆப்போசிட்... உங்களுக்கும் பொருத்தமா இருப்பாங்க..." என்று சொல்ல...

அமைதியாய்ப் புன்னகை மட்டும் செய்தான் சாரகேஷ்.

"என்ன சிரிக்கிறீங்க...? மேரேஜ் எப்போ...? அகல்யாவுக்குச் சம்மதம் சொல்லிட்டீங்கதானே...?" தன் படபடப்பை எல்லாம் மறைத்துக் கேட்டாள் தீக்ஷா.

தீக்ஷாவுக்கு ஓரமாய்க் குன்றல் இருக்கத்தான் செய்தது. ஒழுங்காகப் போய்க் கொண்டிருந்த சாரகேஷ் வாழ்க்கையில் திடீரென்று நுழைந்து... குழப்பம் உண்டாக்கி விட்டோமோ என்ற சஞ்சலத்தில் வந்த குன்றல் அது.

அவளின் தொடர் கேள்விகளில், சாரகேஷ் சிரித்தபடி...

"கொஞ்ச நாள் போகட்டும்... பாரு மேரேஜ் முடியட்டும் தீக்ஷா..." என்றவன்... "முக்கியமான போன் வந்தது... அதுதான் மேல வந்தேன்..." என்று சொன்னவனின் பார்வை, அவள் எழுதியிருந்த சுவரில் பட்டு மீள...

"சாரி... சுவரில் கிறுக்குறது தப்புன்னு தெரியும்... இருந்தாலும்..." என்றபோதே,

"மேடத்துக்குச் சுவரில் கிறுக்குறது தப்புன்னு இப்போ தான் தெரியுதா...?" என்று கிண்டல் செய்ய..



அசடு வழிந்தாள் தீக்ஷா. அதன் பின் சாரகேஷ் கீழ் இறங்கிச் செல்ல.. தீக்ஷா அங்கேயே நின்றிருந்தாள். வெளியில் எல்லோரிடமும் சிரித்து... குறும்புடன் விளையாடிக் கலகலப்பூட்டினாலும்... மனதின் வெறுமை மட்டும் அவளை விட்டு அகலவே மறுத்தது. யாரை நினைத்து, அவள் ஏங்கினாளோ... அவன் அருகில் இருந்தும், அவளின் மனதின் தேடல், அவளின் இந்தரை நினைத்து இன்னும் ஏங்கிக் கொண்டிருக்க... தன் அடி மனதிற்குள் இருக்கும் தன் நினைவுகளை ஒவ்வொரு நிமிடமும் தேடிக் கொண்டிருந்தாள் தீக்ஷா. தன்னையே மறந்து தனக்குள் மூழ்கிக் கொண்டிருந்த தீக்ஷாவினை... நினைவுக்குத் திருப்பியது அவளது கணவனிடமிருந்து வந்த அழைப்புதான்.

விஜய் 10 நிமிடம்தான் தீக்ஷாவைத் தனியே விட்டிருந்தான். அதுவே அவனால் முடியவில்லை. மாடி ஏறும் போதே கவனித்தான்தான். உடனே அழைக்காமல்... 10 நிமிடம் அவகாசம் வைத்து அழைத்தும் விட்டான்.

விஜய்யின் போன் அழைப்பில் கீழே தீக்ஷா வர... அப்போது சாரகேஷின் அன்னை தேவகி, ஒரு புதுப் பிரச்சினையைக் கிளப்பி இருந்தார்.

அது என்னவென்றால்... சாரகேஷ் திருமணம் முடிந்த பின்தான் பார்வதியின் திருமணம் நடத்தப்பட வேண்டுமென்று...!

ஆனால், சாரகேஷ் அதை மறுத்துப் பிடிவாதம் பிடிக்க... தேவகியும் அதே பிடிவாதத்தில் நின்றார்.

தேவகி, இதுதான் சரியான சமயம் என்று சாரகேஷை கார்னர் செய்ய... விஜய் குடும்பம்தான் இடையில் மாட்டி விழித்தது.

விஜய்தான் நிலைமையைச் சமாளித்து, "பாருவுக்கும் - சுரேனுக்கும் நிச்சயதார்த்தம் இப்போ முடிச்சுடலாம் அம்மா...

அதன் பிறகு சாரகேஷ் முடிவைப் பொறுத்து, நாம் திருமண நாளைக் குறித்துக் கொள்ளலாம்...” என்று பிரச்சனையை முடிவுக்குக் கொண்டு வர, விஜய் குடும்பம் கிளம்பியது.

அதன் பின் தங்கள் அறைக்குள் விஜய்யோடு வந்த தீக்‌ஷா...

“விஜய் அத்தான்... பாரு என் கிட்டே சொல்லியிருக்கா... இன்னைக்குப் பார்த்தோம்ல... பாரு வீட்ல இருந்தாங்கல்ல அகல்யா... அவங்க சாரகேசை லவ் பண்றாங்களாம்... இந்த வசூல்ராஜா எம்.பி.பி.எஸ். தான்...” என்ற போது...

விஜய்யின் முறைப்பில்,

“சரி, சொல்லலை... பாரு அண்ணன்தான் ரொம்பப் பிகு பண்றார்...” என்று முடிக்கவில்லை...

விஜய் உடனே...

“ஹ்ம்... தெரியும். நாம பண்ணி வெச்சுடலாம்...” என்று அன்று சங்கரிடம் சொன்ன அதே வார்த்தைகளைத் தன் மனைவியிடமும் சொல்ல...

தீக்‌ஷா சட்டென்று எம்பி... அவன் கன்னத்தில் பட்டும் படாமலும் இதழ் பதித்தவள்... அதே வேகத்தில் அவனை விட்டுச் சற்றுத் தள்ளி நின்று...

“அன்னைக்கு நீங்க சொன்னீங்கல்ல... அட்லீஸ்ட் இங்கேயாவது கொடுக்க முடியுமான்னு...” என்றவள்,

“நான் உங்க தீக்‌ஷாவாக மாறுவேனோ இல்லையோ... தீக்‌ஷா விஜயேந்தரா கண்டிப்பா மாறுவேன்...” என்றபடி அவன் பதிலையும் எதிர்பாராமல் அங்கிருந்து மறைந்தாள்.

விஜய்யோ, தன் உணர்வோடு விளையாடுபவளை... எதிர்க்கும் திராணியின்றித் தலையில் கை வைத்து அப்படியே அமர்ந்து விட்டான்.



## 50

விஜய் பில்டர்ஸ் அலுவலகத்தில்... மாலை 6 மணி.

கிட்டத்தட்ட அலுவலகமே காலியாகி இருக்க.. கிளம்பலாம் என்று முடிவெடுத்த பார்வதி... சுரேந்தரின் அறையைத் திரும்பிப் பார்த்தாள்.

பார்வதி இந்த அலுவலகத்தில் சேர்ந்த பிறகு... இன்னும் சாரகேஷ் எச்சரிக்கையாக இருந்தான். பார்வதி, சுரேந்தரோடு வேலை பார்ப்பதில், அண்ணனாக சாரகேசுக் குக் கொஞ்சம் தயக்கம். தானே கொண்டு போய் விட்டுத் தானே கூட்டியும் வந்தான். சுரேந்தருக்குக் கூட இதில் கோபம் தான்.

பார்வதியிடமும், விஜய்யிடமும் தன் குமுறலைச் சொல்ல...

பார்வதியால்... சுரேந்தரையும் சமாதானப்படுத்த முடிய வில்லை... சாரகேசுவிடமும் பேச முடியவில்லை.

விஜய்தான், சுரேந்தரைச் சமாதானப்படுத்தும் விதமாக...

“டேய்... நீயும் அண்ணன் ஸ்தானத்தில் இருந்து பாருடா... நம்ம ராதாவை இப்படிக் கல்யாணத்துக்கு முன்னால தீபனோட தனியா அனுப்பி இருப்போமாடா...? சாரகேஷ் நிலைமையையும் புரிஞ்சுக்கோடா...!” என்ற போது...

சுரேந்தருக்கு ஒன்று மட்டும்தான் தோன்றியது.

தீக்‌ஷா எதைப் பற்றியும் கவலைப்படாமல் விஜய்யைப் பார்க்க வந்ததை எல்லாம் நினைத்தவன்... ‘இவளும் தீக்‌ஷா ஃப்ரெண்ட்தானே... அவளுக்கிருக்கிற துணிச்சல்ல ஒரு பங்காவது இருக்குதா... அண்ணா... ஆட்டுக்குட்டினு...’ என்ற பெருமூச்சுதான் அவனுக்குள் தோன்றியது...

இன்றும் சாரகேஷ் வரவிற்காகக் காத்திருந்தவள்... அவன் வருவதற்கு முன் சுரேந்தரிடம் வழக்கம் போல் செலவிடும் 10 நிமிடங்களை எதிர்நோக்கிக் காத்திருந்தாள்.

சுரேந்தர் அன்று சீக்கிரமாகவே அழைக்க... வேகமாய் அலைபேசியை எடுக்க...

"பாரு... இன்னைக்கு கொஞ்சம் வேலை இருக்கு.... ஒரு மணி நேரம் எக்ஸ்ட்ரா ஆகும்," என்று சொல்லி விட்டு... அவள் பதிலைக்கூட எதிர்பார்க்காமல் போனை வைக்க..

பார்வதி நின்றது... சுரேந்தர் முன்தான்.

"சுரேன், மணி 6 ஆகப் போகுது... அண்ணா வேறே வந்துட்டு இருப்பார். 6 மணிக்கு மேலே அப்படி என்ன வேலை...? எங்க அண்ணா வந்தா, நான் போயிட்டே இருப்பேன். கம்பெனி டைம் 6 தானே...! அதுக்கும் மேலே ஒரு நிமிசம் கூட இருக்க மாட்டேன். இதெல்லாம் சொல்லித்தான் இங்கே வேலையில் சேர்ந்தேன்..." என்று பொரிந்து தள்ள...

புருவம் தூக்கிப் பார்த்தான் சுரேந்தர்.

"என்ன...?" என்பது போல் இவளும் பார்க்க...

"நான்கிறதுனால இப்படிப் பேசுறியா...? இல்லை, எல்லார் கிட்டேயுமே இப்படித்தான் பேசுவியா...?"

முறைத்தாள் பார்வதி...

"நீங்கன்றதுனால இவ்வளவு விளக்கம்... இல்லைன்னா... ஜஸ்ட் மெயில் பண்ணிட்டுப் போயிட்டே இருப்பேன். போதுமா...?"

"துணிச்சல்தான்... ஆனா இதெல்லாம் என் கிட்டே காட்டு... உங்க அண்ணா கிட்டே காட்ட வேண்டியதுதானே...! எங்கேயாவது வெளியில் போகலாம்னு கூப்பிட்டால்... வந்துராத...! சரி... ஆஃபீஸ் போகும் போதும் வரும் போதும் ஒண்ணா போய் வரலாம்னு பார்த்தா... உங்க அண்ணா அதுக்கும் தடா சொல்லிட்டாரு. ஆமா... அப்படி என்ன பண்ணிடுவேன்னு உங்க அண்ணன் நெனைச்சுட்டு இருக்காரு... கல்யாண நாள் குறிக்கிறதுலேயும் இன்னும் பிரச்சனை அவராலே... என்ன நெனைச்சுட்டு இருக்காரு...?" என்று சொன்னவன்...



"இன்னைக்கு ஏழு மணி வரைக்கும் நீ என் கூடத் தான் இருக்கனும்..." என்று கட்டளை போல் கூறியவனை நோக்கி அதிர்ந்து பார்த்தவளை...

"என்ன லுக்... வில்லனைப் பார்க்கிற மாதிரி பார்க்கிற...?" என்று சிரித்தான் சுரேந்தர்.

அவன் வேண்டுமென்றே வம்பிழுக்கப் பார்க்கிறான் என்று உணர்ந்த பார்வதியும்... இப்போது...

"நீங்க என் ஹீரோ சுரேன்..." என்று கண்ணடிக்க...

அலுத்தவனாய்...

"எனக்கு இந்த ஹீரோ போஸ்ட்டெல்லாம் வேண்டாம்... நீ பேச்சை மாத்தாதே. எனக்காக டைம் ஸ்பெண்ட் பண்ணுவியா இல்லையா... அதை மட்டும் சொல்லு!" என்று கராறாய் இருக்க...

"சுரேன்... இது என்ன பிடிவாதம்... அண்ணா இப்ப வந்துருவாங்க... அப்புறம் எப்படி...?" என்று சாரகேசை முன்னிறுத்த...

"உங்க அண்ணா இப்போ வர மாட்டார்... இன்னைக்கு உன்னைக் கூப்பிடக் கூட வர மாட்டார்... நான்தான் உன்னைக் கூட்டிட்டுப் போகணும்..." என்றபோதே, சாரகேஷும் பார்வதிக்குப் போனை அடித்தான்.

"பாரு... நான் வர லேட் ஆகும். நீ சுரேன் கூடப் போயிடும்மா," என்றவன், அவள் பதிலைக் கூட எதிர் பார்க்காமல் போனையும் வைத்து விட்டான்.

பார்வதி, தன் கண்களை விரித்துச் சுரேந்தரை ஆச்சரியமாகப் பார்க்க...

"போன்ல உங்க அண்ணாதானே... ரீசன் என்னன்னு தெரிய வேண்டுமா...? எங்க அண்ணா, உங்க அண்ணா முன்னாலே இருக்கிறார் இப்போ... அதனாலதான்..."

"என்னது...!" என்று வாய் பிளந்தவளை...

"சாரகேஷ் - அகல்யா மேரேஜ் டேட் குறிக்காமல் எங்க அண்ணா திரும்ப மாட்டார். எங்க அண்ணா ஒரு விஷயத்தைக் கையில் எடுத்தார்னா... அதை முடிக்காமல் வைக்க மாட்டார்."

அதைக் கேட்ட பார்வதி, நக்கலாகச் சிரித்தாள்.

"எதுக்குடி இந்தச் சிரிப்பு... அதுவும் நக்கலா...! தீக்ஷா விஷயத்துல எங்க அண்ணா சறுக்கியிருக்கலாம்... அதனால எங்க அண்ணா எல்லா விஷயத்திலயும் கோட்டை விட மாட்டார்...." - என்று கோபமாய்ச் சொல்ல...

"நான் அதை நினைக்கலை... விஜய் அத்தான் எங்க அண்ணா கிட்டப் போய்ப் பேசப் போறாருன்னா... நீங்க அந்த அளவு வீட்ல சீன் போட்டுட்டு இருக்கீங்களா என்ன...!" என்று சுரேந்தரின் காலை வார...

அதற்கும் சலித்தான் சுரேந்தர்...

"எனக்காகவெல்லாம் இல்லை... தீக்ஷாவுக்காக... தீக்ஷா, அகல்யா பற்றிச் சொல்லி இருப்பாள் போல..."

"ஓ..." என்றவள், உடனே,

"தீக்ஷா எப்படி இருக்கா...? என் கிட்டே ஒண்ணும் சொல்ல மாட்டேங்கிறாள்... நல்லாத்தான் இருக்கேன்றா... உங்களுக்கு எப்படித் தெரியுது...? விஜய் அத்தான் அவ கிட்டே பழைய மாதிரி நடந்துக்கிறாரா...?" என்று தன் தோழியின் கவலையில் பேச ஆரம்பிக்க...



சுரேந்தர், இருந்த பொறுமை எல்லாம் போய்... அவளின் அருகில் வந்துவிட்டான்.

"என்னைப் பார்த்தால் எப்படித் தெரியுது உனக்கு...? ஒருத்தன் உனக்காக ஏங்கி... அம்மா தாயேன்னு உன்னைக் கெஞ்சிப் பிடிச்சு வெச்சிருந்தா... அண்ணா... அத்தான்... தீக்ஷான்னு... உலகத்தைப் பத்தி யெல்லாம் பேசு. உன் முன்னால இருக்கிறவனைப் பற்றிப் பேசுறியா... போன்ல மட்டும் கொஞ்சு..." என்றவன், ஆரம்பித்த போது இருந்த குரலில் இருந்த சுருதியின் வேகம், முடிக்கும் போது காதலனாய்க் கனிந்திருக்க...

பார்வதியும் அவர்களுக்கான காதல் உலகில் சஞ்சரித்தவள்...

"இப்போ என்ன... என் சுரேனைக் கவனிக்கணும், அவ்வளவுதானே...!" என்றபடி அவன் தலைக்கேசத்தைத் தன் கைகளால் சரி செய்து விட்டவளை... ஆசையாகப் பார்த்த சுரேந்தர்... இப்போது கள்வனாக மாறியபடி...

"ஹ்ம்... நல்லாக் கவனி..." என்று பார்வதியை இடையில் கையை வைத்து, அவளை மேஜையின் மேல் அமர வைத்தவன்... தைரியமாய் அவள் கன்னத்தில் தன் இதழ் பதித்தும் விட... அதிர்ந்த பார்வதி... அவனைப் பிடித்துத் தள்ளிவிட்டு, இறங்க முயற்சிக்க... அவளால் முடியவில்லை. காரணம், சுரேந்தர் அவளை நகர விடாதவாறு சிறைப் பிடித்திருக்க... முறைத்தாள்.

அதற்கெல்லாம் அசராமல் சுரேந்தர் இருக்க...

"சுரேன்..." என்று சொன்னவள் குரலும் நெகிழ்ந்து, இப்போது வலுவிழந்து போய் இருக்க...

தன் பெயர் சொன்ன அவளின் இதழுக்குத் தன் இதழால் மென்மையாகப் பரிசளித்த சுரேந்தரைத் தடுக்கும் நிலை போய், அதில் ஆழ்ந்து விட்டாள் பார்வதி.

அவனாக விலகும் வரை... பார்வதியும் அதே நிலையில் இருக்க... சுரேந்தர், அவனாகவே தன்னை மீட்டெடுத்துத் தன்னவளை அணைத்தான்.

அவனின் அணைப்பில் இன்னும் மோன நிலைக்குப் போனவளை உணர்ந்த சுரேந்தர்...

"ஹேய் பாரு... டெய்லி... எனக்கு இந்தப் பரிசு கிடைக்குமா... நம்ம கல்யாணம் ஆகிறவரை...?" என்று கிறக்கமாய்க் கேட்டான்.

பார்வதியோ அவனை விட ஒரு படி மேலே போய்...

"மேரேஜுக்கு அப்புறம் இது கூட வேண்டாமா...?" என்று, தான் இருந்த நிலையிலும் அவனை வம்புக்கு இழுக்க...

வாய் விட்டுச் சிரித்தவன்...

"மேரேஜுக்கு அப்புறம் மொத்தமாய் உன்னை எடுத்துக் கிருவேன்... இந்தப் பரிசெல்லாம் யாருக்கு வேண்டும்...!" என்றவனின் வார்த்தைகள் தந்த தாக்கத்தை, அவன் கைகள் அவள் இடையிலும் பதிய வைக்க முயல... பார்வதி... அப்போதுதான் தன் நிலை உணர்ந்தவளாய்... அவனை விட்டு விலகினாள்.

சுரேந்தரும் அவள் நிலை உணர்ந்தவனாய், அவளை விட்டுத் தள்ளி நின்றவன்.

"சரி. நாம ஒரு ரெஸ்டாரண்டுக்குப் போகலாம்... அதுக்கப்புறம் உன்னை வீட்ல ட்ராப் பண்ணுகிறேன்..." என்ற போது, அவன் காதலியிடமிருந்து..

"சரி..." என்ற குரல் கூடக் கம்மலாய் வெளி வந்தது. ஏதோ தப்பு செய்துவிட்டவன் போல... அவளின் முகத்தை நிமிர்த்தியவன்,

"பாரு... என்னைப் பாரு... உனக்குப் பிடிக்கலையா...? பிடிக்கலைன்னா இனி பக்கத்திலே நெருங்க மாட்டேன்...!" என்றவன்...



"மேரேஜுக்கும் முன்னாலே..." என்று முன்னெச் சரிக்கை முத்தண்ணாவாகச் சொல்லி, அப்பாவியாய்த் தன் முன் நின்றவனைப் பார்த்துப் பார்வதியும்...

"அதுக்கப்புறம்... என் பெர்மிஷன் வேண்டாமா சாருக்கு...?" என்று இடுப்பில் கை வைத்துச் சிலிர்த்தவளை...

"சரி விடு... உனக்குப் பிடிச்சிருந்தாலும் பக்கத்தில நெருங்க மாட்டேன்... போதுமா?" என்று குறும்பாய் அவளை மீண்டும் இழுத்தவனை...

"பார்க்கலாம்..." என்று அவளும் சிரிக்க... சுரேந்தரும் அதில் கலந்தான். அதன் பின் இருவருமாய்... அந்த அலுவலகத்தை விட்டுக் கிளம்பினர்.

அதே நேரம் விஜய், சாரகேஷ் மற்றும் அகல்யாவோடு பேசி முடித்திருந்தான்.

சாரகேஷ், இப்போதும் அவன் முடிவில் இருந்து மாற வில்லை.

விஜய் விடாக்கண்டனாக இருந்தால், அவன் கொடாக் கண்டனாக இருந்தான்.

"இல்லை விஜய்... என் முடிவு இதுதான்... பார்வதிக்கு மேரேஜ் முடியட்டும்... அம்மாவைச் சமாளிக்கிறது என்னோட பொறுப்பு... ப்ளீஸ்... என்னைக் கம்பல் பண்ணாதீங்க..." என்றபோது,

அகல்யா, விஜய்யை வேதனையோடு பார்த்தாள்.

"என்ன சாரகேஷ், இந்த அளவு பிடிவாதம் பிடிக்கறீங்க... உங்க அம்மாவை விடுங்க... அகல்யா அப்பாவுக்கு என்ன பதில் சொல்றீங்க... அவர் பொண்ணுக்கு வேறே இடம் பார்க்கணும்னு சொல்றாரு... அவரோட உடல் நிலை சரி இல்லையாம். அவர் பொண்ணுக்கு உடனே மேரேஜ் பண்ணணும்னு சொல்கிறார். அகல்யா உங்க

முன்னாடிதான் நிற்கிறாங்க... அவங்க கிட்டேயே சொல்லிருங்க... நீ உன் வழில போய்க் கொள்..." என்று முடிக்க,

அகல்யாவை முறைத்தான், சாரகேஷ்.

"ஏன் அகல்யா... எனக்காக நீ வெயிட் பண்ண மாட்டியா...? நீயாவது என்னைப் புரிஞ்சுக்கோ... ஒரு தடவை அவசரப்பட்டு முடிவெடுத்து விட்டேன். அதுவே இன்னும் என்னைக் குத்துது... என்னை, நான் புரிஞ்சுக்க டைம் கேட்கிறேன், அவ்வளவுதான்...." என்று தீக்ஷாவைப் பெண் கேட்டுப் போன விஷயத்தை நினைவில் வைத்துப் பேச...

அகல்யா, அதற்கு மேல் தாங்காமல் பொங்கி விட்டாள். விஜய் இருக்கிறான் என்று கூடப் பார்க்கவில்லை.

"ஏன், சாரகேஷ்... தீக்ஷாவை மறக்க முடியலையா...? அவ கஷ்டப்படுறா... அவ வாழ் நாளை எண்ணிட்டு இருக்கா... அவ கண்ணீரைப் பார்க்க முடியலைன்னு... அவ வீட்டுக்கே போய் நின்னீங்க... அப்போ என் ஞாபகம் உங்களுக்கு ஒரு நொடி கூட வரலைதானே...! உங்க மனசிலே எனக்கு ஒரு சின்ன இடம் கூடக் கொடுக்கலைன்னு தானே அர்த்தம்...? 2 வருசம் உங்க பதிலுக்காகத் காத்துட்டு இருந்த என்னோட இடம் என்னன்னு அப்போதே தெரிஞ்சிருந்திருக்கணும்..." சொல்லும் போதே அவள் குரல் உடைந்திருக்க... அவளையும் மீறிக் கண்ணீர் வழிய ஆரம்பிக்க... வேகமாய்த் துடைத்தவள், அதற்கு மேல் பேச முடியாமல் திணற, சாரகேஷுக்கு அவளின் அழுகை துக்கத்தைக் கொடுத்ததுதான். இருந்தும் அமைதியாகவே நின்றான்.

சாரகேஷ், அவன் நிலையிலேயே இருக்க... விஜய் அகல்யாவிடம் பேச ஆரம்பித்தான்...

"அகல்யா... எமோசனல் ஆகாதீங்க... இந்த பீல்ட்ல இருந்துட்டு இவ்வளவு எமோசனல் ஆகலாமா?" என்று சாந்தப்படுத்த முயற்சிக்க...



"ப்ச்.. எனக்கும் மனசில்லையா சார்... நான் என்ன மரக்கட்டையா...? ஒவ்வொரு முறையும் இவர் முன்னாலே வெட்கத்தை விட்டு, என்னோட காதலைச் சொல்லிக் கெஞ்சிட்டு இருக்கேன் சார்... ஒரு தடவை கூட என் மனசை இவர் புரிஞ்சுக்காம இன்சல்ட் பண்றதுதான் இவர் வேலை... இருந்தும் இவர் கிட்டே இன்னும் கெஞ்சிட்டு இருக்கேன் சார்..." என்று ஆவேசமாய்ப் பேசிக் கொண்டிருந்தாள் அகல்யா.

"இல்லை, அகல்யா... சாரகேஷ், உங்க மனசைப் புரிஞ்சுக்கிட்டதுனாலதான்... உங்களை லவ் பண்றதுனால தான் இவ்வளவு தயங்குகிறார்..." என்று விஜய் இடை மறித்துப் பேச...

அகல்யா ஆச்சரியமாகப் பார்த்தாள் விஜய்யை... பின் சாரகேசையும் பார்த்தாள்.

சாரகேஷோ.. விஜய் சொல்வது உண்மைதான் என்பதுபோல மௌனமாக இருக்க... விஜய் தொடர்ந்தான்...

"தீக்ஷா கஷ்டப்படுறா.. கண்ணீர் சிந்தினா.. அப்படின்னுதான் சாரகேஷ் பார்த்தாரே தவிர... அவ மனசுலே என்ன இருக்குன்னு சாரகேஷ் யோசிக்கவே இல்லை.. ஆனால், உங்களுக்காக... உங்க மனசுக்காக... உங்க காதலுக்காக ரொம்ப யோசிக்கிறார் அகல்யா... உங்க காதலுக்கு முழுவதுமா உண்மையா இருக்கணும்னு நினைக்கிறார்... உங்க அளவுக்கு அவரும் காதலிக்க நினைக்கிறார் அகல்யா... அதற்காகத்தான் இந்தத் தாமதம். அவர் மனசுக்குள்ளே எப்போதோ வந்துட்டீங்க... அதைச் சொல்ல நினைக்கும் முன்னால், தீக்ஷாவாலே பிரச்சினை வந்துருச்சு... இப்போ ரொம்பத் தயங்குறாரு..."

என்ற போதே சாரகேஷ், தன் மனதில் இருப்பதை அப்படியே சொல்லிக் கொண்டிருக்கும் விஜய்யைப் பார்த்து

அப்படியே அமர்ந்து விட... சாரகேசின் தோள்களில் ஆறுதலாய்க் கை வைத்தவன்...

"தப்பு செஞ்சுட்டு... உறுத்தலா இருக்கிற மனசோட எப்படி அகல்யா, அவர் தன் காதலைச் சொல்வாரு... நீங்க ஒருவேளை அவரோட காதலைச் சந்தேகமாப் பார்த்துட்டீங்கன்னா...

"அதெல்லாம் உங்களுக்குப் புரியாது அகல்யா... இதே நிலைமையிலேதான் நானும் இருந்தேன். தீக்ஷாவுக்கும் எனக்கும் எவ்வளவோ பிரச்சனை. ஆனா, அவ என் மனசிலே வந்தபோது... என்னாலே அவ கிட்டே பேச முடியலை... அவளே எல்லாவற்றையும் மறந்து, என் முன்னால வந்து நின்ற போது கூட, என் காதலைச் சொல்ல முடியலை..." என்று தன் நினைவுகளில் கலந்து சொல்ல ஆரம்பித்தவன்... அதை நிறுத்தி...

"சொல்லுங்க சாரகேஷ்.... நான் சொல்றது உண்மை தானே... உங்க மனசிலே இருக்கிறதை வெளிப்படையாப் பேசுங்க... இன்னும் என்ன பிடிவாதம்... காதலுக்குப் பெரிய எதிரி ஈகோதான்... எல்லாவற்றையும் தூக்கிப் போடுங்க... யோசிங்க சாரகேஷ்..." என்றவன்,

"இனி அகல்யாவைப் பிடிச்சிருக்கா இல்லையான்னு நான் கேட்க மாட்டேன்... எப்போ மேரேஜ் வெச்சுக்கலாம்னு தான் கேட்பேன்..." என்று சாரகேஷ் முன்னால் சிரித்தபடி அமர...

அகல்யா, இன்னும் நம்ப முடியாமல் சாரகேசைப் பார்க்க... தன் தலை அசைப்பில் சாரகேஷ் அவளை அருகில் அழைத்தான்.

அவன் அழைத்ததுதான் தாமதம்... கண்களில் வழிந்த கண்ணீரைக் கூடத் துடைக்க மறந்தவளாய்... அருகில் விஜய் இருக்கிறான் என்பதை யெல்லாம் தூக்கிப் போட்டவளாய்... அவனோடு சரணடைய...



விஜய் வேகமாய் எழுந்து...

"என்ஜாய் மிஸ்டர் அண்ட் மிசஸ் சாரகேஷ்... நான் கிளம்பறேன்... சீக்கிரம் பேசி ஒரு முடிவுக்கு வாங்க. இப்போ நான் கரடியா இருக்க விரும்பலை... பை..." அவர்களுக்குத் தனிமை அளித்து, அங்கிருந்து நகர்ந்தான்.

விஜய் அகன்ற பிறகு... அகல்யா நம்ப முடியாமல் சாரகேசைப் பார்த்தபடி இருந்தவள்,

"உண்மையிலேயே நான் உங்க மேலே சாய்ந்து இருக்கேனா... கனவா, நனவா? நம்பவே முடியலையே... அப்பா ரொம்ப சந்தோசப்படுவார்," என்றவளிடம்,

"நம்ப முடியலைன்னா... என்னைக் கிள்ளிப் பார்த்துக்கோ...!" என்று காதலின் அரிச்சுவடி படிக்கும் மாணவனாய்ச் சாரகேஷ் அவன் கைகளை நீட்ட,

"ஏன் கிள்ளிப் பார்க்க வேண்டும்...?" என்று கன்னம் சிவக்கக் கூறியவள், அவன் கைகளில் இதழ் பதித்து... நனவுதான் என்று நிரூபிக்கப் போக...

அதற்கு இடம் கொடாமல்... அவளை நிமிர்த்தியவன், அவள் இதழில் மென்மையாக இதழ் பதித்து... காதல் கள்வனாய் மாறி... தன்னவளை மீண்டும் கனவுலகத்தில் சஞ்சரிக்க விட... காதல் பள்ளிக் கூடத்தின் தலை சிறந்த மாணவனில் ஒருவனாய், சாரகேஷும் கண்ணிமைக்கும் நேரத்தில் முன்னேற்றம் அடைந்திருந்தான்.

கண்டிப்பாக சாரகேஷ் நல்ல முடிவைச் சொல்லுவான் என்ற நம்பிக்கையில் காரை எடுத்த விஜய்... வீட்டிற்குச் செல்லாமல், கடற்கரைக்குச் சென்றான். தன் உள்ளத்தின் ஓயாத ஓசைகளை ஒதுக்கி விட்டு... அலைகளின் ஓசைகளில் தன்னைத் தொலைத்தவனுக்கு... தன் வாழ்க்கையில் கலங்கரை விளக்கம் என்று தென்படும் என்றுதான் தெரியவில்லை... தன் போராட்டத்தின் பயணத்தை நிறுத்தி...

நிம்மதி கிடைக்கும் கரையைத் தேடும் தோணியென, அவன் மனம் அலைவுற்றுக் கொண்டிருந்தது.

மணி ஒன்பதைக் கடந்தும், அவனுக்கு வீட்டிற்குப் போக மனம் வரவில்லை. எங்கே அவனையறியாமல் அவனின் காதல், அவன் மனைவியைத் தீண்டி விடுமோ என்று பயந்தான் அவன். அதிலும் தீக்ஷா, அவனை நெருங்க ஆரம்பித்த பிறகு, அவனால் அவன் மனதையும் உடலையும் கட்டுப்படுத்த முடியவில்லை.

எல்லாச் சுகங்களையும் அவள் மூலம் அனுபவித்தவனால்... அவள் நெருங்கி வந்தும் அவளை அணைக்க முடியாமல் தவிக்கும் நரக வேதனையில், புழுவாய்த் துடித்துக் கொண்டிருந்தான் விஜய்.

எந்த ஜென்மத்தில் செய்த பாவமோ என்று அவனால் தன்னைத்தானே தேற்றக் கூட முடியாத நிலையில் இருந்தான். இப்போதெல்லாம் அந்தந்த ஜென்மத்திலேயே பாவ புண்ணிய பலன் கிடைத்து விடுகிறதோ... இல்லையில்லை, தனக்கு அடுத்த ஜென்மம் என்று கிடையாது போல... அதனால்தான் இந்த ஜென்மத்திலேயே தனக்கு தீக்ஷாவைக் காட்டி... அவள் மூலமே இன்பத்தையும் அனுபவிக்க வைத்து... அவள் மூலமே துன்பத்தையும் காட்டித் தன்னிடம் விதி விளையாடுகிறது என்றெல்லாம் தன் நினைவுக் கடலில் தத்தளித்தவனுக்கு, மனைவி மாத்திரை போடும் நேரம் ஞாபகத்துக்கு வர... போனைக் கையில் எடுத்துத் தீக்ஷாவுக்குப் போன் செய்தான். அவளிடம் மாத்திரை போடச் சொல்லி நினைவுபடுத்தியவன்... தான் வரத் தாமதமாகும் என்று கூறி வைத்து விட்டு...

கலைச்செல்வியை அழைத்தவன், தீக்ஷா உறங்கும் வரை அருகில் இருக்கச் சொல்லிப் போன் செய்து விட்டுக் கடற்கரையிலே அமர்ந்து விட்டான்.



தீக்ஷா முன்பு போலெல்லாம் பிடிவாதம் பிடிக்கவில்லை. தன் நிலை ஓரளவு உணர்ந்தவள்... தனக்காகக் கூட இல்லாமல், தன் கணவனுக்காகவே மாத்திரைகளை அளவாகவே சாப்பிட ஆரம்பித்திருந்தாள். அதனால், விஜய் அவள் மாத்திரை போடும் விஷயத்தில் கொஞ்சம் கவனம் இல்லாமல், அன்று விட்டு விட்டான்.

ஆனால், அன்றோ தீக்ஷா, விஜய் போன் வந்த பிறகு... கணவன் தாமதமாக வருவான் என்பதை அவன் மூலமாகவே தெரிந்து கொண்டதால்... மாத்திரை போட்டால் தூங்கி விடுவோம் என்று தெரிந்ததால்... விஜய்யைப் பார்க்காமல் உறங்கக் கூடாது... மாத்திரைகளை விழுங்காமல் அவன் வந்த பிறகு போட்டுக் கொள்ளலாம் என்று முடிவு செய்து காத்திருக்க... கலைச்செல்வி உள்ளே வந்தார்.

தீக்ஷா உறங்கும்வரை அவள் அறையில் இருப்பதாகக் கூறி... அங்கிருந்த சோபாவில் அமர... கலைச்செல்வியிடம் மாத்திரை போட்டுவிட்டதாகக் கூறி இருந்ததால், தன் அத்தையின் முன் உறங்குவதைப் போலப் பாவனை காட்டிப் படுத்தவள், ஒரு கட்டத்தில் அவளையும் மீறித் தூக்கம் ஆட்கொள்ள... உறங்கியும் போனாள்.

ஆழ்ந்த உறக்கத்தில் இருந்த தீக்ஷாவுக்குத் திடீரென்று விழிப்புத் தட்ட... கணவனின் கையணைப்பில் படுத்தே பழகியிருந்த அவளின் உள்ளுணர்வு... கண் விழிக்காமலே தான் இருக்குமிடம் உணர்ந்து கணவனைத் தேட... கைகளாலே துழாவ... அவன் அதே கட்டிலின் ஓரத்தில் படுத்திருக்க... நிம்மதியாக அவனைச் சரணடைந்தவள்... அவனின் அணைப்புக்குள் தன்னைக் கொண்டு வந்து, மீண்டும் சில நிமிடங்களில் உறங்கியும் போனாள்.

கடந்த சில நாட்களாக விஜய், அவளோடு கட்டிலிலேயே படுக்க ஆரம்பித்து இருந்தான். அது கூடத் தீக்ஷாவின் கட்டாயத்தினாலே நிகழ்ந்தது.

தன் மனைவி அருகில் இருக்கிறாள் என்ற உணர்வே அவனுக்கு இப்போதெல்லாம் ஓரளவு நல்ல உறக்கத்தை அளித்தது எனலாம்.

அன்று கூடத் தன் மனைவி, தானாகவே தன் அருகில் வந்திருக்கிறாள் என்பதை உணராமல்... உறக்கத்திலேயே அவளைத் தன் கை வளைவுக்குள் கொண்டு வந்தும்... விழிக்கக்கூட முடியாமல் உறங்கிக் கொண்டிருந்தான் விஜய்.

இவனின் நிலைக்கு நேர் மாறாகத் தீக்ஷாவின் நிலை இருந்தது. ஒரு அரை மணி நேரம்தான் தூங்கி இருப்பாள்... அதற்கு மேல் அவளால் தூங்கவே முடியவில்லை.

கணவனை விட்டு எழுந்தவள்... வேகமாய் மணியைப் பார்க்க... அது அதிகாலை மணி 4 எனக் காட்டியது.

அவளுக்கு ஒரு மாதிரியான மன நிலை... அதை என்னவென்றே சொல்ல முடியவில்லை. அவளின் கடந்த கால நினைவுகள்... அவளை மீறி, அவள் ஆழ்மனதைக் கடக்க முயற்சி செய்ய... அதை அடக்க நினைத்தவளால், முடியவில்லை. கடலுக்குள் மூழ்குவதைப் போல மூச்சுத் திணறினாள் தீக்ஷா. வழக்கமாய்த் தன்னை அடக்கிக் கொள்ளும் முயற்சி. அவளால் முடியவில்லை. நினைவுகள் அவளை மீறி வெளியே வர முயற்சிக்க... அது வெளி வருவதை அவள் மனதால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

கிட்டத்தட்ட ஒரு மணி நேரம் என்ன செய்வது என்று கூடத் தெரியாமல்... அருகில் இருந்த விஜய்யைக் கூட எழுப்பாமல் பித்துப் பிடித்தவள் போல அமர்ந்திருந்தவளை... அறையின் அலாரச் சத்தம் சுயநினைவுக்குக் கொண்டு வர... விஜய்யும் எழுந்து விட்டான்.

எழுந்தவன்... மனைவி கட்டிலில் ஒரு ஓரமாய் அமர்ந் திருப்பதைப் பார்த்து....

"என்ன..." என்று பதறிக் கேட்டபடி அருகில் போக...



அவனின் பதற்றத்தில் தன்னை நிலைப்படுத்திய தீக்ஷா,

"அத்தான்... நான் மாத்திரை போடலை... அதுதான் தூக்கம் வரலை... சீக்கிரம் எழுந்துட்டேன் போல... சரி, நான் குளிக்கப் போகிறேன்..." என்று சொல்லியவள்...

மாத்திரை போடவில்லை என்று சொன்னதால், திட்டி விடுவானோ என்று வேகமாய் அங்கிருந்து எழுந்து குளியலறைக்குள் நுழைய...

விஜய், யோசனையுடன் சில நிமிடங்கள் இருந்தவன்... மீண்டும் உறங்க ஆரம்பித்தான்.

தீக்ஷா குளித்துவிட்டு... கீழே தோட்டத்தில் சிறிது நேரம் அமர்ந்து தன்னைக் கொஞ்சமாய் நிதானப்படுத்தியவளுக்கு... ஓரளவு மனதின் போராட்டம் அமிழ்ந்தது போல் இருக்க... தன் அறைக்குப் போக நினைக்க... பார்வதி, அவளை அழைத் தாள்.

"தீக்ஷா... குட் மார்னிங்... சாரி, டிஸ்டர்ப் பண்ணிட் டேனா...? சரி, இன்னைக்கு ஒரு நாளைக்கு அட்ஜஸ்ட் பண்ணிக்க..." என்று வேகமாய் ஆரம்பிக்க...

"ஏய், பாரு... என்ன இவ்வளவு வேகம்... பாவம் எங்க சுரேந்தர் அத்தான்...!" என்று கலகலப்பாக ஆரம்பித்தாள் இவளும்.

"உண்மையைச் சொல்லுடி... சுரேன் அத்தானுக்குப் போன் பண்றதுக்குப் பதிலா எனக்குப் பண்ணிட்டியா...?"

"பார்த்தியா... என் கிட்டேயே உன் வேலையைக் காட்டுறே... உனக்குத்தான் போன் பண்ணினேன்... உனக்கு ஒரு குட் நியூஸ் டி..." என்றவளிடம்,

"அடிப்பாவி... கல்யாணத்துக்கு முன்னாலேயே குட் நியூஸா... உன்னை நம்பி எங்க சுரேன் அத்தானைத் தனியா விட்டதுக்கு..." என்று பார்வதியை ஓட்ட ஆரம்பிக்க...

"தீக்ஷா..." என்று பல்லைக் கடித்தவள்...

"என்னைப் பேச விடுகிறாயா...? காலையிலேயே என்னை ஏன்டி இப்படிக் கடிக்கிறே... காலங்காத்தால உனக்குப் போன் போட்டது அவ்வளவு பெரிய தப்பா...? போடி..." என்று பொய்க் கோபம் காட்டியவளிடம்...

"ஓ.கே... ஓ.கே... சொல்லு, என்ன விஷயம்...? அப்படி என்ன விசயம்...?" என்றபடியே மாடி ஏறினாள்.

"எங்க அண்ணா... மேரேஜ்க்கு ஓ.கே. சொல்லிட்டார்... ஒரே நாளில் முதல் முகூர்த்தம் அண்ணா திருமணம்... அடுத்த முகூர்த்தம் எனக்கும்.... சுரேந்தருக்கும்..." என்று சொல்லி முடிக்கும் போது, அவள் குரலில் சந்தோஷமும் வெட்கமும் ஒரு சேர எட்டிப் பார்க்க...

"ஹேய்... சூப்பர் பாரு... வசூல் ராஜா எம்.பி.பி.எஸ். எப்படி பாப்பு வலைக்குள்ளே விழுந்தாராம்...? சோ, உங்க அம்மா ஆசைப்பட்டபடி... உங்க அண்ணா மேரேஜ் பண்ணி... அகல்யா குடும்பக் குத்து விளக்கை ஏத்தின பின்னாலே தான்... நீ எங்க வீட்டுக்கு அகல் விளக்காவது ஏத்த முடியும்... அந்தச் சந்தோஷத்தில் அதிகாலையிலேயே போனாக்கும்... உன் ஆளு கிட்டே சொல்லிட்டியா...? என்ன சொன்னாரு அந்த லட்சுமணன்...?" என்று படபட பட்டாசாய்த் தோழியிடம் பேசியபடி தன் அறையில் நுழைந்தவள்... ட்ரெஸ்ஸிங் டேபிளின் முன் அமர்ந்தபடியே தன் தோழியை வம்பிழுத்தபடி பேசிக் கொண்டிருந்தாள்.

அப்போது பாரு...

"விஜய் அத்தான் எழுந்துட்டாரா...? அவருக்குத்தான் நான் போன் பண்ணி இருக்கணும்... அவர் நேற்று அண்ணா கிட்டேப் பேசி... அகல்யாவிடமும் பேசி... எப்படியோ சம்மதம் சொல்ல வெச்சுட்டாரு..." என்ற போது, உறங்கிக் கொண்டிருந்த தன் கணவனைப் பெருமையாக அந்தக்



கண்ணாடியின் வழியே பார்த்தபடியே பாரு சொல்வதைக் கேட்க ஆரம்பித்தாள் தீக்ஷா.

ஒரு வழியாகப் பாரு பேசி முடித்து விட்டுப் போனை வைக்க... தலை சீவியபடியே தன்னவனை விழிகளால் பருகியவள்...

'நீங்க மட்டும்தான் கண்லேயே காதல் சொல்வீங் களா...?' என்று தன்னை மீறி நினைத்தபடி... தன் விழிகளில் வழிந்த காதலுடன் கணவனைப் பார்த்தபடி... கண்ணாடியின் முன் தன்னை அலங்கரிக்க ஆரம்பிக்க... நினைவுகள் மீண்டும் அவளைப் பின்னோக்கி இழுக்க ஆரம்பிக்க...

அப்போது யாரோ வந்திருப்பதாகச் சொல்லி... கலைச் செல்வி அவளைக் கீழே அழைப்பதாக, வேலையாள் வந்து கூற...

நினைவுகள் தந்த கனத்தைச் சுமந்து கொண்டே அந்த அறையை விட்டு வெளியேறி வந்தவள்... கீழே இருந்தவர்களைப் பார்க்க... ராகேஷ், அவனது மனைவி மற்றும் குழந்தையோடு வந்திருந்தான்.

முதலில் யார் என்று தெரியாமல் முகம் சுருங்க, அவனை மீண்டும் ஒரு முறை ஞாபகத்திற்குக் கொண்டு வந்தவளுக்கு... அவன் ராகேஷ் என்பதை ஓரளவுக்கு அனுமானிக்க...

'இவன் எதற்கு இங்கு வந்திருக்கிறான்...? அதுதான் அவன் மனைவியோடு போறேன்னு சொல்லிட்டானே... என் அத்தான்... என் இந்தர் கிட்டே இருந்து என்னைப் பிரிக்க வந்திருக்கானோ... இல்லையே... அவர்தான் என்னை விட்டுப் போயிட்டாரே...' என்று குழம்பியவள், அன்றைய தினத்தில் அதற்கு மேல் அவளின் மனதின் அழுத்தம் தாங்க முடியாமல் தள்ளாடியவள், மயங்கிச் சரிய ஆரம்பித்தாள்.

51

ராகேஷ்... தீக்ஷாவின் உடல் நலம் குறித்து, தன் தாயின் மூலம் எப்போது கேள்விப்பட்டானோ... அன்றி லிருந்தே இந்தியா வந்தால் அவளைப் பார்க்க வேண்டு மென்று முடிவெடுத்திருந்தான். அதனால் இந்தியா வந்திறங்கிய வுடனே தன் மனைவியுடன் அவளைப் பார்க்க வந்து விட்டான். அதிலும் தன் கணவனோடு மீண்டும் அவன் வீட்டிற்குப் போய் வாழுகிறாள் என்ற வுடனே... ஓரளவு சரியாகி விட்டாள் என்றுதான் நினைத்தான்.

அவளுக்குத் தன்னை ஞாபகம் இருக்கிறதோ இல்லையோ... தீக்ஷாவைப் பார்த்துப் பேசி... அன்று நிச்சயத் திற்கு வராமல் கடிதம் எழுதி வைத்துப் போனதற்கெல்லாம் அவளிடம் மன்னிப்புக் கேட்க வேண்டும் என்றே வந்திருக்க..

தீக்ஷாவோ... மயங்கி மாடிப் படியிலேயே அமர்ந்து விட... கலைச்செல்வி... அவள் தடுமாறும் போதே பார்த்ததால், ஓடோடிப் போய்த் தன் மருமகளைத் தாங்கிப் பிடித்து விட்டார்.

"தீக்ஷா..." என்ற கலைச்செல்வியின் அலறலில்... விஜய் திடுக்கிட்டு எழுந்து வர... அவன் அன்னை, தீக்ஷாவின் முன் இருக்க... விஜய்க்கு அப்போதுதான் நேற்றைய தன் தவறு புரிந்தது.

'அவள் மாத்திரை போடவில்லை என்று சொன் னாளே... சாதாரணமாக விட்டு விட்டேனே...' பதறியவன், மனைவியின் அருகில் சென்ற போதுதான்.... அருகில் பதட்டமாய் இருந்த ராகேஷையும்... அவன் குடும்பத்தையும் கவனித்தான்.

இவர்கள் யார் என்ற யோசனை விஜய்க்குத் தோன்றினாலும்... அதில் தன் சிந்தையைத் திருப்பாமல்... மனைவியைத் தூக்கியவன்... தங்கள் அறைக்குக் கொண்டு



சென்றான். வழக்கமாய்ச் சில மணி நேரத்திற்குள் தன் நிலைக்குத் திரும்புபவள், அன்று நினைவே திரும்பாமல் இருக்க... விஜய் மனதுக்குள் கிலி பரவியது.

அடுத்து நொடிப் பொழுதும் தாமதிக்காமல், மருத்துவ மனையில் சேர்த்தவன்... போராட, உடலிலும் மனதிலும் தெம்பின்றிச் சோர்ந்து உட்கார்ந்து விட்டான்.

யாரிடமும் பேசவில்லை... யாரையும் பார்க்கப் பிடிக்கவில்லை.

மனமெங்கும் பீதி நிறைந்திருக்க... உண்மையிலேயே பயம் வந்திருந்தது. 'கெஞ்சிக் கேட்டாளே... நினைவு வர வில்லை என்றால் கூட என்னை ஏற்றுக் கொள் என்று... நான் பிடிவாதம் பிடித்து விட்டேனோ...?

'கடவுளே! என் தீக்ஷாவாக அவள் வராவிட்டாலும் பரவாயில்லை... எந்த ஆபத்துமில்லாமல் திருப்பித் தந்து விடு...'

இதுவே அவன் பிரார்த்தனையாக இருக்க... மருத்துவர்கள் 24 மணி நேரம் கழித்துத்தான் எதுவும் சொல்ல முடியும் என்று வேறு சொல்லிச் செல்ல...

அனைவரின் முகத்திலும் வேதனை ரேகைகள் மட்டுமே...!

ராகேஷ் வேறு முற்றிலுமாய்க் குழம்பியிருந்தான்... தன்னால்தான் மீண்டும் தீக்ஷாவுக்கு இந்த நிலைமையோ என்று ஒருபுறம் கலங்க... தீபன் அவனை அழைத்துக் கொண்டு வீட்டுக்குப் போய்விட்டான்.

விஜய், ஜெயந்தியைக் கூட அங்கிருக்க அனுமதிக்க வில்லை.

முதலில்தான் விஜய்யை விரோதியாகப் பாவித்துக் கோபப்படுவாள். இப்போதுதான் அந்த எண்ணமெல்லாம்

இல்லையே...! கணவன் என்று தெரிந்து, அவளும் ஏற்றுக் கொண்டு விட்டாளே! அதனால், தான் மட்டும் அங்கிருப்ப தாகக் கூறி, அனைவரையும் அனுப்பி வைத்து விட்டு... காத்தமுத்து, முருகேசனை மட்டும் தன்னோடு வைத்துக் கொண்டான்.

சாரகேஷ் மற்றும் பார்வதி, தம் தாயுடன் வந்திருந் தனர். சக்தியின் பெற்றோர் கூடப் பார்த்து விட்டுச் சென்றனர்.

நேரம் மெல்ல மெல்லக் கரைய ஆரம்பிக்க.. மாலையும் வந்தது... இரவும் ஆனது. தீக்ஷாவின் உடல் நிலையில் மாற்றம் ஏதுமில்லாமலே இருந்தது.

விஜய், தீக்ஷாவைப் பார்த்தபடி அமர்ந்திருந்தான். கீழே தன்னைப் பார்க்க யாரோ வந்திருக்கிறார்கள் என்ற தகவலால்... புடவை அணிந்தே கீழே வந்திருந்தாள் தீக்ஷா. அதே புடவையில்தான் இப்போதும் இருந்தாள். தலை வகிடில் வைத்திருந்த குங்குமம் கூடக் கலையாமல் இருந்தது.

விஜய், இந்த முறை கலங்கவில்லை... துடிக்க வில்லை. வெறுமையான எண்ணங்கள் மட்டுமே... வெறித்தபடி அமர்ந்திருந்தான். எல்லா வகையிலும் துடிக்க வைத்து விட்டாள். மரண வலி மட்டும் தான் பாக்கி. அதையும் தனக்குக் கொடுக்க நினைத்தாள் என்றால், வாங்கிக் கொள்ள வேண்டியதுதான். அப்படியாவது தன்னவளின் மனம் சாந்தி அடையும் என்றால்... அதைத் தாங்கிக் கொள்ளவும் தயாராக இருந்தான் அவன்.

இந்த நிலைக்கு வந்த பிறகு, அவனால் அறைக்குள் ளேயே இருக்க முடியவில்லை. அறைக் கதவை மூடியபடி... தீக்ஷாவை விட்டு வெளியேறி வந்தவன்... காத்தமுத்து, முருகேசனைப் பார்க்க.... இருவரும் அங்கிருந்த பெஞ்சில் உறங்கிக் கொண்டிருக்க... அவர்களைத் தொந்தரவு செய்யாமல்... மாடியின் கைப் பிடிச் சுவரில் அமர்ந்து,



அங்கிருந்த தூணில் சாய்ந்தபடி... சன்னல் வழியே மனைவியை வெறித்தபடி அமர்ந்திருந்தான்.

காலையில் இருந்து சாப்பிடக் கூட இல்லை... தண்ணீரை மட்டுமே அருந்திக் கொண்டிருந்தான். பசி வேறு வயிற்றைக் கிள்ளியது.

தன்னவள்... ஒரு ஆகாரம் இன்றி இருக்கும்போது, அவனுக்கு என்ன இறங்கும்? வெளியில் தெரிந்த இருள் கூடப் பயமுறுத்த, கண் மூடி அமர்ந்திருந்தான். இமைச் சிறையிலும் இருள்தான். ஆனால், அதில் ஒளியாய்த் தன் மனைவியின் நினைவுகளைப் பாய்ச்ச ஆரம்பிக்க.. தன்னை மறந்து அதில் ஒன்றினான். கண் மூடித் தன் மனைவியின் நினைவுகளில் ஆழ்ந்திருக்க... அவன் மனைவியோ... அவள் விழியின் கதவாகிய இமையைத் திறந்தாள். இமை திறந்த போதே அவளின் அடைபட்டிருந்த எண்ணங்களும் அவளைத் தாண்டி வெளியே வர... வேகமாய் எழுந்து அமர்ந்தாள்.

விழித்தவளுக்கு... தான் மருத்துவ மனையில் இருக்கிறோம் என்று எழுந்த மாத்திரமே புரிய... ‘எப்படி இங்கு வந்தோம்...’ என்று மட்டுமே முதலில் சிந்தித்தவளுக்கு.... அடுத்துத் தன் கணவன் மரணச் செய்தி நினைவுகளில் வர... முகமெங்கும் வியர்க்க ஆரம்பித்தது. அதே நேரம், தான் கடத்தப்பட்டிருக்கிறோம் என்றும் நினைவுகள் சுழல... உடல் நடுங்க ஆரம்பித்தது. எப்படியாவது இங்கிருந்து போக வேண்டும்... தன் கணவனைப் பார்க்க வேண்டும்... என்று கட்டிலை விட்டு இறங்க முயற்சித்தவள், தான் போர்த்தி இருந்த போர்வையை விலக்கியபடி எழுந்தவள்... தன் கால் விரல்களில் மெட்டி இல்லாமல் இருப்பதைப் பார்த்தவுடன்... உள்ளம் ஒரு மோசமான அதிர்வலையை வெளிப்படுத்த...

அதே அதிர்ச்சியுடன் அவள் கை கழுத்தை நடுக்கத் துடன் தடவிப் பார்த்தது.

"விஜய் அத்தான்..." உதடுகள்... திக்கித் திணறின... குலுங்கி அழ ஆரம்பித்தாள் தீக்ஷா. 'கழுத்தில் இருந்த தாலி கழட்டப்பட்டது எப்போது...? அப்படி என்றால்... என் கணவன் உயிரோடு இல்லையா...? தன்னவன் தனக்காகக் கூட வாழ நினைக்கவில்லையா...?

'என் இந்தர் இல்லாமல்... அவன் இறந்ததைக் கூட அறியாமல் நான் இருந்திருக்கிறேனா...? எத்தனை நாளாய்...?' என்று உள்ளம் பதற... வேகமாய் நாள் காட்டியைப் பார்க்க... தீக்ஷாவுக்குத் தலையே வெடித்தது. கிட்டத்தட்ட தன் பிறந்த நாளில் இருந்து 10 மாதங்கள் கடந்திருக்க... வேகமாய் நாட் காட்டியின் அருகில் சென்றாள். மீண்டும் மீண்டும் ஆராய்ந்தவள்... சில நிமிடங்கள் அந்த நாட்காட்டியையே வெறித்தபடி இருந்தாள்.

'10 மாத காலம் என் இந்தர் இல்லாமல், என் மூச்சை இழுத்துப் பிடித்து வைத்திருந்தேனா...? அவன் இல்லாத இந்த உலகத்தில் வாழ்ந்திருக்கிறேனா...?' அப்படியே சுவரில் சரிந்து அமர்ந்தவள்... முழங்காலைக் கட்டிக் கொண்டு அழ ஆரம்பித்தாள். நொடி நேரம்தான்... மீண்டும் நிமிர்ந்தவள்... 'எல்லாமே முடிந்து விட்டதே...! இனி அழுது என்ன ஆகப் போகிறது...?' என்று வேகமாய்க் கண்களை அழுந்தத் துடைத்தவள்... அதே வேகத்தில் எழுந்தாள்.

'இனி ஒரு நிமிடம் கூட இருக்கக் கூடாது...' என்று முடிவெடுத்தவளின் மனக் கண்ணில்... வரிசையாகத் தன் தாய், தந்தை, அண்ணன், சுனந்தா என... நினைவுகள் சுழல... அவர்களை எல்லாம் பின்னுக்குத் தள்ளினான் அவள் கணவன்.

வெறுப்பாய்த் தன்னைத் தீண்டிய பார்வை முதல்... காதலாய்த் தன்னை திருடிக் கொண்ட பார்வை வரை.... நினைக்கையிலேயே தீக்ஷாவின் இதயம் துடித்தது.



என்ன செய்வது... தன் இந்தரோடு எப்படிச் சேர்வது... அவளுக்கு ஒன்றுமே புரியவில்லை. கண்களில் நீர் மட்டும் தாரை தாரையாக வழிந்து கொண்டிருந்தது, அவளைக் கேட்காமலே.

குழப்பமாய் இருக்க... 'யாருமே எனக்கு வேண்டாம்... இங்கிருந்து முதலில் போகலாம்...' என்று முடிவெடுத்தவள்... எப்படி இங்கிருந்து போவது என்று யோசிக்க ஆரம்பித்தவள், நிராசையாய்த் தன் கழுத்தைத் தடவினாள்.

தன் மாங்கல்யம், தன் கழுத்தில் ஏறிய போது... எத்தனை சந்தோஷமாய் இருந்தனர் இருவரும். அது இறங்கிய போது... தடுக்க அவனுமில்லை... தனக்கு நினைவுமில்லையே... நினைக்கும்போதே விம்மினாள் தீக்ஷா. அப்போது...

கழுத்தில் இருந்த சங்கிலி, அவள் கைகளில் தட்டுப்பட... துணுக்கென்றது மனம்.

'இது... இது இந்தர் கொடுத்தது... எனக்கும் அவருக்கும் மட்டும் இதோட அருமை புரியும்... இது எப்படி வந்தது...? அதுவும் டாலரோடு... யார் அணிவித்தது...?' நினைவுகள் பீறிட்டு வெளியே வந்ததைப் போல, கேள்விகளும் வர ஆரம்பிக்க... அவள் தன் குடும்பத்தாருடன்தான் இருக்கிறாள் என்பதை உணர்ந்து கொண்டாள்.

இருந்தும், தன் இந்தர் உயிரோடு இருக்கிறான் என்று மட்டும் அவளால் நினைக்க முடியவில்லை.

மெதுவாய் வெளியே வந்தவளின் கண்களில்... சுவரில் சாய்ந்தபடி அமர்ந்திருந்த விஜய்தான் முதலில் பட்டான்.

விஜய்யும் கதவு திறக்கும் சத்தம் கேட்டதும்... கண் திறந்து விட்டான்தான். அங்கு நின்ற தீக்ஷாவைப் பார்த்தவனுக்கு... சந்தோசம் கண்களில் பரவ... இறங்கியவன், அவளை நோக்கி எட்டு வைக்க எத்தனிக்க... அப்படியே நின்று விட்டான்.

காரணம்... தன்னை நோக்கி வேகமாய் ஓடி வந்த தீக்ஷாவைப் பார்த்ததுதான்.

அவளை அறிந்து கொள்ள முடியாமல்... பிரித்தறிய முடியாமல்... விஜய், சிலையாய் நிற்க... அவனவளோ கண்ணீரோடு ஓடி வந்து, அவன் மார்பில் தஞ்சம் அடைந்தாள்.

விஜய்க்கு, ஒரு நிமிடம் என்ன நடக்கிறது என்றே புரியவில்லை. மறந்த நிலையில் தன்னைக் கணவனாக ஏற்றுக்கொண்ட தீக்ஷாவா... இல்லை, தன் தீக்ஷாவா... என்ன பாவனையைப் பிரதிபலிப்பது என்றே தெரியவில்லை.

அவளோ....

"விஜய் அத்தான்..." என்று தேம்பிக் கண்ணீரை உகுத்துக் கொண்டிருக்க...

தன்னிடமிருந்து பிரித்து... அவளைத் தேற்ற முயற்சி எடுக்க... தீக்ஷாவோ அவனை விட்டு விலகவே இல்லை.

யாருடைய தீண்டல் இனிக் கிடைக்கவே கிடைக்காது என்று நினைத்தாளோ... அவனின் மார்பில் சரணடைந்திருப்பதை விட்டு அவள் பிரிவாளோ... அவனின் இதயத் துடிப்பைத் தன் ஜீவ நாதமாகத் தனக்குள் ஊற்றிக் கொண்டிருக்க... அவளவனோ... அவளை அறிய முடியாத நிலையில் இருந்தான்.

அவள் உணர்ச்சியின் பிடியில் இருக்க... இவனோ... எங்கு தன்னைச் சாய்ந்து இருப்பவள்... மீண்டும் மயங்கி விடுவாளோ என்று அவளை ஆராய்ந்தபடி இருக்க...

அவன் முகம் நிமிர்ந்து பார்த்தாள் தீக்ஷா.

இனிப் பார்க்கவே முடியாதோ என்று ஏங்கிய முகம்... மெல்ல விசும்பியவள்...

"விஜய் அத்தான்... என்னை விட்டுட்டுப் போகலை தானே நீங்க...?" என்று அவன் முகம் பார்த்துக் கேட்க...



'இல்லை...' என்பது போலத் தலை அசைத்தவன்... இன்னும் தன் நிலை தெளியாதவனாகவேதான் இருந்தான்.

"உண்மையிலேயே என்னை விட்டுப் போகலையா...?" நம்ப முடியாமல் கேட்டவள், அப்போதுதான் உணர்ந்தாள், அவன் அப்படியே நின்று கொண்டிருப்பதை...! அவள்தான் அவனை நெருங்கியிருந்தாளே ஒழிய... அவன் உணர்வின்றிப் பிரமை பிடித்தவன் போல்தான் இருந்தான். அதை உணர்ந்தவள், அவனை மீட்க நினைத்தவளாய்,

அவன் கைகளை எடுத்துத் தன்னைச் சுற்றிப் போட்டவள்... "ஹலோ இந்தர்... பொண்டாட்டிக்கு மட்டும்தான் அட்வைஸெல்லாமா... சுவர் மேலே ஏறி உட்காரக் கூடாதுன்னு எனக்கு மிலிட்டரி ஆர்டர் போட்டுட்டு... நீங்க ஏறி உட்கார்ந்து இருக்கீங்க..." என்று சிரித்தபடி கண் சிமிட்டியவளின் கண்களில், இன்னும் கண்ணீரின் ஈரம் குறையாமல் இருக்க... அதே நேரம்... அவள், "இந்தர்..." என்று அழைத்த நொடியில் ,

சந்தோஷத்தில்... தன்னவளாகத் தன்னைச் சரணடைந்த தன் மனைவியின் வார்த்தைகளில்... அவனையுமறியாமல்... "தீக்ஷா" என்று உதடுகள் உச்சரிக்க... அது கூட கரகரத்த அவனின் குரலில்... நம்பிக்கையின்றித்தான்... மெதுவாகத்தான் ஒலித்தது. குரலில் கம்மல் இருந்தாலும்... இருந்தும் அவனின் விரல்களின் அழுத்தம் அதிகரிக்க... தன்னோடு இன்னும் இழுத்து அணைத்தவன், காத்தமுத்து, முருகேசன் இருக்கிறார்கள் என்றெல்லாம் பார்க்கவில்லை. அவள் கன்னத்தில் மாறி மாறி முத்த மழை பொழிந்தவனோடு முதலில் ஒன்றியவள்... அதன் பின் அவனின் வேகம் தாங்காமல் தடுமாற... அவளைப் புரிந்தவன்.. தன்னை அடக்கித் தன்னவளைத் தன்னோடு இறுக அணைக்க... தீக்ஷாவுக்கு அதிலேயே அவன் அனுபவித்த வேதனையின்

வலி புரிய.. தன்னவனுக்குப் பதிலடி கொடுத்தாள்... ஆனந்தக் கண்ணீரோடு, முத்த மழையை.

இருவருமே வேறெதுவுமே பேசவில்லை. பேசத் தோன்றவும் இல்லை. தீக்ஷாவுக்குத் தன் கணவன் உயிரோடு இருக்கிறான் என்று நம்ப முடியவில்லை என்றால்.... விஜய்க்கோ, தன் மனைவி தன்னவளாகத் திரும்பி விட்டாளா என்று பிரமையிலேயே இருந்தான்.

அவனுக்கு ஓ வென்று கத்த வேண்டும் போல் இருந்தது. என் தீக்ஷா திரும்பக் கிடைத்து விட்டாள் என்று அத்தனை பேரிடமும் கத்திச் சொல்ல வேண்டும் போல் இருந்தது. என்னை இனி பரிதாபமாய்ப் பார்க்க மாட்டீர்கள் தானே... என்று திமிராகச் சொல்ல வேண்டும் போல இருந்தது. ஒரு கட்டத்தில் அவனையும் மீறிச் சந்தோஷத்தின் உச்சிக்குச் சென்றவன், தன் மனைவியைத் தூக்கித் தட்டாமாலை சுற்ற...

"அத்தான்! சுத்துது..." என்ற மனைவியின் குரலில் தான், தாங்கள் இருக்கும் சூழ்நிலையை உணர்ந்தவன்... அவளின் உடல் நலனும் அவன் கவனத்தில் கொண்டு வந்து... அவளை இறக்கி விட்டபடி...

"மயக்கம் வருதா தீக்ஷா...?" என்று கேட்ட போதே... அவளின் உடல்நிலை இன்னும் சரி ஆக வில்லையோ என்ற ஆதங்கத்தில், அவன் குரல் இறங்கி இருக்க...

"பின்னே... இப்படிச் சுத்துனா... தலை சுத்தாதா...?" என்றவள், அப்போதுதான் கவனித்தாள் - கண்கள் பயபளக்கத் தங்களைப் பார்த்தபடி நின்று கொண்டிருந்த முருகேசனையும், காத்துமுத்துவையும்.

"விஜய் அத்தான்... இவங்க... இங்கே.." என்று இழுக்க...



விஜய், சிரித்தபடி... "ஹ்ம்... உன்னோட பாசமலர்... அண்ணனுங்க தான். நீ சரியாகிற வரை.... உன்னை விட்டுப் போக மாட்டேன்னு பிடிவாதம்..."

தீக்ஷா, ஒரு நிமிடம் சிந்தித்தவள்... விஜய்யை விட்டு விலகி நின்று.... அவர்கள் முன்னே சென்று கை கூப்பினாள்.

"என்னம்மா நீ... நீ தம்பி கூடச் சேருகிற நாளுக் காகத்தான் காத்துக்கிட்டு இருக்கோம்... இது என்ன... எங்களுக்குப் போய்..." என்று கூப்பிய அவளின் கையை இறக்கி விட...

"இல்லை அண்ணா... நீங்க ரெண்டு பேரும் இல்லை என்றால்... அன்றைக்கு..." ஓரளவு அன்றைய தன் நிலை உணர்ந்த போதே அவள் குரலில் நடுக்கம் வர... விஜய்யின் மார்பில் மீண்டும் சரணடைந்தவள்...

"அத்தான்... இவங்க மட்டும் இல்லை என்றால்... நான் நினைவு தடுமாறி நின்ற நிலையில்... எதையுமே தடுத்திருக்க முடியாது..." என்றவள், அதற்கு மேல் பேசப் பிடிக்காமல் விஜய்யை இறுக்கமாய்ப் பிடிக்க...

அவளை ஆறுதலாக அணைத்தவன்....

"ப்ச்... அதை நினைக்காதே... உன் மனசுக்கு எதுவுமே தப்பா நடக்காது. உனக்கு நடந்த கெட்டதுக்கெல்லாம் நான் தான் காரணம். நான் உன் வாழ்க்கையில வந்ததனாலதான் அத்தனை பிரச்சினைகளும்..." என்று வலியோடு சொல்ல...

தன் கரங்களால் அவன் வாயை மூடியவள்... அவனைத் திசை மாற்ற,

"அத்தான்... பசிக்குது..." என்று சொல்ல...

விஜய், சிரித்தபடி... காத்தமுத்துவையும் முருகேசனையும் பார்க்க...

"நாங்க போய் வாங்கிட்டு வருகிறோம், தம்பி," என்று இருவருக்கும் தனிமை கொடுத்து விலக...

அவர்கள் சற்று தூரம் கடந்தபோதே...

முருகேசனிடம்,

"எனக்கும் சேர்த்து, முருகேசன்..." என்று விஜய் சொல்ல... தலை ஆட்டியபடி சென்றனர் இருவரும். அவர்கள் கண் மறையும்வரை அமைதியாக இருந்த தீக்ஷா...

விஜய்யை வியப்பாகப் பார்த்தபடி...

"அத்தான்.... அவர் பேர் டேனியல்... அது தெரியாதா...?"

விஜய், தீக்ஷாவையே பார்த்தபடி நின்று கொண்டிருந்தான். தன்னவள் ஞாபகங்களை மீட்டெடுப்பதை மெய் மறந்து பார்த்தபடி இருக்க... தீக்ஷா, அவனை உலுக்கினாள்.

அவளின் உலுக்கலில்.... தன் சிந்தையைக் கலைத்து, தீக்ஷாவிடம் உரையாட ஆரம்பித்தான். விளையாட்டாகவே ஆரம்பித்தான்...

"ஓ... அப்போ காத்தமுத்து பேரு என்ன...?"

"அவர் பேர் கண்ணன்..." என்றவள்,

"அவங்க ரெண்டு பேரும் சின்ன வயசுலே இருந்தே ஆர்ஃபனேஜ்ல வளந்தவங்களாம்... சின்னச் சின்னத் தப்பு பண்ண ஆரம்பித்து... இன்னைக்கு இந்த நிலைமையில இருக்காங்களாம்... ஆனா ரொம்ப நல்லவங்கதான்..."

அவள் சொல்வதை எல்லாம் கேட்டவன்...

"அவங்க உன் மேலே ரொம்பப் பாசம் வெச்சுருக்காங்க தீக்ஷா... அவங்களோட உண்மையான பேரைக் கூட மறைத்து, உனக்காக நம்ம வீட்ல வேலை



பார்த்துட்டு இருக்காங்க. சொல்லப் போனால், உன்னோட பாடி கார்ட்ஸ் அவங்க, தெரியுமா?" என்று முடித்தவன்,

"அவங்கல்லாம் நல்லவங்க... உன் அத்தான் நல்லவனா கெட்டவனா, சொல்லு..." என்று விளையாட்டாய்க் கேட்பது போல் கேட்டாலும்... இன்னும் அவளின் நிலையில் தெளிவில்லாதவனாகவே இருந்ததால், அப்படிக் கேட்டு வைக்க...

அவனின் முகத்தை ஆராய்ந்தவள்... பதிலே சொல் லாமல் இருக்க...

"என்ன மௌனம் ஆகிட்டே...?" என்று சொல்லும் போதே,

"இந்த முகத்தைப் பார்த்தால்... நல்லவன்னு சொல்லத் தோணலை... கெட்டவன்னும் சொல்லத் தோணலை... பார்க்கவே சகிக்கலை..." என்றவள்,

"ஆங்... இன்னொண்ணும் சொல்ல நினைத்தேன்..." என்றவள்,

"என்ன...?"

"இது என்ன...?" என்று அவனின் ஷேவ் செய்யப்படாத முகத்தைச் சுட்டிக் காட்டியவள்...

"குத்துது அத்தான்..." என்று சலித்தவளிடம்... குனிந்த விஜய்...

வேகமாய்த் தன் முகத்தை அவள் முகத்தோடு அழுத்தமாய்த் தேய்த்தபடி...

"வலிச்சாலும் தாங்கிக்க... மனுசனைத் தவிக்க விட்டேல்லடி... அதுக்குப் பனிஷ்மெண்ட்னு வெச்சுக்கோ..." என்றபோதே...

அவனின் உரசலில் வலித்த கன்னங்களைத் தடவியவள்... எம்பி எட்டி, அவனின் கன்னத்தைக் கடித்தவள்...

"வலிக்குதா... வலிச்சாலும் பொறுத்துக்கங்க.." என்று பதிலுக்குப் பதில் பேசி... அவனிடம் சிரிக்க... அவனோ,

"வலிக்கலைடி... இந்த வலியெல்லாம் சாதாரணம்... இத்தனை நாள் நான் அனுபவித்த வேதனைக்கு இதெல்லாம் சாதாரணம்...!" என்ற கணவனின் வார்த்தைகளில் கண் கலங்கினாள் தீக்ஷா. இப்போது அவனிடம் தன் கேள்விக் கணைகளை ஆரம்பித்தாள்.

"நீங்க அன்னைக்குத் துபாய் போகலையா அத்தான்...? அப்போ ஏன் சுரேந்தர் அத்தான் அப்படிச் சொன்னாங்க...?"

அவளின் கேள்வியில்....

"நான் போகலை தீக்ஷா... உன்னை ஏமாத்திட்டுப் போக மனசு வரலைடா... ஆனால், நான் அன்னைக்குப் போயிருந்தேன் என்றால்..." என்று நிறுத்த,

"அதைப் பேசாதீங்கத்தான்...!" என்ற போதே தீக்ஷா வின் குரல் நடுங்க ஆரம்பிக்க...

"நானாடி பேசினேன்... நீதானே ஆரம்பிச்சே..." என்று முறைத்த போதே, காத்தமுத்துவும் முருகேசனும் வந்தனர். வரும்போதே.... விஜய் – தீக்ஷா இருவரும் சேர்ந்திருக்கும் காட்சியைக் கண்களில் நிரப்பியபடியே வர...

அவர்கள் பார்வை புரிந்த தீக்ஷா... விஜய்யின் தோள் சாய்ந்தபடி...

"எங்க ரெண்டு பேருக்கும் ஜோடிப் பொருத்தம் எப்படி இருக்கு...? நல்ல இருக்கா...?" என்று கேலியாகப் பேச ஆரம்பிக்க...

"சூப்பர் தங்கச்சி..." என்று இருவரும் கோரஸாக சந்தோஷமாகச் சொல்ல,

"சரி. அப்போ சொல்லுங்க... எங்க ரெண்டு பேருல யார் லக்கி...?" என்று வம்பில் மாட்டி விட...



சற்றும் தாமதிக்காமல் சொன்னார்கள் இருவரும்...

"நீதாம்மா கொடுத்து வெச்சுருக்கணும்.... இப்படி ஒருத்தர் கிடைக்கிறதுக்கு...!"

தீக்ஷாவின் முகத்தில் மென்னகை வர... கூடவே கர்வமும் வந்தது என்று கூடச் சொல்லலாம். அதை எல்லாம் உடனே மறைத்தவள்...

"என்னைத்தான் கவுத்திட்டீங்கன்னு பார்த்தா.. இவங்களையுமா...?" என்று பொய்க் கோபம் காட்ட..

"பசிக்குதுன்னு சொன்னேல்ல... வா, சாப்பிடலாம்... அதன் பிறகு நீ எவ்வளவு வேணும்னாலும் பேசலாம்..." என்று இழுத்துக் கொண்டு போக... முருகேசன், காத்தமுத்து இருவரின் முகத்திலும் நிம்மதியுடன் கூடிய புன்னகை மலர்ந்தது.

தீக்ஷாவை அறையில் அமர வைத்து விட்டு, வெளி யில் வந்தவன்... முருகேசன், காத்தமுத்துவை அழைத்து...

"யார் கிட்டேயும் இப்போ சொல்ல வேண்டாம்... நாளைக்கு டாக்டரிடம் கன்சல்ட் செய்த பிறகு சொல்லலாம்..." என்று சொல்லி விட்டு, மீண்டும் தன்னறைக்குச் செல்ல... தீக்ஷா, விஜய்க்காகக் காத்திருந்தாள் சாப்பிடாமலே.

அவள் சாப்பிடாமல், சாப்பாட்டை வெறித்தபடி அமர்ந் திருப்பதைப் பார்த்து...

"சாப்பிடலையா...?" என்று வினவியபடியே அவளின் முன் அமர...

"அத்தான், உங்களுக்கு...? நீங்க இதைச் சாப்பிடு வீங்களா...?"

அவளின் கேள்வியில், வாய் விட்டுச் சிரித்தபடி...

"ரொம்ப நல்லா இருக்கும் தீக்ஷா... என்னோட பேவரைட்தான்..." என்று சாப்பிடப் போனவனின் கைகளில்

இருந்த கவளத்தை, வேகமாய்த் தனது வாய்க்குள் தள்ளியவள்... கணவனைத் தன் கண்களில் நிரப்பியபடியே சாப்பாட்டைச் சாப்பிட்டவள்... தன் கணவனுக்குத் தன் கைகளால் ஊட்டவும் மறக்கவில்லை.

அதன் பிறகு இருவருமே பேசவில்லை. விழிகள் பேசியபடி இருந்ததால்... வாய் மொழி மௌனம் பெரிதாகத் தெரியவில்லை இருவருக்கும்.

இருவரும் சாப்பிட்டு முடித்த பின்னர்... விஜய், தீக்ஷாவை உறங்கச் சொல்ல...

"அத்தான்... தூக்கம் வரலைத்தான்..." என்று சிணுங்க...

விஜய்யோ... "சரி. ரொம்ப நல்லது... என்னமோ பண்ணு. எனக்குத் தூக்கம் வருது..." என்றவன், அவளை யோசிக்க விடாமல்... அவளது மடியையே தலையணை ஆக்கியவன்... அவளது இடுப்பைச் சுற்றித் தன் கரங்களைப் போட்டவன்... அவளை வளைத்துப் பிடித்தபடி தூங்க ஆயத்தமாக...

"இந்தர்..." என்று அவனது மூக்கைத் திருகியவளின் இடையில், இன்னும் ஆழமாக முகம் பதித்தவன்...

"இன்னொரு முறை சொல்லுடி..." என்று அரை மயக்கத்தில் புலம்புவதைப் போலக் கேட்க...

"இந்தர்... இது என்ன சின்னப் பிள்ளையாட்டம்... ஹாஸ்பிட்டல் வேறே..." என்று தீக்ஷா அவஸ்தையாய் நெளிந்தாள்.

"ப்ளீஸ்... ஒரு அரை மணி நேரம்... நான் நிம்மதியா தூங்கியது என்றைக்குன்னு எனக்கே தெரியவில்லை. இப்போ எனக்குத் தூங்கணும் போல இருக்கு..." என்று மனைவியின் மடியில், சிறு குழந்தை அடம் பிடிப்பதைப் போல் அடம் பிடிக்க...



அதில் நெகிழ்ந்த தீக்ஷா... தன் தலையைத் தன் கணவன் புறம் கவிழ்த்து...

"இந்தர்... இத்தனை நாள் கழித்து... நினைவு திரும்பி வரும்போது... தூக்கமா உங்களுக்கு..." என்று குறும்பாய்க் கூறி, அவன் காது மடலைக் கடிக்க...

நிமிர்ந்தவன்... கண் சிமிட்டியபடி...

"டாக்டர் நாளைக்குக் கம்ப்ளீட் செக் செய்து உனக்கு அனைத்துப் பிரச்சினைகளும் சரியாகி விட்டதுன்னு ஒரு வார்த்தை சொல்லட்டும்... அதன் பிறகு... அடுத்த ஒரு வாரம் நான் தூங்கணுமுன்னு என் கிட்டே கெஞ்சுவே...."

அவனின் பதிலில் முகம் சிவந்தவள்... அவனுக்குப் பதில் சொல்லாமல், அவன் தூங்குவதற்கு ஏதுவாகக் கட்டிலில் தலையணையை வைத்துச் சாய்வாய் அமர்ந்தவள்... கணவனின் கேசத்தை விரல்களால் அளைந்தபடி இருக்க... வெகு நாட்களுக்குப் பிறகு மனதில் நிம்மதியோடு உறங்க முனைந்தான் விஜய். அடுத்த நொடியே உறங்கியும் போனான்.

தீக்ஷா, அவனின் கேசத்தை அளைந்தபடியே... தன்னவனையே பார்த்தபடி இருந்தாள்.

'முதன் முதலில் தான் பார்த்த விஜய்யா இவன்... முதன் முதலாய்த் தன்னைப் பார்த்துக் கர்ஜித்த விஜயேந்தரா இவன்.... இவனும் அவனும் ஒன்றா... தன் மடியில் சிறு குழந்தை போல் உறங்கும் இவனா அவன்...?'

யோசிக்கும் போதே... மருத்துவ மனையின் வாசம் நாசிகளில் உணர... தன்னைப் பற்றிய சிந்தனைக்குத் தாவினாள்.

'இத்தனை நாள்... நினைவில்லாமல் இருந்தேனா...?' நினைக்கும்போதே கலங்கினாள்.

'எனக்கு என்ன ஆனது...? நான் எப்போது என் கணவனோடு வந்து சேர்ந்தேன்...?' முதலில் எதுவுமே ஞாபகம் வராமல் கலங்கினாள்.

ஆனால், சிறிது நேரத்திலேயே முருகேசன் தன் வீட்டில் வாட்ச்மேனாய், நினைவுகள் கலங்கலாய் வர... அடுத்து... காத்தமுத்து ஞாபகம் என... நினைவுகள் ஆட... காட்சிகள் பிம்பமாகவே வரவில்லை. காரணம்... நினைவுச் சிதறல் களை அவளால் ஒன்று சேர்க்க முடியவில்லை. 3 மாதம் கோமாவில் இருந்தது சுத்தமாக அவளுக்கு ஞாபகம் இல்லை. ஆனால், அதன் பின் நடந்ததெல்லாம் முற்றிலும் ஞாபகம் வரவில்லை என்றாலும்... அவளால் ஓரளவு சேகரிக்க முடிந்தது. ஆனால், கோவையாய் இதுதான் நடந்தது என்று அவளால் அனுமானிக்கவே முடியாதபடி ஒரு நிலையில் இருந்தவள்... தன் கழுத்தில் இருந்த செயினை ஒரு முறை பார்த்தவள்... தன் தாலி எங்கே என்று யோசிக்க ஆரம்பிக்க.. ஒன்றும் ஞாபகம் வராமல், தன் கழுத்தில் தொங்கிய VD என்ற டாலரைப் பார்த்தபடியே யோசிக்க ஆரம்பித்தாள். விஜய்யுடன் VD ப்ரமோட்டர்ஸ்க்குச் சென்ற நினைவலை வர... அதுவும் முழுமை பெறாமல் இருக்க... அதற்கு மேல் தாங்க முடியவில்லை.

தன்னைக் கட்டிக் கொண்டு தூங்கிய கணவனை உலுக்கி எழுப்ப... விஜய் பதறி எழுந்தான்.

"ஏய் தீக்ஷா... என்ன ஆச்சு...?" என்று எழுந்தபடியே அவளை அதிர்ச்சியுடன் பார்த்தான்.

இப்போதும் அவளுக்கு ஏதாவது ஆகிவிட்டதோ... என்ற ரீதியில் பயந்து அதிர்ந்த பார்வையை விஜய் வீச,

அதில், தன் தவறு புரிந்தவளாய் நாக்கைக் கடித்த தீக்ஷா... "அத்தான்... எனக்கு எதுவுமே ஞாபகம் வரலை... அங்கங்கே ஏதேதோ நினைவு வருது. என்ன நடந்தது...



ஒழுங்கா அதைச் சொல்லுங்க... முருகேசன் வாட்ச்மேனாத் தானே வேலை பார்க்கிறார்? அதுவும் எங்க வீட்லே... நான் எங்க வீட்லே தானே இருந்தேன்? நீங்க ஏன் என் கூட இல்லை...? நீங்க என்னைக் கம்பெனிக்குக் கூட்டிட்டுப் போவீங்களா... மண்டை காயுது அத்தான்... ப்ளீஸ்... ப்ளீஸ்... சொல்லிருங்கத்தான்... தலை எல்லாம் வலிக்குது," என்றவ ளிடம்,

"இங்கே வா..." என்று தன் புறம் அழைக்க... நடந்ததை எல்லாம் சொல்லப் போகிறானோ என்று ஆவலாய் அவன் முகம் பார்த்தபடி, அவன் மேல் சாய... அவனோ,

"என்னைப் பாரு... நான் எப்படி இருக்கேன், சொல்லு..." என்று தன்னைப் பற்றிக் கேட்க...

'நான் என்ன கேட்கிறேன்... இவன் என்ன கேட் கிறான்...' நினைத்தவள்... கணவனின் கேள்விக்கே பதில் சொன்னாள்.

"அதுதான் சொல்லிட்டேனே, முதலிலேயே... அதை மறுபடியும் மறுபடியும் சொல்லணுமா?" என்றாள் தீக்ஷா.

"அதேதான் உனக்கும்... சந்தோஷமான நிகழ்வுகள்னா... நானும் சொல்லி இருப்பேன்..." என்று அவளை வைத்தே மடக்க...

"ப்ச்... எனக்குத் தெரியணுமே..." என்று கவலையாய் முகம் வைத்துச் சொல்ல...

"சொல்கிறேன்... உடனே வேண்டாமே... உனக்காவே ஞாபகம் வரும்மா..." என்றவன், "இதற்கு மேல் அதைப் பேசாதே..." என்று கட்டளை போல் வலியுறுத்த... தீக்ஷாவும் அதற்கு மேல் பேசவில்லை. மணியைப் பார்க்க.. மணி 2 ஆகி இருக்க...

"தூங்கும்மா... நாளைக்கு எல்லா டெஸ்ட்டும் எடுக்க வேண்டும்..." என்றவன், வேகமாய்...

"தீக்ஷா... உனக்குப் பழைய ஞாபகம் எல்லாம் வந்து விட்டது என்று யார் கிட்டேயும் சொல்ல வேண்டாம்..." என்று கூற,

"ஏன்?" என்றாள் முகம் மாறியவளாய்.

"சொல்ல வேண்டாம்..." என்றான் அழுத்தமாக.

"அதுதான் ஏன்னு கேட்கிறேன்...?" என்றாள், இவளும் அழுத்தமாக.

'விட மாட்டாளே...' என்று உள்ளுக்குள்ளே முனகியவன்...

"இப்போ நீ குணமாகிட்டேன்னு சொன்னால்... அத்தனை பேரும் உன்னைப் பாச மழையிலே நனைக்கிறேன்னு சொல்லி, என் கிட்டே உன்னை விட மாட்டாங்க... அதுனாலதான்..." சொல்லும் போதே அவன் குரலில் கள்ளத்தனம் வெளிப்பட...

"அடப்பாவி...!" வாய் விட்டே சொல்லிவிட்டாள் தீக்ஷா.

"சரி. அப்போ எப்போதான் என்னை மத்தவங்க பாச மழையிலே நனைய விடுவீங்க...?" அவனைக் கிண்டல் செய்வது போல் கேட்க...

முறைத்தவனை, உதடு குவித்து, முத்தம் தருவதைப் போல் பாவனை செய்து சமாதானமாக்க... யோசித்த விஜய்...

"ஒரு நாள்... இல்லையில்லை... ரெண்டு நாள் கழித்துச் சொல்வோம்... அதுவரை சொல்ல வேண்டாம், ப்ளீஸ்..." என்று கெஞ்சலாகக் கேட்டவனை...

"ரெண்டு நாள் போதுமா...?" விழி விரித்து ஆச்சரியமாகக் கேட்டாள், அவன் மனைவி.

"அடிப்பாவி..." என்று இப்போது விஜய் வாய் விட்டுச் சொல்ல...



"பின்னே... ரெண்டு நாள் உங்களுக்கு என்னைப் பார்க்கிறதுக்கே சரியா இருக்கும்... எனக்கு உங்களைப் பார்க்கிறதுக்கே சரியா இருக்கும்... நான் வேறே, எனக்குப் பேசவே நேரம் போதாது... நீங்க என்னடான்னா... 2 நாள்னு சொல்லி, இப்படி ஏமாத்திட்டீங்களே இந்தர்... தீக்ஷா புருசனா நீங்க இன்னும் மாறவே இல்லை," என்று அலுக்க,

அவளைப் பார்த்துக் கலகலப்பாய்ச் சிரித்த விஜய், "இந்த வாய் மட்டும் இல்லைன்னு வெச்சுக்க..." என்று நிறுத்த,

"இல்லைன்னா...."என்று இவளும் கேள்வியாய் நிறுத்த,

"விட்ருடி... ப்ளீஸ்டி... உன் கூட எல்லாம் பதிலுக்குப் பதில் பேச என்னாலே முடியாது," என்று தோல்வியை ஒப்புக் கொண்டவனிடம்...

"சொல்லிடலாம் அத்தான்... அவங்க எல்லோர் சந்தோஷத்திலேயும்தான் நம்ம சந்தோஷம் இருக்கு... நமக்காக ஒவ்வொன்றையும் பார்த்துப் பார்த்துச் செய்றவங்க அவங்க... அவங்க கிட்டே மறைச்சுட்டு நாம எப்படித்தான்..." என்று நிறுத்தியவள்...

"உங்க உணர்வுகள் எனக்குத் தெரியுதோ இல்லையோ... நம்மைச் சுற்றி இருக்கும் அனைவருக்கும் புரியும் அத்தான். பாருங்க... யாரோ முருகேசன், காத்த முத்து... அவங்க எனக்கா சப்போர்ட் பண்ணினாங்க... உங்களைத்தான் பண்ணினாங்க... காரணம், இத்தனை நாள் நீங்க பட்ட வேதனையைக் கண் கூடாகப் பார்த்திருக் காங்க... இவங்களே இப்படி இருக்கும்போது... நம்மைப் பெத்தவங்க.. நம்மோட கூடப் பிறந்தவங்க... நம்ம சந்தோ ஷத்துக்குக் குறுக்கே நிற்பாங்கன்னு எப்படி நினைக்கிறீங்கத் தான்...?"

“ஹப்பா... என் பொண்டாட்டி எப்போ சின்னப் பிள்ளைத்தனமா பேசுவா... எப்போ பொறுப்பாப் பேசுவான்னு, அவளைப் படைத்த அந்த ஆண்டவனையே குழப்பிடுவா...” என்று கிண்டல் செய்தவன்,

“சரி... உன் விருப்பம் போல எல்லார் கிட்டேயும் சொல்லலாம். ஆனால், அப்புறம்... அம்மா, அப்பா, அண்ணா, அண்ணி, ஃப்ரெண்ட், சுனோன்னு என் கிட்டே சாக்குச் சொல்லிட்டுப் போகும் போது உனக்கு இருக்குடி...” என்று சொன்னவன், அவளை விட்டுத் தள்ளி அமர்ந்து உம்மென்று இருக்க...

“இந்தக் கோபம் மட்டும் எப்போதான் போகுமோ...?” என்று அவனருகே மீண்டும் வந்து அமர்ந்தபடி கேட்டவளிடம்,

“அம்மா, தாயே... இந்தக் கோபத்தைப் போக்கணும்னு, இதுக்கும் விஷப் பரிட்சை வெச்சுராதே...!” என்றான், பதறியவனாய் நடித்தபடி பேசிச் சிரிக்க... இதற்கு தீக்ஷா வழக்கம் போல் சிரிக்கவில்லை. மாறாகத் தன் கணவன் பட்ட வேதனைதான் அவள் முகத்தில் பிரதிபலித்தது.

அதன் பிறகு விடிகாலை வரை அவனிடம் பேசியபடியே அவனையும் தூங்க விடவில்லை... இவளும் தூங்க வில்லை. ஏதேதோ பேசினார்கள்... என்னென்னவோ பேசினார்கள். இடையே நடந்த சந்தோஷமான விசயங்களை மட்டும்... அவ்வப்போது எடுத்துச் சொன்னான் விஜய், அவளிடம்.

அடுத்த நாள் காலை... அனைத்து விதமான டெஸ்ட்டும் எடுக்கப்பட்டு, ஓரளவு மருத்துவர் நம்பிக்கை அளிக்கும் விதமாய்ச் சொன்ன பின்னரே விஜய் நிம்மதி அடைந்தான்.

இருந்தும், அவள் பரிபூரணக் குணமடைந்து விட்டாள் என்பதை அவளின் பழக்க வழக்கங்களாலேயே உணர



முடியும் என்று விஜய்யிடம் சொல்ல... விஜய், கவலையோடு மருத்துவரைப் பார்த்தான்.

அவனின் பார்வை உணர்ந்த மருத்துவர்...

“விஜய், ஒண்ணும் பிரச்சினை இல்லை... சில சம்பவங்கள் தீக்ஷாவைப் பின்னோக்கி இழுக்கலாம்... உதாரணமா... ப்ளைட் சத்தம் கேட்டு என்ன ரியாக்ஷன் பண்ணுவாங்கன்னு தெரியலை.... பட், நார்மல் ஆகிட்டாங் கன்னுதான் நினைக்கிறேன்... ஒண்ணு பண்ணுங்க... சந்தோஷமா ஹனிமூன் ட்ரிப் ஏற்பாடு பண்ணுங்க... ஃப்ளைட்ல கூட்டிட்டுப் போங்க... அப்போ தீக்ஷாவோட ரியாக்ஷன் பாருங்க... கண்டிப்பா... இன்ப அதிர்ச்சிதான் இருக்கும் உங்களுக்கு!” என்று சந்தோஷமாய்ச் சிரித்தபடியே தீக்ஷாவின் ரிப்போர்ட்டுகளை விஜய்யிடம் நீட்ட...

“கண்டிப்பா மேம்... தேங்க்ஸ் மேம்...” என்று உளப்பூர்வமாய்ச் சொன்னவன், அதன் பிறகு தன் வீட்டில், தன் மனைவியின் வீட்டில், தீக்ஷா குணமடைந்ததை அறி விக்க... இரு குடும்பத்தாரும் இருவரையும் வரவேற்கக் காத்திருந்தனர், விஜயேந்தரின் வீட்டில்.

## 52

**கா**ரை விட்டு இறங்கிய தீக்ஷா... தன்னை எதிர்பார்த்துக் காத்திருந்த இரண்டு குடும்பத்தினரையும் சந்தோஷத்தோடு பார்த் தவள்... தன் அன்னையைப் பார்க்க... ஆனந்தம் முகமெங்கும் ஜொலிக்க நின்ற தன் அன்னையைக் கண்டவ ளுக்கு, அவரின் மடியில் புதைய வேண்டும் போல் இருக்க... விஜய்யை விட்டுத் தன் அன்னையை நோக்கி வேக நடை நடந்தவளை, விஜய்யின் கைகளின் அழுத்தம் தடுத்து நிறுத் தியது.

கணவனைப் புரியாத பார்வை பார்க்க... அவனது அழுத்தமான பார்வையோ...

"உன் குடும்பத்தைப் பார்த்த வுடனே கழட்டி விட்டுட்டு ஓடப் பார்க்கிறியா...? ஒழுங்கா என் கூட வா...!" என்று சொல்லாமல் சொல்ல... அதைப் புரிந்தவளாய், தீக்ஷா அவனோடு நடந்தாள்.

ஆனால், இரண்டு அடி எடுத்து வைத்திருக்க மாட்டாள்... கால் தடுக்கி மடங்கி உட்கார... விஜய், வேகமாய்ப் பிடித்து விட்டான்தான்... ஆனாலும் அவள் வலியில் முகம் சுருக்க... இரு குடும்பத்தினரும் அவர்கள் அருகே ஓடிவந்து விட்டனர், பதறியபடி.

ஓடி வந்த ஜெயந்தி, தன் மகளின் அருகே உட்கார்ந்தபடி...

"என்னடா... பார்த்து வரக்கூடாது... என்ன அவசரம்...." என்று மகளின் காலைப் பிடித்துத் தேய்த்து விட்டவருக்கு... மனதிலோ,

'இப்படி விழுந்து விட்டாளே...' என்ற சஞ்சலம் வந்து போக... அதே கவலையோடு தன் மகளைப் பார்க்க...

தன் தாயைத் தன் அருகில் வர வைத்து விட்ட துள்ளலில்...

"அம்மா... ஒண்ணும் பிரச்சினையில்லை... லைட்டா வலிக்குது, அவ்வளவுதான்..." என்று தடுமாறியபடி எழுந்து... ஒரு காலைத் தூக்கியபடி.... ஒரு அடி எடுத்து வைக்க... விஜய் மற்றவர்களிடம்,

"நீங்க எல்லாம் முன்னே போங்க... இவளை நான் தூக்கிட்டு வருகிறேன்..." என்று சொல்ல... அதன்படி அனைவரும் முன்னே போக... மற்றவர்கள் சில அடி தூரம் போனபின்... முறைத்தான் தீக்ஷாவை.



"உன்னை..." என்றபடி ஒரே அள்ளலில் தன் கைக்குள் கொண்டு வந்தவன்...

"எங்கிருந்துடி கத்துக்கிட்டே இந்த நடிப்பை... ஆஸ்கார் அவார்டே கொடுக்கலாம் உனக்கு... தூக்குடான்னா தூக்கப் போறேன்... அதுக்கு இத்தனை சீன்... இத்தனை ஆர்ப்பாட்டமா...?"

கண் சிமிட்டினாள் தீக்ஷா.

"கண்டு பிடிச்சுட்டீங்களா.. அம்மா கிட்டே என்னால போக முடியலை... அம்மாவை என் பக்கத்தில் வர வெச் சுட்டேன், பார்த்தீங்களா...?" என்றவள்,

"அத்தான்... எல்லோர் முன்னாலேயும் என்னை உங்களைத் தூக்க வைக்கிறேன்னு சொன்னேன்ல... எப்புடி... அதிலேயும் ஜெயிச்சுட்டேன்ல...!" சிறு குழந்தை போலச் சவாலில் ஜெயித்ததைச் சொல்லிக் காட்ட...

'நீ ஏற்கெனவே ஜெயிச்சுட்டடி...' என்று மனதுக்குள் மட்டும் சொல்லிக் கொண்டவன்... ஆனால், தீக்ஷாவைப் பார்த்துப் புன்முறுவல் மட்டும் செய்தான்.

"பாவம் உங்க அம்மா... நீ பண்ணிய வேலையிலே அவங்க முகமே மாறிப் போயிருச்சு... இனிமேலும் கோவில் கோவிலாப் போறதை நிறுத்த மாட்டாங்க போ..." என்றவன், ஏக்கமாய்...

"என்ன ஒரு குறை... சேலையிலே இல்லாமல்... சல்வார்லே இருக்கே... நேத்துப் போல புடவையில இருந்திருந்தால்..." என்றவனின் கை அவனின் ஆதங்கத்தைக் காட்டுவது போல்... அழுத்தம் கூட்ட...

"ஹேய் புருசா... ரொமான்சை எல்லாம் ரூம்ல வெச்சுக்கலாம்..." என்ற போதே, வாசலும் வர... தீக்ஷாவை இறக்கிவிடப் போனான் விஜய்.

கலைச் செல்வி... “வேண்டாம் விஜய்... உள்ளே வந்தே இறக்கி விடு...” என்று தன் மகனையும் தன் மருமகளையும் ஆரத்தி எடுத்து வரவேற்றவர், “உங்களுக்கு வந்த சோதனை எல்லாம் இதோட போய்டணும்...” என்று நெட்டி முறித்து உள்ளே அனுப்ப...

“இந்த உலகத்தில் என் நாடகத்தையும் நம்புற ஜீவன் இருக்காங்க விஜய் அத்தான்... இப்படி ஒரு அத்தை எனக்குக் கிடைக்கக் கொடுத்து வைத்திருக்கணும்... என்ன பண்ணி னாலும் நம்புறாங்க,” என்று தன் கணவனிடம், அவன் அம்மாவைப் பற்றிக் கிண்டல் அடிக்க... அதை விஜய் முறைத்து ரசிக்க என... தம்பதி சகிதமாய் உள் நுழைந்தனர், நமது நாயகனும் நாயகியும்.

உள்ளே வந்த தீக்ஷாவை, அங்கிருந்த சோபாவில் அமர வைத்தவன்... தானும் அவள் அருகில் அமர்ந்தபடி, “அரை மணி நேரம்தான் உனக்கு டைம்... ஏதாவது சாக்குச் சொல்லிட்டு ஒழுங்கா மேலே வந்து சேரு...” என்று யாரும் அறியாமல்... கட்டளை போல் சொல்ல...

“வரலேன்னா...” என்று தீக்ஷா புருவம் சுருக்க,

“ஒரு மணி நேரம்...” என்று அவள் வழிக்கே விஜய் வந்தான். இப்போது அவன் குரலில் கெஞ்சலே இருக்க... தீக்ஷாவுக்கு அது போதாது.

“அதுக்கும் மேலே போனதுன்னா...?” உதட்டில் புன்னகையை மறைத்தபடி... அப்பாவியாய் விஜய்யைப் பார்க்க...

“ஹ்ம்.... நீ வரவே வேண்டாம்...” என்றவன், வேகமாய் எழுந்து... அதே வேகத்தோடு மாடி ஏறித் தன் அறைக்குள் புகுந்தான்.

தீக்ஷா சிரித்தபடி... தன் கணவனையே கண் மறையும் வரை பார்த்துக் கொண்டிருந்தாள்.



அதன் பின் ஒரே அன்பு மழைதான்... கண்ணீர் மழைதான்... தாய், தந்தை, அண்ணன், அண்ணி என, அனைவரின் பாச மழையில் நனைந்தவள்... அவர்களைத் தனது வழக்கமான துள்ளலான பேச்சில் குதூகலப் படுத்தியவள்... தன் புகுந்த வீட்டினரையும் மறக்கவில்லை. விஜய், தீக்ஷா வந்த நேரம், கிட்டத்தட்ட நண்பகல் 3 மணி.... அனைத்துப் பரிசோதனைகளும் முடித்து வர... இத்தனை மணி ஆகி இருந்தது.

கணவன் சொன்ன அரை மணி முடியும் தறுவாயில்... கலைச்செல்வியிடம்,

“அத்தை... ஹாஸ்பிட்டல்ல குளிச்சது... நான் குளிச்சுட்டு வருகிறேன்... பூஜை ரூம்ல விளக்கேத்தணும்...” என்று அந்த வீட்டின் மருமகளாய் மாறி அவர்களுக்கு ஐஸ் வைத்தவள்... வேகமாய் எழப் போக...

அருகில் அமர்ந்திருந்த யுகேந்தர்,

“தீக்ஷா... அண்ணனை வரச் சொல்லவா...?” என்று இழுக்க...

“எதுக்குடா அவர்...?” என்று புரியாமல் பார்வை பார்க்க...

“உனக்குத்தான் கால் ஸ்லிப் ஆகிருச்சே... உன்னாலே நடக்க முடியுமா?” என்று எதிர்க் கேள்வி கேட்டவனைப் பார்த்து... ‘ஈ...’ என்று இளித்தவள்...

“இப்போ கொஞ்சம் பரவாயில்லை...” என்று சமாளித்தபடி...“இல்லை... அந்த அளவு வலி இல்லை... நீ வேணும்னா எனக்கு ஹெல்ப் பண்ணு...” என்று அவனை எழுப்பி, அவன் தோளைப் பிடித்தபடி... லேசாய்க் கால் சாய்த்தபடி நடக்க...

மாடிப்படி ஏறும்போது யுகி பெருமையாக,

"பார்த்தியா... நீ போட்ட நாடகத்தை நான் எப்படி கண்டினியூட்டி மிஸ் ஆகாம மெயின்டெயின் பண்றேன்னு பார்த்தியா...?" என்க,

"பார்த்துடா... எனக்குக் கண்டினியூட்டி மெயின்டெயின் பண்றதை விடு... உன் நாடகத்தோட கண்டினியூட்டி என்னாச்சு...?" என்று கேட்க,

"ஹா... அதெல்லாம் செம சூப்பராப் போகுது... என் ஹீரோயினோட என்னைச் சேர்த்து வைக்கிறதுக்கு எல்லா வில்லன்களும் பச்சைக் கொடி காட்டிட்டாங்க..." தெனாவெட்டாகச் சொன்னான் யுகி. அவன் சொல்லி முடிக்கவும்... மாடிப்படியின் கடைசிப் படியும் வர, சரியாக இருந்தது.

"ஓ... ஹீரோ ரொம்ப சந்தோஷமா இருக்கீங்க போல... வில்லன்களை எல்லாம் விடு... ரொம்ப ஆடுன... உன் ஹீரோயினை விட்டே சிகப்புக் கொடி காட்ட வெச்சுருவேன்...." என்று கண்களை உருட்டி யுகியை மிரட்ட...

யுகி, உண்மையிலேயே அதிர்ந்து விழித்தான். வழக்கம் போல் தன் தோழியிடம்... தன்னடக்கமாய் மாறி,

"ஏன்... ஏன் தீக்ஷா... உனக்கு இந்தக் கொலை வெறி... எப்போது இருந்து உனக்கு இந்த வில்லத்தனம்?" அப்பாவியாய்க் கேட்க...

"வில்லன் என் புருசன்னா... நான் வில்லிதானேடா...!"

"அடிப்பாவி..." என்றவன்,

"போம்மா போ... உங்க சங்காத்தமே எனக்கு வேண்டாம்..." என்று அவளின் அறையை நோக்கிக் கை காட்ட...

"அது... இப்போ சொல்லு பார்க்கலாம்... உங்க அண்ணன் ஹீரோவா... வில்லனா...?" என்று மிரட்டிச் சிரிக்க...



"நீ ஹீரோயின்மா... உன்னை மேரேஜ் பண்ணினது னாலே... அவர் ஹீரோம்மா... இது போதுமா... இன்னும் வேறே ஏதாவது சொல்லணுமா...?" என்றவன், விட்டால் போதுமென்று படி இறங்கிப் போயே போய் விட்டான்.

யுகியை ஒரு வழி பண்ணிவிட்டுத் தங்கள் அறையினுள் நுழைந்த தீக்ஷா.. விஜய், குளியலறையில் இருப்பதை உணர்ந்தவள்... கட்டிலில் அமர்ந்து... அறையை விழி சுழற்றி நோட்டமிட்டாள். அவளின் சுவர் கிறுக்கல்கள்... அவளது புகைப்படம் மட்டுமே இருக்க... தாங்கள் இருவருமாய்ச் சேர்ந்த புகைப்படம் எதுவும் இல்லை. அது ஏனென்று ஓரளவு யூகித்தவளுக்கு... பார்வதி, சாரகேஷ் நினைவுகளும் வந்து போயின.

காரில் வரும்போதே விஜய், பார்வதி - சுரேன் திருமணம் பற்றிச் சொல்லி இருந்தான். பார்வதியைப் பற்றிச் சொல்லும் போதே சாரகேஷ் - அகல்யா திருமண விபரமும் தெரிந்து கொண்டாள்.

ஆனால், விஜய்... இவள் வீட்டை விட்டுப் போன நிகழ்வுகளை எல்லாம் சொல்லவில்லை... தேவையான வற்றை மட்டும் சொல்லி... அதிலிருந்தே அவளை யோசிக்க வைத்தான்.

அவள் இந்த யோசனையில் இருக்கும் போதே... விஜய் வெளியில வர... அவனைப் பார்த்தபடியே நின்று கொண்டிருந்தாள்.

ஈர மேனியுடன் ஒரு கையால் தலைக் கேசத்தைக் கோதியபடி வந்தவன்... மனைவி, கொடுத்த மணி நேரத்திற்குள் வந்ததை மனதுக்குள் மெச்சியபடி... அவளின் அருகே வந்தவன்... அவளை இழுத்துப் பின்னால் திருப்பித் தன்னோடு சேர்த்து அணைக்க... தீக்ஷா அளவாய் அடங்கி னாள் அவனுக்குள்.

கணவன் என்ற உரிமையும்... அவன் மேலிருந்து வந்த சோப்பின் மணமும்... குளிப்பதற்கு முன் செய்த சவரத்தால்... ஆஃப்டர் ஷேவ் லோசனின் மணமும், தீக்ஷாவுக்குள் தானாகவே மயக்கத்தைக் கொடுக்க... அவனுக்கு வசதியாக... தன் வலது கரத்தை விஜய்யின் பின் கழுத்தில் போட்டபடி... அவனின் வெற்று மார்பினில் சாய... அவளின் சரணடைதலில் அவளின் கணவன் வேகமாய் முன்னேறினான்.

அவளது கழுத்து வளைவில் தன் இதழால் பயணம் செய்ய ஆரம்பித்தவன்... அவளின் காதில்... அவளில்லாத தன் ஏக்கத்தைப் பாடலாகச் சொல்ல ஆரம்பித்தான்.

"I can't win I can reign.
I will never win this game without you, without you.
I am lost, I am vain.
I will never be the same with out you, without you.
I won't run, I won't fly.
I will never make it by without you, without you.
I can't rest, I can't fight.
All I need is you, & I without you, without you.
Oh oh oh, you, you, you, without you.
You, you, you without you.
Can't erase, so I'll take blame.
But I can't accept that we're estranged,
without you. without you.
I can't quit now, this can't be right.
I can't take one more sleepless night,
without you. without you.
I won't soar, I won't climb.
If you're not here. I'm paralyzed.
With out you, without you.



I can't look, I'm so blind.
Lost my heart. lost my mind without you,without you.
Oh oh oh, you, you, you, without you, you, you.
without you.
I am lost, I am vain.
I will never be the same without you!

அவனின் ஒவ்வொரு வார்த்தையிலும் உருகிப் போனாள் தீக்ஷா.

வேகமாய் அவனை நோக்கித் திரும்பியவள்...

"எனக்குக் கவிதையெல்லாம் வராது அத்தான்... உங்களை மாதிரிப் பாடிக் காண்பிப்பதும் எக்ஸ்பிரஸ் பண்றதும் தெரியாது... ஆனால், ஒரே வார்த்தையில சொல்றேன்... ஏற்கெனவே சொன்னதுதான்...

"என் இந்தர் இன்றி... நான் இல்லை. நல்லாருக்கா...? வேணும்னா அன்பே... கண்ணேன்னு முன்னால பின்னால சேர்த்துக்கங்க.. என் கவிதை எப்படி...?" என்றாள், தன் வழக்கமான குறும்போடு. ஆனால், கண்களில் கண்ணீர் முத்துக்களோடும்... உதடுகளில் புன்னகையோடும்.

சிரித்த விஜய்... "நான் கஷ்டப்பட்டுப் பக்கம் பக்கமாகச் சொன்னால்... ஒரே லைன்ல ஸ்கோர் பண்ணிட்டடி... இவ்வளவு சூப்பரா கவிதை சொன்ன என் பொண்டாட்டிக்கு, என்னென்னவோ தரணும் போல இருக்கு...!" என்று மோகமாய் மொழிந்தவன்...

அவளின் இதழில், தன் இதழை அழுத்தமாகப் பதிக்க... ஆனந்தமாக அவனுக்குத் தன் இதழைப் பரிசளித்தாள் அவளின் மனைவி.

அவன் உடலின் ஒவ்வொரு அணுவும்... அனுபவித்த சுகம் வேண்டி... ஒரே நேரத்தில் போராட்டத்தில் ஈடுபட... விஜய்யால் அதற்கு மேல் ஒரு நொடியும் தாமதிக்க முடிய

வில்லை. அவனின் கைகளும், இதழும், தேகமும்... தன் மனைவியின் தேகத்தில் எல்லை மீறித் தன் ஆக்கிரமிப்பை... உரிமையோடு ஆரம்பிக்க...

அவனைத் தடுக்க முடியாமலும்... தடுக்கும் திராணியின்றியும்... அவனின் தேடலில், தீக்ஷாவின் தன் இந்தருக்கான ஏக்கம் தீர்ந்து... இவள் தேகமும் அவனோடு வளைந்து கொடுக்க ஆரம்பிக்க... விஜய், அவளைத் தீண்டிய ஒவ்வொரு தீண்டலிலும்... அதன் வேகத்தில்... அதன் அழுத் தத்தில்... அவனின் இத்தனை நாள் ஏக்கங்களைத் தீக்ஷா வால் புரிந்து கொள்ள முடிந்தது. அவனின் வேகத்தை அவள் குறைக்கவே இல்லை. அவனின் ஏக்கத்தின் வேட்கைக்கு, முடிந்த அளவு தன்னைத் தயார்ப்படுத்த ஆரம்பிக்க...

அப்போதுதான் அவளுக்குத் தன் அத்தையிடம் சொல்லிவிட்டு வந்த ஞாபகம் வர...

இருந்தும் அவனை உடனடியாக விலக்காமல்,

"இந்தர்..." என்றாள். அவளுக்கே தன் குரல் வெளியே விழுந்ததா என்று தெரியவில்லை. அந்த அளவு அவளும் அவன் கணவன் தீண்டலில் ஆழ்ந்திருக்க...

"ஹ்ம்..." என்றான் விஜய்.

"நா...நான் குளிக்கணும்... ட்ரெஸ்ல ஹாஸ்பிட்டல் ஸ்மெல்..." என்று தட்டுத் தடுமாறிக் கணவனிடமிருந்து விலக ஏதுவாய்க் காரணம் கண்டு பிடித்துச் சொல்ல... அவனுக்கோ அது இன்னும் வசதியாகப் போனது.

"ட்ரெஸ்லதானே... இது ஒரு பிரச்சினையா...?" என்றவன்... அவளின் துப்பட்டாவை அவளிடமிருந்து உருவித் தூரப் போட்டவன்... "அடுத்து..." என்று அவன் ஆரம்பிக்கப் போக... போன் அடித்தது.

சுரேந்தர்தான்!



"என்னடா...?" என்றவன் குரலில், அப்பட்டமாய்க் கடுப்பு முதலில் விழ... பின் தன்னைச் சமாளித்தவன்...

"சொல்லு... பார்வதி வீட்ல வந்துருக்காங்களா... கீழே வரணுமா?" என்று பொறுமையாய்க் கேட்க...

"ஆமாண்ணா... பாரு வீட்ல இருந்து தீக்ஷாவைப் பார்க்க வந்திருக்காங்க... தீக்ஷா மேலே ஏறும் போதே வந்துட்டாங்க... இவ்வளவு நேரம் வெயிட்டிங்..." தயங்கிச் சொல்ல...

'நீ எதுக்குடா இருக்கே... அவங்களுக்குக் கம்பெனி கொடுக்க வேண்டியதுதானே...! உன் ஆளு வந்திருக் கால்ல... அவளைப் பார்க்க வேண்டியது தானே...!' என்று மனதுக்குள் சுரேனுக்கு வசைபாடியபடி... வெளியிலோ...

"குளிச்சிட்டு இருக்கா... வருகிறோம்," என்று போனைக் கட் செய்ய..

இதுதான் சமயமென்று...

"அத்தான்... பாரு வந்திருக்காளா... நான் பார்க் கணுமே... என்னை விடுங்க... நான் குளிக்கப் போறேன்..." என்று விலாங்கு மீனாய் நழுவியவள், வேகமாய்க் குளிய லறைக்குள் புகுந்து உடனே வர... விஜய், குளித்து முடித்துக் கட்டியிருந்த டவலைக் கூட மாற்றாமல் படுத்திருந்தான்.

அவனின் பிடிவாதத்தை ரசித்தவள்,

"இந்தர்... இது என்ன சின்னப் பிள்ளையாட்டம்... கிளம்புங்க..." என்றபடி, தனக்கான ஆடையைத் தேட ஆரம்பிக்க... மீண்டும் விஜய், அவளிடம் தன் வேலையைக் காட்டப் போக...

"அத்தான்... சும்மா இருங்க... விளக்கேத்தணும்..." என்று கைகளைத் தட்டியவள்... அவனுக்குமான உடையை எடுத்து... அவனிடம் கொடுத்துப் போடச் சொல்லி விட்டுத் தனக்கான புடவை தேடலில் மீண்டும் இறங்கினாள்.

அவளை முறைத்தபடியே உடை மாற்றியவன்... மீண்டும் கட்டிலிலேயே அமர...

"போங்க பாஸ்.... சாரி கட்டணும்...." என்று அவனைத் துரத்தினாள் தீக்ஷா.

"கட்டு... என்னை எதுக்கு வெளியே போகச் சொல்றே... வேணும்னா நான் ஹெல்ப் கூட பண்றேன்..."

என்று சாவகாசமாய் அவளைப் பார்த்தபடியே உட்கார...

தீக்ஷா முறைத்தாள். அவளின் முறைப்பான பார்வையில்,

"என்னடி ஓவரா பண்றே... உண்மையிலேயே குணமாகிட்டேதானே... என்னமோ... புதுசா கல்யாணம் பண்ணின மாதிரி சீன் போடறே.... உனக்கு எங்கெங்கே மச்சம் இருக்குன்னு உனக்குக் கூடத் தெரியாது. சொல்லவா...?" என்று சீண்டலோடு சீறியவனாய் அவளை இழுக்க...

"கடவுளே!" என்று தலையில் கை வைத்தவள்...

"உங்க கிட்டே மறைக்கிறதுக்கு எனக்கு எதுவும் இல்லை... கீழே வெயிட் பண்ணிட்டு இருக்காங்கல்ல... போங்க... செல்லம்ல... நான் எங்கே போகப் போறேன்...?" என்று கெஞ்சலாய்ச் சொல்ல...

"புரிஞ்சுக்கடி... தனியா இந்த ரூம்ல... செத்துப் போயிட்டேன்டி..." என்று நிதானமான நிறுத்தல்களில், அவன் பட்ட வேதனைகளை அவளிடம் வெளிப்படுத்த...

தீக்ஷாவுக்கு அவனின் வேதனை புரிந்தும்... அதைத் தொடராமல்...

"டெலிவரிக்குப் பொண்டாட்டி போய்ட்டு வந்துருக்கான்னு நெனைச்சுக்கங்க பாஸ்..." என்று விளையாட்டுப் போல் சொல்லித் தன் கணவனைப் பார்க்க...



விஜய், அதிர்ச்சியுடன் பார்த்தான் தன் மனைவியை.

'அவள் கர்ப்பமாகி இருந்த விஷயம்... தீக்ஷாவுக்கும் தெரிந்திருக்குமோ...?' என்ற சிந்தனைக்குப் போனவன்... நேரடியாகக் கேட்காமல்...

"தீக்ஷா... நீ ரெண்டு சர்ப்ரைஸ்னு சொன்னேல்ல... ஒன்று உன் பிறந்த நாள்... இன்னொன்று..." கேள்வியாய் நிறுத்தினான், படபடத்த இதயத்துடிப்பை அடக்கியபடி.

தீக்ஷாவுக்கு முதலில் உடனே ஞாபகம் வரவில்லை. யோசனைக்குப் போக...

விஜய், அவளை யோசிக்க விடாமல்... "ஞாபகம் வரலைன்னா... விடு... குழப்பிக்காதே..." எனும் போதே,

பிரகாசமான தீக்ஷா... "ஞாபகம் வந்துருச்சு.... ஆனால், நான் சொன்னா திட்டக் கூடாது... ப்ராமிஸ்..." என்று கை நீட்ட,

நீட்டிய உள்ளங்கையில்... சத்தியம் வைக்காமல்... தன் இதழ் பதித்தவன்...

"உன்னை ஏன் நான் திட்டப் போகிறேன்... சொல்லு!" என்று ஊக்குவிக்க...

"நீங்களும் என்னைத் திட்டாத பையன்தான் அத்தான்... அதெல்லாம் வண்டி வண்டியா வாங்கிக் கட்டிட்டுதான் வந்திருக்கேன்..." என்று தன் ஆதங்கத்தை விடாமல் சொல்லியவள்...

"அது... அது..." இழுத்தவள்,

"நம்ம மேரேஜ் முடிஞ்சு... 100ஆவது நாள்... அதுதான் நான் சொன்ன இரண்டாவது சர்ப்ரைஸ்!"

வேகமாக... "அத்தான் திட்டாதீங்க... இதெல்லாமா ஒரு சர்ப்ரைஸ்டின்னு..." என்று மொழிந்தவளிடம்,

அவள் கணவனோ, "100ஆவது நாள் போனால் என்னடி... நாம 100ஆவது வாரம், 100ஆவது மாதம், 100ஆவது வருஷம்... இதெல்லாம் கொண்டாடுவோம்..." காதல் கணவனாய்ப் பிதற்ற,

அதில், தீக்ஷா மெய் மறந்து அவனையே பார்த்தபடி இருந்தவள்... பின் சமாளித்து,

"ஹை அத்தான்... நீங்க கூட உருப்படாத டயலாக் பேசுற சங்கத்தில சேர்ந்துட்டீங்க போல... அதுவும் மெம்பர் கூட இல்லாமல்... நேரடியாத் தலைவர் போஸ்ட்டுக்கே!" என்று நக்கலடித்தவள்... கீழே போக வேண்டுமென்று ஞாபகப் படுத்தி... அவனைக் கிளப்ப...

விஜய்யும் விருப்பமின்றி வெளியேறப் போக... அவனின் கைப்பிடித்து நிறுத்தியவள்,

"என் இந்தர்க்குக் கோபமா...?" என்று, அவன் உணர்வுகளை மனைவியாகப் புரிந்து... சமாதானமாய் வினவியவள்,

"புடவை கட்டி விட ஹெல்ப் வேண்டாம்... ஆனால்..." என்று கண் சிமிட்ட,

அவளின் முடிக்காத வார்த்தைகளின் அர்த்தம் புரிந்தவன்... அவளை மீண்டும் தன் வசம் கொண்டு வந்து...

"அது எதுக்குடி... நீ கட்ட... நான் கழ..." என்றபோது... தீக்ஷா அவன் வாயை மூடி முறைக்க...

அவளின் கையை எடுத்தபடி, "இல்லை..., டைம்தானே வேஸ்ட்..." என்று அவள் காதுகளில் சில்மிஷமாய்க் கிசுகிசுத்தவன், மீண்டும் ஆரம்பப் புள்ளிக்கே வர...

அவனை விட்டு விலகியவள்... முதுகைப் பிடித்துத் தள்ளாத குறையாக... வெளியில் தள்ளிக் கதவைச் சாத்தினாள்.



தன் சில்மிஷம் எல்லாம் தன் மனைவியிடம் எடுபடாமல் போக... மூடிய கதவையே வெறிக்க முடிந்தது விஜயேந்தரால்.

"இருக்குடி உனக்கு..." என்றபடி படிகளில் இறங்கியவன், தேவகியை வரவேற்று, சுரேந்தர் அருகில் இருந்த சாரகேஷோடு பேச்சில் கலந்தான். அடுத்த சில நிமிடங்களிலே தீக்ஷாவும் இறங்கி வந்தவள், பார்வதியைப் பார்த்த வுடனே.... துள்ளலாக இறங்கி ஓடி வர...

"பார்த்து வாம்மா..." என்று கலைச்செல்வி அவள் காலையே பார்க்க...

"அது அப்போதே சரி ஆகிடுச்சு அத்தை..." என்றவளை...

"விஜய்யோடு வந்து விளக்கேத்திட்டுப் போம்மா...!" என்று தன் மகனையும் மருமகளையும் அழைத்துப் போய்... பூஜை அறையில் 10 நிமிடம் நிறுத்தி, அதன் பின்னர்தான் விட்டார்.

பார்வதி, தீக்ஷாவைப் பார்த்து... "என்னை ஞாபகம் இருக்கா தீக்ஷா... இல்லை, ஏதாவது ஞாபகப்படுத் தணுமா...?" என்று உண்மையிலேயே கலக்கமான குரலில் கேட்க...

அவளின் கையைப் பிடித்தபடி, "விஜய் அத்தான் சொன்னாங்க..." என்றவள்,

தன் யோசனைக்கெல்லாம் போகாமல்... அவளிடம் பேச ஆரம்பித்தாள். நீண்ட நாள் கழித்துப் பார்த்த தோழியிடம் பேசுவதைப் போலவே...

சாரகேஷிடமும் பேசினாள்... அகல்யாவோடு அவன் திருமண விபரம் அறிந்ததால் வாழ்த்தும் கூறினாள்.

ஒருவாறாகப் பார்வதி, யுகி... என இவர்களோடு தனியே பிரிந்து வந்த தீக்ஷா,

"என்னை விடு... சுரேந்தர் அத்தான் எப்படிடி... ஆளு செம உஷார் பார்ட்டில்ல... அவ்வளவு சீக்கிரம் சிக்க மாட்டாரே... முதலில் அந்தக் கதையைச் சொல்லு... கேட்கலாம்..." என்று வம்பிழுக்க ஆரம்பிக்க... அவள் சொன்ன வுடனே பார்வதியின் விழிகள் சுரேந்தரை நோக்கி அலை பாய... அங்கும் அதே நிலைமைதான்... அவன் விஜய்யின் அருகில் அமர்ந்திருந்தாலும்... அவனின் பார்வை அவ்வப்போது பார்வதியை உரசியபடி இருக்க...

தீக்ஷா... கள்ளப் புன்னகை புரிந்தாள், பார்வதியைப் பார்த்து.

"உண்மையைச் சொல்லு... என்னைப் பார்க்க வந்தியா, உன் ஆளைப் பார்க்க வந்தியா...?" என்று ஆரம்பித்தவள்தான்... களை கட்டியது அந்த இடம். பார்வதி விழி பிதுங்காத குறையாக அமர்ந்திருக்க... அப்போது, ஆர்த்தியும் தீனாவும் அங்கு வந்தனர்.

இதுவரை தீக்ஷா பெரிதாகத் தன் ஞாபக மறதியை எடுத்துக் கொள்ளவில்லை. ஆனால், அவளுக்குத் தீனாவை யார் என்றே தெரியவில்லை. ஆர்த்தியைப் பார்த்ததும் யுகியின் முகம் பிரகாசமாக... அதை வைத்து ஆர்த்தியை அனுமானித்து விட்டாள். அவள் முகம் பரிச்சயமானதாகவே இருந்தது.

அவளோடு வந்தவன் தீனா என்றவுடன், தீக்ஷா முகம் சிறுத்தது. அவளுக்குள் அன்று தன்னைக் கடத்தச் சொன்னது தீனாதானே என்பதுதான் ஞாபகம் வர... முகம் கன்றினாள்.

இருந்தும் விஜய், சுரேந்தரோடு, தீனா சர்வ சாதாரணமாகப் பேசியபடி இருக்க... தன் எண்ணங்களைப் பின்னுக்குத் தள்ளினாள்.

ஆர்த்தியும் அவள் அருகில் இருந்ததால், தீக்ஷா அப்போது அதை விட்டு விட்டாள்.



தீக்ஷா, இப்போது பார்வதியுடன் சேர்ந்து, யுகி, ஆர்த்தியை ஓட்டிக் கொண்டிருக்க... அந்த வரவேற்பறை எங்கும் இவர்களின் சிரிப்புச் சத்தம் மட்டுமே எதிரொலிக்க... ராதாவும் இவர்களின் கூட்டத்தில் ஐக்கியமாகி இருந்தாள்.

யுகி, தன் அண்ணன்களைப் பார்த்தெல்லாம் கொஞ்சம் கூடப் பயப்படாமல்... ஆர்த்தியைத் தன் அருகே வைத்துக் கொண்டவன், அவள் தோள் மேல் கை போட்டபடி... தன் அண்ணிகளுடன் வழக்கடித்துக் கொண்டிருந்தான்.

விஜய், சுரேந்தரைப் பார்த்து...

"இவன் சும்மாவே ஆடுவான்... இத்தனை பேர் இருக்கோம்னு கூட அவன் பார்க்கலைடா... அட்லீஸ்ட் தீனா இருக்கான்னு கூட நினைக்கலைடா..." என்று யுகியை வசை பாட,

"ஆமாம்ணா... என்ன தைரியம்..." என்று அண்ணனின் வசைப் பாடலுக்கு ஒத்திசைத்தவன் கண்களின் ஏக்கம், பார்வதியிடம்தான் இருந்தது.

விஜய், தீனாவைப் பார்த்தபடி...

"எங்கேடா... உன் வைஃப்...?" என்று கேட்க,

"அவ அம்மா வீட்ல இருக்காடா... 7 மன்த்ஸ்... அதனாலதான் ஆர்த்தியை கூட்டிட்டு வந்தேன்," என்றபோதே மனைவியைப் பிரிந்திருக்கும் வருத்தம் அவன் குரலிலும் வர...

விஜய் சிரித்தபடி... "நீ ஏன்டா மச்சி... இவ்ளோ ஃபீல் பண்றே..." என்று மற்ற யாருக்கும் கேட்காமல், அவன் காதில் மட்டும் கிசுகிசுக்க...

"உனக்கு என்னடா... இனி தீபாவளிதான்... உனக்கு என்னைப் பார்த்தால் நக்கலாத்தான் இருக்கும்," என்றவன்,

"என்னைக் கிண்டல் பண்றதெல்லாம் சரி... இப்போ தான் எல்லாம் சரி ஆகி விட்டது... இனியாவது உன்

மனைவிக்கு பாடிகார்ட் வேலை பார்க்கிறதை விட்டுட்டு... தொழிலைக் கவனிக்க வருவாயா இல்லையா...?" என்று விஜய்யை அந்த நேரத்திலும் விடாமல் கேட்க...

அவன் தோள் மேல் கை போட்டவன்...

"சுரேந்தர் மேரேஜ் இருக்கு... ராதா மேரேஜப்போ நான் கழண்டுகிட்டேன்... சுரேந்தர்தான் எல்லாவற்றையும் பார்த்தான்... என்னோட மேரேஜ் நடந்த போதும் அவன்தான் பொறுப்பெடுத்துக்கிட்டான்... இப்போ அவனுக்கு நான்தான் எல்லாம் பண்ணணும். அதை முடிச்சுட்டு... தீக்ஷாவும் நானும் வெளிநாடு போக ப்ளான் பண்ணி இருக்கேன்..." என்றவன்,

தீனாவின் இதழ் ஓரத்தின் புன்னகை முடிச்சில் இருந்த கள்ளத்தனத்தில்,

"டேய்... உனக்கு என்னைப் பார்த்தால் சிரிப்பா வருதா...? ஹனிமூன் கூடப் போகாமல்... இந்த ப்ராஜெக்டே குறின்னு இருந்தவன்டா..." என்று பெருமூச்சு விட்டவன்...

"அது மட்டும் இல்லை... தீக்ஷாவுக்கு ஃப்ளைட் சத்தம் கேட்டால் என்ன பண்ணுவாளோன்னு வேறே பயமா இருக்கு... அதுனாலதான் சுரேந்தர் மேரேஜ் முடிச்சுட்டே போறேன்... தேவையான்னு கூடத் தோணுது இந்த விஷப் பரிட்சை... பட், அவளை அப்படியே விட்டு விடக் கூடாதுன்னுதான் இந்த ப்ளான்... இதெல்லாம் முடிச்சிட்டு உனக்கு நான் பதில் சொல்கிறேன்..." என்று முடிக்க... தீனாவும் சம்மதித்தான், தன் நண்பனின் நிலை உணர்ந்து.

ராகேஷ் கூட, அவன் குடும்பத்தோடு மீண்டும் வந்து தீக்ஷாவைப் பார்த்து விட்டுத்தான் நிம்மதியாகக் கிளம்பிப் போனான்.

கிட்டத்தட்ட 7மணி அளவில் சாரகேஷ், தேவகியை அழைத்து... "கிளம்பலாமா...?" என்று அழைக்க... சுரேந்தர் அதிர்ந்து பார்வதியைப் பார்த்தான்.



பார்வதியோ, "கிளம்பட்டுமா...?" என்று கண்களாலே கேட்க...

முறைத்த சுரேந்தர், கோபமாய் வேறு புறம் திரும்பிக் கொண்டான். இவ்வளவு தூரம் வந்தவள்... தனக்கு நேரம் ஒதுக்காமல்... தன்னைச் சந்திக்காமல் போகப் போகிறாளா என்ற கோபத்தில் அவன் இருக்க... பார்வதிக்கு, அவனின் கோபம்... அது வரை அவள் முகத்தில் இருந்த மலர்ச்சியை எடுத்துக் கொள்ள... தீக்ஷா அதைக் கவனித்தவாறே,

"என்ன மேடம் டல்லாகிட்டீங்க... ரெட் சிக்னல்... அதுவும் ஹாட்டா இருக்கா?" என்றவள்..

"இரு, வழி பண்ணலாம்... கிரீன் சிக்னலா மாற்றி சில்லுன்னு உன்னை நனைய வைக்கணுமே!" என்று யோசித்தவள்...

"யுகி, பாரு அண்ணாவை மட்டும் இங்க இருந்து போக வைக்க வழி பண்ண ஏதாவது ஐடியா இருக்காடா...?"

"ப்பூ... இவ்வளவு தானே!" என்ற யுகி.. போனைக் கையில் எடுத்தபடி வெளியேறியவன்... மீண்டும் வந்து அமர்ந்தபோது...

"இப்போ பாரு, தீக்ஷா... டாக்டர் சார் மட்டும் தனியா எஸ்கேப் ஆவாரு பாரு..." என்று சிரிக்க...

அதேபோல் சாரகேஷ்... அனைவரிடமும் விடை பெற்றபடி... இவர்களின் அருகில் வந்தான்.

"பாரு... அகல்யா வீட்டுக்கு வரச் சொன்னாள்... நான் கிளம்புகிறேன். சுரேந்தர் கூட நீயும் அம்மாவும் வீட்டுக்குப் போங்க..." என்றவன்,

தீக்ஷாவிடம், "டேக் கேர் தீக்ஷா... டேப்லட்ஸ்லாம் கண்டினியூ பண்ணு... அசால்ட்டா இருக்காத!" என்றவனிடம் தலையாட்டி அவனை வழி அனுப்பி வைத்தவள்...

"யுகி, எப்படிடா..." என்று விழி விரிக்க...

"ஒண்ணுமில்லை... டாக்டரம்மா கிட்ட போன் பண்ணி... எல்லோரும் இங்க இருக்கோம்... நீங்க மட்டும் அங்க இருக் கீங்களேனு... வாங்கனு சொன்னேன்... இது மட்டும்தான் சொன்னேன். அகல்யா இனி இங்க வர முடியுமா... என்ன நடந்துச்சுனு நமக்குத் தெரியாதுப்பா... ஆனால் டாக்டர் சார் கிளம்பிட்டாரு..." என்று ஒன்றுமே தெரியாத அப்பாவி போல தோளைக் குலுக்கியவனைப் பார்த்து அவனருகில் இருந்த அந்த வீட்டின் மூன்று மருமகள்களும் சிரிக்க...

பார்வதி மட்டும்... "தேங்க்ஸ் யுகி!" என்றபோது

தீக்ஷா அவளிடம்... "பாரு.... நீ என்ன... அவனுக்குப் போய் தேங்க்ஸ்லாம் சொல்லிட்டு இருக்க... அவனே ஊரார் காதலை ஊட்டி வளர்த்தால்... அவன் காதல் தானா வளரும்னு இதெல்லாம் பண்ணிட்டு இருக்கான். இதெல்லாம் எதுக்கு... நாளைக்கு அவனுக்கு ஒரு பிரச்சனைனா.. நாம தான் வழி பண்ணணும்... அதுக்கு முன்னேற்பாடுதான் இந்த ஹெல்ப்லாம்..."

ஆர்த்தியைப் பார்த்துச் சிரித்தபடி பேச... ஆர்த்தியும் யுகியும் ஹை-ஃபை கொடுத்துக் கொள்ள...

யுகி பார்வதியிடம்... "ஆமாம் அண்ணி, தீக்ஷா எங்க காதலை வளர்த்துதான்... அதோ அந்த மனுஷனை ஃப்ளாட் ஆக்கினாள்..." என்று தீக்ஷாவைப் பார்த்துக் கண் சிமிட்ட...

அத்தனை பேரின் பார்வையும் ஒரே சமயத்தில் விஜய்யைத் தீண்டியபடி... ஒரு சேரச் சிரிக்க... விஜய்யும் அவர்களை நோக்கினான்.

யுகியைப் பார்த்து முறைக்கப் போனவள்... அது முடியாமல்... முகம் சிவந்து நாணம் என்னும் ஆடை போர்த் தியவள்... உடனடியாகத் தன்னைச் சமாளித்தபடி சிரித்து வைத்தாள் தீக்ஷா.



அடுத்து தீனா... ஆர்த்தியை அழைக்க...

யுகியோ... "ஆர்த்தியை நான் கூட்டிட்டு வருகிறேன்... நீங்க போங்க தீனா!" என்று கொஞ்சம் கூடத் தாமதிக்காமல் சொல்ல... தீனா வேறு வழியின்றிக் கிளம்பி விட்டான்...

தீனா விஜய்யிடம் என்ன சொன்னானோ தெரிய வில்லை...

விஜய் யுகியிடம்... "யுகி, ஆர்த்தியை வீட்ல விட்டுட்டு வா... லேட்டாகி விட்டது!" எனச் சொல்ல...

தீனாவிடம் தைரியமாகச் சொன்ன யுகி... தன் அண்ணனிடம் தயங்க...

"உடனே கிளம்பினால் நீ கூட்டிப் போய் விடலாம்... இல்லை, காத்தமுத்துவைக் காரை எடுக்கச் சொல்லவா?" என்று கட்டளை போல் விஜய் கூற...

தீக்ஷா யுகியிடம், "ஆர்த்தி அண்ணன் கிட்ட வாய் கிழியப் பேசுன... இப்போ ஏன் பம்முற... கௌம்பு... கௌம்பு... இல்ல விருமாண்டி, காத்தமுத்துவைக் காரை எடுக்கச் சொல்லிருவார்... அட்லீஸ்ட்... ஆர்த்தியை ட்ராப் பண்ணவாவது சொல்றாரே..." என்க...

யுகியும் ஆர்த்தியோடு கிளம்ப... சுரேந்தர் பார்வதியும் தங்களுக்குக் கிடைத்த வாய்ப்பைப் பயன்படுத்தி அங்கிருந்து நகர...

விஜய், தீக்ஷா மட்டுமே அந்த ஹாலில் இருந்தனர்... எதிர் எதிரே அமர்ந்திருந்தவர்கள்... பார்வைகளை மட்டும் பரிமாறியபடி இருக்க...

அப்போது, இருவரின் பெற்றோர்களும் அங்கு வந்தனர். தேவகியும் அவர்களோடுதான் இருந்தார்...

விஜய்க்கு அப்போதே புரிந்து விட்டது... அவர்கள் ஏதோ பேசி முடிவோடு வந்திருக்கின்றனர் என்று... எதுவும் சொல் லாமல் அமைதியாக அவர்களைப் பார்க்க...

கலைச்செல்வி தயங்கியபடி, “விஜய், ஏதோ போதாத நேரம்... என்னவெல்லாமோ நடந்திருச்சு... இப்போதைக்கு தீக்ஷா அவங்க வீட்டுக்குப் போகட்டும்...” என்றபோதே விஜய் எழுந்து விட்டான்...

ராகவேந்தர் உடனே, “இல்லப்பா! எடுத்தோம் கவிழ்த்தோம்னு இருக்காமல் ஒரு நல்ல நாள் பார்த்து... ஏதாவது ஒரு கோவிலில்... மறுபடியும் தாலி கட்டி...” என்று முடிக்கவில்லை

“அதுதான் முடிவு பண்ணிட்டீங்கல்ல... என்னை எதுக்குக் கேட்கறீங்க?” என்றவனின் கோப வார்த்தைகளில்..

ஜெயந்தியும் வைத்தீஸ்வரனும் பதறி விட்டனர்...

“இல்ல தம்பி... இன்னைக்குக் கூட உள்ளே வரும் போது இவ அபசகுனமா கீழே விழுந்துட்டா... அதுனாலதான் எங்க மனசே கேட்கலை...” என்று ஜெயந்தி அழாத குறை யாகச் சொல்ல...

விஜய் தீக்ஷாவை முறைத்த முறைப்பில்... தீக்ஷா அதன் உக்கிரம் தாங்காமல் தலை குனிந்தாள்.

அவளுக்கு யார் பக்கம் பேசுவது என்றே தெரிய வில்லை... கணவன் பக்கமா... இல்லை, அந்த வீட்டின் பெரியவர்கள் பக்கமா... அமைதியாகவே பார்த்துக் கொண் டிருக்க... விஜய் விடுவிடுவென்று மாடி ஏறிப் போய் விட்டான்.

எரிச்சலாக வந்தது தீக்ஷாவிற்கு.

ஒருபுறம்... சகுனம், சாங்கியம் என்று பார்க்கும் பெரிய வர்களை நினைத்தும்... இன்னொரு புறம்... இத்தனை பேர் சொல்கிறார்களே என்று கொஞ்சம் கூட யோசிக்காமல்... அவர்களை மதிக்காமல் கோபத்தில் போகும் தன் கணவனை நினைத்தும்...



## 53

விஜய் கோபமாகச் சென்ற பிறகு... தீக்ஷாவும் வர மறுத்து விட... ஜெயந்திக்குத்தான் மகளை அங்கேயே விட்டுப் போக மனமே வரவில்லை.

விஜய்யோ போ... என்று சொல்லி இருந்தால் கூட தீக்ஷா போயிருந்திருக்க மாட்டாள்தான்...

ஜெயந்தி வற்புறுத்தியும்... தீக்ஷா தன் முடிவில் இருந்து மாறாமல் இருக்க... தீபன் தான் ஒருவாறு சமாளித்து... தன் குடும்பத்தைக் கூட்டிச் சென்றான்.

கிளம்பும் போது... முக வாட்டத்தோடு இருந்த தன் தாயிடம், “அம்மா... நீங்க இப்படிப் போனால் என்ன அர்த்தம். இந்த வீட்டுக்கு ஏற்கெனவே நல்ல நேரம் பார்த்து வந்த போது எல்லாம் நல்ல விதமா நடந்ததா.... எது நடக் கணுமோ அது நடந்துதான் ஆகும். நான் பார்த்துக் கிறேன்...” என்றவள்... தன் பெற்றோரின் ஆசிர்வாதங் களையும் வாங்க மறக்கவில்லை.

ஜெயந்தியின் ஆதங்கம்... கலைச்செல்வியையும் வருத்த, “நீயாவது அவன்கிட்ட பேசும்மா...” என்று மருமக ளிடம் சொல்ல...

“உங்க பையன் பிடிவாதம்தான் உங்களுக்குத் தெரி யும்ல... இந்தக் கோபம், பிடிவாதம் எல்லாவற்றையும் வளர்த்து விட்டுட்டு இப்போ பேசு பேசுன்னா... வீட்டுக்கு வந்தவங்களைக் கூட வழி அனுப்பக் கீழே இறங்கி வந்தாரா அத்தை...?” என்று மகளாய் தீக்ஷாவும் கோபமாய்ப் பேச...

அவள் பேசிக் கொண்டிருக்கும் போதே விஜய் கீழே இறங்கி வர... தீக்ஷா வாயை மூடினாள்.

வந்தவன், “சாரி!” என்று பொதுவாகச் சொல்லியபடி... தீக்ஷாவைப் பார்த்து, “வா, போகலாம்...” என்றான்.

தீக்ஷா புரியாமல் பார்க்க...

"உங்க அம்மா வீட்டுக்குத்தான்... உன் கோபத்தையெல்லாம் தாங்குற சக்தி எனக்குக் கிடையாதும்மா... நானே கொண்டு போய் விட்டு வருகிறேன். உனக்கு எப்போது தோணுதோ... இல்லை, இவங்க எல்லோருக்கும் நமக்கு நல்ல நேரம் வந்துருச்சுனு எப்போ தோணுதோ... அப்போது வா!" என்று அவளைப் பார்த்தபடி பேச...

உர்ரென்று முகத்தை வைத்துக் கொண்டு அவன் பேசியது... தீக்ஷாவுக்குச் சிரிப்பை வரவழைத்தாலும் அடக்கியபடி... அவன் கையில் இருந்த கார் சாவியைப் பறித்தவள்... அங்கிருந்த சோபாவில் தூக்கிப் போட...

தன் மனைவியின் செயலில்... விஜய் உள்ளம் குதூகலித்தாலும் வெளியில் காட்டிக் கொள்ளாமல் இருக்க...

அப்போது... சுனந்தா அழ ஆரம்பித்தாள்.

அவளுக்கு விபரம் தெரிந்ததில் இருந்து தீக்ஷாவோடுதான் இருக்கிறாள். இந்தச் சில நாட்களாக அத்தையைத் தேடியவள்... இப்போது தன் அத்தை தங்களோடு வரவில்லை என்பதை உணர...

தீக்ஷாவும் வர வேண்டுமென்று அடம் பிடித்தாள். விஜய் சத்தியமாய் நொந்தே போய் விட்டான்...

விஜய்யின் முகத்தைப் பார்த்த தீக்ஷாவுக்குச் சத்தியமாய்ச் சிரிப்பை அடக்கவே முடியவில்லை... இருந்தும் வந்த சிரிப்பைத் தன் வாய்க்குள்ளாகவே அடக்கியவள்...

ராதாவிடமிருந்து சுனந்தாவை வாங்கியபடி... "சுனோ செல்லம்... அத்தை, டாக்டர் கிட்ட ஊசி போடப் போகிறேனாம்... நீயும் வந்தால் உனக்கும் போடுவாங்களாம்... உனக்கு வலிக்கும்ல... சோ, நீ இப்போ அம்மா கூடப் போவியாம்... அத்தை ஹாஸ்பிட்டல் போய்ட்டு... சுனோவுக்குச்



சாக்கி எல்லாம் வாங்கிட்டு வருவேனாம்..." என்று சாதாரணமாய்ப் பேச...

அதில் சுனந்தாவும் சமாதானமாகிப் போக... விஜய் நிம்மதியில் யாருக்கும் தெரியாமல் பெருமூச்சு விட்டான்...

எப்படியோ தீக்ஷா குடும்பம் சமாதானமாகிக் கிளம்ப...

அதன் பிறகு கலைச்செல்வி தீக்ஷாவிடம்... "சுரேன், யுகி... வெளியிலேயே சாப்பிட்டுகிறேன்னு சொல்லிட்டாங்கம்மா... நீ அவனைப் போய்ச் சமாதானப்படுத்திச் சாப்பிடச் சொல்லு..." என்றவரிடம்,

ராகவேந்தர், "ஆனாலும் உன் பையனுக்கு இவ்வளவு பிடிவாதம் ஆகக் கூடாது..." என்று கலைச்செல்வியை முறைக்க...

கலைச்செல்வி அவரிடம், "உங்க பிடிவாதம் அப்படியே வந்திருக்கு..." என்று பதிலுக்குத் தன் கணவனை முறைத்தபடி அவர் பின்னே செல்ல...

தீக்ஷாவோ... 'அடேங்கப்பா... பையனோட பிடிவாதம்... இன்னைக்குத்தான் ரெண்டு பேருக்கும் கண்லேயே தெரியுது போல.... ரொம்ம்ம்ப சீக்கிரம் கண்டுபிடிச்சுட்டாங்க!' என்று மனதிற்குள் நினைத்தவள்...

"சும்மாவே நம்ம ஆளு சாமி ஆடுவான். ஹ்ம்ம்... தீக்ஷா, உன்னால சமாளிக்க முடியாதா?" என்று தனக்குள் சொல்லிக் கொண்டவள்... தன் அறைக்குப் போக...

இவள் நினைத்ததைப் போலத்தான் அவனும் இருந்தான்...

இவள் உள்ளே வந்து விட்டாள் என்று உணர்ந்தும்... கண் திறக்காமல் படுத்திருந்தான்... அவன் படுத்திருந்த விதமே... அவன் இன்னும் கோபத்தில் இருக்கிறான் என்பதை உணர்த்தியது.

கட்டிலின் குறுக்கே... படுத்திருந்தவன்... கால்களைத் தரையில் ஊன்றியபடி நெற்றியில் கையைக் குறுக்கே போட்டபடி... கண் மூடிப் படுத்திருக்க...

அவனுக்குப் பிடிக்காது என்று தெரிந்தே... கதவை டமாரென மூடியபடி... தாழ்ப்பாளைப் போட...

விஜய் அப்போதும் கண் திறக்கவில்லை...

"சார் நெற்றிக் கண்ணைத் திறக்கவில்லையே... இது இன்னும் ஆபத்தாச்சே!" என்று அவனின் அருகில் போய் நின்றவள்...

"ம்ஹ்க்கும்..." என்று செரும... அதிலும் திரும்பாதவனாய் இருக்க...

"தீக்ஷா! இனி வேலைக்காகாது..." என்று தனக்குள்ளாகவே சொல்லிக் கொண்டவள்...

கொஞ்சம் கூடத் தாமதிக்காமல்... அவன் மேலே அப்படியே விழ.... திடுக்கிட்டு விஜய் கண் திறக்க...

கண் சிமிட்டியவள், அவனின் இரு புறமும் கைகளை ஊன்றியபடி, அவன் மேல் முழுவதும் சரியாமல்... அவனைப் பார்த்துக் காதலாய்ச் சிரிக்க...

"நீ இன்னும் போகலையா? நான், உன் அம்மா வீட்டுக்கு, அவங்களோட போயிட்டேன்ல நினைத்தேன்..." என்று நக்கலாய்ப் பேச,

சட்டென்று அவன் மேல் தன் மேனி முழுவதும் படுமாறு விழுந்தாள் தீக்ஷா.

விஜய்யின் தேகம், மனைவியின் ஸ்பரிசத்தை முழுமையாக உணர, அதன் வீச்சில் கொஞ்சம் தடுமாறியவனாய்...

"என்னடி..." என்றான், குரலில் கடுமையைக் காட்டியபடி. இருந்தும் அவன் குரல், மென்மையைப் பூசி இருக்க...



"ஒண்ணுமில்லை..." என்று தோளைக் குலுக்கியவள், அவனின் கையை எடுத்துத் தன்னைச் சுற்றிப் போட்டவள்... அவன் இதழ்களை நோக்கிக் குனிய,

"விடுடி..." என்று முகத்தைத் திருப்பியவன், படபடவெனப் பொரிந்தான்.

"நான் கோபமா இல்லைன்னா... அத்தை சொல்றாங்க, அம்மா சொல்றாங்கன்னு அவங்க பின்னாடிதானே போயிருப்பே. என்னைப் பார்த்தால், அலையறவன் மாதிரித் தெரியுதா? எனக்கு ஒண்ணும் உன் சமாதானமும் தேவையில்லை... வேற ஒண்ணும் தேவையில்லை..." என்றபடி எழப் போக,

அவனால் எழ முடியவில்லை. எழ முடியவில்லை என்றெல்லாம் சொல்ல முடியாது... ஆனால், தீக்ஷா அதைச் செய்ய முடியாமல் அவனைத் தடுத்து நிறுத்தும்படி, அவனை இன்னும் இறுக்க... பேசாமல் மீண்டும் படுத்தான்.

"ரொம்பப் பண்ணாதீங்க அத்தான்..." தீக்ஷா சலித்தவளாய் உதடு சுழிக்க...

"நான் ஒண்ணுமே பண்ணலடி..." என்று விஜய், நக்கலாயும் ஏக்கமாயும் சொல்ல,

"பாருடா... விருமாண்டிகூட காமெடியெல்லாம் பண்றாரு..." என்றபோதே அவன் முறைக்க,

"ஃபைவ் செகண்ட்தான் டைம் தருவேன்... அதுக்குள்ளே நீங்களே சமாதானம் ஆகி சரண்டர் ஆகிட்டீங்கன்னா தப்பிச்சீங்க. இல்லை..." அவள் நிறுத்தினாள்.

"இல்லைன்னா என்ன பண்ணுவே?" சவாலாய்த்தான் கேட்டான். இருந்தும் அவனுக்குள் இருந்த அவன் மனச்சாட்சி, 'விஜய், நீ அடங்கவே மாட்டியா? உன் ஈகோவை இப்பத்தான் காட்டணுமா? நீ இப்படியே பண்ணிட்டு இரு... அவ அம்மா

வீட்டுக்கே கிளம்பப் போறா... அப்புறம், அவள் காலில்தான் விழப் போறடா நீ...' என்று எச்சரிக்க...

அதில் சுதாரித்தவனாய், 'சும்மா பத்து நிமிஷம்... அவ என்னதான் பண்றானு பார்ப்போமே...' என்று மனச்சாட்சியை அடக்கியவன், மனைவியைப் பார்த்தபடியே இருக்க, அவளோ அவன் காது மடல்களைக் கடித்தபடி,

"யூ நோ இந்தர்... நான் இன்னும் பச்சப் பாப்பா இல்லை. அது உங்களுக்கும் தெரியும். நீங்களா வந்தா சமாதானம்... இல்லை, சேதாரம். எதுன்னு முடிவு பண்ணிக் கோங்க," என்றவளின் குரல் அதிரடியாக இருந்தாலும், அதில் நாணமும் இருக்க,

அவளின் பேச்சில் விஜய்யை மீறி... அவன் முகத்தில் இளநகை தோன்றி மறைந்தது.

"ஹா... சமாதானம், இல்லைனா சேதாரமா! யாருக்கு... எனக்கா... கிழிச்ச..." என்றவனின் கை அவனை மீறி அவள் தேகத்தோடு விளையாட ஆரம்பித்திருக்க...

அதை உணர்ந்த தீக்ஷா.... "என்ன, நக்கலா?" என்றவளின் வார்த்தைகளில்,

"நீ இன்னும் பாப்பா தான்...." என்றவனின் குரலில் இருந்த உல்லாசம் அவன் கைகளையும் தொற்றிக் கொள்ள...

இப்போது தன் மனைவியைத் தனக்குக் கீழ்க் கொண்டு வந்திருந்தான்...

"யார் சொன்னா நான் இன்னும் பாப்பாதான்னு... எனக்கு எல்லாம் தெரியும்..." என்று ரோசமாகச் சொன் னவள்... "எனக்கு ஒண்ணும் தெரியலைன்னு நீங்க சொன் னீங்கன்னா... சொல்லிக் கொடுத்த டீச்சர் சரி இல்லை... எனக்குக் கற்பூர புத்தி..." என்றவள்...

"உங்களுக்குத் தெரியுமா... நான் டுவெல்த் மேத்ஸ்ல... 200 அவுட் ஆஃப் 200..." என்று பெருமையாகச் சொல்ல,



விட்டால் இந்த நேரத்தில் இவள் சாரகேசையும் இழுப் பாள் என்று நினைத்தவன்... வேகமாய்... "உன்னை இந்த விசயத்திலயும் ஃபுல் மார்க் வாங்க வைக்கிறேன். போதுமா... நீ பேச்சைக் குறை..." என்றவனிடம்,

"செயல்ல நீங்க காட்டுங்க..." என்று விடாமல் பேசி யவள் வாயில் கை வைத்து மூடியவன்...

"அடங்கவே மாட்டியாடி..." என்று அவள் கழுத்து வளைவில் தன் பாடத்தை ஆரம்பிக்கப் போக...

தன் இதழை மூடியிருந்தபடி அவனது கைகளைப் பிரித்தவள்..

"டீச்சர் சரி இல்லை, பாஸ்... பட் ஸ்டூடண்ட் புத்திசாலி யாக்கும்... சொல்லிக் கொடுத்த பாடத்தை என்னைக்கும் மறக்க மாட்டாள் இந்த தீக்ஷா!" என்றபடி... அவனின் அழுத்த மான இதழ்களைத் தனதாக்க... சற்று நேரத்திலேயே தீக்ஷா மீண்டும் மாணவியாக மாற... அவளின் கணவன் ஆசிரிய ராக மாறியவன் திணறடித்துத்தான் அவளை விட்டான்.

விஜய் இன்னும் சாப்பிடவில்லை என்பதை உணர்ந் தவள்... அவனிடமிருந்து விலகி... எழுந்து அமர்ந்தவள் தன்னைச் சமாளித்து...

"சாப்பிடப் போகலாம் இந்தர்..." என்ற போதே, அவள் குரல் கொஞ்சலும் கெஞ்சலுமாய் வர...

"ஏன் தெம்பில்லையா?" என்றவன் அவளை ஆராய்ந்த படியே எழ... தெளிவாகத்தான் இருந்தாள்.

"நான் கொட்டிக்கிட்டேன், தீபனும் அண்ணியும் போகும் போதே..."

"அடிப் பாவி... புருசன் சாப்பிட்டானா இல்லையா அதைப் பற்றி யெல்லாம் கவலை இல்லை."

உதட்டைச் சுழித்தவள்... "இப்போ கூப்பிடறேன்ல.... வாங்க போகலாம்," என்றபடி கதவை நோக்கிச் செல்ல...

"ஏய், இருடி..." என்று அவள் பின்னால் போனவன்... "எனக்குப் பசி இல்லை..." என்றவன் மனைவியைத் தன்புறம் திருப்பியவன்...

"நாம இன்னொரு முக்கியமான வேலை பார்ப்போமா?" என்று கொஞ்சலாய்ச் சொல்ல...

"அதைத்தானே பார்த்துட்டு இருக்கோம்..." என்றவளை அதற்கு மேல் பேச விடாமல்....

கீழே வைத்திருந்த... அவர்கள் இருவருமாய்ச் சேர்ந் திருந்த புகைப்படத்தை... அவளிடம் கொடுத்து... அவளைத் தூக்க... தீக்ஷா அந்தப் புகைப்படத்தைக் கண் கலங்கப் பார்த்தபடி.... சுவரில் மாட்டியவள்...

கலங்கிய கண்களை... விஜய்யின் மேலேயே சாய்ந்து அவனது சட்டையில் துடைத்தபடி... "இது, நான் மாட்டின போட்டோ... இன்னொரு போட்டோ..." என்று கேள்வியாய்க் கேட்க...

"இது நீயும் நானும் சேர்ந்து மாட்ட முடியும்... அது பெரிய போட்டோ... 4 பேர் வேண்டும்... ஆர்வக் கோளாறில் பெருசாப் போட்டுட்டேன்..." என்று சிரிக்க...

"இறக்கி விடுங்க, அத்தான்..."

அவனிடமிருந்து இறங்கியவளிடம், "இன்னும் ஒண்ணு பாக்கி..." என்றான் விஜய்.

அவள் 'என்ன...' என்று யோசிக்கும் முன்னரே... அவள் தூக்கி எறிந்த தாலிச் செயின் அவன் கைகளில் இருக்க...

அதிர்ச்சியோடு அவனைப் பார்த்தவளின் இதழ்கள்... "இந்தர்!" என்று தழுதழுக்க...



அவளின் கழுத்தில் மீண்டும் அதைப் பூட்டினான், அவளது கணவன்.

"நல்ல நேரம் பார்க்க வேண்டும்... சாமி சன்னிதானம் முன்னால போடணும்... இதெல்லாம் எனக்குத் தோணலை, தீக்ஷா.... நீ என்னை இந்தரா உணர்ந்த தருணம் அது மட்டும்தான் எனக்கு நல்ல நேரம்.

"கழுத்தில் தாலி இல்லை என்றால் கூட உன்னோட மனைவின்ற உரிமையை நீ காட்டிய விதம்... இது... இதுக் காகத்தான் நான் ஏங்கி இருந்தேன், தீக்ஷா..." என்றவனைத் தன்னோடு இறுக அணைக்க...

அவளின் அணைப்பில் தன்னை அடக்கியவன்... அதில் ஆழ்ந்திருந்தவன்...

"எனக்கு நீ... நீ மட்டும்தான் வேண்டும், தீக்ஷா... மொத்தமா... முழுசா... என்னோட ஒவ்வொரு அணுவும் செத்துட்டு இருக்குடி... உன்னைத் தீண்டாமல்...

"நான் உடம்புக்காக அலையுறவன் இல்லை... ஆனால் உனக்காக ஏங்குகிறேன். மனசும் உடலும்... இதை நான் சொல்றதுக்கு வெட்கமே பட மாட்டேன்," என்றவனை அடுத்து ஒரு வார்த்தையுமே பேச விடாமல்... தன் கணவனை... அவன் பட்ட ஏக்கங்களுக்கெல்லாம் தீர்வாகத் தன் இதழ்ச் சிறையால் அவனைப் பூட்ட...

அந்தச் சிறையில் சந்தோசமாய் அடைபட்டான் அவளவன்... தன்னவளை மீண்டும் சிறை எடுக்கக் கூட அவன் விரும்பவில்லை... தீக்ஷாவாகவே தன்னை விட்ட போதுதான்... விஜய், தன்னை மீட்டெடுத்துக் கொண்டவன்... சிரித்தபடி...

"நானும் உன் அளவுக்கு ட்ரை பண்ணவா...? என்னை மிஞ்சிட்டடி..."

அவனின் பொய்யான கிண்டல் வார்த்தைகள் எல்லாம் அவளைத் தீண்டவில்லை.

தீக்ஷா அவனைப் பார்த்தபடியே இருந்தாள்... பார்த்துக் கொண்டே இருந்தாள்.

"ஹேய், என்ன... தீக்ஷாவுக்கும் சென்டிமென்ட்டுக்கும் ஆகாதே!" என்றவனிடம்....

சாய்ந்தவள்... "ப்ச்... இப்படியே பேசிட்டே இருங்க... நான் தூங்கப் போறேன்..." என்க,

புரியாமல் விழித்தான் விஜய்...

"புரியலையா... நீ வேண்டும்... உனக்காக ஏங்கு கிறேன்... இதைச் சொல்ல வெட்கமே பட மாட்டேன்னு வாய் தான் சொல்லுது... இதே டயலாக் நான் சொல்கிறவரை நீங்க பேசிட்டே தான் இருப்பீங்கன்னு தோணுச்சு... ஆனால் நான் சொல்ல மாட்டேன்பா... ஏன்னா பேசிக்கா அச்சம், மடம், நாணம், பயிர்ப்பெல்லாம் உள்ள பொண்ணு நான்....

"இந்த அடக்கமான தீக்ஷா புள்ள அந்த டயலாக்லாம் சொல்லுமா... அதுதான் தூங்கப் போறேன்.... நீங்க கட்சி மேடையில பேசிட்டு இருக்கிற மாதிரி பேசிட்டே இருங்க..." என்று உலகின் அடக்கத்தை எல்லாம் குத்தகைக்கு எடுத்துக் கொண்டவள் போல்... அப்பாவியாய்ப் பேச...

அடக்க முடியாமல் சிரித்த விஜய்... "உன்னை..." என்க,

"என்னை..." என்று இவளும் சளைக்காமல் பார்க்க...

அவளைப் பூமாலையாய் அள்ளியவன்... ஏழு ஸ்வரங் களுக்குள் எத்தனை பாடல் என்பது போல்... தீக்ஷா என்னும் தேக வீணையில் தன் விரல்களாலும்... இதழ்களாலும் புதிய நாதம் மீட்ட ஆரம்பிக்க.... விஜய்யின் விரலும் இதழும் தன் தேகத்தில் மீட்டியதற்கேற்ப.... அவன் மனைவி லயமும் சுருதியும் மாறாமல்... ஸ்வரம் பிசகாமல்... தன்னை அவனிடம் ஒப்படைக்க ஆரம்பித்தாள்.



வெகு நாட்களாய்க் காமனின் கச்சேரி நடக்காமல் மூடப் பட்டிருந்த அந்தச் சபை இன்று... அவர்களின் இன்னிசை யில்.... இழந்த பொலிவை மீண்டும் அடைய... கச்சேரி பண்ணிய அந்த இரு குயில்களோ, தங்கள் சங்கமத்தில் மூழ்கித் தாம்பத்திய கச்சேரியின் உச்சம் அடைந்து திரும்பிய போது.... விஜய்யின் மனைவி தன்னவனின் முகத்தில் இருந்த பழைய தேஜசைக் கொண்டு வந்திருந்தாள்.

இரண்டு வாரங்கள் கழித்து...

இளமாறன் வீட்டில் தீக்ஷாவும் விஜய்யும் அமர்ந் திருந்தனர்...

தீக்ஷா வரவே பிடிக்காமல்தான் விஜய்யோடு வந்திருந் தாள்.

வீட்டின் உள்ளே நுழைந்த போதுதான்... தீக்ஷா அதிர்ந்தாள். காரணம்... இளமாறனின் புகைப்படம் மாலை யோடு புன்னகைத்திருக்க.. கணவனின் கரங்களை நடுங்கிய தன் கரங்களால் பற்றினாள்...

விஜய் அதை உணர்ந்து... கண்களால் சமாதானப் படுத்தியபடி உள்ளே அழைத்து வந்தான்.

இளமதி இவர்களைப் பார்த்தவுடன்.... சந்தோஷமாய் வரவேற்க... விஜய், இளமாறன் பெற்றோரிடம்... தன் தம்பியின் திருமண அழைப்பிதழைத் தன் மனைவியோடு சேர்ந்து கொடுத்து... அவர்களை அழைத்தவன்... இளமதிக்கும் தனியே கொடுத்தான்.

"இல்லை, பரவாயில்லை... அம்மா அப்பாகிட்ட கொடுத் துட்டீங்கல்ல... அது போதும்!" என்றவள்... தீக்ஷாவைப் பார்த்தாள்.

தீக்ஷாவை வம்பிழுக்கும் எண்ணம் மட்டும் போக வில்லை அவளுக்கு... "விஜய்... உங்க கூல் பேபி... என்னைப் பார்த்தால் மட்டும் பேசவே மாட்டேங்கிறாங்க...

கூல் பேபிக்கு... குடிக்க கூலா... ஹாட்டா...?" என்று விசாரிக்க...

விஜய் சிரிக்க...

தீக்ஷா கண்களாலேயே எரித்தாள் அவனை.

"என்னை எதுக்கு முறைக்கிற...?" என்று அவளுக்கு மட்டும் கேட்கும்படி விஜய் கேட்க...

"யங்மூனைப் பார்த்த அப்படியே பல்பு போட்ட மாதிரி முகம் பிரகாசம் ஆகுது... அவ என்னைக் கிண்டல் பண்றா.... அது உங்களுக்குச் சிரிப்பா?" என்று பல்லைக் கடிக்க,

"உன்னைப் பார்த்தால்தான் நான் ஆஃப் ஆகிடு றேனே... அப்புறம் எங்க பிரகாசம் ஆகிறது...!" என்று பயந்த வனாய்ச் சொல்ல...

"நம்பிட்டேன்..." என்றவளின் சிந்தனையில் இளமாறன் எப்போது எப்படி இறந்தான் என்ற எண்ணம் மட்டுமே வர...

விஜய் அதை உணர்ந்தவன் போல் அவளை யோசிக் கவே விடாமல்...

"தீக்ஷா... வேணும்னா யங்மூன் கிட்ட சொல்லிடலாம்... என் பொண்டாட்டி கூல் பேபி இல்லை... ஹாட் பேபின்னு. அதிலும் எனக்கு மட்டும் தான்னு..." என்று கொஞ்சம் கூட முகம் மாற்றாமல் சொல்ல... தீக்ஷாவுக்குத்தான் புரை ஏறியது....

இளமதி அமைதியாக அவர்களைப் பார்த்தபடி இருந் தாள்.

பின்.... அவளது பெற்றோர், "இளமதிக்கு நெக்ஸ்ட் மன்த் என்கேஜ்மெண்ட்.... பையன்...வேற யாருமில்லை... நிர்மலாவோட அண்ணன்தான்..." என்று சொல்ல...

விஜய்யும் தீக்ஷாவும் அவளுக்குத் தங்கள் வாழ்த்துக் களைச் சொன்னார்கள்.



பின் விஜய் தயங்கியபடி, "நிர்மலா எப்படி இருக்காங்க?" என்று தயங்கியபடி கேட்க....

"அண்ணி சந்தோஷமா இருக்காங்க... அவங்க புது வாழ்க்கையில்... அவங்க லவ் பண்ணிய பையனோட நானும் அவரும் மறுபடியும் சேர்த்து வச்சுட்டோம்..." என்று சிரித்தபடி சொல்ல...

தீக்ஷா குழம்பினாள்... இளமாறன் இறந்து விட்டான் என்பது மட்டும்தான் தெளிவாகத் தெரிந்தது... மற்றது ஒன்றும் அவளுக்குப் புரியவில்லை... இருந்தும் அப்போது ஏதும் கேட்கவில்லை.

விஜய் இப்போது... "ஓ... நிர்மலாவோட அண்ணன் எப்படின்னு யோசிச்சேன்... இப்போ எப்படினு புரியுது..." என்று முகம் மலர்ந்து சொன்னவன்.... அங்கிருந்து மனைவியோடு கிளம்பினான்.

காரில் வரும்போதே.... தீக்ஷாவுக்குள் ஆயிரம் கேள் விகள்... அதை உணர்ந்தவனாய்...

விஜய் அவளிடம்... " உன்னைக் கண்டதை யோசிக்கக் கூடாதுன்னு சொல்லி இருக்கேன்... இப்போ என்ன பிரச் சனை... இளமாறனைப் பற்றித்தானே இப்போ உன் சந்தேகம் எல்லாம்... கேளு.... சொல்கிறேன்!" என்றபடி அவளைப் பார்க்க,

"விமான விபத்தில் இறந்தது இளமாறன்தானா?" என்றவள்... அவனுக்காகக் கலங்க ஆரம்பிக்க...

"ஹ்ம்ம்... நான் போக வேண்டியது... அவன் போய்ச் சேர்ந்துட்டான்..." என்றவனின் முகம் இறுகி இருந்தது.

அவனின் இறப்பு கூட அவனின் நம்பிக்கைத் துரோ கத்தை ஆற்றவில்லை... தன் தொழிலில் அவன் செய்த துரோகம் கூட அவனை இம்சிக்கவில்லை.... தன் மனை விக்கு அவன் செய்ய நினைத்த காரியம்... நினைக்கும்

போதே அவனின் கோபம் அவனையும் மீறி வெளி வர... அவனது காரின் வேகமும் அவனைப் போலவே கட்டுப் பாடில்லாமல் பறக்க...

அதைப் பார்த்தாள் தீக்ஷா. "என்னத்தான்... ஏன் முகம் ஒரு மாதிரியா ஆகி விட்டது.. இளமாறனை மிஸ் பண் றீங்களா...?" என்றவளின் கேள்வியில்...

முறைத்தான்... "அந்தத் துரோகியைப் பற்றிப் பேசாத.... அவனால உன்னை... நம்ம குழ..." என்று ஆரம்பித்தவன்...

"சரி விடு... நெக்ஸ்ட் நாம ஒரு முக்கியமான இடத் திற்குப் போகப் போகிறோம்..." என்று மாற்ற...

தீக்ஷா... அவனின் கோபத்தை உணர்ந்து... யோசித் தவள்... பின், "அன்னைக்கு என்னைக் கடத்தச் சொன்னது தீனா இல்லையா.... இளமாறன்தானா...?" என்றவள்... அவனின் கேவலமான புத்தியில் கடுஞ்சினம் கொண்டாள்.

"பொறுக்கி..." என்று வாய்க்குள் முனகியவள்... விஜய்யை முறைத்தாள்.

"அவனையெல்லாம் நம்பி... உங்க தங்கையைக் கொடுக்கப் போட்டி போட்டீங்க..." என்றவள்...

அப்போதுதான் அவன் சற்று முன் நிறுத்திய வார்த் தைகளை உள் வாங்கியவள்... அவன் சொல்ல வந்த வார்த்தைகளைத் தனக்குள் சொல்லிப் பார்த்தவள்.... மனதின் அடி ஆழம்வரை அடி வாங்கினாள்.

"அத்தான், காரை நிறுத்துங்க..." என்ற அவளின் ஆவேசமான கத்தலில்... பதறி நிறுத்த,

"என்னம்மா...?" என்றவனின் அருகே வந்து ஆதரவாய் அணைக்கப் போக...

"அவனால எனக்கு நடந்ததெல்லாம் ஓ.கே... ஆனா அடுத்து என்ன சொல்ல வந்தீங்க..." வார்த்தைகள் நடுங்க... கண்களில் குளம் கட்டி இருக்க...



விஜய் பயந்தே விட்டான். "தீக்ஷா, என்னைப் பாருடா... ஒண்ணுமில்லைடா... ரிலாக்ஸா இருடா. டென்சன் ஆகா தம்மா..." என்று ஆறுதலாய்ப் பேசியவன்... "நாம இப்போ வீட்டுக்குப் போகலாம்... ஏகப்பட்ட வேலை இருக்கும்மா..." என்று பேச்சை மாற்ற முயல...

அவன் சட்டையைக் கொத்தாகப் பற்றியவள்... "நான் டென்சன் ஆகக் கூடாதுன்னா... எனக்கு இப்போதே தெரி யணும். இல்லை..." என்றவளின் உச்சகட்ட ஆவேசத்தில்...

அவளைத் தன்னோடு இறுக அணைத்தவன்... அவளின் உணர்வுகள் புரிந்து... "ஒண்ணுமில்லைடா... நமக்கு இன்னும் வயசு இருக்கு... எத்தனை குழந்தைகள் வேண்டுமென்றாலும் பெத்துக்கலாம்..." என்றபோது, அவன் குரலும் உடைந்திருக்க... விஜய்யின் கைகள் நடுங்க...

அதை உணர்ந்த தீக்ஷா... அதுவரை தன் உணர்ச்சி களின் பிடியில் இருந்தவள்... தன் கணவனைத் தேற்றும் விதமாய் அவனின் கரங்களை அழுத்த...

"யாருக்குமே தெரியாது தீக்ஷா.. ஆனால் அதை நினைத்து வருந்தக் கூட முடியாத ஒரு நிலையில் இருந்தேன்... நீ மட்டும் எனக்குக் கிடைத்தால் போதும் என்று நம் முதல் வாரிசு கருவிலேயே அழிந்தது கூடப் பெருசாத் தெரியலை தீக்ஷா.... அந்த மூணு மாதமும் அணு அணுவா நான் செத்தேன்டி... நீ கோமாவிலேயே என்னை விட்டுப் போய் விடுவாயோன்னு.... அந்த நரக வேதனையெல்லாம் யாருக்குமே வரக் கூடாது தீக்ஷா..." என்றவன்,

அவளின் நெற்றியில் இருந்த காயத்தின் தழும்பில் அழுத்தமாய் முத்தமிட்டவன்...

"என்னை மன்னிச்சுட்டேன்னு சொல்லு, தீக்ஷா...!" என்றவன்...

"என்னைப் பொறுத்த வரைக்கும் உன்னை ரூம்ல தள்ளினேன். அடைத்து வைத்தேன், கழுத்தைப் பிடிச்சுத் தள்ளினேன். இதெல்லாம் சாதாரணமா நெனைச்சுட்டேன்... ஆனால், உன்னோட வேதனை, அவமானமெல்லாம் என்னை விடலை... உப்பைத் தின்றவன் தண்ணி குடித்துத்தான் ஆக வேண்டும்... தப்பு செஞ்சவன் தண்டனை அனுபவித்துத்தான் ஆக வேண்டும். என் விஷயத்தில் கரெக்டா நடந்திருக்கு தீக்ஷா..." என்று புலம்ப ஆரம்பிக்க...

"அய்யோ அத்தான்... விடுங்க பளீஸ், ஃபீல் பண்ணாதீங்க... நீங்க ஒரு தப்பும் பண்ணலை... என்னை அடிக்க உங்களுக்கில்லாத உரிமையா...? அன்னைக்கு உங்க முன்னாலே நின்ற நிலைமை, பொண்ணா அவமானம் தான். ஆனா நான்தான் உங்களோட முழு உடைமை ஆகிட்டேனே... அதனாலே அந்த அவமானமும் இல்லை..." என்று விஜய்யைத் தேற்ற ஆரம்பிக்க...

"ப்ச்... ராதாவோட காதலுக்கு அந்தஸ்தைக் காரணம் காட்டி எதிர்ப்புக் காட்டியது... ஆர்த்தியை கடத்தித் தீனாவை மிரட்டியது... உன்னைக் கழுத்தைப் பிடிச்சுத் தள்ளினது... உன்னை மட்டும் இல்லை, உன் குடும்பத்தையே வெளியேற்றியது... இதுக்கெல்லாம் நான் அனுபவிச் சுட்டேன்..."

விஜய் பேசிக்கொண்டே போக, தீக்ஷா, அவன் உதட்டில் தன் விரல் வைத்து...

"ஷ்ஷ்ஷ்.." என்று மிரட்டியபடி...

அவனின் அருகில் நெருங்கி அமர்ந்தவள், அவன் தோள் சாய்ந்து...

"பேசாமல்... ட்ரைவ் பண்ணுங்க... டிரைவர் சார்..." என்று அவனிடம் குறும்பாகக் கூறி விட்டு... அவனின் கையை எடுத்துத் தன் மேல் போட்டுக் கொள்ள,



விஜய்யும் இப்போது... தன் கவலை மறந்தவனாய், இதழ் மலர்ந்தவன்...

"அது சரி... ட்ரைவ் பண்றது எப்டிம்மா...?" என்று அவன் உதடுகள் சொன்னாலும்... அவனின் கை, மனைவியை இன்னும் அழுத்தமாய் அரவணைத்துக் கொள்ள... கணவனை அவன் கவலையிலிருந்து மாற்றிய நிம்மதியில் தீக்ஷா ஆறுதலானாள்.

ஆனால், அவளின் உள்ளமோ ஆறுதலடைய மறுத்தது.

எந்த ஒரு துன்பத்தையும் எதிர்நோக்காமல்... பயந்து, தனக்குள்ளேயே ஒளிந்து கொண்ட தன் கோழைத்தனத்தை நினைத்து இப்போது வெட்கினாள். அதனால் தாங்கள் இழந்தது 10 மாத மண வாழ்க்கை மட்டும் இல்லை... தங்கள் வாரிசைக் கூட..... உள்ளுக்குள்ளே மறுகினாள் தீக்ஷா.

தன் கணவன் இப்போது கூட எதையும் சொல்ல முடியாமல் தன் மனதோடு வைத்து... தான் கொடுத்த துன்பத்தை எல்லாம் தாங்கிக் கொண்ட அவனின் திடமான மனதை நினைத்தவள்... தன் கணவனையே பார்த்தபடி வர...

அவளின் பார்வை உணர்ந்தவன், அவளைக் கேள்விக் குறியாக நோக்க...

மீண்டும் தன் கவலையால் அவனை நோகடிக்க விரும்பாமல்.... சட்டென்று தன் பார்வையினை மாற்றி...

"நாம இப்போ எங்கே போறோம்...?" என்று பேச்சை மாற்றினாள்.

அவள் பேச்சை மாற்றுவதைப் புரிந்து கொண்டான் தான் விஜய்...

ஆனாலும் ஒன்றும் கேட்கவில்லை.

அடுத்து அவன் காரை நிறுத்தியது, சக்தியின் இல்லம் தான்.

"நாம் ஏற்கெனவே வந்தோமே அத்தான்..." என்றவளுக்கு ஒப்புதலாய்த் தலை அசைத்து, அழைத்துப் போனவன்...

அவர்களிடம் சிறிது நேரம் பேசி விட்டு... சக்தியைப் பற்றி அங்குதான் தீக்ஷாவுக்குச் சொன்னான்.

விஜய், தீக்ஷாவிடம் ஒரே நேரத்தில் எல்லாவற்றையும் திணிக்காமல்... அந்தந்த நபர்களின் அறிமுகத்திலேயே அவர்களைப் பற்றி... தன் மனைவிக்குச் சொன்னான். இது கூட மருத்துவர்களின் அறிவுரையே.

"நமக்காவது... 35 நாள் குழந்தை... அதன் கருவிலேயே அது அழிந்தது கூடத் தாங்க முடியலை... 22 வருசம் பார்த்துப் பார்த்து வளர்த்த தங்களோட பொண்ணை இவங்க பிரிஞ்சது கொடுமைதானே தீக்ஷா... நம்மை விடத் துன்பங்களை அனுபவிப்பவர்கள் ஏராளம் இந்த உலகில்...."

விஜய் கூறியதை உணர்ந்தவளாய், மௌனமாய் இருந்த தீக்ஷா....

அதன் பின்,

தீக்ஷா அவர்கள் மகளின் இடத்தை நிரப்புவேன் என்றெல்லாம் சக்தியின் பெற்றோரைத் தேற்றவில்லை. பொதுவாக ஆறுதல் கூறினாள். பிறகு கிளம்பினார்கள்.

விஜய் எதிர்பார்த்தான்தான்... தீக்ஷா அவ்வாறு கூறுவாள் என்று.

ஆனால், அவளிடம் அங்கு ஏதும் அதைப் பற்றிப் பேசாமல்... தனிமையில் கேட்க,

"நான் எப்படி அத்தான் சக்தியோட ப்ளேஸை ரீப்ளேஸ் பண்ண முடியும்... ஆறுதலாகத்தான் இருக்க முடியும்... யாராலும் யாரோட இடத்தையும் ரீப்ளேஸ் பண்ண முடியாது அத்தான்... ஒவ்வொருத்தருக்கும் ஒரு இண்டிவிஜுவலிட்டி இருக்கும்... நான் அவங்களுக்கு மகள் போல ஆறுதல் சொல்லலாமே ஒழிய, மகளா என்னை உணர வைக்க ஒரு போதும் முடியாது," என்றவளிடம், விஜய்யும் அதற்கு மேல் வற்புறுத்தவில்லை.



நாட்கள் கடந்தன... சுரேந்தர் - பார்வதி, சாரகேஷ் - அகல்யா திருமண நாளும் வந்தது.

முதலில் சாரகேஷ் - அகல்யாவின் திருமணம் நடக்க, அடுத்துப் பார்வதி - சுரேந்தர் திருமணம். சாரகேஷ் - அகல்யாவோடு சேர்ந்து நின்று பார்வதியைச் சுரேந்தருக்குக் கன்னிகாதானம் செய்து கொடுக்க... தேவகியின் முகத்தில் தாயாகப் பரவசம்.

திருமண வரவேற்பில்... ஆர்த்தி, விஜய்யைப் பாடச் சொல்லி ஒற்றைக் காலில் நிற்க... விஜய் முதலில் மறுத்தவன்...

"விஜய் அத்தான், ப்ளீஸ்..." என்று அவள் கெஞ்சலில், வேறு வழியின்றி விஜய் மேடைக்கு ஏற... அவன் ஏறிய மேடையின் எதிர்ப்புறம் இருந்த மணமேடையில் மணமக்களோடு நின்று கொண்டிருந்த தீக்ஷா திகைத்தாள்.

விஜய்யை வெற்றிகரமாக மேடை ஏற்றிய சந்தோஷத்தோடு... ஆர்த்தி, தீக்ஷாவின் அருகில் வந்து நிற்க...

"ஆர்த்தி... உனக்கு ஏன் வேண்டாத வேலை..." என்று சிரிக்க...

மணமகளாய் நின்ற பார்வதியோ, தன் தோழியிடம்,

"விஜய் அத்தான் நல்லாப் பாடுவாராம், தீக்ஷா... சுரேந்தர் சொன்னார். உனக்குத்தான் தெரியலை..." என்றவள், தோழியின் முகம் பார்க்க...

"எனக்குத் தெரியாமல் இருக்குமாடி... அவர் நல்லாப் பாடுவார்னு தெரியும்... என்ன பிரச்சினைன்னா... பாசத்தில்... 'எங்கள் வீட்டில் எல்லா நாளும் கார்த்தி கைன்னு...' உங்க விஜய் அத்தான், அவர் தம்பிங்களோட பாட ஆரம்பிச்சிருவாரோன்னு பயமா இருக்கு..." என்று வழக்கம் போல் தன் குறும்பான பேச்சால், தன் தோழி மற்றும் ஆர்த்தியைச் சிரிக்க வைக்க... அப்போது விஜய் பாட ஆரம்பித்தான்...

ஓ வானம்பாடி உன்னை நாடி எங்கும் தேடி
நெஞ்சில் சூடி இன்பம் கோடி
காண ஏங்கினேன் நாளும் வாடினேன்!
ஓ வானம்பாடி உன்னை நாடி எங்கும் தேடி
நெஞ்சில் சூடி இன்பம் கோடி

போகமே என் யோகமே என் காதல் ராகமே
கீதமே என் வேதமே என் ஜீவ நாதமே
பாவை உந்தன் பாதமே பாரிஜாதமே!
பாதை எங்கும் பூவனம் தாது தூவுமே
மண்ணில் சொர்க்கம் வந்ததே
மார்பில் சாய்ந்து கொண்டதே
சிந்தாத முத்துக்கள் செவ்வாயில் சிந்தக் கண்டேன்
வானம்பாடி...

மன்னவன் கண் மூடினால் என் வானில் ராத்திரி
மங்கையே உன் பார்வை தான் என் வானில் வைகறை!
இன்பம் என்னும் வேதனை இன்று பார்க்கிறேன்
நானும் கொஞ்சம் சோதனை போட்டுப் பார்க்கிறேன்!
காற்று வண்டு தீண்டுமோ? கற்பு என்ன ஆகுமோ?
பூங்காற்றும் தீண்டாமல் நீ என்னைக் கட்டிக் கொள்வாய்
வானம்பாடி....



விஜய் பாடும்போதே... மணமக்களை விட்டு, அனைவரும் பாடிய விஜய்யையும் தீக்ஷாவையும் பார்க்க...

யுகி, ஆர்த்தி, பார்வதியின் கிண்டல் மழை தாங்க முடியாமல்... தீக்ஷா நாணக் குடை பிடித்தவள்...

"இப்படிப் பாடி... என்னையே ஓட்ட வெச்சுட்டானே..." என்றபடி தீக்ஷா வாய் முனகினாலும்... கணவனின் பாடலில் தன்னைத் தொலைத்து... மனம் நெகிழ்ந்துதான் இருந்தாள்.

பாடி முடித்த விஜய், அவள் அருகில் வந்து...

"எல்லோரும் பாராட்டினார்கள். யாருக்கு இந்தப் பாடல் பிடிக்கும்னு சொன்னாங்களோ... அவங்க ரியாக்ஷனே கொடுக்கலை... பெருசால்லாம் வேண்டாம்.... ஏதோ இந்த ஏழைக்கு ஏற்ற மாதிரி..." என்று காது கடிக்க,

மௌனமாய் அவனுக்குக் காதல் மொழியைக் கண்கள் பனிக்கக் கூற... அவள் கணவனோ...

"சென்ட்டிமென்ட் தீக்ஷாவுக்குக் கூட வருமா...!" என்று தன் பங்குக்குக் கிண்டல் செய்ய...

முகம் சிவந்தவள், மூக்கு விடைக்க...

"எப்போதோ பிடிக்கும்னு சொன்ன பாட்டைப் பாடிட்டு... அதுக்குப் பாராட்டுப் பத்திரம் வேற படிக்கணுமா உங்களுக்கு... பாடப் போகும் போது, என்ன பாட்டு பாடணும்னு என் கிட்டே ஏன் நீங்க கேட்கலை...?" பொய்க் கோபமாக விஜய்யைத் தாக்கிப் பேச...

அதிர்ந்த பார்வையைப் பார்த்தான், பரிதாபமாய் அவள் கணவன்.

அவனின் பார்வையில் குறும்பாய்ச் சிரித்த தீக்ஷா...

"என் கிட்டேயேவா..." என்பது போல் பார்க்க...

வழக்கம் போல் தன்னவளின் குறும்பில் தன்னைத் தொலைத்தான் விஜயேந்தர்.

ஒரு வழியாகத் திருமணம், தொடர்ச்சியான சடங்குகள் எல்லாம் முடிந்து, சுரேந்தர் - பார்வதிக்கு ஸ்டார் ஹோட்டலில் அவர்களின் முதல் இரவுக்கு சூட் புக் செய்திருந்தான். அவர்களின் தேனிலவுக்கும் ஏற்பாடு செய்திருந்தான்.

சாரகேஷ் - அகல்யாவுக்கும்... விஜய் அதே போல் ஏற்பாடு செய்ய நினைக்க.. சாரகேஷ் மறுத்து, அவன் வீட்டிலேயே தங்கள் முதல் இரவை ஏற்பாடு செய்யச் சொல்லி விட்டான். தேனிலவும் அவனின் அந்தஸ்திற்குப் பொருத்தமான இடத்தைத் தேர்வு செய்திருந்தான்.

விஜய்யும் கட்டாயப்படுத்த முடியவில்லை.

ஒரு வழியாகத் திருமண வேலைகளை முடித்து... நல்ல நேரம் பார்த்துப் பார்வதி - சுரேந்தரை அனுப்பி வைத்து... விஜய் - தீக்ஷா, தங்கள் அறைக்கு வந்த போது மணி பதினொன்றைத் தாண்டி இருக்க...

விஜய்.... "தீக்ஷா... சோ டையர்டு..." என்று சொல்லிய படியே படுக்கையில் விழ, அவனுக்கு இந்தத் திருமண வேலையினால் அலைச்சல்... தீக்ஷாவுக்கும் அது புரிந்த தால்...

"குட் நைட் அத்தான்..." என்றபடி தன் அணிகலன் களை எல்லாம் கழட்டி வைக்க ஆரம்பித்தாள்.

அவளுக்கும் களைப்பாக இருக்க, எப்போதடா கண் மூடுவோம் என்றுதான் இருந்தது. கணவனை நினைத்துப் பயந்தபடியே வந்தவள்... அவனே உறங்கப் போகிறேன் என்றவுடன்... தீக்ஷாவும் வேகமாய் குட் நைட் சொல்ல...

"என்ன... மேடத்துக்கு வேகமா குட் நைட் வருது... அந்தளவு புருஷனால தொந்தரவா?" என்று அவள் புறம் திரும்பியவனைப் பார்த்து முறைத்தவள்... தன் வேலையைத் தொடர்ந்தாள்.



அவளது முறைப்பில்...

"சரி, சரி. முறைக்காதே... நாளைக்கு மூனு மணிக்கு ஃப்ளைட். சீக்கிரம் எழனும்... அலார்ம் வெச்சுட்டுப் படு,"

என்று விஜய் முடிக்கவில்லை...

"என்னது... ஃப்ளைட்டுக்கா..." கோபமாய் நின்றாள் அவன் முன்.

"ஆமாம்..." என்றவன், இதழோடு புன்னகையை மறைத்து வைத்துக் கொண்டபடி அவளைப் பார்க்க,

"தங்கைக்கு வீடு... தம்பிக்கு ஃபர்ஸ்ட் நைட்டுக்கு ஸ்டார் ஹோட்டல்ல சூட்.. அப்புறம் ஃபாரினுக்கு ஹனிமூன் டிக்கெட்..." என்றவளிடம்,

"ஏன்... என் தங்கை, என் தம்பிக்குச் செய்தால் உனக்கு என்ன...?" என்று விடாமல் இவனும் பேச...

"என்னவா... நல்லாச் செய்யுங்க... ஆனா பொண் டாட்டியைப் பார்த்தால் மட்டும் இளிச்சவாயாத் தெரியும்... அப்போ ப்ராஜெக்ட் ப்ராஜெக்ட்னு... எதுவும் இல்லை... இத்தனை நாளாகத். தம்பி திருமணம்னு பிஸி.... என்னைப் பார்த்தால் எப்படித் தெரியுது...?" என்றவளிடம்,

"லூசு... அவங்க புதுசா மேரேஜ் ஆனவங்கடி... அவங்க கூடப் போட்டி போடலாமா...?" என்றவன்...

"நமக்கு இந்த ரூம் போதாது....' என்று மனைவியைத் தன் புறம் இழுக்க...

"கிஃப்ட் கேட்டால் அதுக்கு ஒரு கனவுக் கதை சொல்லி... நான் இனிமேல் கிஃப்டே தர மாட்டேன்னு அதுக்கும் தடா... வெளியிலே சொல்லிடாதீங்க... ஒருத்தன் கூட பொண்டாட்டிக்கு கிஃப்ட் வாங்கித் தர மாட்டான்... நல்ல சாக்கு... உங்களுக்கு இனி எப்போ நல்ல கனவு வருமோ..." என்று பொருமியவளை..

"படுக்கலாம்... எனக்கும் தூக்கம் வருது," என்று பேச்சுவார்த்தையினை முடிப்பது போல் அழுத்தமாய்க் கூறி... இழுத்துப் படுக்கையில் விழ வைத்து... அவளையும் தன் கையணைப்பில் படுக்க வைக்க...

"விடுங்கத்தான்..." என்று திமிறியவளை...

விடமால் பிடித்தபடி கண் மூடியவன்... அடுத்த நிமிடமே தூங்கியும் விட... தீக்ஷா அதன் பின்தான் அவனை விட்டே எழ முடிந்தது.

"அழுத்தக்காரன் விருமாண்டி!" என்று திட்டியபடியே எழுந்தவள்... கண்ணாடி முன் அமர்ந்தபடி... தன் உருவத்தைப் பார்த்தபடியே,

'தீக்ஷா... இப்போ புலம்பு... இந்த மாதிரி கண்ணாடி யில பார்த்துதானே கவிழ்ந்தே!' என்று தன்னையே கண்ணாடியில் குத்திக் கொண்டவள்... இப்போது தன்னையும் மீறி உறங்கிக் கொண்டிருந்த கணவனுக்குக் கண்ணாடி வழியே முத்தம் பதிக்க...

'திருந்த மாட்டியே!' என்று தன்னைப் பார்த்தே சிரித் தவள்... அடுத்த சில நிமிடங்களிலேயே மீண்டும் படுக்கையில் விழுந்தவள், உறங்கிக் கொண்டிருந்த கணவனின் கைகளுக்குள் வந்தவள், உறங்கியும் போனாள்.

இதுதான் தீக்ஷா. தன் கணவனை அவன் இயல்பு களோடே ஏற்றுக் கொண்டவள். தன் இயல்புகளையும் மாற்றாமல்.... தங்கள் வாழ்க்கையை வாழ ஆரம்பித்தாள், தன் கணவனையும் வாழ வைத்தாள், வாழ வைப்பாள்.

**சி**ல வருடங்களுக்குப் பிறகு...

சென்னையின் மிகப்பெரிய நட்சத்திர அந்தஸ்தைப் பெற்ற ஹோட்டலின் நுழைவாயிலிலே, "வி.டி. ப்ரமோட்டர்ஸ் இல்லத் திருமண விழா" என்று கொட்டை எழுத்தில் எழுதப்பட்ட



வாசகம், அந்தத் திருமண வரவேற்புக்கு வந்திருந்தவர் களைப் பிரமாண்டமாய் வரவேற்றது.

அதன் கீழே...

யுகேந்தர் - ஆர்த்தி என்ற மணமகன், மணமகள் பெயர் பூக்களால் அலங்கரிக்கப்பட்டிருக்க... அந்த இடமே மகிழ்ச்சியில் திளைத்திருந்தது.

விஜயேந்தர் மற்றும் தீனா இருவரும் இணைந்து 2 ப்ராஜெக்ட்ஸை வெற்றிகரமாக முடித்திருந்தனர். கட்டுமானத் தொழிலில் புதிய பல தொழில் நுட்பங்களைப் புகுத்தி யிருந்ததற்காக அவர்கள் இருவருக்கும், பல நாடுகளின் நிறுவனங்களும் அவர்களோடு ஒப்பந்தம் செய்யக் காத் திருந்தன.

சுரேந்தர், இதே துறையில் இவர்களோடு சேராமல் தான் மற்றும் தன் மனைவியோடு தனியே கால் பதித்து அதில் வெற்றியும் பெற்றிருந்தான்.

யுகேந்தர் - ஆர்த்தி திருமணத்தை இரண்டு வருடத் திற்கு முன்னரே முடிக்கலாம் என்று தீனா வீட்டினர் பேசிய போது... யுகேந்தர் மறுத்து விட்டான். தன் சுயத்தில் தானே ஒரு நிறுவனத்தைத் தொடங்கி, அதில் காலூன்றிய பின்தான் திருமணம் என்று. அதில் வெற்றி பெற்ற பின்னர் தான் இந்தத் திருமணமே.

விஜய்க்கு அதில் மிகவும் பெருமிதம். தன் தம்பி தன்னைப் போல் அல்லாமல் தன் குறிக்கோளை அடைந்த பின்னரே திருமணம் செய்து முடித்தது, அவனுக்கு ஆச்சரியமாக இருந்தது.

காதல் என்ற மாய வலையில் யுகி விழுந்திருந்தாலும்... தன் முடிவில் மாறாமல்... தன் காதலிலும் வெற்றி அடைந் திருந்தான்.

தன் மனைவி சொல்வது போல...

"நாங்கல்லாம் பார்க்கத்தான் விளையாட்டுத்தனமாய் இருப்போம். காரியம் என்று வந்தால் சாதிக்காமல் இருக்க மாட்டோம்..." நடத்திக் காட்டி விட்டான் யுகி.

விஜய் சிரித்தபடி, மேடையில் யுகியோடு சிரித்துக் கொண்டிருந்த தன் மனைவியைப் பார்த்தான்.

இதுதான் இப்போதெல்லாம் அவன் மனைவியின் ஸ்லோகம்...

யுகி, தீக்ஷா, தீபன் மூவரும் சேர்ந்துதான் தொடங்கி இருந்தனர் அந்த மென்பொருள் நிறுவனத்தை...

ஓரளவு வெற்றிகரமாகத் தங்கள் மூன்றாம் ஆண்டினைத் தொட்டிருந்தது.

தீக்ஷா கடந்த வாரம் தான் இந்தியா திரும்பி யிருந்தாள்.

யுகிதான் க்ளையன்ட் சம்பந்தப்பட்ட பணிகளுக்காக வெளிநாடு செல்வது வழக்கம். ஆனால், அவனின் திருமணத்தால் இங்கேயே இருக்க... தீக்ஷாதான் மூன்று மாத காலமாக UK போய் இருக்க நேர்ந்தது.

சக்தியும் தன் தாயை சந்தோஷமாக வழி அனுப்பி வைத்திருந்தாள்.

சக்தி... விஜய் - தீக்ஷா இருவரின் பெண் வாரிசு. நான்கு வயது.

தீக்ஷா, விஜய்யிடம்... பிரசவ அறைக்குப் போகும் முன் சொன்னது இதுதான்...

"அத்தான்... நாம நம்ம குழந்தைக்குச் சக்தின்னு பேர் வைக்க வேண்டும்... அது பெண் குழந்தை என்றாலும் ஆண் குழந்தை என்றாலும் கூட. அந்தச் சக்தியை வளர்க்கும் பொறுப்பைச் சக்தி அம்மா - அப்பாவிடம் கொடுக்க வேண டும்," என்பதுதான் அது.



இப்போதும் சொல்வாள் தீக்ஷா...

"தீக்ஷா டு சக்தி... சக்தி டு தீக்ஷா..." அதன்படியே தன்னிலிருந்து உருவாகிய தன் மகளுக்குச் சக்தி என்று பெயரிட்டு, அவளை வளர்க்கும் பொறுப்பைச் சக்தியின் பெற்றோரிடம் ஒப்படைத்திருந்தாள் தீக்ஷா.

இறந்து போன சக்தியின் ஆத்மா... கண்டிப்பாக இதில் சாந்தி அடையும் என்று... தீக்ஷா - விஜய் நம்பினர்.

பார்வதி - சுரேந்தருக்கு இரண்டு வயது மகள் என, ராகவேந்தர் - கலைச்செல்வி குடும்பம் அடுத்த தலை முறையைத் தொட்டிருந்தது.

ராதா - தீபன் இருவருக்கும் சுனந்தாவுக்கு அடுத்து ஆண் வாரிசு.

சாரகேஷ், திருமணத்திற்குப் பின் வெளிநாட்டிற்குச் சென்று விட்டிருந்தான். அகல்யா தற்போது கர்ப்பமாக இருக்கிறாள்.

விஜய்யின் நினைவுகள் அனைவரையும் சுற்றி நின்ற போது...

சக்தி, அவனின் அருகில் வந்து அவனைப் பிடித்து இழுக்க... குனிந்து விஜய் தன் மகளைத் தூக்கியபடி பார்க்க... அதில் கண்ணீர்...

"என்னடா... சக்தி செல்லம்... ஏன் அழறாங்க?"

அவள் வாசித்ததோ தன் தாயின் மேல் புகார்...

"அப்பா... அம்மா என் செயின்..." என்று தேம்பியபடி பேச... புரிந்து கொண்ட விஜய்... தன் மகளைத் தூக்கிய படியே... தீக்ஷாவிடம் வந்தான்.

"ஏன் தீக்ஷா அவகிட்ட வம்பிழுக்கிறே... அவ செயினைக் கொடு..." என்று கை நீட்ட...

"இந்த வருஷம் அவளோட பிறந்த நாளுக்குப் போட்டதை அவளுக்குப் போட்டு விட்டுட்டேன் அத்தான்... இது அவளோட ஃபர்ஸ்ட் பிறந்த நாளில் எடுத்தது. அது எதுக்கு இவளுக்கு...?" என்று முறைக்க,

"அவதான் அழறால்ல... கொடு..." என்று கை நீட்ட,

தன் மகளை முறைத்தவள்...

'பிடிவாதம்... அப்படியே விருமாண்டி போல...' என்று மனதுக்குள் திட்டியபடியே கொடுக்க...

அதன் பின்தான் சக்தியின் முகம் சந்தோஷமாய் மாற, விஜய் சிரித்தபடி தீக்ஷாவைப் பார்க்க...

அவளோ உம்மென்றிருந்தாள்.

விஜய், அவளைப் பார்த்தபடியே, தன் மகள் காதில் ஏதோ சொல்ல...

"அம்மா..." என்று தீக்ஷாவை அழைக்க...

திரும்பிப் பார்த்தாள்.

"இப்படி உம்முன்னு இருந்தால் டிஸ்கவரி சேனலுக்கு லோகோ ஆகிடுவேம்மா..." என்றவள்,

"அப்புறம் என்ன அப்பா..." என்று தன் தந்தையைப் பார்த்துக் கேட்க...

"அடிங்க.... எனக்கேவா..." என்றபடி தன் கணவனையும் மகளையும் முறைக்கும் போதே, ஜெயந்தி அதைப் பார்த்தபடி...

"ஏன்டி புள்ளையைத் திட்டுறே..." என்று பேத்திக்கு ஆதரவாகப் பேசியபடி, விஜய்யிடமிருந்து சக்தியை வாங்க...

"அம்மா..." என்று பல்லைக் கடித்த தீக்ஷா...

"அவ பேசுற பேச்சுக்கெல்லாம்..." என்ற போதே,



"உன்னை விடல்லாம் என் பேத்தி கம்மியாத்தான் பேசுறா... அதை நீ சொல்லாதே..." என்று நொந்தபடி போனார்.

வாய்க்குள்ளேயே சிரித்தபடி விஜய்யைப் பார்த்தவள்... அதற்கு மேல் முறைக்க முயன்று... முடியாமல்...

'தீக்ஷா... எல்லாம் நேரம்டி...' என்று தனக்குள் சொல்லிக் கொண்டவள்... விஜய்யிடம்,

"ஹலோ... இங்கே என்ன பார்வை... ஒழுங்கா, வீட்டுக்கு மூத்த மகனா வந்தவங்களைக் கவனிங்க," என்று அவனைக் கடிந்தவள்... மீண்டும் திரும்பிப் பார்க்க... விஜய் அதை எதிர்பார்த்திருந்தவன் போல்...

"எல்லாம் நேரம்டி..." அவள் காதில் விழும்படி சத்தமாய்ச் சொல்ல.. தீக்ஷா சிரித்தபடியே சென்றாள்.

**அ**ன்றிரவு....

யுகி, சுரேன் மற்றும் விஜய் மூவரும் ஹாலில் அமர்ந்திருந்தனர். யுகி பொறுமை தாண்டியவனாய் மணியைப் பார்க்க... மணி பத்தைக் கடந்திருக்க... ஆர்த்திக்கு மெசேஜ் செய்தான்.

'டைம் பத்து' என்று மட்டும் அனுப்பி வைக்க... மொபைல் ஆர்த்தியிடம் இருந்தால்தானே...

மொபைலின் பீப் சத்தத்தில் தீக்ஷா வேகமாய்ப் பார்வதியிடம்...

"பாரு.... தலைவர் மெசேஜ் அனுப்பி இருக்காரு... அவர் பொண்டாட்டிக்கு..." பார்வதி சிரித்தபடி தீக்ஷாவின் அருகே போனாள்.

'என்ன அனுப்பி இருக்கிறானோ...' என்ற சங்கடத்துடன்.... "அக்கா, ப்ளீஸ்..." என்று மொபைலை நோக்கி ஆர்த்தி கை நீட்ட...

"சரி, சரி. படிக்கலை... பட் படிச்சுட்டு... சென்சார் போக... என்ன அனுப்பி இருக்கான்னு சொல்லணும்,"

என்றவள், மொபைலைக் கையில் கொடுக்காமல் அவள் புறம் திருப்ப... வேகமாய்ப் படித்தவள்...

"மணி பத்துன்னு அனுப்பி இருக்கான்..." என்று சொல்ல...

பார்வதி, ஆர்த்தியிடம்,

"ஏன் ஆர்த்தி... உனக்கு மணி பார்க்கத் தெரியாதா என்ன..." என்று கண் சிமிட்ட,

ஆர்த்தியோ..

"காலேஜ்லதான் சீனியர் ராக்கிங் பார்த்திருக்கேன்... இங்கேயுமா?" என்றவள்,

"எனக்கென்ன... உங்க ஃப்ரெண்ட்தானே..." என்றபடியே தீக்ஷாவைப் பார்த்துச் சொல்ல...

"பரவாயில்லை, ஒரு நாள்தானே... என் ஃப்ரெண்ட் யுகி என்ன அடிச்சாலும் தாங்குவான்... அதுக்குத்தானே அவனை வேறே எங்கேயும் விடாமல்... இங்கே பிடிச்சு வெச்சுருக்கோம்," என்று பார்வதியிடம் கண் சிமிட்டியவள்,

"பாரு... நீ தப்பிச்சுட்டே. அந்த டைம்ல தீக்ஷா கொஞ்சம் சென்ட்டிமென்ட்டா லாக் ஆகி இருந்தாள்... இல்லே, நீயும் மாட்டி இருப்பே..." என்க...

அதே நேரம் சுரேன், பார்வதிக்கு கால் செய்ய,

"என்ன சுரேன்...?" என்றபடி பாரு நழுவப் போக...

தீக்ஷா, அவளை விடாமல் பிடித்து வைத்துக் கொண்டு...

"இங்கே இருந்தே பேசு!"



"என்ன பண்றீங்க... யுகி இன்னும் இங்கேயே இருக்கான்..." என்று கத்த ஆரம்பிக்க...

"அது... நல்ல நேரம் இன்னும்..." என்று ஆரம்பித்த பார்வதியிடமிருந்து போனை வாங்கிய தீக்ஷா...

"சுரேன் அத்தான்... ஆர்த்தியைத்தான் நல்ல நேரம் பார்த்து அனுப்பச் சொல்லி இருக்காங்க... பார்த்துக்கங்க... உங்க வசதி எப்படி... பாருவையும் நல்ல நேரம் பார்த்து அனுப்பி வைக்கணுமா?" என்று தீக்ஷா, சுரேனை கார்னர் செய்ய...

"என்னமோ பண்ணுங்க..." என்று போனை வைத்து விட்டான்.

சுரேந்தர், கடுப்போடு போனை வைப்பதைப் பார்த்த விஜய்...

"என்னடா...?" என்று சுரேனைக் கேட்க...

"யுகி... உன் ரெண்டு அண்ணியும்... ஆர்த்தியை இப்போ அனுப்ப மாட்டாங்க போல.... என்னவோ ப்ளான் பண்ணி இருக்காங்க போல..." என்று யுகியைப் பரிதாபகமாகப் பார்த்தவன்,

"அண்ணா... தீக்ஷாதான்... மாஸ்டர் ஆஃப் தி ப்ளான்... போல..." என்றபடி எழ...

விஜய், யுகியிடம், "சும்மா விளையாடுவாடா... உனக்கு அவளைப் பற்றித் தெரியாதா... உன் ஃப்ரெண்டை உன்னால சமாளிக்க முடியாதாடா...?" என்று தன் மனைவிக்கு சப்போர்ட்டாகப் பேசியபடி நழுவி விட்டான்.

"யுகி... உன் சமத்துடா..." என்று சுரேந்தர், தன் அறைக்குச் சென்றவன்... பார்வதியையும் அழைத்துக் கொண்டான்.

யுகி அதன் பிறகு 10 நிமிடம் பார்த்தான்.

இனி வேலைக்கு ஆகாது என்று முடிவெடுத்த யுகி... ஆர்த்தி இருந்த அறைக்கே போனவன்... தீக்ஷாவிடம்...

"ரொம்ப நல்லவம்மா நீ... எத்தனை நாள் ப்ளான்..." என்றபடி... "ஆர்த்தி, நீ வா..." என்று கையைப் பிடித்து இழுக்க..

"ஹலோ... என்ன, ரூம்ல புகுந்து அராஜகம் பண்றியாடா... நல்ல நேரம் வந்த பின்னாலேதான் ஆர்த்தியை இந்த ரூமை விட்டு வெளியே அனுப்புவேன்..." என்று யுகியைப் பார்த்து மிரட்டலாய்ச் சொல்ல..

யுகி சிரித்தபடி...

"அப்போ சரி..." என்று ஆர்த்தியின் அருகில் வந்தவன்... அவளைத் தன்புறமாய் அணைத்து, அவளுக்கு முத்தமிடப் போக...

தீக்ஷா பதறியவளாய்... "டேய்... என்னடா பண்றே?"

"நீதானே சொன்ன... நல்ல நேரம் வந்த பின்னாலே இவளை அனுப்புவேன்னு... நான் அதுவரை இங்கேயே ரொமான்ஸ் பண்ணிக்கிறேன்," என்று கொஞ்சம் கூடத் தயங்காமல் சொல்ல...

"உன்னை..." என்றபடி...

"போடா... உன் ரூமுக்கு... நான் அனுப்பி வைக்கிறேன்," என்று அதட்டியவளை...

"ஒண்ணும் தேவையில்லை... நீ இடத்தைக் காலி பண்ணு... அதெல்லாம் நான் பார்த்துக்கிறேன்," என்க...

"ஆர்த்தி, பார்த்துக்கோ... உன் ஆளுக்கு எவ்வளவு தைரியம்னு... அவங்க அண்ணாக்களுக்கு இல்லாத தைரியம்... நீ அடிக்கடி புலம்புவேல்ல... உன் யுகி, அண்ணாக்களுக்குப் பயந்து பயந்துதான் எல்லாம் செய்வான்னு..." என்று விளக்கியவள்...



"யுகி... ஆனாலும் தைரியம்தான்டா உனக்கு..." என்று சிரித்தபடி தீக்ஷா கிளம்பினாள், அவர்களுக்குத் தனிமை கொடுத்தவளாய்.

நேராகச் சென்றது, சக்தியை நோக்கித்தான். சுனந்தாவும் சக்தியும் மட்டும்... சக்தியின் பெற்றோரிடம் கதை கேட்டபடி இருக்க... அவர்களுக்குத் தொந்தரவு செய்யாமல் மெதுவாய் உள்ளே போனாள்.

தீக்ஷாவைப் பார்த்தவுடனே, சக்தி, தீக்ஷாவிடம் ஓடி வர... அவளைத் தூக்கியபடி... சக்தியின் தாயிடம்,

"ஆன்ட்டி... அவ ரொம்ப நாளா என்னை மிஸ் பண்றால்ல... நானே தூங்க வைக்கிறேன்," என்றபடி...

"ஸ்னோ.. நீ அத்தை கிட்டே வரலையா...?" என்று சுனந்தாவை அழைக்க...

"இல்லை... நான் கதை கேட்டுக்கிட்டு இருக்கேன்... வைஜெயந்தி பாட்டிக்கு இந்தக் கதையெல்லாம் தெரியலை," என்றபடி கதை கேட்கும் ஆர்வத்திலேயே இருக்க...

தன் மகளோடு தன் அறைக்குச் சென்றவள்... சக்தியைத் தூங்க வைத்துவிட்டு.... அதன் பின் கணவனைத் தேடி ஹாலிற்கு வந்தாள்.

"விஜய் அத்தான்... தூங்கலையா?" என்றபடி அவன் அருகில் அமர்ந்தாள், தன் லேப்டாப்பைத் திறந்தபடியே.

"ஹ்ம்... ஒரு மெயில் வர வேண்டி இருக்கிறது... வெயிட்டிங்..." என்றவனிடம், தீக்ஷாவும் பேசாமல் தன் கணினியில் மூழ்க ஆரம்பித்தாள்.

விஜய்க்கு, அவன் எதிர்பார்த்த மெயில் வர... அதற்கு உடனடியாக ரிப்ளை செய்தவன்... தன் கணினியை மூடியபடி,

"போகலாமா...?" என்றபடி தன் மனைவியைப் பார்க்க...

"போகலாம்... அத்தான்! இதைப் பாருங்க... இதுல எது ஓ.கே.ன்னு சொல்லுங்க..." என்று தங்கள் அலுவலகத்தின் புதிய கட்டடத்தின் ப்ளானைக் காட்ட,

வாங்கிப் பார்த்த விஜய்... முறைத்தான்..

"மூன்றுமே நல்லா இல்லை... எவன் போட்டுக் கொடுத்தான்..."

"ஹ்ம்... ஏதோ எங்க காசுக்கு ஏற்ற மாதிரி ஒரு பில்டர்ஸைப் பார்த்தோம். நீங்கல்லாம் பெரிய இடம்... உங்க கிட்டே வந்தோம்னா... மூன்று வருஷம் சம்பாதித்ததெல்லாம் கோஹயாதான்... சரி, பணம் கூட ஒரு பிரச்சினை இல்லை... ஆனா இந்த சின்ன பில்டிங்கை எல்லாம் உங்க கம்பெனி திரும்பிக் கூடப் பார்க்காது... இது மட்டும் இல்லை, காத்தமுத்து, முருகேசன் ட்ராவல் ஏஜென்சியோட கூட காண்ட்ராக்ட் போடப் போகிறோம்... ஏதோ ஏழைக்கேற்ற எள்ளுருண்டை... எங்க பட்ஜெட்ல..." என்று ஒரே மூச்சில் முடிக்க...

அவளோடு வாயாடாமல்... அவளின் லேப்டாப்பை மூடி வைத்தவன்...

"சக்தி தூங்கிட்டாளா...?" என்று கேட்க,

"அவளைத் தூங்க வெச்சுட்டுதான் உங்க கிட்டே வந்தேன்... என்னை ரொம்ப மிஸ் பண்றா போல... இனி நான் போக மாட்டேன்பா... யுகியை... இல்லை தீபனைத்தான் அனுப்ப வேண்டும்..." என்று தனக்குள் சொல்லிக் கொண்டாள்.

"அப்போ... என்னை நீ மிஸ் பண்ணலையா?" என்று அவளின் மேல் சாய்ந்தவனிடம், முறைத்தாள்.

"போக மாட்டேன்னு சொன்ன என்னை அனுப்பி வெச்சுட்டு... மிஸ் பண்ணலையான்னு கேள்வி வேற..



ஆனால், நான் மேனேஜ் பண்ணிட்டேன் அத்தான்... தனியா... இப்போ போதுமா... நான் முழுசா குணமாகிட் டேன்னு நம்பறீங்களாத்தான்..."

"நான் அதுக்காக உன்னை அனுப்பவில்லை... உனக்கும் ஒரு அனுபவம் கிடைக்கும்... அதற்காகத்தான்..." என்றவன்...

"தீக்ஷா..." என்று அழைக்க..

அவனின் குரல் மாற்றத்தை உணர்ந்தவள்... அவனைப் பார்க்காமலே,

"என்ன பாஸ்..." என்று சிரிக்க...

"காலையில் இருந்தே ஒரே ஃபீல்..."

தீக்ஷா கேள்வியாய்ப் புருவம் சுருக்க...

"நீ போட்டிருந்த சக்தி செயினைக் கழட்டச் சொல்லிட்டேன்ல... அதனால..." விளக்கமாய்ச் சொல்ல...

"அதனால... என்னைக் கூட்டிட்டுப் போய் கிஃப்ட்டா வாங்கித் தரப் போறீங்களா இந்தர்...?" என்று ஆர்வமாய்ப் பார்க்க...

"இல்லை... நாம வேற மாதிரி யோசிக்கலாம் தீக்ஷா..." என்றவன், அவளை அணைத்தபடி...

"சக்தி என்னை மாதிரிப் பிடிவாதம் பிடிக்கிறால்ல... உன்னை மாதிரியும் எதையும் லேசா எடுத்துக்கிற மாதிரி ஒரு குழந்தை பெத்துக்கலாம்... நான் அந்தக் குழந்தைக்கு கிஃப்ட் வாங்கிக் கொடுப்பேனாம்... நீ அதைப் போட்டுக்கலாம்..." என்றவனின் குரல், காதலோடு கனிந்திருந்தது.

"எனக்கு கிஃப்டே வேண்டாம் சாமி.... ஆளை விடுங்க," என்றபடி எழப் போக..

"எனக்கு வேண்டும்..." அடம் பிடித்தவனாய் அவளைத் தன்புறம் இழுக்க...

கிறக்கமாய்ப் பார்த்தவனிடம்... அவன் என்ன எதிர் பார்க்கிறான் என்று புரிந்ததும்,

"கிஃப்ட்தானே... வாங்கித் தருகிறேன்..." என்று அசால்ட்டாகச் சொன்னவள்...

"சக்தி மட்டும் தனியா படுத்திருக்கா... வாங்க போகலாம்..." என்றபடி மாடிப்படி ஏறியவள்... தன் கணவனைத் திரும்பிப் பார்க்க... அவன் அதே இடத்தில் அமர்ந்திருக்க...

மீண்டும் வந்தவள்...

அவனின் கையைப் பிடித்து இழுத்தபடி மேலே ஏறினாள்.

"நீ பழைய தீக்ஷாவாகவே இல்லை... இதே என் தீக்ஷாவாக இருந்திருந்தால், என்னைத் தூக்கிட்டுப் போங்கத்தான்னு நின்றிருப்பா...!" என்று அலுத்தவனிடம்,

"ஆமாம்... என் இந்தர் கூடப் பழைய மாதிரி இல்லை... நான் என்ன சொன்னாலும்... என்னைத் திட்டறதே கிடையாது..." என்று பதிலுக்குப் பதில் சொல்ல...

"இந்த வாய் மட்டும் என் பொண்டாட்டிக்குக் குறையாதே..." என்றவன், அவளைத் தூக்க...

"ஐயோ அத்தான்..." என்றவள், சுற்றும் முற்றும் பார்க்க...

"யாரும் இல்லை... இருந்தாலும் பரவாயில்லை..." என்றபடி தன் அறைக்குச் செல்லாமல் மாடிக்குச் செல்ல...

"சக்தி... தனியா..." என்று தயக்கமாய்த் தங்கள் அறையைப் பார்க்க...

"அவளுக்குத் துணைக்குத்தானே அடுத்து ரெடி பண்ணப் போகிறோம்," என்றவனின் கண் சிமிட்டலில்,



அவனோடு ஒன்றியவளைப் பார்த்தபடியே மாடி ஏறினான் விஜய்.

மாடியின் நிலவொளியில் ஜொலித்த தன்னவளை... இன்னும் இறக்கி விடாமல் கைகளிலேயே வைத்திருக்க...

"கை வலிக்கலை..." என்று வியப்பாய்ப் பார்த்தாள், தீக்ஷா.

"அதெல்லாம் பார்த்தால் கிடைக்க வேண்டியது கிடைக்குமா?" கொஞ்சம் கூடத் தயங்காமல் கணவனாகச் சொல்ல....

"அப்போ சரி... எனக்கும் பிரச்சினை இல்லை," என்றவள்,

"அத்தான்... சுரேன் அத்தான் மேரேஜ் முடிச்ச பின்னாலே சர்ப்ரைஸா ஹனிமூன் ப்ளான் பண்ணி இருந்தீங்கல்ல... அது மாதிரி யுகி மேரேஜுக்கு இல்லையா?" கேட்கும் போதே தீக்ஷா கஷ்டப்பட்டுத்தான் சிரிப்பை அடக்கினாள்.

ஆனால், அவள் உடல் குலுங்கியதே, அவள் சிரிப்பை அடக்க முடியாமல் திணறுகிறாள் என்பது விஜய்க்குப் புரிய... கோபமாய் முறைத்தவன்...

"என் பொழப்பு சிரிப்பா இருந்திருக்குடி உனக்கு..."

தீக்ஷா சிரிப்பதற்கும், விஜய் கடுப்பானதற்கும் காரணம் உண்டு...

ஏனெனில், அன்று சுரேந்தர் - பார்வதி திருமணம் முடிந்த அடுத்த நாள்... தீக்ஷாவை அதிகாலை எழுப்பியவன்... எதுவுமே தெரிவிக்காமல், அவள் கேட்ட கேள்விக்கெல்லாம் பதில் சொல்லாமல், என்னென்னவோ சொல்லியவன் ஏர்போர்ட் அருகில் வரும் வரை... கொஞ்சம் பதட்டத்துடன்தான் வந்தான். ஆனால், தீக்ஷா முதலில் முகம்

சுருக்கியவள்... விஜய்யின் கைகளைப் பற்றியபடி உள்ளே வந்தவளை... விஜய்யும் பதட்டத்துடன் கவனித்தபடி கூட்டி வந்தான்...

"தீக்ஷா... நாம ஒரு பிரச்சினையை எதிர்நோக்கும் போதுதான்... அது நம்மை விட்டுப் போகும். அதைப் பார்த்து ஓடி ஒளிந்தால்... அந்தப் பிரச்சினை நம்மைச் சுற்றிக்கொண்டேதான் இருக்கும்... சோ..." என்று விஜய் ஆரம்பிக்க,

"Avoid fear... it grows... face fear... it goes... இதைத்தானே சொல்லப் போறீங்க..." முடித்து வைத்தவள், ஏர்போர்ட் உள்ளே நுழையும் போது சாதாரணமாகி இருக்க, விஜய் அப்போதுதான் நிம்மதி அடைந்திருந்தான்.

இருந்தும்... ஆயிரம் முறை அவளிடம்... "ஆர் யூ ஓ.கே." என்று கேட்டிருப்பான். ஒரு வழியாக செக் இன் செய்து விட்டு விமானத்திற்காகக் காத்துக் கொண்டிருக்க...

அப்போது தீக்ஷாவிற்கு ஒரு மாதிரி இருந்தது. விஜய்யிடம் சொல்லாமல் சில நிமிடங்கள் சமாளிக்க நினைத்தாள். ஆனால், முடியவில்லை.

"அத்தான்... காலையில் சீக்கிரமா எழுந்தது ஒரு மாதிரி இருக்கு போல..." என்ற போதே அவளுக்கு வாமிட் வருவது போல் இருக்க... வேகமாய் அவனை விட்டு எழுந்தவள், அதை எடுக்க ரெஸ்ட் ரூமை நோக்கிப் போக... விஜய்யும் அவள் பின்னாலே ஓடினான். ஆனால், அது பெண்கள் பிரிவு என்பதால் வெளியே பதற்றத்துடன் அவளுக்காகக் காத்திருக்க...

தீக்ஷா, ஓரளவு அனுமானித்தவள்... சந்தோஷமாகத் தன் கணவனிடம், நாள் தள்ளிப் போனதைச் சொல்ல வந்தவள்... வெளியே வந்து தன் கணவனிடம் சொல்லும் முன்னரே மயங்கிச் சரிய...



விஜய்யின் முகம் இருண்டது. ஓடிப்போய்த் தன் மனைவியைக் கைகளினால் தாங்கியவன், அங்கிருந்த முதலுதவிப் பிரிவுக்கு அவசரமாய்த் தூக்கிக் கொண்டு போக...

அங்கு அவனுக்கு இன்ப அதிர்ச்சி பரிசாய்க் கிடைக்க... விஜய்யின் மகிழ்ச்சிக்கு அளவே இல்லை எனலாம். அதன் பின் ஹனிமூனாவது... ஒன்றாவது... அந்த விமானப் பயணமும் ரத்தானது.

அதன் பின் இருவருக்கும் தனித் தனியேதான் விமானப் பயணம் இருந்தது. இப்போது கூட தீக்ஷா Uk போய்த் தங்கியிருந்த மூன்று மாதத்தில்... விஜய் அவளை அனுப்பிவிட்டு, அதன் பின்னர் இடையில்தான், தன் மனைவியைப் பார்த்து வந்தான்.

இந்தக் காரணத்தினாலேயே தீக்ஷா சிரித்தது.

தீக்ஷா சிரித்தபடி இறங்கி ஓட... விஜய் அவளைப் பார்த்தபடியே நின்றவன்... தன்னைப் பின் தொடராமல் நிற்கும் தன் கணவனைத் திரும்பிப் பார்த்தவள்...

"என்ன..." என்று தலை அசைக்க..

"ஒன்றுமில்லை..." என்பது போல் இவன் தலை அசைக்க...

மீண்டும் அவனின் அருகில் வந்தவள்...

கணவன் இன்னும் அமைதியாகவே இருக்க...

"ஹப்பா... மறுபடியும் சென்ட்டிமென்ட்டா... முடியலை விஜய் அத்தான்..."

விஜய், அவளிடம்....

"உன்னை மாதிரி... எதையும் விளையாட்டா எடுத்துக்கிற பக்குவம் எனக்கு வரணும்னு ஆசையா இருக்கு தீக்ஷா... ஆனால், என்னால் முடியலை..."

"நீங்க ஏன் என்னை மாதிரி இருக்கணும்னு ஆசைப்படறீங்கத்தான்... உங்க அழுத்தமான குணம்தான்... எந்தச் சூழ்நிலையையும் தாங்கிக்கிற சக்தியைக் கொடுக்கும்... அது எனக்கு இல்லத்தான்..." என்றவள் குறும்பாக,

"அழுத்தமான இந்தக் குணத்தினால்தான் என்னை மாதிரி ஒரு லூசுப் பொண்ணை எல்லாம் நீங்க சமாளிச்சு வாழறீங்க... அதுக்கே உங்களுக்கு ஒரு பெரிய ஓ போடணும்... தெரியுமா...?"

விஜய், அவளிடம்,

"இல்லை தீக்ஷா... நீ யாரை மேரேஜ் பண்ணி இருந்தாலும்... சந்தோஷமா இருந்திருப்பே... அவங்களையும் சந்தோஷமா வெச்சுருப்பே..." என்றவனின் வாயைப் பொத்தியவள்... கோபமாக,

"இப்போ இது தேவையா... என் இந்தரைத் தவிர வேற யாருமே வேண்டாம் எனக்கு... என் விருமாண்டியோட கோபம்... என் இந்தரோட காதல்... என் விஜயேந்தரோட கம்பீரம்... இது... இது மட்டுமே இந்த தீக்ஷாவுக்கு வேண்டும்..."

என்றவளின் வார்த்தைகளில் அவளையுமறியாமல் குரல் நடுங்க...

விஜய் சிரித்தபடி...

"இந்த மாதிரி நீ தனித் தனியா என்னைப் பிரிச்சு வெச்சுருக்கிறதை நெனச்சுத்தான்டி எனக்குப் பயம்..." போலியாய் வருந்த...

"பின்னே... முதன் முதலில் பார்க்கும் போதே சின்னக் குழந்தையை மிரட்டினா... நான் என்ன பண்ணுவேன்..."

"நீயும் என்னைப் பார்த்து நடுங்கிட்டே...." என்றவன்...



"வா, கீழே போகலாம்... என் பொண்ணு தனியா இருப்பா..." என்று இறங்க...

"அடப் பாவி... கொஞ்ச நேரம் முன்னாலே... ரொமான்ஸ் மன்னனா இருந்தப்போ பொண்ணு ஞாபகம் வரலையா.. கஷ்டப்பட்டு மாடி ஏற வெச்சு..." என்று அலுத்தவளை...

"நீயாடி படி ஏறி வந்தே..." என்று முறைக்க,

"ஆமாம்ல... நானா இப்போ இறங்கப் போறேன்... எனக்கென்ன கஷ்டம்... என் இந்தர் இருக்கும் வரை..." என்று கணவனைப் பார்த்துக் குழந்தை போலக் கைகளைத் தூக்கியவளை...

சற்றும் தாமதிக்காமல்... கொஞ்சம் கூட அலுக்காமல் தூக்கிய விஜயேந்தர், காதலுடன் மாடிப்படி இறங்க... தன் கணவனிடம் காதலுடன் சரணடைந்தாள் தீக்ஷா.

தீக்ஷா எனும் அந்தப் புயலின் ஆராவாரம்... அவள் கணவனிடமிருந்து என்றும் கரை கடக்காமல் இருக்கும் என்ற நம்பிக்கையோடு, சந்திரன் அவர்களின் மேல் ஆசிர்வாதமாய்த் தன் ஒளியை வீசியபடி இருக்க... நம்மை விட்டுக் கடந்து கொண்டிருக்கும் நம் 'தீக்ஷா' புயலை, அவள் கணவனோடு வாழ்த்தி... நாமும் விடைபெறுவோம்.

இதழோடு இதழ் சேரும் நேரம்
இன்பங்கள் ஆறாக ஊறும்!
இதழோடு இதழ் சேரும் நேரம்
இன்பங்கள் ஆறாக ஊறும்!
மடி மீது தலை வைத்து
மடி மீது தலை வைத்து
கண்ணே உன்னோடு நான் கதை சொல்ல வேண்டும்
இதழோடு இதழ் சேரும் நேரம்!

என் பேரை மறந்து நான் இருந்தேன்
நீ எந்தன் நினைவாக வந்தாய்!
ஏன் உன்னைப் பிரிந்து நான் பறந்தேன்
உன் கண்ணில் உயிர் தேடி வந்தேன்!
கச்சேரி கேளாத இசையுண்டு மானே
நாம் சிந்தும் முத்தங்கள் சங்கீதம் தானே!
என் மேனி உன் மார்பில் தானே
என் மேனி உன் மார்பில் தானே!
இதழோடு இதழ் சேரும் நேரம்!

சில நாளாய்த் துடித்தன விழிகள்
ஏனென்று கேளுங்கள் நீங்கள்!
கண் தூக்கம் மறந்தன இமைகள்
நீயின்றி நகராது நாட்கள்
கண்ணா உன் உயிரோடு உயிராகிப் போனேன்!
பிணி தீர்க்க நான் வந்து நோயாகிப் போனேன்!
நான் உந்தன் மருந்தாக ஆனேன்!
நான் உந்தன் மருந்தாக ஆனேன்!
இதழோடு இதழ் சேரும் நேரம்!


பிரவீணாவின்
அன்பே...
நீ இன்றி...!
பாகம் - 2